Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சன்
# அம்மானை

திருமதி கண்மணி
ஸ்ரீஸ்கந்தராஜா
அன்பளித்தது

பதிப்பாசிரியர்:
இலங்கைப் பல்கலைக்கழகத் துணைத் தமிழ்ப் பேராசிரியர்
**கலாநிதி சு. வித்தியானந்தன்**

பேராதனை
**13-1-1970**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KANCHAN AMMĀNAI

Presented by

Mrs. Kanmani
Sriskanda Rajah

*EDITED BY*

**S. Vithiananthan,** M. A; Ph. D.
UNIVERSITY OF CEYLON
PERADENIYA

First Edition: January 1970

Price Rs. 7-50

Royal Printers, 190, Colombo Street, Kandy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலில்


| | | | |
|---|---|---|---|
| தோற்றுவாய் | v | — | xx |
| 1. அம்மானை | v | — ix | |
| 2. கஞ்சன் அம்மானை | x | — xi | |
| 3. மட்டக்களப்பு விஷ்ணு கோயில்களிற் கஞ்சன் அம்மானை | xii | — xvi | |
| 4. இந்நூற் பதிப்பு | xvi | — xx | |
| கதைச் சுருக்கம் | xxi | — | xxxiii |
| நூற்பதிப்பிற்குரிய ஏடுகள் | | | xxxiv |
| கஞ்சன் அம்மானை | 1 | — | 248 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பு: தை 1970

விலை ரூபா 7-50


எல்லா உரிமையும் பதிப்பாசிரியருக்கே

ஞேயல் அச்சகம், 190, கொழும்பு வீதி, கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயப் பாதுகாவலன்

சைவசிகாமணி

**நீதியரசர் பொன் ஶ்ரீஸ்கந்த ராஜா அவர்கள்**

மங்கையர் திலகம்

சிவநெறிச் செல்வி

**திருமதி கண்மணி ஶ்ரீஸ்கந்த ராஜா அவர்கள்**

ஆகியோர்

நினைவு வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றுவாய்

பாலுக்கும் தேனுக்கும் பாடும் மீனுக்கும் புகழ்பெற்ற மட்டக்களப்பு, இன்றும் விவசாயத்தை அடிப்படைப் பொருளாதாரமாகக் கொண்டு திகழ்கின்றது இதனால் இப்பிரதேசம் பொது மக்கள் வளர்த்த கலைகளுக்கும் இலக்கியத்திற்கும் இருப்பிடமாகவும் இன்று விளங்குகின்றது. கிராம மக்கள் வளர்த்த அழகுக் கலையாகிய நாட்டுக் கூத்து இங்கு பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. கிராமிய இலக்கியத்தையும் இங்குள்ள மக்கள் தமது நல்வாழ்வுக்கு உதவும் கருவிகளில் ஒன்றாகப் பயன்படுத்தி வருகின்றனர்; கிராமிய இலக்கியத்தைத் தமது சமய வாழ்க்கையோடு பின்னிப் பிணைத்து வளர்த்துப், பொழுது போக்கும் நற்பயனும் பெற்று வாழ்கின்றனர் இவர்கள் பெரிதும் போற்றும் கிராமிய இலக்கியங்களிற் பள்ளு, ஊஞ்சல், வழக்குரை, அம்மானை முதலியன குறிப்பிடத்தக்கவை. இவ்விலக்கியங்களிற் கஞ்சன் அம்மானை சிறப்பிடம் பெறுகின்றது.

## 1. அம்மானை

கஞ்சன் அம்மானை, அம்மானைப் பிரபந்தத்தைச் சேர்ந்ததாகும். அம்மானைப் பிரபந்தத்தின் வளர்ச்சியைத் தொல்காப்பிய காலத்திலிருந்து தொடர்புபடுத்தலாம். அம்மானை என்பது தொடக்கத்தில் இசைப்பாட்டோடு அம்மானை ஆடுதலைக் குறித்தது. அம்மானை விளையாட்டினைப் பற்றி இருவகையான கூற்றுக்கள் காணப்படுகின்றன. சிலம்புகள் என்னும் இரு காய்களை வைத்துக்கொண்டு ஒன்றை மேலே செலுத்தி, அது திரும்பி வருவதற்குள் மற்றொன்றை மேலே செலுத்திக் கீழே விழாமற் கையிற் பிடித்துக் கொள்ளும் பெண்களின் விளையாட்டென ஒரு சாரார் கூறுவர்; இன்னொரு சாரார், அம்மானைக் காய்கள் மூன்றை வைத்துக்கொண்டு விளையாடுவது இவ்விளையாட்டு எனக் கூறுவர். இம் மூன்று காய்களையும் பெண்கள் இரு கையிலும் விளையாடுவர். இரு கையிலும் இரு காய்கள் இருக்க, மேலே ஒன்றிருக்கும். ஒரு பெண் ஒரு கையில் இருக்கும் அம்மானைக் காயை மேலே வீசி அக்கையினால் மேலுள்ள காயைப் பிடிப்பாள். மூன்று பெண்கள் ஒன்று சேர்ந்து ஒருவர் பின் ஒருவராக இவ்விளையாட்டை ஆடுவதே மரபு என்பர். இக்காய்கள் மரத்தாற் பந்து வடிவாகக் கடையப்பட்டவை என இச்சாரார் கூறுவர். வெவ்வேறு நிறந் திட்டப்பட்ட கனமில்லாத காய்கள் இவை. இக்காய்களை மரத்தால் இயன்றவையாகக் கொள்ளாமற் பொன், முத்து, மணி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரம், நீலம் ஆகியவற்ருல் இயன்றவையெனப் பிள்ளைத்தமிழ் ஆசிரியர் கூறுவர். இத்தகைய காய்களை வீசி விளையாடும் போது பாட்டுப் பாடுவர். அப்பாட்டு அம்மானை எனப்படும்.

உலகியலில் அம்மானை ஆடுகின்றவர்கள் தங்களுக்கு நல்ல கணவர் கிடைக்கவேண்டுமென அவ்வாடவரின் சிறப்புக் களை விதந்து கூறி ஆடுவர். அம்முறை போலக் கடவுளின் திருவடி இன்பப் பேற்றியலில் ஆசிரியர்கள் இறைவனின் திருவடியைப் பேணும் வகையிற் பெண்ணியல்பாகக் கூறப்படுவது சமய இலக்கியத்திலே திருவம்மானை என அமைந்தது. ஒவ்வொரு பாட்டிறுதியிலும் அம்மானை என்ற சொல் ஆளப் படுவதைக் காணலாம்.

அம்மானை என்பது தாய் என்ற பொருளை உடையதென் றும், பெண்களை அம்மா என்று அழைப்பது போல அம்மானை என்றழைப்பது இலக்கிய மரபென்றும், பாட்டு இறுதியிற் பெண்ணை விளிக்கும் விளியாக அம்மானை என்பது அமைந்த தென்றும், அவ்வாறு அம்மானை இறுதியுடன் வரும் பாட்டுக் களே அம்மானை என்ற பெயர் பெற்றன என்றும் சிலர் கொள்வர்.

அம்மானைப் பாடல்கள் பாடுவது பழைய வழக்காறு என்பது தொல்காப்பியச் செய்யுளியல் உரையினுலே தெரிய வருகின்றது. அம்மானைப் பாட்டிற்குத் தொல்காப்பியத்தில் விதி அமைத்துச் செல்வர் பேராசிரியர். செய்யுளியல் 149 ம் சூத்திரத்திற்குத் தாம் எழுதிய உரையிற் பேராசிரியர் அம்மா னைப் பாட்டு நான்கு அடியில் மிக்கும் பத்தடிகாறும் வரும் தரவுக் கொச்சகத்தால் இயன்றதெனக் கூறுவர். அவ்வம்மானைப் பாடல்களைப் பெண்கள் வரிப்பாட்டாகப் பாடி ஆடினர் என்பது சிலப்பதிகாரத்திலிருந்து தெரிகின்றது. வரிப் பாட்டாவது, தலை வனுக்குரிய நிலனும் அவனுடைய சிறந்த தொழிலும் அறியக் கூறுவதென சிலப்பதிகார அரங்கேற்றுக் காதை உரையில் அடியார்க்கு நல்லார் கூறுவர். வரிப்பாட்டுக்கள் நாடோடிப் பாடல்களாகும். இவ்வாறு நாடோடியாக வழங்கும் அம்மானை வரிப்பாடல்களிற் பழமையானது சிலப்பதிகாரத்திலுள்ள அம்மானைவரி. சிலப்பதிகார வாழ்த்துக்காதையிற் பெண்கள் அம்மானை ஆடிச் சோழன் புகழைப் பாடுவதாக நான்கு அம்மானை வரிப்பாட்டுக்கள் வருகின்றன. மூன்று பெண்கள் சேர்ந்து ஆடிப் பாடும் அவ்வம்மானைப் பாடல்கள், ஒரு பெண் ஒரு கேள்வி கேட்க, மற்றொருத்தி அதற்கு விடை இறுக்க, மூன்ருமவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழன் புகார் நகரைப் பாடும்படி சொல்வதாக அமைந்திருக்கின்றன. சிலப்பதிகார வாழ்த்துக் காதையில் வரும் அம்மானை வரிப்பாடலொன்று பின்வருமாறு:

அம்மனை தங்கையிற் கொண்டங் கணியிழையார்
தம்மனையிற் பாடுந் தகையேலோ ரம்மானை
தம்மனையிற் பாடுந் தகையெலாந் தார்வேந்தன்
கொம்மை வரிமுலைமேற் கூடவே யம்மானை
கொம்மை வரிமுலைமேற் கூடிற் குலவேந்தன்
அம்மென் புகார் நகரம் பாடேலோ ரம்மானை

ஒருபகுதியார் ஆடுதலைக் கண்டு மற்றோரும் அவர் போலத் தாமும் அம்மானை ஆடுவார் என்பதும், அங்ஙனம் அவர் ஆடுதலையுங் கிளர்ந்து கூறி முன்னர் ஆடத் தொடங்கினோரும் ஆடுவர் என்பதும், தலைமகன் தலைமகளின் முலைமேற் கூடுதற் பொருட்டே அவர் அம்மானை ஆடாநின்றார் என்பதும், அம்மானை ஆடுவாரைத் தலைமகன் கூடுவது வழக்கு ஆகுமென்பதும் மேலே தரப்பட்ட சிலப்பதிகார அம்மானை வரிப்பாட்டால் உணரப் படும்.

அம்மானைவள்ளை என்னும் பாட்டுவகையும் உண்டு. இது தன்னையர் (தமயன்மார்) தலைமகனுக்கு மறுது மகட்கொடைக்கு உடன்படுவர் என்பதனைக் தலைமகள் குறிப்பினால் உணர்ந்து கொள்ளும்படி அவர்கள் இயல்பினைப் புகழ்ந்து பாடுவதாகும். பெருங்கதை என்னும் நூலில் இலாவாண காண்டத்தில் உண்டாட்டு என்னும் பகுதியில்,

"வெண்கண் மறவர் வில்லின் வீழ்த்த
பைங்கண் வேழத்துப் பனைமருப் புலக்கையின்
அறையுர னிறைய வைவனப் பாசவல்
இசையொடு தன்னைய ரியல்புபுகழந் திடிக்கும்
அம்மனை வள்ளை யின்னிசை கேட்டும்"

என வரும் அடிகளால் (உ.14: 48-52) இதனை அறியலாம்.

திருவாசகத்தில் 20 அம்மானைப் பாடல்கள் திருவம்மானை என்ற பகுதியில் அமைந்திருக்கின்றன. இறைவனின் புகழைப் பாடிப் பெண்கள் அம்மானை ஆடும் செய்தியை இப்பாடல்கள் கூறுகின்றன. இதனை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செங்கண் நெடுமாலுஞ் சென்றிடந்தும் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட்டு எந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்"

என்ற திருவாசகப் பாடலிலிருந்து உணரலாம். இப்பாடல்களின் ஈற்றில், 'அம்மானை' என்றது விளிவேற்றுமை ஏற்றற்கு ஐயீறு கெட்டு ஆய் ஈறு பெற்று 'அம்மானாய்' என நிற்கும். பெரிய புராணத்திலும் அம்மானைக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. தடுத்தாட்கொண்ட புராணத்தில்,

"நாடுமின் பொற்பு வாய்ப்பு நாளுநாள் வளர்ந்து பொங்க
ஆடுமென் கழங்கும் பந்தும் அம்மனை யூச லின்ன
பாடுமின் னிசையுந் தங்கள் பனிமலை வல்லி பாதம்
கூடுமன் புருகப் பாடும் கொள்கையோர் குறிப்புத் தோன்ற"

என வரும் 135ம் செய்யுளில் அம்மானைப் பாடல்பற்றிக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

தமிழ்ப் பிரபந்த வகையுள் ஒன்றாகிய கலம்பகத்தில் அம்மானை என்று ஒரு பகுதியுண்டு. அது மூன்று பெண்கள் பாடுவதாக அமையும். முதற்பெண் ஒருசெய்தியைக் கூற, இரண்டாம் பெண் ஒரு வினாவை எழுப்ப, மூன்றாம் பெண் அதற்கு விவேகமாக விடையிறுப்பாள். இப்பாடல்கள் சிலேடை நயம் பொருந்தியவையாக இருக்கும். இதற்கு உதாரணமாக,

இருவருக்கும் காண்பரிய ஈசர்மது ரேசனார்
விருதுகட்டி அங்கம்வெட்டி வென்றனர்காண் அம்மானை
விருதுகட்டி அங்கம்வெட்டி வென்றனரே ஆமாகில்
அருமையுடன் பொன்றிருகூ றுவதேன் அம்மானை
ஆனாலும் காயமிலை ஐயரவர்க் கம்மானை

என்னும் மதுரைக் கலம்பகப் பாடலைக் கொள்ளலாம்.

பிள்ளைத் தமிழ்ப் பிரபந்த வகையிற் பெண்பாற் பிள்ளைத் தமிழில் வரும் பருவங்களில் அம்மானைப் பருவமும் ஒன்று (இலக்கணவிளக்கம் சூத்திரம் 807). இது எட்டாம் பருவமாக அமையும். பாட்டுடைத்தலைவியைத் தாய்மாரும் செவிலியரும் அம்மானை ஆடும்படி சொல்லுவதாக இவ்வம்மானைப் பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும். அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் போன்ற பிள்ளைத்தமிழ் நூல்களில் இத்தகைய அம்மானைப்பாடல்களைக் காணலாம்.

இதுவரை நாம் பார்த்தவை தொடர்நிலைச் செய்யுட்களிலும், திருவாசகத்திலும், பிரபந்தங்களிலும் ஓர் உறுப்பாக அமைந்த அம்மானைப் பாடல்கள். இவ்வாறன்றி, நெடும்பாடல்களாக, தனிப்பிரபந்தங்களாகப் பிற்காலத்தில் அம்மானைகள் பாடப்பட்டன. அம்மானை தனியே பிரபந்தமாக வளர்ச்சியடைந்தது சோழப் பெருமன்னர் காலமாக இருக்கலாம் புகழேந்திப்புலவர் சிறைப்பட்டிருந்தபோது பல அம்மானைப் பிரபந்தங்களைப் பாடி, சிறைச்சாலை வழியே செல்லும் மகளிரிடம் கொடுத்துப் பாடச் செய்தாரெனக் கர்ணபரம்பரைச் செய்தி வழங்குகின்றது இரட்டையர், பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் முதலியோர் ஈற்றடியைச் சிலேடையாக அமைத்து அம்மானைப் பிரபந்தங்கள் பாடியிருக்கின்றனர். அத்தகைய பாடல்கள் தொகுக்கப்பட்டு, 'மூவரம்மானை' என்ற பெயரில் வழங்குகின்றன. மூன்று பெண்கள் பாடுவதாக இருப்பதனால், இது மூவரம்மானை எனப் பெயர் பெற்றிருக்க வேண்டும்.

அம்மானைப் பிரபந்தப் பாடல்களுக்கு அடிவரையறையில்லை. தொல்காப்பியச் செய்யுளியலிற் கூறப்பட்டவாறு இப்பாடல்களில் வரும் அடிகள் தரவுக் கொச்சக அடிகள் போன்றவை. தரவுக் கொச்சகம் போல, அம்மானைப் பிரபந்தப் பாடல்கள் நாற் சீராக வருவதனால் அம்மானை என்ற பெயர் பெற்றிருக்கக் கூடும். இவை கிராமியப் பாடல்களின் பண்புகள் கொண்டவை. பேச்சு வழக்கு மொழி நடை, பேச்சு வழக்குச் சொற்கள், எளிதில் விளங்கும் உபமானங்கள், ஒரு செய்தியைத் திரும்பத் திரும்பச் சொல்லுதல் போன்ற தன்மைகளைக் கொண்ட இவ்வம்மானைகள் பெரும்பாலும் கடவுளைப் பற்றியனவாகவே பாடப்பட்டிருக்கின்றன. அத்தகைய அம்மானைகளில் ஒன்றே கஞ்சன் அம்மானை.

## 2. கஞ்சன் அம்மானை

வடக்கேயுள்ள மதுராபுரியை ஆண்ட உக்கிரசேனன் என்பவனின் மகனே கஞ்சன். இம்மகனால், தன்குடிக்குக் கேடு நிகழுமெனச் சோதிடர் கூறக்கேட்ட உக்கிரசேனன், குழந்தையைப் பேழையுள் வைத்து யமுனை ஆற்றில் விட்டான். யமுனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றில் நீராடிய மந்தாகினி நகரத்து ஆனையரசனின் மனைவி, பேழையைக் கண்டெடுத்துக் குழந்தையைப் பேணி வளர்த்தாள். புதிய கஞ்ச பாத்திரத்திலே காணப்பட்டமையாற் குழந்தைக்குக் கஞ்சன் எனப் பெயரிடப்பட்டது. கஞ்சன் வளர்ந்து, வசுதேவன் என்பவனிடம் வித்தைகளைக் கற்று, மதுரைக்குப் படை எடுத்துச் சென்று, தந்தை உக்கிரசேனனைச் சிறையிட்டு, ஆட்சியைக் கைப்பற்றினன். தனது தங்கைமாராகிய உரோகிணியையுந் தேவகியையும் வசுதேவருக்குக் குருதட்சணையாக மணஞ்செய்து கொடுத்தான்.

தன் தங்கையின் வயிற்றுச் சந்ததியாலே தான் மாள்வான் எனச் சாபம் இடப்பெற்றதை அறிந்த கஞ்சன், தன் தங்கையர் இருவரையும் சிறையிட்டு அவர்கள் பெறும் பிள்ளைகளைக் கொன்றுவரலானன்.

இவ்வாறு உலகிலே மக்களுக்கும் முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் இன்னல் செய்து வரும் கஞ்சனையும் அவனோடு சேர்ந்த மற்றும் துட்டர்களையும் அழித்துச் சிட்ட பரிபாலனம் செய்வதற்குத் திருமால் கஞ்சனின் தங்கை தேவகியின் வயிற்றில் உதித்துக் கண்ணன் அவதாரம் எடுத்தும், ஆயர்பாடியில் அசோதை யிடத்து வளர்ந்தும் வரலானன். எனவே, கஞ்சனின் தங்கையின் மகனாக விஷ்ணு பிறந்து, கஞ்சனையும் அவனுக்குதவிய துட்டர்களையும் ஏனைய தீயோரையும் வதைத்துப் பூமியின் பாரத்தைத் தீர்த்த மகிமையைக் கூறுவதே கஞ்சன் அம்மானை.

திருமால் பூமியிற் கிருஷ்ண அவதாரம் எடுத்து நல்லாட்சி செய்த வரலாற்றினைக் கஞ்சன் அம்மானை என்ற பெயரில் அம்மானைப் பிரபந்தமாகப் பாடிய புலவரின் பெயர் தெரியவில்லை. ஈழத்தின் கிழக்குப் பகுதியான மட்டக்களப்பில் வாழ்ந்த புலவர் ஒருவர் இயற்றிய இப்பிரபந்தத்தின் காலமும் எது எனக் கணிக்கமுடியாமலிருக்கின்றது. மட்டக்களப்பிலுள்ள விஷ்ணு கோயில்களிலும் தனிப்பட்டவர்களிடமும் கஞ்சன் அம்மானை ஓலைப்பிரதிகள் பல இருக்கின்றன. ஆயினும் ஓர் ஏட்டுப் பிரதியிலும் நூல் ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படவில்லை.

கஞ்சன் அம்மானையில் வரும் "பாலை வரு பிரமன் பாடுகிறேன் அம்மானை" என்ற தொடராற் பாலைவருபிரமன் இதைப் பாடினன் எனச் சிலர் கொள்ளக் கூடும். சில ஏடுகளிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பாலைவருபிரமன்' என்ற தொடரே வருகின்றது. இதைத் தொடர்ந்து "பண்பால் நிறைந்த பரராச மாமுனிவன், நண்பால் உரைத்தருளும் நாராயணன் கதையை" என்ற அடிகள் வரு கின்றன. ஆகவே ஆதிகாலத்திற் பரராச மாமுனிவர் கூறி வைத்த இக்கதையைப் பிற்காலத்திற் "பாலை வரு பிரமன்" என்பவர் அம்மானையாகப் பாடினர் எனச் சிலர் கொள்ளலாம். ஆனல், இதற்கு ஆதாரமாக வேறு அகச் சான்ருே புறச் சான்ருே இல்லை.

பாண்டிருப்பிலுள்ள ஓர் ஏட்டிலே கஞ்சன் அம்மானை பாடப்பட்ட விபரம் இருப்பதாக நண்பர் ஒருவர் குறிப்பிட் டார். "புகழேந்திப் புலவர் காசிராசன் என்னும் அரசனுற் சிறைப்படுத்தப்பட்டிருந்த போது பாடியது இவ்வம்மானை; பொதுவாக அம்மானைகள் இவராலேயே பாடப்பட்டன." என்பதே அவ்விபரம். புகழேந்திப் புலவர் சிறைச்சாலையிலி ருக்கும்போது நீர் எடுக்கச் செல்லும் பெண்கள் தமக்கு உணவு கொடுப்பதற்குப் பிரதியுபகாரமாகப் பாடிக் கொடுத்ததாக இந்த அம்மானைகள்பற்றி வழங்கும் செய்திகளை முன்பு குறிப் பிட்டுள்ளோம். ஆனல், இதனை ஏற்பதற்குத் திட்டவட்டமாக ஆதாரம் எதுவுமில்லை.

மட்டக்களப்பிலுள்ள விஷ்ணுகோயில்களிற் படிக்கப்படும் இக்கஞ்சன் அம்மானை, அங்கு சில இடங்களிலே பிள்ளையார் கோயில்களிலும் விநாயக சதுர்த்தியின்போது பாடப்படு கின்றது அது 'கறடியர்கோன் கதை' யின் முக்கியத்துவத்துக் காகவே அவ்வாறு பாடப்படுகின்றதென அறியக்கிடக்கின்றது. இது தவிர வீடுகளிலும் கஞ்சன் அம்மானை பாடுவதுண்டு. பொதுவாகப் பொழுது போக்குக்காகவும், சிறப்பாக ஆவணி மாதத்திலே சதுர்த்திப் பிறையைத் தவறுதலாகவேனும் பார்க்க நேர்ந்துவிட்டால் அதனுலே தோஷம் ஏற்படும் என்ற சம்பிர தாயத்தின் பேரிலும், வீடுகளிற் பாடுகின்றனர். அவ்வாறு வீட்டிற் பாடி முடிந்ததும் 'பொங்கல் அமுது' ஒன்று வீட்டிலே செய்வதும் சில இடங்களில் வழக்கமாக இருக்கின்றது. இரவில் வீட்டில் உணவருந்தியபின் பொழுது போக்கிற்காக ஒருவர் அம்மானையைப் பாட, மற்றவர்கள் கேட்டு இன்புறுவதுமுண்டு. இரவு வேளையிலே துயில் கொள்ளும் போது, இறைவனை நினைந்து கொண்டு கண்துயில்வதற்கு இவ்வாறு அம்மானை பாடுவது வழக்கமாக இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. மட்டக்களப்பு விஷ்ணு கோயில்களிற் கஞ்சன் அம்மானை

மட்டக்களப்புத் தமிழகத்திற் பெரும்பான்மையோர் சைவ சமயிகளேயாயினும் அவர்கள் விஷ்ணுவையும் வழிபட்டுவருகின்றனர். ஆங்காங்கு சில விஷ்ணு கோயில்களும் உள்ளன. வந்தாறுமூலை, திமிலதீவு, குருக்கள்மடம், களுதாவளை, கல்லடி, காரைதீவு, பழுகாமம், தம்பிலுவில் போன்ற இடங்களில் உள்ள விஷ்ணு கோயில்களிலே திருமால் வழிபாடு இன்றும் முறைப்படி நடந்து வருகின்றது.

திருமாலுக்குச் சக்தி தங்கையாவள். இதனால், மட்டக்களப்பிலுள்ள கண்ணகியம்மன் உற்சவங்கள் முடிவடைவதைத் தொடர்ந்து, விஷ்ணு ஆலயங்களின் உற்சவங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. கிருஷ்ணனின் பிறந்த நட்சத்திரம் திருவோணம். "ஒன்பது கோளும் உறவு செய்யும் வேளையிலே, இன்பசுகந்தவசுவென்னும் முகூர்த்தமதில்-சீரான செல்வத் திருவோண நாளையிலே, பேராளன் வந்து பிறந்தான் காணம்மானை'' எனக் கிருஷ்ணனின் பிறப்பைக் கூறுகிறது கஞ்சன் அம்மானை.

வைகாசித் திங்களில் வரும் அந்தத் திருவோண நாளிலேயே பெரும்பாலும் மட்டக்களப்பு மகாவிஷ்ணு கோயில்களில் உற்சவம் தொடங்குகின்றது. விஷ்ணு உற்சவத்தை மட்டக்களப்பிற் பெரும்பாலும் 'கிருஷ்ணன் கோயிற்சடங்கு' என்றே கூறுவர். கண்ணகை உற்சவத்தைக் கண்ணகியம்மன் சடங்கு என்று குறிப்பிடும் வழக்கு இத்துடன் ஒப்பு நோக்கவேண்டியது. 'சடங்கு' என்ற சொல்லிற்குத் திருமணம் என்ற பொருளுண்டு. விஷ்ணு கோயில் உற்சவத்தின் இறுதிநாளிற் கிருஷ்ணனுக்குத் திருமண வைபவம் ஒன்றும் நிகழ்வதனால், இவ்வுற்சவம் சடங்கு என்ற சொல்லாற் குறிக்கப்படுவதாக இருக்கலாம். கண்ணகை உற்சவத்திலும் குளுர்த்திக்கு முன்னர் உள்ள இரவில் நிகழ்வது கலியாணச் சடங்கு எனப்படுகின்றது. விஷ்ணு கோயிலில் நிகழும் இந்தச் சடங்கைக் 'கலியாணப்படிப்பு' என்று கூறுவதுமுண்டு. அன்றிரவு கஞ்சன் அம்மானையிலுள்ள உருப்பிணிக்கும் கிருஷ்ணனுக்கும் திருமணம் நிகழ்ந்த பகுதி படிக்கப்படுவதால், அன்றைய உற்சவம் இப்பெயர் பெற்றிருக்கவேண்டும்.

பொதுவாக மட்டக்களப்பிலுள்ள கோயில்களின் உற்சவத் தொடக்கத்தைக் 'கதவு திறத்தல்' என்பர். கண்ணகை கோயில்கள் ஆண்டு முழுவதும் பூட்டியே வைக்கப்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடத்தில் நடக்கும் ஒரேயொரு உற்சவத்துக்காகவே அங்கு வருடத்தில் முதன் முதலாகக் கதவு திறக்கப்படும். அதனாற் போலும் எல்லாக் கோயில்களின் உற்சவத் தொடக்கமும் கதவு திறத்தல் என்ற பெயரால் வழங்கப்படுகின்றது.

மட்டக்களப்பிலுள்ள விஷ்ணு கோயில்களிற் கதவு திறக்கப்பட்ட நாளிலிருந்து உற்சவ இறுதிநாட் கலியாணச் சடங்கு வரை, கஞ்சன் அம்மானை ஒவ்வொரு நாளும் தொடர் பாகக் கிரமமாகப் படிக்கப்படுகின்றது. கஞ்சன் அம்மானை ஏட்டுப் பிரதிகளையே கோயில்களிற் பயன்படுத்துவர். இவ் வேடுகள் இக்கோயில்களிற் புனித சின்னங்களாகப் பாது காக்கப்படுகின்றன. உற்சவகாலத்திற் படிக்கப்படும்போது ஏட்டை வைப்பதற்கென ஒரு பெட்டி உண்டு. அப்பெட்டி 'ஏட்டுப் பெட்டி' என வழங்கப்படுகின்றது. கடவுளுக்கு மடை வைக்கப்படுவது போல, ஏட்டுப் பெட்டியிலும் ஒரு மடை வைக்கப்படுவது வழக்கம். ஒவ்வொரு கோயிலிலும் கஞ்சன் அம்மானை படிப்பதற்கென உரிமைபெற்ற ஒருவரோ அவரது மரபினரோ இருப்பர். கோயிற் பூசகரே கஞ்சன் அம்மானை படிப்பதுமுண்டு. படிக்கப்படும் கதையைப் பக்தர்கள் குழுமி யிருந்து பயபக்தியோடு கேட்பர். பெரும்பாலும் பெண்களே கதைகேட்பதில் முன்நிற்பர். அம்மானையை ஒருவர் புராண படனம் போலப் படிக்கப் பயன் சொல்லவல்ல ஒருவர் பயன் சொல்வதுமுண்டு

மட்டக்களப்பிலுள்ள விஷ்ணு கோயில்களிலே தொடக் கக் காலங்களில் வெறும் சடங்குகளே நடந்து வந்தனவெனத் தெரிகின்றது. அப்போது திருவிழாக்கள் நிகழ்ந்தனவெனத் தெரியவில்லை அவிபாகங்கள் படைக்கப்பட்ட பூசையோடு நாள்தோறும் கஞ்சன் அம்மானை படிக்கப்பட்டு வந்தது.

திமலதீவு விஷ்ணுகோயில் உற்சவம் ஒரு தனியான அமைப்போடு நிகழ்வதை இங்கு குறிப்பிடவேண்டும். வெறும் சடங்கு என்ற நிலையில் இருந்து வளர்ச்சிபெற்று, திருவிழா வாக மலர்ந்து, ஒரு தனித்தன்மையோடு அது அங்கு நிகழ்த் தப்படுகின்றது. வைகாசித் திங்கள் இறுதியில் வரும் திருவோண நாளில் அங்கு உற்சவம் தொடங்குகின்றது. கொடியேற்று வைபவம் விஷ்ணுகோயில்களில் இல்லை. அங்கு முதல்நாள் நிகழ்ச்சி 'மாங்கனி பறித்தல்' என்ற பெயரோடு நடைபெறு கின்றது. கஞ்சன் அம்மானை தொடக்கத்திலிருந்து அன்று படிக்கப்பட்டு வேட்டைக்குச் சென்று மாங்கனி பறித்ததோடு நிறுத்தப்பட்டதும் திருவிழா தொடங்கும். வாகனத்தில் விஷ்ணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தருளிக் கோயில் வலம் வருவர். அத்தோடு கஞ்சன் வேட்டைக்குச் சென்று மாங்கனி பறித்தலும், அதன்பின் முனிவன் வந்து சாபமிடுவதும் நடித்துக் காட்டப்படுகின்றன. மாங்கனி பறித்தல், பூதகி வதை, மருது கால் சாய்தல், கன்று கொண்டு கனிக்கெறிதல், கூத்தரைக் கொல்லுதல், கநகசூரன் வதை, கஞ்சசம்மாரம், கலியாணச் சடங்கு என்ற வரிசையில் நிகழ்ச்சிகளை எட்டுநாட்களாகத் திருவிழாவோடு கஞ்சன் அம்மானையைப் படித்து நடித்துக் காட்டுவர். கஞ்ச சம்மாரத்திலன்று பெருந்திரளான மக்கள் கூடுவர். கஞ்சன் போர் நிகழ்த்தப்பட்டு, கஞ்சன் வெற்றி கொள்ளப்பட்டு, அவனது ஈமக்கிரியைகள் நத்ரூபமாகக் காட்டப்படும். இறுதி நாளிற் கலியாணச் சடங்கு விமரிசையாக நடைபெறும். கஞ்சன் அம்மானை படித்துக் கண்ணன் உருப்பிணியை அம்பிகை கோயிலிற் சென்று கவரச் செல்லுமிடத்தில் நிறுத்திக் கலியாணக்கால் வெட்டச் செல்வார்கள். வரிசைக் கிரமமான கிரியைகளுடன் ஓர் இளம் வேப்பங் கன்றைக் கலியாணக் காலாக வெட்டி வருவார்கள். அதைக் கலியாணப் பந்தலில் 'நட்டு அடுக்கடுக்காகப் பலவகைச் சேலைகளை அணிவர். பின்னர், ஓமம் வளர்த்துத் தாலி கட்டப்படும். கஞ்சன் அம்மானை படித்தே இந்நிகழ்ச்சிகள் யாவற்றையும் நடத்துவர். கலியாணச் சடங்குடன் விழா முற்றுப் பெறுகின்றது அடுத்தநாள் அமுது கொடுக்கப்படுவதுடன் யாவும் இனிது நிறைவேறுகின்றன.

வந்தாறுமூலையிலுள்ள விஷ்ணுகோயில் ஏறக்குறைய 250 ஆண்டுகளுக்குமுன் எழுந்ததாகக் கருதுவர் அங்கு விஷ்ணு வழிபாட்டின் முழுமையைக் காணலாமெனக் கொள்ளப்படுகின்றது. விஷ்ணு அவதாரம் பற்றிய கூத்துக்கள் ஆடுவதும், உற்சவத்தின் போது விஷ்ணு வரலாற்றை வருணிக்குமுகமாக மக்கள் தம்மைக் கண்ணனது கோத்திரமாகப் பாவித்து ஆடல் பாடல்களில் ஈடுபடுவதும் அங்கு நடைபெறுகின்றன. அங்கு ஆனிப் பூரணையில் நடக்கும் தீர்த்தத்தின்போது 'தயிர்முட்டி விளையாட்டும்' நடைபெறும் இதிலே ஆழ்வார் பாடல்கள் பாடப்படுகின்றன. பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடிய பாடல்கள் சிறப்பாகப் பாடப்படும். தால், தொட்டில், சப்பாணியெனப் பாடல்கள் பாடுவர். பாடி முடியக் கண்ணன் தயிர் முட்டி களவெடுக்கச்செல்வதும், தாயார் அவனைக் கட்டுதலும். இறுதியில் அச்சோப் பாடல் பாடுவதும் இடம்பெறும். இந்தநிகழ்ச்சிகள் யாவும் சுவாமி வலம் வருகையில் நடைபெறும். கண்ணனாக ஒரு சிறுவனும், அசோதையாக ஒருவரும், கண்ணனின் தந்தையாக வேறொருவரும் நடிப்பது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டாதி மாதப் பூரணையிலும் வந்தாறுமூலையிற் கஞ்சன் அம்மானை படிப்பதுண்டு. அப்போது அம்மானை படித்து முடியும் இறுதி நாளில் நொண்டிக் கூத்தும் இடம் பெறும் (கஞ்சன் என்ற சொல்லுக்கு, 'நொண்டி' 'வஞ்சகன்' என்ற பொருள்கள் இருப்பது கவனித்தற்குரியது). சுவாமி வலம் வரும்போது விரும்பிய எவரும் தடியூன்றி நொண்டிபோன்று முன்னே ஆடிவருவர். வந்தாறு மூலையிலுள்ள பலர் தாமோதரன், பரசுராமன், அசோதை, தேவகி போன்ற பெயர்கள் தரித்திருப்பது அங்கு விஷ்ணு வழிபாட்டின் செல்வாக்கைக் காட்டுகின்றது.

பழுகாமத்திலும் ஆவணி அபர பக்கத் திருவோணத்தில் உற்சவம் தொடங்குகின்றது; தொடங்கிப் பதினொரு நாட்களுக்குத் திருவிழாவும், கஞ்சன் அம்மானைப் படிப்பும் நடைபெறும். திருவிழாவின் ஐந்தாம் நாளில் உருப்பிணி கலியாணம் இடம்பெறும். பதினொராம் நாளில், திருவேட்டை நடைபெறும். அதில் விஷ்ணு வேட்டையாடச் செல்வதாகக் கூறித் திறந்த வெளியொன்றிற்குச் சென்றுவருவர். இவ்வழக்கம் வந்தாறுமூலையில் 'மான்வேட்டை'யாகக் காணப்படுகின்றது. தயிர் முட்டி விளையாட்டின் போது வந்தாறுமூலையிற் கண்ணனின் குழந்தை நிலையைப் பாடும் பாடல்கள் பழுகாமத்திலும் ஏட்டுப் பிரதிகளிலே இருக்கின்றன. மாட்டை நம்பி வாழும் மக்கள் தொன்று தொட்டுப் பழுகாமத்தில் இருந்து வந்திருக்கிறார்கள் என அறிய முடிகின்றது.

மட்டகளப்பில் நிலவிவரும் விஷ்ணு வழிப்பாட்டினை நோக்கும் போது, மாடு ஏராளமாக இருந்த பகுதிகளிலேயே தொடக்க காலத்தில் இவ்வழிபாடு இருந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகின்றது. மாடுகளைக் காப்பவன் கண்ணன் என்ற அடிப்படையிலே மாடுகளை ஏராளமாகப் பேணிய பகுதிகளில் இவ்வழிபாட்டினை மேற்கொண்டிருக்கக் கூடும். வந்தாறுமூலையில் இன்றும் காணப்படும் சில வழக்கங்கள் இதற்கு ஆதாரமாகவுள்ளன. மாட்டுப்பட்டியிலே முதன்முதற் கன்றுகளை அடைத்துப் பால் கறக்கத் தொடங்கும்போது, முதன் முதற் கறக்கும் பாற் பிரயோசனம் அனைத்தையும் கண்ணனாலயத்திற் படைக்க வேண்டும்; அன்றேல் துர்நிமித்தங்கள் நடக்குமெனக்கூறுவர். வந்தாறுமூலையில் அதிகமாக மக்களிடம் மாடுகள் உண்டு. அத்துடன் மிகத் தொன்மையான விஷ்ணு கோயில் அது என்றும் கூறப்படுகின்றது. பழைமையான பல விஷ்ணு கோயில்கள் குளக்கோட்டன் காலத்திலே அமைக்கப்பட்டன என மக்கள் கொள்ளுகின்றனர். இதன் உண்மை எவ்வாறாயினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு விஷ்ணுகோயில்களில் நிகழும் உற்சவங்கள் கஞ்சன் அம்மானையின் அடிப்படையில் நிகழ்த்தப்படுவதாற் கஞ்சன் அம்மானை பொதுமக்களின் சமய வாழ்க்கையில் முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பிடத்தை வகிக்கின்றதென்பது வெளிப்படை.

## 4. இந்நூற் பதிப்பு

தன்னிடமுள்ள கையெழுத்துப் பிரதியை ஆதாரமாகக் கொண்டு கஞ்சன் அம்மானையை நூல் வடிவிற் காணவிரும்பியவர் திருமதி கண்மணி ஸ்ரீ ஸ்கந்தராஜா அவர்கள். அந்தக் கையெழுத்துப் பிரதியினை எம்மிடந் தந்து பதிப்பிக்கும்படி பணித்த வைத்தியகலாநிதி பேராசிரியர் அ. சின்னத்தம்பி அவர்கள், தமிழ் பேசும் மக்களுக்குக் கிடைத்த ஓர் அரிய தொண்டன். சிலாபப் பகுதியில் வாழும் தமிழ் மக்களுக்கு ஓர் அந்தஸ்தை அளித்து, அவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் சமய முன்னேற்றத்திற்கும் அவரைப் போல உழைத்தவர் வேறு யாவரும் இவர். அப்பகுதித் தமிழ்க்கலை வளர்ச்சியிலும் அவருக்குப் பெரும் பங்குண்டு. அப்பகுதியில் ஏட்டில் இருந்த மார்க்கண்டன் நாடகம், வாளபிமன் நாடகம் ஆகிய இரு நாட்டுக் கூத்துக்கள் அவரின் முயற்சியால் நூல் வடிவம் பெற்றன. கந்தபுராணம் அவர் உழைப்பால் தமிழ் மக்களிடையே மீண்டும் நடமாடுகின்றது. முருகன் பேராதனையிற் குடிகொண்டிருப்பதற்குக் காலாக இருந்தவரில் அவரைச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும்.

எனவே, கஞ்சன் அம்மானையை அச்சிடுவதற்கு உதவும்படி அவரை ஸ்ரீ ஸ்கந்தராஜா தம்பதிகள் கேட்டது பொருத்தமானதே. 1968ம் ஆண்டு முற் பகுதியிற் பேராசிரியர் சின்னத்தம்பி எமது இல்லத்தில் எம்மைச் சந்தித்து இப்பணியைச் செய்து தரும்படி கேட்டார். கலைத்துறையிலும் இலக்கியத்துறையிலும் நாம் செய்யும் முயற்சிகளுக்கு ஆதரவும் ஊக்கமும் அளிப்பவர் அப்பெரியார். அத்துடன் ஸ்ரீ ஸ்கந்தராசா தம்பதிகளிடம் எமக்கிருந்த பெருமதிப்பு இந்நூலைப் பதிப்பிக்க எம்மை உடன்படச் செய்தது. சமயத்தால் இணைந்த இரு உள்ளங்களை நான் அவர்களிடம் கண்டேன். இல்லற வாழ்க்கையை நல்லற வாழ்க்கையாக நடத்திச் சமுகப் பணியை மேற்கொண்டு, பிறர்க்கென இணைந்து வாழ்ந்தவர்கள் அவர்கள் இருவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் தரப்பட்ட கையெழுத்துப் பிரதியைப் படித்த போது, அதனை மூலமாகக் கொண்டு கஞ்சன் அம்மானையை அச்சிடமுடியாதெனத் தெரிந்தது. பல எழுத்துப் பிழைகளும் சிதைவுகளும் கொண்ட அப்பிரதி முற்றுப் பெறாமலும் இருந்தது. எனவே, வேறு ஏடுகளைத் தேடி எடுத்து அவற்றுடன் இதனை ஒப்பிட்டுப் பாடபேதங்களையும் குறித்தே அவ்வம்மானையை வெளியிடவேண்டுமெனத் திருமதி கண்மணி ஸ்ரீ ஸ்கந்தராஜா அவர்களிடம் கூறினேன். தமது தந்தையார் மட்டக்களப்புக் கிழக்குப் பகுதியிற் கடமையாற்றியபோது கிடைத்த ஓலை ஏட்டிலிருந்து தாம் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்குமுன் பிரதிசெய்ததே அந்தக் கையெழுத்துப் பிரதியென அவர் குறிப்பிட்டிருந்தார். எனவே, மட்டக்களப்பு மாணவருடன் பல இடங்களுக்குச் சென்று ஏடுகள் தேடலானேன். இப்போது கைரோவில் ஈழத்து வர்த்தகப் பிரதிநிதியாக உயர் பதவி ஏற்றிருக்கும் திரு. கனகரத்தினம் அவர்கள் அக்காலத்திலே தம்பிலுவில் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக இருந்தார். அவர் உதவியினலே முதலாம் தம்பிலுவிற் பிரிவைச் சேர்ந்த திரு. க. வை. சரவணமுத்து அவர்களிடம் ஓலைப் பிரதியொன்று முதலிற் பெறமுடிந்தது. திமிலதீவு ஆசிரியர் திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை அவர்கள் (திமிலைத் துமிலன்) திமிலதீவு மகா விஷ்ணு கோயிலிற் படிக்கப்படும் ஏட்டினைத் தந்துதவினர்.

இம்மூன்று பிரதிகளில், நூற்பதிப்புக்கு மூலமாகக் கொள்வதற்குத் திமிலதீவு ஏடே ஏற்றதாகக் காணப்பட்டது. எனவே, அதனை மூலமாகக் கொண்டு, ஏனைய இரு பிரதிகளிற் காணப்பட்ட பாட பேதங்களை ஒவ்வொரு பக்கத்திலும் அடிக் குறிப்புக்களாக அமைத்துள்ளோம். தம்பிலுவில் ஏட்டிலுள்ள பாட பேதங்களுக்குப் பின்னல் (த) என்றும், திருமதி கண்மணி ஸ்ரீ ஸ்கந்தராஜா அவர்களின் கையெழுத்துப் பிரதியிலுள்ள பாடபேதங்களுக்குப் பின்னல் (ஸ்ரீ) என்றும் குறிப்பிடப் பட்டுள்ளன.

தாம் இறப்பதற்கு முன்னல் நூலை அச்சிற் காணவேண்டு மெனக் கண்மணி ஸ்ரீ ஸ்கந்தராஜா அவர்கள் விரும்பினர்கள். ஆனல், ஏடுகள் தேடுவதிற் பல மாதங்கள் சென்றன. 1968ம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் அம்மானையின் அரைப்பகுதியைப் பாடபேதங்களுடன் எழுதி முடித்தோம். இச் செய்தியைப் பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் ஸ்ரீ ஸ்கந்தராஜா தம்பதிகள் இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன் அவர்களைக் கொம்பனித்தெரு ஆலயத்திற் சந்தித்தபோது அவர்களுக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்திருந்தார். இதனால், அம்மானை விரைவில் வெளிவரும் என்ற உள நிறைவோடு காணப்பட்டார்கள். ஆனால் நூல் வெளிவர முன் இருவரும் எம்மைவிட்டுப் பிரிந்தனர்.

அவர்களின் பிரிவு எழுத்து வேலையைப் பாதித்தது. அவ்வேலை அரைகுறையாக நின்றுவிட்டது. பேராசிரியர் சின்னத்தம்பியின் முயற்சியால் அதனைச் சில மாதங்களுக்குப் பின் தொடர்ந்து செய்யக்கூடியதாக இருந்தது. கண்வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி திருமதி இந்திரா ஸ்ரீஸ்கந்தராஜா சிவயோகம் அவர்களும், அவரது சகோதரியும், சகோதரர்களும் தமது பெற்றோரின் ஞாபகமாக நூலை வெளியிட விரும்புவதாகப் பேராசிரியர் அறிவித்தார். இதன் பயனாக முழு மூச்சுடன் பதிப்புவேலை தொடர்ந்து நடைபெற்று, 1969ம் ஆண்டு ஆவணி மாதத்தில் அச்சுக்குக் கொடுக்கும் நிலையிலே தயாராக இருந்தது.

அச்சகம் ஒன்றனைத் தெரிவதிற் சில காலம் கழிந்தது. கொழும்பு அச்சகங்களில் அச்சிட அதிக பணம் கேட்டார்கள். யாழ்ப்பாணத்து அச்சகத்தார் பாடப் புத்தகங்களும் கலண்டர்களும் அச்சிடுவதிலே கருத்துக் கொண்டிருந்தனர்; 1970ம் ஆண்டு முற்பகுதியிலேயே இதனை அச்சிடத் தொடங்கலாம் எனக் கூறினர். இந்நிலையிற் கண்டி ரோயல் அச்சகச் சொந்தக்காரர் திரு. ரொட்ரிகஸ் அவர்கள் கைகொடுத்துதவினர். 1969ம் ஆண்டு கார்த்திகை மாதம் நடுப்பகுதியில் அச்சிடத் தொடங்கிய இவ்வம்மானை நாளுக்குச் சராசரி 8 பக்கமாகப் பிழை திருத்தம் பார்த்து அச்சிடப்பெற்று, 1970ம் ஆண்டு தைமாதம் 13ம் நாள்-ஸ்ரீ ஸ்கந்தராஜா தம்பதிகள் சிவபதமடைந்த ஓராண்டு தினத்தன்று-நூல் வடிவிற் காட்சியளிக்கின்றது.

நன்றிக்கடன் தெரிவிக்கும்போது, முதலிலே திருமதி கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களுக்குத் தலை வணங்குகின்றோம். அவரே இப்பதிப்பின் மூல கர்த்தா. அவருக்கு உறுதுணையாக இருந்து எம்மை ஊக்கியவர் அவரின் அன்புக் கணவர் நீதியரசர் சைவசிகாமணி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள். அவர்கள் இருவருக்கும் நன்றி தெரிவிக்குமுகமாக இப்பதிப்பினை அவர்கள் இருவரின் நினைவாக வெளியிடுகின்றோம்.

ஓலை ஏடுகளைத் தந்துதவிய தம்பிலுவில் திரு. க. வை. சரவணமுத்து அவர்களுக்கும், திமிலதீவு எஸ். கிருஷ்ணபிள்ளை (திமிலைத்துமிலன்) அவர்களுக்கும் உளம் நிறைந்த நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பணியை எம்மிடம் ஒப்படைத்துப் பல வகையிலும் ஊக்கமும் ஆதரவும் எப்போதும் அளித்த பேராசிரியர் வைத்திய கலாநிதி அ. சின்னத்தம்பி அவர்களுக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

இந்நூலை வெளியிடுவதற்குத் தேவையான முழுப் பணத்தையும் கொடுத்தவர்கள் ஸ்ரீஸ்கந்தராஜாக்களின் அருந்தவப் பிள்ளைகள் திருமதி சுசீலா மூர்த்தி, திருமதி இந்திரா ஸ்ரீஸ்கந்தராஜா சிவயோகம், கலாநிதி ஸ்ரீபவன் ஸ்ரீஸ்கந்தராஜா, திரு. குகன் ஸ்ரீஸ்கந்தராஜா ஆகிய நால்வரும். சிறந்த தமிழ்ப் பற்றும் சமய அறிவும் கொண்ட இவ்வள்ளல்கள் நால்வருக்கும் நாம் பெரிதும் நன்றிக் கடன் உடையோம். வைத்திய கலாநிதி திருமதி இந்திரா ஸ்ரீஸ்கந்தராஜா சிவயோகம் அவர்களே இந்நூலுக்குரிய அட்டைப் படத்தை வரைந்துதவியவர். அன்னாரின் கலைவன்மையும் சமூகசேவையும் பிறருக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன இந்நூல் வெளியீட்டிற் பெரிதும் ஆர்வம் காட்டிய அப்பெண்மணிக்கும், பல ஆலோசனைகள் கூறி நூலாக்கத்திற்குத் துணையாகவிருந்த அன்னாரின் கணவன் டாக்டர் சிவயோகம் அவர்களுக்கும் நன்றி உரித்தாகுக.

மூலமாகக் கொண்ட ஏட்டுப் பிரதியினைப் படி செய்வதிலும், அதனை ஏனைய இரு பிரதிகளுடன் ஒப்பிட்டுப் பாட பேதங்களைக் குறிப்பதிலும உறுதுணையாக இருந்தவர் மட்டக் களப்புத் திமிலைத் துமிலன் (திரு எஸ்.கிருஷ்ணபிள்ளை) அவர்கள். அப்பெரியாரின் துணை இல்லாது விட்டால் இந்நூற் பதிப்பு இவ்வளவு விரைவில் வெளிவந்திராது. அவரின் ஒத்துழைப்புக்கும் பயன்தரு கருத்துக்களுக்கும் நாம் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம். மட்டக்களப்பிலே கவிதைத் துறையில் தமக்கென ஒரு தனிச் சிறப்பிடம் பெற்றுக் கொண்ட இப்பெரியாரின் கலைத்தொண்டும் இலக்கியப் பணியும் செழித்தோங்குகவென இறைஞ்சுகின்றோம்.

இன்றைய ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் அச்சகங்களுக்கும் பெரிய பங்குண்டு. இலக்கிய நூல்களை அச்சிட்டு வெளியிடுவது அதிக இலாபத்தைக் கொடாத போதும், அத்தொழிலை இலக்கியப் பணியாகக் கணித்து, ஒவ்வோராண்டும் குறைந்தது இரு நூல்களையும் பல இலக்கியச் சஞ்சிகைகளையும் தொடர்ந்து அச்சிட்டு வரும் பெருமை கண்டி றோயல் அச்சக உரிமையாளர் திரு. ஜே. ஜி. றொட்ரிகஸ் அவர்களுக்குரியது. அவர் பல்கலைக் கழகப் பேராசிரியர் பலரின் நூல்களையும், பல்கலைக் கழகச் சஞ்சிகைகள் பலவற்றையும் நல்லமுறையில் வெளியிட்டுப் பெயர் பெற்றவர். இந்நூலை அச்சிட ஒப்புக்கொண்ட காலம் வியாபார அச்சுவேலைகளைச் செய்யும் காலம். அப்படி இருந்தும் உரிய காலத்தில் அச்சு வேலையைச் செய்து முடித்த அப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தகைக்குக் கோடி நன்றி செலுத்துகின்றோம். அடக்கமான முறையிற் பண்பான பணி செய்து வரும் றொட்ரிகஸ் அவர்களுக்குப் பக்கபலமாக இருந்து, அச்சுவேலையை அழகுறச் செய்வித்து, பிழை திருத்தம் செய்வதில் உதவி, நூலினை நல்ல முறையில் அமைத்துத் தந்த அவரின் மகள், றோயல் அச்சகப் பொறுப்பாளர், செல்வி ஜோ. பிலோமினா றொட்ரிகஸ் அவர்களுக்கு நன்றி கூறுகிறோம்.

மட்டக்களப்பிற் பல இடங்களுக்கு எம்முடன் சென்று விபரங்கள் திரட்ட உதவிய அன்பர்களுக்கும், இந்நூலாக்கத்திற்கு வேறு பல வகையில் உதவிய பெரியார்களுக்கும் உளம் நிறைந்த நன்றி

'பரத ராஜமுனிவர் இயற்றிய கஞ்சன் அம்மானை' என ஒரு நூல் கொழும்புக் கலாநிலையத்தால் வெளியிடப்பட்டுள்ளது. 'இது பழைய ஏட்டுப் பிரதியின்படி அச்சிடப் பெற்றது' என்று அதிற் குறிப்பிடப்பட்டுள்ளது வேறு பிரதிகள் கிடைக்கவில்லையென்றும், கிடைத்த பிரதியை வைத்துக் கொண்டே நூல் அச்சிடப்பட்டுள்ளதென்றும், கலாநிலைய அதிபர் பத்மநாப ஐயர் முன்னுரையில் எழுதியுள்ளார். 88 பக்கங்களைக்கொண்ட அந்நூல் கஞ்சன் வதையுடன் முற்றுப் பெறுகின்றது. அதற்குப் பின்னுள்ள கண்ணன் வரலாறு அதிலில்லை. அந்நூல் எவ்வாண்டில் அச்சிடப்பட்டதெனவும் குறிப்பிடப்படவில்லை. அந்நூலை எமக்கு அனுப்பிய வித்துவான் எவ். எக். சி. நடராஜா அவர்கள் வேறொரு கஞ்சன் அம்மானை நூல் பற்றியும் ஒரு குறிப்பினை அனுப்பியுள்ளார் மட்டக்களப்பு அமிர்தநதி ம. அ. உ. கந்தையா வைத்தியரால் மட்டக்களப்புத் திருமகள் அச்சியந்திரசாலையில் 1933ம் ஆண்டு அந்நூல் பதிப்பிக்கப்பட்டதென்பதே அக் குறிப்பு அந்நூலைப் பெறப் பலவகையில் நாம் முயன்றும் கிடைக்கவில்லை. நாம் பதிப்பித்த நூல் முற்றுப்பெறும் நிலையிற் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களும் கஞ்சன் அம்மானை ஓலைப் பிரதியொன்று தந்துதவினர். நூற்பதிப்புக்குரிய வேலைகள் முடிவடைந்தமையால் அவ்வேட்டினைப் பயன்படுத்த முடியவில்லை.

பாடபேதங்களையும் கொண்ட முழு நூலாக, அம்மானை பற்றிய முன்னுரையுடன், முதலில் வெளிவரும் கஞ்சன் அம்மானை இப்பதிப்பாகும். பொதுமக்களின் இலக்கியங்களை அச்சில் வெளியிடும் எமது பணிக்கு நன்மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் தொடர்ந்து கிடைக்குமென எதிர்பார்க்கின்றோம்.

இலங்கைப் பல்கலைக் கழகம், சு. வித்தியானந்தன்
பேராதனை.
13-1-1970.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதைச் சுருக்கம்

மதுரையை ஆண்டு வந்த உக்கிரசேன மன்னனின் தேவியரில் ஒருத்தி ஒரு ஆண் மகவு பெற்றாள். சோதிடர்கள், அந்தக் குழந்தயைால் மன்னனது குடிக்குத் தீங்கு நேரிடும் எனவும், அதனாற் குழந்தையைக் கொன்றுவிடுமாறும் கூறினார்கள். ஆனால் உக்கிரசேனனோ குழந்தையை ஒரு பேழையுள் வைத்து யமுனை நதியில் விடுத்தான். நீராடிக் கொண்டிருந்த நமதாகினி நகரத்து ஆனையரசனின் மனைவி அப்பேழையைக் கண்டெடுத்துக் குழந்தையை வளர்த்துவந்தாள். புதிய கஞ்ச பாத்திரத்திலே காணப்பட்டமையாற் குழந்தைக்குக் கஞ்சன் எனப் பெயரிடப் பட்டது. கஞ்சன் வளர்ந்ததும், வளர்த்த தாயை நிந்தித்துச் சராசந்தனின் நகருக்குப் போய், அந்த அரசனின் மகனுக்குப் போர்ப்பயிற்சிகள் பயிற்றிவந்த வசுதேவனிடம் பல வித்தைகளையும் கற்று வரலானான். அப்போது சராசந்தன் மேற் போர் தொடுத்தான் படைச்சிங்கவாகனன். சராசந்தனின் உரைப்படி கஞ்சன் படைச்சிங்கவாகனனை வெற்றிகண்டு, சராசந்தனின் மகளை மணந்தான். உடனே கஞ்சன் படையுடனும் வசுதேவனுடனும் மதுரை நகருட் புகுந்து தந்தை உக்கிரசேனனைச் சிறையிலிட்டு ஆட்சியை மேற்கொண்டான். கஞ்சனுக்கு இளையவர்களான உரோகணியையும் தேவகியையும் வசுதேவருக்குக் குருதட்சணையாக மணஞ்செய்து கொடுத்தான்.

ஒருநாள், வசுதேவர், உரோகிணி, தேவகி ஆகியோருடன் வேட்டையாடப் புறப்பட்ட கஞ்சன், மாலியாற்றங்கரையிலே இளைப்பாறும் பொழுது, தங்கையரின் கோரிக்கைப்படி அங்கு நின்ற மாவொன்றிலிருந்த கனியொன்றைச் சரத்தால் அறுத்துக் கொடுத்தான். அவர்களும் ஆவலோடே அதை உண்டார்கள். அந்தக் கனிக்காகப் பன்னிரண்டாண்டுகள் காத்திருந்த பயாசுதன் என்னும் மகாவிருடி, இதையறிந்து, அதனை உண்டவர்களின் வயிற்றுச் சந்ததியால், அதனை அறுத்தவன் மாள்வான் எனச் சபித்தார். இச்சாபத்தை யறிந்த கஞ்சன் தனது தங்கையரைச் சிறையிலிட்டு அவர்கள் பெறும் பிள்ளைகளையெல்லாம் கொன்று வரலானான்.

இவ்வாறு உலகிலே கஞ்சன், நரகன், வாணன் போன்றவர்கள் மக்களை வருத்தியதோடமையாது இருடிகளையும், தேவர்களையும் கூட இன்னலுக்காளாக்கி வரலாயினர். இதனாலே தேவர்களுடன் பிரமனும் இந்திரனும் திருப்பாற் கடலில் அறிதுயில் கொள்ளும் திருமாலிடம் சென்று முறையிடலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மாத்திரமன்றிப் பூமாதும் கூடத் திருமாலை வணங்கி, துட்டரை யழித்துச் சிட்டபரிபாலனம் செய்து பூபாரம் தீர்க்குமாறு வேண்டிக்கொண்டாள். ஆகவே திருமால் பூமியிற் கிருஷ்ணவதாரமெடுக்கத் திருவுளங்கொண்டு அனந்தனை உரோகணி வயிற்றிற் சங்குக் கிருஷ்ணனாகப் பிறக்குமாறு கட்டளையிட்டார். உரோகணிபெற்ற பிள்ளையை வசுதேவர் நள்ளிரவில் ஆயர்பாடியெல்லைக்கு எடுத்துச் சென்றார். நந்தகோபன் இறந்த குழந்தையொன்று கொண்டுவரக் கண்டு அதை மாற்றி எடுத்துவந்து உரோகணியிடம் கொடுத்தார். அடுத்தநாள் கஞ்சன் இறந்த குழந்தையைத்தான் தூணோடு மோதியெறிந்தான். ஆனால் சங்குக் கிருட்டிணன் அசோதையிடம் ஆயர்பாடியில் வளரலானான்.

திருமால், இலக்குமியை விதர்ப்பன் மகள் உருப்பிணியாகப் பிறக்குமாறும், ஏனைய தனது பரிவாரங்களையும் பூமியிற் போய்ப் பிறவியெடுக்குமாறும், பகவதியை அசோதை மகளாக உதிக்குமாறும் பணித்துத் தான் தேவகியின் உதரத்திற் போய்ச் சேர்ந்திருந்தார்.

திருமால் திருஅவதாரம் செய்த அன்றிரவு பல அதிசயங்கள் நிகழ்ந்தன வசுதேவனது விலங்குகள் விலகின. கதவுகள் திறக்கப்பட்டன இருளகன்று ஒளிபரவிற்று. வாயு பகவான், வசுதேவரிடம் குழந்தையை எடுத்து ஆயர்பாடி சென்று அசோதையருகே கிடத்தி அவள் பெற்றிருக்கும் பெண் குழந்தையை எடுத்துவருமாறு பணித்து அகன்றான். வசுதேவரும் அப்படியே செய்தார். எதுவும் நிகழாததுபோல மீண்டும் சிறையிற் புகுந்திருந்து கொண்டார்.

அடுத்த நாட்காலை, பெண் குழந்தை பிறந்ததை அறிந்து வந்த கஞ்சன், அதனைத்தூக்கித் தூணில் மோதப்போனான். எழுபத்தாறாயிரம் யானைகளின் பலமுள்ள கஞ்சனால் அக் குழந்தையை இலகுவிலே தூக்கி மோதமுடியவில்லை. அவன் சீற்றமுடன் குழந்தையின் காலைப்பற்றித் தூக்கித் தூணுடன் மோதப்போனபோது அக்குழந்தை அவனது மார்பில் உதைத்து அந்தரத்தில் எழுந்து, தனது அண்ணன் ஆயர்பாடியில் வளர்வதாகக் கூறிமறைந்தது. அதிர்ச்சியும் அச்சமும் கொண்ட கஞ்சன் ஆயர்பாடியில் வளரும் தனது விரோதியை எப்படியும் தீர்த்துக்கட்டிவிடப் பலசூழ்ச்சிகளையும் செய்யத் தொடங்கினான்.

ஆயர்பாடியில் அசோதையிடத்தே செல்வமாக வளர்ந்து கொண்டிருந்தான் கண்ணன். அதனைக் கண்டுவந்த தூதர் கஞ்சனிடம் கூறினர். கஞ்சன் பூதனை யென்பாளை அழைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நச்சுமுலைப் பாலூட்டிக் கண்ணனைக் கொல்ல ஏவினன். கண்ணனே நச்சுப்பாலை நாவினலே ஒதுக்கி அவளின் ஊனும் உயிரும் உண்டு தீர்த்தான். பூதனை இறந்ததைத் தூதர் சொல்லக்கேட்ட கஞ்சன் கண்ணனைக் கொன்றுவருமாறு சகடாசுரனை ஏவினன். சகடாசுரன் நிணபோசனனுடன் சகடுருவாகச் சென்று கண்ணனைக் கொல்ல நெருங்கியபோது கண்ணன் அவர்களைக் காலால் உதைத்துக் கொன்றெழித்தான். இதன்பின்னர் மத்தன், மதாமத்தன் என்ற இரு அசுரர்களைக் கஞ்சன் ஏவினன். அவ்விருவசுரரும் அசோதையின் வீட்டு வாசலில் நின்ற இரு மருதமரங்களைப்பிடுங்கி யெறிந்துவிட்டுத் தாமே இரு மருதுகளாகிக் கண்ணனைக் கொல்லத் தருணம் பார்த்திருந்தனர். இந்த வேளையில் ஆய்ச்சியரின் பால், வெண்ணெய், தயிர் என்பவற்றைத் திருடியுண்டதோடு ஆயக்கன்னியரையும் கேடு செய்தான் என்ற குற்றச் சாட்டுக்காகத் தண்டனையாகக் கண்ணனை உரலோடு சேர்த்துக் கட்டிவைத்தாள் அசோதை. கண்ணன் உரலோடு ஊர்ந்துவந்து மருதாகிநின்ற அசுரர்களை மோதி வதை செய்தான்.

இதையறிந்த கஞ்சன் புட்கரனென்பானை ஏவினன். கண்ணன் ஆயச் சிறுவரோடு கன்று மேய்க்கச் சென்றிருந்த போது அவ்வசுரன் புள்ளுருவாகப் பறந்துவந்து கவ்வினன். கண்ணனே மலைபோல் வளர்ந்து புட்கரனின் அலகைப்பிழந்து கொன்றன். இதன்பின் பிறலம்பன் கிறுத்துவன் என்ற இரு அசுரர்களைக் கஞ்சன் கண்ணன்பால் ஏவினன். பிறலம்பன் களிறாகவும் கிறுத்துவன் கழுதையாகவும் கண்ணனைக் கொல்லத் தருணம்பார்த்து நின்றிருந்தனர். சங்கு வண்ணனுடன் காலிமேய்க்கச் சென்ற கண்ணன் கழுதையின் காது, கண், மூக்குகளில் கட்டெறும்புகளை விட்டுக் கொல்லுவித்தான். களிற்றைச் சங்குவண்ணன் மலையோடு மோதிக்கொன்றன்.

இவ்வாறு கஞ்சன் ஏவிய அசுரர்களின் பிணங்களைச் சுமந்து ஆற்றாத இடையர்கள் மேலும் கஞ்சனது கொடுமைகளுக்கு அஞ்சியவர்களாக ஆயர்பாடியை விட்டகன்று பிருந்தாவனத்திற் குடியேறினர். இதையறிந்த கஞ்சன், சுகந்தன் விகந்தன் என்ற இரு அசுரர்களை அங்கும் ஏவினன். அவர்கள் விளாமரமாகவும், கன்றாகவும் கண்ணனைக் கொல்லக் காத்து நின்றனர். காலிமேய்க்கச் சென்ற கண்ணன் அந்தக் கன்றின் கால்களைப் பிடித்து விளாவின் மேல் எறிந்து, அந்த அசுரர்களையும் வதைத்தான். அவர்களின் பிணங்களை ஆயரும் ஆய்ச்சியரும் பலநாட்களாகச் சுமந்து அப்புறப்படுத்தினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனது தொல்லைகளைப் பொறுக்கமாட்டாத ஆய மகளிர், அவனுக்குத் தெரியாத ஒருபொய்கைக்கு நீராடச் சென்றனர். அவர்கள் ஆடைகளைக் களைந்து கரையில் வைத்துவிட்டு நீராடிக்கொண்டிருக்கையிற் கண்ணன் யாருக்கும் தெரியாமல் அவற்றையெல்லாம் வாரியெடுத்துக்கொண்டு குருந்த மரத்தின்மேல் ஏறிக்கொண்டான். நீராடி முடித்த ஆயமகளிர் கரையேற மாட்டாமற் கண்ணனிடம் துகில் இரந்தபோது, அவன் அவர்களில் ஒருத்தியைத் தனக்குக் காதலியாய்த் தந்தால் துகில் தருவதாகக் கூறினான். மகளிர் தம்முள் ஒருத்தியை கண்ணனுக்குக் காதலியாகுமாறு கேட்ட பொழுது, அவள் ஆணவத்துடன் மறுத்தாள். இதைக் கண்ட கண்ணன், ஆடைகளை அங்கிருந்த ஒரு மாமரத்தில் உயரத்தில் வைத்துவிட்டுக் குளத்திற் குதித்து, ஒருவர்க் கொருவனாய்த் தழுவி விளையாடி நீங்கினான்.

ஒருநாள் கண்ணன் வேய்ங்குழற் கீதம் இசைத்துப் பசுக் களைப் புதியதொரு பகுதி நோக்கி ஓட்டிச் செல்கையில் அந்த வனத்திலிருந்த ஒரு மாவிருடி அப்பக்கம் செல்லக்கூடாதெனத் தடுத்துக் காளியன் என்ற விடப்பாம்பு உறையும் மடுவொன் றைப்பற்றிக் கூறலானான். காளியன் என்ற அந்த விடப் பாம்பின் அகங்காரத்தை அடக்க நினைந்த கண்ணன், முனிவர் தடுத்ததையும் பொருட்படுத்தாது காலிகளை அங்கே ஓட்டிச் சென்றான் அதுகண்ட காளியன் சீற்றமுடன் கண்ணனைத் தாக்கவந்தபோது அதை மடக்கி, காலைத் தலையில்வைத்து, அதன் அகங்காரம் அடங்க ஆடினான் கண்ணன். அந்த ஆட்டத்தைத் தாங்கலாற்றாது காளியன் கதிகலங்க, அவன் தேவியர் கண்ணனைக் கரங்கூப்பி வணங்கி, மன்னிப்புக்கோரினர். காளிய னும் திருமாலென அறிந்து பணிந்து துதித்தான். கண்ணன் காளியனையும் அவன் சுற்றத்தாரையும் அந்த மடுவைவிட்டு நீங்குமாறு பணித்தான். காளியனோ அந்த மடுவை விட்டுத்தான் நீங்கினால் முனிவன் ஒருவனது சாபத்தின்படி கருடன் தன்னைக் கொன்று தின்று விடுவான் எனக்கூறி நடுங்கினான். கண்ணன், காளியனது தலையிலுள்ள தனது பாதச்சுவட்டைக் கருடன் கண்டால் நெருங்கான் எனக்கூறி அபயமளிக்கக் காளியன் அந்த மடுவைவிட்டு நீங்கிச் சென்றான். அன்றிலிருந்து அந்த நச்சுமடு நன்னீர் மடுவாயிற்று. ஆயர் தமது ஆநிரைகளுக்கு அங்கே நீரூட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின்னும் கஞ்சன் ஒன்பது அசுரர்களைக் கூத்தாடிகளாகச் சென்று கண்ணனைக் கொன்றுவருமாறு ஏவினான். கண்ணன் ஆநிரை மேய்க்கச் சென்றபோது அவ்வசுரர்கள் அவனிடம்வந்து தாம் கூத்தாடுவதாகவும், பரிசாகக் கன்றுகள் தரவேண்டுமெனவும் கோரினர். கண்ணனோ "கூலிக்கு மேய்ப்பேன் கொடுக்கப் பசுவுமில்லை, ஆலித்துக் கூத்து ஆடுகிறேன் பாரு"மென்று தானே கூத்தாடி ஒன்பதசுரரையுங் கொன்றொழித்தான். அது குடக்கூத்தெனப்பட்டது.

வசந்த ருதுவிலே ஆயர்கள் இந்திரனுக்குப் பொங்கலிடமுயன்றபோது, கண்ணன் தடுத்துக் குமாரகிரியென்னும் குன்றடியில் ஆற்றங்கரை அணங்குக்கும் வனதேவதைகளுக்கும் பொங்கலிடுமாறு கூறித் தானே அத்தேவதைகளாக மாறி அவ்வவிகளை ஏற்றான். தனக்கிடும் பொங்கலைத் தடுத்துத் தன்னைக் கண்ணன் அவமதித்ததை நாரதன் மூலமாக அறிந்த இந்திரன், மேகங்களை யழைத்துக் கன்மாரிபொழிந்து நந்தனையும் மக்களையும் ஆயரையும் அழிக்குமாறு ஏவினான். அவ்வாறு கன்மாரி பொழிந்த பொழுது கண்ணன் கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்து ஆயரைக் காத்தான். இந்திரன் வெகுண்டு தானே போருக்கு எழுந்தபோது அவனை எதிர்த்தழிக்கக் கருடனும் ஆயத்தமானான். அப்போது பிரமன் இந்திரனைத் தடுத்துத் திருமாலைப் பணியுமாறு பணிக்க அவனும் பணிந்து திரும்பிப் போனான்.

இவையெல்லாவற்றையும் அறிந்த கஞ்சன் திகைத்தானாயினும், குருந்தன் தேனுகன் என்னும் இரு அசுரர்களைக் கண்ணனைக் கொன்றுவருமாறு ஏவினான். அவர்கள், காமக் கோட்டத்துக்கு வரும் நங்கையர்களையெல்லாம் கண்ணன் தழுவி விளையாடி விடுவதை யறிந்தவர்களாய், இரு கன்னியராக வேடம்புனைந்து கண்ணனைக் கொல்வதற்காகக் காமக்கோட்டம் புகுந்து, கண்ணனை இருவரும் இருபுறமாகப் புல்குபவர்போல் நெருங்கினர். கண்ணன் இந்த வஞ்சனையை அறிந்தவனாதலின் இருவரையும் இறுக்கி அணைத்தவனாய் நெரித்துக் கொன்றான். அவ்விரு அசுரரும் வெள்ளெயிறு தோன்றப் பிணமாக விழுந்தனர்.

கஞ்சன் கண்ணனைக் கொல்வதற்கு ஏழசுரராக எழுந்து நின்ற சத்தவாலியென்பவனை அனுப்பினான். அவ்வேழசுரரும் ஆயர்பாடி வந்து கண்ணனைக் கொல்லக் காத்திருந்தனர். அவ்வேளையில் கோதனனின் மகளைக் கொள்வதற்குக் காளைதழுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனொருள் ஒருவனுகக் கண்ணனும் இருப்பதையறிந்த ஏழ சுரரும், வெல்லவேண்டிய கோதனனின் ஏழெருதையும் தாமே கொன்றுவிட்டு ஏழெருதாக நின்றிருந்தனர். கண்ணன் அவ் வேழெருதையும் தானே ஏழெருதாகமாறிப் பொருது கொன் ருெழித்தான். கோதனனின் மகள் நப்பின்னை கண்ணனுக்கு மாலையிட்டாள்.

ஏழசுரரும் இறந்ததையறிந்த கஞ்சன் கண்ணனைக் கொல்ல இனிவகையறியாதவனுயிருக்கையில், நாரதன் வந்து அந்த இடையர்களுக்குக் கண்ணனைக் கூட்டிவருமாறு ஓலை விட்டால், அவர்கள் கூட்டிவருவார்கள், கொன்றுவிடலாம் என யோசனை கூறினன். கஞ்சனும் ஓலை விடுத்தான். கஞ்சனின் ஆணைப்படி வகூரனும் சென்று நந்தனையும், மைந்தனையும், யாவரையும் கஞ்சன் அழைத்துவரச் சொன்னதாகக் கூறினன். கண்ணன் உடன்பட்டு வகூரனுடன் சேனை புடைசூழச் சென்றுன். வழியிலே மதனசேனையென்பாள் கண்ணனைத் தொழுது கூன் நிமிரப் பெற்றுள். வழியிற் கண்ணனைக் கொல்லுமாறு கஞ்சனல் ஏவப்பட்ட விழாமுரசன் சுந்தரன் என்னும் இரு நிசாசரர் கண்ணனுடன் மோதி அழிந்தனர். இதையறிந்த கஞ்சன் கேசன் என்பவனைப் பரியாகச் சென்று கண்ணனைக் கொல்லுமாறு ஏவினுன். பரியின்மேல் ஏறிய கண்ணன் பரியாக வந்த அந்த அசுரனையும் கொன்றுன். அதனுற் கேசவன் என்ற பெயரும் பெற்றுன்.

பரியும் அழிந்ததை அறிந்த கஞ்சன் கண்ணனை மிதித்துக் கொல்லுவிக்கக் குவலயாபீடமென்ற யானையைச் செலுத்தி னுன். அந்தப் பயங்கர யானையுடன் பொருது கொன்ருெழித் தான் கண்ணன். அதையறிந்த கஞ்சன் கண்ணனுடன் மோத முட்டிகனை யனுப்பினுன். கண்ணன் முட்டிகனையும் கொன்ருெ ழித்தான். கஞ்சன், சுந்தாப சுந்தன் என்ற அசுரர்களை ஏவ அவர்களும் கண்ணனுற் கொல்லப்பட்டனர். பூதனை முதற் கொண்டு சுந்தாபசுந்தனீருகக் கண்ணனுல் அழிக்கப்பட்டது கண்ட கஞ்சன் தானே கண்ணனை அழிக்கவென்று சினங்கொண் டெழுந்தான். கஞ்சனது படையும் கண்ணனது படையும் மோதிப் போர்மலேந்தன. கஞ்சனும் கண்ணனும் பலவகையான வாளிகளையும் தொடுத்துப் பொருதனர். கடைசியிற் கண்ணன் விடுத்த வேலொன்றுக்குக் கஞ்சன் இரையானுன். கண்ணன் அவன் குஞ்சியைப்பற்றி மார்பில் ஏறி உதைத்தான். கஞ்சன் உயிர்விட்டு மலைபோலச் சாய்ந்தான். உக்கிர சேனன், உரோகணி, தேவகி, வசுதேவர் யாவரும் விடுதலை பெற்றுர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாருமாகக் கஞ்சனது ஈமக்கிரியைகளை யமுனையாற்றங்கரையிற் செய்து முடித்தனர். கண்ணனும் சுற்றத்தாரும் மதுரையிலே இனிது வாழ்ந்திருந்தார்கள்.

கண்ணன் முதலியோருக்குப் போர்க்கலை பயிற்றுவித்த சாந்துபலிகாசியென்ற மறையோனுக்கு, பாற்கரனால் விழுங்கப்பட்ட அவனது பிள்ளையை மீட்டுக்கொடுத்துக் குருதட்சணை செலுத்தினான் கண்ணன் அப்போது பாஞ்சசன்னியமும் வெளிப்பட்டுக் கண்ணன் இடக்கரத்தைச் சேர்ந்தது.

சராசந்தன் தனது மருகன் கஞ்சனைக் கண்ணன் அழித்தமை கேட்டு வெகுண்டு போருக்கெழுந்தான். இருபத்தொருநாள் இடைவிடாது போர்நடந்தது. சராசந்தன் பலநாட்டு அரசரது உதவியையும் பெற்றுப் பொருதலானான். மகா வலிமை படைத்த காலயாவண்ணனும் சராசந்தனுக்கு உதவிக்கு வந்தான். கண்ணன் காலயாவண்ணனுடன் மற்போர் செய்யச் சம்மதித்துத் தன்னை அவன் துரத்திப்பிடித்த இடத்திலே மற்போர் தொடங்கலாமெனக் கூறி ஓடலானான். கண்ணன் முசுகுந்தமாமுனி துயிலும் குகையிற் போய் ஒளிந்து கொள்ள, தேடியோடிவந்த காலயாவண்ணன் முனிவனைக் கண்ணனின் மாறுவேடமென எண்ணி உதைக்கலானான். முசுகுந்தன் கோபமிகவாகிக் கண்விழித்துப் பார்த்தலும் அவனுக்குண்டான வரத்தின் வலிமையாற் காலயாவண்ணன் எரிந்து சாம்பலானான். கண்ணன் அங்கே முசுகுந்த மாமுனிக்கும் முத்தி கொடுத்தருளினான். சராசந்தன் காலயாவண்ணன சாம்பலானதையும், கண்ணன் படையோடும் மதுரையை நீங்கிக் கோகந்த மாமலையிலிருப்பதையும் அறிந்து, அங்கே சேனையுடன் போய்த் தேடியும் காணாமல் தன்நாடு திரும்பிச் சென்றான்.

சராசந்தன் போனபின்பு கண்ணன் விசுவகன்மாவைக் கொண்டு கடல்நடுவே துவாரகாபுரியை (துவாரபதி) நிர்மாணித்துச் சுற்றத்தாரோடும் குடிபுகுந்து இனிது அரசியற்றி வீற்றிருந்தான்.

சராசந்தன் தன்னைச் சேர்ந்த அரசருடன் கண்ணனை ஒழிக்க ஆலோசனை செய்யலானான். சிசுபாலனின் யோசனையின்படி விதர்ப்பராசன் மகள் உருப்பிணியின் திருமணத்துக்குக் கண்ணனுக்கும் அழைப்புவிடுத்து, வந்ததும் சூழ்ந்து கொல்வதென்று முடிவு செய்யலாயினர். திருமணவோலை கண்ட கண்ணன் பெண்கொள்ளப் போகும் பிறவுற்பலனுடனும் வேறுமன்னருடனும் வந்து வீற்றிருந்தான். திருமால் கையுறையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணக்கோலத்தில் விதர்ப்பன் பக்கலில் வந்துநின்ற உருப்பிணியிடம் மாலையொன்றைக் கொடுத்தான். அந்தமாலையால் மால்மீது அவள் மாலானாள். பின்னர் உருப்பிணியின் தோழி மனோன்மையின் உதவியுடன், உருப்பிணி மாதங்கி கோயிலுக்கு வழிபடவந்தபோது, அவளையும் தோழியையும் தேரேற்றிக் கவர்ந்து சென்றான் கண்ணன்.

திருமணப்பந்தலிற் காத்திருந்த பிறவுற்பலன், சராசந்தன் சிசுபாலன், விதர்ப்பன் யாபேரும் இச்செய்திகேட்டுப் படைபரிவாரங்களுடன் கண்ணனின் தேரைத்தொடர்ந்து விரைந்தனர். இவர்கள் நெருங்கி வருவதையறிந்த கண்ணன் தோழி மனோன்மையை உருப்பிணிபோல வேடமிடச் செய்து வழியில் இறக்கிவிட்டுக் காதலியுடன் தேரூர்ந்து போனான். போனவர்கள், உருப்பிணி கிடைத்ததுபோதும், கண்ணன் தப்பிப் பிழைத்துப் போகட்டுமெனத் திரும்பலாயினர். இறக்கிவிடப் பட்டவள் மனோன்மை என விதர்ப்பன் மூலமாக அறிந்த போது தான் தாம் ஏமாந்து போனதுணர்ந்து வெட்கித்து நின்றனர். கண்ணன் துவராபதியடைந்து காதலியோடும் மகிழ்ந்திருந்தான்.

சிலநாட் சென்றபின் கண்ணன் வேட்டையாடச் சென்று திரும்பினான். சதுர்த்திப் பிறை கண்ட தோஷத்தால், மூதாதையரின் அருமணியொன்று பறிபோயிருந்தது. விட்டுணுவின் வங்கிசத்தானான மந்தாகினி யென்பானுக்குச் செங்கதிரோன் ஈந்த சிவந்தக மாமணியை அவன்மகன் பிறசேனன் பூண்டு காட்டுவழிபோகையில் அத்திகையென்னும் அருவரையில் வாழ்கின்ற சிங்கமொன்று அவனை அடித்துக் கொன்று பிரகாசம் பொருந்திய அந்தமணியைப் பூண்டிருந்தது. அம்மணியைக் கண்ட மதனப்பிரபை ஆசைப்படவே, அவள் கணவன் சாம்புவன் அச்சிங்கத்தைக் கொன்று மணியைப் பெற்றுக் கொடுத்தான். கறடியர் கோனான சாம்புவனிடமே அந்தமணி இருந்தது. அந்தமணியைப் பெறவேண்டுமெனப் பிறசேனனது வங்கிசத்தார் கண்ணனை மன்றாடலாயினர். ஆனால் கறடியர் கோன் சாம்புவனோ அதைத் தர மறுத்தான். அந்தமணியைப் பெறுவதற்காகக் கறடியர்கோன்மீது படையெடுத்துச் சென்றான் கண்ணன். கண்ணனின் மோதுதலுக்கு ஆற்றாது பணிந்த கறடியர்கோன் சிவந்தக மணியையும் தன்மகள் சாம்புபதியையும் கொடுத்து உயிர்துறந்தான். கண்ணன் அவனுக்கும் சாயுட்சிய பதவி கொடுத்தருளினான். கண்ணன் சாம்புபதியோடும் துவாரகை போந்து இனிதிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறசேனனின் உறவினன சத்திராசித்துவிடம் கண்ணன் தான் பெற்றுவந்த மணியைக் கொடுக்க, அவன்மகிழ்ந்து மணியையும் கண்ணனுக்கே ஈந்து அவனது மகள் சத்தியபாமை யையும் மணஞ்செய்து கொடுத்தான். இதனல் வெகுண்ட சதாசு என்பான் சத்திராசித்துவை வழிமறித்து மத்திகையாற் குத்திக் கட்டி வதைக்கலானன். சிவந்தக மணியையும் சத்திய பாமையையும் தனக்குத் தரவில்லை என்ற சீற்றத்தாற் சதாசு இவ்வாறு வதைத்தான். சத்திராசித்து வேறுவழியின்றிக் 'கோலமதிற்றுவரைக் கொற்றவர்க் கோல' மென்றான். உடனே அங்கு தோன்றிய மாயவன், சதாசு ஆயுதத்தாற் சாகான் என்பதறிந்து கையினற் குத்திக் கொன்றான். சதாசுவுக்கும் மாயன் முத்திகொடுத்துச் சத்திராசித்துவையும் தன்பதிக்கே போகவிட்டுத் துவராபதியணைந்திருந்தான்.

உருப்பிணி இரட்டைக் குழந்தைகள் பெற்றாள். அவர்கள் கருப்புவில், மலரம்பு, மகரக்கொடி என்பவற்றுடன் பிறந்தனர். சிவபிரானது ஆணையால் மன்மதனே பூமகளாகிய உருப்பிணிக்கு இரட்டைக் குழந்தையராகப் பிறந்தான் என வான்மீகமுனி மூலமாக உருப்பிணி அறிந்தாள். அவ்விருவருக்கும் பிறதூமன் அனுவுருத்திரன் எனப்பெயரிட்டனர் அவர்கள் வளர்ந்து வருகையில், முன்னர் ஏழெருதாய் வந்து கண்ணனல் மாண்ட அசுரனின் தந்தை சந்திரதாரன் என்பான், ஆகாய மார்க்க மாக வந்து பிறதூமனைத்தூக்கிச் சென்று கடலில் வீசிவிட, அவனை ஒரு மீன் விழுங்கியது. அந்த மீனைப்பிடித்த செம்படவர் செம்பனது தேவி மாயாபதியிடம் அதைக் கொடுக்க, அவள் அதை அறுத்தபோது அதன் வயிற்றிலிருந்து பிறதூமன் வெளிப்பட்டான். அவனது மன்மத வடிவு கண்டு மாயாபதி மையல் கொண்டாள் பிறர்க்குத் தெரியாமல் அவனும் அவ ளுடன் கூடியிருந்தான் இதை நாரதன் போய்க் கண்ணனிடம் தெரிவிக்கக் கண்ணன் செம்பன்மேற் படையெடுத்தான். செம்பனுக்கு உதவியாக வந்து கண்ணனுடன் பொருத அவனது மாமன் மதுவையும், செம்பனையும், கயடவனையும் கண்ணன் கொன்றொழித்து வெற்றிகண்டான். செம்பன், மது, கயடவன் ஆகியோரைக் கொன்றவனைக் கொல்லவென்று பிறதூமன் சீற்றத்துடன் எழுந்தான். கண்ணன் தனது வடிவத்தைக் காட்டப் பிறதூமன் தன்தந்தையென அறிந்து பாதத்தில் வீழ்ந்து வணங்கினன். கண்ணன் செம்பனது மகனுக்கு முடி சூட்டி அந்நாட்டையாளப் பணித்து, மாயாபதியையும் பிறதூமனையும் தேரிலேற்றிக் கொண்டு துவாரபதியடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் நாரதன் கண்ணனிடம் வந்து, பாரத்துட வண்ண பத்திரன் என்ற முனிவனின் சாபத்தால் தேவரம்பையர்கள் புவியில்வந்து பிறவாளனுக்குப் புத்திரிகளாகப் பிறந்தார்களென்றும், அவ்வாறு பிறந்த பதினாறாயிரத்து இருநூற்றுப் பத்துக் கன்னியரையும் நரகாசுரன் என்பவன் கொணர்ந்து மணம் செய்ய முகூர்த்தமிட்டு வைத்திருக்கிறானென்றும், அவனைக்கொன்று கன்னியரை மணக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டான். அதற்கிசைந்த கண்ணன் நரகாசுரனுடன் போருக்கெழுந்தான். பலவகையான ஆயுதங்களை நரகன்பாற் பிரயோகித்தும் நரகனை அவை கொல்வதாயில்லை அப்போது கும்பமுனி தோன்றி நரகனது வரலாறு கூறி அவனைக் கொல்லும் உபாயமும் கூறினான். அதைக்கேட்டுக் கண்ணன் வாடிநிற்பது கண்ட கருடன், துவாரகை சென்று உருப்பிணியைக் கொணர்ந்தான். அவள் தனது வலிமையால் நரகனது முடியிலுள்ள மாலையைப்பறித்தாள். அதன் பின்னர் கண்ணனின் சக்கராயுதம் நரகாசுரனை இருகூறாக்கியது. நரகன், வராகவதாரத்திற் பூமாதேவிக்கும் திருமாலுக்கும் பிறந்தவனாதலின், கண்ணனே நரகனது ஈமக்கிரியைகளை நடத்துவித்து, அவன் மகன் வராக நாதனுக்கு மகுடம் சூட்டி ஆளப்பணித்து மந்தாகினி நகரில் வந்து வேந்தருடன் வீற்றிருந்தான்

அப்பொழுது நாரதன் வந்து, குறிப்பிட்ட முகூர்த்த வேளை உழுந்து கண்ணாடியில் விழுந்துருளும் அளவினதாயிருப்பதாற் கண்ணன் கைப்பிடித்து எஞ்சிய கன்னியரைத் தனக்குத் தரவேண்டுமென வேண்டினான் அதற்கிசைந்த கண்ணன் குறிப்பிட்ட முகூர்த்த வேளையிற் பதினாறாயிரத்து இருநூற்றுப் பத்துக் கன்னியரையும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவனாகி மணம் செய்தான். நாரதன் தலை குனிந்தான். கண்ணன் துவாரகை சென்று வாழ்ந்திருந்தான்.

ஒருநாள் நாரதன் சத்தியபாமையை வந்து கண்டு, தேவேந்திரன் தேவி கற்பகதருவும் பாரிசாதமும் பெற்றுச் சிறப்புற்றிருப்பதுபோல, சத்தியபாமையும் இருக்கவேண்டுமென்றும் மாயனிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்திச் சென்றான். சத்தியபாமையின் கோரிக்கைப்படி கண்ணனும், கற்பகதருவும் பாரிசாதமும் பெற்றுவரப் புறப்பட்டான். தேவருலகுபோன கண்ணனை எதிர்கொண்டு போருக்கெழுந்த அமரர்கோனைக் கருடன் தூக்கிவீச, அவன் அயனடியிற் போய்விழுந்தான். அயன் அபயமளித்து மாயவனைப் பணிந்து உய்யுமாறு வேண்ட, அவனும் அவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிந்தான் கருடன் பாரிசாதத்தையும் கற்பகத்தருவையும் வேருடன் பறித்துவந்தான். கண்ணன் அவற்றைச் சத்திய பாவைக்களித்து மகிழ்வித்து இனிதிருந்தான்.

வாணாசுரன் என்பவன் மாவலியின் மரபில் வந்தவன். மகாவலிமை படைத்தவன். கண்ணுதலோன் முதலான தேவர்களெல்லாம் ஏவல்செய்ய, மண்ணுளோரும் விண்ணுளோரும் பணிந்து நடுங்க வாழ்ந்திருந்தான். வாணனுக்கு ஒருமகள் பிறந்தாள். அவளுக்கு உஷையென்று பெயரிட்டு வளர்த்துவந்நார்கள் வாணனும் அவன் தேவியான மதனப்பிரபையும் உஷையைக் கண்ணுதலோனுக்கே மணம்செய்து கொடுக்கத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் உஷையோ அதனை விரும்பாதவளாகவிருந்தாள். ஒருநாளிரவு ஒருபூதம் கனவிலே அனுவுருத்திரனின் உருவத்தோடு அவளைத் தழுவியது. தோழி சித்திரரேகை காட்டிய படத்தினால் அவனை அனுவுரைத்திரனென வறிந்த உஷை, எப்படியேனும் அவனையே கணவனாகவடையத் திராத வேட்கை கொண்டிருந்தாள். அப்போது உமாதேவியால் விடுக்கப்பட்ட ஒருபூதம்பிராமண வேடத்தோடு உஷையைக்கண்டு, அனுவுருத்திரனைக் கொண்டு தருவதாகக் கூறிப் பூங்காவிலே துயின்றுகொண்டிருந்த அனுவுருத்திரனைத் தூக்கிக் கொணர்ந்து உஷையுடன் கூட்டுவித்து அகன்றது. உஷையும் அனுவுருத்திரனும் யார்க்கும் தெரியாமற் கூடி இன்புற்றிருந்ததை நாரதன் வாணனுக்குரைக்க, வாணன் வெகுண்டெழுந்து அந்தப்புரம் வர, கூட்டுவித்த பூதம் அனுவுருத்திரனை மறைத்து விட்டுத் தானே அனுவுருத்திரனாக நிற்க, வாணன் அடித்து வீழ்த்தினான். சித்திரரேகை அடிபட்டிறந்தது தன்கணவனென அழுதாள் வாணனும் தான்செய்த தவறுக்காக இரங்கி அரண்மனைசென்றான்.

நாரதன் துவாரகைசென்று, வாணன் மகளை மணந்த அனுவுருத்திரனை வாணன் கொன்றதாகக்கூறக் கண்ணனும் வாணன்மேற் போருக்கெழுந்தான். பலதேவன், உக்கிரசேனன் சத்திய சாத்தகி, சாம்பன், கிறுபற்பன் வகூரன், வசுதேவன் முதலானோரும் கண்ணனுடன் எழுந்தனர். கண்ணன் தான் போருக்கு வந்திருப்பதைக் கருடன் மூலம் வாணனுக்கறிவிக்க, அவன் வெகுண்டெழுந்து வீரரைக்கொண்டு கருடனைச் சிறையிட முனைந்தபோது, கருடன் அவர்களைப் பிய்த்தெறிந்து மீண்டு வந்து கண்ணனுக்குரைத்தான் கண்ணனது படை நெருங்கி வருவதறிந்த வாணன், அக்கினியைப் போரிட அனுப்பினான். தனது படைகளுக்கு அக்கினி அடங்காதது கண்ட திருமால், சக்கரத்தை விட எடுத்தபோது, வேதவியாதன் தோன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினியை வெல்லும் உபாயத்தை உரைக்க, அதை உப யோகித்து அக்கினியை வெற்றிகண்ட கண்ணன் அந்த வாயில் கடந்து படையுடன் முன்னேறலானான். அடுத்து வாணன் ஆறுமுகனைக் கண்ணனுடன் பொருத அனுப்பினான். தேவ சேனுபதியின் படையுடன், செங்கண்மால் படைபொருதலானது. கந்தனின் வலிகண்டு கண்ணன் சக்கரத்தை ஏவ எடுத்தபோது அகத்திய முனிவன் தடுத்துக் கந்தனைவெல்லும் உபாயத்தைக் கூற, அதைப் பயன்படுத்தி ஆறுமுகனை வென்று, அவ்வாசல் கடந்து படையுடன் முன்னேறினான் கண்ணன். இதையறிந்த வாணன் கணபதியைக் கண்ணனுடன் போரிட ஏவினான். கண்ணன் மோதகம், கனி, பால், அவல் முதலியவற்றைக் குவித்துத் தொழவைத்து, ஆனைமுகனையும் வென்று அப்பாற் சென்றான். இதையறிந்த வாணன் சுந்தரியைக் கண்ணனுடன் போரிடுமாறு ஏவினான். அவள் வலிகண்ட கண்ணன் வாளெடுத்து எறிய முயன்றபோது முனிவன் தடுத்துத் துர்க்கையை வெல்லும் உபாயத்தை உரைக்க, அதை உபயோகித்து அவளை வெற்றி கண்டான் கண்ணன். அதையறிந்த வாணன் பரமனையே போரிட ஏவினான். பரமனின் பூதப்படை முதலாகச் சுரங் களீருக எதிர்த்து வெற்றிகண்ட கண்ணன், பிரமன் கூறிய உபாயத்தைக் கடைப்பிடித்து ஈற்றில் பரமனையே வெற்றி கண்டான்.

அடுத்து வந்தெதிர்த்த வாணனின் மகன் வலுதேவ காலனையும் பலதேவன் நாஞ்சிற்படையாற் கொன்றொழித்தான். மைந்தன் மடிந்ததுகேட்ட வாணன் வெகுண்டெழுந்தான். கண்ணன்மேற் சரமாரி பொழிந்தான். கண்ணனும் சக்கர மொழிய நாலாயுதத்தையும் பிரயோகித்தும் பலனிலாது போயிற்று. இறுதியிற் கண்ணன் விடுத்த சக்கரம் வாணனது கரங்களைத் துணித்து வீழ்த்தியது அப்போது பரமன் அயனை யழைத்து வாணனது தலையும் இருபுயமும் அறுதபடி மாவ வனிடம் கூறிவரும்படி வேண்டினான். அயனே அதற்கு அஞ்சிப் பரமனையே மாயவன் முன் போம்படி தூண்ட, பரமன் வருவது கண்ட மால் அவனையெதிர்கொண்டான். சக்கரத்தால் அறுக் கப்பட்ட வாணனின் தலையும் இரு கரங்களும் சிவனின் வேண்டு கோளுக்கிணங்கத் திருமால் கிருபையால் மீண்டும் உண்டாயின. வாணன் கர்வம் அகன்று திருமாலடி பணிந்தான். அவன் அனுவுருத்திரனுக்கு மகள் உஷையைக் கொடுத்ததோடு திரு மாலுக்கு அடியுறையாகப் பொன்னும் மணியும் பொருளும் கொடுத்துத், தனது பிழை பொறுக்க வேண்டினான். கண்ணனும் வாணனுக்கருள்புரிந்து துவாரகை சென்றான்.

திருமால் நரசிங்கமாகி இரணியனை வதைத்த பின் பிரகலாதனுக்குத் போரில் எவராலும் சாகாதவரம் கொடுத் துச் சங்குசக்கரமும் அவனுக்கீந்து சென்றிருந்தார். அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர் வம்சத்திலே தோன்றிய பவுண்டரிய வாசுதேவன், கருடவாகனமும் ஐந்தாயுதமும் பிடித்து அகங்காரத்தோடு வாழ்ந்துவந்தான். அவன் ஒருநாள் விசுமா மித்திரனது மகனைப் பிடித்து அவனது தகப்பன் செய்த தவமனைத்தையும் தனக்குத் தாரை வார்த்துத் தரவேண்டுமென வற்புறுத்தி நையப் புடைத்து விட்டிருந்தான். இதையறிந்த நாரதன், பவுண்டரிக வாசுதேவனைக் கண்ணனுற் கொல்லுவிக்க வேண்டுமென்று நினைத்துப் பவுண்டரிகவாசுதேவனிடம் சென்று "உன்னைப் போன்று பஞ்சாயுதம்பிடித்துக் கருடனை வாகனமாகக்கொண்டு உனது பெயரையே கொண்டு வாழும் இன்னொருவனைக் கண்டு வந்தேன்" என்று கூறினுன். அதைக்கேட்ட பவுண்டரிக வாசுதேவன், பிறஅரசர்களது உதவியையும் பெற்றுக் கண்ணன் மீது போருக்கெழுந்தான். இரு திறத்தாரது படைகளும் போர்மலைந்தன. பவுண்டரிக வாசுதேவனும் கண்ணனும் பொருதனர். ஈற்றிற் கண்ணன் செலுத்திய சக்கராயுதத்துக்கு இரையாஞன் பவுண்டரிக வாசுதேவன். கண்ணன் துவாரகை மீண்டான்.

சந்திரசக்கிர வாளனெனுமரசன் தன் மகள் மதன சுந்தரியை காசிராசனுக்கு மணமுடிக்க நிச்சயித்து எல்லா அரசர்களுக்கும் மணவோலையனுப்பினுன். ஆனுற் கண்ணனுக்கு மணவோலையனுப்பவில்லை இதைக் கண்ணன் நாரதனுலறிந்தான். இந்தவேளையிற் சராசந்தன் முதலிய அரசர்கள் கண்ணனுக்கு வஞ்ச மணவோலை யொன்றும் அனுப்பிவைத்தனர். கண்ணன் எல்லாமறிந்தவனுய்ச் சக்கிரவாளன் நகரத்தை வந்தடைந்தான் சராசந்தன் சிசுபாலன் முதலியோர் காசிராசனைத்தூண்ட, அவன் சக்கிரவாளன் படையோடும் சேர்ந்து கண்ணன் மீது படையெடுக்க ஆயத்தமானுன். அப்போது கண்ணன் காசிராசனைப்போன்ற வேடம்பூண்டு, மணப்பந்தலுக்கு வந்தான். காசிராசனும் வந்து சேர்ந்நான். மதன சுந்தரியை மணக்க இரண்டு காசிராசர்கள் வந்ததுகண்டு யாவரும் திகைத்தனர் இருவரும் செருமலைந்து யார்வெல்கிருர்களோ அவருக்கே திருமணம் என்ற முடிவுக்கு வந்தனர். போர்க்களத்தில் இருவருக்கும் போர் மூண்டது. ஈற்றில் மாயன் சக்கராயுதத்தை விடுத்துக் காசிராசனைக் கொன்ருழித்தான். நின்றவர்கள் வென்றவனே மெய்க்காசிராசன் என்றெண்ணினர். கண்ணன் மணக்கோலமுற்று, மதனசுந்தரியை மணக்கச் சென்ருன். கருடன் காசிராசன் தலையைத்தூக்கி, நின்ற அரசர்களுக்குக்காட்டி, மாயன் மணம் முடித்து வரும்வரை நிற்பீரேல் அழிவீர் என எச்சரித்தான். செருமலைந்த அரசர்கள் யாவரும் ஓடிமறைந்தனர் கண்ணன் மணப்பந்தலிற் காசிராசன் வேடம் தவிர்த்துத் தனது சுயவுருவத்தை மேற்கொண்டு மதன சுந்தரியைக் கரம்பற்றினுன். காதலியோடும் கனகமணித் தேரேறி யாவரும் போற்றத் துவராபதி புகுந்து இனிதிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூற் பதிப்பிற்குரிய ஏடுகள்

***மூலம்:***

*திமிலதீவு மகாவிஷ்ணு கோயில் ஏடு*
*(திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை*
*[திமிலைத்துமிலன்] உதவியது)*

***பாட பேதம்:***

*(ஸ்ரீ:) திருமதி கண்மணி ஸ்ரீஸ்கந்த ராஜா*
*உதவிய கையெழுத்துப் பிரதி*

*(த:) தம்பிலுவில் ஏடு*
*(திரு. க. வை. சரவணமுத்து*
*உதவியது)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சன் அம்மானை

## விநாயகர் காப்பு

[1]சீரளந்த செல்வத் திருவரங்கிற் கண்டுயிலும்
பாரளந்தார்க் கம்மானை பாடுதற்கு- ஆரம்
பணபதி பொங்கரவப் படர்சடையோன் பயின்ற
கணபதி யைங்கரத்தோன் காப்பு

சீர்ப்பாற் கடற்றுயிலும் சீதரனுக் கோரிடுவை
நீர்பாவை காணிக்கை நீட்டுவாம்— [2]போர்பரவு
சொன்மாலை சூடுந் துளாய்மாலை யான்றனக்கு
[3]புன்மாலை சூட்டப் [4]புகல்.

சீர்மடந்தை கேள்வன் திருவுந்தி யோன்படைத்த
பார்மடந்தை வாழ்வுதரும் பல்லுயிரெல் லாந்தழைக்கத்
தர்மம் பெருகத் தவஞ்செய்வோ ரீடேற
கர்மங் கருகக் கலியும் புறஞ்சாய
எம்மாதந் தோறு [5]மெழிலி மழைதூங்க
மும்மாரி பெய்ய முடிவேந்தர் தான்சிறக்க
வேதம் விளங்க விறுமா மிகத்தழைக்க
கோதனங்க ளெல்லாம் குளுந்து [6]மடைபாய
பூவே ரியுந்தருவும் புயல்வனங்கள் தேன்சொரிய
காவேரி யாறு கரைபுரள எந்நாளும்
எவ்வால யமும் எழில்பூசை யுண்டாக
சைவாக மங்கள் [7]தான்தளரா தேபொலிய
மூவர் முதலாக மும்மூர்த்தி யும்விளங்க
தேவர் களும்விளங்கச் செந்தாமரைக் கண்ணன்
செந்தா மரைக்கண் திருமால் பதம்போற்றி
சந்தாப மின்றித் தழைத்திருப்பார் தாரணியோர்
ஆரணன் தந்தையுயர் அம்மானை பாடுதற்குக்
காரணந் தந்த கணபதியே முன்னடவாய்

---

1 சீரடர்ந்த (ஸ்ரீ) சீரணைந்த (த)
2. பொற்பாவை (த)
3. பொன்மாலை (த)
4. புகழ் (த)
5. எழில்சேர் மணிகூந்து (ஸ்ரீ) (த)
6. மடைபால்பெருக (த)
7. திறம்பெறத் தான்தழைக்க (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசை விளங்கும் ஒளிநெடுமா லைப்பாட
தேசம் விளங்கும் திவாகரனே முன்னடவாய்
தேவகியார் பெற்ற செழுமணியை யான்பாட
நாவக முற்றிருக்கும் நாமகளே முன்னடவாய்
அரங்கர் பதியி லடித்தா மரைபாட
வரங்க ளருளும் மாருதியே முன்னடவாய்

## வரலாறு

முந்து தவமுடைய மூவுலகிற் கன்னியர்கள்
வந்து திருப்பொன்னி மாநதியில் நீராடி
ஆங்கவர்க ளெல்லா மணியரங்கத் திற்புறஞ்சூழ்
பூங்கா வனத்திற் புகுந்து விளையாடி
கந்துக மோச்சிக் களங்காடிச் சீராடி
வந்து கனக மணியூஞ்சல் தாளுடி
இந்துநுதல் வாணுதலோர் எல்லாருங் கூடியொரு
சந்தன வாணிழலிற் ருனிருந்தா ரம்மானை
விம்மி யெழுந்ததன மெல்லியர்க ளெல்லோரும்
அம்மானை தானுட அங்கைதனிற் கொண்டார்கள்
முத்து நிரைத்தனவும் மும்மணியாற் சேர்த்தனவும்
பத்தி நிரைத்தனவும் பவளத்தாற் சேர்த்தனவும்
சேலை யிறுக்கிச் செழுங்கனகந் [1]தானிறுக்கி
மாலை யணிகுழலார் வாங்கினர்கா ணம்மானை
கொண்ட லனையகுழற் கோதையர்க ளெல்லோரும்
வண்டுக ளாட மகரக் குழையாட
திண்கமல மொத்த திருமுகமும் வேர்வோட
கண்கள் புடைபரந்து காதளவு மூடாட
கொங்கைக ளாடக் கொடிபோ லிடையாட
செங்கை வளையுஞ் சிலம்புங் கலகலெனக்
கைமாறிக் கைமாறிக் கானமஞ்ஞை யாடுதல்போல்
அம்மாத ரெல்லா மாடினர்கா ணம்மானை
ஐந்து கரம்பாடி அங்குசபா சம்பாடி
தந்தி முகவன் சதங்கை பதம்பாடி
> தென்னரங்கம் பாடித் திருவேங் கடம்பாடி
மன்னரங்கத் திகிரி மாயோனை யும்பாடி
அங்கு வளை[2]வாவி யனந்தசய னம்பாடி
கொங்கு வளர்சோலைக் குறுங்கொடியுந் தான்பாடி

---

1. தானணிந்து (த), > ஆமோது தாம்பா லணியுரவிற் கட்டுண்ட தாமோ தரப்பிள்ளை தண்டைப் பதம்பாட்டி (த)
2. மாயன் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்ன புரம்பாடிக் கண்ணர்மங்கை யும்பாடி
அண்ணல் திருமுட்ட ஆதிவரா கம்பாடி
ஏழாழி சூழுலகோ ரெண்ணும் திருக்குடந்தை
ஆழ்வா ரையும்பாடி அன்னமுத்தை யும்பாடி
போதா ராவிந்தம் புணரும் கருணைவிழி
சீதரன் வாழும் திருப்பதியுந் தான்பாடி
இருப்புலா வத்தை யிணைவளையா ரீண்டெடுத்த
திருப்புல்லா ணிப்பதிவாழ் [1]சீர்மலையுந் தான்பாடி
செந்திருத் தோய்ந்து செருக்குந் திருத்துளபச்
சுந்தரத் [2]தோன்கரிய சோலைமலை யும்பாடி
கட்டுண்ணும் தாம்புக்குக் [3]காதார் கதிகொடுத்த
விட்டுணு மூர்த்திதிரு [4]வேள்மலையுந் தான்பாடி
அன்று விலையிற் றுயின்று னமர்ந்துறையும்
நன்றான நூற்றெட்டு நாற்பதியுந் தான்பாடி
[5]கூராழி கைப்பெருமான் கோயிலையுந் தான்பாடி
ஓரான கோயிற் றிருமலையுந் தான்பாடி
திருவாழி யாழ்வார் சிறீகெருட ஆழ்வாரை
மருவாருஞ் செங்கழலார் வண்மைவிற லும்பாடி
அம்பஞ்சு மேனி யரிசேச வம்புயத்தான்
செம்பஞ்சு சேர்ந்த [6]செழுமணியை யான்பாட
அல்லி மலர்க்குழலாள் [7]ஆராணி மேகலையாள்
பல்லுயிரும் பெற்றுள் பழிப்பொன்று மில்லாதாள்
பாந்த ளணைநெடியோன் பாரிற் படிமடந்தை
பூந்தண் புரவடிமேற் பொன்னூ புரம்பாடி
பாரெங்கும் போற்றிசெய்யப் பாம்பணையிற் பள்ளிகொள்ளும்
சீரங்க ராயனையும் செப்பலுற்று ரம்மானை
எண்ணும் [8]படியில் எழிலாங்கு பெற்றவகை
ஒண்ணுதலே கேட்க உரையென்று ளம்மானை
[9]அங்கையி லாட்டு மம்மானை தான்பாட
மங்கை யொருத்தி வரலாறு சொல்லலுற்றுள்
அந்த நெடுமால் அகிலம் பதினாலும்

---

1. சீர்மணி (த. ஸ்ரீ)
2. தோளண்ணல் (த)
3. கரதலத்தையும் (த.ஸ்ரீ)
4. வேளையும் (த)
5. மூராரி (த)
6. செழுங் கனகமும்பாடி (த)
7. ஆராழி (த)
8. பதியில் (த)
9. அங்கையி லாடுகின்ற அம்மானை தான்கேட்டு (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தானை யுந்தியிலே தந்தான்கா ணம்மானை
உந்திக் கமலத் துதிப்பித்த [1]வேதாவை
வந்தித்த வேதியனை மாயோ னருள்புரிந்து
எட்டிக் கருத்தாலே எவ்வுலகு மெவ்வுயிரும்
[2]சிட்டித் திருக்கச் செலவிட்டா ரம்மானை
நித்த முனதடிமை நீங்காது ரட்சிக்க
உற்றவரம் தாவென் றேதினர்கா ணம்மானை
மாதவ னங்கோர் மணிப்பேழை யிலுதித்து
போதவனுக் கீந்தவனைப் பூம்பதத்திற் கேவினன்காண்
விடைபெற்ற வேதாவும் விறும்பதத் தேநெடுநாள்
இடரற்றுப் பூசித் திருந்தான்கா ணம்மானை
மனுச்சக்கர வர்த்தியென்னும் மைந்தனுக்கு வாகுவென்பான்
தனிச்சக்க ரஞ்செலுத்தித் தாரணியை [3]யாண்டிருந்தான்
பெருந்தவசு பண்ணிப் [4]பிரமாவைப் போற்றலுற்றான்
அருந்தவனுந் தோன்றியுனக் கானவரங் கேளெனவே
இங்குவந்த கோவேநா னென்றென்று முன்பதியில்
அங்குவந்து கேட்க அருளென்றா னம்மானை
மன்னு தடையின்றி வந்துவரங் கேளெனவே
அந்நா யகனு மகன்றான்கா ணம்மானை
மன்வாசல் கண்டுநிற்க மாமறையோ னெசெல்வன்
தன்வாசல் காப்போர் தடையென்றா ரம்மானை
பூசை முடிந்தபின்பு பூமகளு மன்னவன்மேல்
ஆசை மிகவா யழையெனவே வந்தழைத்தார்
பூமகளைப் [5]போற்றிப் புரத்தினிலே [6]தானிற்க
தாமதமே துந்தனற்குச் சாற்றென்றா ரம்மானை
புண்டரிகக் கண்ணனைப் பூசித்தே னெனெனவே
கண்டவனைத் தெண்டனிட்டுக் காட்டென்றான் காட்டலுமே
பாரினில் வீழ்ந்து பணிந்து களிகூர்ந்து
நாராயணாய நமவென்று [7]தோத்தரித்து
அரும்பேறு புண்டரிக ஆதியே நீயெனக்குத்
தரும்பேறு நாயகனைத் தாவென்றான் [8]தார்வேந்தன்
கண்ணின் மணியனைய கண்ணனைக் கேட்டமையால்

---

1. தந்தைதனை (த) 2. சிருட்டித்து (ஸ்ரீ) 3. ஆள்கையிலே (த)
4. பெருமானை (ஸ்ரீ) 5. பற்றி (ஸ்ரீ) 6. நிற்கையிலே (த)
7. தான்போற்றி (த) 8. அம்மானை (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி யவனு [1]மிடருற்று னம்மானை
செங்கமலக் கண்ணன் திருவாய் மலர்ந்தருளி
"அங்கவனுக் கென்னை அருளெ"ன்று னம்மானை
மாதவனை வேதன் மணிப்பேழை தன்னுடனே
பூதலத்தில் [2]வேதனுக்குப் பூரித்தா னம்மானை
அப்பதியை விட்டு அவனு மயோத்தியெனும்
பொற்பதியைச் சேரவந்து புக்கினன்கா ணம்மானை
சத்தா பரணமுடன் தாமனுக்குக் கோயில்கட்டி
வைத்தா னயோத்தியிலே வாகுவென்பா னம்மானை
அன்று முதலா யவன்பிள்ளை பிள்ளைகள்தான்
என்றுமகா பூசை யியற்றிவந்தா ரம்மானை
சேயோன் மரபிற் தெசரதன் மைந்தனென்பான்
மாயோ னிராமனுய் [3]வந்துபுக்கா னம்மானை
அன்னவனுந் தான்போய் அரக்கர்குலம் வேரறுத்து
மன்னு மயோத்தியிலே [4]வந்துபுக்கா னம்மானை
மின்னிலங்கு தோளான் விபீடணனைத் தான்[5]பரிந்து
தென்னிலங்கை நாடாளச் செல்லுமென்று ரம்மானை
நின்னடியே நின்னடியில் நின்றுமுறை செய்யாமல்
பொன்னடியே விட்டகலப் பொருந்தே னெனவுரைத்தான்
இப்பேழை செய்து "எமைப்பூசை செய்"யென்று
அப்பேழை யீந்து அனுப்பினன்கா ணம்மானை
எவ்விடத்தில் வையா தெழிலரக்கர் கோமானும்
செவ்விய காவேரித் [6]திருப்பதியில் வைத்தருளி
ஆசுவனம் போனு னவ்வளவி லவ்விட்டதே
வீசுமகா தீர்த்தம் விண்ணிநவ தீர்த்தமுடன்
சந்திர புக்கரணி தான்பொன்னின் மாநகரிலே
வந்துதித்த பாற்கடலில் வாய்ப்பா னமக்கென்றும்
ஆடல்நெடுமால் அவ்விதமாய்க் கண்துயின்றான்
வீடணனும் வந்தெடுத்து [7]வேதித்தா னம்மானை
எடுக்க முடியா திடைவான் முகநோக்க
திடுக்கந் தவிரத் திருவாய் மலர்ந்தருளி

---

1. இடறுற்றிருக்கையிலே (த)
2. வேந்தனுக்கு (த)
3. வந்துதித்தான் (த-ஸ்ரீ)
4 வந்துமுடிசூட்டியபின் (த-ஸ்ரீ)
5. பார்த்து (த-ஸ்ரீ)
6. திருநதியில் (த)
7. வேசத்தார் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தலமும் மன்னு எனக்கினிய வைகுந்தம்
மைத்திலங்கை நோக்கி [1]வழிதுயில்வோம் போமென்றார்
சாலமதிற் கோபுரமும் சர்வா பரணமுடன்
ஆலயமும் பொன்னு லாங்கே யமைத்தருளி
புண்ணியனைப் பூசித்துப் போற்றி விடைகொண்டு
எண்ணரிய தென்னிலங்கை [2]யேகியர சாண்டிருந்தான்
அங்கவனை யாட்கொண்ட அச்சுதன்கா ணம்மானை
துங்க மகுடமுடிச் சூதனன்கா ணம்மானை
சீரங்க மேவும் சிறிவாசு தேவன்காண்
நாரணன்கான் தேவர்கள்தன் நாயகன்கா ணம்மானை
போதத் [3]துரிசும் புரினூலும் பூண்டவன்காண்
மாதர் களுக்குமண வாளன்கா ணம்மானை
சீரங்க நாயகியார் சீராடும் சீதரன்காண்
சாரங்க பாணிகாண் சக்கரக்கைத் தாமன்காண்
செந்தா மரைவதனச் செல்வன்கா ணம்மானை
ஐந்தா யுதமுடைய ஆதிகா ணம்மானை
காயாம்பூ மேனிக் கருடப் பரியான்காண்
ஆயிரம்வாய் நாகத் தணையான்கா ணம்மானை
எவ்வுலகு மாளு மிரணியன்றன் நெஞ்சதனை
செவ்வுகிராற் கொண்டநர சிங்கங்கா ணம்மானை
பொய்தழைத்த தென்னிலங்கைப் போர்வேந்தர் வங்கிசத்தை
[4]எய்தழிக்க வல்ல இராமன்கா ணம்மானை
செஞ்சொல் லசோதை திருமகன்கா ணம்மானை
கஞ்சன் வலிகடந்த கண்ணன்கா ணம்மானை
பூபாரந் தீர்க்கும் பொருட்டாக வந்துதித்த
கோபாலன் பெற்ற குமாரன்கா ணம்மானை
செய்ய நெடுமாலைத் தேவகியார் பெற்றதுவும்
ஆய ரிடத்தே அசோதை வளர்த்ததுவும்
மாமன் வரவிடுத்த வஞ்சனையை வென்றதுவும்
சேமமுடன் கஞ்சன் சிதையப் பொருததுவும்
காயா மலர்மேனிக் கண்ணன் கடற்புவியில்

---

1. விழி (த) 2. எய்தி (த) 3. துளசு (த)
4. எய்தழித்துக் கொண்ட (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயா வரமுடைய மன்னவரா யுள்ளாரை
கோப முடனே குலையப் பொருததுவும்
தேவர் முனிவர் திடுக்கம் தவிர்த்ததுவும்
வள்ளல் [1]மதித்தவர்கள் மன்ருக வாழ்ந்ததுவும்
உள்ளபடியே யுரையென்று ரம்மானை

## அவையடக்கம்

அம்மானை கேட்டதுவும் ஆயிழையார் சொன்னதுவும்
வெம்மானை வாக்கிஞல் விண்ணப்ப மென்றதுவும்
எல்லைப் பதியி லிருக்கு மொருமுடவன்
ஒல்லைக் [2]கடல்கடக்க உற்சாகங் கொண்டாற்போல்
சோலை [3]வளங்களெங்கும் சூழரங்கத் தம்மானை
பாலை [4]வருபிரமர் பாடுகிறே னம்மானை
அங்கையால் நாளும் ஆராய்ந்து பார்த்தாலும்
மங்கைய ரிட்ட மணற்சோறு சோருமோ?
புந்தியில்லா நாயேன் புகழ்ந்துரைத்த புன்சொல்லைச்
செந்தமிழ் வாணர் திருவுளத்திற் [5]காணுரோ?
வன்பான மேருவுக்கு வாய்த்த வடதிசையிற்
பண்பான ரத்னகிரிப் பவள மெனுந்தலத்தே
கோதில் முனிவரெல்லாங் கூடி யிருந்தருளி
ஆதி வராக னரிவங் கிசக்கதையைச்
செப்பமுடன் [6]வல்லாரைச் செப்பு மெனமொழிய
ஒப்பமுடன் மாய னுதயம் முதலாகத்
தூசியுடன் கஞ்சன் தொலைந்த தடியாகக்
காசி யிராசன் கதைகண்ட தீருகப்
பண்பால் நிறைந்த பரராச மாமுனிவன்
நண்பா லுரைத்தருளும் நாராயணன் கதையைப்
பாங்குற் றிருந்து பலகாலுங் [7]கேட்கவல்லோர்
தீங்கற் [8]றிருந்து திருமால் பதம்பெறுவார்
[9]மறுப்பெற்ற நாய்த்தோலில் மாணிக்கம் வீற்றிருந்தால்
பொருட்பற்றி [10]வையாமல் போடார் பெரியோர்கள்
புன்சொல்லே யானாலும் போராழி யான்கதையைச்
செஞ்சொல்லே யாகச் செலுத்துஞ் செகத்திலுளோர்

---

1. வதிட்டுவரை மண்ணுக (த)
2. பதி (ஸ்ரீ) கடக்க
3. வனமெங்கும் (த)
4. வனமும்
5. காணுதே (த)
6. வல்லவர்கள் (த)
7. கேட்டாக்கால்
8. வாழ்ந்து (த)
9. மருப்பெற்ற (ஸ்ரீ) பருப்பற்ற (த)
10. கொள்ளாமல் (த-ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

[1]மன்னு மிரவிகுல மகேந்திர வங்கிசத்தில்
உன்னும் பலமுடைய உக்கிர சேனனென்பான்
[1]மாமதுரை யென்னும் வளநகரில் வீற்றிருந்து
[2]தேமருவு செங்கோல் செலுத்திவரு நாளையிலே
[3]மாதரணி தோளான் மாதேவி மாரிலொரு
பேதையாள் பிள்ளையொன்று பெற்ருள்கா ணம்மானை
வேந்த னழைக்க [4]வேதியர்கள் தாம்வந்து
சேர்ந்த முகூர்த்தமிது தேர்வேந்தே நல்லதல்ல
உற்ற மகனென் றுணராதே யுன்குடிக்குக்
குற்றம்வரு மற்றிவனைக் கொல்லென்ரு ரம்மானை
மாதேவர் சொல்லை மறுத்தாலும் தோசமென்று
[5]கோதை யிளங்குஞ்சைக் கொன்ருலும் [6]பாவமென்று
துக்கமிக வெய்திச் சோகக்கண் ணீர்சொரிய
தக்க மதலை தனைக்கஞ்ச பாத்திரத்தில்
உக்கிர சேனன் ஒருபேழை யுட்பொதிந்து
தக்கதொரு பேழைக்குள் தன்பேரும் வெட்டுவித்து
மிக்க யமுனையிலே யிட்டான்கா ணம்மானை
[7]அந்த மணிப்பேழை ஆற்றில் வருதல்கண்டு
வந்த புகழ்சேரும் மந்தா கினிநகரில்
ஆனை யரச னகமுடையாள் [8]நீராடப்
போன பொழுததனைப் புக்கெடுத்தா ளம்மானை
தன்மனையிற் கொண்டுசென்று தார்வேந்த னுந்தானும்
[10]மன்மதனுக வளர்ந்தார்கா ணம்மானை
புண்டரிகம் போலப் புதுக்கஞ்ச பாத்திரத்திற்
கண்டமையால் மற்றிவனைக் கஞ்சனென்று பேருமிட்டுச்
சந்திர கோதையென்பாள் தான்வளர்த்தா ளம்மானை
வெந்திறற் கஞ்சன் [11]விபாதத்தா லேதுசெய்தான்
வருந்தி வளர்த்தெடுத்த மாதாவை [12]வஞ்சித்துப்

---

1. மாநகரி (த)
2. தென்னவனும் (த)
3. மாலையணி (ஸ்ரீ)
   மாதையர் (த)
4. வேதத்கணிதர் (த-ஸ்ரீ)
5. கோதவிழுங் குஞ்சு (த-ஸ்ரீ)
6. குற்றம்வரும் (த)
7. ஆய்ந்த (த)
8. தான்கண்டு (த)
9. அப்பேழைதனை (த)
10. மன்மகனுக (த-ஸ்ரீ)
11. விபரித்தால் (த)
12 நிந்தித்து (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து சராசந்தன் புரம்புகுந்தா னம்மானை
மன்னுஞ் சராசந்தன் மைந்தனுக்கு வாயுதங்கள்
பண்ணிப் பயிற்றுவிக்கும் பண்பதனைப் பார்த்திருந்து
வாய்த்த புகழ்க்கஞ்சன் வசுதேவன் பாதத்தில்
தோத்திரஞ் செய்து தொழுதனன்கா ணம்மானை
அந்த வசுதேவன் "ஆரென்று" தான்வினவ
"மந்தா கினிநகரில் மன்னன் மக"னென்றான்
அந்த விடய மறிந்த வசுதேவன்
மந்தா கிரிநகரில் மன்னன் றனைவினவ
"ஆற்றி லடைந்த அரியதொரு பேழைக்குள்
தோற்றினு னிப்பிள்ளை தொன்னூற் பெரியோனே!
உக்கிர சேனனென்று உட்பேழை யுட்பொறித்து
மிக்கதொரு பேழையினுள் விட்டிருந்த தம்மானை"
என்றவனுஞ் சொல்லி ஏகினன்கா ணம்மானை
அன்று முதலா யவனிடத்திற் றன்பயின்றான்
சார்ந்தான் றனையும் சராசந்தன் மைந்தனையும்
ஏர்ந்தா யுதமு மியற்றினன்கா ணம்மானை
சந்தான செல்வச் சராசந்தன் தன்மேலே
வந்தான் படைச்சிங்க வாகனனென் பானொருவன்
"வந்த படைச்சிங்க வாகனனை வென்றவற்கு
என்மகள் தன்னைமண மீய்வே" னெனவுரைத்தான்
சொன்ன சராசந்தன் சூதறிந்து வாதறிந்து
மன்னன் வசுதேவன் [1]மகரசிங்கஞ் சோடித்துத்
திண்டேரிற் பூட்டியந்தச் சிங்கத்தேர் மன்னவனைக்
கண்டு முனிந்து கடும்பூசல் செய்யலுற்றான்
மங்கப் பொழுது வசுதேவன் வாளிகளாற்
சிங்கப் பரியானைத் தேரழித்தா னம்மானை
தேரழிந் தோடமற்றத் தேர்பூண்ட சிங்கங்கள்
போரழிந் தோடப் பொருதனன்கா ணம்மானை
சாகருஞ் சேனைச் சராசந்தன் கண்டுநிற்க
ஆசாரி யானுக் கவன்துணையாய் முன்புகுந்து
கஞ்சனு மங்கோர் கதிர்வேலை விட்டெறிந்து
கோச்சிங்க வாகனனைக் கொன்றான்கா ணம்மானை

---

1. மாச்சிங்கம் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவனைக் கொன்றளவில் மன்னன் மனமகிழ்ந்து
உற்றவனைப் பார்த்து உளமகிழ்ந்து ஏதுசொல்வான்
"முன்னையான் சொன்ன மொழிவழுவேன் மற்றுனக்குக்
கன்னிமார் தன்னைக் கலியாணஞ் செய்துதர
உன்தந்தை தாயா ருரை'யென்று கேட்டலுமே
"என்தந்தை மந்தா கினிமன்ன" னென்றுரைத்தான்
அங்கவனைக் கூவ அவன்வந்து தோன்றிடவே
"இங்கிவனுன் மைந்தனோ?" வென்றுரைத்தா னம்மானை
"கண்டு கொள்"ளென்று கஞ்சன்வந்த பாத்திரத்தைக்
கொண்டுவந்து வைத்துக் கும்பிட்டா னம்மானை
ஊறுபடப் பார்த்து உள்வரித்தல் கண்டுகந்து
தேறுபுகழ் உக்கிர சேனன்மக னென்றறிந்து
கன்னியரை யீந்து கடற்படையுந் [1]தானீந்து
பொன்னகரி தானுளப் போகவிட்டா னம்மானை
மனக்கனி வாய்க்கஞ்சன் வசுதேவ னைத்தொழுது
"எனக்கிளைய பெண்க ளிருவருள ரென்றறிந்தேன்
அன்னவரை யீந்துமக்கு ஆகுதிமுன் வேட்டுவிப்பேன்
மன்னவனே யென்னுடனே வரவேணு" மென்றுசொன்னான்
வந்த படையுடனே மாமதுரை யுட்புகுந்து
தந்தை தனைப்பிடித்துச் சாமளவுங் குத்துவித்துக்
கால்விலங்கு பூட்டிக் கடுஞ்சிறையி லிட்டுவைத்து
ஏர்விலங்கு கையா னிராச்சியத்தை யாண்டிருந்தான்
மங்கை யிருவரையும் வசுதேவ னுக்களிக்க
எங்கு முரசறைந்து யாவரையுந் தான்கூட்டிச்
செல்வ முடையநற் [2]சிவனி யென்றுரைக்கும்
நல்ல முகூர்த்தமிட்டு [3]நாலுதிக்கு மோலைவிட்டுத்
தேன்பரவு ரோகணியார் தேவகியா ரென்பாரை
வேந்தன் வசுதேவன் வேட்டான்கா ணம்மானை
[4]மன்னுன கஞ்சன் [5]வசுதேவன் தன்னுடனே
மின்னும் மைத்துனரும் வேட்டைதனக் கேகினர்காண்
வெங்கானம் போய்ப்புகுந்து வேட்டை மிகவாடி
வங்கார மார்பன் மகாசேனை தன்னுடனே
மாளுவமென் கின்ற மாலியாற் றங்கரையில்
[6]மேள முழவதிர விடுதிவிட்டா ரம்மானை

1. கூட்டுவித்து (த-ஸ்ரீ)
2. சிவகன்னி
3. நாள்விருந்தும் செய்தருளி
4. மங்காத (த)
5. மணமக்கள்
6. மேளமுடன் வந்து வீற்றிருந்தா ரம்மானை (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமனை நோக்கி யுரோகணியுந் தேவகியும்
இத்தகைமை மாலி லிரண்டுகனி நிற்கிறதைத்
தாவெனக் கஞ்சன் சரத்தா லறுத்தளிக்க
ஆவலுடன் வாங்கி யருந்தினர்கா ணம்மானை
அரசு திருநகருக் கானவர்கள் போனபின்பு
இரசுக் கிரீபமலை யென்னும் பருவதத்தில்
ஆரும் பயங்கொள்ளு மரியதொரு மாவிருடி
சேரும் பயாசுத தேவனவன் காத்திருந்து
தன்னிரண்டு கண்ணுற் றடங்கனியைக் காணுமற்
பன்னிரண் டாண்டு பழமுண்ண வீற்றிருந்தேன்
ஒண்கனியை யுண்டா ளுதரத்திற் சந்ததியால்
வன்கனியை யெய்தறுத்தான் மாள்வானெனச் சபித்தார்
கஞ்சனுங் கேட்டுக் கலங்கித் தனக்கிளைய
வஞ்சியரை வன்சிறையில் வைத்தான்கா ணம்மானை
அந்நாட் சிறையி லழுந்துகின்ற தேவகியார்
மின்னுர் மகவொன்று வெய்துயிர்த்தா ளம்மானை
தன்தங்கை பெற்றெடுத்த [1]சந்ததியைக் கஞ்சனென்பான்
வந்துகை யாலெடுத்து வன்தூணில் மோதினன்காண்
இன்னுமவள் பெற்றெடுத்த இருமூன்று பிள்ளைகளைக்
கொன்றுமிகு பாலர்வதை கொண்டான்கா ணம்மானை
தீயவன் தங்கையெனும் தேவகியார் தன்வயிற்றில்
மாதவன் வந்துதித்த வாறுகே ளம்மானை

## கிருஷ்ணன் அவதாரம்

திரிபுவன நாதன் திருப்பாற் கடல்நடுவே
எரிகிரண பத்மமணி யெங்கும் [2]நிலவெறிப்ப
இரசத்தின் மிக்க எழிற்பள்ளிக் கட்டிலின்மேல்
முரசமியம்பிடுபால் மதுகடலின் மீமிசையே
ஆயிரஞ்சென்னி அரசனெனும் பாய்விருத்து
மாயிரு ஞால மடங்குந் திருவயிற்றுன்
ஆகுவலஞ் சுழியில் [3]அணியுலகம் போந்தளவும்

---

1. சற்சிசுவை (ஸ்ரீ) 2. இருள்கற்ற (ஸ்ரீ-த) 3. அணியுகரம் (த-ஸ்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகு வலயமுடன் மார்பு மழகெறிப்ப
துலந்குசன்ன வீரமுடன் தோளு மழகெறிப்ப
அலங்க லணித்துளப அம்மார்புஞ் சோதிவிட
மாணிக்கச் சுட்டியுடன் வாய்த்தமக ரக்குழையும்
காணக்கண் கூசும் கவுத்தவமும் முந்நூலும்
சூரியர்க ளாயிரவர் தோற்றத்தின் [1]மும்மடங்கும்
சீரிய மாமுடியிற் [2]செம்மணிகள் சோதிவிடப்
பாதாம் புயமும் [3]பதவிரலில் மோதிரமும்
போதார் [4]சிலம்பும் புறவடியிற் கிண்கிணியும்
செங்கமல மாதும் செயமாதும் சேர்ந்திலங்கக்
கொங்கை குலுங்கக் [5]குரலூ ழியஞ்செய்யக்
கின்னரர் கிம்புருடர் கீதங்கள் பாடல்செய்ய
அன்ன நடையா ரழகார் நடமாட
மெள்ள வருந்தென்றல் வெண்கவரி காலசைப்ப
நல்ல முனிவசுரர் நாற்றிசையும் போற்றிசெய்ய
வாருதியிற் செந்தா மரைக்காடு பூத்தாற்போற்
காருலவு மேனியான் கண்துயின்ற னம்மானை
[6]ஊனுய் உயிராய் உத்தண்டற் காற்ருமல்
ஆன சுரரு மயனும் புரந்தரனும்
பொன்னங்கை யாழி புருடோத்த மனிடத்தே
[7]முன்னங்கே வந்து முறையிட்டா ரம்மானை
துண்ணென்று வானோர்கள் சூழ்ந்து முறையிடவே
கண்ணன் துயிலெழுந்து கண்டான்கா ணம்மானை
அச்சுதனே போற்றி அரிகேச வாபோற்றி
பச்சைத் துளாய்போற்றி [8]பாரளந்தா னேபோற்றி
கண்ணனே போற்றியெங்கள் காரணனே காயர்ம்பூ
வண்ணனே நாரணனே [9]மாயவனே போற்றியென்றார்
[10]என்ற வுரைகேட்டு எங்கோ னுளமகிழ்ந்து
மன்றலர்தார் வானோர்கள் வந்தகுறை சொல்லுமென்றார்
ஏதென் றருள்புரிய எத்தே வருமகிழ்ந்து
தாதொன்று தண்டுளபத் தாமனே கேட்டருள்வாய்
முன்னே யுகங்களிலும் மூண்ட பகைதீர்த்து

---

1. எண்மடங்கு
2. செம்மணியும் (த)
3. பரு விரலில் (த)
4. சிவப்பும்
5. குரங்கூழியம்
6. உற்ற வசுர்கள்தன் னுத்தண்ட மாற்ருமல் (ஸ்ரீ)
7. முன்னங்கோவென்று (த)
8. பாரளந்த மால் (த)
9, மாதவனே (த)
10. என்றவரை அஞ்சலென (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைபிதா வாகியெங்கட் காதி வராகனுமாய்
வாரிகடைந் தெமக்கு வானமுத மூட்டுவித்தும்
[1]நரா மிரணியனை நரசிங்க மாய்வதைத்தும்
வாமன ரூபமாய் மாவலியைக் காவல்வைத்தும்
ஏம னிராமனாய் இராவணனை யீடழித்தும்
பூத்தா மரைக்கண் [2]புயல்வண்ண னேயெமைநீர்
காத்தாயே யின்னங் கடைபோகக் காருமென்றார்
கஞ்சனென்றுந் தீய கடியநர பாலனென்றும்
வஞ்ச நரகனென்றும் வாணனென்றும் மண்டலத்தே
தீய வசுரரெமைச் சிரமெடுக்க வொட்டார்கள்
நீயவரைக் கொன்றெம்மை நிலைக்க நிறுத்திலையேல்
எம்பதமுங் கொள்வார் எமக்குப் புகழுமில்லை
உம்பதம்விட் டேகோமென் றேதினர்கா ணம்மானை
[3]வானவர்கள் சேயென்று மாதவனைப் போற்றிசெய்யத்
தேனவிழும் பூமடந்தை செப்பலுற்றா ளம்மானை
"என்பாரந் தீர்ப்பாயோ என்னுடைய நாயகமே
உன்பார மல்லா தொழிந்தெனக்குப் பாரமுண்டோ
மேவிய வானவரும் மேற்பாரம் மிக்குடையர்"
தேவியும் சொல்லச் சீராமன் கேட்டருளி
"வாரமும் நாமுடையோம் வானவரே பூமகள்தன்
பாரமும் தீர்ப்போம் பாரதமும் முற்றுவிப்போம்
அஞ்சலீர்" என்று அபயமுந் தான்கொடுத்துக்
கஞ்சமலர்க் கண்ணார் கடவுளரைப் போகவிட்டுச்
செம்மை யுடைய திருவனந்த னைப்பார்த்து
"எம்முடைய சத்திகளி லெட்டிலொன்று பாலித்தோம்"
தம்முன்னே மற்றவனைத் தாரணியி [4]லுற்பவித்து
"அம்மா ளுரோகணியார் ஆனவயிற் றிலுதித்து
எம்முன்னோ னாக இரு"வென்று போகவிட்டார்
உற்றான் அனந்தன் உரோகணியார் தன்வயிற்றில்
பெற்றா ளிராத்திரியில் பிள்ளைதனை யம்மானை
பெற்ற குழந்தைதனைப் பெய்வளையார் கண்டிரங்கி
அற்றவலிக் கஞ்சன் அறிந்தால் வதைப்பனென்று
உற்ற மகவை ஒளித்துவைக்க வேண்டுமென்று

---

1. போரில் இரணியனைப் பொற்சிங்க மாய்வதைத்து (த-ஸ்ரீ)
2. புனிதாவேளமை யிந்நாள் (த)
3. மாதவரை அஞ்சலென்ற
4. போகவிட்டு (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்சங்கு போலிருக்கும் மேனியான் தன்னையொரு
ஒண்சங்கி னுள்ளே ஒளித்துவைத்தா ரம்மானை
சங்கி லிருந்தமையால் [1]சங்குக் கிருட்ணனென்று
அங்கவனை [2]வைத்து அதன்பிற்றை நாளிரவிற்
புந்தி யுடைய புரோகிதன்தன் கைக்கொடுக்க
[3]அந்தி யிரவிலவன் ஆய்ப்பாடி யெல்லையிலே
கொண்டுசென்றான் அங்கோர் குழந்தைசெத்துக் கொண்டுவரக்
கண்டுநந்த கோனிடையன் கையிற் கொடுத்தவனை
உள்ளபடி சொல்லி "உகந்தவனை நீவளர்த்துக்
கொள்"ளென்று செத்த குழந்தை தனைவாங்கிப்
பாய்ந்தங் கிரவினிலே [4]பாரவசு தேவனென்பான்
போந்தங்கு ரோகணிமுன் போட்டகன்றா னம்மானை
மற்றயலார் பெற்ற மரித்த குழந்தைதனைப்
பெற்ற மகவுபோற் பிடிநடையும் பாவித்தான்
உற்றாளாய்க் கண்டவர்கள் "உன்தங்கை பிள்ளையொன்று
பெற்றாள்கா" ணென்றுசென்று பேசினார் கஞ்சனுக்கு
ஓதுமதி கேட்டு உதிப்பதற்கு முன்புகுந்து
தீதுபயில் கஞ்சன் சிறுமதலை யையெடுத்துத்
துஞ்சினது மோராமற் றுணுக்கெனத் தூணோடே
வெஞ்சினத்தால் மோதி விட்டெறிந்தா னம்மானை
அங்கவன் தானிருக்க ஆய்ப்பாடி தன்மனையில்
சங்கிருட்ண னைக்கொடுபோய்த் தந்தைநந்த கோபனுந்தான்
அன்னை யசோதைகையில் "ஆவிபெற்றா னுன்மதலை"
என்னக் கொடுத்தான் இரக்கமுடன் பாலூட்டி
அன்பாய் வளர்க்க அவர்வளர்ந்தா ரம்மானை
மின்பரவு சக்கரக்கை வேந்தனினி யேதுசெய்வான்
"ஆழ்வானு மம்புயத்து ஆயிழையர் பாடியிலே
வாழ்வான் கோனந்தன் மாமகனா கப்பிறந்து
நற்பிள்ளை யென்று நாமங்கு தானிருப்போம்"
கற்பில் மிகுந்தஇளங் காசினிமா னைப்பார்த்து
"ஓங்கு விதர்ப்பன்மக ளுருப்பிணியா கெ"ன்றுரைத்துப்
பாங்கிற் பகவதியைப் பார்த்து மனமகிழ்ந்து

1. சங்கிருட்டினனென்றுசொல்லி (த) 2. போக்கி (த)
3. அந்த (த) 4. பார்பார நாதனென்பான் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனநந்த கோப னசோதைம[1]க வாகென்று
மானன்சே னுபதியை மச்சிமக னுகென்று
மற்றுள்ள பேர்களேயும் மண்ணுலகிற் போய்ப்பிறந்து
உற்ற [2]படையா யுதவுமென்ரு ரம்மானை
ஆங்கவரைப் போக்கி அரிகேச வன்ருனும்
செங்கமலத் தேவகிதன் திருவயிற்றிற் சேர்ந்திருந்தான்
மூவுலகும் காத்தளிக்கும் மூர்த்திவசு தேவனிட
தேவி திருவயிற்றிற் சேர்ந்திருந்தா னம்மானை
கெர்ப்பனித்த வன்றே கிளிமொழியாள் தேவகியும்
சற்புத் திரன்றனக்குத் தாகம் பெரிதாகி
"முன்னேயான் பெற்றேன் மூவிரண்டு பிள்ளைகளை
அன்னவரைக் கொன்ற அதுபோலே யாகாமல்..."
காவல் தனையகன்று கஞ்சனிடத் தேசென்று
ஆவலுடனே அவனைத் தொழுது நின்ருள்
செங்கண்ணுற் பார்த்துச் சிறையி லிருந்தவள் நீ
இங்கேன் வருவதென்ருன் இளையவளு மேதுசொல்வாள்
மற்றடியே னுந்தியிலே வந்துசனிப் புற்றதொரு
சிற்றடியைப் பெற்றுச் சினேக மறிந்தபின்பு
மல்லொன்று தோளாய் மதலைப் பருவமதிற்
கொல்லென் றவன்காலைக் கும்பிட்டுப் பூண்டுகொண்டாள்
பூண்டுகொண்ட மாதைப் புறவடியா லேயடித்து
மீண்டுவந்தா லுன்னை வெட்டிப் பிளந்திடுவேன்
தோற்றுங் குழவிதனைச் [3]சூதுபோ காதபடி
காற்று மியங்காமற் காருமென்ரு ரம்மானை
சீத்தரும் [4]மூர்க்கர்களும் தீராச் செவிடர்களும்
ஆர்த்த கருங்கால்கை யறுப்புண்ட பாவிகளும்
உட்காவல் காக்க உரைத்துப் புறத்தில் நின்று
வெட்கா திடும்பிகளும் வெம்பூத மும்பேயும்
பார்க்கப் பயங்காட்டும் [5]பற்பல சிங்கங்களும்
வாற்காரர் கிங்கிலியா மல்லருமஞ் ஞானிகளும்
ஏவி யருஞ்சிறையி லேகென்ரு னேந்திழையை
காவி விழிபதைக்கக் கைதலைமே லேவைத்து

---

1. மகளாயிரன்று (த) 3. சூதுபொருதாந்தனையும் (த)
2. படைகளாயுதவுமென விடுத்தால் (த) 4. மூங்கைகளும் (ஸ்ரீ)
5. பப்பாரச் சிங்களரும் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிப்போ செய்வே னெனவே யுளத்திலெண்ணிக்
கன்னிக்குள மான்போற் கதறிக் கருத்தழிந்து
வாகுபட்ட தோகை மயில்போல வேகலங்கி
ஆகத் துணையானேன் அண்ணண்பாற் போனபின்பு
காவலுங் கட்டும் கடவாப் பெருஞ்சிறையும்
ஆவலமே தெய்வமே என்றே [1]அலறிவந்து
பண்டிருந்த வஞ்சிறையில் பத்திரட்டி சூதானம்
கொண்டிருந்து நெஞ்சங் [2]குலைந்துசொல்வாள் தேவகியும்
"கன்னிப் பருவத்தே கைபார்த்த மாவிருடி
மன்னைப் பெறுவையவன் மன்னு மெழுபுவியும்
காவலனு மாவான் கடவுளு மாவானென்
றேவமுனி சொன்னதெல்லா மேதாச்" சென[3]விருந்தாள்
காவலர்கள் தம்மைக் கஞ்ச னழைத்தெடுத்து
மாவல னுன வசுதேவன் தன்னையிப்போது
எண்டிசையி லுள்ளோரும் இந்திரனும் நான்முகனும்
அண்டிக் கைக்கொள்ளா அருஞ்சிறைச் சாலைதன்னில்
வைத்துப் பதத்தில் வலுவிலங்கு நாலாறும்
தைத்துக் கதவேழும் [4]தான்பூட்டி வையுமென்றான்
[5]அந்நா ளவரும் அப்படியே காவல்வைத்தார்
இன்ன வகையே இருக்கின்ற நாளையிலே
ஆதி யுலகளிக்கும் [6]ஆதி பிரமாவும்
[7]சேதி யுடையநித்ரா தேவி தனையழைத்து
ஒள்ளிய தேவகிதன் உந்தியிலே வீற்றிருக்கும்
வள்ளல் பிறக்கஇப்போது வந்ததுவே நாள்முகுத்தம்
பேரா யிரமுடைய பேராளன் தான்பிறந்து
சீராயர் சேரியிலே சேமப் படுமளவும்
கஞ்சன் நகரியையும் காக்கின்ற பேர்களையும்
துஞ்ச லெழாமற் துயிலாக்கிப் போடுமென்றார்
அந்தியுடன் கஞ்சனையும் ஆய்ப்பாடி யார்தனையும்
வந்து துயிலாள் மயக்குவித்தா ளம்மானை
ஏங்கு மிருள்மூடி எவ்வுலகுந் தூங்கையிலே
தேங்கு மலர்க்குழலாள் தேவகியு மேது[8]செய்வாள்

---

1. அலம்வந்து (ஸ்ரீ)
2. குலைந்து நின்றாள் (த)
3. மொழிந்தாள் (ஸ்ரீ)
4. தாளிட்டு (த)
5. அன்னவரு மங்கவரை யப்படியே காவல்செய்து (த)
6. ஆதியும் (ஸ்ரீ)
7. சோதி (த)
8. சொல்வாள் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதி மலர்விழியுந் தோளு மிடந்துடிப்பப்
பாதி யிரவு பகல்போ லிருளகல
உண்ணா திளைப்பாறி உள்ளங் களிகூர்ந்து
பண்ணார் மொழியார் பரிவுற் றிருக்கையிலே
பூமழை பேய்து புதுவிசும்பில் வானோர்கள்
தூய மொழியாருஞ் சோபனங்கள் கூறிவர
வைகாசி யென்னும் வருடமுன் பார்க்கரனும்
[1]மெய்வான சித்தின் மேவமர பக்கமுமாய்
ஒன்பது கோளு முறவுசெய்யும் வேளையிலே
இன்ப சுகந்தவசு வென்னும் முகூர்த்தமதில்
அந்தரத்தில் வானோ ரரிவையர்பல் லாண்டிசைப்ப
துந்துபிக ளார்ப்பத் துறவோ ரகமகிழச்
சத்த இருடிகளும் தாமரையில் வேதாவும்
சுத்த முனிவர்களும் [2]சூழ்ந்துசுப வாழ்த்தியம்பக்
கஞ்சனுக்கு நீதியில்லாக் கத்திறிப ரெல்லோர்க்கும்
இன்சொல் லசோதைக்கும் இடப்பக்கம் தான்துடிப்பச்
சீரான செல்வத் திருவோண நாளையிலே
பேராளன் வந்து பிறந்தான்கா ணம்மானை
உள்ளந் தெளிந்து உலகமெல்லா முண்டுமிழ்ந்த
பிள்ளை தன்னைத் தேவகியும் பெற்றாள்கா ணம்மானை
தந்தை தளையவிழத் தாள்க்கதவு தான்திறப்பச்
சிந்தை மகிழ்ந்துதாய் சீர்மேனி பூரிப்பக்
கஞ்சன் வலிகுலையக் காசினிமான் பாரமறப்
பஞ்சவர்க ளீடேறப் பாரதப்போர் தான்முடியச்
சீராயர் வாழ்ந்தருளத் தேவர் சிறைமீளப்
பேராளன் வந்து பிறந்தான்கா ணம்மானை
பெற்ற களைப்போய்ந்து பீரியங் கரைபுரளப்
பற்றி யெடுத்தணைத்துப் பார்த்தாள் திருமகனை
[3]தாட்டுளபத் தோள்நான்கும் சங்குவளை சக்கரமும்
காட்டி மறைந்தான்பின் கண்டா லிரண்டுகரம்
கண்ணு முகமுங் கரங்களுங் காதிரண்டும்
தெண்ணென்று நாட்பூத்த செந்தா மரைபோலே

---

1. மையார்க்க சிங்கத்தின் (ஸ்ரீ)
மெய்யாகச் சிங்கத்தின் மேவு முகூர்த்தமுமாய் (த)
2. சூழ்ந் தாசிதான் கூற (த)
3. தாட்டிய தோள்நான்கும் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசொன்று மில்லாத அபயவங்கள் தன்னுடனே
மாசொன்று மில்லாத மரகத மாமலைபோற்
கண்டு மகனைக் களிகூர்ந் திருக்கையிலே
தண்ட வினைக்கஞ்சன் தனைநினைந்தா ளம்மானை
அப்பிள்ளைக் கெல்லா மழிந்திவசங் கெட்டழிந்து
இப்பிள்ளை பெற்றுள் ஏழுலகம் பெற்றவர்போல்
வாமந் துடிப்ப மனப்பிரியந் தானெய்தி
"ஏம மிருளகன்ற தெய்வகையோ யானறியேன்
எங்கோனுங் காவல் யானும் விலகறியேன்
[1]பொங்காலம் போலப் புறமெங்குந் தான்காவல்
களித்து விளையாடும் காயம்பூ மேனியனை
ஒளித்து வளரவிட உற்ற [2]விடமுமில்லை
தேவுலகு மிவ்வுலகும் சேடன்றன் பேருலகும்
மூவுலகு மாளும் முகூர்த்தத்தில் தோன்றியநீர்
பாதகன் பின்பிறந்த பாவிவயிற் றிற்பிறந்தீர்
பேதை வயிற்றிற் பிறந்தனையோ? வென்றுசொல்லிக்
கான்சிறையில் நொந்து கலங்கினுள் தேவகியும்
வான்சிறையிற் பட்ட வசுதேவற் கவ்வளவில்
கால்விலங்கு விட்டுக் கதவேழுந் தான்திறந்து
பால் விலங்கு தோளான் பல்லாண் டொலிமிகுந்து
தீபங்க ளன்றிச் சேரி யிருளகன்று
தூப மெழுந்து சொரிபூ மழைபொழிந்து
இந்திரற்கு மெட்டாத இன்பமுண்டாய் நிற்கையிலே
அந்தரத்தில் வாயுவுந்தான் அங்குநின் றேதுசொல்வான்
"கம்ப மதகளிற்றுய்! காசினியை யுண்டுமிழ்ந்த
செம்பவள வாயானைத் தேவகியார் பெற்றெடுத்தார்
கொற்றவனே! யந்தக் கொடியோ னறியுமுன்னே
சிற்றடியை யெங்கேனும் சேமிக்க வேணு"மென்முன்
மாராயங் கேட்டு வசுதேவ னவ்வளவில்
சீராக வேதான் சிந்தை களிகூர்ந்து
மூர்க்கமுற்ற கஞ்சன் முறைகாரர் தான்கிடப்பக்
[3]காற்சிறையும் விட்டுக் காதலியைச் சென்றுகண்டு

1. போங்கோலம் (ஸ்ரீ)
2. துணையுங்காணேன் (த)
3. கால்விலங்கு (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தன் தனையெடுத்து மார்போடுந் தோளோடும்
முந்தியகண் ணேடும் முகத்தோடும் மோந்துகொண்டு
பாசமுடன் கார்மேனிப் பங்கயப்பூங் கண்ணனை
நேசமுடன் பார்த்து நிமைகோடா தேயிருந்தான்
பஞ்ச வன்னக் கிளிபோற் பார்த்துப் பதமுதைத்துக்
கொஞ்சி முகம்பார்க்கும் குழந்தையைக் கண்டிரங்கும்
மங்கையைப் பார்த்து வசுதேவ னேதுசொல்வான்
"செங்கை தனிலிருந்த செங்கமலக் கண்ணனைப்
பார்த்த பொழுதே பகலொத்த திவ்விரவு
காத்த மனிதர்கண்டு கஞ்சனுக்குச் சொல்முன்னே
வன்னம் [1]பெரிய மரகதத்தின் மேனியனை
ஒன்னு தலே நாம்தா ணொளிக்குமிடச் சொல்லென்றார்
வண்டலருந் தாமரைக்கண் வாழ்வை யவனிதனிற்
கண்டிருந்து நெஞ்சங் கனன்றுசொள்வாள் தேவகியாள்
"இக்கஞ்ச னேடே எமைப்பிறக்கக் கற்பித்தாய்
அக்கஞ்ச னேடே யாகும் பழி"யென்று
தேவகியார் தாமுந் திருமுன் னெழுந்திருந்து
விவதுபோல் மண்ணில் வீழ்ந்தழுதா ளெம்மானை
கொங்கை குலுங்கக் குழலும் புழுதிபட
மங்கை கிடப்ப வசுதேவ னெஞ்சழன்று
மன்றெங் குலகிலுள மாமதலை யாவினிலும்
என்றன் பிராண னியல்புடைத்தோ வென்றுசொல்லிக்
கையிற் குழந்தைதனைக் காசினியி லேகிடத்தி
மெய்யிற் களைப்பெய்தி விழுந்தான் வசுதேவன்
வாயு பகவானும் வந்தவனைத் தான்தேற்ற
ஓயும் பிராண னுயிர்பெற் றெழுந்திருந்தான்
ஆற்றி யணைத்து அவர்கள் தனைத்தேற்றிக்
காற்றரசன் சொல்வான், "கஞ்சனுக்குக் காலனிவன்
வேற்றரசே மன்னு! விதனப் படாதே நீ
மாதவங்கள் செய்தமையால் மாதவனைப் பெற்றெடுத்தீர்
போதவங்கள் செய்தமையால் பூங்காரந் தீர்ந்திடுவீர்
ஆய்ப்பாடி தன்னில் அசோதையொரு பெண்பெற்றாள்
கோப்பால கன்றன்னைக் கொற்றவனே நீகொடுபோய்
அங்கவள் முன்போட் டணியிழையாள் முன்பெற்ற
மங்கைதனை யிங்குவைத்து வன்சிறையிற் போயி"ரென்றான்

1. கரிய (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசுதேவன் கண்ணனை ஆய்ப்பாடிக்கு எடுத்துச் செல்லுதல்

அன்னவனும் போனபின்பு அண்ணல்வசு தேவனுந்தான்
கண்ணன் தனையெடுத்துக் கைக்கொண்டு செல்வதற்குப்
போனு னவனும் புயல்வண்ண னைநோக்கி
மானுர் விழியார் மகிழ்ந்துநிற்கக் கைக்கொண்டு
செல்லரிய வாசல்களுந் தேர்வீதியுங் கடந்து
மல்ல ருறையும் வடவாசல் தான்கடந்து
கங்குலிலே வந்து சுலங்கிநூ ருயிரம்பேர்
கிங்கிலியர் காக்கும் கிளர்கதவைக் கண்டுநிற்க
ஒக்கலிக் குஞ்சு உதைத்தான் உதைத்தலுமே
அக்கதவு தாள்நீங்கி அடிபணிந்த தம்மானை
கபாடந் திறக்கக் கதவேழுந் தான்திறக்கக்
குபாடநந்த னைக்கொண்டு கோமதுரை யுட்புகுந்து
வல்லிருளில் வன்சுரத்தில் மாயோன் தனையேந்திச்
செல்வான் யமுனைதனைக் கண்டுதிகைத்து நின்றுன்
கண்டாள் யமுனையவள் கண்ணனென்று தானறிந்து
மண்டுநீர் வற்றி வழிகொடுத்தா ளம்மானை
ஆறும் கடந்து அவன்போகும் வேளையத்தே
சீறுமா காளி சீகண்டி யுள்ளறிந்து
நன்காணிக் கையாக நாவற் கனியளித்துப்
பொன்கால் வணங்கிப் புகுந்துநின்று ளம்மானை
"ஆண்டுதொறும் நீவாழ்வாய் ஆகெ"ன் றருள்புரிந்து
வேண்டி யமுதுசெய்தான் வித்தகனு மம்மானை
[1]மாத்திரை தன்னில் வசுதேவன் மைந்தனெடும்
போய்த்திரு வாய்ப்பாடி புக்கினன்கா ணம்மானை
தானந்த வல்லிருளில் தன்கைக் குழந்தையொடும்
கோனந்த கோபன்மனை கொண்டுபுக்கா னம்மானை
ஆருந் துயில வசோதையொரு பெண்பெற்றுச்
சீருந்தி நொந்து தியக்கமுற்ற வேளையிலே
தூயவனை முன்கிடத்திச் சுந்தரியைக் கைக்கொண்டு
ஆயர்மனைத் [2]தேவர்க் கடைக்கலமென் றேதொழுது
போந்து விடிவதன்முன் பொன்னகரி யுட்புகுந்து
ஏந்து குழந்ததனை யில்லாட்டி கைக்கொடுத்து
உள்ளபடி சொல்லி யுகந்தவளைத் தான்தேற்றி
வள்ளல் வசுதேவன் வன்சிறையில் போயிருந்தான்
அப்போ தவனை ஆய்ப்பாடி தன்னில்வைத்து

---

1. மாமதுரை (த) 2. யுள்ளார்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போது வருவான் எனப்பார்த் திருப்பவர்போல்
விழிதுயின்ற பேர்களெலாம் விரைவில் துயிலுணர்ந்து
பொழுது விடிந்து புறப்பட்டான் வெய்யோனும்
உட்காவ லாளர் உணர்ந்துதங்கை தேவகிதான்
பிற்காலே வேளையத்தே பெண்பெற்று ளென்று சொன்னர்
என்றுசொல்ல வந்து எரியெனவே கோபமுற்றுச்
சென்றுகண்டு கஞ்சன் சிற்றடியைத் தானெடுக்கத்
திண்டோளு மார்புந் திகைத்து மனமிழைத்து
ஒண்டொடியைத் தானெடுக்க வொண்ணு தெனவிளைத்தான்
ஆனை எழுபதுநா றுயிரம் சத்துவத்தான்
நானைக் கொண்டு தந்தையையுந் தான்முனிந்தோன்
மானை யெடுக்கமுடி யாமல் மயங்கையிலே
தானவனைக் கண்டு தையலும் தான்சிரித்தாள்
'மன்னவர் தம்மிலிந்த மண்டலத்தி லுள்ளவர்கள்
என்னில் மிடுக்குடையா ரெவ"ரென்ன வேதிகைத்தான்
ஏற்ற கனங்குறைந்து ஏந்திழையும் நொய்தாளுள்
சீற்ற முடனெடுத்துச் சென்றவனுந் தூணோடே
பொன்னடியைத் தான்பற்றிப் புடைத்தானே பொற்கொடியும்
தன்னடியால் தானுதைத்துத் தானந்த ரத்தில்நின்று
அக்கஞ்ச னைப்பார்த் தந்தரியு மேதுசொல்வாள்
'புக்கஞ்ச வண்ணன் போய்ப்பாடி யில்வளர்வான்
உன்னுயிரை யுண்ண உகந்திருந்தா" னெங்கோமான்
என்னுயிரை யுண்ண எளிதோ வுனக்கென்று
ஆகாசம் நோக்கி அணிதுர்க்கை போனபின்பு
ஏகா சனத்தே இடருற் றிருக்கையிலே
நெஞ்சங் கனன்று நினையாதெல் லாம்நினைந்து
கஞ்சன் முகம்வாடிக் கலங்கினன்கா ணம்மானை
அன்னவன் தானிருக்க ஆய்ப்பாடி யென்கின்ற
பொன்னகலி வண்மை புகலக்கே ளம்மானை

## ஆயர்பாடியில் கண்ணன் வளர்தல்

அண்ணல்நந்த கோனும் அசோதைதா னங்கமல
கண்ணனைப் பெற்று ளென்று கழிப்பெய்திக்
கூத்தாடு வார்கொடுப்பார் கொள்வார் [1]குடமிடுவார்
மாத்தாடி மாமடவார் மங்களங்கள் கூறிடுவார்

---

1 குணமிடுவார் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்ற பனிநீரு மெண்ணெயுந் தானிறைப்பார்
தோற்றித் திரிவார் துரத்திப் பிடித்திடுவார்
சுண்ணப் பொடியிடுவார் சோபனங்கள் கூறிடுவார்
வண்ணக் கனதனமும் வண்தோளும் பூரிப்பார்
வாழை நடுவார் வான்கமுகு தான்நடுவார்
தாழை மலரும் [1]சரங்களுந் தூக்கிடுவார்
நற்பூ வனத்தாலே நடைக்கா வனமிடுவார்
பொற்பூ ரணகும்பம் பூம்பாளை பூரிப்பார்
குலதே வதைகளுக்குக் குளிர்த்திபண்ணிக் கும்பிடுவார்
பலதே வதைகளுக்குப் பால்பொங்கிப் பூசைசெய்வார்
வாய்ப்பான மைந்துடைய வைமந்தனைப் பெற்றதனுல்
ஆய்ப்பாடி வைகுந்த மானதுகா ணம்மானை
ஆலந் தருங்கண் ணசோதை பிராட்டியுந்தான்
பாலன் பிறந்ததினம் பத்துங்கழித்த பின்பு
பொற்றுலி பூட்டிப் புதுவயிரந் தண்டையிட்டு
நித்தில மாலையிட்டு நெற்றிக்கு நாமமிட்டுச்
சோதி மரகதம்போற் றேன்றுந் திருநுதல்சேர்
ஆதிக் கருணைவிழிக் கஞ்சனக் காப்புமிட்டுச்
சீரிட்ட சொல்லாற் சிறிகிருட்டி ணனென்று
பேரிட்டு மெத்தப் பிரியமுற்று ளம்மானை
அஞ்சன் மேனியனை அசோதையும் நீராட்டி
மஞ்சன மாட்டி மணிக்கொங்கை பாலூட்டி
பாரடர்ந்த தொட்டிலிலே பாலகனைத் தான்வளர்த்தித்
தாரடர்ந்த பூங்குழலாள் தாலாட்டிச் சொல்வதனை
முண்டக வேதன் முனிவர்களுந் தேவர்களும்
கண்டகத்து நெஞ்சங் களிகூர்ந்து கட்டுரைப்பார்
நால்வேத மும்பொதிந்து நம்மையெல்லா மாளுடையான்
[2]பாலணை மாளிகையும் பாம்பணையும் விட்டகன்று
செகத்தை முழுதுண்டு தெகிட்டாத வுந்தியது
முற்று மசோதை முலைப்பாலி லேதெகிட்டி
அஞ்சனக் கண்பிசைந்து ஆத்திநார்க் கட்டிலிலே
பஞ்சணைத் தொட்டிலிலே பள்ளிகொள்கை பாருமென்று
பூமழை பெய்து பொழிந்தார்க ளம்மானை
தாமனு மாய்ப்பாடி தன்னில்வந்த அன்றுமுதல்
மாதமும் மாரி மறவாம லேபொழியும்

---

1. சரேசருகமும் தூக்கிடுவார் (த)
2. பால்வேலை (த)

மேதினியி லானிரையும் மென்னென்று பால்சொரியும்
தாழ்வற் றிடரற்றுத் [1]தங்களிலே தான்மகிழ்ந்து
வாழ்வுற்றுச் சிந்தை மகிழ்ந்திருக்கும் நாளையிலே
அங்க ணசோதை யணிமுலையிற் பாலதனை
சங்கிற் கறந்து தலத்திடையே வைத்தருளிப்
பச்சைத் திருமேனிப் பங்கயப்பூங் கண்ணனை
அச்சமுற வுறுக்கி யங்கையாற் [2]பாலெடுத்துக்
[3]காற்குறங்கில் வைத்துக் கதுப்பிற் றெறித்தருளிப்
பாலடை வாயில்வைத்துப் பாலளித்தா ளம்மானை
செய்ய மகன்பிறந்து திங்களிரண் டானபின்பு
ஐயமுது வார்த்து அணிமுத்தத் தேகொடுபோய்
மஞ்சன மாட்டி மகன்வாயிற் றன்விரலை
நஞ்சனக் கண்மடவார் நாவழிக்க நீட்டிடவே
உந்தியி னுள்ளே உலகேழு மேழ்கடலும்
சந்திர சூரியரும் தாரகையுந் [4]தானியங்கக்
கண்டு விமைபுடைத்துக் கண்விழித்துப் பார்ப்பளவில்
மீண்டு மவட்கு வெளிப்பட்ட தம்மானை
ஐய மிகவா யயிர்புற் றசோதையுந்தான்
செய்ய மகற்குத் திருமுலையிற் பாலூட்டிக்
காது பருக்கிக் கனத்த குணுக்குமிட்டுப்
போது கணைக்காலிற் பொற்சதங்கை [5]பூரித்துத்
தண்டை செறித்துத் தமனியத்தாற் காப்புமிட்டு
வெண்டை யங்கள்பூட்டி வெள்ளியரை ஞாணுமிட்டு
வீறுன செந்துகிலும் வெண்முத்தின் மாலைகளும்
மாறுடிக் கட்டி வளர்த்தாள்கா ணம்மானை
மும்மாதந் தன்னில் முழுக்காட்டத் தன்மகனைக்
கைமா மலர்கொண்டு காலை நிமிர்ப்பளவில்
அந்தப் பதமிரண்டும் ஆதித்தன் மண்டலத்தே
உந்தி யெழும்பி உதைத்துவிளை யாடினன்காண்
அவ்வாறு கண்டங் கயிர்ந்த வசோதையுந்தான்
செவ்வாய் மதலைதனைச் சீக்கிரத்திற் கொண்டுவந்து
[6]ஐயமுது வார்த்து அணியாடை யிற்கிடத்தி
வையந் தழைக்க வளர்த்தாள்கா ணம்மானை

---

1. தம்மிற் கலாபமற்று (ஸ்ரீ)
2. கோலெடுத்து (த) / தானெடுத்து (ஸ்ரீ)
3. காலிடை (ஸ்ரீ)
4. தான்விளங்க (ஸ்ரீ)
5. தான்பூட்டி (த-ஸ்ரீ)
6. ஐயன் தனக்கு அமுதமெனும் பாலூட்டி (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலாறு மாதத்தில் நம்பிதனை நீராட்டிச்
சேலான கண்கொண்டு[1] செல்வனைப் பார்ப்பளவிற்
செந்தா மரையுந் திருவுந் திருமார்பும்
சந்தாப மேனியிலே தான்கண்டா னம்மானை
காட்டிக் கரந்த கருமணிக்குப் பாலமிர்தம்
ஊட்டித் திருநுதலில் ஒள்ளிய நாமமிட்டுச்
சூட்டிக் கலனணிந்து சுண்ணப் பொடி[1] தூவிச்
கட்டிய தொட்டியிலே கண்வளரப் போட்டுவைத்தாள்
கொண்ட லனையகுழற் கோபால மங்கையர்கள்
மண்டி யெடுப்பார் வன்முலையிற் சேர்த்திடுவார்
மோந்து முகங்கொள்வார் முத்தங் [2]கொடுத்திடுவார்
பூந்துகி லாடைகளும் பூசணமுந் தான்கொடுப்பார்
பச்சைத் துளாய்மேனிப் பங்கயப்பூங் கண்ணனை
அச்சம் விளைப்பார் அதட்டுவா ரஞ்சலென்பார்
சுத்தமுள்ள பூவுலகில் தோகையர்கள் கண்காண
நித்த மிதுதொழிலாய் நீங்கார்கா ணம்மானை
காரஞ்சு மேனிக் கமலக்கண் ணன்பிறந்து
ஓரஞ்சு [3]திங்க ளுதித்ததுகா ணம்மானை
அஞ்சனக் கண்ணனு மாய்ப்பாடி யிலிருக்கக்
கஞ்சன் நிலைமைதனைக் கட்டுரைப்போ மம்மானை
மாறுடைய கஞ்சன் வரவிட்ட ஒற்றுட்கள்
ஆறடவி தான்கடந்து ஆய்ப்பாடி யிற்பிறந்து
திக்கெங்கு மோடித் தெருத்தெருவெல் லாந்தேடி
மிக்கெங்கு முண்டான வீடுகளெல் லாந்தேடி
வந்துநந்த கோனிடையன் வாசலிலே நிற்பளவில்
இந்துபுரை வாணுதலார் ஏந்திவந்தார் பாலகனை
கண்டார் விழிகளிப்பக் கஞ்சமலர்க் கண்ணனை
வண்டார்குழற் றேவகிதன் மைந்தனென வேயறிந்து
பொய்யுற வாய்ப்போய்ப் புத்திநொந்து தங்களிலே
ஐயுற, வென்றே யகன்றனர்கா ணம்மானை
காற்றுப்போ லோடிவந்து கஞ்சனுக்குக் கட்டுரைப்பார்
வேற்றுப்பகை யில்லாத வேந்தனே கேட்டருள்வாய்

1. நிமிர்ந்து (ஸ்ரீ)
2. முத்தமிட்டு ஒற்றிடுவார் (ஸ்ரீ)
3. மாதம் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றுகண்டோம் பாடியிலே தேவகிதன் புத்திரனை
குன்றுகொண்ட தோள்மதலை கோலந் தனைக்கேட்கில்
விண்வா யெழுந்தகரு மேகமே மெய்யொக்கும்
கண்வாய் முகங்கைகால் கஞ்சமலர்ப் பூவொக்கும்
செங்க ணெடுமால் திருவிளையாட் டல்லாமல்
வெங்கண் மதகளிற்றேய் வேறில்லை யென்றுரைத்தார்
ஒல்லை யுலகேழு மும்பருந்தான் வந்தாலும்
வெல்லும் மிடுக்குடையான் வேறில்லை'' யென்றுசொன்னர்
சொல்லிப் பயன்விளைத்த தூதரைத்தான் போகவிட்டு
சல்லியக் கஞ்சன் சலித்திருந்தா னம்மானை
அன்னவனை நோக்கி [1]யமத்தியனு மேதுரைப்பான்
''[2]மன்னவனே யிவ்வுலகில் வலுவுடையோர் தங்களைத்தான்
வெல்லு மிடுக்குடைய வேந்தே மனச்சலிப்பு
சொல்லு'' மெனவவனுஞ் சொல்லலுற்று னம்மானை
''என்தங்கை பிள்ளையொன்று எம்மையெல்லாங் கைகடந்து
நந்தன் மனைவாழ நந்தூதர் கண்டுவந்தார்
இந்திரனை முந்நா ளியானுயர் பாடியிலே
சிந்துரத் தோடு சிதையப் பிடித்தடித்து
பங்கப் படுத்துகையில் பங்கயத்தோன் கண்டருளி
வெங்கட் கயத்தவனை விடுவித் தெனைப்பார்த்து
இவ்வார மின்றி யினியொருநா ளிங்குவந்தாற்
சாவா யெனவே சபித்தான் சதிர்மறையோன்
பார்ப்பான் சபித்ததனுற் பாடியிற் போகறியேன்
கோப்பால கன்றனையுங் கொல்லவகை சொல்லு''மென்றான்

## பூதனைவதம்

உற்றவனை நோக்கி உபாத்தியனு மேதுரைப்பான்
''கொற்றவனே கேளாய் கொடியபேய்ப் பெண்ணொருத்தி
வேதனையுங் கொல்வாள் விடமுலையிற் பாலூட்டிப்
பூதனையென்பவளைப் போகவிடா'' யென்றுரைத்தான்
''இப்போ தழையு'' மெனக்கஞ்ச னுள்விடுத்தான்
அப்போ தவளை யழைத்துவந்தா ரம்மானை
பூதனையும் வந்தவரைப் போற்றிப் புகழ்ந்துநின்று
''ஏதென்னை யிங்கழைத்தா யெங்கோவே'' யென்றுரைத்தாள்

---

1. அமைச்சனும் (ஸ்ரீ)
2. உன்னும் பலமுடைய உம்பரும் வந்தாலும் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடை கொடுத்து அழகு பணிகொடுத்து
வேடை கெடவே வெறிமதுவு மூட்டுவித்து
"மாபால னுகவென்றன் மாற்ருன் வளருகிருன்
கோபாலர் பாடியிற்போய்க் கொன்றுதர வேண்டு"மென்ருன்
என்னத்தான் கோபித் தெரிவிழித்தங் கேதுசொல்வாள்
"அன்னத்தா னல்ல அயிராணி கேள்வனல்ல
காலனே யல்ல கதிராழி மாயனல்ல
பாலனைக் கொல்லப் [1]பணித்தாய்நீ" யென்றுசொன்ஞள்
"எண்ணியவா றல்ல இடைநந்த கோன்மகனும்
கண்ணிய பூங்குழலாய் காலனுக்குக் காலனிவன்
கொங்கையிற் பாலூட்டிக் கொன்றுதர வேண்டு"மென்று
பொங்கிய [2]நல்லிருளிற் [3]போகவிட்டா ரம்மானை
முன்னை யுருத்தனிலும் மும்மடங்கு வேடமுமாய்
மன்னை வணங்கி [4]வழிக்கொண்டா ளம்மானை
வாரியிற் ருேன்றி வருநஞ்சி னுங்கொடிய
மூரி விடத்தை முலையிலே தானடைத்து
காயா மலர்மேனிக் கண்ணனைக் கொல்லவென்று
போயாயர் பாடியிலே [5]புக்கினள்கா ணம்மானை
மானிடப் பெண்போல் வடிவமுங் கொண்டுநந்த
கோனிடை வாசல் குறுகினள்கா ணம்மானை
பொங்கு மிருளிடையே பூதனைதான் வந்ததனைச்
செங்கமலக் கண்ணன் திருவுளத்திற் கண்டருளி
நீங்காத தந்தைதாய் நித்திரையுந் தானறிந்து
தூங்கு விளக்கிற் சுடருந் திருவணைத்துக்
கையுற வாசற் கபாடமுந் தான்திறந்து
ஐயுற [6]வன்றி அவள்வரவு பார்த்திருந்தான்
பொய்கட்டும் நஞ்சுடைய பூதனையும் போய்ப்புகுந்து
கைதட்டிக் கண்மலர்த்திக் கற்பகமே வாருமென்ருள்
பண்டைப் பழக்கம்போற் பாலனெழப் பாய்ந்து
தண்டைக் குறங்காலிற் தன்குறங்கைத் தாஞெதுக்கிச்
சென்நஞ்சி தன்னைச் சிறுநரம்பி ஞற்பாய்ச்சி
வன்நெஞ்சன் மாளவிட்ட வகையறிய மாட்டாமல்

---

1. பணித்தாயெனக் கென்று (ஸ்ரீ)
2. வல்லிருளில் (ஸ்ரீ)
3. போகவிடை கொண்டவளும் (ஸ்ரீ)
4. வழிசென்ருள் (ஸ்ரீ)
5. புகுந்தாள்காண் பூதனையும் (ஸ்ரீ–த)
6. ஐயுறவாக (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சி முகந்தழுவுங் கோலா கலமாக
வஞ்சி முலையை வலக்கையால் [1]வாய்மடித்து
மற்றக் கரத்தால் மறுமுலையைத் தான்பிசைந்து
கொற்றக்கண் ணலே குறுவிழியைத் தான்பார்த்துப்
பச்சை நிறத்தான் பசாசுமகள் தன்னுடைய
நச்சு முலையதனை நாவிஞ லேயொதுக்கித்
தலைக்கொண்டு தோள்நெருக்கித் தானந்தப் பேய்முலையை
உலகுண்ட வாயாலே யுண்டான்கா ணம்மானை
ஈன நரம்புதோல் எலும்பு மிருக்கையிலே
ஊனு முயிரு முண்டான்கா ணம்மானை
மானிட வேடம்போய் வடிவன்றிப் பேய்வடிவாய்க்
கோனிடை மைந்தன் கொலையுண்ணும் வேளையத்தே
உண்மை யழிந்து உணர்வழிந்து பூதனையும்
சிந்தை கலங்கித் தெளிவுவந்தங் கேதுசொல்வாள்
''எந்த யுகங்களிலு மெய்தாத பேருகத்தே
மண்டோதரன் றனையும் வன்பூத மாய்த்திரியும்
குண்டோ தரன்றனையுங் கொன்றேன் விடமுலையால்
மாபாவி கஞ்சனுடை வார்த்தை தனைக்கேட்டுக்
கோபாலன் மைந்தனெனும் கூற்றுவன்கைப் பட்டழிந்தேன்
பேய்ச்சி மதிகெட்டேன் பெண்மதியா லிங்குவந்தேன்
ஆய்ச்சி மகனென்னும் அந்தகன்கைப் பட்டழிந்தேன்
ஈதில் விதிவசமோ'' என்றந்தப் பாலகன்றன்
வாயில் முலைபறிக்க மாட்டாள் வசமழிந்தாள்
பேய்முலையை விட்டுப் பிரானுந் தவழ்ந்துசென்று
தாய்முலையை வாயில்வைத்துத் தான்துயின்று ரம்மானை
வம்பே கடலுடைந்து வானம் வெடித்ததென்ன
வெம்பே யலறி விழுந்ததுகா ணம்மானை
பூதனை வாய்பிளந்து போகின்ற வாறுனை
வேதனும் வானோரும் விண்ணினின்று கண்டருளி
தாயாய் முலைகொடுத்துத் தாமனுல் மாண்டதனுற்
பேயான தற்குப் பெரும்பதவி தானளித்தார்
அவ்வா றிருக்க அசோதை துயிலெழுமுன்

---

1. தான் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வாய் மதலை சிறுகுரலால் விம்மலுற்றூர்
அன்ன மெழக்கண் டசோதையுங் கண்விழித்துத்
துண்ணென் றெடுத்தணைத்துச் சுற்றெங்கும் பார்ப்பளவில்
வாசற் புறத்தே மலைபோற் கிடக்கின்ற
பேயைத் தரிசித்துப் பேச்சடங்கி மூச்சடங்கி
அங்கோ ரிருப்பாணி யண்ணல்கையிற் றூன்கொடுத்துத்
தங்கோன் றனையெழுப்பித் தானுரைத்தா ளம்மானை
ஆவென் றலறி யசோதையும் நந்தனுமாய்க்
கோவென்ற சத்தத்திற் கோபால ரோடிவந்தார்
ஈண்டவருந் தங்க ளெழில்நந்தன் வாசல்புக்கி
மாண்டபேய் தன்னை மலைபோலே கண்டார்கள்
கண்டு விழியைக் கரங்களாற் றூன்மறைத்து
மண்டி விழுந்து வனம்புகுந்தா ரம்மானை
போது விடிந்து பொழுது முதித்ததன்பின்
தீது பயில்பேயுஞ் செத்தபடி யுள்ளறிந்து
நந்த னழைப்பிக்க நல்லாட்கள் வந்துகண்டு
சிந்தை மயக்கம் தெளிந்துநின்றூ ரம்மானை
அண்டி யிடையரெல்லா மப்பூ தனையுடலைத்
துண்டித்துக் கூர்மழுவால் சூலவண்டில் மேலேற்றி
அந்தந்த ஆயரெல்லா மப்படியே தான்கூடித்
தந்தன் விழுக்காடு தான்சுமந்து போட்டுவந்தார்
அழுகை சலிப்பொழிந்து ஆயரெல்லா மஞ்சலென்று
முழுகி மனைதனிலே முகிழ்த்திருந்தா ரம்மானை
அங்க ணுடைய அசோதையுந் தன்மனையை
எங்கு மெழுகிவித்து எத்திசையுந் தூபமிட்டு
தம்பி கிருட்டிணனை நன்மஞ்ச னமாட்டி
அம்புயக் கண்ணனுக்கு ஆலாத்தி தானெடுத்து
வேலுடைக் கண்மடவாள் வெண்பாலில் நெய்கலந்து
[1]பாலாடை சுட்டுப் பரிந்தமிர்த மூட்டினள்காண்
இன்ப மகனே டிருந்தா ளசோதையுந்தான்
துன்பமனக் கஞ்சனுடைத் தோற்றங்கே ளம்மானை
சோதனைக் கஞ்சனிடைத் தூதர் கடிதோடி

1. பாலடிசில் கொண்டு பரிந்தளித்தாள் மைந்தனுக்கு (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பூதனையாய்ப் பாடியிலே போன்றிறு ளென்"றுரைத்தார்
"ஆலமெனும் நஞ்சு மமுதாய்ச் செரித்தமையால்
மேலிவனை யாராலும் வெல்லவொண்ணு" தென்றுசொன்னர்

## சகடன் திணபோசனன் வதம்

கன்றிச் சலித்திருந்த கஞ்சனைத்தான் வந்துகண்டு
வென்றிச் சகடன் [1]விளம்பலுற்று னம்மானை
"எந்த யுகங்களிலும் யான்பெரியோ னென்பவனைச்
சிந்தப் பொருது சிதைக்கும் மிடுக்குடையேன்
யானு மிருக்கையிலே யெங்கோவே யிப்பொழுது
தானு மிகச்சலிக்கத் தக்கதோ?" வென்றுசொன்னன்
வெள்ளெயிற்றன் சொல்ல விறற்கஞ்ச னேதுசொல்வான்
"கள்ள விழிவிழித்துக் கைக்குழந்தை போல்வடிவாய்
என்னுடைய மாற்றன் எழிலாயர் பாடியிலே
மன்னுடைய நந்தன் மகனுய் வளருகிறன்
கொற்றவனே நீயவனைக் கொன்றுதரு வாயாகில்
உற்ற வுதவி யுனையல்லா தில்லை' யென்றன்
மன்றுடிப் பாலகனே மாருச் செனக்கேட்டுச்
சென்றன் சகடுருவாய்ச் சீக்கிரத்தில் வல்லசுரன்
பண்டுநாள் கொன்றுவிடப் பட்டார் திணங்களெலாம்
உண்டுதான் தேக்கிட் டுயநதிண போசனனும்
கோபாலன் மெய்யிற் கொளுப்பையெலா முண்டிடுவோம்
ஓவாதே [2]யென்று உடன்கொண்டு போய்ப்புகுந்தான்
அந்தநாள் தன்னில் அசோதை திருமகனும்
தந்தைதாய் காணத் தவழ்ந்துவிளை யாடலுற்றன்
சப்பாணி கொட்டியும் சாய்ந்தாடல் தான்பயின்றும்
ஒப்பாரி காட்டியும் ஒண்டொடியைக் கண்ணிட்டும்
முத்தங் கொடுத்தும் [3]முனிவால் மருட்டுவித்தும்
அத்தங்கை காட்டியு மம்புலியை யாதரித்தும்
சங்கை யுடனே தவழ்ந்த திருமகனை
மங்கை யசோதை மனமகிழ்ந்தங் கேதுசொல்வாள்
"எல்லா மறிவா னிவனறியா தொன்றுமில்லை
நல்லார்க்கு நல்லன் நலித்தாரைக் [4]கொன்றிடுவன்
என்மக" னென்று எடுத்தணைத்து மோந்துகொண்டு

---

1. விளம்பினன்காண் (ஸ்ரீ)
2. யென்ன (ஸ்ரீ)
3. முலைப்பாலை யூட்டுவித்தும் (ஸ்ரீ)
4. செயித்திடுவன் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மகனை வாழ்த்தித் தலத்திடையே வைத்தருளச்
செங்கண்ணன் தானும் தெருவிற் றவழ்ந்துசென்று
அங்கம் புழுதிபட அம்மணலைத் தான்குவித்து
மற்றுந்தாய் தந்தையரை வாட்டியும் வாட்டுண்டும்
சுற்றும் விழிபார்த்தும் தோகையரைக் கண்ணிட்டும்
ஒத்த மதலையரை ஒண்கரத்தி லீடுசெய்தும்
வித்தகன் தானும் விளையாடி யேதுசெய்தான்
கோதனன் பெற்ற குருசில்தன் மேல்விழுந்து
காதினைப் பற்றிக் கடித்தறுத்தா னம்மானை
அப்பிள்ளை தாய்போ யசோதைக்குச் சொல்பளவில்
வெப்புளக மாக மிலாறொடிக்கத் [1]தான்கண்டு
அஞ்சி யொருவி யலமர்ந்து நீர்பெய்து
கொஞ்சி யழுது குறுகுறெனத் தான்விழிக்கப்
பந்த வசோதை பயமுறுத்திப் போனபின்பு
கிந்தித் தவழ்ந்துசென்று கிருட்டிணனு மேதுசெய்தான்
வாதிக்க வல்லசுரன் வருவா னெனவறிந்து
வீதிக்கே சென்று விளையாடி வீற்றிருந்தான்
அன்னவ னங்கிருக்க அவ்வூர் தனைநோக்கி
மின்னு மெயிற்றரக்கன் மிக்க சகடுருவாய்
நேருருண்டு வந்தான் நிணபோ சனனுடனே
காரிருண்ட மெய்யான் கடைக்கண்ணுற் பார்த்திருந்தான்
"நான்தேடி வந்தபொருள் நன்றாக நேர்ந்த"தென்று
தேன்தோ டலங்கற் சிறீகிருட்டி ணனிருந்தான்
வட்டார மெல்லாம் வளைந்து செருமலைந்து
விட்டான் சகடுருவை வெஞ்சகட னம்மானை
தாக்கினன் நெஞ்சுதனில் தாமனும் தன்பதத்தால்
நோக்கினர் வல்லசுரர் நொறுக்கெழுந்தா ரம்மானை
உதைத்தான் சிறுவன் உதைத்தலு முள்ளுயிர்போய்ப்
பதைத்தே யசுரர் பருமலைபோ லேவிழுந்தார்
தாமன் சகடுதைக்கத் தண்விசும்பில் வானோர்கள்
பூமழை பெய்து புகழ்ந்தார்க ளம்மானை
பெம்மான் றவழ்ந்துசென்று பிள்ளைகளோ டேயிருந்து

1. தானகன்று (ந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெம்மாண் மணற்குவித்து விளையாடி வீற்றிருந்தான்
நீண்ட சகடன் நிணபோச னனுடனே
மாண்டு கிடப்பதனை மன்ருடிப் பெண்கள்கண்டு
சென்றங் கசோதை திருமுன்பே சொல்பளவில்
மன்றல் கமழ்குழலாள் வயிறெரிந்தங் கோடிவந்து
பாலன் றனையேந்திப் பட்டவரைத் தான்பார்த்தாள்
வாலிழை யாய்ச்சியர்கள் வந்தங்கு ஏதுசொல்வார்
பேழ்ந்தவாய்ப் பேய்க்குப் பிழைத்தோ மெனவிருந்தோம்
மேலிங் கிவனிருந்தால் மெத்தெனவே கொன்றிடுவார்
வாழ்ந்திருக்க நாமிருந்தோம் வண்மையுடன் வையகத்தில்
சூழ்ந்தசுரர் தானுநமைச் சூழத் தொடங்கினரால்
எவ்வகை யுய்வோ மெனமனையிற் கொண்டுசென்ருர்
செவ்வகை யான செழும்பவள வாயனுக்குக்
காப்பணி வித்துக் கனபலியும் தான்சுழற்றி
வேப்பிலை கொண்டு மிகுபுகையுந் தான்காட்டிக்
காடுகளுக்குக் கனதுணங்கை [1]தானெரித்து
நீடுமகன் தன்னை நீங்காமல் வைத்திருந்தாள்
மேனி யிருஞ்செங்கண் வெள்ளெயிற்ருன் பட்டதனை
கோனிரைபின் போன கோபாலர் வந்துகண்டு
தம்மைத் தலைநடுக்கத் தம்விரலை மூக்கில்வைத்து
"நம்மில் தவமுடையான் நந்தனே" யென்றுரைத்தார்
கோளுநந்த கோன்மகனே கொல்லக் கடனிவரை?
நாளும் பிணஞ்சுமக்க நமக்குக் கடனென்று
கொட்டு மழுவுங் கொடுவாளுங் கொண்டுசென்று
வெட்டிச் சுமந்தலுத்து [2]வேசற்ருர் கோபாலர்
வாட்ட மறச்சுமந்து [3]வண்டிவினில் விட்டேற்றிப்
போட்டு முழுகிமனை புக்கினர்கா ணம்மானை
தன்னால் விடப்பட்ட சகடன்பட்ட வாறதனைச்
சொன்னர்கள் கஞ்சனுக்குச் சோகமுற்ற னம்மானை

## மத்தன் மதாமத்தன் வதம்

மத்த னுடனே மதாமத்த னென்றிருவர்
மெத்தவுரை சொல்லியவர் வேந்தனையும் வந்துகண்டு
"மன்னவர்க்கு மன்னவனே வாட்டமுனக் கே"தெனவே

1. தான்காட்டி (ஸ்ரீ)
2. மிகவினைத்தாரம்மானை (ஸ்ரீ)
3. வண்டிவிலே யெல்லையிட்டு (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னவற்குக் கஞ்சனுனென்று சொல்லலுற்று னம்மானை
"உம்பர்கோன் மேலே உமையேவ வென்றிருந்தேன்
எம்பகை காரன் இடைநந்த கோன்மகனை
வென்றின்று தாரு"மென மிக்கவனும் சம்மதித்து
நன்றென்று சொல்லி நடந்தான்கா ணம்மானை
ஆய்ப்பாடி யிற்போ யசோதை மனையருகே
வாய்ப்பா யிரண்டு மருதுநிற்கக் கண்டார்கள்
அம்மருதைத் தான்பிடுங்கி யலைகடலிற் போடெறிந்து
பொய்மருதாய்த் தாங்கள் புகுந்துநின்று ரம்மானை
அங்கவர்கள் நிற்க அன்னை யசோதைபெற்ற
எங்கோன் கிருட்டிணனு மேதுசெய்தா ரம்மானை
பாரெல்லா முண்டு பசி[1]தீரா உந்திக்கு
வாருலாங் கொங்கையிலே வார்க்கும்பால் போதாமற்
சாடியிற் பாலுந் தயிர்த்திரளை யுங்குடித்து
நீடிய வெண்ணெய்களும் நெய்களுந் தான்விழுங்கி
அம்மனையி லுள்ளதுவு மவ்வூரி லாய்ச்சியர்கள்
தம்மனையி லுள்ளதுவுந் தவழ்ந்துபோய்த் தான்விழுங்கிப்
பங்கயக் கையாற் பவளவா யைத்துடைத்துச்
செங்கயற் கண்ணுரைத் தீமை பல[2]புரிந்து
சந்தித்த பிள்ளைகளைச் சண்டையிடத் [3]தானழைத்து
அந்திச் சிறுகா லதுதொழிலாய்க் கைக்கொண்டான்
எங்கெங்கு முள்ள இடைச்சியர்க ளெல்லாரும்
தங்கள் மனைபுகுந்து தாமவரைக் கோபித்து
[4]"உற்றபால் காணேண் உறியிற் றயிர்காணேன்
சற்றும்வெண்ணெய் காணேன் சாடியுந் தான்காணேன்
வந்தவரிங் கா"ரென்று மக்களையுந் தான்முனிய
இந்து நுதற்சிறியா ரெல்லாரு மோர்மொழியாய்
[5]"நீங்கள் வருவதன்முன் நீங்களங்கு போனதன்பின்
[6]ஆங்கொருவர் வந்ததில்லை யன்னியரும் [7]வந்ததில்லை
சங்கை யசோதை தனையனவன் வந்துவந்து
எங்களையும் பஞ்சித்து ஏகினு" னென்றுசொன்னர்
என்ன வெகுண்டு இடைச்சியரெல் லாங்கூடி

---

1. போகா (ஸ்ரீ)
2. செய்து (த-ஸ்ரீ)
3. தான்தகர்த்து (த)
4. உற்றபால் காணுர் உறியில்வெண்ணெய் நெய்காணுர் (ஸ்ரீ)
சற்றுந் தயிரிருந்த சாடிகளுந் தான்காணுர்
5. நீரும் (ஸ்ரீ)
6. ஆரும் புகுந்தறியார் (த-ஸ்ரீ)
7. வந்தறியார் (த-ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்ன மனையா ளசோதையிடத் தேசென்று
"நங்காய்உன் மைந்தனுல் நாங்கள் குடிபோனேம்
எங்கள் தயிர்வெண்ணெய் இருக்கவொட்டா" [1]னென்ருர்கள்
சொன்னவரை யெல்லா மசோதை தொடர்ந்துவைது
என்னகத்தில் வெண்ணெய்தயிர் இல்லாமல் வந்தாரோ?
வில்லார் நுதலார்நின் வீடுகளிற் ருன்போன
எல்லாக் களவுகளு மென்மகனே காணப"தென்று
பண்ணென்று சொல்லால் பருத்தியிலே வேப்பிலையும்
கண்ணூறு சுற்றிக் கனலிலே தான்போட்டு
மைந்தனை வைத்திருந்தாள் மன்ருடி மார்களெல்லாம்
தந்தன் மனையிற் றலத்திற் கடைகயிறும்
மத்தும் படைத்து மருளிக்கு நேர்ந்துகொண்டு
பத்தி யுடன்மடவார் பூராய மாய்க்கூடிப்
பண்ணார் மொழிமடவார் பால்தயிர் நெய்தனையும்
கண்ணு லொருவருக்குங் காட்டாதொளித்து வைத்துத்
தங்கள் மடந்தையரைத் தம்மனையிற் காவல்வைத்துப்
பொங்கு மிருளிடையே போயினர் பாலெடுக்க
போவது தன்னைப் புருடோத்த மனறிந்து
மேவிய தொட்டிலிலே மெல்ல எழுந்திருந்து
சதங்கையுங் கிண்கிணியுஞ் சத்தப் படுத்தாமல்
நலங்கிளர் தாய்தந்தை நாடாமற் [2]ருன்றவழ்ந்து
அந்நகரி லாயர் மனைதோறும் போய்ப்புகுந்து
கன்னியரை யெல்லாம் கடு[3]மோகந் தான்விளைத்துப்
பேதை முதலாகப் பேரிளம்பெண் ணீருக
ஆதரவா யாகி யவரவர்க்குத் தக்கவராய்ப்
பந்து கழங்குகலைப் பாவையுந் தான்பறித்து
"என்றன் வரவுரையா" யென்றவரை யாணையிட்டு
அங்கவரை [4]யாட்கொண்டு ஆய்ச்சியர்கள் பேணிவைத்த
பொங்கு தயிர்பால் புதுவெண்ணெய் அத்தனையும்
சேரக் குடித்துத் திரும்பிப்போய்த் தன்மனையில்
பாரித்த தொட்டிலிலே பள்ளிகொண்டா ரம்மானை
போய்மாத ரெல்லாம் புகுந்துதங்கள் தம்மனையில்

1. என்றுசொன்னர் (த)
2. தான் இருளில்/தான்நடந்து (ஸ்ரீ)
3. போகம் (த-ஸ்ரீ)
4. உள்ளாட்கி (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமாக வைத்த தயிர்வெண்ணெய் காணுமல்
"அன்றுபோ லின்று மசோதைமகன் வந்தானே?"
என்றுதங்கள் கன்னியரை ஏறெடுத்துக் கேட்பளவில்
வண்ணங்கள் வேறுபட்டு மங்கையர்க ளெல்லோரும்
"கண்ணனைத்தா மின்று கண்டிலோ" மென்றுரைத்தார்
அற்றைநாட் போனபின்பு ஆய்ச்சியர்க ளெல்லோரும்
சுற்றெங்கு [1]மொப்பிட்டுச் சோதித் தொளித்திருந்தார்
அன்றுபோ [2]லின்று மரிகே சவன்ருனும்
சென்றவர்கள் வீடுகளிற் சேர்பால் தயிர்வெண்ணெய்
வாரி விழுங்கியவர் மங்கையரைப் புல்கையிலே
காரிகையா ரன்னைமார் [3]கண்டுவெளிப் பட்டார்கள்
அங்கவர்கள் காணுமல் அச்சுதனு மவ்வுருப்போய்த்
தங்கள் மனைக்கே தவழ்ந்துசென்ரு ரம்மானை
எத்தெருவு முள்ள இடைச்சியர்க ளெல்லோரும்
தத்தம் புதல்வியரைத் தங்கள்கண்ணுற் ருன்பார்த்துத்
துன்னி யெழுந்தனமுந் தோளும் புளகமெழக்
கன்னியர்கள் நின்றதனைக் கண்டு கனல்விழித்துக்
காய்ச்சியபால் வெண்ணெய் களவு கொடுத்தலுத்த
ஆய்ச்சியர்க ளெல்லா மசோதையிடத் தேசென்று
"மீண்டு தயிர்பால் வெண்ணெய்யெல்லா முன்மகனே
கொண்டுரெல் லாங்கொள்ளை கொண்டதுவும் போதாமல்
குதலைமொழிக் கன்னியரைக் கற்பழிக்க வென்றுனது
புதல்வனையிவ் வூர்க்குப் பொலியெருதாய் விட்டாயோ?"
என்றவர்கள் [4]கேட்ப எழில்மகனைத் தான்பார்த்து
நின்ற வசோதை நெடிதுரைப்பா ளம்மானை
"நடைகற் றறியாத நாயகனை யிப்போது
உடைகற்ற கன்னியரோ டொத்தானென் ருேதுகிறீர்
மங்கையரே நீங்களெல்லாம் மக்கள்தனைப் பெற்றிலிரோ?
சங்கதமோ?" வென்பளவிற் ருமன் றவழ்ந்து[5]வந்து
தங்கள் மனையிற் றனியுரலிற் [6]சென்றுநின்று
தூங்கு முறியைத் திறந்துவைத்துச் சுற்றியுள்ளோர்
கண்ணையெல்லாம் பார்த்துக் கமலப்பூங் கையாலே
வெண்ணெயெல்லாம் வாரி விழுங்கினர்கா ணம்மானை

---

1. மோடி (ஸ்ரீ)
2. மெல்ல (த-ஸ்ரீ)
3. கண்டுவெகுண்டார்கள் (ஸ்ரீ)
4. சொல்ல (த-ஸ்ரீ)
5. சென்று (த-ஸ்ரீ)
6, நின்றுகொண்டு (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு [1]நிற்க அசோதையுங் கண்டுகொண்டு
செவ்வாய் மதலைதனைச் சிக்கெனத் தான்பிடித்துக்
கன்றுத்தாம் பாலே கனவுரலிற் கட்டிவைத்து
மன்றுற் றசோதை மணித்தாம்பு தானெடுத்துப்
பூமலையுஞ் சாயப் பொருகின்ற மத்தகசம்
தாமரை நூலிற் றரிப்புற்று நின்றாற்போற்
பசலை விழிவிழித்துப் பயந்துநின்று கண்பிசைந்து
செயலை மறந்து சிறுநீரும் பெய்துகொண்டு
பாந்தி யொதுங்கும் பவளவாய்ப் பாலகனை
ஏந்துகையிற் றாம்பால் ஏதுசொல்லி மோதுகிறாள்
"கோட்டிற் புகுதேனென் கோதையரைப் புல்கேனென்
வீட்டிற் புகுதேனென் வீதிதனிற் செல்லேனென்
மிண்டுகள் செய்யேனென் வெண்ணெய் திருடேனென்
சிற்றில் சிதையேனென் தீமைபல செய்யேனென்
மற்றில் புகுதேனென் வாசல்விட்டுப் போகேனென்"
என்றென் றவள்மோத இல்லையென்று கண்ணனழச்
சென்றுநின்று வானோர் தெரிசித்தங் கேதுசொல்வார்
வையம் பதினாலும் வாழும் பொருட்டாலே
ஐயன் விழிப்புற் றழுகின்றான் பாருமென்று
[2]ஆமோது தாம்பால் அசோதைதான் மோதுகையில்
தாமோ தரனென்று தாமனுக்குப் பேருமிட்டு
மாயன்கட் டுண்டதனை வாரும்நாம் காணவென்று
போயவண் சேர்ந்த புரிகுழலார் நிற்பளவில்
கோபிக்குந் தாயார்க்குங் குழந்தை வடிவாயும்
[3]பாவிக்குங் கன்னியர்க்கும் பண்ணிட்டுங் கண்ணிடுவன்
கன்னியர்க ளெல்லோரும் காவலனுக் காய்ப்பரிந்து
மன்னி யசோதைதனை மன்றாடும் வேளையிலே
பேருர லோடே புழக்கடையிற் றான்றவழ்ந்தார்
ஆரு மருதாக அங்குநின்ற வல்லசுரர்
திக்கெங்குங் கப்புவிட்டுச் சேணளவுந் தான்வளர்ந்து
தாக்கம் விளைக்கச் சமைந்துநின்ற ரம்மானை
[4]அமர்ந்த வுரலோடே அணிமருதம் வேர்பறியத்

---

1. தன்னை
2. ஆமோதரத்தை
3. பாவிக்குங் கன்னியரைப் பண்டுபோற் கண்ணி )வ ா
4. அவிழ்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவழ்ந்துதா மோதரனுந் தள்ளிநடை யிட்டனன்காண்
பர்வதம் போலே பனைமருத மோரிரண்டும்
அற்பநடைக் காற்றுமல் அடிபறிந்த தம்மானை
நித்தம் [1]நடைபழகி நீள்மருதா யங்குநின்ற
மத்தன் மதாமத்தன் [2]மாண்டனர்கா ணம்மானை
கஞ்சன் வரவிடவும் கண்ணன் செலவிடவும்
துஞ்ச வசுரர் [3]தொடங்கினர்கா ணம்மானை
[4]நன்மருது சாய நடைகற்ற தன்மகனை
அன்ன நடையா ளசோதையு மப்பொழுது
மஞ்சன மாட்டி மணிக்கலன்கள் தான்பூட்டி
அஞ்சனந் தீட்டி யமுதூட்டி வைத்திருந்தாள்
மாமருது [5]கால்சாய வல்லசுர ராய்க்கிடப்பக்
கோமருவு கோபாலர் கூடிவந்து கண்டுநின்றுர்
வந்தவகை கேட்டு வன்சகடும் வன்பேயும்
சிந்தப் பொருததுவுஞ் செல்வனே யென்றறிந்து
பெற்ற வசோதைப் பிராட்டி தனைத்தொழுதுக்
கொற்றவனே யெங்கள் குலதெய்வ" மென்றுரைத்து
அப்பிணங்கள் தன்னிலிது [6]ஐயிரட்டிப் பங்கென்று
இப்பிணமு மோர்வகையே யெல்லோரு மாய்ச்சுமந்து
போட்டு முழுகிமனை புக்கார்கா ணம்மானை

## புட்கரன் வதம்

கேட்ட [7]விசேடம் கெடுகஞ்ச னுள்ளறிந்து
தக்கோன் மனஞ்சலித்துத் தள்ளாடும் வேளையிலே
புக்கா னவனருகே புட்கரனென் பாஞெருவன்
"பாரைப் பிளப்பேன் பணியை மணிபறிப்பேன்
ஊரைப் பிடிப்பேன் கடலைக் குடித்திடுவேன்
போர்வேந்தே கூற்றனைய புட்கரனு னிக்கிருக்கத்
தேர்வேந்தே நீதான் திகைத்திருக்கத் தேவையென்ன?"
"மெய்ப்பாமாய்ப் பாடியில்வாழ் மிக்கநந்த கோன்மகனைப்
பெ ய்ப்பாற் கிருட்டிணனைப் பொன்றுவித்துத் தந்தருள்வாய்"
என்றனே கஞ்சன் இசைந்தருளிப் புட்கரனும்
சென்றனே புள்ளுருவாய்ச் சீக்கிரத்தி லம்மானை

---

1. நடைபயில (த)
2. மடிந்தனர் (த)
3. தொலைந்தனர்காணம்மானை (த)
4. நாள்மருது சாய நடைகற்ற பாலகனை
வாள்பொருது கண்ணுள் வந்தெடுத்துக் கைக்கொண்டு
பட்டவரைக் கண்டு பயமுற்றுக் கொண்டுசென்று
கட்டு மவிழ்த்தெறிந்து கண்ணனென்று பேருமிட்டு (த)
5. கால்சாய்ந்து (ஸ்ரீ-த)
6. இதுஇரட்டி போதுமென (த)
7. விசளம் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்தித்து மெத்த விரைகின்ற புட்கரனைச்
[1]சந்தித்த வந்தித் தாக்கனென்பா னம்மானை
"கோபாலர் தம்மையெல்லாங் கொல்லப் [2]பணிபெற்றேன்
மூவ ரெலும்பையெல்லாம் [3]மூளையுண்ணப் போ"கென்றான்
[4]போய்ப்பாடி யெல்லையிலே புட்கரனும் போமளவில்
ஆய்ப்பாடி வாழும் அசோதையுந் தன்மகனைக்
குஞ்சி முடித்துக் குணுக்கிட்டு மையுமிட்டுக்
கிஞ்சுக வாயனுக்குக் கிண்கிணியுங் காப்புமிட்டுச்
சின்ன மருங்கினுக்குச் சிற்றுடை யுமுடுத்தி
அன்ன மருந்துவித்து அங்கையிற் கோல்கொடுத்துச்
சென்று சிறுவருடன் சேர்ந்து சிறுகாட்டில்
கன்றுகள் மேய்த்துவரக் கற்பித்தா ளம்மானை
[5]சக்களத்தி மார்கன்றும் தன்கன்றுந் தானோட்டிச்
[6]செங்கமலக் கையானும் சென்றான்கா ணம்மானை
வான்புட் கரன்றன்மேல் வந்ததனை யுள்ளறிந்து
கான்புக்க கன்றினையும் காந்தரையுந் தூரவிட்டுத்
தூற்றிப் பழம்பறிக்கத் தூயோனும் வந்துநின்றான்
காற்றிற் கடுகவந்து கெளவினான் புட்கரனும்
[7]மாவென்று மாயோன் மலைபோல் வளர்ந்திடவே
ஆவென்றான் புட்கரனு மப்படியே யம்மானை
வளர்ந்தான் இருகரத்தால் வன்புள்ளின் வாயலகைப்
பிளந்தா னிமையோரும் பெய்தார்கள் புட்பமழை
புள்வா யலகைப் [8]பிடித்தார்கை போற்கிழித்து
[9]வெள்வா யெயிற்றரக்கன் மேல்விட் டெறிந்தான்காண்
மாண்டங் கிருபேரும் மலைபோற் கிடந்தார்கள்
ஆண்டங் கசோதையிட மாயமக்க ளேது சொல்வார்
"உன்மகனை வந்தங் கொருபுள்ளுந் தான்விழுங்க
நின்மகனு மத்தை நிகழ்ந்துகொன்றா" னென்றார்கள்
சொல்லத் தரியாள் துணுக்கென்று சென்றுகண்டு
செல்வத் திருமகற்குத் தீங்கில்லை யென்றறிந்து

---

1. சந்திக்க வந்துநித்தான் தக்கோனு மம்மானை (ஸ்ரீ)
2. வகை (ஸ்ரீ-த)
3. மூளையுண்பேனென்று சொன்னான் (ஸ்ரீ-த)
4. பொய்ப்பாடி (ஸ்ரீ-த)
5. சங்கரத்தார் (ஸ்ரீ)
6. செங்காந்தட் (ஸ்ரீ-த)
7. மாவென்ற (ஸ்ரீ)
8. பிளந்தாற்போற் கிழித்து (ஸ்ரீ)
9. வெள்வாயயிற்றதின் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காயும் பழமுங் கலந்து பறித்தாற்போல்
ஆயர்மக்க ளெல்லோரும் அந்தியிலும் சந்தியிலும்
காட்டிற் றிரிந்து காச்சலற வாரூர்கள்
வீட்டிற் புழக்கடையில் வீதியிலு மூரருகும்
நம்மை யசுரர் நடமாட வொட்டார்கள்
எம்மகனே நாமினித்தா மேதுசெய்வோ மென்று"சொல்லிக்
கோமானைப் பாலூட்டிக் குளிப்பாட்டி வைத்திருந்தாள்
ஆமானிடைய ரசோதையை வந்து கண்டு
"உம்மைக்கொண் டானுக்கு முங்களுக்குஞ் சீராட்டு
எம்மைப் பிணஞ்சுமக்க வென்றே வெழுதிவைத்தான்"
என்றுதா மெல்லோரு மிரவுபக லோயாமல்
மூன்றுநா ளாய்ச்சுமந்து முழுகிவந்தா ரம்மானை

## கிறுத்துவன் பிறலம்பன் வதம்

[1]மற்ற விடயம் மதுரைக்குப் போய்ப்பிறக்கக்
கொற்றவசு தேவன் குமாரனுக் காயிரங்கித்
தேவகியுந் தானுஞ் செழுங்கண்ணீர் தான்சொரிய
ஆவி தளர்ந்து அயர்ந்துதான் நிற்கையிலே
தேற்றிப் பிறசேனன் சேர்ந்ததுய ரேதெனவே
ஊற்றுக்கண் மன்னவனு முள்ளபடி சொல்லலுற்றான்
"அன்னக் குழந்தைதனை யத்தலத்தில் வைத்ததெய்வம்
இன்னுஞ்சில கால மீடேற்றத் தப்பாது"
ஓதுவசுதேவ னுரோகணியுந் தேவகியும்
சாதுரத் தோடு சலித்திருந்தா ரம்மானை
இப்பாற் கிருட்டிணனு மிருசணனு மேதுசெய்தார்
ஒப்பாகக் கன்றுகளை ஓட்டிப்போய்க் கானகத்தே
கற்றயர் பிள்ளைகளுங் கன்றுகளும் வேறுபட
உற்ற ரிருபேரு முண்மையுட னேர்தலத்தே
மிண்டிக் கருமுகிலும் வெண்முகிலும் போல்மோதி
அண்டி யிருந்து அறிவுவந்து கண்கலங்கித்
தம்மிற் றெளிந்து தமையனுந் தம்பியுமாய்
[2]நம்முற் றுயங்கள் நடத்துவோ மென்றுசொல்லிக்
[3]கன்றுகளின் வாலிற் காவோலை கட்டிவிட்டுத்
துன்று களினூடே துரத்தியதைப் பார்த்திருந்தார்

1. மற்ற விசளம்
2. நம்முற்றூரங்கள் (த)
3. கன்றுகளின் வாயிலே காற்பொலியைக் கட்டிவைத்து (த)
துன்று கன்றெருக்கத் துரத்தியதை யோட்டுவித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சமலர்க் கண்ணனைக் கற்றாயர் பிள்ளைகள்தான்
[1]அஞ்சிப் பயந்து அவரவர்க் கென்றுவைத்த
எல்லை தனினிற்க இழுத்துவிளை யாடல்செய்து
கல்லை யெடுத்துக் கற்றாயர் பிள்ளைகளை
வாட்டித்தன் கன்றைவிட்டு மற்றாயர் [2]கன்றுகளை
ஓட்டிப் பசுக்களிலே யூட்டுவித்தா ரம்மானை
சிலமைந்தர் கண்டு சிக்கெனவே தான்சென்று
அலமந் தசோதைக் கழுது[3]சொன்னா ரம்மானை
"மின்னேநின் வெண்பிள்ளை மிக்ககரும் பிள்ளையுமாய்
என்னோர முஞ்சருவி யெங்களையும் [4]நாடவொட்டார்
தங்கள்கன்றை நீக்கிவைத்துத் தாமெம்மை மிண்டுபண்ணி
எங்களைத் தான்வெருட்டி யெம்பசுவி லூட்டுவிப்பார்"
என்றது கேட்டு இவளுஞ் சினந்தெழுந்து
சென்றா ளதுகண்டு தேவர்பிரா னேதுசெய்தார்
கையினால் வாய்புதைத்துக் காலொட்டிக் கண்பிசைந்து
ஐயன் ஒதுங்கி அழுதனர்கா ணம்மானை
ஓச்சிய வேலுக் கொதுங்காத மேனியையன்
ஆச்சிகைக் கோலுக் [5]கழுதனர்கா ணம்மானை
அங்கையிற் கோல்போட் டவரை யெடுத்தணைத்து
மங்கை யசோதை மனைபுகுந்தா ளம்மானை
சங்கு நிறத்தனையுந் தாமனையும் கண்டவர்கள்
பொங்கிய கஞ்சனுக்குப் போயுரைத்தா ரம்மானை
சருவியாய்ப் பாடியிலே தன்தங்கை [6]பெற்றமைந்தர்
இருவர்க ளுண்டென் றிடருற் றிருக்கையிலே
பீடார் கிறுத்துவனும் [7]பிறலம்ப னென்றிருவர்
வாடா மிடுக்குடனே மன்னவனை வந்துகண்டார்
கண்டுநின்ற தானவரைக் கஞ்சன் [8]மிகப்புகழ்ந்து
"பண்டுநீ செய்த பராக்கிரம மெல்லையில்லை
பண்டு பழியுடைய பாலகர் ஓரிருவர்
மண்டு மிடையர் மனைக்கே வளருகிறார்

---

1. அஞ்சிப் பயந்து அவரவர்க்குக் கன்றுதைத்து
எல்லை தனக்குள் கிருஷ்ணனா மேதுசெய்தான் (த)
2. பிள்ளைகளை (த)
3. அழுது விழுந்துசொல்வார்
4. ஓடவொட்டார் (ஸ்ரீ)
5. அஞ்சினர்கா ணம்மானை (ஸ்ரீ)
6. மார்கள் (ஸ்ரீ)
7. பிறபலனும் (த)
8. மிகப்பார்த்து (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்ப்பாடி யிற்போய் அவரைநீ கொன்றுதந்தால்
ஒப்பா யெனக்கு உயிர்தந்த தொக்குமென்றான்
பேசி விடுத்த பிறலம்பன் கேத்துவனும்
ஆசில் மதுரை யகன்றுசென்று ரம்மானை
சென்றுயர் பாடியிலே சேர்ந்து [1]பனங்காட்டிற்
குன்று கிருடணனைக் கொல்ல [2]வகைநினைத்து
மத்த கசமாய்ப் பிறலம்பன் வந்துநிற்கக்
கிறுத்துவனு மோரிடத்தே கிருட்டிணனைக் கொல்லவென்று
காட்டினிடையே கழுதையாய் வந்துநின்றான்
வீட்டி னிடையிருந்த வித்தகனு மேதுசெய்தார்
[3]மன்று குழலில் மணமாலை யுந்துளபுங்
[4]கொண்டு முடித்தருளிக் குங்குமத்திற் சேறுடித்
தெண்டுங் கிறிசுந் தெறிவில்லுங் கைப்பிடித்து
அண்டியீடைப் பிள்ளைகளு மங்குமிங்குஞ் சூழ்ந்துவரச்
செம்பவள வாயிற் செழுங்குழலைத் தான்வைத்து
[5]அம்புயக் கண்ணும் அணிநுதலுஞ் சோதிவிடக்
காதிற் புனைந்தரத்னக் கனககுண் டலமாட
ஊதித் தெருவே உலாவினர்கா ணம்மானை
மாயன் வரவுகண்டு [6]மகந்திர லம்பையென்பாள்
[7]ஆயர் மனைக்கே யங்கங்கே சென்றோடிக்
"கண்கள் கொடுமருட்டும் [8]காவாலி போமளவும்
உங்கள்கன்னி மாரை ஒளித்துவையு" மென்றுசென்றாள்
சாடி யுரைப்பளவில் தங்கள்தங்கள் கன்னியரை
[9]ஓடி யங்கங்கே ஒளித்துவைத்தா ரம்மானை
ஆகாச மேசென் [10]றவரையெல்லாந் தான்புணர்ந்து
ஏகாசஞ் செய்வித்தா ரெம்மாமி மார்களென்று
கன்னியர்கள் நெஞ்சுங் கலையுங் கவர்ந்துகொண்டு
பின்னையும் மைந்தருடன் பேராளன் போனபின்பு
விரகோ தனன்பெண் விநோதரியென் பாளொருத்தி
ஆரமுலை தன்னை யணையா தவனேக

---

1. பழங்காட்டில் (த)
2. நினைவெடுத்து (த-ஸ்ரீ)
3. மண்டற் (ஸ்ரீ)
   மன்றற் (த)
4. குஞ்சி (த-ஸ்ரீ)
5. அம்புயக் கண்ணன் அணிநுதலில் நாமமிட்டு (த-ஸ்ரீ)
6. மததிற லம்பனென்பான் (ஸ்ரீ)
7. ஆயர் மனைவியவர் மனையிற் சென்றோடி (ஸ்ரீ)
8. காபலி (த)
9. ஓடியே யாங்கு ஒளித்துவைத்துப் பார்த்திருந்தார் (த-ஸ்ரீ)
10. அவரையெல்லாம் தான்தேடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமத் தடம்புயத்துத் தாமனுக்கு மாலாகிக்
காமக் கடலைக் கடக்கவகை காணுமல்
அங்கி யெழுப்பி [1]யருள்ஞானக் கண்ணுலே
மங்கை யுடலுடனே வைகுந்தம் பெற்றிருந்தார்
ஓங்குதா மோதரனு மூரைவிட்டுப் போனபின்பு
[2]ஆங்கவர்கள் கன்னியரை யறைதிறந்து பார்ப்பளவில்
*வண்டுளாய் வீச மலர்க்குங் குமம்வீசக்
கண்டுவெ குண்டுதங்கள் கன்னியரைக் கேட்பளவில்
*"ஆகாசமே வந்தா னசோதைமக னெங்களிடம்
ஏகாந்தஞ் செய்தவனு மேகினு" னென்றுரைத்தார்
பூணு ரரங்கிற் புகுந்த விஞேதரியைக்
காணும லன்னை கலங்கித் தவித்தழுதாள்
மாதுக் கழுவாளை மந்திர லம்பை[3]வந்து
"ஏதுக் கழுகின்ருய்? எப்போது முன்மகட்குச்
[4]சுற்றித் தொடர்ந்து சூழ்வா னசோதைமகன்
[5]ஒற்றி யவனுக் கொளித்துவைப்பா" யென்றுசொன்னுள்
மற்ருயர் தேவியர்கள் [6]மன்ருடும் வேளையிலே
சிற்ருய ரோடே திரள்பசுவை யோட்டுவித்து
நீல மலர்மேனி நேமிப் படையானும்
சால வனம்புகுந்து சங்குவண்ணன் தன்னுடனே
பேரானை யான பிறலம்பன் முன்காட்டில்
காரனைய மேனியனுங் காலிகளை முன்னேட்டிக்
காட்டினிடை வந்தான் கண்டான் கிறுத்தவனும்
வாட்டி வருத்த மனத்தே நினைந்துகொண்டு
அட்ட வசுக்கள்தன்னை யங்கே யழைத்துவிட்டுக்
கட்டெறும் பாக்கிக் கழுதைமே லேவிநின்ருன்
அங்கண்ணில் மூக்கில் அண்ணுக்கி லோரிரண்டும்
செங்கை யடியிற் செவியினி லோரிண்டும்
புக்கிக் கடிக்கப் பொறிகலங்கி மேலுதிரம்
கக்கிக் கதறிக் கழுதைபட்ட தம்மானை

---

1. அஞ்ஞானக் கண்ணுலே (த)
2. ஆங்கன்னை மாரும் (த)
   ஆங்கன்னைமாரும் அவரவர்தம் மக்களிலே (ஶ்ரீ)

* நான்குவரிகள்-ஶ்ரீ-பிரதியில் இலலை
* "இரண்டுவரிகள்-த-பிரதியில்லை

3. கண்டு (ஶ்ரீ)
4. சுற்றித் திரிந்து தோன்று மசோதைமகன் (ஶ்ரீ)
5. ஒற்றியிவளை ஒளித்துவைப்பேனென்று சொன்னுர் (த)
6. மன்ருடி மாய்கையிலே (த-ஶ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரெட் டெறும்பு முடலிற் கடித்திடவே
பாரக் கிறுத்தவனும் பட்டான்கா ணம்மானே
சண்ட மதகளிற்றைச் சங்குவண்ணன் றன்பிடித்து
மண்டச் சுழற்றி மலேயொடே தான்மோதிப்
போட்டா னமரர் பொழிந்தார்கள் புட்பமழை
காட்டாயர் கேட்கக் கனசங் கிருட்டிணனும்
ஆனையாய் வந்தபிற லம்பனைக் கொன்றதனுல்
மான முடைய [1]வலுதேவ னென்றுரைத்தார்
உம்பர்சண்ட தற்பின் உற்றுளா யோரிடையன்
அப்பொ னணியு மசோதையிடத் தேசென்று
"கங்குல்வண்ண னங்கோர் கழுதை தனைக்கொல்ல
அங்குவனே வண்ணனொரு ஆனைகொன்ற" னென்றுரைத்தான்
சாற்றத் தரியாமல் தானுந்தன் கேள்வனுமாய்
ஏற்ற குமார ரிருவரையும் வந்தெடுத்து
மேயும் பசுக்களேயும் மீளவே தானோட்டிப்
போயு மனைக்கே புகுந்திருந்தா ரம்மானே
மாபாலர் கையால் வதையுண்ட தானவரைக்
கோபால ரெல்லாங் குவிந்துகண்டங் கேதுரைப்பார்
ஒருவராய்க் கொல்ல உடைந்தோம் பிணஞ்சுமந்து
இருவராய்க் கொன்ற லினியெமக்குத் [2]தாங்காது
பெண்டுகளும் வாரும் பிணஞ்சுமக்க வென்றுசொல்லி
மிண்டிச் சுமந்தலுத்து வீட்டில்வந்தா ரம்மானே

## சுகந்தன் விகந்தன் வதம்

வாகார்ந்த கண்ணனுடன் வந்துதன தண்ணனுமாய்
ஏகாந்தமாக இருந்தங் கவர்நினைந்தார்
'இங்கிருக்க லாகா தியாமிங் கிருக்குமட்டும்
அங்கிருக்க வொட்டா னசுரரைக் கஞ்சனென்பான்
மிண்டு புகழ்சேர் விருந்தா வனந்தனிலே
கொண்டு பலருங் குடியேற' வேண்டுமென்றார்
"மன்றுடி மார்கள் வருவாரோ நம்பிறகே?
இன்றே குடியெடுப்போ" மென்றான் பலதேவன்

---

1. பலதேவ (த)
2. ஏலாது (த)
நோகாதோ (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எல்லாரும் போக இடுவோன் [1]பழி'யென்று
பொல்லா நரியும் புலியுஞ்செந் நாய்களுமாய்க்
காட்டுடன் வீடுங் கனகுடியா யுள்ளவர்கள்
ஆட்டுடன் மாடு மழிவுசெய்தா ரம்மானை
பண்ணுன மாடாடும் பாற்பசுவுஞ் சேதம்வர
முன்னுன கோன்கள் முறையிட்டார் நந்தனுக்கு
அவ்வுரை கேட்டு அணிநந்த கோனுரைப்பான்
"வெவ்விய கஞ்சன் வினைகொண்டு நாடோறும்
பேயும் நிசாசரரும் பீடழித்த ஊரைவிட்டுப்
போயொரு ஊர்தனிலே புக்கிருந்தால் நல்ல"தென்றுன்
"மைந்தனே தானுக மாதவனைப் பெற்றெடுத்த
நந்தனே யெங்கள்குல நாயகனே கேட்டருள்வாய்
உங்கள் மனநினைவு உற்றேமே யல்லாது
எங்களுக்கு வேறுமொரு இச்சையுண்டோ?" வென்றுரைத்தார்
கூறு மவருடனே கோனந்த னேதுசொல்வான்
"ஆறு மரணு மடவியு முள்ளமையால்
பொருந்தாவு மேயும் புல்லுமினி தாயிருக்கும்
விருந்தா வனந்தனிலே மேவுங் குடி"யென்றுன்
பூபாலர் போலப் பொருந்துநா ருயிரவர்
கோபால ரெல்லாங் குடியெழுந்தா ரம்மானை
*கோதனமும் மேதிகளுங் கொச்சைகளுங் கன்றுகளும்
மாதனமுந் தானியமும் மைந்தர்களும் மாதர்களும்
மண்டு மதலைகளும் மத்துங் கடைகோலும்
கொண்டிடைய ரெல்லாங் குடியெழுந்தா ரம்மானை
காடுகளும் வெட்டிக் கட்டைகளுந் தான்களைந்து
மேடும் பலகுழியும் விரவி நிலந்திருத்தித்
தேர்வீதி யோடுந் தெருக்களுந் தான்வகுத்து
நீராவி போக்கி நிறைமனைகள் தான்வகுத்து
ஆர லெடுத்து அகங்களுந் தானெடுத்துச்
சார லெனவெளிக்குத் தாழ்வார முமிறக்கி
மச்சும் மணியரங்கும் வான்குன்றுந் தான்வகுத்து
மெச்சவே பொன்வேய்ந்து வெள்ளிப் [2]புரிசைகட்டி

1. வகையென்று (ஸ்ரீ)
2. புரிக்கட்டி (த)
* நான்குவரிகள்-ஸ்ரீ, த-பிரதிகளில் மாத்திரம் உள்ளவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்கள் தானும் அறச்சாலை யுங்கிணறும்
சோலையும் வாவிகளுஞ் சுற்றெங்குந் தான்கண்டு
மிக்க கோபாலர் விருந்தா வனந்தன்னைத்
தக்க அமரர் தலம்போலச் சோடித்து
நாடற் கரிதான நந்தனையும் மக்களையும்
கூடக் கொண்டங்கே குடிபுகுந்தா ரம்மானை
எத்தே வதைக்கு மின்பமுட [1]னுசரித்து
மத்தை யலங்கரித்து மருளியை யாசரித்துக்
கோவுங் [2]குளுக்கன்றுங் கொண்டங்கே தான்மேய்த்துத்
தேவுந் திருவுஞ் [3]சிறந்திருந்தா ரம்மானை
அவ்வாறு கேட்டு அக்கஞ்சன் [4]செய்யும்வகை
எவ்வாறென் றெண்ணி யிடருற் றிருக்கையிலே
துட்டரி லுள்ளோர் சுகந்தன் விகந்தனென்பார்
இட்டமுடன் வணங்கி 'ஏதுபணி'யென்று நின்றார்
அத்தகமை யாக அசோதையிடத் தேயிருக்க
வித்தகனைக் கொல்ல விடைகொடுத்தா ரம்மானை
ஆலமெனப் பொங்கியவர் ஆய்ப்பாடி யிற்புகுந்து
கோல விளவுங் குளுக்கன்றுந் தானாகி
வண்டுளப மாயன் வரவுபார்த் தங்கிருந்தார்
கண்டு திருவுளத்திற் கண்ணனுமங் [5]கேதுசெய்தான்
மன்னும்மா வெல்லாம் வயின்நிரம்பத் தான்மேய்த்துத்
துன்னுநீ ரூட்டிச் சுனைதனிலே தான்[6]கிடத்தி
அங்கதன் கன்றுகளை [7]அந்தப் பசுக்களிலே
ஓங்கு மணிநெடுமால் [8]ஊட்டுவித்தா ரம்மானை
பாலூட்டிப் பின்னை பசுக்கள்மேற் றன்கரத்தாற்
கோலூட்டி வைத்திருந்தான் கோலக் குமரருடன்
வென்றிவரு மைந்தர் விளங்காய் நிறைந்திருப்பக்
கண்டுகரங் கூப்பிக் கண்ணனுக்குக் காட்டிடவே
பார்த்துக் [9]கறுவிப் பயல்களைக் கையமர்த்தி
வேற்றுக்கண் டொன்றுகண்டு [10]மிக்கதனைக் கால்வாரிக்
கன்றைச் சுழற்றிக் கனவிளவின் மேலெறிய
ஒன்றைக்கண் டொன்றுபோய் [11]ஊரில் விழுந்ததுகாண்

1. ஆதரித்து (ஸ்ரீ)
2. குளக்கன்று (த)
3. சென்றிருந்தார் (த)
4. செப்பும்வகை (ஸ்ரீ)
5. ஏதுரைப்பான் (ஸ்ரீ)
6. குழிர்த்து ஸ்ரீ))
7. ஆய்ந்த (த)
8. ஊட்டினர்காண் (த-ஸ்ரீ)
9. வெருவி (ஸ்ரீ)
10. மிக்ககன்றை (த)
11. ஓடிந்து (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையா லெறிந்தளவிற் கன்று கனிவிழவே
மெய்யா லலறி விழுந்தபடி கண்டவர்கள்
அங்கோடி நந்த னசோதைக்குச் சொல்பளவில்
இங்கோடி வந்தங் கிருவரையுந் தானெடுத்து
"அவ்வூர் குடியிருந்தோ மஞ்சி யசுரருக்காய்
இவ்வூர் குடியிருந்தோ மிங்குமவர் வந்தமையால்
எங்கே யொளிப்போ"மென் றேங்கி யிருக்கையிலே
[1]கொங்கோதி மாதர்களும் கோன்களும் வந்துகண்டு
"உன்மக்க ளுக்கு முமக்குமொரு நேர்த்தியுண்டோ?
வெம்மைப் பிணஞ்சுமந்து வேசற்றோம் நாங்க"ளென்று
ஆயரு மாய்ச்சியரு மைந்தாறு நாளாகப்
போயவர் தாம்சுமந்து போட்டுவந்தா ரம்மானை

## கலை கவர்ந்தமை

அன்புற்றுப் பாலர்களும் ஆய்ப்பாடி ஆயர்களும்
இன்புற்று வாழ்ந்தங் கிருக்கின்ற நாளையிலே
கொந்து [2]திரண்டகுழற் கன்னிமா ரெல்லோரும்
[3]பந்து கழங்கும் பாவையுந் தானுடி
வாரைப் பொருத வனமுலையா ரெல்லோரும்
சேரச் சுனையாடச் சென்றார்கா ணம்மானை
வண்டரவஞ் செய்யும் மலர்க்கமலப் பொய்கையிலே
கண்டார்வஞ் செய்துவந்த கன்னியர்க ளெல்லோரும்
வாய்ந்த பணியும் மணிமே கலைதனையும்
காந்த ளனைய கரத்தாற் களைந்துவைத்துக்
கூந்தல் நனையக் குளித்துவிளை யாடலுற்றார்
கோதையர்க ளெல்லாங் குளத்திற் குளிப்பதனை
ஆதி புருடன் அறிந்தங்கே தான்சென்று
ஆரு மறியா தவர்கள்கலை யத்தனையும்
வாரியொரு புன்னை மரத்திலே தானேற்றிப்
பற்றி யவர்மருளப் பார்த்துப் புருவத்தால்
எற்றிமுன்னம் பாய்ந்தங் கிருந்தார்கா ணம்மானை
சாவ நுதல்நிமிரத் தாமரைக் கண்களினால்
காவலனைப் பார்த்துக் கன்னியர்க ளேதுசொல்வார்

1. கொங்கைகொதி (த)
2. நிறைந்த (த)
3. பந்துங் குணவழமும் போர்வையுங் கொண்டோடி (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உத்தமனே யுன்றனக்கு உள்ளஞ்சி நாங்கள்வந்தோம்
இத்தகைமை தன்னைநீ [1]எப்படித்தான் கண்டனையோ
என்னென் கலைகொண் எமைப்பங்கம் கொண்டமட்டும்
கண்ணனே போதுங் கலைதந் தருளு"மென்ன
சீதக் கமலச் செழுந்தா மரைக்கயத்திற்
கோதையர்க ளெல்லாங் குளித்தங்கு நிற்பளவில்
"ஒருநீர் கேளீர் ஒருத்திதனை யின்றெனக்குக்
காதலியாய்த் தந்து கலைவாங்கிக் கொள்ளு"மென்றார்
ஒண்ணுதலா ரெல்லாரும் ஒருத்தி தனைநோக்கிக்
*"கண்ணனைச் சேர்ந்து கலைவாங்கித் தந்திட்டால்
[2]உற்றபணி கேட் டுனக்கேவல் செய்திடுவோம்
பொற்றொடியே" யென்னப் புரிகுழலு மேதுசொல்வாள்
"எங்கோன் கருத்தி லியான்பெற்றால் [3]வேண்டாளோ
மங்கையரே" யென்ன மறுத்தொருத்தி யென்னசொல்வாள்
"முத்து நகையார்நா முன்னூற் [4]றொருபதின்மர்
ஒத்த பகைவ னொருவனுக்குத் தானஞ்சிப்
[5]பங்கங் கெடாதே பலகலையும் நான்தருவேன்
[6]கொந்து குழலீர் குளியு" மெனக்குளித்தார்
காவிக்கண் ணார்குளிக்கக் காவலனு மக்கலையை
வாவிக் கரையில்நிற்கும் வன்னி மரத்தில்வைத்து
[7]ஓடைமலர்க் கண்ணார் ஒருவர்க் கொருவருமாய்
ஆடவராய்ப் [8]புல்கிவிளை யாடினர்கா ணம்மானை
நீராடல் செய்தருளி நேரிழையார் தங்களுடை
வாராடுங் கொங்கைதனை மார்பாற் றிளைப்பித்து
மேகலையு மீய்ந்து விடுத்தான் விறல்நெடுமால்
பாகனைய சொல்லார் பன்னீர் குடைந்தாடி
'உற்றுநாம் நோற்ற துடனே பலித்த'தென்று
மற்று நெடுமாலை வாழ்த்தியவர் போகலுற்றார்
அன்னமா ரெல்லா மசோதையிடத் தேசென்று
‡"கன்னிமா ரெல்லாங் கானகமிடத் தேசென்று
பன்னீர் மடவார் [9]பரிவாய்க் குளிக்கையிலே

1. எப்படியே (த)
2. உன்பணி (த)
3. வென்றாளோ (த)
4. அறுபதுபேர் (த-ஸ்ரீ)
5. பந்தங்கொடாதே (த)
6. கொங்கை மடவீர் (ஸ்ரீ)
7. ஓடையிடை மடவார் (த-ஸ்ரீ)
8. புக்கி (த)
9. பன்னீர் (த-ஸ்ரீ)

* இந்த ஒருவரி ஸ்ரீ, த-பிரதிகளில் இல்லாதது

‡ ஸ்ரீ-த-பிரதிகளில் மட்டுமுள்ள ஒருவரி

மங்கையர் கூறையெல்லாம் வாரியெடுத் [1]துன்மதலை
பங்கங் கொளவிட்டுப் பார்த்திருந்தாய் நீ"யென்று
கோட்டு முலைமடவார் கொடுமைகள் சொல்லையிலே
விட்டி லிருந்து வெளிப்பட்டான் வித்தகனும்
[2]தன்னிற் கலங்குகின்ற தாயரையும் மாமியையும்
கன்னித் தெரிவையர்கள் கண்டு [3]கலந்திருந்து
மன்னன் கலைகொண்ட வார்த்தையெல்லாம் பொய்யாக்கி
அன்னையுந் தாமும் அகம்புகுந்தா ரம்மானை
பூத்தா மரைக்கண் புருடோத் தமன்றனும்
தீர்த்தமு மாடித் [4]திருமுழுக்குஞ் செய்தருளி
[5]வேடை யகல மிக்கசுகந் தம்பூசி
ஆடை யுடுத்தி யழகா பரணமிட்டு
மாசொன்று மில்லா மரகத மாமலைபோற்
தாதொன்று செய்யநிறத் தாமரை பூத்தாற்போற்
கால்கரஞ் சென்னி கதிர்வதனந் தானிலங்கக்
கோலொன்று கொண்டு குழலும் பிடித்தருளிக்
கற்றுயர் [6]பாலருடன் காலிகளைத் தானோட்டி
உற்றான் தெருவே ஒளிநெடுமா லம்மானை
செங்கையில் வாங்கியதைச் செவ்வாயில் வைத்தருளித்
துங்க விரல்கள் துவாரத்தை யுற்றியற்றக்
கண்ணுந் திருநுதலுங் கண்ணூறு மேலேற
மண்ணு மலையும் மரங்களுங் கேட்டுநிற்பத்
*தூயோருங் கண்டு சோபமுற்றுக் கேட்டுநிற்ப
தீயாருங் கண்டு செவிமடுத்துக் கேட்டுநிற்ப
ஓயான் திருக்குழலை யூதிச்சென்றா னம்மானை

## காளிய நர்த்தனம்

ஆனிடைப் பிள்ளைகளு மாயனுமாய்ப் போகயிலே
கானிடை மாவிருடி கண்டிரங்கி யேதுரைப்பார்
புத்திசொல்லக் கேளாய் புரவலனே யிப்பொழுது
இத்திசையி லேகாதே யென்றார்கா ணம்மானை
அண்டிய பாதாழத் தப்புறத்து மாழமிது
உண்டு [7]பதினறு யோசனை சுற்றுமுண்டு
ஒன்பது யோசனையி னுச்சமுந் தானுடைத்து
மின்பயிலுந் தோளாய் விடநீர்த் [8]தடாகமது

---

1. உன்மகன்தான் (த)
2. தன்னருகாய் நின்ற (த,ஸ்ரீ)
3. கலன்தீர்த்து (த)
4. திருவமுதுஞ் (த)
5. போடையம் கட்டிப் புழுகாரம் பூச்சூட்டு (த) பேடையம் (ஸ்ரீ)
6. தம்முடனே (த)
7. பதினறு (த)
8. தடாகமுள (த)

* -ஸ்ரீ-த-பிரதிகளில் இல்லாத ஒருவரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குறையும் நாகத்துக் கஞ்சுதலை நஞ்சுமுண்டு
[1]பாங்கு பெறாத பணைக்கை யிரண்டுமுண்டு
மூக்காற் புகைபுகையும் [2]மூரிக் கொடியவிடம்
நாக்காலு மீளும் நயனமும் பத்துண்டு
கொடுமையுங் கூற்றொக்கும் கோபமே செய்வதல்லால்
கடிமையுங் காற்றொக்கும் காளியன் மற்றவன்பேர்
அவ்வா றுறைவ னவடமன்றி மற்றுமுள்ள
[3]எவ்வாறு போகவென்ன ஏகினான் மாமுனிவன்
கண்ணனுங் கண்சிவந்து காளியன்மேற் [4]போகவுன்னித்
துண்ணென் றெழக்கண்டு சூழ்ந்துநின்ற மற்றாயர்
"நீடுபாம் பண்டையிலே [5]நீர்போகில் நாங்களெல்லாம்
வீடுபோ" மென்று விலக்கிவைத்த வேளையிலே
எச்சிநீர் விட்டு எழிற்பசுவுங் கன்றுகளும்
நச்சுநீர்ப் பொய்கைதனை நாடினர்கா ணம்மானை
[6]காலிகள் கைகடக்கக் கண்டுநின்ற கோபாலர்
மாலியல் பாதத்தில் வந்தித் துரைத்தார்கள்
ஆவினஞ் சேர அருங்கயத்தில் மாளாமல்
மேவி யொருநொடியில் மீள்விப்பே னென்றுசொல்லி
அன்று பசுமேய்த்த ஆயரெல்லா [7]மங்குநிற்ப
சென்று பசுவைத் திருப்பிவிட்டங் கேதுசெய்வான்
*அப்போது மாயன் ஆயாங் குழலெடுத்து
ஒப்பாக வேயேற்றி யூதினர்கா ணம்மானை
அவ்வோசை கேட்டு ஆவினங்கள் போயினபின்
செவ்வாய் மணிவண்ணன் திக்கெங்குந் தான்பார்த்துக்
காதிற் சமர்விளைக்குங் காளியனைத் தான்தேடிச்
சோதித்து வாவிதன்னைச் சுற்றிக் கரையில்வந்து
வான்கடம்பின் மீதேறி வாய்விட் டலைக்காட்டிக்
கோன்கடம்பி னின்று குதித்தான் குளந்தளம்பப்
பாதம்பா தாளமுறப் பாம்பின் றலைமிதித்து
மாதம்ப மாயன் வளர்ந்துநின்றா னம்மானை
தேங்கு கடலிற் [8]செல்லமெள்ள வந்துதித்த
ஓங்கு கருமுகிலை யொத்தான்கா ணம்மானை

---

1. பங்குபரு பரிசு பணைக்கியிறு போன்றவரு (ஸ்ரீ)
2. மூரிக் கொடுவிடமே (த)
3. எவ்வாறும் போகென் றியம்பினார் மாமுனியும் (த)
4. செல்லவுன்னி (த)
5. நீ போனால் (த–ஸ்ரீ)
6. காலிதிகைகெடவே (த)
7. அங்கிருக்க (த)
* நான்குவரிகள் மாத்திரம்–ஸ்ரீ–த–பிரதிகளில் உள்ளவை
8. செல்பளவில் வந்தழித்த (த)
சாப்புடன் தோன்றுகின்ற (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ண விழிகள் வடவைபோல் நின்றெரிய
கண்ணன் தனைப்பிடித்துக் காளியனு மேதுசொல்வான்
"தேவர்கோன் தானுந் திரிமூர்த்தி கள்தானும்
யாவரு [1]மென்நகர்க்கு எய்தப் பயப்படுவார்
நீரிற் றடாகத்தில் நின்விதியால் வந்தவுன்னை
பேருரி யானறியப் பேசெ"ன்று னம்மானை
"ஆய்ப்பாடி யாளு மசோதையும் நந்தனுமாய்
வாய்ப்பாகப் பெற்றெடுத்த மகன்கிருட்ண னென்பேர்கா ண்
உய்வையே யாமாகில் [2]உயிர்தந்த லல்லாதிப்
பொய்கையை விட்டகலப் போ"வென்று னம்மானை
"உன்னைப் பெரிதாக உன்னுடனே நான்பொருதால்
என்னைச் சிறிதாக [3]என்னினத்தார் ஏசாரோ?"
தாக்கினன் [4]மாயவனைச் சங்கரன்தான் பார்த்ததுபோல்
நோக்கினன் நோக்கில் நுண்பொடியாய்ச் செய்வனென்று
பூத்தாம ரைக்கண் புயலை விடவிழியாற்
பார்த்தானப் பார்வை பலித்ததில்லை யம்மானை
கண்பார்வை கெட்டழியக் காளியனுங் கோபமுற்று
விண்பாயு மக்கினிபோல் வெவ்விடத்தைக் கொப்பளித்துப்
பையும் விரித்துப் பலமுகமும் நஞ்சுமிழ்ந்து
செய்யும் பொறிதனையுஞ் செய்து சினமிகுந்து
வாவென் றடர்ந்து மலைபோலே வாயைந்து
ஆவென்று கௌவினன் ஐநான்கு பல்லுமுறக்
காளியன் செய்த கடும்பூச லைக்கண்டு
மீளவுங் கண்சிவந்து வேகத்துடன் கலந்து
சருலச் சருவியும் சண்டையிடச் சண்டையிட்டும்
ஒருவர்க் கொருவர் உருத்தால் நெருங்குண்டும்
குத்தினற் குத்தியும் கோள்விளைத்தாற் கோள்விளைத்தும்
மெத்தினல் மெத்தியும் மேலென்றால் மேலென்றும்
வெங்கூற் றிரண்டென்ன வேலையிரண் டுற்றதெனப்
பொங்கு மலையிரண்டும் போந்து பொருததென்ன
நாவளைக்கிற் றீவிளைக்கும் [5]நஞ்சுமிழி லமிர்தமிடும்
வால்வளைக்கிற் கால்வளைக்கும் மழையிறைக்கிற் றீயிறைக்கும்

1. என்னியற்கை (த)
2. உற்றெதிரே வல்லாது (த)
3. எண்ணுரோ தேர்வேந்தர் (ஸ்ரீ,த)
4. மன்மதனை (ஸ்ரீ,த)
5. நஞ்சுகக்கில் அமிர்தங்கக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து கரியோனுங் காளியனு மம்மடுவில்
சலந்தனிலே நின்று தலைப்பட்டப் பூசலிலே
மீனெல்லாஞ் செத்து மிதந்ததுகா ணம்மானை
வானெல்லாந் தேவர் மயங்கிவிழுந் தோடியபின்
மாக்கமலம் பூத்த மரகத மாமலையை
யூக்கி யிருள்சூழ்ந்து உகமைபெற்று நின்றதுபோல்
செல்வன் [1]பதமுந் திருமுடியு மீருக
சொல்லுங் கரும்பாம்பு சுற்றிநின்ற தம்மானை
[2]இத்தகைமை தன்னில் எழிலுடைய கோபாலர்
அத்தன் தனக்கிரங்கி ஆய்ப்பாடி யிற்புகுந்து
மின்னுழி மாயன் [3]விடநீரிற் புக்கதனைச்
சொன்னு ரசோதை செவிகள் சுறுக்கெனவே
நச்சுத் [4]தடாகமதில் நம்பி புகுந்ததனை
அச்சத்தால் நந்தன் அசோதையுந் தான்கேட்டுக்
கையால் வயிறலைத்துக் கண்சுழன்று [5]கால்சோர்ந்து
மெய்யா லுயிர்த்து [6]விழுந்தழுதா ரம்மானை
ஆயரு மாய்ச்சியரு மங்கவர்கள் கன்னியருந்
தூய வசோதை துணையடியி லேவிழுந்து
கஞ்சத் தடமலர்க்கைக் கண்ணனிப்போ [7]வந்திலனேல்
[8]நஞ்சுத் தடாகத்தில் நாமும்போய் வீழ்வதென்று
எண்ணி யசோதையுட னெல்லோரு [9]மொப்பித்துக்
கண்ணனை நாடியவர் காட்டகத்தே செல்பளவிற்
போத வமர்விளைத்துப் பொன்னுழி மாயனுடைப்
பாத மிரண்டும் பணைத்தோள் சுமந்துநிற்கக்
கோளரவிற் சுற்றுண்ட கொற்றவனு மேதுசெய்தான்
வாளரவின் நஞ்சை வலக்கையாற் முன்பிடித்துக்
கண்டத்தில் நின்று கதிர்வால் தனையுருவ
விண்டற்றுச் சுற்றெல்லாம் விட்டதுகா ணம்மானை
உற்றதின் வாலை யொருகையாற் றுனுருவி
மற்றொரு கையால் வாங்கியதை வாயில்வைத்து
வாவியிற் புள்ளும் [10]வான்தேவ ரும்மகிழ
ஓவியக் கூத்தினையு ம்பரெல்லாங் கண்டுவப்பப்

---

1. தனது (த)
2. இத்தனந் தன்னில் (த)
   இத்தலந் தன்னில் (ஸ்ரீ)
3. விடநீர்த்தடாகத்தில் )த)
4. தடாகத்தில் (த)
5. காலோய்ந்து (த,ஸ்ரீ)
6. விழுந்தயர்ந்தார் (த)
7. வந்திலனுல் (த)
8. நச்ச (த)
9. மாய்க்கூடி (ஸ்ரீ)
10. வனதெய்வமும் மகிழ (த,ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடினான் வாயில்வைத்துப் பைங்குழலின் இன்னிசையை
ஆடினான் மாயன் அரவின் படமொதுங்கக்
காது படமெரியக் காளியன் சென்னியிலே
ஆதி புருடன்கூத் தாடினன்கா ணம்மானை
கோபமுற்றுக் கோமானுங் கூத்தாட [1]வேபயந்து
சோகமுற்றுக் காளியனுந் துஞ்சிக் கலங்குவதைக்
கண்டங் கவன்தேவி [2]கன்னிபார்த் தங்குரைப்பாள்
"அண்டங்க ளுண்டுமிழ்ந்த [3]ஐயனை மாதவனை
வள்ளலை மாயவனை வானவர்கள் நாயகனை
உள்ளறி யாதே [4]யுத்தம் பலவிளைத்தாய்
*தோராத உன்னுயிரைத் தோத்திரஞ்செய்" யென்று சொன்னா ள்
[5]காரார் மேனியனைக் காளியனு முள்ளறிந்து
‡வாராழி யிற்றுயிலும் மால்தா னெனவுணர்ந்து
போத மனநடுங்கிப் போற்றிப் புகழ்ந்தேற்றிப்
பாதம் பணிந்து பலமுகமாய்த் தான்துதித்தான்
"என்னு லறியா தியான்செய்த குற்றமெல்லாம்
பொன்னாழி மாலே [6]பொறுத்தருள வேண்டு"மென்றான்
ஐயனுங் காளியனை "யஞ்சலஞ்ச" லென்றருளிப்
பய்ய அவனும் [7]படத்தில்நின்று தான்குதித்துப்
பொய்கைக் கரையேறி பூங்கடம்பின் [8]மீதுநின்று
கைகட்டி முன்னின்ற காளியனைப் பார்த்து ரைப்பான்
"ஆயரு மாய்ச்சியரு மங்கவரு மிங்கிருக்க
நீயும்நின் இல்லாளும் நின்கிளைஞ ருள்ளாரும்
நன்னீர்த் தடாகத்தில் நஞ்சுதனை யுட்கொண்டு
உன்னூர் புகு"தெனவே [9]உள்நடுங்கி யேதுசொல்வான்
"நீர்முனிய வேண்டாம் நெடியோனே யித்தடத்தில்
மாமுனிவன் சாபத்தால் வாழான் மகாகெருடன்
†ஆகையினால் நானும் அருஞ்சுனையில் வாழுகிறேன்
போகா திருந்தாற் பிழைப்பேன் திருமாலே
இவ்வாவி தன்னைவிட்டு ஏகினால் இப்பொழுது
செவ்வாய்க் கருடனென்பான் தின்றிடுவா"
னென்றுசொன்னான்

---

1. வேதியங்கி (த,ஸ்ரீ)
2. கன்னிபத்தை (த)
3. அண்ணலை (ஸ்ரீ)
4. உயிர்த்தம் (த)
5. காராணே (த)
6. பொறுமென்று தெண்டமிட்டான் (த,ஸ்ரீ)
7. படத்தாலே (த)
8. கீழிருந்து (ஸ்ரீ,த)
9. உளம் மகிழ்ந்து (த,ஸ்ரீ)

* ஸ்ரீ.த-பிரதிகளில் மாத்திரம் உள்ளவரி
† ஸ்ரீ-த-பிரதிகளில் மாத்திரம் உள்ளவரிகள்
‡ -ஸ்ரீ-த-பிரதிகளில் இல்லாதவரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்டான [1]நீண்முடியி லுற்ற திருவடியைக்
[2]கண்டா லணுகான் கருடனெ"ன்று னம்மானை
[3]"செய்கை பொறு"மென்னத் தெண்டனிட்டுக் காளியனும்
பொய்கை தனைவிட்டுப் போயினன்கா ணம்மானை
காரிட்ட மெய்யனுக்குக் காளிய மர்த்தனென்று
பேரிட்டுத் தேவர்களும் பெய்தார்கள் புட்பமழை
காளியனைப் போகவிட்டுக் காளிய மர்த்தனென்பான்
தூளியுஞ் சேறும் துலைப்பட்ட மேனியுடன்
தன்தாயும் ஆயர் சனமுந் தனைத்தேடி
வந்தார் பெருமான் மயங்கினர்கா ணம்மானை
கண்ணுறு பாயக் கரங்கள்தலை மேல்வைத்துப்
பண்ணார் மொழியாரும் பாலர்களு மாயர்களும்
நன்னகரி லுள்ளோரும் நந்த னசோதையுமாய்ப்
பன்னகந் தன்னைவென்ற பரமன் தனைக்கண்டு
செங்கமலத் தாளும் [4]திருமுடியுந் தோன்றாமல்
தங்கள் கரத்தாற் றழுவினர்கா ணம்மானை
செம்மல் திருவுடலிற் றீங்கில்லை யென்றறிந்து
[5]தன்மனை தன்னில் தமரோடும் போய்ப்புகுந்து
[6]நல்லானைப் போற்றி நடுக்கமுந் தான்தீர்ந்து
எல்லாரு மின்புற் றிருந்தனர்கா ணம்மானை

## கூத்தரைக் கொல்லுதல்

அத்தனையிற் கஞ்சன் அவையெல்லாந் தான்கேட்டு
எத்தனையந் துக்கித் திருந்தான்கா ணம்மானை
துன்ப [7]நினைந்துகஞ்சன் துக்கித் திருக்கையிலே
ஒன்ப தசுரர் ஒருமிக்க வந்துகண்டார்
கால்கை யுடைய கனவரைபோல் நின்றவரை
வேல்கை யுடைய விறற்கஞ்ச னேதுசொல்வான்
"இன்றுதா னீங்க ளிடைநந்த கோன்மகனைக்
கொன்றுதான் தாரு"மென்று கொற்றவனுங் கூறலுற்றான்
வாய்ப்பாடி வல்லசுரர் வந்துகூத் தாடிகளாய்
ஆய்ப்பாடி [8]யெல்லையிலே ஆலடியில் வீற்றிருந்தார்
அவ்வா றறிந்து அசோதை திருமகனும்
செவ்வாய் முகத்திற் றிருக்குறிப்புக் கொண்டருளிக்

---

1. உன்முடியில் (த,ஸ்ரீ)
2. கண்டால் கெருடன் கருவானென வுரைத்தான் (த)
3. செய்கை பெறுவென்று (த)
4. செகமுடியும் (த)
5. தம்மனை (த)
6. நல்வரவைப்பற்றிய (த)
7. கிளர்ந்து (த)
8. தன்னில் ஒரு (ஸ்ரீ) தன்னருதே (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலிதனை மேயவிட்டுக் கையிற் றடியூன்றி
ஆல நிழலி னருகுவந்தா ரம்மானை
[1]கூற்றென்னப் பார்த்தவனைக் கூத்தரு மேதுசொல்வார்
[2]"பார்த்தெம்மைக் கூத்துநீர் பாற்பசுக்க ளீயுதியோ
அல்லாது நாங்காண [3]ஆடுதியோ?" வென்றுரைத்தார்
"சொல்லா" யெனவினவத் தூயோனு மேதுசொல்வான்
"கூலிக்கு மேய்ப்பேன் கொடுக்கப் பசுவுமில்லை
ஆலித்துக் கூத்துமக்கு ஆடுகிறேன் பாரு"மென்றான்
குஞ்சி முடித்துக் குதம்பையுங் காதிலிட்டு
அஞ்சன மிட்டு அரக்காம்பல் மாலையிட்டுக்
குங்குமத் தாலே கொழுந்துபட நாமமிட்டுச்
செங்களபச் சேருடிச் சேலையுந் தானுடுத்தி
வண்டினங்கள் தான்பாட மந்தியினங் கைகொட்ட
அண்டியவர் காண ஆடினன்கா ணம்மானை
*மால்வரைத் தோளேந்து மற்றவர்கள் கண்காண
நால்வகைக் கூத்தும் நடித்தான்கா ணம்மானை
*[4]ஒற்றை நடமாடி ஒன்பது கூத்தரையும்
*கொற்றத் திருமால் கொன்றான்கா ணம்மானை
படமாடும் பாம்பணையிற் பள்ளிகொள்ளும் பச்சைவண்ணன்
குடமாடி மற்றவரைக் கொன்றான்கா ணம்மானை
பாங்கி லசுரரெல்லாம் பண்டையுருக் கைகூடி
[5]ஓங்க லெனவலறி ஒன்பதுபே ரும்விழுந்தார்
ஆடி யசுரர்தனை யச்சுதனுங் கொன்றதனை
ஓடி யொருதன் னூர்தனிலே சொல்லலுற்றான்
நந்த னசோதையர்கள் நாயகனைக் கைக்கொண்டார்
அந்த நகரிலுள்ளோ ராண்பெண்ணும் வந்துகண்டு
"கொண்டான் நெடுமால் கொலையுண்டார் வல்லசுரர்
நன்றாய்ப் பிணஞ்சுமந்து நாமுங் கழுத்தொடிந்தோம்"
[6]என்று நெடுநாளாய் எல்லோரு மாய்ச்சுமந்து
சென்று முழுகிமனை சேர்ந்திருந்தா ரம்மானை

---

1. கூத்தரும் பார்த்தவனைக் கூத்தறுத்தங் கேதுசொல்வார் (த)
   கூத்தரும் பார்ததுக் கூற்றுவனுக் கேதுரைப்பார் (ஸ்ரீ)
2. பார்த்தெமது (த)
3. ஆடிக் கொள்ளுதியோ (த)
4. உற்ற (த)
* இவ்வரிகள்—ஸ்ரீ-பிரதியில் இல்லாதவை
5. ஓங்கியலறி உள்ளயர்ந்து தான்விழுந்தார் (த,ஸ்ரீ)
6. எட்டுநெடுநாளாய் (த,ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோவர்த்தன மலையைக் குடையாய்ப் பிடித்தமை

துன்பங் களைந்து [1]தொறுப்பாடி யாயரெல்லாம்
இன்பஞ் செருக்கி யிருக்கின்ற நாளையிலே
வண்மை யுடைய வசந்த [2]மதிதனிலே
உண்மை யிடையரெலா முச்சாகத் தேதுசெய்தார்
திக்குள்ள தேவர்கட்குந் தெய்வேந் திரன்றனக்கும்
தக்க விழாவெடுக்கச் சம்மதித்தா ரம்மானை
மன்னுதா மோதரனும் மற்றவரைத் தான்தடுத்துத்
"துன்னுமா டாடு துயரற்றுப் [3]பல்குதற்கு
மாற்றங்கள் கேளும் வனதே [4]வதைகளையும்
ஆற்றங் கரையி லணங்கையு மாசரித்துக்
குமார கிரியென்னுங் குன்றடியிற் பொங்கலிட்டுத்
தாமாகப் பாலுந் தயிர்க்குடமும் நெய்க்குடமுங்
கண்டு கதலிகளும் கரும்பிள நீர்வகையுங்
கொண்டு மலைபோற் குவித்துநாம் பார்த்திருந்தால்
சண்ட வடிவுகொண்ட சற்புத் திரதெய்வம்
உண்டதனை யெல்லா முறைந்தங்கே வீற்றிருக்கும்
அண்டர் களும்வாரர் அசுரர் களும்வாரார்
பெண்டு களும்நீரும் பிணஞ்சுமக்கத் தேவையில்லை
என்று னெழில்வண்ணன் எல்லாரு [5]மோர்மொழியாய்ச்
சென்று ரிடையர் சிறப்பெடுத்தா ரம்மானை
பாற்போ னகமும் பருப்பும் பொரிசுறியும்
நீர்பாற் குடமும் நெய்யும் தயிர்க்குடமும்
அப்பக் குடமும் அவலும் [6]பயறுகளும்
[7]எப்பதியி லுள்ள இளநீரும் வான்கரும்பும்
நல்ல வரிக்கை நாகமுயர் மாங்கனியும்
வெல்லமும் மிக்க மிடாச்சோறும் பாலமுதும்
[8]வட்ட மிலங்குகின்ற வண்டிலின் மேற்பொதிந்துக்
கொட்டு முழக்குடனே குமார கிரியணைந்து
அந்த மலைக்கீ ழழகான பந்தலிட்டுத்
தந்தர் பசுக்கறந்து தண்பாலிற் பொங்கலிட்டுப்

---

1. தொல்பாடி (ஶ்ரீ)
2. மாதந்தனிலே (த)
3. பெருகுதற்கு (த)
4. வனதே வதைகளுக்கும் (ஶ்ரீ)
5. கேட்டிருந்து (த)
6. அருந்தேனும் (ஶ்ரீ)
7. எத்திசையில் (த)
8. மட்டுமிலக் கில்லாமல் மற்றுயர் தான்கூடி
கொட்டு முழங்கும் குமாரகிரியணைத்தும் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்க லமுதும் பொரிக்கறியும் போனகமும்
எங்கெங்கும் வந்தபொரு ளெல்லோருந் தான்குவித்து
மாற்றுக்குன் றெப்பான மன்றுடி [1]மார்களெல்லாம்
சோற்றுக் குன்றுகச் சொரிந்துவைத்துப் பார்த்திருந்தார்
மெய்த்தேவ தையாக விட்டுனுவே நீயுரைத்த
அத்தே வதையை அமுதுசெய்யு மென்றுரைத்தார்
இங்கு முருக்காட்டி இத்தனைபே ரோடுநின்று
அங்குமொரு [2]பெண்பூத மாகியவர் கண்காணப்
பற்றுமற் றுனுகப் பாருண்ட சீர்வயிற்றில்
துய்த்தான் திருநெடுமால் சோற்றுமலை யத்தனையும்
பூதமா யங்கிருந்து போசனம் பண்ணுகையிற்
பேதமா யங்கிருந்து பேராள னேதுரைப்பான்
இத்தே வதைபோ லிதற்குமுன்னே கொண்டாடும்
அத்தே வதைகளுண்டோ ஆயரே யென்றுரைத்தான்
கண்டறியோ மென்றுசொல்லிக் கனக்கப் பிரிசமுற்றுக்
கொண்டல் நிறத்தான் குரைகழற்கீழ்த் தான்பணிந்தார்
சிந்தா குலந்தீர்ந்து தேவதையை யாசரித்து
வந்தாய ரெல்லாம் மனைபுகுந்தா ரம்மானை
போய்ப்பாடி புக்கதன்பின் பொன்னகரிற் றேவரெல்லாம்
ஆய்ப்பாடி யாயர்பா லாவியுண்ண வந்தார்கள்
[3]ஊட்டம் பொலிய ஒருமித்துப் போனவரைக்
கூட்டிப்போய் நாரதனுங் கோமானைக் காண்பித்து
"உள்ளத் தனையும் உனக்கே விழாவெடுப்பார்
வள்ளலே நந்தன்மகன் வார்த்தை தனைக்கேட்டுப்
பூதத்தை யாசரித்துப் போனுரிடைய ரெல்லாம்"
பேதித்து இந்திரன்முன் பேசினுன் நாரதனும்
இந்திரனுங் கோபித் தெரிவிழித்தங் கேதுசொல்வான்
அந்தரத்தில் மேகமெல்லாம் அங்கே வரவழைத்து
[4]"திண்மாரி யண்டையிலே சிக்கென்று நீங்களெல்லாம்
கன்மாரி யாகக் கனவருசந் தன்னுலே

---

1. ஆயரெல்லாம் (த,ஸ்ரீ)
2. ஆண் (த)
3. ஊட்டம் போடாமல் ஒலிகுவிந்த தேவர்களை (ஸ்ரீ)
ஊட்டம் பொரும லொலிகுவித்துப் போனவரை (த)
4. சின்மாரி யண்டியிலே சிக்கென்று நீங்களெல்லாம்
கன்மாரி யாகக் கடாவுமென்று ரம்மானை (த,ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தனையும் மக்களையும் நம்மை யவமதித்த
அந்த விடையரையும் ஆய்ப்பாடி [1]மக்களையும்
சேரக் கரைத்துச் சில்லிருட்டா கப்பொழிந்து
வாரிக்குள் ளேயொதுக்கி வாறு"மென்றா னம்மானை
மெத்த [2]உருமெறிந்து மேகங்க ளத்தனையும்
[3]சத்தி புகுத்திச் சலமறுத்து மொண்டுகொண்டு
எங்கும் வளைந்துகொண்டு ஏகங் கறுப்பேறக்
கங்குல் விழுங்காட்டிற் காட்சிபெறச் சூழ்ந்துகொண்டு
கோபம் மிகுந்து குரைகடற்போ லேகொதித்துச்
சாபம் வளைத்துச் [4]சடசடன வேதாக்கி
அம்புயக் கண்ணனுடை ஆய்ப்பாடி யெல்லையிலே
தும்பிக்கை போலத் துளிகொண்ட தம்மானை
நாயகனை யப்போது நாரதனும் வந்துகண்டு
[5]"ஆயர் விழாவி லமுதுசெய்தா" யென்றுசொல்லி
இந்திரனுங் கோபித்து [6]இவ்வூரின் மேலே
[7]வந்தது காணிந்த மகாமேக முன்மேலே
[8]வல்லவகை செய்"யென்று மற்றவனை வற்புறுத்தி
நல்ல பதந்தொழுது நாரதனும் போனபின்பு
தங்கள் பசுக்களெல்லாம் தாமன் துரந்துகொண்டு
பொங்கு மனைக்கே போயிருந்தா னம்மானை
[9]காலிகளைத் தேடிக் கன்றினங்கள் பின்தொடர
வாலிய வேற்றினங்கள் வாலெடுத்துப் பாய்ந்தோடச்
சூரியனுந் தோன்றாமற் சூழ்ந்தங் கிருள்செறிந்து
[10]மாரி சொரிந்தருள மன்றாடி மக்களெலாம்
சேரத் திரண்டு "சீராமற் கோல"மென்றார்
ஆரத் திருமாலு மஞ்சலென்று கையமர்த்தி
"ஆபத் தினைவிட்டு [11]ஆடுமா டுங்குடியும்
கோவர்த் தனத்தடியிற் கொண்டுபோ"மென்றுசொல்லிக்
கச்சை புனைந்து [12]கனக்கப் பணிபுனைந்து
பச்சைத் துளாயும் பலமாலை யும்புனைந்து

---

1, யூர்தனையும் (ஸ்ரீ த)
2. இருள்செறிந்து (ஸ்ரீ,த)
3. சத்தி புகுத்திச் சலமெத்த உண்டுசென்று (த)
4. சடசடெனத் தானிடித்து (த)
5. ஆயருடை வேள்வியிலே (த,ஸ்ரீ)
6. இவ்வூரழிக்கவென்றான் (த,ஸ்ரீ)
7. வந்தது காந்தமென (த)
8. வல்லது (ஸ்ரீ,த)
9. காலி கனைத்தோட (த)
10. மாரி மிகுந்து மழைபொழிய ஆயரெல்லாம் (த,ஸ்ரீ)
11, ஆவத்தனை வெட்டோ டாடுமா டுங்குடியும (த)
அவ்விடத்தை விட்டு ஆவுங் குடிபொருளும் (த)
12. கதிர்வாள் வலத்தணிந்து (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காதிற் பணிபுனைந்து கனத்த [1]சவடிகட்டிக்
கோதித்த குங்குமத்தாற் கொழுந்துபட நாமமிட்டுக்
குன்று லெழில்படைத்த கோவர்த்த னத்தடியிற்
சென்றான் திறத்தோடு செங்கண்மா லம்மானை
எடுத்தான் மலையை யிடையரெல்லாங் கூத்தாடக்
கொடுத்தான் வலக்கை குடைக்காம்பு தானாக
மெய்கொண்ட தொன்று விசும்புற்று நின்றதுபோற்
கைக்கொண்டு குன்றைக் கவின்கையாற் றான்பிடித்தான்
ஏதெனவு மெண்ணு திடையரு மெல்லோரும்
கோதனமுந் தாமுங் குடியிருந்தா ரம்மானை
ஏரிக் கரையழிய எத்தலமும் நீர்சாய
வாரி வருவதுபோல் மழைவெள்ள [2]மீண்டதுவே
[3]ஓரோசனை யுயர்ந்து ஓரோ சனைபணிந்து
[4]வாரோ சனையான் வானேந்தி மாமலைபோல்
‡ஏறினான் மாயன் எடுத்தான் குடையாகக்
கூறினார் பல்லாண்டு கோபால மங்கையர்கள்
ஒருமலை மேலேறி ஒருமலையைத் தானெடுத்து
இருமலை போற்றோளில் ஏந்தினன்கா ணம்மானை
சேர்ந்தாய ரெல்லாருந் தெருவகுத்து வீடுகட்டி
வாய்ந்தொழுங்கை விட்டு வான்பதிபோல் வீற்றிருந்தார்
†மச்சு மணியரங்கும் வான்குன்றும் தான்வகுத்து
மெச்சவே புல்வேய்ந்து வெள்ளிப் புரிசைகட்டி
ஆலயங்கள் தானு மறச்சாலை யும்வகுத்துச்
சோலையும் வாவிகளும் சுற்றெங்குத் தான்வகுத்து
வாய்ந்த புகழ்புனையும் மாதவனைக் கைதொழுது
‖ஏந்து புகழுடைய இடையர்களு மேதுசொல்வார்
"மேய்ச்சலு மில்லை விறகுமில்லை" யென்றுசொன்னார்
‖ஆய்ச்சி முலையுண்ட ஆயனு மேதுசெய்தான்
உற்றெடுத்த குன்றை யுட்புறந் தானாக
மற்றெடுத்த தோளான் மாறிப் பிடிப்பளவில்

---

* இருவரிகள்—த—ஸ்ரீ—பிரதிகளில் மட்டுமுள்ளவை
1. கவசமிட்டு (ஸ்ரீ)
2. முட்டுதலும் (த)
3. ஓர்யோசனை (ஸ்ரீ)
4. வாரோ சனையாக வான்நந்தி மாமலையில் (த)
‡ இருவரிகள் மட்டும்-த—ஸ்ரீ—பிரதிகளில்உள்ளவை
† நான்கு வரிகள்—ஸ்ரீ—த—பிரதிகளில் மட்டுமுள்ளவை
‖ இருவரிகளும்—ஸ்ரீ—த—பிரதிகளில் இல்லாதவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]கற்றினமு மேய்ந்து கனவிறகு முண்டாகி
உற்றாய ரெல்லா முகந்திருந்தா ரம்மானை
குன்றால் மழைதடுப்பான் கோபால னேயெனவே
நன்றான மேகமெல்லாம் நாயகன்மேற் கோபமுற்று
மண்ணில் நுரைமிதப்ப மாக்கடல்போ லேபெருகித்
துண்ணென்ன மின்னித் துணுக்கென்னத் தானிடித்துக்
காற்றாய்ச் சுழித்தடித்துக் காரிருளாய்க் கால்விழுந்து
[2]ஆற்றா ரெவருமென்று அந்தரகா லம்பரப்பிக்
கொளுந்தாரை விட்டுக் [3]குமுறிவரு மேகமெல்லாம்
பொழிந்தாரை மாரி [4]புட்கரனு மேகம்வந்து
"நம்மை [5]மலைந்துநின்ற நந்தன் மகனிடையன்
தம்மை மலையாலே தாங்கொண்ணு வாருக
மன்மாரி யாய்ப்பொழிந்தும் [6]மாறாமல் மற்றவன்மேல்
கன்மாரி யாகக் கடாவுமென்று [7]சொல்லலுமே
கல்லெல்லாம் மொண்டு கவண்கொண்டு வீசுகைபோல்
[8]செல்லெல்லாம் கூடிச் சிதறினர்கா ணம்மானை
வில்லை வளைத்து [9]வியனுருவி னானேற்றிக்
கல்லை மிகுத்த கடுங்கணை தானாகக்
கோவர்த் தனமே குறிப்பாய்ப் பொழிதலுமே
ஏவற் றனிமேக மேந்திநின்ற தம்மானை
ஏழுநா ளாக இரவுபக லோயாமல்
வாழுமா மேகம் [10]வருசித்த தம்மானை
நாணி மிகுகோச நாதனெனு மோர்மேகம்
விணிலே மாயாதே வேந்தன்பால் வாருமென்று
இம்மேக வண்ணனைவிட் டிந்திரற்குப் போயுரைக்க
அம்மேக மெல்லா மணைந்ததுகா ணம்மானை
விட்டு வெளியாக மேகமெல்லாம் போனபின்பு
மட்டு மலர்தூவி வானோர்கள் வந்துகண்டு
கோவர்த் தனமெடுத்துக் கோதனத்தைக் காத்தமையாற்
கோவர்த் தனனென்றும் கோவிந்த நாதனென்றும்

---

1. கன்றனமும் (ஶ்ரீ)
2. ஆற்றார்க ளாகுமென்று (த)
3. குமீரென்ன (த)
4. புகுந்துநல்ல வல்லபமாய் (ஶ்ரீ)
5. மறந்து (த,ஶ்ரீ)
6. மாமலைபோல் நின்றவனை
7. சொல்ல லுற்றார் (ஶ்ரீ)
8. சொல்லெல்லாம் (ஶ்ரீ)
9. விசையுருவி (ஶ்ரீ)
10. மழைபொழிந்த தம்மானை (ஶ்ரீ,த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]பேரிட்டுப் பூமாரி பெய்தா ரிமையோரும்
காரிட்ட [2]மெய்யானுங் கைக்குடையை வைத்தருளி
அந்தாயர் தம்மையெல்லா மப்பதியே போகவிட்டு
மந்தார நீழல் மணிப்பாறை மீதிருந்தான்
*ஓடியே மேகமெல்லாம் ஒருமுகமாய்த் தான்கூடி
நாடிமிகு கோபமுற்று நாயகனை வந்துகண்டு
[3]மண்பணியா மேகங்கள் வானவர்கோ னைத்தொழுது
"உன்பணியால் நாங்கள்சென்று உன்சத்து வத்தாலே
†நாண்ஒலி போல நடுங்கி மிகமுழங்கி
வீணிலே வந்தோம் வேந்தனே' யென்றுசொல்லித்
"துன்றி யிரவுபகல் தோன்ரு தெழுதினமும்
கன்றி மழைகள் கன்மாரி யாய்ச்சொரிந்தோம்
கோவர்த்தன ;கிரியைக் கொண்டொருவன் காத்துநின்ருன்
ஏவத்தால் நாணி யாங்களே மீண்டுவந்தோம்
இந்திரனே யந்த எழில்நந்த கோனிடையன்
மைந்த னுனக்கு மடங்கா" னெனவுரைத்தார்
காரணங்கள் சொல்பளவில் கண்ணுயிரத் தோனும்
"பாரா யினியெந்தன் பராக்கிரம" மென்றுசொல்லிச்
சோடு புனைந்து சுரர்சேனை தற்சூழ
கோடு முரசதிரக் கோதண்டங் கைக்கொண்டு
ஆயுதங்கள் சேமித் தயிரா பதமேறிப்
பாயும் பரியும் பலபவிசு முன்போக
நீடிய கோபமுடன் நீலவண்ணன் தன்மேலே
பாடியை நோக்கிப் படையெடுத்தா னம்மானை
"எங்கோன்மேற் செல்லுகின்ற இந்திரனை யிப்போதே
பொங்கோப யானையுடன் பொன்றுவிப்பே" னென்றுசொல்லி
உக்கிர வான்கெருடன் ஓடி வரஅவர்முன்
சக்கரமும் சங்கும் தனிவாளும் தண்டமுமாய்
மாயன்மேற் செல்லுகின்ற வாசவனைக் கொல்லவென்று
காயெரி போலக் கனன்றுவந்த தம்மானை

---

1. பேரிட்டுத் தெய்வர் பெய்தார்கள் புட்பமழை (த,ஸ்ரீ)
2. மேனியனும் (ஸ்ரீ)
* இருவரிகள்-ஸ்ரீ, த-பிரதிகளில் மட்டுமுள்ளவை
3. வின்பணியா மேகங்கள் விண்ணரசர் தாள்தொழுது (த,ஸ்ரீ)
† இருவரிகள் ஸ்ரீ-த-பிரதிகளில் மட்டும்முள்ளவை

பஞ்சா யுதமும் பறவைக் கரசனுமாய்
[1]நஞ்சா னதுவென்ன நடந்து வரக்கண்டு
விதறிப்போ மிந்திரனை வேதாவுந் தான்முனிந்து
"பதறிப் படையெழுந்து பாவிநீ கெட்டொழிந்தாய்
ஆயர் பதியிலெமை யாளுடையான் வீற்றிருந்தான்
நீயவனை யெண்ணுதே நிந்தித்தா" யென்றுசொல்லிக்
[2]"காய்ந்த கருடன் கண்ணன்பஞ் சாயுதமும்
சேர்ந்தா ருனையிப்போ தெண்டிக்கக் காரணமாய்
அண்ட முறப்பணிந்து அவரையே யாசரித்துத்
தெண்டங் கொடுத்துத் திரும்பிப்போ" வென்றுசொன்னார்
கையில் விரலொன்றுங் காதிலிரு குண்டலமும்
செய்ய முடியும் செருக்களத்தி லோடையமும்
அந்தணன் சொல்ல அறுத்தறுத்து முன்போட்டு
வந்த வழிநோக்கி வாசவனும் போய்ப்பிழைத்தான்
ஆர்த்த கெருடனுட னையன்பஞ் சாயுதமும்
சீற்றந் தெளிந்து திரும்பினர்கா ணம்மானை
என்னப் படையோடு மிந்திரனைப் போகவிட்டு
கன்னக் கமலக் கடவுளும் போனபின்பு
கோவர்த்த னமெடுத்த கோமானு மாயருமாய்
ஆபத் [3]தடையாம லாய்ப்பாடி யிலிருந்தார்

## குருந்தன் தேனுகன் வதம்

[4]காராரு மேனிக் கரியமால் செய்ததெல்லாம்
வாராழி சூழ்மதுரை மன்னனுக்குச் சொன்னார்கள்
கூத்தரைக் கொன்றதுவும் கோலவிழா வுண்டதுவும்
[5]ஏற்ற மலையை யெடுத்துமழை காத்ததுவும்
பேருலக மெங்கும் பெருவார்த்தை [6]தானுகச்
சீருலவு கஞ்சன் திகைத்தங் கிருக்கையிலே
சேர்ந்த குருந்தனுடன் தேனுகனென் பாரிருவர்
காந்து மனத்துடைய கஞ்சனை வந்துகண்டார்
தங்கள் மனமிடுக்குந் தத்துவமுந் தான்சொல்லி
எங்களை யங்கவர்மே லேவென்று ரம்மானை.

---

1. நஞ்சான தென்ன நடந்துவரத் தான்கண்டு (த)
2. வாய்ந்த கருடன் மற்றும்பஞ் சாயுதமும் (த-ஸ்ரீ)
3. ஆபத்தணுகாமல் (ஸ்ரீ)
   ஆதத்தணை யாமல் (த)
4. காரானை (த-ஸ்ரீ)
5. எடுத்து மலையை யேந்திமழை காத்ததுவும் (த)
6. தானுச்சு (த-ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சனுங் கேட்டுக் கனக்கப் பிரிசமுற்று
அஞ்சன வண்ணற் கடையாள முஞ்சொல்லி
ஏவினா னப்போ திருவரும் போய்ப்பாடி
மேவினார் பின்னை விளைந்ததுகே ளம்மானை
சோதித் தொருப்பாடி தொல்லுலகில் [1]வந்துநின்ற
மாதர்க் கணிவசந்தம் வந்ததுகா ணம்மானை
கான மலர்க்கூந்தற் [2]காரிகையா ரெல்லோரும்
[3]மான் குரவையிட்டு மங்கையர்க ளேதுசெய்வார்
[4]நீங்காத தேவதைக்கு நிறைபூசை பண்ணுவித்தும்
ஆங்காலம் வந்ததென்று ஆன முரசறைந்தும்
நன்னகரி சோடித்து நாளறிந்து காப்பணிந்து
தன்தனக்குத் தக்க சருவா பரணமிட்டுப்
[5]பந்துகள் வீக்கிப் பரிசனமெல் லாங்கண்டு
அன்ன நடையா [6]ரணியிழையார் போகயிலே
[7]முன்னந் தரித்து முகிழா தெடுத்துரைப்பார்
வாரணியுங் கொங்கையீர் மற்றெம்மைப் பூந்தடத்திற்
[8]கோரணி கொண்டவன்றன் கோயில் கடக்குமட்டும்
[9]பேசாமல் வாருமென்னப் பெய்வளையுந் தான்தடுத்துத்
தூசாரு மென்மருங்குல் சுந்தரியென் பாளுரைப்பாள்
எப்பணி பெற்றாலும் எம்மையவன் மேவுவனாய்
மைப்பயிலுங் [10]கண்ணாய் [11]மகப்பிர [12]சாதமென்று
பாயமுது பாலும் பருப்பும் பொரிகறியும்
நெய்யும் விளக்கும் நிறைகுடமும் கொண்டுசென்று
காந்த மலர்க்குழலாள் காமன்கோட் டம்புகுந்து
பந்துகளங் கம்மானை பாவையு மொப்பித்து
மல்லிகை பிட்சி மணமலர்கள் தான்சொரிந்து
மெல்லியர்களெல்லாரும் விளையாடும் வேளையத்தே
கோலம தாகக் குரவையு மாடுகின்ற
வால மடவாரை மாயன் புணர்வதற்கு
நற்கூட்டப் பிள்ளைகளும் நங்கையருங் காணாமல்

---

1. வாழ்கின்ற (த-ஸ்ரீ)
2. கன்னியர்கள் (த-ஸ்ரீ)
3. மான் குரவையாட மங்கையர்க ளெல்லோரும் (த)
4. நன்றான தேவதைக்கு நற்பூசை பண்ணுதற்கு (த)
5. பந்து விதானித்து (த)
6. ஆயிழையார் (த)
7. முன்னந் தடுத்து முகிளா சரியுரைப்பாள் (த)
8. கோரணி கொண்டகண்ணன் கோயில் புகுதமட்டும் (த)
9. பேசாமல் வாருமென்று ஆயிழையைத் தான்தடுத்து (த)
10. கண்ணாரே (த)
11. மகா (த)
12. சாதமென்றார் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்கூட்டக் கோயிலிலே [1]புக்கிருந்தா னம்மானை
காமனை யாசரித்துக் கந்திப் பதியென்பாள்
போய்மதன் கோயிலிலே புக்கிருந்தா ளம்மானை
அங்கவள் தன்னை யசோதை திருமகனும்
பொங்கப் புணர்ந்து புறம்விடுத்தா னம்மானை
வந்த அரம்பையரை மடந்தையர்கள் தான்பார்த்து
"இந்த [2]அபவயங்க ளெக்களித்து நின்றமையால்
மின்னுளி மெல்லியலீர் வேறிதற்கு ஐயமில்லை
பொன்னுழி மாயன் புணர்ந்தா" னெனவறிந்து
"ஒவ்வொருவர் கோயில்புக்க வொப்பல்ல" வென்றுசொல்லி
இவ்விருவ ராக இயங்கினர்கா ணம்மானை
வன்ன மடவார் மதனை [3]யடிதொழவே
நண்ணி யிருவருக்கும் நடுவே யிருள்படைத்து
இருவர்க் கிருவராய் இன்ப முறப்புணர்ந்து
பொருவற்ற கோயில் [4]போய்மீண்டா ரம்மானை
கொங்கை புளகமிடக் கோலவிழி பூசலிட
மங்கை யிருவர் வரக்கண்டு மாதுநல்லார்
வெற்றி மகாராசன் மெய்க்கதியில் வந்ததல்ல
மற்றிதுவும் நம்முடைய மாயன் நமக்கென்று
ஆன விஞ்ஞெதரியும் ஆனந்த சோதையுமாய்
வான மகளிரென மதன்கோயி லுள்விடுத்தார்
[5]மேதை யுறப்பணிந்து வெண்கோயில் போகின்ற
கோதையரைக் கண்டு குருந்தனுந் தேனுகனும்
அக்கன்னி மாரை அலைகடலிற் போகெறிந்து
பொய்க்கன்னி மாராய்ப் புகுந்தனர்கா ணம்மானை
தனங்கள் புளகமெழத் தார்குழல்கள் பின்தாள
அனங்க னருகே யவர்வந்தா ரம்மானை
மாய மடவராய் வல்லசுரர் வாறதனை
ஆயர் பெருமா னறிந்துகொண்டங் கேதுசெய்வான்
'நற்றியே நான்விரும்பு நன்னுதலீ ரிப்பொழுது
உற்று இருவோரு மொருக்காலே வந்துபுக்கீர்

1. புக்கிநின்றா ரம்மானை (த)
2. அபயங்க ளெப்பளித்து (ஸ்ரீ)
எம்வளித்து (த)
3. தொழற்கே (த)
4. புறப்பட்டா ரம்மானை (த)
5. மேதை யுறக்கண்டு மென்கோயில் போகின்ற (த,ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவீ ரொருவரா யுற்றணைந்து மேவுவிரோ
இருவரு மேவுவிரோ ஏதுமக்கு வெண்ண''மென்றான்
''ஒருவராய்ப் புல்க ஒருவர் தரி யோ''மெனவே
இருவருமாய்ப் புல்க ஈண்டவன் மேல்விழுந்து
மோகம் விளைப்பவர்போல் முன்னையும் பின்னையும்
ஆகந் தழுவவவர் ஆர்ப்பரித்தா ரம்மானை
முன்பாற் குருந்துசற்கும் பின்பான தேனுகற்கும்
வன்பான கால மாயனுமங் கேதுசெய்தான்
கைகொண்டு தானிறுக்கிக் கட்டி நெரித்தலுமே
பொய்கொண்ட மேனியெல்லாம் போய்ப்பழைய வேடமுமாய்
உள்ளுதிரங் கக்கி ஒளிவளையாய் நின்றவர்கள்
வெள்ளெயிறு தோன்ற விழுந்தார்கா ணம்மானை
கால்சாய்ந் [1]தசுரர் கருமலைபோல வீழ்ந்ததனைப்
பால்வாய்ந்த சொல்மடவார் பார்த்துப் பயந்தோடி
அம்மாத ரெல்லா மசோதையுட னேதுசொல்வார்
''எம்மாமி கேட்டருள்வாய் இற்றைநா ளிங்குநின்ற
நாங்களெல்லாங் காதலித்து நன்நோன்பு நோற்பதற்குப்
பூங்கணையான் கோயிலிலே போயினோம் அங்கிருவர்
பெண்ணுருவாய்ப் புக்கார் பிணங்கொண்ட தாமரைபோல்
[2]கண்ணுருவாய் நின்றதுவுங் கண்டோங்கா'' ணென்றுசொன்னார்
'ஐயகோ' வென்று அசோதையும் நந்தனுமாய்க்
கையால் வயிறலைத்துக் காவலனை வந்துகண்டார்
ஆய்ப்பாடி தன்னிலுள்ள ஆயரும் ஆய்ச்சியரும்
வாய்ப்பாக வோடிவந்து மாண்டவரைப் பார்த்துரைப்பார்
''உற்ற தெருத்தனிலு மூர்தனிலுஞ் சாகாமற்
பிறத்தியிலே சாகப் பெருக்க [3]மலைந்தீர்கள்
மிண்டிப் பிணஞ்சுமந்து வேசற்றுப் போகாமற்
பெண்டுகளும் நாமும் பிழைத்தோமே'' யென்றுசொல்லி
வந்து மனைபுகுந்தார் மாதவனோ டெல்லோரும்
அந்த வினைதெரியு மாவிந்த சோதையுமாய்

---

1. தரக்கர் (த)
2. கண்ணெதிர் (த,ஸ்ரீ)
3. முனைந்தீர்கள் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைமார் காணு தங்கே யசோதையுடன்
சொன்ன பழிகேட்டுத் தூயோனுந் தானுணர்ந்து
வேலையிலே கைநீட்டி மிக்க மடந்தையரைக்
கோலமுடன் காட்டிக் கொடுத்தான்கா ணம்மானை
சென்ற குருந்தனுடன் [1]தேனுக னிவ்விவர்கள்
பொன்றுதலைக் கஞ்சனுக்குப் போயுரைத்தா ரம்மானை

## சத்தவாலி வதமும் நப்பின்னை திருமணமும்

வஞ்ச மனத்தாரும் மாண்டா ரெனக்கேட்டுக்
கஞ்சன் சலித்துக் கலங்கி யிருக்கையிலே
நல்ல பிரமாவை நாடித் தவசுபண்ணி
வல்லசுர ரெல்லாரும் வரம்பெற்று மீளயிலே
மூவுலகும் வல்லான் முன்னை யுகந்தனிலே
மாவலவ னனசத்த வாலியென்பா னோரசுரன்
கஞ்சத் [2]தயனைக் கலங்கப் பிடித்தடித்து
வஞ்சித்து [3]வெட்ட வரங்கொள்வே னென்றுசொல்லி
மெய்யும் நடுங்கி வேதாவு மோடிவந்து
வைகுந்தத் தேபுகுந்து மாலுக் கபயமென்றான்
அந்தணர் கோனுக் கபயங் கொடுத்தருளி
வந்த நிசாசரனை மாதவனுந் தான்முனிந்து
வாளுந் திகிரியினல் வல்லசுரன் தன்னுடலை
ஏழுகூ றாக எறிந்தான்கா ணம்மானை
ஆழி யெறிய அறுப்புண்ட [4]ஏழ்துணியும்
ஏழசுர ராக எழுந்துநின்ற தம்மானை
கண்டங் கெழுவரையும் [5]காசினியிற் போகவென்ற
தண்டுளப மாயன் சாபத்தால் வந்தார்கள்
கார்வரையைத் தின்று கடல்வற்ற நீர்குடித்துப்
போர்பொர வேட்டுப் [6]புயங்கள் தனைத்தின்று
மீண்டும் மிடுக்குடையார் வெள்ளெயிற்ற ரோரெழுவர்
கண்டு பணிந்துநின்று கஞ்சனைப்பார்த் தேதுரைப்பார்
"காற்றுங் கடலுங் கனவரையு மெண்டிசையும்
கூற்று மியங்காதே கொற்றவனே யெங்களுக்கு

---

1. தேனுகனு மற்றவனல் (த,ஸ்ரீ)
2. தவனைக் (த,ஸ்ரீ)
3. வெட்டி (த)
   வாட்டி (ஸ்ரீ)
4. ஏழு துண்டும்
5. காசினிக்குப் (த,ஸ்ரீ)
6. புயபுயங்கள் தின்றுதின்று (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மை யவமதித்த ஒன்னார்க ளுண்டானால்
எம்மை யவர்மேலே யேவென்று ரம்மானை
"எல்லாச் சமர்த்தும் என்முன்னே சொல்லிடுவீர்
வல்லாயன் மைந்தனுக்கு மாட்டாமற் செத்திடுவீர்"
என்றவன் சொல்ல எயிறு தனைமடித்து
மென்று கனல்விழித்து வேந்தனைப்பார்த் தேதுரைப்பார்
"சத்துவ மற்றவர்கள் சாவதற் கையமில்லை
மெத்த மிடுக்குடையோர் வெல்வதற் கையமில்லை
வெற்பொத்த தோளாய் விடைதா" வெனவுரைத்தார்
புட்பித்துப் பூசித்துப் போகவிட்டா னம்மானை
சென்று தொறுப்பாடி சேர்ந்தங் கெழுவோரும்
என்று தருண மெனத்திரியும் நாளையிலே
'கோதனன் பெற்ற குலமகளாம் பிள்ளையொன்று
மாதினுக்கு நாளை மண'மென்று தானுரைத்தார்
எங்கு முரசறைந்து எவ்வூர்க்கு மோலைவிட்டு
மங்கு லெனவே மணக்கா வனங்களிட்டு
பூவாடை கட்டிப் பொலிவுறப் பந்தலிட்டுக்
கோபா லரைக்கூட்டிக் கோமானு மேதுசெய்தான்
மங்கை பிறந்தநாள் மங்கையுட னேபிறந்து
சிங்க வலியுந் திறமும் மிகவுடைய
ஏழெரு தான இடபங்களைத் தழுவி
[1]வாழ்விறி னூர்க்கே மணம்புகுவா னென்றுசொல்லிக்
கொம்பு முனைதிருத்திக் குஞ்சிக்குக் கச்சணிந்து
செம்பொற் றொடைக்கயிறு செம்மணியுந் தான்பூட்டி
வால இடையருடன் மங்கையருங் கண்டுநிற்கக்
கோல விடையேழுங் கொண்டுவந்து கோதனன்தான்
"மானை மணம்புணர வல்லார் தழுவு"மென்று
ஆன தொழுவி லடைத்துவைத்தா னம்மானை
இடைய குமாரரெல்லாம் இவ்வார்த்தை யைக்கேட்டுத்
தொடையல் புனைந்து சுகந்தவகை யும்பூசிப்

1. வாழ வெறினூற்கேன் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைக்குச் செய்த பெரியமணப் பந்தலிலே
என்னைப்பா ருன்னைப்பா ரென்றுவந்து நின்றார்கள்
[1]அஞ்சனச் செங்க ணசோதை திருமகனும்
மஞ்சன மாடி மணமாலை யுஞ்சூடிப்
[2]போசனஞ் செய்து புளுகோடே சாந்தணிந்து
ஆன வகையா லழகா பரணமிட்டுக்
[3]குங்குமத்தின் சேறுடிக் கொழுந்துபட நாமமிட்டுப்
பொங்கு [4]கெவுரி பொற்றேளிற் பூரித்து
[5]வாகு புரிபூண்டு மகரக் குழையணிந்து
[6]தோகை விறற்றேளிற் சொன்னவொளி நிறணிந்து
முன்கையிற் கங்கணமும் முத்துவளை யும்புனைந்து
பொன்கச்சை கட்டிப் பூவாடையும் புனைந்து
*சங்கை செறிந்தமணித் தாவடமுந் தானணிந்து
அல்லிக் கயிறும் அரைவடமுந் தான்பூட்டி
நல்ல உடைவாள் [7]நலமாய் வலத்தணிந்து
[8]சன்னக் கழல்புனைந்து சம்மாளி யுமிதித்துத்
தெண்டுங் கிறிசும் தெறிவில்லுங் கைக்கொண்டு
தொங்கல் நிழற்கீழ் தோளமார் தற்சூழ
[9]மங்கலப் பந்தலிலே வந்தனர்கா ணம்மானை
அவ்வளவி லந்த அசுரர்க ளேதுசெய்தார்
வெவ்விய வேழெருதும் வேலையிலே போகெறிந்து
அந்தந் தெருதி னடையாள மாம்படியே
இந்த வசுரர்கள்தா னேழெருதாய் நின்றார்கள்
காச்சிறுக் கொண்டுமிகக் காலெடுத்து வாலசைத்துத்
மூச்சிறைற் நீயுமிழ்ந்து முன்னின்ற பொய்யெருதை
தன்னெருதென் றெண்ணித் தனம்பெரிய கோதனனும்
அன்ன தொழுவி லடைத்துவைத்தா னம்மானை
மங்கல மார்ப்ப மணிமுரசு நின்றதிரச்
†சங்குமுர சேக்காளம் தாளம் குழலூதப்

---

1. அஞ்சனக் கண்ணன் (ஸ்ரீ)
2, பொற்கச் சணிந்து புனுகுடனே சாந்தணிந்து (ஸ்ரீ)
   ,, ,, புளுகுடனே ,, (த)
3. குங்குமத் தாலே கொழுந்துபட நாமமிட்டு (த)
4. பொங்கிய கற்பூரம் (த,ஸ்ரீ)
5. வாகு புரியும் மகர குண்டலமுமணிந்து (த,ஸ்ரீ)
6. தோகைப் புத்தணிநது சொன்னச்சீ னிறணிந்து
* ஒருவரி–ஸ்ரீ–த–பிரதிகளில் மட்டுமுள்ளது
7. நீலத்தால் (த)
8. கண்ணுக்கு மைதீட்டிக் கண்கவசமும் புனைந்து (ஸ்ரீ)
   கண்ணுக் கழல்புனைந்து கனகவசமுந் திருத்தி (த)
9. மங்கல மார்ப்ப மணப்பந்தல் மீதுவந்தார் (த)
† ஒருவரி மாத்திரம–த-ஸ்ரீ–பிரதிகளில் உள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னரிய மாலைகளும் பூம்பட்டுந் தானுடுத்தி
நன்மணிப் பந்தலிலே நாரியர்கள் தற்சூழக்
கூந்தல் முடித்துக் குவளைத் தொடைபுனைந்து
வாய்ந்த மணிகள் வகைவகையாய்த் தானணிந்து
வாளிற் சிறந்த மலர்விழிக்கு மையெழுதித்
தோழிற் கரும்பெழுதித் தொய்யிற் றனமெழுதித்
தோடு கடையம் சுடர்மணி முத்தாரம்
நீடு வயிரம் [1]நிரைமணிகள் நின்றிலங்கக்
கச்சுப் புனைந்து கனதனங்க ளாலிக்கச்
செச்சை புனைந்து செழுந்தரளத் தொங்கலிட்டு
மின்னு மருங்கினுக்கு [2]மேகலையைப் பற்றுமல்
அன்னம் நடந்ததென்ன அம்புய மங்கையென்ன
ஆயர் பலர்சூழ அணிமாலை கைப்பிடித்துத்
[3]தூய மொழியாருந் தோன்றினர்கா ணம்மானை
தங்கிளைஞர் சூழத் திருமணப் பந்தலிலே
பொன்னணியும் பூமலையார் போந்தனர்கா ணம்மானை
தோளை இறுமாந்து தோன்ற லெதிர்நின்ற
காளையர் தம்மைக் கடைக்கண்ணுற் பாராதே
தம்மைக் கொளவிருந்தார் தங்களையும் பாராதே
பொன்னரிய மாலைதன்னைப் பொற்கையால் முன்னீட்டி
நந்தன் மகன்தனையே நாடிவந்தா ரம்மானை
அந்த வகைகண்ட அவள்தந்தை கோதனனும்
அரிதானே நீர்தா னுகிலு மிப்பொழுது
[4]எருதேழும் வென்றுவந்து என்மகளைக் கொள்ளுமென்றான்
ஆங்கவன் சொல்ல ஆயர் குமாரர்கள்தாம்
நாங்கள் வளர்த்ததென்றும் நம்பசுக்க ளீன்றதென்றும்
பற்றுமற் சொல்லிப் பார்த்துப் பரிதவித்துச்
[5]சற்றே யெனக்கை தழுவினர்கா ணம்மானை
அண்டி எருதின்மேல் ஆர்ப்பரித்துப் போய்வீழக்
[6]கண்டார் தழுவினரைக் கண்டிலர் தேவர்களும்

---

1. நீலமணி (த)
2. மேகமலை பற்றுமல் (த)
3. தோயமொழி தற்பின்னை (த)
4. எருதேழையுந் தழுவி (த,ஸ்ரீ)
5. சற்றார் எருதை (த)
6. கண்டார்கள் தேவர்களும்
கண்டிலார் மற்றவரும் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்புக்குப் பற்ருமல் கோலச் சிறுகுளம்பில்
வெம்பித் துவையுண்டு மெய்யிழந்தா ரம்மானை
தானந் தெருதைத் தழுவவென்று புக்கவர்கள்
ஊனு முயிரு மொருவிடத்துங் காணுமல்
"நங்கோ தனன்வளர்த்த நல்லெருதீ தல்ல"வென்பார்
"வெங்கால னீ"தென்பார் "வெவ்வடவை தா"னென்பார்
"மாயனே யிவ்வெருதை மட்டுப் படுத்தானேல்
ஆயரே யெம்மையெல்லா மற்பத்திற் கொன்றுவிடும்"
எங்கெங்கு மோடு [1]மிடையரைக் கையமர்த்திச்
செங்க ணெடுமாலே [2]தெண்டனிட்டுக் கோதனனும்
*வாட்ட மிலாத மதுசூ தனனேநீர்
அச்சுதனே யெங்க ளசோதை திருமகனே
[3]நச்சு முலையுண்ட நாயகனே கேட்டருள்வாய்
அவளுனக் காவாள் அவளுக்கு நீயாவாய்
இவள்பொருட் டாக எருதேழையுந் தழுவிக்
கோட்டு முலைமயிலைக் [4]கூடெ"ன்ருன் கோதனனும்
கேட்டு மனமகிழ்ந்து கேசவனு மேதுசெய்தான்
குஞ்சி முடித்துக் [5]குதம்பையுந் [6]தான்முடித்துக்
கஞ்சுகச் சாயக் கவசமுந் தான்புனைந்து
காரேறு மேனியனும் கைதட்டித் தோள்நெரித்துப்
போரெருது கூடப் புகப்பாய்ந்தா னம்மானை
எருதுருவாய் நின்ற [7]எழுவருங் கண்டிவனை
"நிருதரே நாம்தான் நினைத்தபடி ஆன"தென்று
"ஏழெருது நாமிங் கிவனெருத்த" னென்றுசொல்லிச்
சூழ வளைந்துகொண்டு சுற்றெங்கும் வட்டமிட்டு
வாலெடுத்து மேனிமிர்ந்து வன்கண் சிவப்பேறக்
காலெடுத்துக் காலுதைத்துக் காயெரிபோல் மூச்செறிந்து
கொம்பாலே ஓங்கிக் குறிக்கொண்டு ஏழெருதும்
எம்பிரான் மேலே [8]எழப்பாய்ந்த தம்மானை

---

1. இடையரை யஞ்சலென்று (த)
2. தெண்டனிட்டா ரம்மானை (த)
* த—ஸ்ரீ—பிரதிகளில் இல்லாத வரி (த,ஸ்ரீ)
3. நச்சு விழிப்பிள்ளை (த,ஸ்ரீ)
4. கொள்ளென்ருன் (த)
5. குப்பாயம் (த)
6. தானணிந்து (த)
7. ஏழ்சுரர் (த)
8. எழுந்துவந்த தம்மானை (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எத்திசையும் எவ்வுலகு மெங்கு மிடிமுழங்க
ஏற்றிய பல்லியங்கள் எங்கும் கிடுகிடென்னச்
[1]சேற்றி னுடன்சேனை திரைகடல்போ லார்ப்பரிக்க
வானவர்கள் [2]கண்டுவப்ப மாயோ னெழப்பாய்ந்து
தானவர்க ளோடத் [3]தலைப்பெய்தா ரம்மானை
ஏழு பருவதம்போல் ஏழெருதும் தான்வளைந்து
†ஏழுலகு முள்நடுங்க ஏழுகடல் போல்முழங்கி
நந்தன் மகனை நடுப்படுத்திச் சுற்றெங்கும்
வந்து வளைந்து மணிவண்ணன் மேனிதன்னில்
நாலேழு காலும் நன்றா யுறமோதி
[4]வாலேந்திக் கொண்டு வளைத்தங்கே ஆர்ப்பரித்து
ஈரேழு கொம்பாலு மெம்மா னிலக்காக
ஓரே ழெருது முறப்பாய்ந்த தம்மானை
சக்கரக்கைத் [5]தாமன் சமர்த்தினாற் றப்புவித்து
உக்கிரத்தால் மற்றதனை யோர்புறத்தி லேயொதுக்கி
அண்டர் விழிகளுக்கு மச்சுதனே தானாக
ஒண்டொடியார் தங்களுக்கு முருவ மதனாக
ஆயர் விழிகளுக்கு மசோதைமகன் தானாக
‡மாய வெருதுகட்கு வல்லெருது மேழாக
ஓரெருதுக் கோரெருது உதவாம லொவ்வொன்று
போரெருது கொண்டு பொருதனன்கா ணம்மானை
தன்னி லெதிர்பாயிற் றானு மெதிர்பாயும்
துன்னி யெழப்பாயிற் [6]றுன்னி யெழப்பாயும்
காலிறைக்கிற் காலிறைக்கும் கண்விழிக்கிற் [7]கண்விழிக்கும்
வால்சுழற்றில் வால்சுழற்றும் வலம்பாயி லிடம்பாயும்
கோடு கொடுசாடிற் கோடு கொடுசாடும்
மாடுகள் தன்னுடனே மாயன் பொரும்போரைக்
கண்டங் கமரர்களுங் கையால் விழிபுதைத்தார்
மண்ணும் மலையும் மரங்களுந் தூளெழவே

---

* த–ஸ்ரீ–பிரதிகளில் மாத்திரம் உள்ள ஒருவரி
1. போற்றும் பலசேனை பொழிந்தெங்கும் சற்சூழ (ஸ்ரீ)
2. காணவப்போ (த)
3. தலைப்பட்டார் (த)
† த-பிரதியில் இல்லாதவரி எவ்வுலகும் (ஸ்ரீ)
4. வாலேழுங் கொண்டு வரித்தங் குறப்பணிந்து (த) (ஸ்ரீ)
5. மாயன் (த,ஸ்ரீ)
‡ த–ஸ்ரீ–பிரதிகளில் இல்லாத ஒருவரி
6. துணிக்கெனப் பாயும் (த)
7. கண்கழிக்கில் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்தெழுந்த [1]தூளி அவனி யிருள்படைக்கக்
கூற்றும் நடுக்கமுறக் கோளரவு மச்சமுறச்
சூதாக வந்துநின்ற தொழுவி லசுரர்கட்கு
ஏதாகப் போகுதென்று ஏங்கி நடுக்கமுற
தநந் னசோதையரும் நம்பியிருசனனும்
அந்த நகரிலுள்ள ஆயரும் நிற்பளவில்
அஞ்சன மேனிக் கரியெருதுக் காற்ருமல்
கஞ்ச னெருதேழுங் கால்சாய்ந்த தம்மானை
மாக இமையோரும் மண்ணேரும் கண்டுநிற்ப
ஏக வுருவா யெருதேழை யும்வளைத்துப்
புக்கத் தழுவிப் புயத்தோ டிறுக்குதலும்
சுக்கிக் குருதிவிழக் கண்களுந் தான்பிதுங்கிப்
பொய்கொண்ட வேற்றுருவம் போக்கி யசுரரெனும்
மெய்கொண் டலறி விழுந்தார்கா ணம்மானை
ஒருசத்த மாயலறி யோரேழு மாமலைபோல்
வருசத்த வாலியென்பான் மாண்டான்கா ணம்மானை
*எருதெழுச்சி யான எருதேழும் பட்டுவிழப்
பொருதழித்து மாயன் புறப்படத் தான்கண்டு
தந்தையுந் தாயும் தமயனுந் [2]தம்பியுமாய்
வந்து தழுவி மணக்கா வனம் புகுந்தார்
மாயன் நெடுமாலும் மஞ்சன [3]நீராடி
ஆய பணியா லலங்கரித்து [4]வந்துநின்ருர்
சொல்ல வரிய துடியிடையார் [5]தங்களுக்குள்
நல்ல தவஞ்[6]செய்தாள் நம்பின்னை யவ்வளவில்
[7]போத வனப்பெய்திப் பொன்போல் நடந்துவந்து
மாதவனுக் கிட்டாள் மணமாலை யம்மானை
வேதன் முகூர்த்தமிட மெல்லியர்கள் தான்வாழ்த்த
காதலியைக் கைப்பிடித்துக் கண்ணன் [8]இருந்ததற்பின்
அவ்வூரி லுள்ள ஆயரு மாய்ச்சியரும்
கைவினைப் பேரும் [9]கல்யாணம் வந்ததற்பின்

---

1. தூளியென்ன ஆயர்களு மார்ப்பரித்து (த)
* இரண்டுவரிகள்-த-ஸ்ரீ-பிரதிகளில் மட்டுமுள்ளவை
2. ஆயருமாய் (த,ஸ்ரீ)
3. நீராட்டி (த)
4. பார்த்துநின்ருர் (த)
5. தங்களிலும் (த)
6. செய்துநின்ற (த)
7. பேதமற அவ்வளவிற் பெய்வளையார் தானடந்து (த)
8. இருந்தபின்பு (த,ஸ்ரீ)
9. கல்யாணப் பந்தலிலே (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடித் திரண்டுவந்து கோதனன் தான்வளர்த்தக்
கேடுற்ற மாடுகளாற் கெட்டழிந்தோம் நாங்களென்று
சேனைத் திரளுடனே சென்றங் [1]குருமையிட்டு
ஆனைப் பிணத்தை யெறும்பு குறைப்பதுபோற்
கொட்டு மழுவாலுங் கோடரியா லுந்துணித்துப்
பட்ட பிணத்தைப் பலநாளு மாய்ச்சுமந்து
ஊர்ப்புறம் போட்டு [2]உடனே முழுகிவந்து
சீர்ப்பேறு மாதருடன் சேர்ந்திருந்தா ரம்மானை

## கஞ்சன் மாயவனை அழைத்துவர வசூரனை அனுப்புதல்

மாதேவன் கையாலே வல்லசுரர் மாண்டதனைத்
தூதுவர்கள் கஞ்சனுக்குச் சொன்னார்க ளம்மானை
[3]துண்ணென்னக் கேட்டுத் துணுக்கென்னக் கோபமுற்று
[4]"என்னவகை செய்வோ"மென் றிருக்கின்ற வேளையிலே
[5]திலத வரிய சிறீநாரதன் என்னுங்
கலகப் பிரியன் கஞ்சனை வந்துகண்டு
[6]"தேவர் திறையளப்பத் தேர்வேந்தர் சேவிக்க
மூவுலகு மாளும் முடிவேந்தே கேட்டருள்வாய்
*ஏவ லெளிய இடைநந்த கோன்மகனைத்
தேவகி மைந்தனென்று செப்புவார் சொற்கேட்டு
அங்கவன் மேலே அசுரரைத் தான்போக்கி
மங்கக் கொடாத வகைசொல்லக் கேட்டருள்வாய்
அத்தலந் தன்னி லதிவிறுமா வானாலும்
சுத்த வினைவல்லன் [7]சூத்திரத்தாற் கொன்றிடுவன்
அவ்வூ ரிடையருக்கு ஆளோலை போகவிட்டால்
இவ்வூரிற் கூட்டிவந்து இக்கணமே தந்திடுவார்
பற்றுப் பயல்தன்னைப் [8]பாராட்டுப் பண்ணாதே
உற்று யிப்போதே ஓடவிடா" யென்றுசொன்னான்
வெம்மா முனிமொழியை மெய்யென்று கஞ்சனுந்தான்
அம்மா யவனை யழைப்பிக்க வெண்ணயிலே
[9]தன்வாச லில்நின்ற சந்திர தாரனென்பான்
வந்து கரங்கூப்பி வாய்புதைத்தங் கேதுரைப்பான்

---

1. குரவை (த)
2. ஓதுங்கி (த,ஸ்ரீ)
3. சொன்ன மொழிகேட்டுச் செவிகள் சுறுக்கெனவே (த,ஸ்ரீ)
4. அன்னவன் மூச்சற் றமர்ந்து கிடைக்கையிலே (த,ஸ்ரீ)
5. சிலங்கா னகரிற் சிறீநார தன்என்னும்
கலங்காப் புயத்துடைய கஞ்சனைவந்து கண்டு (த,ஸ்ரீ)
6. தேவர் சிறைவைத்துத் தேவரெல்லாம் சேவிக்க (த,ஸ்ரீ)
* நான்குவரியும்-த-ஸ்ரீ பிரதிகளில் மட்டும் உள்ளவை
7. சூட்சுமத்தால் (ஸ்ரீ)
8. பகுடிபண்ணி மாயாதே (த-ஸ்ரீ)
9. தன்வய வாகி (த-ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நன்றி யறியாத நாரதன் சொற்கேட்டு
மண்கொண்ட போராழி மாயவனை யிங்கழைத்தல்
எரிதிரியைக் கௌவி எலிதா னிருக்கின்ற
துரியினுக்குள் வைத்துத் துஞ்சியது போலாமே
பாலப் பராயத்தே பலநாளும் நீவிடுத்த
[1]ஆல முலையோ டசுரனையுங் கொன்றிலனோ?
காளிய னென்னுங் கடும்பாம்பை வென்றிலனோ?
நீழிய குன்றெடுத்து நின்றுமழை காத்திலனோ?
வானோர் பணிந்தேத்தும் வைகுந்த நாயகனை
ஆயர் மகனென்று அற்பமாய்க் [2]கொள்ளாதே
பிழைக்க வகைகேட்கிற் பேராளன் றன்னையிங்கே
அழைக்கவும் வேண்டாம் அவன்வழியும் போகாதே"
[3]என்றுசொல்லக் கஞ்சன் எரியெழவே தான்விழித்து
"நன்றான நாரதனும் நானு மறியாமல்
இன்றுன்னைக் கேட்டோமோ?" என்றங் கெரிவிழித்து
அங்கவனை வாளா லறவெறிந்தா னம்மானை
காரியஞ் சொல்பவனைக் கைவாளாற் கூறுசெய்து
நாரத மாமுனியை நன்குரைத்துப் போகவிட்டுக்
கொற்ற விறற்கஞ்சன் கூரன் தனையழைத்து
இற்றைப் பொழுதி லெழிலாயர் பாடியிற்போய்
நாயக மான நந்தனிட மைந்தனையும்
[4]யாவரையு மிங்கே யழைத்துவா வென்றுசொன்னான்
வேந்த னுரைக்க விடைகொண்டு கூரனுந்தான்
போந்து தொறுப்பாடி புக்கான்கா ணம்மானை
அன்னானை வந்துகண்டு ஆயரெல்லாங் கைதொழுது
"மன்னநம் மூர்க்கு [5]வருங்ககரும மே"தென்றார்
"தழைத்தபுகழ்க் கஞ்சனையும் தந்தை யசோதையையும்
அழைத்துவரச் சொன்னா னரசென்றா னம்மானை
"இற்றைநா ளிங்கிருந்து எங்களையுங் கைக்கொண்டு
பிற்றைநாட் போகிற் பிரசாத" மென்றுசொன்னார்

---

1. ஆலமுலைப் பேய்முதலா (த-ஶ்ரீ)
2. என்னாதே (த)
3. என்றா னமைத்தியனும் ஏதுசொல்வான் கஞ்சனென்பான் (த)
4. ஆயரையும் (த)
5. வருங்கருமம் சொல்லுமென்றார் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடரங்கங் கட்டி மிகவே யுலுப்பைகட்டிக்
கூடிய ஆயரெல்லாங் கூரன்றனை யிருத்தி
வேறிருந்து தம்மில் விசாரித்து மேல்விளையும்
வாறறிந்து கஞ்சன் வரச்சொன்ன [1]காரணத்தாற்
*"செங்கமலக் கண்ணனைத் தெரிசிக்கக் [2]காரணமாய்
அங்கதற்குத் தக்க தறிந்துரையு" மென்றுசொன்னர்
[3]உற்றவர்க்குச் சொல்ல உறவினர்க ளெல்லோரும்
வேர்த்து மனந்தளர்ந்து [4]வெய்துயிர்த்தங் கேதுசொல்வார்
"[5]இங்கிவர்க ளெல்லா மிப்பொழுதே தான்போகில்
[6]அங்கவன் செய்கை யனுபவிப்ப தல்லாது
[7]நாட்டுக்குப் பாடும்பர் நாயகனை நாங்கொடுபோய்க்
காட்டிக் கொடுக்கக் [8]கணக்கல்ல" வென்றுசொல்லி
†அங்கவர் சொல்ல அயலிருந்தா ரெல்லோரும்
"எங்கோனும் வேண்டா மியாங்களங்கு போவதில்லை
நந்த குமாரனுடன் நம்மை யழைக்கவென்று
வந்தவரைக் கொன்றினிமேல் வாறவரை யும்பொருது
ஆவதெல்லா மாக்கி யதிகுந்த மாகவந்தான்
°சாவதுதா" னென்று சாற்றினு ரம்மானை
ஊரிடையர் சொல்ல உடம்பாடா தேயிருந்த
‡வீரவா னென்னும் விசாரவா னேதுசொல்வான்
பல்லாய ரெல்லாம் பலரும் புடையிருந்து
எல்லாருங் கேளு மியாதொரு வார்த்தைசொல்ல
[9]எழிலுற்ற போது இராசகா ரியமறுத்து
அழிவுற்ரு ரென்று அம்புவியா ரேசாரோ?
தமருற்ரு ரெல்லாரும் தாமாயர் கோமானும்
அமருக் கொருப்பட்டு ஆயுதங்கள் தான்பிடித்து
மிக்க வகூரனுடன் மிண்டி யனைவோரும்
சிக்கென்று கஞ்சன் திருநகர்க்கே சென்றபின்புக்
கஞ்சன் படைவலியும் கார்மேனி யான்வலியும்
[10]மிஞ்ச வறிந்துபின்னை வீரனுக்குத் தீங்குவந்தால்

1. காரியத்தால் (த)
* த-ஸ்ரீ-பிரதிகளில் மாத்திரமுள்ள ஒருவரி
2. வொட்டாமல் (ஸ்ரீ)
3. உற்ற மனிதர்சொல்ல உற்ற இளைஞரெல்லாம் (த)
4. மெய்தளர்ந்து (த)
5. இங்கிவர் மேலும் இவர்மேலும் வாராமல் (த)
6. அங்கவனை யங்கே யனுப்புவிப்ப தல்லாது (த)
7. நாட்டுக்குப் பாட்டுரையா நாயகரை யிப்பொழுது (த)
8. கருமமல்ல (த)
† த-பிரதியில் மட்டுமுள்ள இருவரிகள்
° த-ஸ்ரீ-பிரதிகளில் மாத்திரம் உள்ள ஒரு வரி
‡ த-ஸ்ரீ-பிரதியில்லாதவரி
9. இனியுற்ற போது (த)
10. விஞ்ச (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போ [1]தழிந்திடுங்கோ ஆயரே நீங்களெல்லாம்
இப்போதே அச்சமுற்று ஏன்தான் தளம்புகிறீர்
வையம் பதினுலும் மாறுகொண்டு வந்தாலும்
ஐயன் றனக்கு அழிவில்லை'' [2]யென்றுசொன்னுன்
[3]வீரதரன் சொல்ல விடையரெல்லா முள்மகிழ்ந்து
ஆரமணிக் கொங்கை அசோதையிடத் தேசென்று
முன்னே யுறப்பணிந்து'' முண்டகக் கண்ணனையும்
அன்னே யெமையும் அழைக்கின்முன் கஞ்ச''னென்ருர்
கேட்டா ளசோதை கிளர்ந்துபின்னை வார்த்தைசொல்ல
மாட்டா [4]விழுந்து [5]வசமழிந்தா ளம்மானை
ஏற்றி யெடுத்தணைத்து எல்லாருங் கண்கலங்கித்
தேற்றுவார் தேற்றத் தெளிவுவந்தங் கென்சொல்வாள்
"என்மகனைக் கஞ்சன்பா லேகென்ற சொற்கேட்டுப்
புன்மையெ ஞவியின்னும் போந்ததில்லை'' யென்றுசொல்லிக்
காரோதி யைப்பறித்துக் கையால் வயிறலைத்து
நீரோடும் வாட்கண்ணுள் நின்றவரைத் [6]தான்பார்த்து
"நிலமெழுகி யுண்டு நெடுநாட் டபசுபண்ணிப்
பலவிரதம் நோற்றுப் பாலகனைப் பெற்றெடுத்தேன்
[7]அன்று முதலாக அவன்விடுத்த வஞ்சனைக்கு
இன்றளவுந் தப்பி இருந்த திருமகனைக்
கண்டு பழிவிளைக்குங் கஞ்சன்பாற் போகவிடேன்
கொண்டுபோய்க் காட்டிக் கொடுமென்னை'' யென்றுசொன்னுள்
மின்மலர்க்கண் ணீர்துடைத்து வீரதர னேதுசொல்வான்
"உன்மகனுற் கஞ்சனுக்கு ஊழிநாள் வந்ததுகாண்
அக்கஞ்ச னைப்போலே ஆயிரம்பேர் வந்தாலும்
இக்கஞ்ச வண்ணன் இமைப்பொழுதிற் [8]கொன்றிடுவான்
மைமருவுங் கண்ணுய் வலிகடிந்து கஞ்சனையும்
அம்மதுரை தானு மரசாள்வா னுன்புதல்வன்
சோதியிரு டிமொழிந்தான் சூழுரைத்தே ஞனு''மென்று
ஆதரவாய்ச் சொல்ல அசோதையுந் [9]தான்பொருந்தி

---

1. அப்போதறிவீர் (ஸ்ரீ)
2. காணுமென்று (த)
3. வீரதனன் சொல்ல மிக்க இடையரெல்லாம் (த)
4. அயர்ந்து (த)
5. வசமற்ருள் (த,ஸ்ரீ)
6. பார்த்துரைப்பாள் (த,ஸ்ரீ)
7. அன்றளவு தொட்டு அவன்விட்ட வஞ்சனைக்கு (த)
8. வெல்லுவன்காண் (த)
9. சம்மதித்து (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்புயக் கண்ணனுக்கு அழகு பணிபூட்டி
'நம்பி யுடன்வருவேன் நானு'மென்று சம்மதித்தாள்
தாய்தடுக்க வஞ்சிச் சலித்திருந்த மாதவனும்
'வாய்திறந்து போ'தென்ன' [1]மனப்பிரியந் தானுகி
[2]அன்னையையுந் தந்தையையு மண்ணனையுந் தம்பியையும்
பின்னையும் கூட்டிப் பிறகுவரக் கற்பித்துத்
தானுஞ் சமைந்து தலைவாசல் தன்னில்நின்றார்
கோனும் வரவிடுத்த கூரனு [3]மவ்வளவில்
தேரேறி வந்து திருமுன்னே [4]தேரிழிந்து
காரேறு மேனியான் காலி லுறப்பணிந்து
"எங்குலத்தி லுள்ள இறைவனே கேட்டருள்வாய்
மங்குவிப்ப தாக வரச்சொன்னான் கஞ்சனென்பான்
வண்டேறு தாராய் வரவேண்டா முன்னையிங்கு
கண்டிலே மென்றுசொல்லிக் கட்டுரைப்போம் கஞ்சனுக்கு"
என்றங்கு நின்று எழுவான் தனைத்தடுத்து
[5]நன்றென்று கூரனுக்கு நம்பி நகைத்துரைப்பான்
"நான்தேடிப் போக [6]இருந்தேனே என்மாமன்
தான்தேடி ஆள்விடுத்தால் தரிப்பேனே வாராமல்?
விஞ்சு வகூரனே மிக்கோர்கள் கண்டுநிற்கக்
கஞ்சன் றனையுங் கடற்படையுங் கொல்லுகிறேன்"
என்றுநெடு மால்கூற வகூரனு மேந்தல்தனை
தன்றானைத் தேரேற்றித் தான்சா ரதியாகத்
தொங்கல் நிழற்றத் துடிக ளிடிமுழங்கப்
பொங்கிய சேனை புடையெங்குஞ் சூழ்ந்துவர
மங்கள வாழ்த்தெடுப்ப வந்தான் பெருந்தெருவே
அங்கவரைக் கண்டழுது ஆயரு மாய்ச்சியரும்
"அன்பேது மில்லா வரசன் வரவிடுத்த
வன்பேய்கள் தம்மாலும் வல்லசுரர் தம்மாலும்
மங்காமற் காத்தும் மலையால் மழைதடுத்தும்
எங்கோமான் போனல் யாமும் [7]குடிபோவோம்

---

1. மனதுமிகப் பூரித்து (ஸ்ரீ)
   மனதுகளும் பூரித்து (த)
2. அன்னையையுந் தன்னுடைய அண்ணனையுந் தேவியையும் (த,ஸ்ரீ)
3. அப்பொழுது (த)
4. தானிறங்கி (ஸ்ரீ)
5. குன்றென்று தோள்நெடுமால் கூறலுற்றா ரம்மானை (த)
6. இருந்தேன்என் மாமனைத்தான் (த)
7. குடியிருக்கோம் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதனமும் வேண்டோம் குடியிரோ "மென்றுசொல்லி
மாதவன் பின்னே வழிகொண்டா [1]ரம்மானை
ஆயரு மாச்சியரு மங்கவரைப் பின்தொடர
மாயன் விளையாடு மைத்துனமைக் கன்னியர்கள்
"ஆடவனுய் நம்மோ டறியாப் பருவமுதல்
கூடி விளையாடுங் கோமா னுடன்போனல்
அங்கவனுக் கொன்றுவந்தால் அவ்விடத்தே மாண்டிடுவோம்
நீங்கில்லை யாகிற் திரும்புவோ" மென்றுசொன்னுர்
ஆரவிழி நீர்சொரிய அவ்வூரி லாய்ச்சியர்கள்
சேர அவர்பிறகே சென்றூர்கா ணம்மானை

## கமலபத்திராட்டிக்கு வைகுந்தம் அளித்தல்

நுன்னியவர் சூழச் சுற்றித் தொடர்ந்துவரும்
கன்னியர்கள் தம்மிற் [2]கமலபத்தி ராட்டியென்பாள்
தேரிற் புகப்பாய்ந்து சீராம னைப்பணிந்து
காரிற் குழல்சரியக் [3]கண்பசப்ப நின்றுரைப்பாள்
[4]"அருமா தவனே யசோதை திருமகனே!
ஒருபாதம் பற்றியுன்னை யுன்னிய வாறறிந்து
செய்யுந் தொழில்பலவுந் தின்பனவு முண்பனவும்
மெய்யு முயிரும் விசாரமும் மற்றுமுள்ள
உன்வச மாக்கி யுனையே பணிந்துநிற்கும்
என்வச மாக்கி யெனக்கிப்போது வீடுதந்து
போவதே யல்லாது போகவொட்டேன்" என்றுசொன்னுள்
[5]ஆகிற்போ வென்று அவளை யுடலுடனே
[6]மண்ணுள்ளோர் கண்காண வானோர் புடைசூழ
எண்ணுற்ற வைகுந்த மேற்றுவித்தா ரம்மானை
அங்கவர் நிற்க வகூரனுஞ் சேனையுடன்
பொங்கு மதுரைப் புறக்காஞ்ச னமென்னும்
ஆற்றங் கரையணுகி அங்குவண்ணன் தன்தொடையில்
தோற்றமுள்ள பட்டுந் தூசுகளுங் கொண்டுவந்து
ஆமா றலங்கரித்து அங்குநின்று போகயிலே
பூமாலைக் காரன் புனிதனை வந்துகண்டு

---

1. ஆயரெல்லாம் (த,ஸ்ரீ)
2. கமலபத்திராட்சி (த,ஸ்ரீ)
3. கண்பனிப்ப (த,ஸ்ரீ)
4. அருமா தவாநீ அசோதை வயிற்றுதித்து
   ஒருமாதம் பற்றி யுன்னையுள்ள வாறறிந்து (த)
5. ஆகிறதே (ஸ்ரீ)
6. மண்ணுள்ளோர் கண்டுநிற்க (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டியுந் [1]தூசுந் தொடையலுந் தூக்குமுறப்
பட்டமும் பொட்டும் பலவுமே கொண்டுவந்து
அண்ணலை நன்றாய் அலங்கரித்துக் [2]கைதொழவே
கண்ணனும் மற்றவர்க்குக் காட்சி கொடுத்தருளிச்
சேர்ந்து மதுரைத் தெருவே வருகையிலே

## மதனசேனை கூனிமிர்தல்

சாந்து சவ்வாதுநல்ல [3]சந்தனங் கற்பூரம்
கொந்து [4]மிறுகமதங் குங்குமங் கஸ்தூரி
கந்தம் [5]பரணிதனிற் கஞ்சனுக்குத் தான்கொடுக்க
மண்டு கூனுடை வருமதன சேனையென்பாள்
கண்டு பரணியந்தக் கண்ணனுடை கைகொடுத்து
ஒப்பித் தடிதொழுது உள்ளபடி சொல்லிநின்றாள்
கற்பித்த கூனிமிர்ந்து கன்னிவடி வாகியபின்
"கஞ்சனைக் கொன்று தடிதழைத்துக் கொள்ளுகிறோம்
அஞ்சனக் கண்ணாய் அகத்திலிரு" மென்றுசொல்லி
மேவினான் [6]மேலே விறற்கஞ்சன் [7]சேனையொடும்
ஏவினா னப்போது இரண்டு நிசாசரரை

## விழமுரசன் சுந்தரன் வதம்

சொல்ல விழாமுரசன் சுந்தரனென் பாரிருவர்
வில்விழாக் கொண்டு மிகமுழங்கிச் சூழ்ந்துகொண்டு
மாய னுடன்மலைந்து மண்டியுத்தஞ் செய்தனர்காண்
ஆய ருடைந்தோட அஞ்சலென்று கையமர்த்திப்
பங்கயக் கண்ணன் பலர்க்குப் பலராகிச்
செங்கையே யாயுதமாய்ச் சேனையையுங் கொன்றுழக்கி
முன்தானாய் வந்தவிழா முரசனைத் தான்தூக்கிச்
சுந்தரன் மேல்மோதித் தொலைத்தான் இருவரையும்
வந்தவரைக் கொன்று வருகின்ற [8]மாதவனை
அந்த விடையர் அணிமஞ்ச னமாட்டிப்
பொன்மணி யாபரணம் பூட்டி யலங்கரித்தார்
மின்மணி மாட வியன்மதுரை தன்னிலுள்ள
நீடிய கோடி நெடுந்தெரு வீதியுள்ளே
கோடி யிரட்டிக் குறுந்தெருவி லுள்ளவர்கள்

---

1. குடுந் (த,ஸ்ரீ)
2. கைகூப்பி (த,ஸ்ரீ)
3. சாம்பிராணி (த,ஸ்ரீ)
4. மோதகம் (ஸ்ரீ)
5. பரணிகழிக் (த-ஸ்ரீ)
6. மாயன் (த,ஸ்ரீ)
7. வீதியிலே (த,ஸ்ரீ)
8. மாயவனை (த,ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நந்த னிடைவளர்ந்த நந்தே வகிமகனே
அந்தவினைக் கஞ்ச னழைப்பிக்க வந்தானும்
வாருநாங் காண"வென்று மைந்தரும் மங்கையரும்
கார்நிறத் தானைக் கண்டுநின் றங் கேதுசொல்வார்
'காமனில் வாகுடையான் கண்ணன் திருமேனி
தாமரை பூத்த தனிமேகந் தா'னென்பார்
'இங்கிவன் [1]பேரழகுக் கொத்தவடி வில்லை'யென்பார்
'சங்குங் கணையுந் தரித்தவன் காணெ'ன்பார்
மங்கைய ரீதுரைக்க மற்றுள்ளோ ரெல்லோரும்
பங்கயக் கண்ணனைப் பார்த்து மிகவுருகிக்
"[2]கைய மனங்கசிந்து கஞ்சனென்னுங் கூற்றிருக்கும்
இயம புரந்தனிலே [3]ஏன்வந்தா" யென்றுரைப்பார்
'ஈங்கிருந்த கஞ்சத் தடக்கையன் காணு'மென்பார்
'இங்கிருந்த கஞ்சற் கியமனிவன் காணு'மென்பார்
என்றவர்கள் சொல்ல இலங்குமணித் தேரேறிச்
சென்றான் நெடுந்தெருவே செங்கண்மா லம்மானை
வஞ்ச வினைவிளைத்த வல்லசுரர் மாண்டதனைக்
கஞ்சனுங் கேட்டுக் கலங்கி யிருக்கையிலே
கொந்துகொண்ட பைந்தார்க் குலவேந்தன் தன்னையிப்போது
வந்துகண்டான் கேசனெனும் வல்லசுர னம்மானை

## கேசன் வெகுகோசன் வதம்

"பந்தர வெற்பை வளைத்து முறித்திடவோ?
சந்திர சூரியரைத் தாக்கவோ சொல்லு"மென்றான்
வல்லாண்மை [4]சொல்லிநின்ற வல்லசுர னைப்பார்த்து
[5]"எல்லா மெளிது இடைநந்த கோன்மகனைக்
*கொல்லாய் நீ"யென்று கொடியோனுந் தானுரைத்தான்
"நம்மூர் புகுந்தான் நலந்தவரைக் கொல்லுவையேல்
எம்மூரும் நாமும் இருக்கலா" மென்றுசொன்னான்
"கணத்திற் படவடிப்பேன் கண்டுகொள்ளு மென்றுசொல்லிக்
குணத்திற் கொடியவெகு கோசனனுந் தானுரைப்பான்
"வல்ல வகையதனால் மாயவனைக் கொல்லுதற்கு
நல்ல பரியாக நான்வடிவு கொள்ளுகிறேன்

1. போலழகு (த)
2. கையில மென்னுமண்ணிற் (த)
3. ஏன்வந்தாய் பாவியென்பார் (த,ஸ்ரீ)
4. சொல்லிநிற்க மன்னனும் பார்த்துரைப்பான் (த)
5. எல்லா மினிது (த,ஸ்ரீ)
* -த-ஸ்ரீ-பிரதிகளில் இல்லாத ஒருவரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளர்ந்த பரியைக் கிருட்டிணன்முன் கொண்டுசெல்நீ
இளந்தலை யென்றெண்ணி யென்மேலே யேறிடுவன்
மற்றவனை நானுமென்றன் மாயத்தா லேகொண்டுபோய்க்
கொற்றவன் முன்காட்டிக் கொடுப்பேனு னென்றுசொல்லி
வாகு மலையனைய வல்லசுர கேசனென்பான்
[1]மேகவர்ண மான மிகுதுரக மாகிநின்றான்
[2]அலைக்க ணிமைப்புற்று அச்சமற்றுக் குற்றமற்று
இலக்கண முண்டான இராசபரி யாகிநின்றான்
கம்பி கடிவாளம் கச்சைசல்லி பொற்கவசம்
செம்பொன்னுற் கல்லணைகள் சிக்லென்னத் [3]தான்திருத்தி
இரவிப் புரவியதும் [4]இந்திரன் மாக்களிறுங்
[5]கரவிய ரூபமுடன் கஞ்சலித்துக் கொண்டுவரத்
தம்பிரா னனை தனிநெடுமால் தன்னெதிரே
நம்பிரான் முன்னே நடத்துவித்தா ரம்மானை
[7]சிகர மனையநெடுந் தேரினின்று தானிறங்கி
நகரிசனஞ் [6]சூழ நடந்துவரும் நாயகனைப்
பரனுடைய சோதிப் பணியணிந்து பூச்சூடிக்
கால்நடையே வந்தாற் கபடுண் டெனவுரைத்துப்
பரிமாவி லேறுமென்று பண்ணுவான் [8]கைக்கொடுத்தான்
அரிமாத வனும் அவனை முகநோக்கிக்
கடிய குதிரைதனைக் கண்டாற் பயப்படுவோம்
இடையமக்கள் நாங்கள் இதிலேற [9]யாமறியோம்
மெள்ள எடுத்துவைத்து வீளாமற் கைப்பிடித்துத்
துள்ளாமல் [10]ஓடாமல் தூங்க நடத்துவீராய்
[11]இந்தக் குதிரையின்மேல் ஏறலா மென்றுசொன்னார்
அந்தக் குதிரையின்மேல் அவனை யெடுக்கவென்று
எடுத்தா னெடுக்கவொண்ணு தென்பொடிந்து கீழ்வீழ்ந்தான்
துடித்தா னசுரன்மிகத் துஞ்சினன்கா ணம்மானை
வெகுகோசன் சாக வெருண்டு பரியோட

---

1. மேகமள வான மிகுந்தபரி யாகிநின்றான் (த,ஸ்ரீ)
2. அலக்க ணிமைப்புறவே (த)
3. தான்கட்டி (த)
4. இந்திரன் காமையினும்
5. தாவி விருப்பமுடன் சந்தித்துக் கொஞ்சிவர (த)
6. காண (த)
7. சிகர மணிமேலுந் தேரினிது தானிழிந்து (த)
8. கைதொழவே (த), பாகன்வந்து கைதொழவே (ஸ்ரீ)
9. வறிவோமோ (த), பழகவில்லை (ஸ்ரீ)
10. வீழாமல் (ஸ்ரீ,த)
11. இக்குதிரை மேலே இருக்கலாம் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*புருகோச னேப்பிடித்துப் [1]பூண்முதுகில் தானேறி
நாலாறு சாரிகளும் நால்வகையும் [2]தானேறிக்
காலற வொட்டாமற் கயம்பரியைத் தான்பிடித்து
ஆசனம் பற்றுமல் [3]தாக்கினு னவ்வளவிற்
கேச னுயிர்போய்க் கிடந்தான்கா ணம்மானை
கேசனைக் கொன்றமையால் கேசவனென் றேயழைத்து
நேச விமையோரும் நீங்கினர்கா ணம்மானை
†மருவா ரசுரர்கள்தான் மாண்டிறந்து பட்டபின்பு
திருவாரு மார்பனுக்குச் செம்பொற் குடநீரால்
சீராமன் தன்னைத் திருமஞ்ச னமாட்டி
ஊராய ரெல்லாரும் ஒப்பனை செய்தளவிற்
பாடிப் பயிலும் பரியு மடிந்ததன்பின்
ஓடிப்போய்க் கஞ்சனுட னோதினர்கா ணம்மானை

## குவலய பீடத்தைக் கொல்லுதல்

கவலை பெரிதுடைய கஞ்சனுந் தான்கேட்டுக்
குவலய பீடத்தாற் [3]கொல்வோ மெனவெண்ணிச்
செழித்த மிடுக்குடைய சேசபல னென்பானை
[4]அழைத்தருகே கஞ்சன் அவனுக் கெடுத்துரைப்பான்
[5]அந்தர மேலுன்ற ஞணையென்னுங் கூற்றுவனைச்
சிந்தை பதருமற் சென்றழைத்துக் கொண்டுவந்து
கொண்டுபோய் யாவரையும் கோனந்த கோன்மகனை
மிண்டுபோர் செய்து மிதிப்பித்து வாருமென்றான்
ஆதித்தின் தோன்றியதோ ரண்ட மிரண்டினையும்
ஆதிபிரம னப்புரம் பற்றிய நாள்
வலக்கையி லண்டத்தில் வந்துதித்த மத்தகசம்
‡குலக்கிரி எட்டினையும் குத்திப் பெயர்த்திடுமே
நூரு யிரங்கசத்தின் நோக்கு மிடுக்குடைய
ஆருச் சினத்துடனே அருவிலங்கில் நிற்பதனைக்
கம்பத்திற் சேர்வைவிட்டுக் காலில் விலங்குவிட்டு
[6]வெம்பித்துக் கூற்றை விலங்குவிட்டு வாறதுபோல்

---

* ஸ்ரீ–த-பிரதிகளில் மாத்திரமுள்ளவரி
1 புன்முதுகு மேலேறி (ஸ்ரீ)
2 தானியற்றி (ஸ்ரீ)
  அழித்தனன்கா ணம்மானை (ஸ்ரீ)
3 கொல்லுவிக்க வேணுமென்று (த)
† ஸ்ரீ–த-பிரதிகளில் இல்லாதவரி
4 தழைத்த மிடுக்குடைய சாரதிபால னென்பானை (த,ஸ்ரீ)
5 இந்திரனை வென்றுஇமைப்பொழுதிற் கொல்லுமிந்த அந்தரமே வாற
  தருளி கூற்றுவன்போற் சென்றுநீ ஆயரையும் தேவகிதன்
  மைந்தரையும் (த-ஸ்ரீ)
‡ ஸ்ரீ-பிரதியில் மாத்திரம் உள்ள ஒருவரி
6 வெம்புற்ற (த–ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நம்முளம் மூன்றுமுளம் நல்ல இலக்கணத்தோர்
தம்முளம் மூன்றுமுளம் தானே யொருமுளமாம்
ஏழரை [1]தானுயர்ச்சி யெழில்நீள மென்பதுமாய்
[2]நீளரைக் கம்புவிட்டு நெற்றியின்மேற் றந்தமுமாய்
[3]வேற்றுரை மும்மதமும் வேலைபோல் வேகமுமாய்
நீர்த்தாரைப் போலே நெடியதுதிக் கையுமாய்க்
கூருடைய [4]கோடையிடிக் குவலய பீடமெனும்
பேருடைய யானைதனைப் பித்தேற்றும் வாறுகளாம்
கஞ்சா மதுமத்தை கற்றூளை [5]கள்ளுடனே
[6]நஞ்சான தென்ன நடந்து வரக்கண்டு
‡செந்நெற் குருத்துஞ் சினைச்நெந்நெல் வெண்குருத்துங்
கன்னற் கட்டோடு கரும்புதா னீருற்றிப்
[7]பொன்மணி யாபரணம் பூட்டி யலங்கரித்து
அன்னதுக்குத் தக்க [8]அணியா பரணமிட்டு
மெய்க்குக் கவசமிட்டு [9]மிக்காம் புரிசைகட்டிக்
[10]கைக்குக் கடகமிட்டுக் கத்தியுங் கோடமைத்துக்
†கண்டா மணியுடனே காலுக்கு மிக்கான
தண்டை புனைந்துநால்வாய்ச் சதங்கையுங் தானணிந்து
வேக முடைய [11]மிகுகளிற்றைப் போர்பயிற்றித்
தாக முடைய தற்கேச பாலனென்பான்
அண்டிய கோற்காரர் ஆயிரம்பேர் சூழ்ந்துவரக்
கொண்டுவந்தார் வீதியிலே குஞ்சரத்தை யம்மானை
கால்கடுக்கி வால்நிமிர்த்துக் கண்கள் சிவப்பேறிப்
பாகர் சிலரைப் பலதிக்கும் பிய்த்தெறிந்து
செந்தூளி யாடித் திசையெங்குங் கைந்நீட்டி
வெந்தீ வருவதுபோல் வீதியிலே கண்டவர்கள்
வெண்பிறையைக் கவ்வியொரு மேகம்வருவதுபோல்
திண்சேரும் யானைத் திறம்கண்டா ரச்சமுறக்
கோலம் பலசமைத்துக் கூற்றுவன் வந்ததுபோல்
மேலும்பர் காண வியப்பாக வந்ததுவே

---

* ஸ்ரீ. பிரதியில் இல்லாத இருவரிகள்
1. தான்சுற்று எழிலச்சு (ஸ்ரீ)
2. நீள் பணைக்கை விட்டு (ஸ்ரீ,த)
3. மேற்றுரை (த)
4. கோட்டு (த)
5. தன்னுடனே (த)
6. அஞ்சா மதுவூட்டி ஆடுவெறி மேலாக்கி (ஸ்ரீ)
   ,, ,, ,, கீழாக்கி (த)

‡ ஸ்ரீ-த-பிரதிகளில் மட்டும் உள்ள இருவரிகள்

7. பொன்மணி யாடை புரிசை மணிபூட்டி (ஸ்ரீ த)
8. பணியா வலங்கரித்து (த)
9. மிக்கா யுதஞ்சுமத்தி (த)
10. கைக்கு முலசமுடன் கத்தரியுங் கட்டமைத்து (த)

† ஸ்ரீ-த-பிரதிகளில் இல்லாத இருவரிகள்

11. வெண்களிற்றை (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‡நீலக் கடலெழுந்து நேரே வருவதுபோற்
சோலைக் குலங்கள் சூழ்ந்து நடக்குதென்பார்
கோபாலர் பாலகனைக் கொல்ல அவன்விடுத்த
மாபாவி யானை வருவதனை யுள்ளறிந்து
ஓடிக் கதவடைப்பார் உப்பரிகை யேறிடுவார்
ஆடிப் பரப்பா ரழுதிடுவா ரஞ்சலென்பார்
[1]மஞ்சைப் பிழப்பதுபோல் வருவோரைப் பிய்த்தெறிந்து
[2]இஞ்சிக் கதவுமனை யெல்லா மெடுத்தெறிந்து
[3]கோற்பாக ரைப்பிழந்து கூடும் பெருங்கோட்டில்
நீட்பாகக் கொண்டு நீள்வீதி தன்னில்வரக்
கண்டங் கிடையர்களைக் கமலக்கை யாலமர்த்திப்
பண்டானை வென்ற பலதேவ னைநோக்கி
இவ்வானை யான தெழிதல்ல [4]வெண்டிசையில்
அவ்வானை யோடே யயிரா வதத்தினையும்
வென்று மதயானை விடுத்தவந்தக் கஞ்சனையுங்
கொன்றதன்பின் ஆயரையும் [5]கூட்டிவரக் கற்பித்து
ஆயர்க்கு அண்ணனை அணிகாவ லாய்நிறுத்திப்
போயக் களிறுடனே போர்மலைந்தா னம்மானை
திக்கழித்து வந்த சிகரத்தின் மத்தகத்தை
இப்போ தழிப்பமென்று எண்ணித் திருமாலும்
கும்பத்திற் றட்டிக் குலையி னடிவயிற்றிற்
செம்பொற் பதத்தாலே சிக்கென்னத் தான்மோதிச்
சுற்றித் திரிந்தும் துதிக்கையிற் பட்டகன்றும்
பற்றிப் பொருதும் பனைமருப்பின் [6]மேற்கிடந்தும்
மேலி லடித்தும் வெளியெங்கும் தானழைத்தும்
ஆலித் தெடுத்து மகப்படா தேதிரிந்தும்
பாய்ந்து பொரக்கண்டு பாகனுங் கோபமுற்றுக்
காய்ந்து மதகளிற்றைக் கணப்பினுற் கோலோச்சி
அங்குசத்தால் தாக்கி ஆலம்போ லேதிரியும்
வெங்கயத்தைக் குத்தி வீதியிலே சுற்றுவித்து

---

‡ ஸ்ரீ–த–பிரதிகளில் மாத்திரம் உள்ள இருவரிகள்.
1. மஞ்சைப் பிழந்து வனக்காற்றுற் குண்டெடுத்து (த)
   ,, ,, வருகரத்தாற் குன்றெடுத்து (த)
2. மிஞ்சி (த)
   அஞ்சி (ஸ்ரீ) கதவுமனை அத்தனையும் தான்வீசி (ஸ்ரீ)
3. கோற்பாக ரைப்பிழந்து குத்திப் பெருங்கோட்டால்
   ஆய்ப்பாடி மன்னவர்முன் ஆனைவந்த தம்மானை (த)
4. என்றுசொல்லி (த) (ஸ்ரீ)
5. கூட்டிவா வென்றுசொல்லி (த,ஸ்ரீ)
6. மீதிருந்தும் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு போக்க எழில்வண்ண னவ்வளவில்
[1]அவ்வானை தன்னோ டமர்பொருதா னம்மானை
சீர்பாதம் மேலாகத் திருமவுலி கீழாக
ஆர்பாத யானை யவனை [2]யணைத்தேந்திக்
கார்மேனி யானைக் கனமருப்பின் [3]மேலேற்றித்
தேர்வீதி யெங்கும் திரிந்ததுகா ணம்மானை
விஞ்சிய கோபுரத்தின் மேடையின்மேல் நின்றவர்கள்
குஞ்சரத்தின் கோட்டிடையே கோமானைக் கண்டிரங்கி
நெஞ்சங் குலைவார் நெடுங்கண்ணீர் சோரநிற்பார்
தஞ்ச மெனவே [4]சரணஞ் சரணமென்பார்
வேர்த்து நடுங்கிடுவார் வேதாவை நொந்திடுவார்
"பேரானை கையிற் பிழைத்தவரா" ரென்றிடுவார்
"ஏராரும் மேனிக் கிதுவோ படுவ"தென்பார்
"கொம்பிற்பட் டானென்பார் குற்றுயி ரின்ன"மென்பார்
"நம்பிபட்டா" னென்று நகரிசனஞ் சொல்பளவிற்
பாற்கடல்போல் வெண்ணெய் பயிலும் பனைமருப்பில்
மேற்கிடந்த கோற்றவனு மேதுசெய்தா னம்மானை
வழுவி மதகரியை வஞ்சித்துக் கோட்டிலுந்தான்
நழுவி விழுந்து நகைபுரிந்தான் நாயகனும்
கருமேக மீன்றதொரு கன்றுபோ லங்குநின்று
[5]பொருமேக யானையுடன் போர்பொருதா னம்மானை
†கைநீட்டிற் கைநீட்டும் கால்நீட்டிற் கால்நீட்டும்
மெய்நீட்டில் மெய்நீட்டும் வேளம் தனித்தனியே
மாயப்போர் செய்தியென்று மாவுத்தன் கோபமுற்றுக்
காயுங் கரியைக் கடுங்கோப முண்டாக்கி
எத்தனை கோடி யானைத் தொழில்களுண்டோ
அத்தனையுங் கொண்டு அடருவித்தா னம்மானை
அவ்வகைக் கெல்லா மவையாகத் தப்புவித்துச்
செவ்வகையில் நின்று திருமாலு மேதுசெய்தான்

---

1. அவ்வானைகையி லகப்பட்டா ரம்மானை (த,ஸ்ரீ)
2. அணைத் தெடுத்து (த-ஸ்ரீ)
3. மேற்கிடத்தி (த)
4. சர்வேசுரனே யென்பார் (த,ஸ்ரீ)
5. போர்பொர யானையுடன் போர்தொடங்கி யேதுசெய்தார் (த)

† த-ஸ்ரீ-பிரதிகளில் இல்லாத இருவரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பைக்கை யாற்பிடித்துக் [1]கும்பத்திற் கையறைந்து
தும்பிக்கை தன்னைத் துணிய நிலத்தறைந்து
‡அவ்வானை தன்னை ஆகாயத் தேயெறிந்து
ஈரிரண்டு காலினையு மெற்றினு னவ்வளவிற்
சாருருண்ட தென்னக் கரியுருண்ட தம்மானை
‡பாருண்ட வாயானும் பார்த்துநின்ரு னவ்வளவில்
நிலையற்றுச் சாய நின்ற குருதியெங்கும்
மலையிற் குகைதிறந்து வல்லருவி வந்ததுபோல்
அங்கத் தெழுங்குருதி யங்கங்கே யாருகத்
துங்கப் பனைமருப்பின் [2]றுளையதனுல் முத்துதிரத்
தலையொடிந்து காலொடிந்து தந்தங்கள் தானொடிந்து
மலையொடிந்து வீழந்ததுபோல் மாண்டதுகா ணம்மானை
குவலய பீடத்தைக் கொன்ற கொழுங்குருதித்
திவலையில் மூழ்கிச் சிவந்துநின்ருன் சீராமன்
[3]மாகனல்போல் நின்ற மாதவனு மேதுசெய்தான்
பாகனைப் போகாமற் பற்றி வளைந்துகொண்டு
முடித்த மயிர்பிடித்து மோதி நிலத்துடனே
பிடித்திரு கூறுய்ப் பிளந்தெறிந்தா னம்மானை
அவ்வாறு கண்டு அரிவங் கிசத்தலைவன்
செவ்வாய் மணியைத் திருமஞ் சனமாட்டி
ஆபரணம் பூட்டி அமுதுசெய்யப் பண்ணுவித்துச்
சாப முறவளைத்துத் தாமும் துணைபோந்தார்
அரிவேட்டம் பட்டதுபோல் அச்சுதன் வந்ததுவும்
கரிவேட்டை யாடியதுங் கண்டிருந்த கத்திரிபர்
போந்து கடிமையுடன் பொன்னுச னத்திருந்த
காந்து மனதுடைய கஞ்சனுட னேதுரைப்பார்
"வல்லசுர னென்னும் மலையெல்லாம் நின்றசிங்கம்
வெல்லரியைப் பற்றி விழுங்காம லேவிடுமோ
கரியையும் பாகனையுங் கட்டழித்து மீளாத
எரியையும் போல்விழித்து இங்கேயும் போந்துநின்ருன்
செயிர்த்தாங் கவனுடனே சேனையுட னங்குநின்று
உயுத்தமே செய்யாம லுற்றதுசெய்" யென்றுரைத்தார்

---

1. கும்பத்தின் மீதறைந்து (த)
‡ ஸ்ரீ–த–பிரதிகளில் இல்லாத வரிகள்
2. சுற்றெறங்கும் (த)
3. மாகடல் போல்நடந்து மாதவனு மேதுசெய்தான் (த-ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றது சொன்ன மகிபனைக் கஞ்சனென்பான்
கொற்ற உடைவாளாற் கூறுசெய்தா னம்மானை

## முட்டிகன் சாணுகன் வதம்

சொல்லரிய மேரு துவக்குண்ட பர்வதங்கள்
வல்லுரத்தாற் குத்தி வழிகொண்ட முட்டிகனும்
ஆங்கது வன்றி யகிலமெல்லாங் கொள்ளாமல்
தாங்கு [1]மலைநிறுத்துஞ் சண்டவலி சாணுகனும்
வெல்லு யுத்தஞ்செய்து மிருமலைபோற் றேள்புடைத்து
மல்லுயுத்தம் விட்டெழுந்து வந்துகண்டா ரம்மானை
ஏவினன் கஞ்சன் [2]இசைவண்ணன் தன்மேலே
மேவினன் [3]முட்டிகனும் வீதிதனில் மாயவனை
"உரவோனே எம்மில் ஒருவனுட னிப்பொழுது
தரவேண்டும் மல்யுத்தம் தா"னென்று [4]கேட்டளவில்
"மன்றுடி மைந்தரெலாம் மாடாடு மேய்ப்பதலால்
ஒன்றாக மல்யுத்த மோர்பிளப்புங் கண்டறியோம்
நற்பரிவோ டிங்கே நாடிவந்தீ ரிப்பொழுது
மற்பொர வேண்டுமென்றால் வாரு"மென்றான் மாதவனும்
மண்கச்சை கட்டி மணிவளையுந் தோள்வளையும்
ஒண்கைக் கணிந்து உறுப்பெல்லா மெண்ணெயிட்டு
[5]நேத்திரஞ் சென்னிக்கு நீள்உருளை தானணிந்து
சாத்திரத்தி லுள்ளபடி தானே யுறையணிந்து
மற்போருக் கான வகைபெல்லாந் தானணிந்து
கற்போர்ப் புயங்கள் கலிக்கப் புடைத்தார்த்து
[6]தாளுக் கணைசெய்து தண்டைதனை யங்கமுற்று
வாளுங் குறங்கொதுக்கி வல்லுறுப்புத் தான்கிளைத்துச்
செம்முறுவல் செய்து திருப்புருவ மேலேற்றிக்
கைமுறுக்கி மெய்முறுக்கிக் [7]கால்நெட்டி தானுதறி
[8]மண்ணினின்றார் கண்காண வானின்றார் பார்த்துநிற்க
முன்னின்ற மாயவனை முட்டிகனும் பார்த்துரைப்பான்
"அல்ல விடையர்மக னல்லக்கா ணீயறவே
மல்லர் மகன்காண் மல்லருமுன் போதாது
சாத்திரங்கள் கற்றாலுஞ் சற்று முனைப்போலே
சூத்திரங்கள் கற்றாரைத் தொல்லுலகிற் கண்டறியோம்

---

1. சமர்த்துள்ள (ஸ்ரீ)
2. இயல் வண்ணன் (த)
3. போயவனும் (த-ஸ்ரீ)
4. தோள்புடைத்தான் (த, ஸ்ரீ)
5. நேத்திரத்துச் சென்னி நீள்குருளை தான் கட்டி
6. தாள்விதனஞ்செய்து (த)
7. கண்கள் சிவப்பேறி (த-ஸ்ரீ)
8. மண்ணின்றார் கண்களிப்ப மல்லடைவெல் லாஞ் செலுத்தி (த, ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுனு மிப்போ திராசசிங்கம் கைப்பட்ட
கன்றனை போலேயென் கைப்பட்டா' யென்றுசொல்லி
மோதினன் முட்டிகனும் முண்டகத்தார்க் கோமானைக்
காதினன் மற்றவனும் [1]கார்மேகக் கற்பகம்போல்
மலையிரண் டென்ன வடவை யிரண்டென்ன
அலையிரண் டென்ன [2]அரியிரண்டு தானென்னத்
தாக்கினன் வானத் [3]தலைவர் பிணிப்புறவே
ஆக்கினர் மற்போ ரடைவடைவே யம்மானை
சிரத்தா லுறப்பாய்ந்து திண்டோளா லீடுசெய்து
கரத்தாற் பிணித்துக் காலாலே கால்வளைத்துத்
தாங்கிப் பலகாலும் தம்மிற் சரிபோராய்
வாங்கிப்போய் நின்று மறுகாலு மேதுசெய்தார்
துங்க உருமிடிபோற் றோள்தட்டி யார்ப்பரித்துத்
தங்கள் மனமிடுக்காய்த் தாக்கினர்கா ணம்மானை
[4]அலையிரண்டு தானென்ன அம்மலை யொன்றினுக்குத்
தலையிரண்டு தானென்னத் தம்மி லுறத்தழுவி
ஒருவர் விழுந்தும் ஒருவரதின் மேற்புரண்டும்
[5]ஒருவர் தளர்ந்தும் ஒருவர் மனந்தெளிந்தும்
ஒருவ ரெடுத்தெறிய ஒருவர் புடைபுரண்டும்
ஒருவர்கைக் குத்தை ஒருவர்கை யாற்பிடித்தும்
வாக்கா லிடியெழுப்பி மார்பாற் கனலெழுப்பி
மூக்காற் புகையெழுப்பி முட்டியுத்தம் செய்கையிலே
கட்டி யெடுத்துக் கரியோனைக் கீழாக்கி
முட்டிகன் மேலிருந்து மூரித்தாள் தட்டலுமே
மாற்றான் முகநோக்கி மாதவனு மேதுசொல்வான்
"தோற்றார்கள் செய்யுந் தொழிலையான் செய்யுகிறேன்
நீயென்னை வெற்றிகொண்டு நீங்குதியோ?" வென்றுசொன்னான்
மாயவன் மேலிருந்து வல்லரசு னேதுசொல்வான்
கொடுமிப்போர் காணக் கொலைக்களத்தி லுன்னையிப்போது
விடுவிப்பே னல்லாது விடுவேனோ வென்றுசொன்னான்
வீரதனஞ் சொல்லி மேலிருந்த முட்டிகனைக்
கார்மேக மேனியான் கைவிலக்கி யேதடுத்துப்

---

1. கார்மேகக் கற்பகனும் (த)
கற்பகத்தின் கோமான்மேல் (ஸ்ரீ)
2. அரியே யிரண்டென்ன (த)
3. தவருந் தலைபணிய (த)
வானுலகத்தேவரும் தலைபணிய(ஸ்ரீ)
4. மலையிரண்டு தானெனவும் மாமலை யொன்றினுக்குத்
தலையிரண்டு தானெனவுந் தம்மிலுறத் தழுவி
5. ஒருவரழுன்றும் (த)
இருவரழுன்றும் இருவர்மனந் தெளிந்தும் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதப் பிணித்தெறிந்து பின்கழன்று முன்சமைந்து
பார்த்தாயர் மைந்தன் பலியர்போல் நிற்கையிலே
முட்டிகனைச் சேர்ந்து முனிந்துமிகச் சாணுகனும்
கட்டி முதுகைக் கரங்களா லேநெரித்தான்
இருமலை தாக்க இடைநின்ற மாமலைபோல்
[1]மருமலர் தண்டுளப மாயோனு மேதுசெய்நான்
முன்னுனை முட்டிகற்கும் முன்போலே முன்னின்று
பின்னுனை சாணுகற்கும் பேராமற் போர்மலைந்தான்
ஒருவருடன் நின்றங் கொருவர் பொருதாப்போல்
இருவருடன் மற்போ ரியற்றினன்கா ணம்மானை
திறம்பா தெதிர்நின்ற செங்கமலக் கண்ணனும்
புறம்போ னவரைப் புயங்களா [2]லீடுசெய்து
கையை யொடித்துக் [3]கனகவுளைத் தான்பேர்த்து
மெய்யை உறநெரித்து வெம்போர் விளைக்கையிலே
தூளி சுடர்மறைப்ப சூழ்மதின்மேல் தூசெழும்பக்
காளி கதித்தெழுந்து கண்டான்கா ணம்மானை
அன்னேரந் தன்னில் அசோதை திருமகனும்
முன்னே பொருகின்ற முட்டிகனையேது செய்தான்
[4]விண்ணுக பாசமெனும் வெங்கயிற்ருற் பூட்டுதலும்
புண்ணுக மும்நெருங்கிப் பொங்குதிரங் கண்பிதுங்கி
மாமலை வீழ்ந்துபோல் மண்ணி லுறவீழ்ந்தான்
தாமனு மவ்வளவில் சாணுகனைத் தான்பிடித்துக்
கையுறவே சேர்த்துக் கடுந்தரையில் மோதுதலும்
[5]மெய்யுற வீழ்ந்துடலம் வேறுபட்ட தம்மானை
கல்லான திண்டோள் கரியமால் கையாலே
மல்ல ரிருபேரும் மாண்டனர்கா ணம்மானை
அங்கவரைக் கொன்றும் அவியாத கோபமுடன்
செங்குருதி யாடித் திருமேனி தள்ளாடி
வெந்திறல் வேந்தருடன் வீதியிலே வந்தவனைச்
சுந்தரச் சோபையுடன் சொற்சந்தி ரமுகியும்
கற்புடைய மாதர் கமலாச னைப்பணிந்து
பொற்புன லாட்டுவித்துப் போனகமும் பண்ணுவித்து

---

1, மருமலர் (த)
மருமாலை (ஸ்ரீ)
2. மோதுவித்து (த,ஸ்ரீ)
3. கனமொழியை (ஸ்ரீ)
கனவிழியை (ஸ்ரீ)
4. வீணுகபாசம்
பூணுகம் (த)
5. மெய்யுறவே தூளாகி வீழ்ந்தனன்கா ணம்மானை (த,ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்பணி கொண்டு அலங்கரித்துத் தெண்ட மிட்டார்
காம்பணி தோளாரைக் கண்ணனுங் கண்டுகந்து
"இன்று முதலெனக்கு ஏந்திழையா யிங்கிருந்து
பொன்று வைகுந்தம் பெறுவீர்நீ" ரென்றுசொல்லிக்
கச்சைத் தலையாடக் காதிற் கடுக்காடச்
செச்சைத் தொடையும் திருப்புயமுஞ் சீராடத்
தும்பி புடையாட தோகைநல்லார் கொண்டாட
நம்பி தெருவே நடந்து வரக்கண்டு
போந்து [1]மிகவிளைய பூசணனென் பானொருவன்
காந்து மனதுடைய கஞ்சனுட னேதுசொல்வான்
"[2]ஆதிக் கடவுளோர் அந்நாளா யின்றளவும்
வாதிக்க வொண்ணாத [3]மல்லரையுங் கொன்றுழக்கி
ஆறாத கோபமுடன் அன்னான் உனை[4]நாடி
வாறா" னெனக்கேட்டு வன்கஞ்ச னேதுசொன்னான்
"இங்கே [5]விசாரித்து ஏவினா னல்லாது
[6]அங்கவரைக் கொண்டு அரசாண்டேன் மூவுலகு
என்றவனுஞ் சொல்லி இருக்கின்ற வேளையிலே
துன்று மிடுக்குடைய [7]சுந்தாப சுந்தனென்பான்
வீரியம் பேசி மிக்கவனோ டேதுரைப்பான்
"சூரிய சந்திரர்கள் தோற்றிலரோ எங்களுக்கு?
பன்னாழி யற்றுமெங்கள் [8]பாத்திரத்துக் கிப்பொழுது
மன்னா வுலகில் மனிதரோ மாறுச்சு
காவலனே மற்றிவனைக் கட்டிக் கொடுவாறோம்
ஏவும் நீரென்ன ஏவினன்கா ணம்மானை
வெற்பூ ணணிந்து மிகுகச்சை தான்கட்டிக்
கற்பூரப் பொற்பூங் காப்புடையுந் நான்புனைந்து
பார்த்திபனே பாருமென்று [9]பாத்திரத்தை கைவிரித்துப்
போய்த்திரு மாலைப் போர்மலைந்தா னம்மானை
"எங்கள் தொழிலன்றி யாமறியாக் [10]காரியத்தை
அங்கம் பொருகைக் கழைக்கிறீ ராமாகில்
வாரும் பொர"வென்று"[11] மாயவனுஞ் சம்மதித்துக்
காருப்பொன் மேனியான் கச்சைகட்டி [12]முந்தியிட்டுத்

---

1. மிகவிஷய போசனன் (த,ஸ்ரீ)
2. ஆதிக் கடவுளு மாளானு நின்றளவும் (த)
   ,, ,, மரனு ரெனத்தக்க (த)
3. வல்லமையில் மிக்கோருவன் (ஸ்ரீ)
4. தேடி (த,ஸ்ரீ)
5. ஏகினு னல்லாது (த)
   வலிமை சொல்லி ஏகுவாரல்லாது (ஸ்ரீ)
6. அங்கவரைக் கொண்டோ அரசாண்டேன் மூலவுகு (த)
   அங்கவன் கையாலே அனைவரும் மாண்டனரே (ஸ்ரீ)
7. சுந்தப சுந்தன் (த)
8. பத்திரத்துக் கெப்போதும் (த)
9. பத்திரத்தைக் கைவிரித்து (த)
10. காரணங்கள் (ஸ்ரீ)
11. மன்மதனும் (த,ஸ்ரீ)
12. முத்துமிட்டு (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டை வளையல் தடமுன்கை மீதணிந்து
குண்டல முள்ளாக குப்பாயந் தானணிந்து
சுடர்வயிரத் தாரை சுரிகை தனையுருவித்
திடமோடு கைக்கொண்டு திருமுதுகு தானெளியச்
செய்ய [1]கழல்திருத்தித் திருப்புருவ மேலேற்றி
[2]மெய்யோரு மஞ்ச விழிகளிமை கொட்டாமல்
[3]மாலடி கொட்டி வலதுகைகால் முன்னாக
[4]நாலடி தாக்கி நடந்தெதிரே போகலுமே
சூழ்ந்து கரியோனைச் சுந்தாப சுந்தனுமே
கூர்ந்து பலவகையிற் குத்தினன்கா ணம்மானை
தொட்டு நடந்து சுரிகையாற் குத்துதலைத்
[5]தட்டி நெருக்கித் தளர்ந்து எழப்பாய்ந்து
[6]சங்குல் நிறத்தானுங் கரிய வசுரர்களும்
அங்கத் தொழிலடைவே ஆங்கரித்துக் குத்தலுமே
தடைப்பாய்ச்ச லொன்றாலே தாமன் சுரிகையினால்
துடைப்பாய்ச்சல் சுந்தனுந்தான் துஞ்சி விழுகையிலே
உற்றவனும் மீள ஒருகாற் புறந்தாக்க
மற்றவனும் வீழ்ந்தான் மலைபோலே யம்மானை
துய்ய சுரிகையினால் சுந்தாப சுந்தனையும்
செய்ய திருமால் சிறுபோரிற் கொன்றடர்ந்து
[7]கோலால வாசுகியின் கொலைவாயி லேபிறந்த
ஆலால மென்ன அனன்று வரக்கண்டு
[8]மாருதம்போ லோடி [9]மகிடனென் பானொருவன்
[10]சூருதம்போற் கஞ்சனுக்குச் சொன்னான்கா ணம்மானை

## கஞ்சன் வதம்

சொன்னவனைக் கோபித்துச் சொற்கஞ்ச னேதுரைப்பான்
“முன்னமே யானுரைக்க மூண்டு பலகாலும்
[11]சொல்லரிய பேய்முதலாய்ச் சுந்தாப னீறாக
வல்லசுர ரெண்ணிறந்தார் மாண்டா ரிவனாலே
இங்கே விசாரித் திதமான வார்த்தைசொல்லி
அங்கே விடுத்தால் அவன்கையாற் செத்திடுவார்
மற்றுயன் தன்னை வதைப்பேனினி யானெழுந்து
பற்றுரை யேவிப் படைகொடுக்கத் லேவையில்லை

---

1. செய்ய தளத்திறுக்கி (த)
2. மையோரஞ் செய்து (த)
3. மாலாடி மாலாடி மன்றில்கை கால்கீழாய் (த)
4. நாலாடிக் கட்டி நடத்தினர்கா ணம்மானை (த)
5. தட்டி யுறநெரித்து (த)
6. சங்குக் கரத்தானும் தண்டிவந்த தானவரும் (த)
7. கோலா ரிடையருடன் கொடுஞ்சரத்தான் கொன்றுழக்கி (ஸ்ரீ)
8. மகிபதன் (த)
9. மருமதம் (த,ஸ்ரீ)
10. கருமதம்போற் கஞ்சனுக்குக் காயந்துசொன்ன னம்மானை (ஸ்ரீ,த)
11. சொல்லரிய பேர்முதலா சுந்தனராக் கழிறெனவே (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுடர் வந்தெனக்கு வாசல்முறை செய்வதுவும்
விண்ணுடர் வந்தெனக்கு மிகுகப்பங் கட்டுவதும்
அத்தி யெழுபத் தாயிரத்தை [1]மீறவல்லேன்
[2]சத்தி கொடுத்தலலால் தந்தா ரொருவருண்டோ
ஏக வயதுமுதல் எண்ணவொண்ணு தின்றளவும்
வாகு பலத்தை [3]மயக்கவல்லா ருண்டாச்சோ
இன்றிவனைக் கொன்று யானுலகை யாளுவது
கன்றி முடியரசர் கண்டிடுவீ ரென்றுசொல்லி
[4]மின்கச் செறிந்து விளங்குந் திருமருங்கிற்
பொன்கச்சை கட்டிப் புகழுடைய வாள்பிடித்து
வங்கப் பரிதியுடன் வார்சிலை யுங்கணையும்
துங்கச் சரப்பளியுந் தோள்வளையும் பூரித்து
மவுலி புனைந்து வகைமாலை காப்பணிந்து
சவடி கவுரியுடன் சன்னவீ ரம்புனைந்து
மறுவா னிருளகல வானோர் திறையளக்கச்
சர்வா பரணத்தாற் தன்னுடம்பெல் லாம்மறைத்து
விரக் கழலணிந்து வெண்டயங்கள் தானணிந்து
மார்புக் கிசைந்த வச்சிராங்கிச் சோடணிந்து
வெற்றிப் படையரசர் வெல்வேந்தர் [5]சூழ்ந்துவரச்
[6]சுற்றிவரும் வீரத் துவசம் விசும்பளக்க
வெண்கவரி காலசைப்ப மிக்க [7]குடைநிழற்றச்
சங்கு படாகந் தலமதிர வார்ப்பரிக்க
அம்பு முனைதிருத்தி ஆயுதமெல் லாந்திருத்திச்
செம்பொற் சிலையைச் சிறுநா ணொலியெழுப்பி
மாசொன்னத் தாலே மையல் அமைப்புற்ற
யோசனை மூன்றுயர்ந்த உப்பரிகை மேலேறி
எண்ணப் படாச்சேனை யெத்தனையுண் டத்தனையும்
வண்ணக் கரியநிற மாயவன் மேலேவித்
தாரணியும் மன்னவருந் தானும்பொன் மேடையிலே
இரணிய வெற்பில் எழுகின்ற சூரியன்போல்
வீறுன செம்பொன் விளங்குஞ்சிம் மாசனத்தே
ஏறினன் கஞ்சன் இருந்தான்கா ணம்மானை

1. மீளவல்லேன் (த)
2. சத்திக் கொடுத்தலலாற் றுகைந்த தொருவருண்டோ (த)
3. மறுக்க வல்லார் (த)
4. மின்கச் சிறுசிங்க விராசவீ ரியங்குறித்து (த)
5. மண்டலிகர் (த)
6 சுற்றெங்கும் வீரத் துணைவர்கள் சூழ்ந்துவர (ஸ்ரீ)
7. குடையோங்க (த)
,, நிறைந்த (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]பொன்செய்த மாளிகைமேற் போர்க்கோலங் கொண்டுநின்ற
கஞ்சனையுங் கண்டு கடிநகரி லுள்ளோர்கள்
[2]சால மனந்தளர்ந்து தம்மிலே யேதுசொல்வார்
''பாலர் வதைகொண்ட பாவி பழிகாரன்
உற்ற கு[illegible]வும் உடன்பிறந்த [3]பிள்ளைகளும்
பெற்ற பிதாவும் பெருஞ்சிறையி லேயிருக்கத்
தாரணியை யாளுந் தறுகண்மை போதாமல்
ஆரணியத் தேயிருக்கும் ஆயரிடத் தேவளர்ந்த
அச்சுதனைக் கொல்ல அழைப்பித்தான் காணு''மென்று
[4]நச்சுவிழித் தும்புரு நாரதனைப் பார்த்துரைப்பார்
கஞ்சனே யென்னுங் கடும்பாவி [5]தான்செய்த
வஞ்ச வினையும் வரலாறுங் கேளுமென்றார்
ஓதுவார் மற்றிவனை உக்கிரசேனன்பெற்றுச்
[6]சூது மிகவுடைய துட்ட னெனவறிந்து
ஓர்கஞ்ச பாத்திரத்தி [7]னுட்கிடத்திப் போட்டமையாற்
பேர்கஞ்ச னென்றிவனைப் பேரிட் டழைத்தார்கள்
ஏக வயதி லிரவி தனைப்பிளந்தான்
ஆக நிரம்புதன்முன் னஞ்சிங்க வாகனனை
பொங்காமற் கொன்றவன்காண் போர்வேந்தர் வாழுகின்ற
அங்கசுரர் வங்கிசத்தி லக்கச்சு மான்தனையுங்
கொன்று சுமலியையுங் கொண்ட குலந்தனக்கு
[8]அன்றுசெய்த தீமை அறவே மிகக்கொடிது
தானரசு செய்தான் சதுர்ப்புவியும் தாளுண்டான்
வானவரோ டிந்திரனை மாறாச் [9]சிறைக்கொண்டான்
எழுபதி னாயிரம் யானை மிடுக்குடையான்
பழுதறத் தன்தங்கை பால ரனைவரையும்
மாயவதை செய்தான் மற்றோர் குழந்தைதனை
ஆய ரிடத்தில் அசோதையும் தான்வளர்த்தாள்
தாயர் வளர்க்கத் தானதைக் கொல்வதற்குப்
பேயு மிராக்கதரும் பெருக்கவே தானேவி
அங்கே வினைவிளைத்தான் அதற்கும் பிழைத்ததுகாண்
இங்கே யழைத்தான் இடர்செய்யக் காணு''மென்பார்

1. அஞ்சவினை கொண்டுநின்ற ஆனைபெருஞ் சேனையையும் (த)
2. சால வனன்று (த.ஸ்ரீ)
3. பெண்டுகளும் (த,ஸ்ரீ)
4. நச்சு விழித்துளப நாயகனை (ஸ்ரீ)
நச்சுவிழித்தும்ப நாரணனை (த)
5, தான்சொன்ன (த)
6. சூது மனதுடைய (த)
7. உள்ளடைத்து (த)
8. அன்றங் கவரு மரசாண் டிருக்கையிலே (த)
9. திறை (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவகி மைந்தன் செயஞ்செய்து தான்பிழைத்தாற்
பாவக மன்றிப் பலதேவதை களுக்குந்
திக்கார் கடவுளுக்குஞ் சீர்செய்வோ மென்றுரைத்தார்
துக்கார் மகுடந் தூங்குதலை நேர்ந்துகொள்வார்
எங்கெங்கு முள்ளோரு மிவ்வா றிரங்கிநிற்க
அங்கே தனியான ஆயனுக்குத் தான்துணையாய்
*[1]நந்தன் குலத்தாரும் நற்குலத்தி லுள்ளாரும்
*சிந்தை மகிழ்வாகத் திறமுடைய சூரனுமாய்த்
தங்கள்தங்கள் தேர்ப்படையுந் தாங்களும் வந்துகண்டு
பொங்கமுது காட்டிப் போனகம் பண்ணுவித்துத்
தாமமணி அந்தந் தானும்பல பூசணத்தால்
‡ஆமா றலங்கரித்து ஆயுதங்கள் தான்கொடுத்துத்
தங்கள் பெரும்படையும் தாமும் துணையாகத்
துங்க நெடுமாலை சூழ்ந்துவந்தா ரம்மானை
கூற்றுவன் பொரவிட்ட கொள்கைபோல் வாறவனை
ஏற்றுவந்த கஞ்சன் ஏவுங் கடற்சேனை
நோக்கினர் கண்ணுள் நுழையாமல் உன்னிவந்து
தாக்கினர் தேவர் தலைபணிப்ப அம்மானை
ஆனையுந் தேரும் அடற்படையுங் காலாளுஞ்
சேனையு மாகத் திருமாலைச் சூழ்ந்துகொண்டு
கார்மலையைச் சூழ்ந்த கருங்கடல்போ லார்ப்பரித்துப்
போர்மலையக் கண்டு புயல்வண்ண னேதுசெய்தான்
எவ்வகையால் வந்த யானைபரி தேர்காலாள்
அவ்வவருக் கவ்வா றைமுக்கால் நாழிகையிற்
கொன்றான் நெடுமால் கூற்றுவனுந் தேக்கிடவே
சென்றூறு யோடியது செங்குருதி யம்மானை
சேனையைக் கொன்று சினஞ்சற்றும் மாறாமல்
ஆனையைக் கொன்ற அருங்கோ ளரிபோலே
கஞ்சன்மேற் செல்லுகின்ற [2]கண்ணன் தனிமைகண்டு
செஞ்சொற் [3]கருடனுடன் சேடனருண னென்பான்

---

*1 தந்தை வசுதேவன் தம்பிசா ரசனுடன்
* அந்தரத் தேவருடன் ஆனவ சூரனுமாய் (த,ஸ்ரீ)
‡ த–ஸ்ரீ–பிரதிகளில் இல்லாத இருவரிகள்
2 கண்ணனுக்குத் துணையாய் (ஸ்ரீ)
3 கருடனிடர் சென்றே அருணனுமாய் (ஸ்ரீ)
கருடனிடஞ் செட்டருமென் பானொருவன் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]பாற்கரனை நோக்கிப் பணிந்து புகழ்ந்துரைப்பான்
போர்க்கருங் கஞ்சன் [2]பொன்மேடை தன்னில்நிற்கக்
காலாளாய்ச் செல்லுகின்ற கண்ணனுக்குத் தான்துணையாய்
மேலாளாய்த் தோள்கொடுப்போம் வெய்யோனே [3]போதெனவே
[4]தேர்ப்பாகன் தன்னைத் திவாகரனுந் தானனுப்ப
ஆய்ப்பாடி வேந்தை அருணனும் வந்துகண்டு
திண்டோளி லேற்றிச் சிகரத்தில் நின்றவன்முன்
கொண்டோடி வந்து குறுகினன்கா ணம்மானை
அக்கமலக் கண்ண னசுரனு மப்பொழுது
தக்க படைக்கலமுந் தந்திரமும் தான்கொடுத்து
வீரபட்டங் கட்டி வீரபுட்டி லும்புனைந்து
தாரிட்ட கோதைத் தலைக்கிரண மும்புனைந்து
நற்கவசந் தன்னுடனே நற்புட்டி லுமணிந்து
போர்க்கோலங் கொண்டு பொற்குஞ் சமைத்தருளிக்
கச்சை புனைந்து கதிர்வாள் வலத்தணிந்து
செச்சை கெயுரந் திருத்தோளிற் றுன்புனைந்து
தக்க வகையாற் சமர்க்கோலந் தான்புனைந்து
சிக்கென்று வில்லைச் சிறுநாணொலி யெழுப்பி
யோசனை மூன்றுயர்ந்த உப்பரிகை மேல்நின்ற
நீச னிலையறிந்து நின்றருணன் தன்மேலே
போந்துதிரு மேருவினைப் போர்பொரவே வந்தெதிர்ந்த
மந்திர மாமலைபோல் வந்த திருநெடுமால்
தந்திரு மாமன்மேல் தாக்கினன்கா ணம்மானை
தன்மருகன் [5]போர்வேட்டுத் தன்மேல் வரக்கண்டு
புன்முறுவல் தோன்றப் புகர்வாள் [6]தனைக்கழற்றி
விண்ணு ணெறிந்து [7]விசைசெய்த கஞ்சனுடன்
[8]பொன்னுழி மாயன் புகலுற்று னம்மானை
"இன்னுஞ் சிலநா ளிங்கிருந்து வாழாமல்
அன்ன வசுரர்தமை [9]அங்குவர வேவாமல்
அங்கிருந்த என்னை அறியா தழைப்பித்தாய்
இங்குன் னுயிரை யிழக்கவோ?" வென்றுரைத்தான்

---

1. பாற்கரனைப் போற்றி (த,ஸ்ரீ)
2. பொன்மேடையி லிருக்க (த,ஸ்ரீ)
3. யென்றுசொல்ல (ஸ்ரீ)
   எனஉரைத்தான் (த)
4. தேர்ப்பாகன் தனக்குத் திவாகரன் விடைகொடுப்ப (ஸ்ரீ)
   தேர்ப்பாகன் தன்னைத் திவாகரன் தானேவ (த)
5. போருக்கு (த)
6. தனையெடுத்து (த)
7. மிகைசொன்ன கஞ்சனுடன் (த)
8. பொன்னுழி மாலை பொரவந்தா யோவென்ன (ஸ்ரீ)
9. அங்கென்மேல் ஏவாமல் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சனுங் கேட்டுக் கதித்துக் கொதித்துரைப்பான்
"என்வஞ்சர் தம்மை ஈடுசெய்து நீபுரிந்த
முன்செய்த போரென்று மோசப்போர் செய்யாதே
வல்லையோ வா"வென்றான் மாயோனைத் தீயோனும்"
"*நல்லையடா சொல்லுகிறேன் நானுமுன் சாதமல்ல
*என்றமொழி கேட்டு எரியெழவே தான்விழித்து
*நின்றவக் கஞ்சன் நெடியோன் தனைநோக்கி
*மலைபோலே தோளுடையான் மற்றுந்தன் கையாலே
[1]தொலையாத மண்டபத்தின் தூணொன்றைத் தான்பிடுங்கிச்
சுற்றி யெறிந்தான் சுடராழி [2]மாயவன்மேல்
மற்றவனுந் தூணை வாழியினாற் கூறுசெய்தான்
வணங்கி யெடுத்து மகேந்திர வஸ்திரத்தைக்
குணங்கொடிய கஞ்சன் குறித்தெறிந்தா னம்மானை
எங்கு மெரிகாண் இமையோர் துணுக்கென்னப்
பொங்கு வடவையென்னப் போதுங் கடுங்கணையை
மூன்று கூறாக முகுந்தனு மோர்கணத்துள்
ஏன்றுகோ லொன்றாலே எய்தறுத்தா னம்மானை
முந்நா ளசுரர் முடிதுணித்த வாழியொன்றை
அந்நா யகனு மழைப்பித்து மந்திரித்துக்
கஞ்சன்மே லெய்தான் கடுங்கணையு [3]மங்கவனைத்
தஞ்சமே செய்ததன்றித் தைத்ததில்லை யம்மானை
அருணன் புயத்துமேல் அப்போது கஞ்சனென்பான்
வருணனிடைப் பெற்ற வருணாஸ் திரந்தொடுந்தான்
[4]மின்னி யிடியிடித்து மிகமுழங்கிச் சோனைசெய்து
துன்னி வருவதனைத் தூயோனுங் கண்டருளி
ஆய்ந்த [5]அசனிதனி லன்னா ளசுரர்களைக்
[6]காய்ந்த மழுவதனைக் கஞ்சன்மேல் விட்டெறிந்தான்
அன்னவரு ணாஸ்திரத்தை [7]அற்பத்தில் தூளாக்கி
மன்னன்மேல் தையாமல் வாய்மடிந்த தம்மானை
பஞ்சரத்தி னமென்னும் பர்வதத்தி லேநெடுநாட்
கஞ்சன் தபசுபண்ணிக் கண்ணுதலோன் பாற்பெற்ற

---

* நான்குவரிகள் —த-ஸ்ரீ-பிரதிகளில் இல்லை
1. தொல்லையாம் மண்டபத்தின் (த,ஸ்ரீ)
2. மாயன்மேல் (த)
3. அங்கவன்மேல் (த)
4. மின்னி யிடிமுழங்கி மிகவிருண்டு சோனைசெய்து (த)
5. அவனியிலே (ஸ்ரீ)
6. காய்ந்தபுகர் மழுவை (த,ஸ்ரீ)
7. அற்பத்தி லேயழித்து (த,ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசுபத அஸ்திரத்தைப் பாம்பணையான் [1]மேல்விடுக்க
விசு கனலுமிழ்ந்து [2]விண்ணடுங்கச் சூழ்ந்துகொண்டு
சுற்றி வளைந்து துணைத்தோ ளருணனுடை
நெற்றியிற் பட்டுருவி நீங்கியதே யம்மானை
ஊறுற நெற்றியுடன் உத்தமனைத் தான்தொழுது
ஆறுத சித்தத் தருண னழன்றுரைப்பான்
உன்னைக் கொல்லவிடுத்தான் உன்னைப் பயந்தவர்கள்
தன்னைச் சிறையில்வைத்தான் தன்கொடுமை கண்டிருந்தாய்
உற்றுண்மை பார்த்து உரவோனைக் கைதாங்கிப்
பற்று தவனைப் [3]பாராட்டல் ஏனென்று
வற்புறுத்த வேயருணன் மாயோ னருள்புரிந்து
பொற்புயத்தில் நின்று புலிபோ லெழப்பாய்ந்து
ஆயுத மெல்லா மவமாக்கிக் கஞ்சனுடன்
மாயன் தலைப்பெய்தான் மற்றவனும் போர்மலைந்தான்
கையாற் பிறக்கடித்துங் காலா லுறத்துவைத்தும்
மெய்யால் நெருக்குவித்து வெம்போர் விளைக்கையிலே
[4]மாயன் விலக்கிநின்று மற்றவன் மார்கிழியக்
கோமா னொருவேலைக் கொண்டெறிந்தா னம்மானை
மால்தொட் டெறிய மணிமார்பு [5]தான்கிழிய
வேல்பட்டுக் கஞ்சன் விழுந்தான்கா ணம்மானை
வெஞ்சின வேல்பட்டு மிகத்தளர்ந்து கீழ்விழுந்த
கஞ்சனைப் பார்த்துக் கமலக்கண் ணனுரைப்பான்
"வற்றுப் படைக்கலமும் [6]வாழ்வு முமக்களித்து
உற்ற குருவுமாய் உன்தங்கை நாயகமாம்
எந்தையை [7]வல்விலங்கி விட்டெனக்கு முன்பிறந்த
மைந்த ரறுவரையும் [8]வாளா லழிவுசெய்து
தந்தையையுந் [9]தாயரையுந் தட்டச்" சிறையில்வைத்த
உந்தன் கொடுமை உனைச்சூழ்ந்த" தென்றுசொன்னான்
கண்ணனு மீதுரைக்கக் கஞ்சனு மேதுரைப்பான்
"எண்ணங் கடந்துநின்ற எந்தையே கேட்டருள்வாய்

---

1. மேற்றொடுக்க (த,ஸ்ரீ)
2. விண்ணெங்கும் (த,ஸ்ரீ)
3. பாராட்டத் தேவையில்லை (த)
4. எம்மான் இலக்கி னெதிர்த்தவன்றன் மார்கிழிய (த)
5. கிழப்ப (த)
6. வாழ்வு முனக்கிருக்க (த)
7. விலங்கிட்டு எந்தனுடன் பிறந்த (த,ஸ்ரீ)
8. வாளா லழித்திட்டாய் (ஸ்ரீ)
9. தங்கையையும் தளிர்க்கச் சிறைவைத்து (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயனல்லோ நீயாய் மதலையாய்த் தான்பிறந்து
[1]ஆயரிடை வளர்ந்து ஆய்ச்சியரைச் சேர்வைசெய்து
வாலிய காட்டில் மணித்தாம்பாற் கன்றுகட்டிக்
காலிகள் மேய்த்ததுவுங் கட்டிக் கறந்ததுவும்
[2]ஊரவ ராயர் உறுங்கையைத் தான்பிடித்துப்
பேருரலிற் கட்டிப் பெருக்க அடித்ததுவும்
ஊழி வினைகா ணுனக்கு” மெனவுரைத்தான்
ஆழி நெடுமாலும் ஆலாலம் [3]போற்கொதித்துக்
குஞ்சியைப் பற்றிக் கொடியோன் வரையனைய
நெஞ்சிலொரு காலை நெடியோ னுதைத்தலுமே
தலைபோகி முன்கிடப்பத் [4]தள்ளிப்போ யப்புறத்தே
மலைபோற் கிடந்தவன் வல்லுடல மம்மானை
[5]அஞ்சன மேனி அரியமால் கையாலே
கஞ்சனும் பட்டுக் கழிந்தான்கா ணம்மானை
கருணை முகில்தானுங் கஞ்சனைக் கொன்றபின்பு
அருணன் தனையுகந்து ஆதித்தன் பாற்போக்கிக்
காலாக் கினிபோற் கனமா ளிகையினிற்க
மேலான தேவர் விசும்பினின்று கண்டருளிக்
கஞ்சனைக் கொன்ற கடவுளோர் நம்முடைய
நெஞ்சிற் பயங்கெடுத்தார் [6]நீலவண்ண ரென்றுசொல்லி
அற்புதனைப் போற்றி [7]ஆசுதனங் கூறிப்
புட்ப மழைபொழிந்து [8]போனார்கள் புத்தேளிர்
[9]பொறையில்லாக் கஞ்சன் பொன்றினதைத் தான்கேட்டுச்
சிறையி லிருந்தவசு தேவனுந் தேவகியுஞ்
சத்திய சாத்தகியுந் தங்கை சுபத்திரையும்
மிக்க சுரர்சேனை விட்டுணு வீரர்களுஞ்
சன்றால் விளாவெறிந்த கண்ணனைக் காணவென்று
சென்றார்கள் செல்லச் சிறீகருட ஆள்வானும்
வெஞ்சந் தவிர்ந்து வியன்தந்தை கால்களிலே
[10]நெஞ்சங் குளுந்துருகி நேசமுறத் தான்றொழுதான்

---

1. ஆயரிடத் தேவளர்ந்து (ஸ்ரீ)
2. ஊரவ ராயருன்னை உள்ளபடி தான்பிடித்து (ஸ்ரீ)
பேருர லோடேகட்டிப் பெருக்கடிப் பித்ததுவும் (ஸ்ரீ)
3. போலனன்று (ஸ்ரீ)
4. தாண்டிப்போ யவ்வித்தே (த)
5. அஞ்சனமேனி அரிமா தவன் கையால் (த)
6. நீர்வருக வென்றுசொல்லி (த)
7. ஆசிறுபாதம் கூறி (த)
8. புத்தேளிர் போனபின்பு (த)
9. பொன்றியில்லா வன்கஞ்சன் பொன்னடிமை தான்கேட்டு (த)
10, நெஞ்சமறி நெடுங் கைகளாற் றெழுதான் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளிற் றெழுதவனைத் தக்க வசுதேவன்
தோளிற் றழுவித் துணைக்கண்ணீர் தான்துளிப்ப
ஐயனை மெய்யா லடர வணைத்தணைத்து
மையல் தெளிந்ததன்பின் மக்களையும் தானழைத்து
[1]தம்பி யிவர்சத்திய சாத்தகி யென்றுரைத்தார்
தும்பி யனைய சுபத்திரையுந் தங்கையென்றார்
செப்பி யருகிருந்த தேவகியைத் தான்காட்டி
அப்பா உனையீன்ற அன்னையிவ ளென்றுரைத்தார்
†தப்பாது சொல்லுடைய தாதை யுரைகேட்டுச்
செங்கண் நெடுமால் தேவகியைத் தான்தொழுதான்
கொங்கைபால் பாயக் [2]குலவியகண் ணீர்பாயச்
*செங்கண்மா லைப்பார்த்துத் தேவகியு மேதுசொல்வாள்
"பெற்ற பொழுதன்றிப் பிறிதொருநாட் கண்டறியேன்"
உற்ற மகனை யுகந்துகந்து தானணைந்தாள்
தன்பொன் மகனைத் தழுவித் [3]தவிப்பாகி
இன்பஞ் செருக்கி யிருக்கின்ற தேவகிதான்
[4]மலைபோ லொருபுறத்தே வல்லுதிரந் தான்கக்கித்
தலைபோய்க் கிடக்கின்ற தமையனைக் [5]கண்டிரங்கிக்
கண்ணா லருவிவிழக் கஞ்சன்மேற் போய்வீழ்ந்து
[6]'அண்ணாவே" யென்று அலறினாள் தேவகியும்
கொற்றவன் செய்த கொடுமையெல்லாந் தான்மறந்து
பொற்றொடியாள் போதப் புலம்பினள்கா ணம்மானை
தன்கேள்வன் பட்டுவிழச் சராசந்தன் பெற்றெடுத்த
பொங்கோத மென்னப் பொய்யுரையாச் சுந்தரியும்
[8]காதல னான கஞ்சன் மடித்தலத்தே
போத விழுந்து புலம்பினள்கா ணம்மானை
"ஆழி யுலகுதனி லண்ட ரசுரர்கட்கும்
வாழும் மகேந்திரர்க்கும் மற்றோர்க்கும் நாயகமாய்
ஒன்னார் சிரிக்க உனக்கிளைய பிள்ளைகளைப்
பன்னாளுங் கொன்று பழிபூண்ட [9]பார்த்திபனே!

---

1. தம்பி யிருவர் சத்திய சாத்தகிதன் (த)
† த - பிரதியில் மட்டும் உள்ள ஒருவரி
2. குழலும் புழுதிபட (த)
குழலும் அசைந்துவர (ஸ்ரீ)
* த–ஸ்ரீ–பிரதிகளில் இல்லாத ஒருவரி
3. சலிப்பாகி (த)
மகிழ்ந்துமே (ஸ்ரீ)
4. மலைபோற் புறத்தே வல்லுடலம் தாரைவிட (த)
5. கண்டருளி (த)
6. அண்ணாகோ (த-ஸ்ரீ)
7. பொங்குந்த சுந்தரியும் பேர்யுரைத்த சுந்தரியும் (த)
8. காவலனான
9. பாதகனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]மின்னு ரடிவருட மெல்லணையிற் பள்ளிகொள்ளும்
பொன்னன மேனி புழுதி படக்கிடந்தாய்
[2]கஞ்சனே யுங்கைமார் காதலரை நாளுலவும்
வஞ்ச வினையெல்லாம் மறந்தாய் மறந்தாயே
மலையேறு தோளானே மருகனுல் மாண்டொழிந்து
தலைவே றுடல்வேறுய்த் தான்கிடந்தா" யென்றழுதாள்
பாங்கில்லா மன்னர் பலரும் [3]பயங்கழிக்க
யாங்கள் கடன்கழிக்க [4]ஏகினு" யென்றழுதார்
தன்னன்னை மாரும் தனக்கிளைய பிள்ளைகளும்
†மன்னர் மனைவியரும் மற்றுமுள்ள சுற்றமுமாய்த்
தன் மாமன் மேல்விழுந்து சால அழக்கண்டு
†பொன்மானை யெய்தவரும் போயழுதா ரம்மானை
†முன்னே யழுதாரில் மும்மடங்காய்த் தானழுதார்
[5]தன்னை யவர்தேற்றத் தாமனுந்தான் தேறிநின்று
"மிக்க சிறையில் விலங்கோ டெழுந்துநின்ற
உக்கிர சேனனைக்கொண் டோடியே வாரு"மென்று
தூதரை யேவினுன் தூதரும்போய் மற்றவனைப்
பார விலங்குவிட்டுப் பாடு முரைத்தருளிக்
கோளுற்ற வேலான்முன் [6]கொண்டுசென்ரு ரம்மானை
தாளிற் பணிந்துநின்று தாமனு மேதுரைப்பான்
"உன்னுடைய மைந்தனென்றும் உற்றவென் மாமனென்றும்
என்னுடைய தாயார்க் கிவனண்ண னென்பதுவும்
முன்னியான் கேட்டறியேன் முட்டுயுத்தம் பண்ணிவிட்டேன்
பின்னையான் கேட்டேன் பெரியோய் நினைவறியேன்
தன்குற்றத் தாலே [7]தறிபட்டான் உன்புதல்வன்
நன்சுற்றத் தாரும் நானும் [8]பணிகேட்போம்
[9]இன்புற்று நீதான் இராச்சியத்தை யாளு"மென்ருன்
*"தென்னரங்கிற் கண்துயிலுஞ் சீரங்க ராயரன்றிப்
*பின்னே யொருதெய்வம் பேசுகிலோ மம்மானை
*அன்னஞ்சேர் பொன்னின் அரங்கன் திருவிளையாட்

1. மின்னு ரிருவருட (த)
2. கஞ்சனே யுங்கைமார் காதலனே நாம்புலம்ப
பஞ்சனை யெல்லாம் மறந்தாய் மறந்தாயோ (த)
3. பயந்தெளிய (த)
4. ஏகினிரோ வென்றுசொல்லி (த)
† நான்குவரிகள்—த-பிரதியில் இல்லாதவை
5. பின்னையவர் தூதர்களைப் பிந்தாமலே அழைத்து (த)
6. கொண்டுசென்ருர் மற்றவன்முன் (த)
7. தலைப்பட்டான் (த,ஸ்ரீ)
8. பணிகேட்க (த) பணிசெய்ய (ஸ்ரீ)
9. எப்போதும் போலவே இராச்சியத்தை யாண்டிரென்ருர்
‡ அப்போ மனமகிழ்ந்துஐயன்தனைத்தழுவி (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*டின்னும் சிலகா லியம்பக்கே ளம்மானை
*மிக்க வதன்பின் விறல்நெடுமா லேதுசெய்தான்
*உக்கிர சேனனொடும் உற்ற தமரோடும்
*பூணிக்கக் கஞ்சன் புகுந்து கொலுவிருக்கும்
*மாணிக்க ரெத்னமணி மண்டபத்தில் வந்திருந்தான்
அப்போது மனமகிழ்ந்து ஐயனைத் தான்தழுவி
''செப்பிடக் கேளும் செழுமணியே'' யென்றுரைத்து
''வெம்மைச் சிறையில் விலங்கோ டழுந்துகின்ற
எம்மைச் சிறைவிட் டிகலோகந் தந்தமையால்
நீயே யெனக்கு நிறைமகனும் வேதாவும்
தாயும்நீ தானே தராதலத்தை யாண்டி''ரென்றான்
''பாலர் வதையும் பலபழியும் கொண்டமையாற்
கால மிதுவே கரியோனே கஞ்சனுக்கு
‡ஆக்கி யருள்சுரக்கும் ஐயனே நீயறுக்கப்
‡பாக்கியம் பெற்றான் பதம்பெற்றான் காணு''மென்று
[1]உத்தாரஞ் சொல்லிநின்ற உக்கிரசேனனுக்குப்
புத்திர வாஞ்சை பொறுக்கவில்லை யம்மானை
கோவென் றலறிக் கொடியமகன் [2]மேல்விழுந்து
ஆவென் றலறி அனேகமாய்த் தான்புலம்பி
†மாபாவி யென்று மனதில் நினையாமல்
†ஆபாவ மென்று அலறினன்கா ணம்மானை
மற்றுள்ளோர் தான்தேற்ற [3]மன்னனுந் தான்தேறிக்
கொற்ற மகனைக் குளிப்பாட்டிக் கோதாட்டி
நீடு சுகந்தம் [4]நேரித்து மாலையிட்டுப்
பன்மணி யால்நிறைந்த பல்லக்கின் மீதேற்றி
மின்மணி [5]மாமடவார் வெண்சா மரையிரட்டச்
சங்கு படகமெழத் தார்வேந்தர் தற்சூழ
துங்க வரசர் [6]தொடர்ந்துவரக் கொண்டுசென்று
ஏற்ற முடைய யமுனையாற் றங்கரையில
நாற்ற முடைய நறுங்களபக் [7]கட்டையிட்டு

---

* எட்டுவரிகள்-த-ஸ்ரீ-பிரதிகள் இல்லாதவை
‡ இரண்டுவரிகள்-த-ஸ்ரீ-பிரதிகளில் இல்லாதவை
1. குத்திரம் செய்த கொடியமக னானும் (த)
2. மேற்புரண்டு (த)
† இருவரிகள்-த-பிரதியில் இல்லாதவை
3. மன்னனுந் தேறி நின்று (த)
4. நிரை நிரை மாலையிட்டு (ஸ்ரீ)
நேரிட்டு மாலையிட்டு (த)
5. பூண்மடவார் (த,ஸ்ரீ)
6. சுமந்துவரத் தான்கண்டு (த)
7. கட்டையிலே (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]கற்பூரம் வீசக் கனகமெத்தை மேற்கிடத்திச்
[2]சொற்பூ தவமறையோர் சொன்ன முறைமையிலே
சால வெரியெழுப்பிச் [3]சங்காரஞ் செய்தபின்பு
காலன் வழிபட்ட கஞ்சனைத் [4]தானடக்கி
ஏயவ ரெல்லா [5]மியமுனையி லேமுழுகி
மாயவ னோடே மனைபுகுந்தா ரம்மானை
வஞ்சனை செய்து மறஞ்செய் தறஞ்செய்த
கஞ்சனைக் கொன்று கதியுங் கொடுத்தருளி
†தென்னரங்கிற் கண்டுயிலும் சீரங்க ராயனல்லாற்
†பின்னையொரு தெய்வத்தைப் பேசுவதோ வம்மானை
†அன்னஞ்சு பொன்னி னரங்கன் திருவிளையாட்
†டின்னுஞ் சிலகால் இயம்பக்கே ளம்மானை
†மிக்க அதன்பின்னுள் விறல்நெடுமா லேதுசெய்தான்
†உக்கிர சேனனொடு முற்ற தமரோடும்
†பூணிக்கக் கஞ்சன் புகுந்து கொலுவிருக்கும்
†மாணிக்கத் தாலமைந்த மண்டபத்தே வந்திருந்தான்
[6]தக்கதாய் தந்தை தனையிடைஞ்சல் தீர்த்தருளி
உக்கிர சேனனையு முலகாள வைத்தருளி
[7]ஆனைப் போராடுகின்ற அண்ணலுடன் வைத்துவந்த
தானைப்போ ராயர் தனையழையு மென்றுசொன்னான்
பூபாலர் சென்று புருடோத் தமனருகே
கோபாலர் தம்மையெல்லாங் கொண்டுவந்தா ரம்மானை
[8]வாய்ப்பாகப் பெற்றெடுத்த [9]மாதா இருக்கையிலே
[10]ஆயப்பாடித் தாயார்தனக் கன்பா யெதிர்சென்று
வாகாய்த் தழுவி வயிற்றில் முகம்வைத்து
ஏகாசனத்தே யிருத்தி [11]முகந்திருந்தார்
[12]செல்வத் திருப்புதல்வன் சீராட்டக் கண்டருளி
அல்லல் பெரிதாய் அசோதைப் பிராட்டியுந்தான்
செய்யகண்ணீ [13]ரோடத் தேம்பி முகம்வாட
ஐயனுங் கண்கலங்கி ஆனதுய ரேதென்றான்

---

1. கற்பூரம் வைத்துக் கனகமெத்தை யிற்கிடத்தி (த)
2. சொற்பூ மறையோர் (த)
   சொற்பூ தபமறையவர் (ஸ்ரீ)
3. சங்கு காரகஞ் செய்து (த)
4. தானடத்தி (த)
   தான் கழித்து (ஸ்ரீ)
5. யமுனையிலே தான்முழுகி (த,ஸ்ரீ)
† எட்டுவரிகள்—த-பிரதியில் மட்டுமுள்ளவை
6. தக்கதாய் தந்தைதன் துக்கங்கள் தீர்த்தருளி (த)
7. ஆனைப்போ ராடுகைமுன் (த)
8. ஆய்ப்பாடி (த,ஸ்ரீ)
9. அன்னை (த)
10. ஆய்ப்பாடித் தாய்க்கே யாள்வா ரெதிர்சென்று (த)
    கோப்பாடித் தாயருகிற் கொற்றவனும்—போயணைந்து (ஸ்ரீ)
11. முகந்திருத்தி (த,ஸ்ரீ)
12. வல்லற் கரிதான வாசகனைத் தான்பார்த்து (த)
13. விட்டுத் தேம்பி நிற்கத்தான் கண்டு (ஸ்ரீ,த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சங் கலங்கி நிறைமலர்க்கண் ணீரோட
அஞ்சன [1]வண்ணற் கசோதையு மேதுரைப்பாள்
"[2]பொன்மகனே யிங்கே புக்கதற் பின்னொருத்தி
என்மகனென் றாளென் றெல்லோரும் சொல்லுகிறார்
ஆளுங் கடவுளுடை யாலயங்கள் [3]நான்கண்டும்
நாளுங் [4]குழாங்களுக்கு நன்னோன்பு தானோற்றும்
ஆதித்த வார மமாவாசை யாசரித்தும்
மாதீர்த்த மாடி [5]வருடந் தவங்கிடந்தும்
ஊனங் கடிந்தும் ஒருசந்தி யுண்டிருந்தும்
தானங்கள் செய்தும் தவங்கள் பலசெய்தும்
பெற்றேன் பலரறியப் பத்துமா தம்சுமந்து
பெற்றே னுனைப் பெற்றுப் பேரிட் டிருக்கையிலே
அந்நாளிற் பேயும் அசுரரையு மெண்ணியெண்ணி
நின்னால் [6]வயிறலைந்து நித்திரையு மூணுமற்றேன்.
பாதகன் கஞ்சன் பட்டான் எனக்கேட்டுப்
[7]பேதம் மிகுத்துப் பிரியமிக வாயிருந்தேன்
நானு மிருக்கையிலே நாயகனே மற்றொருத்தி
தானு முனைத்தழுவித் [8]தன்மைந்த னென்றாளாம்
கஞ்சன் கழிந்தும் கழியாதென் ஆவியின்னும்"
நெஞ்சங் கனன்றுரைத்த நீர்க்கண் ணசோதையுந்தான்
மிக்க மனப்பிரிய மென்மேற் கரைபுரள
சிக்கெனத் தான்தழுவத் தேவகியு மேதுசொல்வாள்
"முன்பெற் றிழந்தேன்காண் மூவிரண்டு பிள்ளைகளை
பின்பெற்ற பிள்ளையுந்தன் [9]பிள்ளைபோ லானதென்று
[10]"ஒப்பாரி சொன்னதல்லால் [11]உன்மகனுக் கியான்கடவேன்
செப்பார் முலையாய் தெளி"யென்று [12]தேவகிதான்
வேலிற் சிறந்த விழியா ள[13]சோதைதன்னை
காலிற் பணிந்து [14]கவலாமற் கொண்டிருந்தாள்
காரான மேனிக் கருணா கரன்தானும்
ஈரன்னை மார்க்கும் இடையே யிருந்தருளி

---

1. கண்ணத் (த,ஸ்ரீ)
2. பொன்மகனே நாங்கள் புகுந்தபின் இன்னொருத்தி (ஸ்ரீ)
பொன்மகனே நானிங்கு புக்கினதின் பெண்ணொருத்தி (த)
3. தானமைத்து (ஸ்ரீ)
தான்தொழுதும் (த)
4. வருந்தி (ஸ்ரீ)
குணங்களுக்கு (த)
5. வருந்தித் (த) (ஸ்ரீ)
6. வயிறெரிந்து (த)
7. பேதை மிகுத்து மிகப்பிரிய மாயிருந்தேன் (ஸ்ரீ)
8. தன்மக னென்றிரைந்தார் (ஸ்ரீ)
தன்மக னென்றாளாம் (த)
9. பிள்ளைபோ லாகுமென்று (த)
10. ஒப்பாகச் சொன்னசொல்லால் (ஸ்ரீ)
11. உன்மகனுக் கென்கடவேன் (த)
12. தேவகியும் (த)
13. அசோதையுடை (த) அசோதையிடம் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவ லுடைய [1]அசோதை திருமடியில்
தேவகியைப் பார்த்துச் சிரித்திருந்தா னம்மானை
தாயா ரிருவரையுஞ் சந்தோச மாக்குவித்து
நாயகனும் தந்தை நந்தகோ பன்தனக்கும்
மன்னர்க்கும் முன்னே மணியா சனமியற்றி
அன்னை பிதாவை [2]அதன்மே லிருத்திவைத்தான்
மாதவன் தான்சொந்த மன்றுடி மார்தனக்கும்
கோதனற்குஞ் செல்வம் குறைவின்றி யேகொடுக்கப்
படுகஞ்சன் பொக்கிசத்திற் பண்டார முள்ளதெல்லாங்
கொடுவந்து முன்வைத்துக் [3]கும்பிட்டா ரப்பொழுது
[4]ஆயர்க்கும் மற்றவர்க்கு மவர்க்கிசைந்த வப்படியே
[5]தூய பணியுந் துகிலும் கொடுத்தருளித்
தேருங் கரியுந் திரள்பரியுஞ் சீர்பதமும்
ஊரு மளித்துநம் மூரேபோ மென்றுரைத்தார்
என்னத்தான் சொல்ல இடையரும் [6]மைந்தர்களும்
[7]அன்னத்தை யெல்லா மடியுரையாய்த் தான்சொரிந்து
"மண்ணுலக மல்ல மகிழ்ந்துசுரர் வாழுகின்ற
விண்ணுலகந் தந்தெமக்கு வேந்தாக வைத்தாலும்
பாரடியால் மூடும் பதத்தானே யுன்பதம்விட்
டோரடியும் போகோ"மென் றோதினர்கா ணம்மானை
கோபாலர் நிற்கக் குமாரர்களேதுசொல்வார்
"நீபால னாகியநாள் [8]நீங்கிலோம் நீங்கியிப்போ
தார்க்குப் பணிசெய்வோம் [9]அங்கசுரர் பட்டாரென்
[10]றார்க்குப்போய் என்செய்வோ மோ"தென்று நின்றார்கள்
பேய்ச்சி முலையுண்ட பேராளன் அவ்விடத்தே
ஆய்ச்சியரை யெல்லா [11]மழைப்பித்தே யங்கவர்க்குச்
சுத்த பணிவகையும் தூசுந் திரவியமும்
மெத்தக் கொடுத்து மிகவும் [12]பரியுரைத்து
என்றெனக்கு மன்பா [13]யெப்போதும் வாழ்ந்திருங்கோ
ஒன்றினுக்கு மஞ்சாதே ஊரேபோ மென்றுரைத்தார்

1. அசோதைமடி மேலிருந்தது (த)
2. அதில்வைத்தா ரம்மானை (த)
3. கும்பிட்டா ரம்மானை (த-ஸ்ரீ)
4. ஆயர் குமாரர் அவாக்கங் கிசைந்தபடி
5. தூய மணியும் (த)
6. மங்கையரும் (த) மங்கேது செய்தார் (ஸ்ரீ)
7. சொன்னத்தை யெல்லாம் தூயோன்முன் தான்வைத்து (த)
8. நீங்காதோம் நீங்கியிப்போ (த)
9. ஆரை உகந்திருப்போம் (ஸ்ரீ)
10. ஊர்க்குப்போய் என்சொல்வோம் உத்தமனே யென்றார்கள் (த)
11. அழைப்பித்தங் கேதுசெய்தார் (த)
12. மிகவாய் உபசரித்து (ஸ்ரீ)
13. எப்பொழுதும் போலேநீர் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்ற இடைச்சியரும் மாயன்பாற் [1]பெற்றதனைச்
சொற்றவன் முன்னே குவித்துப் பணிந்துரைப்பார்
"வெண்ணெய்பால் கெட்டிடினும் மின்னனையார் கெட்டிடினும்
கண்ணனே யென்னுங் [2]கள்வனை நாடிடுவோம்
ஏரைப் [3]புனைந்தநீர் இங்கிருக்க நாங்களங்கே
ஆரைப் புகழ்ந்துரைப்போம் ஆரை யுகந்திருப்போம்
சோம முகிலனைய தாயேனே யுன்னைவிட்டு
ஏமமுயிர் போனாலும் யாம்போகோ" மென்று[4]நின்றார்
இந்நிலை சொல்லி இடைச்சியர்கள் [5]நின்றபின்பு
கன்னியரைப் பார்த்துக் கடல்வண்ண னேதுரைப்பான்
"இத்தனை நாளும் யானணைந்து வாழ்ந்திருந்த
மைத்துன மைக்கோனார் மடந்தைநல்லீர் நீங்களினி
அன்புற் றணைவுற் றனைவோரும் நம்மூரில்
இன்புற்று லாழ்ந்திருப்பீர் எப்போதும் போ"வென்று
கொவ்வை யிதழார்க்குக் குறிப்புகள் தானறிய
அவ்வவர்க் கேற்ற அழகா பரணமிட்டுப்
பாவையும் அம்மனையும் பந்தும் பலகலையும்
பூவையும் பாலித்துப் "போ"வெனத் தான்வெகிண்டு
மெத்த மனங்கருகி வேந்தன் கொடுத்தபொருள்
அத்தனையும் தாங்கள் அவன்மேற் படவெறிந்து
அங்கண்ணன் தன்னை அரிவையர்க ளெல்லோரும்
செங்கண்ணாற் பார்த்துச் செயித்துச் சினந்துரைப்பார்
"உன்னாலே [6]யாங்க ளுற்றிருந்த தல்லாது
என்னாவ துன்னை யாம்நீங்கி யிங்கிருந்தால்
சிற்றி லழிப்பாரார் தீமைபல செய்வாரார்
பற்றிப் படர்ந்தெம்மைப் பன்னாளும் தோய்வாரார்
தாரார் புயனே சகடுதைத்த அந்நாள்தொட்(டு)
நேராக எங்களுக்கு நீயே துணையாகி
எத்தனையு மெங்கட்கே எளியனா யேவல்செய்து
வித்தகனே யிப்போது மிகவரிதா யாகினையோ

---

1. பெற்றதெல்லாம் (ஸ்ரீ)
2. களவுகளை நாட்டிடுவோம் (ஸ்ரீ)
   கழிவனை நாடிடுவோம் (த)
3. ஏரைப் புணர்ந்தநீர் (த)
4. சொல்வார் (ஸ்ரீ)
5. நின்றபின்னை (த)
6. கன்னியர் உற்றிருந்த தல்லாமல் (த—ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சனைக் கொன்றிங்கே கத்திரிப னானபின்பு
செஞ்சோ லயசோதை திருமகனு மற்றனையோ"
என்றென்று சொல்லி [1]இணைவிழிக ளாரேடக்
குன்றென்று கொங்கைக் கொடியிடையா ரெல்லோரும்
"பூணார மார்பாநீ போமென்று சொல்லுவிரேல்
வாணாளை மாய்க்கும் மருந்தோ" வெனமொழிந்து
அக்கன்னி மார்க ளனைவோரு மோர்துணிவாய்ச்
சிக்கென்னச் சொல்லத் திருமாலு மேதுசெய்தார்
"உங்கள் மனமறிந்தேன் உங்களை யான்பிரிந்து
வெங்க ணரசாள வேண்டுவனோ மின்னனையீர்
என்னோ டினிதிருங்கள் எப்போதும் போலேநாம்
உம்மோ டினிதிருப்போ முற்"றென்று தானுரைத்து
அந்த மடவாருக் கணிமனைகள் தான்வகுத்து
நந்தன்வசு தேவனுக்கு நற்கோயில் தானளித்து
ஆர்கோல மேனி யசோதைக்குந் தேவகிக்கும்
ஓர்கோயில் செய்து ஒழிந்தவர்க்குங் கோயில்செய்து
ஆனை தனக்கும் அதன்நடுவே கோயில்கட்டி
சேனை தனக்குந் தெருவகுத்து வீடமைத்து
தந்தையரு மன்னையருந் தானும் தமையனுமாய்
[2]அந்த உறவினரும் ஆய்ப்பாடி நல்லுறவாய்
எல்லாருஞ் சூழ எழில்மதுரை [3]நன்னகரில்
மல்லார் புயநெடுமால் வாழ்ந்திருந்தா ரம்மானை
துன்புற்றுக் கஞ்சன் தொலைந்ததையெல் லாமறந்து
இன்புற்று வாழ்ந்தங் கிருந்தனர்கா ணம்மானை

## (கஞ்சன் வதை முற்றும்)

1. இணைவிழிக்கண் ணீர்சொரிய (த)
2. எந்தையரும் நல்லுறவாய் எப்போதும் போலவேதான் (த-ஶ்ரீ)
3. மாநகரில் (ஶ்ரீ)
3. துன்புற்றுக் கஞ்சன் துலைந்ததனை யெல்லமறுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணன் அரசாட்சி

கொண்ட லனையானுங் கோமதுரை [1]யாண்டிருப்ப
அண்ட [2]ருலகத் தடைவுகே ளம்மானை
அருக்கன் கிரண மணையாத [3]மண்டபம் போல்
இருட்பட மூடி யாவரு [4]மச்சமுற
ஆசுரிய மன்றி அமரமும் மாதவரும்
வீசு நறுங்கமல வேதற்குப் போயுரைப்பார்
அங்கவரைக் கண்டு அயனு மெடுத்துரைப்பான்
"செங்கண் [5]நெடுமால் திருப்பாற் கடல்நீங்கிப்
போர்க்கஞ்சன் மாள்வதற்கும் பூபாரந் தீர்ப்பதற்கும்
நீர்க்கஞ்ச வண்ணன் நிலவேந்தாய் வீற்றிருந்தான்
ஓங்கு முனிவோரும் உம்பரும் [6]போய்ப்புகுந்து
ஆங்கவனைக் கண்டு [7]அபிசேக முஞ்சூட்டி
உற்றவா றோதி உயர்நாம மும்முரைத்து
மற்றவன் தன்னருளால் வாழலாம் போது"மென்றான்
[8]முண்டகன் சொல்ல முனிவர்களுந் தேவர்களுங்
கண்டகத்து நெஞ்சங் களிகூர்ந்து கட்டுரைப்பார்
"தேனுலவுந் தாரானே தேசத்துக் கேபுகுந்து
வானுலகந் தன்னை மறந்தனையே?" வென்றுரைத்தார்
"வல்ல சுரர்வந்து வானுலகத் தேபுகுந்து
[9]நல்ல சுரர்தம்மை நடுக்கங்கள் செய்தமையாற்
பத்தரே யான பழவடியார் வாழ்வான
நித்தனே பொன்னுலகு நின்காவ லாம்போதும்
[10]ஆய ரிடுப்போதும் அச்செறியு மன்றினிலே
[11]மாயனே நின்பேர் வசுதேவ னென்றுசொன்னார்
நினதுண்மை விட்டுணுவே [12]நின்னைப் பயந்தார்கள்
கனகன்னி [13]யாயுதிகள் காசிபன் சாபத்தால்
வேந்தர் குலத்தோர் வேறல்ல" [14]வென்றுரைத்தார்
போந்த முனிவர் புவனே சுரனென்னும்
[15]வேந்தர் களிக்க மிகுவிறகு பாற்சேனை
ஆகுதி வேட்டினிய அபிசேக முஞ்செய்து
வேத முறையும் மிகுபவிசும் தானடத்தி

---

1. தானுள (த)
2. அண்டருகந்த (ஸ்ரீ)
3. மண்டலம் போல் (த)
4. மச்சமுற்றுய் (த)
5. நெடியோன் (த)
6. வணங்கி (ஸ்ரீ)
7. அபிசேக முஞ்செய்து (ஸ்ரீ)
8. அண்ட ருலகத் தமருக்குந் தேவர்கட்கும்
   முண்டகன் சொல்ல முனிவர்களுந் தேவர்களும்
   மண்டி மதுரையிலே மாதவனை வந்து கண்டார் (த-ஸ்ரீ)
9. நல்ல அசுரர் நடுக்கங்கள் செய்தனர்காண் (த)
10. ஆயரும் பேரும் மச்சாரவு மன்றியிலே (த)
11. மாயனே நினைந்திருப்போம் வாசுதேவனே யென்றார் (த)
12. நீயே முன்னொருகால் (ஸ்ரீ)
    நின்னைப் பயந்தாரும் (த)
13. யாயிதிகள் (த)
14. வென்றுணர்த்தி (த)
15. வேந்த னளிக்க மிகுவிறகு பாற்சேனை (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கோ னிவனென்று பறையறைந்து ஏழுலகும்
மங்காத வண்ணன் மகிடவாட்சியங் காத்தோன்
தண்டுந் தனிவாளுஞ் [1]சாரங்கமு முடனாய்
மண்டுகரு டாழ்வானை [2]வாயுதேவ னுங்கண்டான்
[3]மாலா யுதமஞ்சில் வண்சங்க மொன்றொழிய
நாலா யுதமும் நாரணன் கண்டருளி
அண்டர் பதிகாக்க ஆழி தனையேவித்
தண்டமும் வாளும் தனுவு முடனேவித்
[4]தீதான தில்லாச் சிறீகெருட ஆழ்வானைப்
[5]பாதாழ லோகம் பலபதமுங் [6]காரெனவே
[7]திண்ண முடனே திரிபுவனந் தான்காக்க
[8]எண்ணி யிருந்தா னெழில்நெடுமா லம்மானை
எம்மானைப் போற்றி இருடிகளுந் தேவர்களும்
தம்மால் முடிகவிழ்த்துத் தாமனுக்கங் [9]கேதுரைப்பார்
"மண்ணுளர் வாழும் மதுரைத் திருநகரில்
விண்ணுளும் நாயகனே வீற்றிங்கே நீயிருந்தால்
உன்பாதம் கண்ட உலகத்தோ ராரெனினும்
பின்பாக முத்தி பெறுவதற் கையமில்லை
[10]மண்ணுட்டி லுள்ள மானிடவர் வந்தாக்கால்
[11]விண்ணுட் டிடமுண்டோ [12]வேந்தே" யெனத்தொழுது
"தற்பால னை சராசந்தன் முன்னிலையாய்
மற்பயிலுந் தோளாய் மதுரைப்பதியைவிட்டுத்
தேங்கு கடலிற் றிருநகரே செய்தருளி
ஆங்கிரு நீ"யென் [13]றகன்றார் தவத்தோரும்

## சாந்துபலி காசியன் கதை

வானவருந் [14]தேவர்களும் வானத்தே போனபின்பு
சீதர னை சிறிவாசு தேவனுந்தான்
தந்தையும் [15]தானும் தமயனும் தம்பியுமாய்ச்
சிந்தை மகிழ்ந்திருந்து செங்கோல் செலுத்துகையிற்
[16]புகலும் படைத்தொழிலும் பொற்றொழிலும் நான்மறையுஞ்
சகலமும் வல்ல சாந்துபலி காசியென்பான்

---

1. சர்வகமு முண்டாய (ஸ்ரீ)
2. வாயுதேவன் மைந்தனை (ஸ்ரீ)
3. மாலா யுதம்திகழ் வாசச் சிகரம்மொளிக்க (ஸ்ரீ)
   மாலார் யுதங்கள்தனில் வாழ்ச்சக்கர மொழிய (த)
4. சீரால் மிகநல்ல (ஸ்ரீ)
5. பாரேழு லோகமும் (ஸ்ரீ)
6. காரென்று (த)
7. சேதியுடனே (ஸ்ரீ)
8. ஏவி யிருந்தான் இயல்நெடுமா லம்மானை (ஸ்ரீ)
9. ஏதுசொல்வார் (த)
10. மண்ணுட்டி லுள்ள மாண்டவர் வந்தடர்ந்தால் (ஸ்ரீ)
11. என்னுட் டிடமுண்டோ ஏந்தலே என்றுரைத்து (ஸ்ரீ)
12. வேந்தே உனைத்தொழுது
13. அகன்றாரே தேவரெல்லாம் (த)
14. ரிஷிகளும் (ஸ்ரீ)
15. தாயும் (க)
16. புகலும் படைக்கலமும் (க)
    போர்த்தொழிலும் நான்மறையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து புகுந்து மணிவண்ணனைக்[1] கண்டு
உந்து பரியும் உலாவு மணித்தேரும்
மற்றவரை வெல்லும் வகை[2]யான விற்றொழிலும்
ஏற்ற படைத்[3]தொழிலு மியற்றுவே னென்றுசொன்னான்
சொன்ன மறையோனைத் தூயோனு[4]முள்மகிழ்ந்து
"அன்ன வகையே யருளா யெமக்'கென்றான்
மைத்த நிறத்தனுக்கும் மற்றவன் அண்ணனுக்குஞ்
சத்திய சாத்தகிக்கும் சாந்துபலி காசியவன்
[5]கத்துங் கடற்புவியிற் கத்திரியர் மைந்தருக்கும்
ஒத்த சடங்கும் உபநயன மும்முடித்து
ஆனைத் தொழிலு[6]மசுபமொரு எண்ணான்குந்
தானைத் தொழிலுமுயர் சாத்திரமு மெண்ணான்கும்
[7]வானத் தேரேறும் வகைகளும் மற்றுளவும்
பஞ்சா யுதத்திற் படைவழக் குள்ளதுவுங்
[8]கஞ்ச நயனற்குக் கற்பித்தா னம்மானை
பொருதப் படைதனக்குப் போதித்த வேதியனைக்
[9]குருதட் டனைநீ கொள்ளென்றா னம்மானை
மன்ன னுரைக்க மறையோனு மேதுசொல்வான்
"என்ன தரினு மெனக்கொன்றுஞ் [10]சிந்தையில்லை
[11]புட்கரனைப் போற்றிப் புடையிலே [12]நிற்பதல்லாற்
[13]பாற்கர னென்றுரைக்கப் பட்டா னொருவசுரன்
[14]உற்றியான் பெற்ற ஒருபிள்ளை தன்னையவன்
[15]பற்றி விழுங்கிப் படுகட லுட்புகுந்தான்
கோவிந்தா நீயவனைக் கொன்றென் குலமகனை
[16]ஆவி யுடனே யருளெ"ன்றா னம்மானை
கண்ணனுஞ் சம்மதித்துக் கார்கடலை யண்டிநின்று
வண்ணச் சிலையை வளைவித்து நாணெறிந்து
மீண்டுங் கருங்கடலை வெய்யோனும் பார்த்துரைப்பான்
"பண்டொரு நாளென் பாணவளங் கண்டறிவை
நின்பா லடைந்த நிசாசரனைக் காட்டுதியோ
என்பாணத் தாலே எரியுதியோ?" என்று சொன்னான்

---

1. நோக்கி (ஸ்ரீ)
2. வகை சொல்லக் கேட்டருளாய் (ஸ்ரீ)
3. பயிற்சி இயற்றுவாய் யென்றுரைத்தான் (ஸ்ரீ)
4. பார்த்துரைப்பான் (ஸ்ரீ)
5. மெத்தக் கடற்புவியில் மேன்மையான மைந்தருக்கும் (ஸ்ரீ)
6. ஐவகையு மெண்ணான்கும் (த,ஸ்ரீ)
7. மானத்தேர் (த)
8. கஞ்சாண்டன் அண்ணனுக்கு கற்பித்தா னம்மானை (த) (ஸ்ரீ)
9. குருதட்சனை கேட்டுக் கொள்ளென்றான் கொற்றவனும் (ஸ்ரீ,த)
10. இச்சையில்லை (ஸ்ரீ)
11. போரானைப்போற்றி (ஸ்ரீ)
12. நின்றுகொண்டு (ஸ்ரீ)
    நிற்கையிலே (த)
13. தாரணன் (ஸ்ரீ)
14. நோற்று (ஸ்ரீ)
15. பாய்ந்து (ஸ்ரீ)
16. ஆவியுந்தானே (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தங் கலங்கிச் சமுத்திர [1]தேவதையும்
முத்தும் பலபொருளும் முன்குவித்துக் [2]கைதொழுது
"மெய்யனே விட்டுணுவே வேதாவைப் பெற்றவனே
ஐயனே எத்தனையும் அஞ்சேனே நானுனக்கு
அண்டுநீர் தேடும் அசுரன் கிடந்தமட்டும்
மிண்டுநீர் வாங்கி வெளிதருவே" னென்றுசொல்லி
இருபத்து மூன்று யோசனை யுள்வாங்கிப்
பொருவற்ற மாக்கடலும் போனதுவே யம்மானை
காட்டிக் கொடுத்துக் கனகடலும் போனபின்பு
தாட்டிய மாமலைபோலத் தானவனுந் தான்கிடப்பக்
கண்டு கரியோனுங் கணையொன்று தான்தொடுத்துத்
[3]துண்டிக்க வெய்தான் துணிபட்டான் பாற்கரனும்
பாற்கரன் கூறுபடப் பாங்கான மேனியிலே
மிக்கநூற் றுயிரம் வெண்சங்கு தற்சூழ
வெங்கதிர் வீசும் மிகுபஞ்ச சன்னியமாஞ்
சங்கு வெளிப்பட்டுத் தானின்ற தம்மானை
ஆயர் பதியில் அவதாரம் செய்வதற்கு
மாயன் வருநாள் வடவிருட்சஞ் தன்னில்வைத்த
சங்கு தனை[4]யமுத சந்திரனென் றேவிழுங்கிப்
பொங்குகட லிற்கிடந்த போரசுரன் தன்னுடலில்
நின்று வெளிப்பட்டு [5]நெடியோ னிடக்கரத்திற்
சென்றுபாஞ்ச சன்னியமுஞ் [6]சேர்ந்ததுவே யம்மானை
முண்டச் சங்கை முனிவாக வெம்மையுடன்
[7]உண்டவனை நோக்கி உறுநாணொலி யெறிப்பத்
[8]துன்னுளி பட்டகன்று தோன்றிய கேசரிதன்
நாணொலி கேட்டு நமனும் நடுநடுங்கி
இன்ன வொலியை இராகவன் றன்னுடைய
விண்ணு ணொலியாய் விளம்பலாம் நாமென்று
மாணிக்கம் முத்து வயிடூரியம் வயிரங்
காணிக்கை யிட்டுயமன் கண்ணனை வந்துகண்டு

---

1. தேவியுந்தான் (த)
2. கண்டருளி (த)
3. துண்டிக்க வேதான் துணிபட்டான் புட்கரனும் (த)
   துண்டிக்க வெய்தான் துணிபட்டான் வல்லசுரன் (ஸ்ரீ)
4. சங்குகனை யவனும் (ஸ்ரீ)
   சங்கு தனையுமந்த (த)
5. நின்றான் (ஸ்ரீ)
6. சேர்ந்ததுகா ணம்மானை (த,ஸ்ரீ)
7. உண்ட வசுரனை நோக்கிச்சிறு நாணெறிய (த)
8. துண்ணொலி பட்டன்றே தோன்றிய கேசரிதன் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]மென்மே லடிபணிந்து வேண்டு நயஞ்சொல்லி
[1]என்மேலே தான்கோபம் ஏதென்று னம்மானை
அந்தகன் றன்னை யருளாளன் பார்த்துரைப்பான்
[2]இந்த மறையோ னெழில்மகன் றன்னைமுன்னாள்
[3]பாற்கரன் தான்விழுங்கப் [4]பட்டான் உயிர்தன்னை
மிக்க வுயிருடனே மீளத்தா வென்றுசொன்னான்
சாற்றும் புகழ்மறையோன் றன்மகனை யப்பொழுதே
கூற்றுவன் காட்டிக் கொடுத்தான்கா ணம்மானை
இன்சொற்கொண் டேபோற்றும் எம்மடியா ரானவரை
அஞ்சச்சொல் லாதே அந்தகனே யென்றுரைத்துக்
காலன் தனக்குக் கரியோன் விடைகொடுத்துக்
கோல முடனே குருதட்ச ணையாக
மைந்தனை யீந்து மறையோனைப் போகவிட்டு
அந்த மதுரை [5]அணைந்தார்கா ணம்மானை

## சராசந்தன் போர்

இராச வளநகரில் எங்கோ னிருக்கையிலே
சராசந்தன் தன்னிலமை [6]சாற்றக்கே ளம்மானை
தன்மருகன் கஞ்சன் தகர்ந்தா னெனக்கேட்டு
விம்மல் பொருமலுடன் வெய்துயிர்த்து நெஞ்சழன்று
[7]"கஞ்சனைக் கொன்றவனைக் கட்டுவிப்பே" னென்றுசொல்லி
நஞ்செனக் கோபித்து நாலுதிக்கு மோலைவிட்டு
ஆரளந் தாலு [8]மளவுபடாச் சேனையுடன்
பாரளந்தான் மேலே படையெடுத்தா னம்மானை
தன்படையி லுள்ளவருந் தனைச்சேர்ந்த மன்னவரும்
வன்படையுங் கூட்டி வழிப்பட்டா ரம்மானை
ஆறும் மலையும் அடவியுந் தான்கடந்து
நாறுமலர்ச் [9]சேனர்பதி நாட்டினையும் விட்டகன்று
தேவ கிரியேறிச் சென்றிருந்த தேர்வேந்தர்
மேவிய சேனை [10]விசயத்தைக் கொள்ளைகொண்டு
ஆன மதுரைக் [11]கணித்தாய் விடுதிகண்டு
சேனைச் சமுத்திரத்திற் சென்றிருந்தா ரம்மானை

1. பேணி யடிபணிந்து பேராள னைப்போற்றி
திருமாலே கோபமேது செப்பென்று னம்மானை (ஸ்ரீ)
2. ஏற்று (ஸ்ரீ)
3. புட்கரன் தான்விழுங்கிப் போன உயிர்தன்னை (த)
4. போட்டான் உயிர்தன்னை (த)
5. அமைந்திருந்தா ரம்மானை (த)
6. செப்பக்கே ளம்மானை (த)
7. கஞ்சனைக் கொன்றவன்மேற் கடும்பழி தீர்க்கவென்று (ஸ்ரீ)
8. அளவுபட வொட்டாமல் (ஸ்ரீ)
9. சேனாபதி நாட்டையும் தான்கடந்து (த,ஸ்ரீ)
10. விசயத்துக் கேற்றபடி (ஸ்ரீ)
11. கருங்கால் விடுதிகட்டி (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீய சராசந்தன் சேனையுடன் வந்ததனை
மாயவனுங் கேட்டு வலியபல தேவனையும்
உக்கிர சேனனையும் "உங்கள் படையொடும்போய்ப்
புக்கவ னோடே பொரு"மென்று போகவிட்டான்
மாய னுரைக்க மகிழ்ந்தங் கிருபேரும்
பாயும் பரியும் படைதேருஞ் சூழ்ந்துவரச்
[1]சாரத் திரண்டு சராசந்தன் தன்மேலே
சாயப் படையுடனே தாக்கினர்கா ணம்மானை
இரண்டு படையும் [2]இசலிப் பொரும்போரிற்
புரண்டு [3]படையுடனே போர்வீரர் மாண்டொழிந்தார்
ஒருவர்க் கொருவர் உடையாம லோடாமல்
இருபத் தொருநா ளிடைவிடா தேபொருதார்
மற்றது கண்டு மதுரை யணுகிநின்ற
[4]கொற்றவ னோடே குருநெதி யேதுரைப்பான்
"காயும் படையுங் கடவுளுங் [5]கோள்விதியுந்
தீயு மரவுஞ் சிறிதென் றிகழ்வர்களோ
உன்பங்கா லுள்ள உரவோரெல் லாமழைத்து
வன்பங்கால் மோதினால் மாட்டா னுனக்"கென்றான்
ஓது மொழிகேட் டுடனே சராசந்தன்
தூதர் தனைவிடுத்தான் [6]தூதரு மப்பொழுதே
[7]அன்னவன் பாங்கான அரசர்க்குப் போயுரைக்கத்
துன்னும் படையுடனே சூழ்ந்துவந்து கண்டார்கள்
கண்ட வரசர்களிற் காலயாவண்ண னென்பான்
சண்டை வலியுடைய சராசந்த னுக்குரைப்பான்
[8]ஈசனும் மாலும் எரியும் பெருங்காற்றும்
பேசி லெனக்கெதிரோ பேரரசர் கோமானே
கஞ்சன் முகாந்திரமாய்க் கனமுனிவர் சாபத்தால்
இங்கிவனைக் கொல்வேன் நா"னென் றெழுந்திருந்தான்
மற்றவன் சொன்னதுவும் மன்னர் திரண்டதுவும்
உற்ற விசளமெல்லாம் [9]மொற்றுட்கள் சொற்கேட்டு

---

1. சாரத்திரண்டு (த,ஸ்ரீ)
2. இயலப் பொரும்போரில் (ஸ்ரீ)
3. கரியுடனே (ஸ்ரீ)
4. கொற்றவற்கு நேரே (ஸ்ரீ)
5. கோள்பிணியும் (த)
6. தூதர்போய் மற்றுமுள்ள (ஸ்ரீ)
7. அன்பங்கிலாத (த)
8. ஈசனு மாலு மரியும் பெருங்கூற்றும் (த)
9. முற்றுட்கள் சொற்கேட்டு (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்த தமயனையும் உக்கிர சேனனையுஞ்
சத்திய சாத்தகியுந் தக்க வகுரனையும்
வீர சனன்தனையும் மிகுவிசய போசனையுஞ்
சேர வரவழைத்துச் சேர்ந்தவர்கள் தம்முடனே
[1]சால அவர்தம்மைச் சராசந்தன் கூட்டியதுங்
காலையா வண்ணன் கறுவிய செய்தியையும்
ஆதி புருடன் அருளினன் மற்றவர்க்கு
ஓதிய மாதவனுக் குக்கிர சேனன்சொல்வான்
"தமைச்சேர்ந்த மன்னருக்குத் தாமுந் துணைசெய்தால்
எமைச்சேர்ந்த மன்னவரை யாமுந் துணைபழைத்துக்
கூட்ட முடனிருந்தாற் கொல்வாரோ நம்மை"யென்று
பாட்டன் மொழியப் பலதேவ னேதுரைப்பான்
மலையப்பொரு மன்னருடன் வந்தசரா சந்தனையுங்
குலையப் பொருதுநான் கொல்வே னெனவெழுந்தான்
தன்தமைய னைத்தடுத்துத் தாமனுமங் கேதுசொல்வான்
[2]மன்னனுய் வாழும் மருமகன் பட்டமையால்
மாமனு மெய்திவந்தான் [3]மற்றகற்கா யூரைவிட்டு
[4]நாமவண மெய்தி நடப்பதே" நன்றென்றான்
[5]"அன்றியுங் கேளீர் அவனுடனே வந்தமன்னர்
வென்றிகொள லல்லாது மீளா ரதுவன்றிக்
காலையா வண்ணனுக்குக் காலனு மஞ்சிடுவன்
மேலு மவனுண்மை விளம்பக்கே ளம்மானே
மஞ்சு கலைய வருகிரணந் தானடையும்
அஞ்சு கரப்புயத்தா னுதித்தன் வங்கிசத்தான்
[6]காருகிப னென்பானோர் கத்திரிபன் பன்னுளும்
பாருலகோர் கொண்டாடப் பங்கய மாமலர்போற்
பெற்று னொருநூறு பிள்ளையந்தப் [7]பிள்ளைகளை
[8]அற்றானென் றன்றியிலே அந்தகன் கொன்றொழிக்கக்
காசிபனை நோக்கிக் கனநாட் டபசுசெய்தான்
ஆசில் முனியும் அவனெதிரே தோன்றிநின்று
அந்தகன் றன்னு [9]லசுரராற் [10]பூத்தாற்

---

1. சால வரசர்களை (த)
2. மன்மையனைய (த,ஸ்ரீ)
3. மற்றுதுக்கா யூரைவிட்டு (த,ஸ்ரீ)
4. நாமவனைக் காணுது நடப்பதே நன்றென்றான் (ஸ்ரீ)
5. அன்னவரே கேளீர் (ஸ்ரீ)
6. காசியனென் பானோர் (த-ஸ்ரீ)
7. பிள்ளையெல்லாம் (த,ஸ்ரீ)
8. ஆற்றானோர் ஆண்டினிலே (ஸ்ரீ)
9. அரசரால் (த)
10. ஆயுகத்தால் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்ததமுஞ் சாகாத சந்ததியோ டோர்மதலை
ஈந்தோ முமக்கென் றியம்பினர் [1]மாவிருடி
சாகா னவனும் சராசந்த னுமெளிதாய்ச்
[2]சாகானென்'' றுனப்பாற் சாத்தகியு மேதுரைப்பான்
''மாற்றுப் படையரசர் [3]மாறெதிர்த்து வந்தாக்கால்
ஆற்றுந் தனையு [4]மமர்பொர வாற்றுக்கால்
*மாட மதில்சூழும் வனப்பு மிகவுடைய
நாடுவிட்டுப் போவர்களோ [5]நாட்டோ டிருப்பர்களோ
++
மாற்றார் குடைந்து வனம்புகுந்து வாழுமதிற்
போய்த்தான் களத்திற் [6]பொருதுபட்டால் நல்ல''தென்று
ஊரைவிட்டுப் போக [7]உடன்படா தேயிருந்த
[8]தாரைபட்ட பொற்றேரட் சாத்தகியைத் தானிருத்தித்
[9]தோற்றென்று மாற்றான் தொடர்ந்துவரும் போதினிலே
ஏற்கவே போவ [10]தியல்''பென்று தான்மொழிந்தான்
நீர்க்கடல் வண்ணன் நெடுந்துடி சாற்றுவித்து
ஊர்க்குடி யோடே உடனெழுந்தா னம்மானை
மெத்துங் குடியுடனே வேந்தரும் வெம்படையும்
வைத்த நிதிபலவும் மைந்தரும் மங்கையரும்
எல்லாரும் போக இறைவன் குடியெழுந்து
மல்லாரும் தோளான் வழிகொண்டா னம்மானை
காடு மலையுங் கனவரையுந் தான்கடந்து
நீடுங் கனிபலவும் நீங்கி வழிநடந்து
அடர்ந்தநீர்க் குண்டகழி யாற்றுக் கருகாகப்
படர்ந்தகோ வென்னும் பருபதத்தில் [11]விட்டிருந்தார்
வந்த குடிகளையும் மன்னரையு மங்குவைத்துக்
கந்தமலர்த் தொடையான் காலையா வண்ணனைநான்
கொல்லுவித்து மீள்வனென்று [12]கோபித்துப் போமளவில்
ஒல்கித் தொடர்ந்துசென்று உக்கிர சேனன்சொல்வான்
''யாவரு மங்கிருக்க இப்போது தனியேபோய்
கோவேயில் வண்ணனைநீ கொல்லும்வகை சொல்லுமென்றான்

---

1. மாமுனியவ் (ஸ்ரீ)
2. போகா னென்றனப்போது சாத்தகியு மேதுரைப்பான் (ஸ்ரீ,த)
3. மாறெதிர்ந்து வந்துநின்றால் (த)
4. அமர்பொருவதே கடமை (ஸ்ரீ)
* த-ஸ்ரீ-பிரதிகளில் இல்லாத ஒருவரி
5. நாடோடும் போவார்களோ (த)
நாடாளும் வேத்தரவர் (ஸ்ரீ)
++ ஏடுபட்டதார்வேந்தர்க் கித்தனையே யென்றுசொல்லி-இவ்வரி
இந்த இடத்தில்-த-பிரதியில் மட்டுமுள்ளது
6. பொருதுவதும் ஆகாது (ஸ்ரீ)
7. உடன்படாதவர்போல் (ஸ்ரீ)
8. தார்பட்ட பொற்றேரன் (த,ஸ்ரீ)
9. தாக்கென்று (த,ஸ்ரீ)
10. எழிலென்று (த)
எளிதோ எனநினைந்து (ஸ்ரீ)
11. வீற்றிருந்தார் (ஸ்ரீ)
12. கோவிந்தன் சொல்பளவில் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னவன் கேட்க "அவனைநான் கொல்லும்வகை
மன்னவனே கேளுமென்று மாய னெடுத்துரைப்பான்
வாளமர் வேட்டசுரர் வானவர்மேற் றுக்கியநாள்
சோழர் குலத்துதித்த தோன்றல்முசு குந்தனென்பான்
வானோர்க் கரசாம் மயில்வா கனனுடனே
சேனா பதியாகத் தேவருக்கா யன்றுசென்று
ஊனுறக்க மற்று உற்று மிகநெடுநாள்
ஆர்த்துப் பொருது அசுரர்களை வெல்லுமே
பார்த்து மிகவானோர் பயங்கெட்டுப் போனபின்பு
[1]முண்டக வேந்தன் முசுகுந்த னைநோக்கி
[2]"வண்ட லருந்தாராய் வரங்கேட்டுக் கொள்"ளென்றான்
அத்திறற் றோளான் அவனுக் கெடுத்துரைப்பான்
"நித்திரை தன்னை [3]நிகழ்த்தேன் மிகநெடுநாள்
அன்னித் திரைகொண் டடியே னெழுந்ததல்லால்
என்னித் திரையை இடையே எழுப்பினவன்
வேதனே நான்பார்க்கில் [4]வீயவரந் தா"வெனவே
[5]தானுமே யந்தவரந் தந்தோ மெனவகன்றான்
[6]கூறநான் கேளும் கூர்வாள் முசுகுந்தன்
எழுநான்கு யோசனை யிலங்கிய மாமலையில்
எண்டிசையோ ரெய்யா ரத்னமணி மண்டபத்தே
கண்டுயில்வான் தன்னிடத்தே காலையா வண்ணனைநான்
[7]ஓர்வகையா னாக்கி யொழியென் றொழித்தபின்பு
[8]ஆர்வமுடன் நானென் றவனை யடித்தெழுப்பப்
[9]பார்ப்பான் விழித்திடுவன் பட்டிடுவான் அங்கவனும்
[10]கோப்பிதுவே நல்லதென்று கொற்றவனுக் கேயுரைத்தான்
கோவிந்த னீதுரைத்துக் கொற்றவனைத் தானிருத்திச்
சேவிந்த வண்ணனைநான் செயிக்கவே வேணுமென்று
சங்கு நிறத்தானைத் தானங்கு காவல்வைத்து
அங்குநின்று போந்து [11]அணிமதுரை யுட்புகுந்து
செச்சை புனைந்து திருமுடியுந் தான்புனைந்து
கச்சை புனைந்து கதிர்வாள் [12]மருங்கணைத்து

---

1. முருகவடி வேலன் (ஸ்ரீ)
2. வண்டலர்ந் தாராய் வரங்கே ளெனவேதாய் (ஸ்ரீ)
3. இகழ்த்தேன் (த) இழந்தேன் (ஸ்ரீ)
4. வெந்துநீ றுவதற்கு (த)
5. தரவேணு மந்தவரம் தந்தோமென வகன்றார் (த)
6. கூறியநாள் அவ்வளவில் (க,ஸ்ரீ)
7. ஓர்வகையாற் காட்டி ஒளிப்பே னவனுடனே (ஸ்ரீ)
8. ஆர்வமுட னெரென் றவனை யவனெழுப்ப (ஸ்ரீ)
9. பார்ப்பான் விழித்தலுமே பட்டிடுவ னம்மானை (ஸ்ரீ)
10. ஏற்கவே யித்தகைமை யல்லால்வே றுண்டோகாண் (த,ஸ்ரீ)
11. அழைத்துவரு வேனென்று (ஸ்ரீ)
12. கதிர்வாள் புறத்தணிந்து (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன பணிபூண் டடைக்கா யமுதுசெய்து
நானொருவ னாகத் தனியே எழுந்தருளித்
தேனூறு தண்டுளபச் செழுந்தா மரைக்கண்ணன்
வானுற வோங்கு [1]மணிக்கோ புரத்தேறி
ஒன்றான மேரி [2]லுதித்தகரு ஞாயிறுபோல்
நின்று னழகாக நெடியமா லம்மானை
மாலையங்கே கண்ட வாறே யொருதூதன்
காலையா வண்ணனுக்குக் கட்டுரைத்தா னம்மானை
சீற்றம் பெரிதாகிச் [3]சீக்கிரத்தே சென்றுகண்டு
ஏற்ற பெரும்படையா லெங்கும் வளைந்துகொண்டு
[4]மதில்நின்ற கோபுரத்தில் மாலவனைக் கண்டனன்று
எதிர்நின்று காலையா வண்ணனு மேதுரைப்பான்
"பொற்களிற்றைக் கொன்றதுவும் பூதனையை வென்றதுவும்
[5]அற்கவரு கஞ்ச னசுரர்களைக் கொன்றதுவும்
எல்லாச் சமர்த்து மினித்தெரியு" மென்றுசொல்லி
[6]வல்லாண்மை சொன்னவனை மாயோனும் பார்த்துரைப்பான்
[7]மற்போர்க் கமைந்துநின்றேன் மற்போர்க்கு மாட்டுவையோ
விற்போர்க் கமைந்துநாம் மீளவோ" சொல்லுமென்றான்
என்ன மால்சொல்ல இயல்வண்ண னேதுசொல்வான்
"[8]உன்னைநான் கொல்ல உறப்பாசை சொல்லிவந்தேன்
மறங்கடி தானாலும் [9]மற்போர் மிகப்பொருது
[10]புறங்கடிந்தார் தம்மைப் பொன்றுவித்தல் நியாயமென்று
துணைத்தொரு பேரைத் துடைதட்ட வில்லையென்று
[11]பிணைதருவை யானற் பொருவோ" மெனவுரைத்தான்
அங்கவன் சொல்ல அரங்கத்தா னென்சொலுவான்
"இங்குநீ வந்ததுகண் டெல்லோரும் போயொழிந்தார்
உற்றார்கள் போன துணராமற் கண்டுயின்றேன்
மற்றூர் பிழைப்புண்டார் வதைப்புண்டே னனு"மென்றான்
ஆண்டங்கு மற்போர்க் கவனும் பொருந்தியபின்
மீண்டுந் திருமால் விளம்பலுற்று னம்மானை

---

1. மதிற்கோபுரத் தேறி (த)
2. உதித்தெழுந்த சூரியன்போல் (த,ஸ்ரீ)
3. சிக்கென்னத் தான்சென்று (த)
4. மடுநின்ற (ஸ்ரீ) மதுநீண்ட (த)
5. அங்கேவரும் (ஸ்ரீ)
6. மகாவண்மை (ஸ்ரீ)
7. மல்லுக்கு (ஸ்ரீ)
8. கண்ணனை நான்கொல்ல (த)
9. மற்போரினல் (த)
10. குறங்கடிந்தார் தம்மைக் கொல்லவே நியாயமில்லை (ஸ்ரீ,த)
11. பிணைத்தொரு வாய்ப்போர் பொருவேனென மொழிந்தான் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க் கருத்தெல்லாம் பொருந்திருப்ப ஞனுலுங்
காற்கருத் தில்லையென்பார் காலையா வண்ணனுக்கு
"எட்டியா ஞேடுகிறேன் என்னைநீ யோடிவந்து
தொட்டுவா யாமங்கே தொடங்குவோம் போ"ரென்ருன்
கூடென்ருன் மற்றவனும் கோபுரத்தி னுங்குதித்து
ஓடென்ருன் மற்றவனும் ஓடலுற்ரு னம்மானை
கரியவன் முன்னேடக் காலவண்ணன் பின்னேட
இருவருமோடி யிளைத்தார் நெடுந் தூரம்
கைமே லகப்படும்போல் காலையா வண்ணனைமால்
பொய்மான்போற் கொண்டு போயினன்கா ணம்மானை
[1]மும்மலமு நீங்கு முருகுந்தன் கண்டுயிலும்
வன்மலைபோய்ப் புக்கான்காண் மற்றவன்றன் கண்காண
ஓடி மலையில் ஒழித்தான் ஒளிநெடுமால்
தேடி யவனும் திரிந்தங்கு காணுமல்
"விற்போ ரொழிந்துதான் மெய்போலப் பொய்பேசி
மற்போர் குறித்ததற்கு மற்றதற்கு மொத்ததற்பின்
பூட்டாங்கம் பண்ணியவன் போய்ப்பிழைத்தா னென்றெண்ணி
ஓட்டத்துக் கோடி ஒழித்துநீ [2]யோடுவையோ
உன்கா ரியமொழித்து [3]உன்னுறவா யுள்ளவர்கள்
எங்கே யிருந்தாலும் இப்பொழுதே கொல்லுகிறேன்"
என்றங் குரைத்து இயல்வண்ணன் பின்னையுந்தான்
[4]குன்றுங் குழியும் குளிர்சுரமுஞ் சோலைகளுந்
தேடித் திரிந்து செழுமண் டபந்தன்னைக்
கூடினன் கண்டான் குகையிற் றுயில்வானை
[5]முந்நாட் டுயிலும் முசுகுந்த னென்பானைப்
பின்னுகத் தான்தொடர்ந்த பேராளன் என்றெண்ணி
ஒன்றி அவன்முடியை யோர்கையாற் பற்றியெற்றிக்
கன்றிக் கரந்திமிர்த்து கண்சிவந்து பல்லிறுக்கி
எற்றிஞ னீரற் குடலிலும் நெஞ்சகத்தும்
ஒற்றினன் தானே டுறப்பாய்ந்தா னங்குமிங்கும்

---

1. முன்மலை நீங்கி (த)
2. போகுவையோ (த)
3. உன்னுற்ரு ரானவர்கள் (த)
4. குண்டுங் குவடும் குளிர்புனையுஞ் சோலைகளும் (த)
5. முன்னுளே துஞ்சு முசுகுந்த னென்பானை (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கு மவனுவி துணியப் படமோதி
நீங்கியும் நீங்காமல் நிற்பான் முகம்நோக்கி
ஓது மிகுவிசய பூசணனென் பானுரைப்பான்
"பேதை யிராசாவே பின்முன் னறிந்துகொல்லாய்
மற்றுநீ பின்தொடரு மாயோ னுெழித்தாக்கால்
சுத்தவா னுகத் துயிலுமுசு குந்தனைநீ
கொல்லாதே யென்முன் குணவிசய பூசணனைச்
செல்லப் பிடித்துச் சினத்தினு லேதுசெய்தான்
"மெய்யாகப் பொய்பேசி விடுவிக்க வந்தவுன்னைக்
கையினுற் கொல்வ" னென்று காய்ந்துகொன்று னம்மானை
[1]ஆண்டிவனைக் கொன்று அவியாத கோபமுடன்
மீண்டுந் துயில்வானை [2]மேலு முதைக்கலுற்முன்
[3]சீறியே நெஞ்சம் திறக்கப் புடைத்தலுமே
வீரி முசுகுந்தன் மிகுகோபந் தாளுகி
முற்றுக் கணையால் முசுகுந்தன் கண்விழித்துச்
சித்திர மாமுனிவோன் செப்புமொழி தப்பாமற்
பார்த்தா னியல்வண்ணன் பட்டான்கா ணம்மானை
ஆர்த்த தவன்தூசி அவனியெல்லா மம்மானை
[4]நாமனமோ டாசரிக்கும் நக்கன் விழிவிழிக்குங்
காமனைப்போ லாயினுன் காலைய வண்ணனுமே
களித்தா னெளிதாகக் காலையாவண் ணன்படவே
ஒழித்தான் வெளிப்பட்டான் ஒளிமுறுவல் செய்தருளி
முன்னவன் தோன்றி முசுகுந்தன் பாலணுக
அன்னவன் தானு மவனை யடிதொழுது
"இன்னித் திரைசெய் தெழுகின்ற வேளையிலே
நின்னைத் தரிசித்தேன் [5]நின்போ லெவருடையார்"
என்று துதித்து "யான்துயில் போந்தபின்பு
சென்ற யுகமும் சென்மித்த பேர்களையும்
மூவர் முதலே மொழி"யென்ன அன்னவற்கு
தேவாதி தேவன் செப்பலுற்று னம்மானை

---

1. ஆண்டிவனைக் கொன்றே ஆர்வித்த கோமானும் (ஸ்ரீ)
ஆருத கோபமுடன் (த)
2. மெய்யிலுறத் தகர்த்தான் (த)
மெய்யுறக் குத்தியுமே (ஸ்ரீ)
3. தேற்றிய (ஸ்ரீ)
4. நாமனே டெதிர்த்த நல்லறிவின்ற விந்த் (ஸ்ரீ)
5. நின்னடியேன் யானுமென்று (ஸ்ரீ)
நின்பே றியாருடையார் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேவர் அசுரர் செருச்செய்த அந்நாளில்
நீள்வரை யுந்திரிந்து நித்திரையிற் போந்தபின்பு
முன்னே நெடுங்கால் முடிவேந்தர் போர்புரிந்தார்
பின்னே நெடுங்கால் பிரமாத் தவசுசெய்தான்
மேலிங் கருமறையோன் வேத னிருக்கையிலே
ஆலிங் கனமென்னும் அவ்யுகமும் நீங்கியபின்
போதன் தனையும் புராந்தகன் சங்கரித்தான்
வேதமும் முச்சுடரும் வேள்வியும் போயொழிய
அவ்வுலக மெல்லாம் அந்தகா லம்படைப்ப
இவ்வுலக மெல்லாம் இருள்மூழ்கக் கொண்டபின்பு
[1]பார்க்குமட வண்ணமாய்ப் பாரமறப் பங்கயத்துள்
மேற்கடவுள் தன்னை வெளிப்படுத்தி வைத்தலுமே
அந்தவுருக் கண்டு அச்சுதனு மவ்வுருப்போய்
முந்து மறையோனும் மூர்த்தியாய் வீற்றிருந்தான்
இதன்பின்னே [2]காதிப உகந்தானுந் தோன்றியபின்
[3]அதனிலுஞ் சுற்றிமிக வார்த்தா ரிராக்கதருங்
காய்ந்து யுத்தம்செய்தார் கழிந்ததங்கு அவ்வுகமுஞ்
சென்றதன் பின்பு சிறந்த திரேதாயுகம்
அவ்வுகந் தன்னில் அரக்கர் முகந்திரமாய்ச்
செவ்விய ராமனுய்த் தீர்த்தோ மதன்பின்பு
தோன்றி நடக்கும் துவாபர நல்யுகத்தில்
இன்றுன் னுடைய இயல்வண்ண முன்னிலையாய்ப்
போந்தேன் நானென்று புருடோத் தமனுரைத்தான்
வேந்தன் மனமகிழ்ந்து வீடுதா நீயெனவே
கண்ணனும் வாய்மலர்ந்து கால முனக்கெனவே
எண்ணரிய வைகுந்த மேற்றுவித்தா னம்மானை
முற்றி முசுகுந்தன் மோட்சமே போனபின்பு
வெற்றி விறல்நெடுமால் மிக்க மலைபுகுந்து
தான்முந்தி வைத்துவந்த தன்சேனை வீற்றிருக்கும்
கோகந்த மாமலையைக் கூடினர்கா ணம்மானை

---

1. ஏற்றமட வண்ணமாய் எழில்மலரப் பங்கயனும் (ஸ்ரீ)
2. இரோதாயு ஸ்ரீ காத்திப (த)
3. அதனிலுஞ் சுத்த வித்தியாவாதா ராக்கிஷரும் (த)
அதுசென்றபின்பு சிறந்த திரேதாயுக (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாளா வரத்தான் வருகாலை யாவண்ணன்
தூளாய் விழுந்தவகை தூதர் சொலக்கேட்டு
தீய்ப்படுஞ் செங்கண் சராசந்தன் கோபமுற்று
மாப்படை யோடு மதுரைப் பதிபுகுந்து
வரிசை பெரிய மதுரையு மண்டலமும்
அரிகேது வென்னும் அரசற்குத் தான்கொடுத்துக்
[1]கோடிக்க மாலிருந்த கோகந்த மாமலையைத்
தேடிப் படையெடுத்துச் சென்றான் சராசந்தன்
ஆங்கதை முன்னறிந்து அம்மலையை விட்டகன்று
பொங்கு கடல்வண்ணன் போயினன்கா ணம்மானை
கொள்ள வருங்கடல்போற் கோகந்தம் போய்ப்புகுந்து
எள்ளத் தனையு மிடைவிடா தேதேடி
தான்கண்டி மாமற் சராசந்த னேதுசொல்வான்
"ஊன்கொண் டுலாவி ஒழித்தோடிப் போனவனை
வன்பிடி யாக [2]வழிகாட்ட நாள்தோறும்
[3]பின்பிடித் தாலும் பிடிபடப் போவதில்லை
[4]அஞ்சியே ஓடும் அவனைப் பிடித்துவந்து
[5]வஞ்சனை செய்ய வழக்கல்ல" வென்றுசொல்லித்
[6]தாண்டு கரிபரிதேர் தன்னைப் புடைசூழ
[7]மீண்டு சராசந்தன் மேவினான் தன்பதியே

## துவாரகாபதி எடுத்தகதை

அன்னவன் போனபின்பு அங்கமலக் கண்ணனுந்
தன்னவ ரோடே தனித்துக் கடற்கரையிற்
கூடாரஞ்செய்து பின்னுங் கொற்றக் [8]கடல்நடுவே
வீடாரஞ் செய்ய விசுவகன்மா [9]வைநினைந்தான்
காவித் தடங்கண் கரியோன் நினைப்பளவில்
மேவிப் பணிந்தான் விசுவகன்மா வம்மானை
மற்றவனைப் பார்த்து மணிவண்ணன் ஏதுசொல்வான்
"சுற்ற முடனே சுகமே குடியிருக்க
உற்ற கடல்நடுவே உன்னுடைய வல்லபத்தாற்
சிறந்த படைவீடு செய்துதர வேணு"மென்றான்

---

1. கூடிக்குலாவுமந்த (ஸ்ரீ)
2. வழிபார்த்து (ஸ்ரீ)
   வழிகாட்டி (த)
3. தேடித் திரிந்தாலும் தெரிபடப் போறதில்லை (ஸ்ரீ)
4. அஞ்சினு ரோடு மவ்விடமெல்லாம் தொடர்ந்து (த,ஸ்ரீ)
5. வெஞ்சுடர் (ஸ்ரீ)
6. தானை கரிபரிதேர் (ஸ்ரீ)
7. மன்னனை (ஸ்ரீ)
8. கடற்கரையில் (த)
9. யழைத்தான் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேந்த னுரைக்க விசுவகர்மா [1]வேதுசெய்தான்
"பாந்த ளணையாநின் பாரிற் புவிமடந்தை
நின்ற லகன்று நெடுங்கடலிற் போய்விழவே
[2]அன்ற ளவனு மரிதா னுகந்தானும்
[3]அண்ட முகடண்ட மாகாச முள்ளமட்டுஞ்
சண்ட வராகமாய்த் தன்னுடைய [4]மாமருப்பில்
ஏந்தி யிருந்தவிட மிவ்விட மாகையினல்
ஆய்ந்தநீ ராழம் அளவுபடா தாகையினல்
[6]மிண்டியதோர் கோப மென்னும் பருவதத்தை
மண்டோ தரனென்னும் வன்பூதத் தைக்கொண்டு
அண்டிப் பறிப்பித்து ஆழமெல்லாந் தூர்ப்பித்து
தண்டா மரையான் சமதல மாக்குவித்தான்
உண்டான நூற்றிருபத் தோர்யோ சனைவிரிவு
எத்தலம் போனலும் இத்தலம்போற் கிட்டாது
[7]வித்தகனே" யென்று விசுவகன்மா கைதொழுதான்
அறைந்த மொழிகேட்டு அரியும் [8]பிரிசமுற்றுச்
சிறந்த சமுத்திரா தேவி தனையழைத்தான்
"நின்மேல் துயில்வேன் நின்னைவிட்டுக் காசினிமான்
தன்மேற் றுயிலத்தான் தக்கதோ தா"னென்றன்
"என்சுற்றத் தாரும் யானும் குடியிருக்க
நின்சுற்றம் வாங்கி நிலம்தா" வெனமொழிந்தான்
திரண்டாள் புவிமாது செல்வனைப் பார்த்துரைப்பாள்
"இரண்டா யிரம்வருடம் இங்குநீ விற்றிருப்பை
பாரில் துயர்தீர்த்துப் பாற்கடலில் நீதுயின்றல்
ஊரிதே யாகு"மென்று உட்கடல் கொண்டுநின்றள்
ஒருநூற் றிருபது யோசனையு முள்வாங்கி
பொருமுன்னீர் வாங்கிப் போனள் புவிமடந்தை
அக்கணந் தன்னி லதனை விசுவகன்மா
ஒக்க நிலந்திருத்தி ஊரெல்லாம் [9]தான்வகுத்து
அட்ட திசையும் ஆறுமலை யுந்தெருவும்
மட்டுற்ற சோலைகளும் வாவிநந் தாவனமும்

---

1. சொல்வான் (ஸ்ரீ,த)
2. அன்றளவனும் அரிதாய் யுகம் திரிந்து (ஸ்ரீ)
3. அண்ட மளவும் ஆகாச முள்ளளவும் (ஸ்ரீ)
4. மேனியிலே (ஸ்ரீ)
5. ஏற்றி (ஸ்ரீ)
6. மிண்டியதோர் கோவர்ண மென்னும் பருவதத்தை (ஸ்ரீ)
7. விசுவகர்மா முடித்து வித்தகனே ஆனதென்றன் (ஸ்ரீ)
8. பிரியமுற்று (ஸ்ரீ)
9. தான்சூழ (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னை வனமுஞ் செழுங்கழுநீர் மாவனமும்
மன்னிய பூங்கா வனமும் வகுத்தருளி
மான கரிதானு மழகு மணிக்கிடங்கும்
வானகந் தோன்றும் மணிமதிலுங் கோபுரமும்
மாடமு மாடரங்கு மண்டபமுங் கொண்டலணி
கூட மிகுத்ததொரு சித்திரகூ டம்பலவும்
வேற்கூடம் வாட்கூடம் விற்கூட மும்மமைத்து
மன்னர்க்கும் வன்னியர்க்கும் [1]மண்டலிகற் குமனையுஞ்
சொன்னத்தி னுலுஞ் [2]சுடர்மணியா லு மமைத்த
நாலு குலமான நற்குடிக்கும் வீடுசெய்து
மேலும் பலகுடிக்கும் மிக்கோர்க்கும் வீடுசெய்து
தூயோன் திருமரபிற் சுற்றத்தார் தங்களுக்கும்
ஆயர் தனக்கு [3]மடையவே வீடுசெய்து
மின்மா மணியாலும் வெண்ணித் திலத்தாலும்
பொன்மா ளிகைகள் புருடோத்து மர்க்கருளி
கோமண் டபமுங் கொலுவிருக்கு மண்டபமும்
மாமண் டபமும் வகைவகையாய்த் தானியற்றி
[4]சிகரமுங் கோபுரமுஞ் செம்மணி யோடைகளுந்
தூற்றப் பதாகை சுடர்வாள் துகள்துடைப்ப
எரியா மாணிக்க மிரவுபகல் தானுகத்
தெரியா வகையால் திசைதோறுஞ் சோதிவிட
தென்னிலங்கை மூதூருந் தெய்வேந் திரன்பதியும்
மன்னு மழகையர்கோன் வான்பதியு மற்றுளவும்
இப்பதிக் கொவ்வா தெனவே வகுத்தருளிக்
[5]கைப்பதி மேனியனைக் கண்டான் விசுவகன்மா
[6]பொன்னுலகி லுள்ளவர்கள் புட்ப மழைபொழிந்தார்
அந்நகரைப் பார்த்து அதிசயித்தங் [7]கேதுசெய்தார்
முன்னிவன் செய்த முதுபதிகள் மற்றதெல்லாம்
இன்ன பதிக்கு [8]இணைபெறு தென்றுசொல்லி
ஒல்லைக் கடலை ஊர்தூர்த்துச் செய்தமையாற்
சொல்லி விதன்பேர் துவார பதியென்று

---

1. மண்டலிகர் தங்களுக்கும் (ஸ்ரீ)
2. சுடர்மணி யாலுமமுத்தி (த – ஸ்ரீ)
3. அடையவே கோவில்செய்து (த)
4. சோதிய கோபுரமும் (த)
   செய்ததிருக் கோபுரத்தின் செம்மைசொல்லமாட்டாது (ஸ்ரீ)
5. அப்பதி நாயகற்கு அறிவித்தான் விசுவகர்மா (ஸ்ரீ)
6. பொன்னகரி (த)
7. ஏதுசொல்வார் (க)
8. இணையாகா தென்றுசொன்னர் (த – ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரிட் டமரர் பெய்தார்கள் புட்பமழை
சிருற்ற மாயோனைத் தேவர்குரு வந்துகண்டு
[1]சகலோக மென்னுந் தனிமுகூர்த்தம் வந்ததென்று
புகலாங் குடியென்று போனான் புறசோதி
[2]மெத்த மனமகிழ்ந்து வேண்டியதெல் லாங்கொடுத்து
நச்சனையும் நன்மைசொல்லித் தன்பதிக்கே போகவிட்டு
உற்ற கிளைஞருடன் ஊருங் குடிபுகுந்து
கொற்றமால் தானுங் குடியிருந்தா ரம்மானை
நந்தன் வசுதேவன் நம்பி பலதேவன்
அந்த வகூரன் அணியுக் கிரசேனன்
அல்லா தவரு மரிவங்கி சத்தோரும்
எல்லாம் நிறைகுடியா யேகினர்கா ணம்மானை
மாநிதியம் வண்டரளம் வச்சிரவண் ணணளப்ப
ஆன வருண ணடைவே மழையளப்ப
துன்ப மகற்றித் [3]துவார பதிவிளங்க
இன்ப முடனேவாழ்ந் திருந்தனர்கா ணம்மானை

## உருப்பிணி கல்யாணம்

துய்ய சிறிமத் துவார பதிவிளங்க
ஐயன் இனிதா யமர்ந்திருக்கு நாளையிலே
பொன்பிடித்த திண்டோட் புரவலனை முன்னாளிற்
பின்படித்து மீண்ட பெரும்படை [4]மன்னரெல்லாஞ்
சேர வளைத்துச் சராசந்த னேது[5]செய்தான்
பார வலுவுடைய பார்த்திபரே கேட்டருள்வீர்
அன்று நமக்குடைந்து அம்மதுரை நாடுவிட்டுச்
சென்று கிருட்டிணன்தான் தேசத் திருக்கவஞ்சிக்
கடலி லொழித்துக் கடலிலே மற்றுமொரு
திடலிலே வீடுகட்டிச் சென்றிருந்தா னென்றுசொன்னான்
மற்றவன் போகாமல் மண்டி வளைந்துகொண்டு
கொற்றக் கிளையுடனே கொன்றிடுவோம் போதுமென்றான்
புகுந்தான் சிசுபாலன் போர்வேந்தன் [6]தான்கண்டு
பகர்ந்தவனை நோக்கிப் [7]பகதத்தனேது சொல்வான்

---

1. மேலான தென்னும் மிகுமுகூர்த்தம் வந்ததென்று (ஸ்ரீ)
2. வண்ணன் (ஸ்ரீ)
3. துவாரபதி நகரில் (த – ஸ்ரீ)
4. உள்ளதெல்லாம் (த)
5. சொல்வான் (த)
6. தான்கேட்டு (த)
7. பார்த்திபனு (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இங்கொழித்துப் போனவனை இன்னமும்நாம் [1]போய்வளைத்தால்
அங்கொழித்துப் போவான் அவனையார் பின்பிடிப்பார்?
சேர்ந்த விடமெல்லாஞ் சென்று கிருட்டிணனை
வேந்தரே தாக்கி வெருட்டிநீ ரோட்டாதீர்
மற்றவனைச் சற்றும் வழுவாமற் [2]கைப்பற்றிச்
சுற்றமுட னேகொல்லும் சூழ்ச்சிநான் சொல்லுகிறேன்
மின்னிய பைங்கண் [3]விதர்ப்பரா சன்மகளார்
கன்னி யுருப்பிணிக்குக் கல்யாண நாள்வரைந்து
விரைமண வோலை மிக்கெங்கும் விட்டபின்பு
[4]வரையா தவற்கு மணவோலை தான்விடுத்தாற்
[5]சுத்திரிய ரோடே கலந்திருக்கு மாசையினால்
மெத்த இறுமார்ந்து விண்ணூர்ந்து வந்திடுவன்
பெண்கொள்ளப் போகும் [6]பிறவுற் பலனுடனே
மண்கொள்ளாச் சேனையுடன் மற்றவரும் போய்ப்புகுந்து
நீட்டிய சேனையுடன் [7]நீல நிறத்தனையும்
[8]"கோட்டி வளைந்து கொல்லா" மென்றுசொல்லிப்
[9]பார விசாரம் பகாதத்தன் சொல்பளவிற்
திர விசாரித்துச் சராசந்த னேதுசொல்வான்
"செயித்துப் பொரும்போரிற் தேர்வேந்தே மாயவனை
யுத்தத்தில் வந்தால் ஒருவருங் கொல்லாதீர்
மன்கோப நந்தன் [10]வசுதேவன் றன்மகனை
என்கோபந் தீர யான்கொல்வே" னென்று சொன்னான்
செப்பிய சொற்கேட்டுச் சிசுபால னேதுசொல்வான்
"வைப்புடைய மன்னர் வழக்காட வாராதே
நலதே யெமக்குரைத்தீர் நானுஞ் சினமாற
பலதே வனைக்கொல்வேன்" பங்கென்று னம்மானை
சிசுபாலன் சொல்லத் தேற்றரச னேதுசொல்வான்
[11]வசுதேவன் மைந்தனுடன் மற்றுமுள்ளோர் வந்தாலுஞ்
[12]சந்திரன் மானுந் தரித்தபர னொழிய
[13]இங்கெனக்கு யாரும் ஒதிரொப்பா ரற்றூர்கள்

---

1. போய்த்தொடர்ந்தால் (ஸ்ரீ)
2. கைப்பிடித்து (த - ஸ்ரீ)
3. வீரர்ப்பராசன் பெற்ற (த - ஸ்ரீ)
4. இரைமோதும் துவாரையதற்குத் தானுமொரு ஆளைவிட்டால் (ஸ்ரீ)
5. கத்திரிப ரோடு கலந்து பொருதுதற்கு (ஸ்ரீ)
6. பிறகற்பலன் (த,ஸ்ரீ)
7. சேனையையும் (ஸ்ரீ,த)
8. கூட்டி (த) சேர்ந்து (ஸ்ரீ)
9. பேரா ஞபசாசம் பெரிதாகச் சொல்பளவில் (ஸ்ரீ
10. வளர்த்த தொருமகனை (த,ஸ்ரீ)
11. கொல்ல (த,ஸ்ரீ)
12. சங்குடன் (த)
13. அங்கவனுக் காரும் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புறம் போகா தவர்கள்படை யத்தனையுஞ்
[1]சுப்பிரதீ பத்தால் துகைப்பேனி யா"னென்ருன்
மின்னினையும் பெற்ற விதர்ப்பகோ னவ்வளவில்
என்னினைவென் றெண்ணி [2]யிருந்தான்கா ணம்மானை
வில்லால் வலிய விநர்ப்பனை வற்புறுத்தி
எல்லாருந் தம்பதிக்கே யேகினர்கா ணம்மானை
வெற்றி பெரிய விதர்ப்பனு மவ்வளவிற்
சுற்றி முரசறைந்து தூதரையுந் தான்விடுத்து
மங்கை வதுவை மணஞ்சொல்லி வாருமென்று
எங்கெங்கும் போக ஏற்றமண வோலைவிட்டுத்
துன்னுழி சூழுந் துவரா பதியாளும்
பொன்னுழி மாயனுக்கும் போகவிட்டா னம்மானை
தூ தரு மேகித் துவரா பதியாளும்
மாதவனைப் போற்றி மணமுரைத்தா ரம்மானை
மணவார்த்தை கேட்டு மணவாளன் [3]உள்மகிழ்ந்து
குணவார்த்தை [4]தூதுவர்க்குக் கூறி வரவிடுத்தான்
உக்கிரசே னன்கூரன் உற்ற வசுதேவன்
தக்க திறலுடைய சத்திய சாத்தகியும்
[5]மற்றுள்ள மன்னரையும் மாயன் வரவழைத்து
உற்ற மணவார்த்தை யோதினன்கா ணம்மானை
[6]பின்னு மவர்க்குப் பெரியோ னெடுத்துரைப்பான்
[7]"முன்னும் எமைப்பகைத்த மூரித்தேர் மன்னரெல்லாம்
[8]வேறிருந் தெண்ணி விதர்ப்பன் மகள்வதுவைக்
[9]கூறி விடுத்தார் குத்திரமே செய்வதற்கு
அங்குநாம் போகாக்கால் அஞ்சி இருந்ததென்பார்
பொங்கியாம் போகிற் போருக்குச் சம்மதிப்பார்
[10]மிக்க விதற்கான விசார முரையு"மென்ருன்
உக்கிர சேன னுயர்மாலைப் பார்த்துரைப்பான்
"மெய்யனே யுன்னில் விசார மறிவோமோ?
ஐயனே யுன்மனதுக் [11]கானபடி செய்யு"மென்ருன்

---

1. சுக்கிரதீ பத்தால் தொலைப்பேன் (ஸ்ரீ)
   சுப்பிரதீ பத்தால் துவைப்பேன் (த)
2. இயக்குவித்தான் (ஸ்ரீ)
3. ஏதுரைப்பான் (ஸ்ரீ)
4. தூதருக்குக் கூறி விடுத்தபின்பு (ஸ்ரீ,த)
5. மற்றுள்ளோர் தங்களையும் மாயன் மகிழ்ந்தழைத்து (ஸ்ரீ)
   ,, ,, மாயன் அழைத்துவிட்டு (த)
6. பேசும் (ஸ்ரீ)
7. முற்றும் (ஸ்ரீ)
8. வீற்றிருந்து தம்மால் (ஸ்ரீ)
9. கூதால் விடுத்தார் சூத்திரமே செய்வதற்கு
10. மிக்கோர் இதற்கு (த)
11. ஆனவகை (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாச மிகவுடைய பாட்டன் மொழிகேட்டுக்
கேசவன் சொல்வான் "கிளர்ந்துயா மெல்லோரும்
பாரப் படையும் பரியுங் கரித்தேருஞ்
சேரத் திரண்டுமிகச் சிக்கென்று போயிருந்தால்
அங்கவர்கள் செய்கை யறியலா"மென்றுரைத்தான்
பொங்கிய சேனையுடன் பொற்றுவரை தானீங்கிக்
கந்த மலர்த்தொடையான் கன்னசா லங்கடந்தான்
[2]சிந்து விசய மிடமாகச் சென்றருளிக்
குந்து விசயங் குறுகிடச் சென்றணுகி
வந்துவங்க தேசம் வலமாகச் சென்றுமிக்க
போந்து விதர்ப்பன் புரத்துக் கருகாக
மாகந்த மென்னும் மாலியாற் றங்கரையில்
வீடாரங் கொண்டு மிகுவேந்தர் தம்முடனே
ஏடாருந் தோளான் [3]இருந்தான்கா ணம்மானை
[4]அக்கணமே மாகந்த ஆற்றங் கரையருகே
மிக்க துவாரையர்கோன் வீற்றிருந்தா னம்மானை
அங்கவன் தானிருக்க அவனியில் மன்னரெல்லாம்
பொங்கு கடல்போற் பொலிந்திருந்தா ரம்மானை
விந்தையணி தோளான் விதர்ப்பனு மவ்வளவில்
வந்தவர்க் கெல்லாம் வகைவகையாய் [4]வீடருளி
நற்போ னகமும் நறுஞ்சாந்துங் குங்குமமும்
[5]கற்பூரம் வெற்றிலையுங் கற்பித் திருப்பளவில்
மங்கை யுருப்பிணிக்கு மன்னவர்க ளெலலோரும்
தங்கள்கைக் காணிக்கை தான்கொடுத்துப் [6]போனபின்பு
நங்கையர்க் கான நவமணி மாலையொன்று
செங்கை தனிலேந்திச் சென்றான் திருநெடுமால்
ஆர்த்தபவ ளக்காலும் ஐம்பொன் னழகாலும்
சேர்ப்ப சுந்தகட்டாற் செய்தமணிப் பந்தலிலே
எம்மருங்குந் துன்னி யிராசாக்கள் [7]நிற்பளவிற்
செம்மாலை கையேந்தித் தேவர்கோன் நிற்பளவில்
நல்ல இருள்காட்டும் நறுங்கழபச் சூழியத்தில்
மல்லிகை மாலை மதிபோ லொளிகாட்ட

---

1. கன்னன்கடல் (ஸ்ரீ)
2. இந்த விசய மிடமாகச் சென்றணுகி (ஸ்ரீ)
3. இனிதிருந்தா ரம்மானை (ஸ்ரீ)
4. வீடமைத்து (ஸ்ரீ)
5. கைவளங்கள் தான்செய்து (ஸ்ரீ)
6. விட்டபின்பு (த,ஸ்ரீ)
7 நிற்கையிலே (ஸ்ரீ)

வானுடைய வில்லை மதிபோல் நுதல்காட்டக்
கூனுடைய வள்ளைக் கொடியை யிடைகாட்ட
முயல்புக்கு மாமதியின முமமடங் காயிரண்டு
கயல்புக்கு மாமதியின் [1]கண்களுஞ் சோதிவிட
செம்பவளச் [2]செப்பும் செறிமுத்தின் மாலைகளும்
அம்பவள வாயும் அணிநகையுந் தான்காட்ட
[3]மட்டு வடத்துளப மாயோன்கைச் சங்குதனைக்
கட்டு வடநிரைத்த [4]காந்தாரர் தான்காட்ட
[5]மீன்பெற்ற நீள்கரும்பு வெற்றிச் சிலைப்புருவம்
தேன்பெற்ற பைங்குழையுஞ் செம்புயமுந் தான்காட்டப்
பச்சைக் குரும்பைப் [6]பணிபூண்ட பூண்முலையுங்
கச்சைத் துளைத்தெழுந்து காமனைக் கண்காட்ட
ஊரேறும் போற்ற உரோம [7]மெழில்காட்ட
ஏராரு முந்தி எழிலா விலைகாட்ட
மாகத்தில் தோன்றும் மணிமே கலைகாட்ட
மேகத்தில் தோன்றும் மின்னை யிடைகாட்ட
அம்பொற் படவரவை அல்குற் றிறங்காட்டக்
[8]கம்ப மதகளிற்றுக் கரத்தைக் கவண்காட்டக்
[9]கண்டகண் ணுக்குக் கணைக்கால் வரால்காட்ட
முண்டகப் பாதம் முடிவெண் பிறைகாட்டக்
கற்பகப்பூங் கொம்பெனவுங் [10]காரரம்பைப் பொன்னெனவும்
அற்ப நடைக்காற்ரு அன்ன நடையெனவும்
மாணிக்கப் பூணணிந்து மங்கைநல்லார் வாழ்த்தெடுப்பப்
பூணுற்ற மன்னர் புகலுற்ற [11]காவனத்தே
ஆவி யழகுபெற ஆடகத்தாற் சோடித்து
ஓவியம்போல் வந்தாள் உருப்பிணியு மம்மானை
வந்த மயிலையந்த மன்னவர்கள் தான்காணத்
தந்தை விதர்ப்பர்கோன் தன்னருகில் சென்றிருந்தாள்
மைமாலை வார்கூந்தல் வந்திருக்க மாயோனும்
கைமாலை தன்னையவள் கைக்கொடுத்தா னம்மானை

1. தனஞ் சோதிவிட (த)
2. செங்கை (ஸ்ரீ)
3. மேவிவளர் துவச மாயோன்கைக் குத்ததனைக்
காவிக்கண் மாமடவார் காந்தன் தனைக்காட்ட (ஸ்ரீ)
4. கந்தரன் தான் காட்ட (த)
5. மின்போற் கொடியிடையாள் வெள்ளிச் சிலைப்புருவம்
தென்பட்ட தென்னத் திண்புயமுந்தான் தான்காட்ட (ஸ்ரீ)
6. மணிபூண்ட (த)
7. மொழிகாட்ட (த)
8. கம்ப மதகரியின் கால்கை திறங்காட்ட (த,ஸ்ரீ)
9. கண்டகண்ட கண்களுக்கு (த.ஸ்ரீ)
10. கானமஞ்ஞை காலெனவும் (த,ஸ்ரீ)
11. பந்தலிலே (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மால்கொடுத்தான் மாலை மலர்க்கொடியும் தன்னிருகண்
வேல்-கொடுத்தாள் மாலுக்கு [1]மெய்யுறவே யம்மானை
ஒருவர் துயர்கொண் டொருவ ரொழியாமல்
இருவர் துயரு [2]மெழில்பெற்ற தம்மானை
நோக்கொக்க நோக்கித் துண்ணிடையும் தன்மனதில்
வாக்கொக்க நோக்கியபின் மாயவனு மேதுசெய்தான்
நெஞ்சமும் கண்ணும் அவள்பால் நிலைநிறுத்திச்
செஞ்சொல் நெடுமால் திரும்பினன்கா ணம்மானை
[3]கோளம் புவியடைந்த கொள்கைபோல் மற்றவனும்
வேளம்பு பின்தொடர வீடாரம் [4]போய்ப்புகுந்தான்
கஞ்சன் வலிகடந்தான் காமன்றன் [5]பாலவனாய்
பஞ்ச சயனம் பயின்று மெழுந்திருந்தும்
உறக்க மறுந்தும் உணர்வு தனைமறந்தும்
மறக்க வரிய மயிலே யெனவுரைக்கும்
மருப்பனைய கொங்கை [5]மடவா யுனைவிட்டு
உருப்பிணியே யென்ற உரைமாறா தேயிருக்கும்
கண்டு விதர்ப்பர்கோன் கன்னிக்கு மாலாகி
வண்டுவரை [6]மன்னன் வருந்தினன்கா ணம்மானை
அன்னா னிருக்க அவன்கையில் மாலைபெற்ற
மின்னார் நிலைமை விளம்பக்கே ளம்மானை
மாலுக்கு மாலாகி மால்கொடுத்த மாலைதன்னை
[7]மேலுக் கணைவாள் மிகுமுலையிற் சேர்த்தணைப்பாள்
வெள்ளக் கமல மிகுதுவரை மன்னனைத்தான்
உள்ளக் கமல [8]முருக்குங் குடியிருத்தித்
துன்னிய மாதர் துணையாகச் சூழ்ந்துவர
மன்னியர் மாடம் கதுமெனப் போய்ப்புகுந்தாள்
கைச்சங்கு சோரக் கலைசோர நாண்சோர
அச்சங் கிளர்ந்து அடிக்கடியே வெய்துயிர்த்து
மென்பூ வணையில் விழுவாள் எழுந்திருப்பாள்
தன்பூங் குமுதவாய் தான்புலம்பி முத்துதிர்ப்பாள்

---

1. மையலுற்றா ளம்மானை (த)
2. இணைபெற்ற தம்மானை (த)
3. கோழம் புலியிடைந்த கொள்கைபோற் கொற்றவனும் (த)
4. போய்ச் சேர்ந்தான் (த)
5. பாசவனாய் (த,ஸ்ரீ)
6. மடவாள்தா னெங்கேயென்று (ஸ்ரீ,த)
7. மேலுக் கணைந்தும் மிகுமுலையிற் சேர்த்தணைத்தும் (த)
8. உறவே (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]"செல்லுங் கருமுகிலே செங்கண்மால் மேனியனே"
சொல்லுங் குழறிநின்று தூங்கித் துணுக்கென்பள்
[2]'வன்கண்ணன் கொண்டுநின்ற மாணிக்க மாலையுடன்
என்கண் ணகலா' தெனவே வெருவிடுவள்
*அவ்வா றுரைத்து அயர்ந்து பயந்துலையுஞ்
*செவ்வாய் மயிலைச் செவிலித்தாய் வந்துகண்டு
*தன்மகளைப் பார்த்துச் சலித்தங்கு ஏதுசொல்வாள்
*"மன்மகளே நின்றனக்கு மாமணங் காணுதற்கு
வாரிசூழ் வையகத்து வாள்வேந்தர் வந்திருந்தார்
பேரரசர் கோமான் பிறவுற் பலனென்னுங்
கோசல நாடற்குக் கொடுக்கச் சமைந்திருந்தோம்
[3]ஏசலினல் மின்னுக் கிடருற்ற தோவறியேன்
பூவை மறந்தாள் பொன்னூஞ்சல் தான்மறந்தாள்
பாவை மறந்தாள் பந்துகழங் கம்மறந்தாள்
அம்மானை யாடல் மறந்தாள் [4]அணியிழையும்
[5]எம்மானைச் சொல்லி" யெனவோர் குறத்திதனை
அங்கழைத்து [6]வந்து அவட்குச் சிறப்பளித்துப்
பொங்க மெழுகிப் புதுமுறத்தில் நெல்லுமிட்டு
[7]நேச முரைத்து நிறைமகட்கே யிப்பொழுது
[8]தேசியோ ஐயனே தெண்டித்துச் சொல்லுமென்றாள்
[9]வாசக் குறத்தி வலக்கையில் நெற்பிடித்து
வீசி விதிர்த்துநின்று மெய்நடுங்கி யேதுசொல்வாள்
"ஐயனுமல்ல [10]அணிதுர்க்கை தானு மல்ல
‡தையலே உன்மகட்குச் சந்திப்புத் தானுமல்ல
[11]பேய்நச்சுக் கொங்கை பிடித்துண்ட பேராளன்
காயம்பூ [12]மேனிக் கடற்றுவரை நன்னுடன்
சூழ்ச்சியிற் பட்டுக் துவண்டதே யல்லாது
தாழ்ச்சி பிறிதில்லை தானென்று" ளம்மானை
"வாரா யடிநீ மதியாம லேதுரைத்தாய்
[13]ஊரார் சிரிக்க உரலோடே கட்டுண்ட

1. செல்லுங் கருமுகிலைச் செங்கண்மா லென்றெண்ணி (ஸ்ரீ)
2. வன்கண்ணன் வந்துதந்த மாணிக்க மாலைதன்னை (ஸ்ரீ)
* நான்கு வரிகள்-த-ஸ்ரீ-பிரதிகளில் இல்லாதவை
3. ஏதினல் (த) ஏவலினல் (ஸ்ரீ)
4. அணிமறந்தாள் (த,ஸ்ரீ)
5. எம்மாய மோதான் அறியோம் குறத்திதனை (த,ஸ்ரீ)
6. வைத்து அவட்கு நிதிகொடுத்து (த,ஸ்ரீ)
7. நேச மதான (த,ஸ்ரீ)
8. தேசிகனே (த,ஸ்ரீ)
9. வாய்த்த குறத்தி (த,ஸ்ரீ)
10. அணி தேசிகனு மல்ல (த,ஸ்ரீ)
‡ த-ஸ்ரீ பிரதிகளில் இல்லாத ஒருவரி
11. பேயரக்கி (த,ஸ்ரீ)
12. வண்ணன் (த)
13. பாராதுன் னுள்ளம் பராக்கிரமம் பேசுவதோ (த,ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]மாயனே என்மகளை மாலேற்று வா"வென்று
கோலிட் டடித்துக் குறத்தி தனைவிரட்டி
வேலிட்ட கண்ணாள் வேதியர்க்குத் தானமிட்டு
அயில்விழி மங்கையரும் அன்னையரும் போனபின்பு
[2]மயிற்குயிற் பாங்கி மனோன்மை யெடுத்துரைப்பாள்
"பொன்னே மரகதமே பூங்கமலப் பொற்கொடியே
மின்னே விளக்கே விதர்ப்பர்கோன் மெய்த்தவமே
வலியான மன்னருடன் மற்றுந்தை தானடத்தும்
கலியாண [3]வாரம் கண்டு களியாமல்
வாளர வுண்ட மதியம்போ லேமயங்கி
நீளர வல்குலாய் நின்மேனி வாடியதேன்
[4]மறையொன்று நூலிடையாய் மாமயிலே என்னுடனே
உரை"யென்னத் தோழி உருப்பிணியங் கேதுரைப்பாள்
"நாட்ட முரைக்கில் [5]நளினப்பூ வண்ணனை நான்
வாட்ட முரைக்க [6]மனோன்மையே கேட்டருள்வாய்
முந்த அரசரெல்லாம் [7]முன்னின்ற காவனத்தே
[8]எந்தை யழைக்க யானவன் முன்னிருந்தேன்
கையுங் கமலடியுங் கண்ணுந் திருமுகமுஞ்
செய்ய மணிவாயுஞ் செந்தா மரைகாட்டத்
தேசு பயிலுந் திருமேனி தான்காட்டத்
தூசும் பலவிதமாய்ச் சொன்னமயல் தான்காட்ட
வாந்தான் நெடுமால் மணிமாலை யொன்றெனக்குத்
தந்தா னப்போதே தவிராமல் மாலானேன்
பூசல மதனனையான் போகாதே நின்றெனது
நேச விழிதனையும் நெஞ்சினையும் விட்டகலான்
அன்னானை யன்றியெனை யாரெனுங் கைப்பிடித்தால்
என்னா ருயிர்போகு" மென்றாள்கா ணம்மானை
பாவை யதுகூறப் பாங்கியுமங் கேதுரைப்பாள்
"கோவை யிதழ்மடவாய் கோசலை நாடரன்றி
மன்னாளும் பேராழி மாயனே யானாலும்
பொன்னே யவற்குப் பொருந்துவனோ உன்தந்தை

---

1. ஆயர் குடியி லாய்ப்பாடி யிற்பிறந்த
 ஆயனோ என்மகட்கு அச்ச மிடுவதென்றாய் (த,ஸ்ரீ)
2. மயில்போற் குயிற்பாங்கி (த)
3. ஆரம்பம் (த)
4. மரையொன்று நூல்போல் மருங்குலா யென்னுடனே (த)
 நிரைமணிப் பூணாய் நின்மனத்தி லுள்ளவகை (ஸ்ரீ)
5. நளினப்பூ வண்ணன்மேல் (ஸ்ரீ)
 நளினப்பூ வண்ணனையே (த)
6. மனோன்மைக் கெடுத்துரைப்பாள் (த,ஸ்ரீ)
7. முன்னின்று நாணிநிற்க (ஸ்ரீ)
8. என்தந்தை தன்னருகே யானு மிருக்கையிலே (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்வல் லெனுமுலையாய் புண்ணியனை யுன்னுடனே
என்வல் லமையால் ஏகாந்தம் செய்விப்பேன்
[1]தூரத் திரைமேவுந் துவார பதியானை
மாத்திரையிற் கூட்டுவிப்பேன் வஞ்சியரே அஞ்சாதே"
என்றவளைத் தேற்றி எழில்சேர் மரகதத்தின்
குன்றனையாள் கோயில் குறுகினள்கா ணம்மானை
கண்ணன் தலைவாசல் காக்கின்ற பேருடனே
[2]வன்ன மினிய மனோன்மை யெடுத்துரைப்பாள்
[3]"உண்டாள் வழங்க உருப்பிணியாள் தோழிவந்து
நின்றாள் எனவுரையும் நீலவண்ணற்" கென்றுசொன்னாள்
வாயலார் வார்த்தைதனை மாயோற்குப் போயுரைப்பத்
தூயோனுங் கேட்டுத் துணுக்கென்னத் தானெழும்பி
அப்போ தவளை யழைப்பிக்க உள்மகிழ்ந்து
இப்போது வரவழையு மென்றான்கா ணம்மானை
துய்ய மலர்த்திரளைத் தூயவன் முன்சொரிந்து
தையலு மப்போது தலைபணிந்து நின்றிருந்தாள்
பொற்று மரைப்பாதம் போற்றிப் பணிந்துநிற்க
நற்று மரைப்பாத நாயகனு மப்பொழுது
[4]காமக் கிளியிற் கலங்கி வெதும்பிநின்ற
கோமாற்கு ஆயிழையைக் கூட்டுவிப்பாள் வந்தபின்பு
[5]தூளிபெற்ற மென்மலர்போல் தூயோனு முள்மகிழ்ந்து
"ஆழிபெற்ற கோதாய் அணைந்தவா றே' தெனவே
திருப்பணிந்து சொல்வாள் "திருமாலே நின்னழகும்
உருப்பிணி தன்னழகு மொத்தமையா லுங்கள்தமைக்
கூட்டரவு செய்யக் குறித்துவந்தே" னென்றுசொல்லி
"வாட்டரவ வேற்களிற்றாய் வருவையோ சொல்லு"மென்றாள்
*கேட்டு மனமகிழ்ந்து கேசவனு மேதுசொல்வான்
"விற்காடி வாணுதலாய் மிக்க விதர்ப்பனருள்
பொற்கொடியை யென்னுடனே [6]புணருவித்தா லுன்னையும்நான்
மன்னரச ரெல்லாம் வந்து [7]துதிகேட்பப்
பெண்ணரசு செய்விப்பேன் பெய்வளையே [8]யையமில்லை

---

1. தூர வரைசேரு துவார பதிக்கோனை (த)
   தேத்துவரை (ஸ்ரீ)
2. எண்ணம் மிகுந்த மனோன்மை எடுத்துரைப்பாள் (ஸ்ரீ)
3. உந்தாள் வணங்கு முருப்பிணிதன் தூதாக
   வந்தாள் எனத்துவரை வண்ணற்கு ஓதுமென்றாள் (த)
4. காமக் கிளியால் (த)
5. துளிர்பெற்ற மென்றளிர்போல் (த,ஸ்ரீ)
* த-ஸ்ரீ-பிரதிகளில் இல்லாதவரி
6. பொருந்துவிப்பாயானல் (ஸ்ரீ)
7. திறையளப்ப (ஸ்ரீ)
8. என்றுசொன்னான் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வா றுரைத்து "அவளைநீ யென்னுடனே
எவ்வாறு கூட்டுவிப்பா" யென்று னெழில்நெடுமால்
"தண்டுளப மாலே தடந்தோளாய் நீயந்த
[1]ஒண்டொடியைத் தோயு முபாயமுஞ் சொல்லுகிறேன்
காதல் மணம்புணருங் கத்திரியர் மங்கையர்க்கு
மாதங்கி தாள்பணியும் மற்றோர் விரதமுண்டு
விந்தையுடை கோயில் விரதகா லந்தனிலே
வந்து புகுவள் மணக்கோலந் தன்னுடனே
கொற்றவனே யங்குறைந்து கூடலாம் நீயவளை
உற்ற விசள"மென ஒதினாள்கா ணம்மானை
அன்ன துரைத்த அவளை முகநோக்கி
'மின்னேயப் பாவை விழிவேல் படும்புண்ணினை
ஆற்றமருந் தற்றதுகா ணுயிழையே நீயுரைத்த
மாற்ற மிகநல்ல மருந்"தென்று தானுரைத்தான்
"நீயே யெனையும் நிலைதந்தா" யென்றுசொல்லி
மாயனை நோக்கி மனோன்மையு [2]மேதுரைப்பாள்
[3]"நலமுங் குறையில்லை நாயகிக்கு முன்றனக்குங்
குலமே யுனக்குக் குறை"யென்று னம்மானை
"மின்போ லிடைமடவாய் மெய்சொல்லக் கேட்டருள்வாய்
என்போ லொருவன் எழிலாயர் பாடியிலே
கட்டுண் டடியுண்டு கன்னியரைச் சேர்வைசெய்து
கிட்டிண னென்றுபெயர் கேட்கி லவன்றன்னை
உள்ளறி யாதார் உரைப்பார்என் வங்கிசம்கேள்
வள்ளல் வசுதேவன் மைந்தன்யான் சத்தியமே'
இன்னது சொல்லி இளங்கொடியைப் போகவிட்டான்
"அன்ன தலத்தி லழைத்துக் கொடுவாறேன்
உத்தமனே யங்கே யொழித்திருந்து நீயவளைக்
குத்திர மாயத்தாற் கொண்டுபோ" வென்றுசொல்லி
அச்சுதனைப் போற்றி யவளும் விடைகொண்டு
நச்சு விழியாள் நடந்தாள்கா ணம்மானை

---

1. ஒண்டொடியைக் கொள்ளும் (ஸ்ரீ,ச)
2. ஏதுசொல்வாள் (த)
3. நலமே குறையில்லைகாண் நாயகிக்கு உன்றனக்கும் (ஸ்ரீ,த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]மொழிபார்த் திருந்து முதல்வனை விட்டகன்று
வழிபார்த் திருந்த மடக்கொடிக்குப் போயுரைப்பாள்
"அஞ்சன மெய்யு மழகு முறக்கண்டு
நெஞ்சு [2]தரித்திருந்தாய் நீயே திடமுடையாய்
புழுகார் புயத்தழகும் பூணார மார்பழகும்
[3]அழகா ரினங்களுக்கு ஐயனிவ னென்றிடலாம்
பொன்னழகு காட்டும் முணர்முலையா யிப்பொழுது
நின்னழகுக் கொத்தமையால் நேராவா' னென்றுரைத்தாள்
"ஈதெல்லாம் நன்றென்பாய் யாமவனைக் கூடும்வகை
போதெல்லாங் சோதாய் புகல்" என்றாள் அம்மானை
மையல் மிகுந்துரைக்கும் மாதுக்கு மற்றவளும்
[4]ஐயன் உரைத்ததெல்லா மப்போ துரைத்தருளி
"வாரணியுங் கொங்கையாய் மற்றும்நாம் போய்ப்பணியும்
நாரணி கோயிலிலே நம்பி யிருப்ப" னென்று
சேடி யுரைக்கத் தெளிந்திருந்தா ளம்மானை
நீடிய சக்கரக்கை நீலவண்ண னவ்வளவில்
[5]தன்னன்னை தந்தையையுந் தந்தைவசு தேவனையும்
முன்னந் தமையனையும் மூத்ததம்பி மார்களையும்
மிக்கசுரர் சேனையையும் விட்டுணு வீரரையும்
ஒக்க வழைப்பித்து உடனிருந்தங் கேதுசொல்வார்
"மண்ணுட்டி லுள்ள மறுமன்னர் தான்கூடி
எண்ணு வகையாய் எல்லோரும் வந்திருந்து
[6]மங்கை தனக்கு மணமிடக் கூட்டிப்போய்
[7]இங்கெம்மைத் தான்வதைக்க இருந்தா ரெனக்கேட்டோம்
மாட்டாங்கு வாராமல் மற்றதற்குத் தக்கவகை
கோட்டானே மன்னர் குறித்துரையு" மென்றுசொன்னான்
உம்பர்கோன் சொல்ல உக்கிர சேனன்சொல்வான்
"நம்பரனே மற்றவர்க்கு நாமெளியா ரானோமோ
அன்றெளிதாய்ப் போனோமென் றஞ்சாதே வந்தடர்ந்தால்
இன்றெளிதாய்ப் [8]போகார்காண் எல்லாரும் சிக்கென்று

1. மொழியால் திருத்தி (த,ஸ்ரீ)
2. தெளிந்து (ஸ்ரீ)
3. அழகு தனக்கே (ஸ்ரீ)
4. ஐய னுரைத்தவகை அப்போ தவற்குரைத்து (ஸ்ரீ)
5. தன்னன்னை மார்களையும் (ஸ்ரீ)
6. மங்கை தனக்கு வதுவையென் றழைப்பித்து (ஸ்ரீ)
   ,, ,, மணமிடக் கூட்டுவித்து (த)
7. இங்கெம்மைத் தான்கொல்ல இருந்தார்க ளாகையினால் (ஸ்ரீ)
8. போகா தியாமெல்லாம் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர்முகமாய்த் தாக்கி உடையப் [1]பொருதழித்துக்
கார்முக வாணுதலைக் [2]கைக்கொண்டு போது" மென்முன்
என்றவன் சொல்ல எழில்வண்ண னுள்மகிழ்ந்து
[3]"சென்றுநா மிந்தத் தேனை மணம்விலக்கி
[4]மாவிகற்ப மாக மாயத்தாற் கைப்பற்றிக்
கோவிதர்ப்ப புத்திரியைக் கொண்டுவந்து கூடுகிறேன்
நம்சே னையைத்திரட்டி நன்ரு யணிவகுத்துச்
செஞ்சொல்லா யெல்லாருஞ் சிக்கென்று வாரு" மென்முன்
சண்டை வலுவுடைய சாத்தகி யாழ்வானைத்
திண்டித்த சேனைக்குச் சேனு பதியாக்கிப்
பேய்த்துக்கந் தீர்த்த பெரியோனு மவ்வளவிற்
போய்த்துர்க்கை கோயில் புகுந்தான்கா ணம்மானை
ஒண்களப மாயோன் ஒழித்திருக்கும் [5]வேளையத்தே
பெண்கொள்ள வந்த [6]பிறவுற் பலன்தன்னை
ஒப்பித்து மெய்திருத்தி ஒண்கழுத்தில் மாலையிட்டு
வெப்புற்ற கார்மலைபோல் வாரணத்தின் [7]மேலேற்றிச்
சங்குகட கம்திமலை தாரை முரசதிரத்
தொங்கல் நிழற்கீழ்த் துகிற்கொடிக ளாலிக்க
மங்கர்கோன் மாளுவர்கோன் வங்கர்கோன் மச்சியர்கோன்
பங்கத்தார் [8]கிஞ்சியர்கோன் பாஞ்சாலர் கைதயர்கோன்
காந்தர் கலிங்கர் [9]காம்போசர் காரியர்கோன்
சேர்ந்த குருகுலத்தார் சேதியர்கோன் சிந்துபதி
[10]அன்றியு முள்ள அரசர் அனைவோரும்
கன்றிய சேனை கரிபரி தற்சூழ
ஓதக் கடல்போல உரைவலம் போகையிலே
காதல் விதர்ப்பன் கன்னியரை நீராட்டி
வாய்ந்த பணியால் மணக்கோலஞ் செய்தருளிக்
காந்தள் மலரனைய [11]கைமுகத்திற் காப்புறுத்தி
தந்திர காவலர்கள் தாதியார்கள் தற்சூழ
சுந்தரி பாதந் தொழவிருந்தா ளம்மானை

1. பொருதழிப்போம் (த,ஸ்ரீ)
2. கைப்பிடிக்க வைத்திடுவோம் (ஸ்ரீ)
   கைப்பிடிக்கப் போமென்முர் (த)
3. சென்றிந்த நாழிற் தேனைமணம் புணர (த)
4. மாவிதற்ப (த)
5. அவ்வளவில் (த,ஸ்ரீ)
6. பிறவுற் பலன்தானும் (த,ஸ்ரீ)
7. மேலேறி (த)
8. முந்திய (ஸ்ரீ)
9. காம்போதர் (த)
10. அண்டங் கேயுள்ள அரசர்க ளெல்லோரும் (த)
11. கைதனக்குக் காப்பணிந்து (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]தூத்திரை வீசுந் துவார பதிநாடன்
காத்திருந்த கோயிலிலே கன்னிவந்தா ளம்மானை
சுற்றிவந்த சேனையெல்லாஞ் சூழ்ந்துபுறம் பாகநிற்க
மற்று மனோன்மையுடன் மாதங்கி கோயில்புக்காள்
அன்னேரந் தன்னி லயனு மமரர்களும்
முன்னே முகூர்த்தமிட்டு மொய்விசும்பில் நிற்பளவில்
மேவிய [2]வேதன் விறற்பதியைப் பார்த்துரைப்பான்
"தேவ ரசுரர் செருச்செய்த நாளையிலே
பட்ட வசுரரெல்லாம் பாருலகிற் போய்ப்பிறந்து
துட்டராய் வாழ்பவரைத் [3]துஞ்சிவிக்கக் காரணமாய்த்
[4]தண்பூந் துளபமால் தான்பிறந்து வந்திருந்தான்
ஒண்பூமா தேவி யுருப்பிணியாய்த் தான்பிறந்தாள்
வாரி தனிற்றுயிலும் மகாவிட்டு ணுமூர்த்தி
நாரிதனைக் கைப்பிடிக்க நல்முகூர்த்தஞ் சொல்லு"மென்றார்
'நன்முகூர்த்த மிப்போது [5]நடக்கும் முகூர்த்த'மெனப்
பொன் முகூர்த்தம் சொல்லிடவே புத்தேளிர் போய்ப்புகுந்து
பங்கயன் தேவியுடன் பத்தினிமா ரெல்லோரும்
மங்கையை நீராட்டி மணக்கோலஞ் செய்தருளிச்
செங்க ணெடுமாலைத் தேவரெல்லா மொப்பித்து
அங்கி [6]சுடர்விரிப்ப ஐயன் [7]சடங்கறுப்ப
அந்தர துந்துபிகள் ஆர்த்தங் கலங்கரிக்கத்
தந்தைதாய் யன்றியிலே தம்மிலே [8]தான்கூட்டி
மின்னிய சக்கரக்கை வேந்தன் விதர்ப்பனுடை
கன்னி யுருப்பிணியைக் கைப்பிடித்தா னம்மானை
மேவிய பூமகள் தன் மேற்பாரந் தீர்ப்பதற்குத்
தேவியைச் செங்கண்மால் தீவேட்டா னம்மானை
தேவர் தனக்குந் திருமால் விடைகொடுத்து
மாது தனையும் மனோன்மையையுந் தேரேற்றி
[9]ஆகாசத் தேநிறுத்தி அங்குநின்று காணமல்
வாகான தன்படையில் [10]வந்துநின்று ரம்மானை

---

1. தூத்துவரை வீசும் துவார பதிமாயோன் (த)
2. வேந்தன் விறற்பதியை (த)
3. துண்டிக்க (ஸ்ரீ)
4. தண்டுளாய் மாயோன் தான்பிறந்து வாழ்ந்திருந்தான் (த)
5. நடக்கு தெனமொழிய (த,ஸ்ரீ)
6. சுடர்வளர்ப்ப (த,ஸ்ரீ)
7. சடங்கியற்ற (த)
8. தான்கூடி (த)
9. ஆகாசத் தேபுகுந்து அங்குநின்றார் காணமல் (த)
10. வந்துபுக்கா ரம்மானை (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கது கண்டு அவன்படைக ளார்ப்பரிக்க
சங்கு படாகந் தாமாக வாய்ப்பரிக்க
விட்டுனு வீரர் [1]மிகவலிந் தாடலுற்றார்
தட்டுதேர் வல்ல சாத்தகியு மவ்வளவில்
[2]அங்கவ ராளும் அரசரையுஞ் சேனையையும்
எங்கும் நெருங்க இடைவிடா தேநிறுத்திச்
சேனை யணிக்குச் சிசுபால னைநிறுத்தி
ஆனை யணிக்கு யகூரனைத் தானிறுத்தி
மானத்தேர்க் குள்ளே வசுதேவ னைநிறுத்தி
எத்திசை யெங்கு மிராசாக் களைநிறுத்திப்
பத்திர மென்கின்ற [3]பதாயூகந் தான்வகுத்துச்
செச்சை புனையும்புயத் தாமன் தமனியத்தாற்
கச்சை புனைந்து கதிர்வாள் மருங்கணிந்து
பூணிற் புறத்தணிந்து பொற்கவசம் மேற்கணிந்து
நாணிற் சிலைகொளுவி நற்கோதை யும்புனைந்து
போர்க் கோலங்கொண்டு புதுமணித் தேரேறி
ஏற்கும் படைக்கலங்க ளெத்தனையும் [4]சேமித்து
வீரக் கொடியாடச் செஞ்சா மரம்வீச
மூரிக் கடற்சேனை முன்னின்றான் சாத்தகியும்
சிக்கென் றிவர்நிற்கச் சேயிழையார் தன்னைமுன்னே
துர்க்கை தொழவிடுத்துச் [5]சூழ்ந்துநின்றார் தாமேகி
மண்ணுக்குள் மன்னர் [6]மணமிட விண்ணுந்து
[7]பெண்ணைத்தா னூடி யிருந்தபிற வுற்பலற்கும்
தன்மகள் வாற தடம்பார்த் திருக்கின்ற
மின்னிகர் பொன்பூண்ட விதர்ப்பனுக்கு மேதுசொல்வார்
"வாவு துவரையர்கோன் மாயமாய் வந்துபுக்கி
பூவும் பொரியும் புணர்நெருப்பு முண்டாக்கி
அந்தரியைக் கும்பிட் டணியிழையைக் கைப்பிடித்துத்
[8]தந்திரத்தே கூடினான் தா"னென்று சொன்னார்கள்
சொன்னசொற் கேட்டுச் செவிகள் சுறுக்கெனவே
மன்னன் விதர்ப்பன் மடித்துதட்டை மென்றுகொண்டு

1. மிகவேதா னார்ப்பரிக்க (த)
2. அங்கிவர் நிற்க (த)
3. பரும்படையுந் தானிறுத்தி (த)
4. சோடித்து (த,ஸ்ரீ)
5. சூழ்ந்துநின்ற மன்னவர்கள் (த,ஸ்ரீ)
6. மனமுடைந்து (ஸ்ரீ)
7. பெண்கொள்ள வந்த பிறவுற் பலன்தனக்கும் (த)
8. அந்தரத்தே போயினான் ஆயனென்று சொன்னார்கள் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரேறு போலப் பொருமன்னர் [1]தற்சூழத்
தேரேறி வில்வளைத்துச் சென்றனன்கா ணம்மானை
"பண்டு நமக்குடைந்து பாதாளம் [2]போனவர்கள்
தண்டிச் சருவத் தரிப்பரோ [3]தார்வேந்தர்"
[4]எல்லாருந் தேரேற எல்லாரும் வில்வளைத்துச்
செல்லார் நிறத்தான்மேற் சென்றனன்கா ணம்மானை
உருப்பிணிக்கு மூத்த உருப்பிணன் கேட்டதனை
நெருப்பென்னப் பொங்கி [5]நின்றதிரத் தேரேறி
வில்வளைய நாண்வளைய மென்மேற் [6]சரந்துரந்து
பல்மன்ன ரோடும் படையோடும் தாக்கினன்காண்
தக்க சராசந்தன் சிசுபாலன் [7]சாம்போதன்
மிக்க வடவையென்ன வேகத்தாற் செல்பளவிற்
பேரிலெட்சை [8]யெய்திப் பிறவுற் பலன்தானுந்
[9]தேர்வலஞ் சூழவொரு தேரேறி வில்வளைத்துக்
"காய்ந்தவனைக் கொன்று காதலியை மீட்ப"னென்று
ஏந்தல் படையுடனே ஏகினன்கா ணம்மானை
மிக்க வரசர்களும் வெவ்வடவை போற்சினந்து
ஒக்க உடன்று உகாந்தரம்போ லேவெகுண்டு
வெடுவெடெனத் தேரோட்டி மிக்கெங்குஞ் சூழ்ந்துகொண்டு
சுடுகணை மாரி [10]சொரிந்தனர்கா ணம்மானை
தூசி முனைகள் தொலையாக் கடுங்களத்தில்
வீசு விதர்ப்பனுக்கு வேற்பலதே வனுரைப்பான்
மனக்களியா யெம்பிக்கு [11]மற்றுமொரு பெண்கொடுத்தீர்
எமக்கொரு பெண்கொடுத்தெம் மாமனுய் வாராமல்
இங்கே பொரவருமோ என்றுபல தேவனுக்கு
வெங்கோபம் பொங்க விதர்ப்பனுமங் கேதுசொல்வான்
"பெய்வளையை விட்டுப் பிழைத்தோடிப் போ"வெனவே
கைபொழியும் வில்லாற் கணைபொழிந்தா னம்மானை
இப்பா லிவரு மெதிர்த்துப் பொருகையிலே
அப்பா லடைந்து அழன்றுபிற வுற்பலனும்

1. தானவர்கள் (த)
2. புக்கவர்கள் )த)
3. தானென்று (த, ஸ்ரீ)
4. எல்லாரும் தேரேறுர் எல்லாரும் வில்வளையார் (த)
5. நிமிஷமாய்த் தேரேறி (த)
6. சரந்தொடுத்து (த) சரம்வளைய (ஸ்ரீ)
7. காம்போதன் (த)
8. கேட்டு (த)
9. தேரை முட்டவிட்டுச் செறிவான வில்வளைத்து (த)
தேரை உருட்டிவந்து செறிவான வில்வளைத்து (ஸ்ரீ)
10. கொடுத்தனர் காண் (ஸ்ரீ)
11. மற்றுமுள்ளோர் பெண்கொடுத்தால் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தகிமேல் தாக்கித் தலைப்பெய் திருவோரும்
ஆர்த்தவர் மண்டி அமர்பொருதா ரம்மானை
ஒருபாற் சராசந்தன் உள்ளிட்ட கத்திறிபர்
திருமாலைத் [1]தாக்கிச் செருச்செய்தா ரம்மானை
*மன்னர் கடற்படையும் வாசுதேச வன்படையும்
*துன்னவே தாக்கித் துணிந்துபெரும் போர்பொருதார்
*காரோடு கார்தாக்கிக் கலந்து பொருகையிலே
*தேரோடு தேர்தாக்கித் திகைத்ததுகா ணம்மானை
கிரியுங் கிரியுங் கிட்டிப் பொருவதுபோற்
கரியுமங் கரியும் கைகலந்த தம்மானை
ஏவுடன் ஏவும் எதிர்பாய்ந் திடுவதுபோல்
மாவுடன் மாவும் மயக்கமுற்ற தம்மானை
மேலாளும் மேலாளும் வில்லாளும் வில்லாளும்
காலாளுங் காலாளுங் கைகலந்தா ரம்மானை
இரண்டு படையும் இகலிப் பொருமளவில்
திரண்டு பிணக்குன்றம் சென்றதுகா ணம்மானை
வெங்குருதி யானை மிகுபிணங்க [2]ளாங்காங்கே
செங்குருதி வெள்ளத்தே சென்றதுகா ணம்மானை
தூளியுஞ் சூரியனைத் தோன்ருவகை மறைக்கக்
காளியும் பேயும் களித்தெழுந்த தம்மானை
வாரோடு வார்பூண்ட வலுவில்லும் வேல்கணையுந்
தேரோடு தேர்தாக்கித் திகைத்ததுகா ணம்மானை
மாக லுலகும் வளையாழி யானுலகும்
நாக ருலகும் நடுக்கமுற்ற தம்மானை
அங்கது கண்டு அரவிந்த லோசனனும்
தங்கரிய [3]போர்வல்ல சாத்தகியோ டேதுரைப்பான்
"உருப்பிணன் தன்சரத்தால் உள்ளிட்ட [4]கத்திறிபர்
நெருப்பென்னத் தாக்கி நின்றதில்லை [5]நம்படையும்
மிக்க சராசந்தன் வீமனன்றிச் சாகரியான்
சக்கரத்தா லன்றிச் சிசுபாலன் சாகறியான்

---

1. சூழ்ந்து (த, ஸ்ரீ)
* நான்கு வரிகள் - த, ஸ்ரீ - பிரதிகளில் இல்லாதவை.
2. அத்தனையும் (ஸ்ரீ)
3. போர்வேற் (த)
4. மன்னரெல்லாம் (த)
5. அம்மானை (த, ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னையவ னசையான் பிறவுற்பலன் போகான்
மின்னைவிட்டா லன்றி விதர்ப்பனும் போகறியான்
உற்ற மனோன்மை உருப்பிணிபோல் [1]தேசுடையாள்
மற்றவளை யொப்பித்து வானத்தேர் மீதேற்றி
விட்டுநாம் போனால் விதர்ப்பன் ம ளென்று
[2]ஓட்டியே மீண்டிடுவார் ஊர்புகலாம் நாமதற்குள்
எம்படை மன்னவர்க்கு [3]மிவ்வா றடிப்படுத்தி
நம்படையைச் [4]சற்று நடந்துவரச் சொல்''லென்றான்
மற்றவ னேவி மனோன்மையைப்பார்த் தேதுரைப்பான்
''பொற்றொடியே! செவ்வாய்ப் பூங்கொடியே! கேட்டருள்வாய்
மன்னன் விதர்ப்பன் [5]மடந்தையர் தானென்று
[6]உன்னையு மின்னு மொருவரையு மிங்குவிட்டுப்
போனு லொழிந்து போகார்கள் மாற்றரசர்
தேனூர் மொழிமடவாய் செய்யவகை சொல்லு''மென்றான்
மாதவன் சொல்ல மனோன்மை யெடுத்துரைப்பாள்
நாதக் கடலுலகில் நல்லுற்ற ரானவர்கள்
தாழ்வுற்ற போது தரியாமற் சார்ந்திருந்தால்
வாழ்வுற்ற போதவரும் வாழ்வாரே மாதவனே!
மின்னழகும் [7]நின்னழகும் வேறுபடா தாமாகில்
என்னளவில் நிற்கு மிதுவே [8]நல''மென்றாள்
வற்றாக் கருணையுடன் [9]மாயவனுங் கேட்டுகந்து
''உற்றார்க் கினியார் உனையல்லா தில்லை''யென்றான்
கற்பித் துருப்பிணிதன் [10]காட்சிபே லொப்பித்துப்
புற்பித்துத் தேரேற்றிப் [11]பொற்கலை மொட்டாக்குமிட்டு
[12]ஆங்கு நிறுத்தி அணிவிதர்ப்பன் மங்கையொடும்
வாங்கு சிலைமன்னன் வழிகொண்டா னம்மானை
மாத்திரத்தோள் மாயன் வழிகொண்ட வாறதனைச்
சாத்தகிதான் சொல்பளவில் தக்கவரும் மற்றவரும்
தங்கள் படைபமுறியத் தாமும் புறம்கொடுத்துப்
பொங்கு தளங்கிழியப் போயினர்கா ணம்மானை

---

1. அச்சுடையாள் (த)
   ரூபமுள்ளாள் (ஸ்ரீ)
2. நாட்டத்தில் நின்றிடுவார் நாமதற்குள் சென்றிடுவோம் (ஸ்ரீ)
3. இவ்வாறே நீரியற்றி (ஸ்ரீ)
4. சாய்த்து (த)
5. மடந்தையர் நீ (ஸ்ரீ)
6. உன்னை யிங்குவிட்டு ஒருமித்து நாங்களிப்போது (த, ஸ்ரீ)
7. என்னழகும் (ஸ்ரீ)
8. கருமமென்றாள் (த)
9. மாதவனும் (த)
10. காட்சிபெற ஒப்பித்து (த, ஸ்ரீ)
11. பொற்றலைக்குச் சேலையிட்டு (த)
12. பாங்கிதனை நிறுத்திப் பணிவிதர்ப்பன் மங்கையொடும் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கவர் பின்னே அடர்ந்து தொடர்ந்துவர
தாங்கரி தான சராசந்தன் சிசுபாலன்
மூரிக் கொடுந்தேர்மேற் பொற்கலைமொட் டாக்குமிட்டுப்
பாரிற் குலமகள்போற் பார்பார்த்து நிற்பாளை
மண்டு விதர்ப்பர்கோன் மகளென்று மன்னரெல்லாங்
[1]கண்டு களித்துக் கடற்படையை மீளவிட்டு
[2]மல்கவே பின்பிடிக்க மாயோன்மேற் போபவரைச்
செல்கை தவிர்த்துச் சராசந்தன் ஏதுசொல்வான்
"சற்றும்பொர வல்லாரைத் [3]தான்தேடிச் செல்லுவதும்
உற்றும் பொரவல்லார்க் கொழிந்தோடிம் போவதுவும்
[4]உளவா றறிந்தார்க்கு உற்றூர்போல் வந்திருந்து
களவாடல் செய்வதுவுங் கைவிட்டா னாய்"னென்றான்
மாறாத வஞ்சி [5]மலர்க்கொடியை விட்டதனால்
போறான் பிழைத்தென்று போர்வேந்தர் [6]நிற்கையிலே
பின்னும் தொடர்ந்துவரும் பிறவுற் பலன்றனையும்
மன்னும் விதர்ப்பனையும் மற்றோர்கள் பார்த்துரைப்பார்
"கருதியிடைப் பட்டுகந்த கன்னியைவிட் டேகினரால்
விருதிவிட்டுப் போவார்க்கு [7]வேறுண்டோ" வென்றுசொல்லித்
[8]திரும்ப மறுத்த சராசந்த னைத்தொழுது
பிரிய மிகுத்த பிறவுற் பலனுரைப்பான்
"கைப்பிடிக்கும் வேளையத்தே காதலியைக் [9]கச்சடக்கி
[10]மெய்ப்பிடிக்கும் மானத்தான் வேட்கத் துணிந்திருந்தான்
வென்றிப் படைபொருது மெல்லியலை விட்டகன்ற
நன்றிக்குக் கைமாறு நான்செய்வ தே'தெனவே
நின்றங் கவரெல்லாம் நேரிழையார் தானிருந்த
துன்று மணித்தேரைத் தோகையுட னூருவித்துப்
போந்து விதர்ப்பன் புரத்துக் கருகாக
வாய்ந்த நதிக்கரையில் வன்சோலை யிலிருத்தித்
[11]தாரொன்றும் தோழிமார் தம்மில் விசாரமுற்றுப்
போர்வென்று மீட்ட புரிகுழலை யிப்பொழுது

---

1. கண்டு மகிழ்ந்து கனதேரை மேற்கொண்டார்
2. மயக்கியே பெண்போட்ட மாயன்மேற் போறவரை
சலக்கை பிடித்துச் சராசந்த னேதுசொல்வான் (த)
மலைக்கையிலே பெண்பேட்ட......
சிலைக்கை பிடித்க......(ஸ்ரீ)
3. தான்வென்று மீளுவதும் (த, ஸ்ரீ)
4. உளவாடல் செய்தார்க்கு உற்றூர்போல் நிற்பதுவும் (த)ஸ்ரீ)
5. மடக்கொடி (த)
6. நிற்பளவில் (த)
7. வெட்டுண்டோ (த)
8. திரியை யறுத்து தேத்தரசனைத்தொழுது
விரிய மிருத்த (த)
9. கொண்டுசென்றான் (த, ஸ்ரீ)
10. மெய்பிடிக்கும் வில்லதனால் வெட்டத் துணிந்திருந்தேன் (த)
11. தார்பூண்ட (த, ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னதியில் நீராட்டி நற்கோல மு[1]மியற்றி
முன்னை மறையோர் முறைமையா லவ்விடத்தே
ஆகுதியின் முன்னே [2]அரியபிற வுற்பலற்கு
வாகு பெறவளைத்து [3]மங்கிலியம் பூணுவித்து
இடிமுர சார்ப்ப இருவரையுந் தேரேற்றி
உடனரச ரெல்லாரு மூர்புகுத வேணுமென்று
கோதையைத் தேரேற்றிக் கொண்டுபோ மென்றுசொல்லித்
தாதை விதர்ப்பன் தனைவிடுத்தா ரம்மானை
வெட்டெனச் சென்று விதர்ப்பனு மவ்வளவில்
தட்டொன்று தேர்மேல் தலைகுனிந்து நின்றவளை
உற்றன்பி னாலே "உருப்பிணியே" [4]யென்றழைக்க
[5]மற்றன்பி லாத மனோன்மையு மங்குநின்றாள்
[6]"என்மக ளல்லாதா ளினியதவன் மங்கை"யென்று
தன்மகளைக் காணா தயர்ந்தான்கா ணம்மானை
மன்னு கடற்றுவரை மாயோன்கைப் பட்டகன்ற
மின்னுக் கழுது விதர்ப்பன் [7]தவிப்பளவிற்
கண்டொருவ னோடிவந்து காவலர்க்கங் கேதுரைப்பான்
"மண்டலஞ்சேர் மன்னர்களே! மதிற்றுவரை மன்னனுக்கு
மெய்மகளை யீந்து விதர்ப்பனுக்கு நீங்களொரு
பொய்மகளை யீந்து புகழ்பெற்றோ இங்குவந்தீர்?"
என்றசொற் கேட்டு இலட்சை படப்போந்து
சென்ற சராசந்தன் சிசுபால னுள்ளிட்டார்
எல்லாரும் வெவ்வே றிடைஞ்சல் வழிதேடி
நல்லாட்க ளெல்லாம் நழுவினர்கா ணம்மானை
மண்டி யிருந்த மழைவெள்ளம் வற்றுகைபோல்
எண்டிசையும் மன்னர் இயங்கினர்கா ணம்மானை
ஒருக்கால் நனைந்து உகந்துமணம் செய்யவந்த
இருக்கால் நனைந்து இருந்தபிற வுற்பலனும்
ஒருவெட்க மின்றி உலகமெல்லாம் பாராட்ட
இருவெட்கம் பூண்டோமென் [8]றேகினர்கா ணம்மானை

1. புனைந்து (த,ஸ்ரீ)
2. அதிக (த,ஸ்ரீ)
3. மாங்கிலியம் (ஸ்ரீ)
4. என்றழைத்தான் (த)
5. மற்றன்பி னாலே (த,ஸ்ரீ)
6. என்மக ளல்ல யாதவன்றன் மங்கையென்று (த,ஸ்ரீ)
7. தவித்துநிற்க (ஸ்ரீ)
8. ஏங்கியவ னோடுவனும் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்தித் தழுது விதர்ப்பனுந் தன்மனையில்
அந்திக்கு முன்னே அடங்கினன்கா ணம்மானை
எல்லாரும் போனபின்பு எண்ணும் மனோன்மைதனை
நல்லதே ரோடே நடத்திப்போ யோர்மறையோன்
மண்டு கடற்றுவரை மன்னனைக் கூட்டிடவே
கண்டு பரிவுற்றுக் கைக்கொண்டு காதலியை
வென்றி முரசதிர வெல்வேந்தர் தற்சூழக்
கற்றை மணிக்கவரி காரிகையார் காலசைப்ப
மங்களம் பாட மடநல்லார் வாழ்த்திவர
செங்கண் நெடுமாலுந் தேர்வேந்தர் தற்சூழ
பொங்கு கடற்றுவரை புக்கினர்கா ணம்மானை
பொன்மாளி கையிற் புகுந்துபுரு டோத்தமனும்
மன்மாத ரோடும் மகிழ்ந்திருந்தா ணம்மானை

## கறடியர்கோன் கதை

தீவேட்ட மாயோன் சிலநாட் கழிந்தபின்பு
மாவேட்டை யாட மனத்தே மிகநினைந்து
மன்னரும் வன்னியரும் மாவலருங் காவலருந்
தன்னவரு மற்றுமுள்ள சதுரங்க முஞ்சூழ
[1]ஆரணியம் போய்ப்புகுந்தார் ஆரணியத் துள்ளவர்கள்
வாரணியஞ் சுற்றும் வலைவளைத்துக் கைவளைத்துக்
காட்டில் மிருகம் கரடி புலிகலைமான்
ஓட்டிப் புறம்போகா ஓரிடத் தாக்கியபின்
[2]அச்சுதன் தன்னோ டரசரும் மற்றவரும்
மெச்சுங் கணையாலும் வேலாலுங் கோலாலும்
அம்மிருக மெல்லா மடையப் புடையுழக்கிச்
[3]செவ்விய பேர்க்குச் சிலவிட்டுக் கொள்ளையிட்டுப்
பொங்கு நிழலிற் பொழுதளவும் வீற்றிருந்து
கங்குல் வருமுன் கடிநகரி னுட்புகுந்தார்
மட்டவிழ் தாரானும் மன்னவனும் போனபின்பு

1. ஆரணியத் தேபுகுந்து (த.ஸ்ரீ)
2. அச்சுதன் தானு மரசரும் போய்ப்புகுந்து (த,ஸ்ரீ)
3. செவ்விய பேர்க்குச் சிலையிட்டுக் கொள்ளையிட்டு (ஸ்ரீ)
   ,, ,, சிவனிட்டு ,, (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுணு வங்கிசத்திற் மிக்கபிர சேனனென்பான்
காட்டி லொருநிழலில் கண்துயின்று கண்விழித்து
மீட்டு மிருளில் விரைந்து வருவானை
மற்றவன் தந்தை மந்தா கினியென்பான்
சுற்று நெடுங்காலம் சூரியனை [1]யாசரித்துச்
செங்கதிரோ னீந்த சிவந்தக மாமணியை
அங்கவன் பூண்டுவர அங்கத்தின் சோதிகண்டு
அத்திகை யென்னும் அருவரையில் வாழ்ந்ததொரு
சத்தி யுடைய [2]தனிச்சிங்கம் பின்தொடர்ந்து
[3]கூருகிரால் மற்றவனைக் கொன்றெங்கும் பிய்த்தெறிந்து
[4]தாருலா மாமணியைத் தாம்பூண் டிருக்கையிலே
வச்சிர வண்ணன்பெண் மதனப் பிரபைதனை
மெச்சுறவே வேட்டு மீளுகின்ற சாம்புவனைக்
கண்டு வணங்கிக் கனசிங்கம் நிற்பளவில்
மண்டு மணியை மதனப் பிரபைகண்டு
ஏவென்ற கண்ணாள் "இம்மணியை நீவாங்கித்
தா"வென்று தன்கேள்வன் சாம்புவனைக் கைதொழவே
"அம்மணியைத் தா"வென்று அன்னுனும் சொல்பளவிற்
செம்மணியைத் [5]தானீயச் சிங்கம் மறுத்திடவே
மற்றதனைக் கொன்று மணியை மயிற்களித்து
வெற்றித்தே ரேறித்தன் வெம்பதிக்கே போயிருந்தான்
ஆன மணிக்கா யடவியிற் சென்றுபிர
சேனனைக் கொன்றழித்த சிங்கந் தனைக்கொன்று
கனமணியைக் கைக்கொண்டு கரடியர்கோன் வீற்றிருந்தான்
காட்டில் மனது கறுப்பாகிக் காசினியில்
வாட்டமுற மாய்ந்து வாராப் பிரசேனன்
தன்தந்தைக் காதித்தன் தந்த சிவந்தகத்தை
எந்த வுலகினிலு மில்லாத மாமணியை
பூண்டுவரக் கண்டு போராழி யான்விரும்பி
வேண்டியே கேட்க விதியாற் கொடாதிருந்தான்

1. யட்சிக்க (த)
2. தனுச்சிங்கம் (த)
3. கூறுகூருய் (த)
4. தாரில்லா (த)
5. செம்மணியைக் கேட்பளவில் (த,ஸ்ரீ)

அம்மணிக் காகவல்லோ அவர்வேட்டை போனதென்பார்
[1]செம்மணி கொண்டான் திருமா லெனவுரைப்பார்
தன்னுடைமை தானும் தனக்குப் பகையென்பார்
பொன்னுடைமை யெல்லாம் [2]பொறுக்கியிரு மென்றுசொல்வார்
அந்நக ரெங்கு மப்படியே சொல்பளவில்
மன்னன் பிரசேனன் வங்கிசத்தா ரெல்லாருஞ்
செங்கண் நெடுமால் திருவடியைப் பூண்டுகொண்டு
பொங்கி யழுது புலம்பலுற்றா ரம்மானை
உள்ளபடி சொன்னா லுட்கொள்ளா ரென்றுசொல்லி
வள்ளலுந் தேற்றி மனையில் விடுத்தவரை
[3]ஔவிய நெஞ்சத் தடர்ப்பழி பூண்டதுபோல்
வெவ்விய நெஞ்சறியா வஞ்சனை [4]செய்தவனைத்
தன்னுற்றார் தங்களையுந் தக்கோரை யுமழைத்து
முன்னுற்ற தோஷ மொழிந்தான் முதல்நெடுமால்
[5]மதிப்புற்ற பூவுலகில் மனுக்காண [6]வேண்டாத
சதுர்த்திப் பிறைகண்ட [7]தாழ்வெமக்கு வந்தமையாற்
கந்தனில் முன்பிறந்த கற்பகத்தின் தன்சாபம்
வந்தெம்மைச் சூழ்ந்தமையால் மானிடரை விட்டிடுமோ
கோமகன் துஞ்சினதுங் கோளரிபின் துஞ்சினதும்
மாமணியை வான்கரடி வாங்கிப்போய் வாழ்ந்ததுவும்
மன்குலத்து மாயன் மனத்திலே கண்டருளித்
தன்குலத்தா ரெல்லோர்க்குந் தான்சுத்த னாகவெண்ணி
மால்வழியே சென்று மணிவாங்கி மீள்வதற்குப்
பாலாழி மாயன் படையெடுத்தா னம்மானை
படைத்தலைவ ரோடும் [8]பலபவிசு தற்சூழ
[9]மடைத்தலைவ ரோடும் வண்டுவரை நாடுவிட்டு
முன்வேட்டை சென்ற முதுகாட்டிற் சென்றணுகிப்
பின்வேட்ட சிங்கம் பிளந்தபிர சேனனைத்தான்
சிங்கம் பிளந்தவகை சென்றவர்க்கெல் லாங்காட்டி
அங்கவன் தன்னை அடக்கி யவிடம்விட்டு

---

1. செம்மணிக்காய்க் கொன்றான் திருமாலே யென்றுரைப்பார் (த)
2. பொதுக்கியிரு மென்றுசொல்வார் (த)
3. அவ்விய செஞ்சொல் அடர்ப்பழி பூண்பவைபோல் (த)
4. சேர்ந்ததனை (த)
5. மாதுற்ற பூவில் (த)
6. முடியாத (ஸ்ரீ)
7. தாழ்விது சூழ்ந்தமையால் (த,ஸ்ரீ)
8. பலபவிசு தேரோடும் (த)
9. மடைத்தலை வாழையுகள் வண்டுவரை நாடகன்று (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பரிய [1]கண்ணன் சாலமெனுங் காடகன்று
[2]அப்புரோத மென்னும் அருவரையின் மீதேறி
[3]நீளும் வரையருவி நீள்சுரமுந் தானடைந்து
மாளுவ மென்கின்ற மாலியா றுங்கடந்து
பாசண்ட மென்கின்ற பாதாளத் தூடேபோய்
[4]ஏசில்லாப் பஞ்சகிரி யென்றகந் தத்திருந்து
காற்றரசன் வீசக் கடலரசன் நீர்தெளிப்ப
வேற்றரச ரெல்லா மீண்டித் திறையளப்பத்
தர்மபுரம் புக்கித் தானுஞ் [5]சமைந்துநின்று
சேமப் புயநெடுமால் சிங்கநா தஞ்செயவே
[6]வான்கேட் டதிர்ந்து வருசிங்க நாதவொலி
தான்கேட் டெரிவிழித்துச் சாம்புவனு மேதுசொல்வான்
"உற்ற பிரமாவுக் கொதுங்கிய சந்ததியாய்
மற்று மெனேக்கனக மஞ்சரி பெற்றதற்பின்
ஐயாண்டு சென்றபின்பு [7]ஆதியயன் பின்பிறந்தார்
மெய்யான தேவர்களும் மிக்கோரும் பின்பிறந்தார்
அன்றள வாக அனேகயுகஞ் [8]சென்றிடவும்
இன்றள வாகவும்நான் இந்நகரில் வீற்றிருந்தேன்
பாட்டொலி கேட்டுப் [9]பகையற்று வாழ்ந்திருந்தேன்
கேட்டறியே னிந்தக் கிளர்சிங்க நாதவொலி
ஈசனும் [10]மாயவனும் என்மேற் கறுப்புமில்லை
வீசு நறுங்கமல வேதாவு மென்தந்தை
போரிங்கே வேட்டுப் புகுந்திங்கு வந்தவனை
ஆரென்று நீசென் றறிந்துவா" வென்பளவில்
மிக்க திருநெடுமால் வெஞ்சிலையில் [11]நாண்கொளுவி
திக்கு நடுங்கத் திருணு ணெலியெறிந்தான்
தரியாத கோபமுடன் சாம்புவனுங் கேட்டதனை
"அரிராமன் நாணொலிபோ லானதே" யென்பளவிற்
பொங்கு முலகேழும் பொன்வரையும் நின்றதிரச்
சங்குவாய் வைத்தான் தனிநெடுமா லம்மானை

1. தப்பரிய கான (த)
2. அப்புரக னென்னும் (ஸ்ரீ)
3. நீளும் வகையருகே (த)
4. ஏசெண்ட (ஸ்ரீ)
5. தானும் சமர்வேண்டி (ஸ்ரீ)
   தானும் சபதரித்து (த)
6. வான்கேட்ட ஈருக (த)
7. ஆதித்தன் தான்பிறந்தான் (த, ஸ்ரீ)
8. சென்றபின்பு (ஸ்ரீ)
9. பயமற்று (த, ஸ்ரீ)
10. மாதவனும் (த)
11. நாணுருவி (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கிய சங்கோசையிது போருக் கெனச்சினந்து
பொங்கிய வல்லசுரர் போர்தொலைத்த காரணன்கை
சங்கொலிபோ லென்று சாம்புவன் நிற்பளவிற்
சந்திர தாரனென்னும் தான்கரடி மன்னனொருவன்
அந்தரத்தே வந்துநின்று அச்சுதனைத் தான்பார்த்துத்
தேன்கொண்ட பைந்துளபச் செல்வனையுஞ் சேனையையுந்
தான்கண்டு மீண்டுவந்து சாம்புவனுக் கேதுரைப்பான்
"சரியனுய்ச் செங்கமலக் கண்ணனுயைத் தோளிணைகள்
பரியனுய் [1]மானிடனுய்ப் பைம்பொற் கலையுடுத்தித்
தக்க பணிபூண்டு தாட்டியத் தேரேறி
மிக்க குடையோங்க வெண்சா மரமிட்ட
போர்க்கோலங் கொண்டு போர்வேந்தர் தற்சூழத்
தேர்க்கோடி முன்னிற்கச் சேனை யணிவகுத்து
நின்ரு னொருவன் நெடுமால் தனைப்போலே"
என்ரு னதுகேட்டு [2]இவனுமினி யென்சொல்வான்
"பன்னுளு மென்னைப் பணிகொள்ளும் [3]பார்வீரர்
அன்னு யகனையன்றி யல்லாதா ராரெனினும்
ஐந்தா யுதம்பிடித்து ஆங்கருடன் மீதேறி
வந்தாலு மென்னுடைய [4]வாளுக்குப் பற்றுவரோ
நானென்று வெண்ணில் நமனும் நடுங்காஞே
மானிடஞே வின்றெனக்கு மாருச்" செனவெகுண்டு
வான முரசறைந்து வான்படையை முன்கூட்டித்
தானும்போர்க் கோலஞ் சமைந்தான் கரடியர்கோன்
ஆணிக் கனவரையில் [5]ஆதித்த னுற்றதுபோல்
[6]மாணிக்கச் சுட்டி மகுடமுந் தானணிந்து
வண்டணி மாலையையும் [7]மார்போ டுறவணிந்து
ஒன்றரை யோசனையு மொண்கவசம் தான்புனைந்து
மிக்க திருநுதலில் வீரபட்டம் தான்கட்டித்
தக்க பணிவகையால் தன்னை யலங்கரித்து
வீரபட்டங் கட்டி வீரமணித் தண்டெடுத்துப்
போர்க்கோலங் கொண்டு புகர்வாள் மருங்கணைந்து.

---

1. மாண்டானுய்ப் (த)
2. இவனுமங்கே யேதுரைப்பான் (த)
   ணைரச னேதுரைப்பான் (ஸ்ரீ)
3. பாற்கடலில் (த)
4. வாகுவுக்கு (த)
5. அருக்க னுதித்ததுபோல் (த)
6. மாணிக்க மிட்டமுத்தும் மகுடமுந் தான்புனைந்து (ஸ்ரீ)
7. மாமேக மொச்சுகைபோல் (த, ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துஞ்சுநாள் வந்தாக்கால் தோளெட்டுண் டாகுமென்று
[1]தஞ்சவ னிட்ட சாபந் தலைகூடி
முட்டென வான முடிகள் முகடுதொட
[2]அட்டகயம் பெற்ற அசலமெனுந் தேரேறித்
தொங்கல் நிழற்றத் துணைக்கவரி காலசைப்பச்
சங்கு படகந் தலமதிர [3]விண்ணதிரச்
சித்தர் இயக்கர் [4]செறியும் இராக்கதர்கள்
மெத்தங்கர டிமுசுறு வெள்ளம் புடைசூழப்
பாம்பு படமொதுங்கப் [5]பார்வான் பயங்கொள்ளச்
சாம்புவன் மாயன்மேல் தாக்கினன்கா ணம்மானை
மேருவைப் போலுயர்ந்து வெவ்வடவை போல்விழித்துத்
[6]தேரூர்ந்து வந்தவனைத் தேர்வேந்தன் தான்பார்த்துப்
பண்டச்சங் கண்டறியாப் பார்த்திபர்கள் மற்றவனைக்
கண்டச்ச மீதோடக் கால்விட் டுடைந்தோடி
விற்கிளறித் தேர்கிளறி மிக்க வணிகளறி
சொற்குளறிப் பின்னொதுங்கித் தூயோனைப் பார்த்துரைப்பார்
*"கார்வரை போலுங் கரடி யுருப்போலுந்
*தேவரை வெல்லத் திசையெட்டும் போதாது
[7]கண்டறியோ மிந்தக் கனவில்லிற் போராண்மை
†கேட்டறியோ மிந்தக் கிளர்சிங்க நாதவொலி
[8]வண்டணியும் பூந்துளப மாலே மதிபிலையோ
சிங்கப் பிரசேனன் சிவந்தக மாமணியால்
மங்கினதும் போதாமல் மற்றுமக்கும் காலமிதோ"
என்றென்று சொல்லி இடைவாரை யஞ்சலென்றார்
குன்றொன்று தோள்நெடுமால் கூறலுற்றா னம்மானை
"முந்நாளில் வையகத்தில் மூண்டவரைக் கொல்லுகிற
என்னைநீ ருள்ளறிந்து மிவ்வுருக்கண் டஞ்சுவதோ
குணத்திற் கொடியநெடுங் கூற்றம்போல் வந்தவனைக்
கணத்திற் படவடிப்பேன் கண்டுகொள்ளு" மென்றுசொல்லித்
தானும் போர்க்கோலஞ் சமைந்துற வில்வளைத்து
[9]வானுந் தலைபணிப்ப வானத்தேர் மீதேறி

1. தஞ்சைய னிட்ட (த)
2. அட்டபுயம் (த,ஸ்ரீ)
3. முன்னதிர (த)
4. சிறந்த (த)
5. பார்ப்பார் (த)
6. தேரேறி (த)
* இருவரிகள் த-ஸ்ரீ பிரதிகளில் மட்டுமுள்ளவை
7. கண்டறியோம் கேளாய் கதையிலு மிப்புதுமை (த)
   ,, கனவிலும் இப்புதுமை (த)
† த-ஸ்ரீ பிரதிகளில் இல்லாத ஒருவரி
8. வண்டுறையும் (ஸ்ரீ)
9. வானுந் தலைநடுங்க வானத்தேர் மீதேறி (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்படை யுள்ளதெல்லாஞ் சாம்புவன் தன்னுடைய
வன்படை மேலேவி வார்சிலையை நாணெறிந்து
தாக்கினன் சாம்புவனைத் தாமோ தரன்தானும்
வாக்கினற் சாம்புவனும் மாயோனைப் பார்த்துரைப்பான்
"சந்திரருஞ் சூரியருந் தானவரும் வானவரும்
இந்திரரு மெந்நகரி லெய்தப் பயப்படுவார்
தூயோர்போ லென்முன் [1]துணிந்துபொர வந்தெதிர்ந்தாய்
நீயாருன் பேரேது நின்னகரே" தென்றுரைத்தான்
கண்ணனுஞ் சொல்வான் "கடற்றுவரை கத்திரிபன்
வண்ண மரியவல்ல வாசுதேவ னென்பேர்தான்
பேர்கேட்டிங் காவதென்ன பெண்பேசி வந்தோமோ
போர்வேட்டு வந்தேன் பொரவல்லை யோ"வெனவே
"உன்படையோ டுன்னை ஒருகணத்திற் கொல்வ"னென்று
தன்படையுந் தானுமாய்த் தாக்கினன் சாம்புவனும்
கண்ணன் படையுங் கரடியர்கோன் தன்படையுந்
துண்ணென்று தாக்கித் துலைவுற்ற பூசலிலே
வெற்றிக் களிற்றோடும் வீழ்ந்தார் பலகோடி
கொற்றத்தே ரோடும் குலைந்தா ரொருகோடி
பாயும் பரியோடும் பட்ட தொருகோடி
காயும் கரிதேருங் காலாள் ஒருகோடி
வெம்பரித் தேரோட்டி மிக்கோனும் சாம்புவனும்
தம்படையைக் கையமர்த்தித் தாக்கினர்கா ணம்மானை
மானெடுங் குன்றொக்கு மாடவர்கள் மெய்யிரண்டும்
வானிடு வில்லொக்கும் மற்றவர்கள் வில்லிரண்டும்
வாடை யிடியொக்கும் மாசர கோசரங்கள்
கோடை யிடியொக்கும் கோத்த பலசரங்கள்
வாரியும் மாக்களிறும் வான்முகடு மச்சமுற
சூரியனுந் தோன்றாது தூளிப் பெரும்படம்
வருணன் படைக்கலமும் [2]வாயுவின் வார்சிலையும்
விறுமன் கொடுஞ்சிலையும் விட்டுணுவி னத்திரமும்

---

1. துணிந்துவந்து போர்விளைத்தாய் (த)
2. வாசுவின் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வை தெரிந்தொருவர் [1]செயிர்த்தெதிர்த் தெய்திடுவார்
அவ்வவை தன்னையவ் வம்மா லறுத்திடுவார்
கண்டு முயலம் தனிவே லெறியீட்டிக்
கொண்டு நெருங்கியவர் கூற்றுவன்போ லார்ப்பரிப்பார்
மோதிப் பொருது முகில்வண்ணன் தான்திகைப்பக்
காதி யடர்ந்து சரடியர்கோ னேதுசெய்தான்
தெண்டொன்று கொண்டு தேரினின்று தான்குதித்து
வண்டொன்று பூந்துளப [2]மாயோன்றன் மேலடர்ந்து
மாகனகத் தேர்பூண்ட வன்புரவி நான்கினையும்
பாகனையும் தண்டாற் படவடித்தா னம்மானை
சாரதியும் மாவும் தடந்தேரும் [3]கொப்பழிய
பாரதிரப் பாய்ந்து பரந்தாம னேதுசெய்தான்
நறைப்போ தலங்கலணி [4]நாரணன்தா னப்பொழுது
இறைப்பொழுதிற் [5]கொல்வே னிவனை யெனவுன்னி
[6]மோதினன் தேரினின்று முன்னின்ற சாம்புவனைக்
குத்தினன் மார்பிற் குருதி குடைந்துபுக்க
ஓங்கலே போல்வான் உயிர்நிலையை யுள்ளறிந்து
கொங்கலர் தார்நெடுமால் குத்தினன்கா ணம்மானை
மால்குத்துக் காற்றுமல் மயங்கிப் பொறிகலங்கி
வேல்குத்துக் கண்ணூர்ந்து மையல் தெளிந்துரைப்பான்
அவ்விய செம்மணிக்காய் அடர்ப்பணி பூணவந்த
செவ்விய [7]ஞானத்தாற் செங்கண்மா லென்றறிந்து
வேர்வு தெளிந்து வேதனையுந் தான்தெளிந்து
சோர்வு தெளிந்து தொழுதுரைப்பா னம்மானை
"கண்ணனே நாரணனே காரணனே காயாம்பூ
[8]வண்ணனே மாதவனே மாயவனே கேட்டருள்வாய்
வானுருவ மின்றி [9]வளரும்நீ சாகரத்தில்
மீனுருவாய் நீதான் விளையாடும் [10]நாளகத்தும்
[11]அன்னு ளமர ரமுத மெனக்கடைய
மன்னுன வாசுகியால் மந்தர மாமலைதான்

---

1. சென்னியிற் பெய்திடுவார் (த)
2. மாயோன்மே லோடிவந்து (த)
3. கொப்பளிக்க (த)
4. நாரணத்தான் மற்றிவனை (த)
5. கொல்வே னெனவே வெகுண்டெழுந்து (த)
6. மோதினன் மாயன் (த, ஸ்ரீ)
7. அஞ்சனத்தால் (த)
8. வண்ணனே மாலே மாதவனே கேட்டருள்வாய் (ஸ்ரீ)
9. வருணீ ருகந்தனிலே (ஸ்ரீ)
10. நாளையிலே (த, ஸ்ரீ)
11. அன்னு ளசுரர் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்பெற நின்றன் திருமுதுகி லேசுழலக்
கார்க்கடற்குள் ஆமையாய்க் கண்துயின்ற நாளகத்தும்
பாரார் புவிமடந்தை [1]பாதாளத் தூடெழுந்து
வாராக ரூபமாய மண்ணெடுத்த [2]வந்நாளும்
வரசிங்க மன்னன் வலிசே கிரணியனை
[3]நரசிங்க ரூபமாய் நலிக்கவந்த வந்நாளும்
பூமலியு மானைப் புணரும் புயத்தோய்நீ
மாவலியைக் காவல்செய்து மண்ணளந்த வந்நாளும்
செய்ய மகவாய்த் தசரதற்கு நீதோன்றித்
துய்ய இராகவனுய்த் தோகையுடன் தான்போக
நின்னிலங்கை [4]கொண்டு நிருதர்குலம் வேரறுத்துத்
தென்னிலங்கை சேர்ந்து [5]சிறைமீட்ட வந்நாளும்
சிற்ருளாய் மந்திரியாய்ச் சேவகனுய்க் காவலனுய்
உற்ருளா [6]யுன்றனுக்கு ஊழியங்கள் செய்திலனோ?
மார்க்க வசுரர் வலிகெடுக்கப் பூபாரம்
தீர்க்க வசுதேவன் தேவகிக்குத் [7]தோன்றியதால்
துங்க மணிக்குப்பிர சேனன் [8]தலைதுணித்த
சிங்கத்தைக் கொன்று சிவந்தகம் பேணிவைத்தேன்
அவ்வாறு செய்தே னரியேயுன் [9]பேரடியேன்
செவ்வாய் மணியேயுன் [10]சீற்றத்தி ஞற்ருெலைந்தேன்
ஆயித் தவம்போகா தையனே நீயெனக்குச்
சாயுட்சிய பதமே தா''வென்ருன் [11]சாம்புவனும்
[12]மின்மணிச் சோதிபுனை மிக்க சிவந்தகமும்
தன்மகள் சாம்புபதி தன்னையுங் கைக்கொடுத்து
''நின்வசம் நின்னடிமை நீகாத்துக் கொள்ளு''மென்று
கோவர்த்தன் தன்னெதிரே கோபுரம் வீழ்ந்ததுபோற்
சோகத்தால் வீழ்ந்தவனும் துஞ்சினன்கா ணம்மானை
ஆளா தெமையாளும் ஆதி யரங்கேசன்
தாளாதே சாம்புவற்குச் சாயுட்சி யங்[13]கொடுத்துச்
சங்கந் தரித்தானும் சாம்பன் திருமகளை
அங்கர சாள அபிடேகஞ் சூட்டியபின்

---

1. பாதாளத் தூடேபோய் (த)
2. நாளையிலும் (த)
3. நரசிங்க மாக நலிந்துகொண்ட நாளையிலும் (த)
4. சென்று (த)
5. சிறைமீட்டா யப்பொழுதும் (ஸ்ரீ,த)
6. நின்றனக்கு (த)
7. தோன்றினைகாண் (ஸ்ரீ,த)
8. தனைவதைத்த (த)
9. பேரணியான் (த)
10. சீர்ப்பதத்தி லேயிறந்தேன் (த)
11. அம்மானை (ஸ்ரீ)
12. மின்முகிற் (த)
13. அளித்து (த,ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பு பதிதன்னைத் தானெடுந் தேரேற்றி
வான்பரியும் தேரும் மதகளிறும் தற்சூழக்
கவள மதகளிற்றுக் கத்திரிபர் சூழ்ந்துவரத்
தவளக் குடைநிழற்றச் சாய்மரம் வீசிவர
நீளு மருஞ்சுரமும் நீள்காடும் தான்கடந்து
ஆளுந் துவரை யணைந்திருந்தா னம்மானை
சதுர்த்திப் பிறைகண்ட தக்கவர்க ளிக்கதையைத்
[1]துதித்திருந்து கேட்கத் தொலையுங்கா ணம்மானை

*விருத்தம்

கதித்தே அசுரர் கண்டம் பிளந்திடக் கண்டமரர்
குதித்தே புகழ்ந்திடும் கூராழி மாயன் குரைகழற்ருள்
துதித்தே கரடியர் கோன்கதை கேட்பவர் சொல்வர்தனை
மதித்தே சதுர்த்திப் பிறைகண்ட தோசம கன்றிடுமே

## சத்தியபாவையை வேட்டமை

பொழிற்றுவரை வாழும் [2]போதேயாய்ப் பாடியிலும்
எழிற்றுவரை நாடன் இருந்துசெங் கோல்செலுத்திப்
பேராழி யானும் பிரசேனன் முன்பிறந்த
தாரார் தடம்புயத்துச் சத்திரா சித்துவுக்குத்
தக்க சிவந்தகத்தைத் தான்கொடுக்க மற்றவனும்
மிக்க பிரியமுடன் வேந்தனைப்பார்த் தேதுரைப்பான்
"தேசிகனே [3]யெந்தை திவாகரன்பாற் பெற்றமணி
யோசனை தூர மொளிப்பிரபை தோன்றுவது
நித்த மிருந்திடத்தில் நீள்நிதியம் பல்குவது
செற்றலா ராயுதமுஞ் சேராமற் செய்யுவது
இம்மணி போம்வழிகண் [4]டெம்பணி பூண்டமையாற்
செம்மணி மாலேநீ செய்தநன்றிக் காயிப்போது
மெத்திய மாமணியும் மிக்கோரி யான்பெற்ற
சத்திய பாவையையும் தந்தேன்நீ கொள்ளு"மென்ருன்
அங்கவன் சொல்ல அரிராம னுள்மகிழ்ந்து
பொங்கு மணவோலை போகவிட்டு எத்திசைக்கும்

---

1. துதித்துப் புகல (த,ஸ்ரீ)
* விருத்தம்—த-ஸ்ரீ—பிரதிகளில் மட்டுமுள்ளது
2. பூவையுமாய்ப் பாடியிலே (த)
3. முந்நாள் (த)
4. எம்பழி (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மணிப் பந்தரிட்டு நன்னகரி வீதியெங்கும்
[1]பொன்னரிய மாலைகளும் பூங்கமுகுந் தானிரைத்து
நீளடிசி லிட்டு நிறைவுறவே யாசரித்து
நாளடிசி லுண்டு நகரி [2]வலஞ்செய்து
தக்க சடங்கறுத்துச் சத்திய பாவைதன்னை
மிக்க திருநெடுமால் வேட்டனன்கா ணம்மானை

## சதாசு யுத்தம்

தன்மகளை யுங்கொடுத்து சத்திரா சித்துவென்பான்
பொன்னகரி மாடம் புனைதுவரை தன்னைவிட்டுத்
தன்னகரை நோக்கித் தான்நடந்தா னம்மானை
காற்றென வேநடந்து காமபோத மென்கின்ற
ஆற்றங் கரையி னருகே வருவானைக்
கண்டு சதாசுவெனும் கத்திரிபன் தான்வெகுண்டு
கொண்டு கரமிறுக்கிக் குத்தினுன் மென்மேலும்
"நான்கொள்ளும் மங்கையையும் நான்பூணும் பூணிளையும்
கோன்கொள்ளு மாயனுக்குக் கொள்ளக் கொடுத்தவுன்னை
வான்சிறையில் வைப்ப"னென்று மத்திகையாற் குத்திமிக
கான்சிறையிற் கட்டிக் கடிநகரி போமளவுஞ்
சால மனந்தளர்ந்து சத்திரா சித்துவென்பான்
"கோல மதிற்றுவரைக் கொற்றவர்க் கோல"மென்றுன்
"மூத்த மடுவில் முதலைவாய் யானைதன்னைக்
காத்தவனே நீயென்னைக் காரா"யென வழுதான்
"கத்திரிபர்க் காற்றுமற் கார்க்கடற்குட் போயொழித்த
சிற்றிடைய னேவுன்னைத் தீர்ப்பான் சிறை?"யென்று
மீண்டும் புடைப்ப மிகக்கலங்கி மற்றவனும்
ஆண்டு "முகுந்தற் கபைய மபைய"மென்றுன்
தாமனைச் சொல்லித் தளராச் சதாசுவெதிர்
மாமனைக் காக்கவெதிர் மால்வந்தா னம்மானை
தண்டாழி [3]சங்கும் சதிப்புயமுந் தாவடமுங்
கண்டான் சதாசு கனன்றெழுந்தா னம்மானை

---

1. பொன்மணி மாலைகளும் (த)
2. வலம்வந்து (த)
3. சக்கரமும் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யான்கொள்ளும் பெண்ணும் எரிமணியுங் கொள்ளுமுன்னை
வான்கொள்ளு விப்ப"னென்று மாதவன்மேல் மோதினன்காண்
சத்திரா சித்தைச் சதாசு பிடித்தவிடம்
அத்துவரை முப்பத்தா றுயிரம் [1]காதவழி
அங்குள்ளான் இங்குமுள்ளான் அச்சுதன் அன்பர்களுக்
[2]கிங்குள்ளா னென்றுசொல்லி ஏத்திஞர் தேவர்களுஞ்
சந்தித்தார் தம்மிற் [3]சதாசு வெனும்பெயரோன்
வெந்தித்த வெம்போர் விளைத்தான்கா ணம்மானை
வாரி பயந்தலற வான்முகடு தானிடியப்
பாரும் விசும்பும் பலரும் பயங்கொள்ளக்
காரஞ்சு மெய்யானும் கலந்து சதாசுவுமாய்ப்
போரஞ்சு நாளாய்ப் பொருதனர்கா ணம்மானை
தீயவனைக் கொல்லத் திருச்சக்கரம் வாங்கும்
மாயவனை யப்போது [4]வசம்பாயன் தான்தடுத்து
"வம்பலர் தாராய் வரலாறு கேட்டருள்வாய்
‡ஆம்பரிச னென்னும் அரசனுக் கானபதி
‡சந்திரதி யென்னும் தனியுகத்தி லேநெடுநாள்
[5]எந்தை தவஞ்செய் திருக்கின்ற நாளையிலே
செய்ய திருவேகா தேசி திருவொணத்திற்
துய்ய [6]தனுமுகூர்த்தம் தோன்றிய வஞ்ஞான்று
பங்கயக்கண் மாயனுக்குப் பாயசம் பண்ணுவித்துப்
பொங்கு புனலாடப் போயவண் மீள்பளவிற்
காவ லனையமகன் காஞ்சன புத்திரன்தான்
மேவிய பாயசத்தை மீட்டுப் புசித்தனன்காண்
கண்டவ [7]னீசன் கரவாளாற் காஞ்சனனை
மீண்டு தலையுருள வெட்டி யுருட்டுதலும்
வெட்டுண்ட சென்னி விழுந்துருளும் வேளையிலே
எட்டெழுத்துமோத [8]இயமனெதிர் கொண்டிலன் காண்
தன்மகன் துஞ்சவவன் [9]தாய்முகுசோபை யென்பாள்
பொன்மக னென்றுர்கள் புருடோத்த மற்கிரங்கி

---

1. காதமுண்டு (த)
   காதவிடம் (ஸ்ரீ)
2. எங்கு முளனென்று (த)
3. சதாசுவும் தாமனுமாய் (த)
4. மலரோன் (ஸ்ரீ)
* அமரரச னென்னும் அரசனுக் கானபதி
  திரேதா யுகந்தன்னில் திரமுடன் நெடுநாள்
5. என்தாய் (த)
6. தனுமாதத்தில் (த)
7. தந்தை (ஸ்ரீ)
8. இயமனுயிர் (த)
9. தாய்முகு சோபமுற்று (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பச்சைத்துளாய் மாயவற்குப் [1]பாரித்த பாயசத்தை
எச்சிற் படுத்தினன் இவனையான் பெற்றமையால்"
சேலார்க்கும் கண்ணாள் திருமால் [2]தனைநினைந்து
மூலாக் கினியெழுப்பி மூண்டுள்ளே தீமூட்டி
ஒன்பது வாசல் ஒக்கவே [3]தான்கொழுவி
ஐம்புலனும் சோர்ந்து அவளும் மரித்தனள்காண்
மற்றவர்கள் செய்கையெல்லாம் மகாவிட்டு ணுவறிந்து
உற்றவரை யெய்தி உயிருமவர்க் களித்து
"ஆனவரங் கே"ளெனவே ஆம்பரிச னேதுரைப்பான்
"வானவரால் மானிடரால் மாளாத நல்வரமும்
எய்யாமல் வாழ்வரமும் எம்மானே யுன்னுடைய
கையாலே மாய்ந்து கதிபெற நல்வரமுந்
தா"வென்றான் நாரணனும் "தந்தோ"மென வகன்றான்
ஏவென்ற தோளாய் இவனவ" னென்றுரைத்தான்
"ஐயனே மற்றிவன்தான் ஆயுதத்தாற் சாகரியான்
கையினாற் கொன்று கதியளிப்பா" யென்றுசொன்னான்
[4]சம்பாயன் சொற்கேட்டுத் தாமன் சதாசுவினை
வெம்மா யுடன்று வெறுகையால் மேல்விழுந்து
சேர்ந்து [5]கரந்திமிர்ந்து திண்டாடக் குத்தலுமே
சோர்ந்து சதாசுவுயிர் துஞ்சினன்கா ணம்மானை
[6]மின்னும் சதாசுவுடல் மீண்டுமண் மேற்கிடப்பத்
தன்னுயிர் சாயுட்சிய பதமடைந்த தம்மானை
குத்தினா லங்கவனைக் கொன்று கதிகொடுத்துச்
சத்திரா சித்துவினைத் தன்பதிக்கே போகவிட்டு
நீளுங் கருணை நெடியமா லப்பொழுது
ஆளுந் துவரை யணைந்திருந்தா னம்மானை

---

1. பாயாசம் பண்ணிவைத்தேன் (த,ஸ்ரீ)
2. பதம்பணிந்து (த,ஸ்ரீ)
3. தானடைத்து (ஸ்ரீ)
4. மலரோன் சொற்கேட்டு மாயவனுஞ் சதாசுவினை (ஸ்ரீ)
5. கரமிறுக்கி (த)
7. மன்னும் சதாசுவுடை வல்லுடலம் மண்ணில்விழ (த) (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுருத்திரன் பிறதூமன் பிறந்த கதை

வாய்த்த குடிதழைக்க வானசரர் தான்தழைக்க
ஏற்க வினிதா யிருக்கின்ற நாளையிலே
முன்முடி சூட்டி முனிவர்களுந் தேவர்களும்
[1]பொன்முடி மாலுக்கு புகழ்ந்துரைப்பா ரப்பொழுது
[2]கஞ்சா னனையுங் கருடனையு மின்றுமுதற்
பஞ்சா யுதமும் பணிகொள்வா [3]யென்றகன்றார்
முருட ருரங்கிழிக்கும் மூரிப்பஞ் சாயுதமுங்
[4]கருடனு மேவல்செய்யக் கண்ண னினிதிருந்தான்
மிக்க நாள்தன்னில் விதர்ப்பன் திருமடந்தை
மைக்கண் பசப்ப வனமுலைகள் தான்கறுப்ப
வேள்வி யுருத்தரிக்க மிக்க முகுந்தனுடை
கேழ்வி யுருப்பிணிதான் கெர்ப்பிணி யாயினள்காண்
ஆமைந்து திங்கள்தன்னில் அன்னாள் சடங்கறுத்துச்
சிமந்தஞ் செய்து திங்கள் நிரம்பியபின்
கன்னற் சிலையும் கடிபூங் கணையைந்தும்
வண்ண மகரக் கொடியும் [5]வடிவுடனே
சொல்லிய பங்குனியிற் சோதிநட் சத்திரத்தில்
இல்லில் உருப்பிணிதான் ஈன்றாள் இரட்டையரை
[6]உருவ மனைய உருப்பிணியா ளப்பொழுது
இருவர் குமாரர்களை யீன்றாள்கா ணம்மானை
தான்பெற்ற மைந்தர் தம்மழகைக் கண்டுகந்து
வான்பேற்றை நோக்கினாள் [7]வான்மீக னையழைத்து
''மதிரூப மாமுனியே மற்றென் வயிற்றுதித்தார்
அதிரூப மான அனங்கனைப் போலிருவர்
[8]ஆலச் சிலையும் அதிர்பூங் கணையைந்தும்
கோல மகரக் கொடியு முடன்பிறந்தார்
இங்கிவர் காரணந்தா னேதெ''னக் கேட்பளவில்
மங்கை தனைநோக்கி வான்மீக னேதுரைப்பான்
''மன்மைந்தர் போலன்றி [9]வந்துவீ ழாய்ப்பிறந்த
நின்மைந்த ருண்மை நிகழ்த்தவே கேட்டருள்வாய்

---

1. பொன்முடியோன் பக்கல் புக்கிப் புகழ்ந்துரைப்பார் (த)
2. கஞ்சன் றனையும் (த)
   கஞ்சமலர்க் கண்ணைய் (ஸ்ரீ)
3. யென்றுரைத்து (த)
4. கருடனு மேவல்செய்யக் கற்பித்துக் தானிருந்து (த)
5. வடிவுமுடன் (த)
   வடிவும் மிகுந்துதிக்க (ஸ்ரீ)
6. உருவமதனை யுருப்பிணி மாதேவி (ஸ்ரீ,த)
7. வான்மீக மாமுனியை (ஸ்ரீ)
8. ஆரச் சிலையும் (த)
9. வந்துன் வயிற்றுதித்த (த)
   வந்துவே ளாய்ப்பிறந்த (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகொத்த [1]செஞ்சொல்லாய் பார்வானந் தோன்றுகைமுன்
நாகந் தனிற்கிடந்த நாரா யணமூர்த்தி
உந்தியி னுள்ளே ஒருதா மரைப்பூவில்
[2]வந்ததோ ராணம் வருசம்நூ றுயிரம்பின்
[3]பேதிப்ப ஆதி பிரமா வெளிப்பட்டான்
ஓது மறையு முலகு பதினுலுந்
தந்துபின் தந்தான் சதிர்விறு மாக்கள்தனை
வந்து [4]விசுவகன்பின் மக்களு மோரறுவர்
காசிபற்குப் பெற்றுக் களிக்கின்ற நாளையிலே
பேசு முனியருளால் பெற்றுர்கள் பிள்ளைகளை
அதிதியென்பாள் பெற்றுள் அடைவே யமரர்களை
[5]திதியென்பாள் பெற்றுள் தீய அசுரர்களை
அவ்வினதை பெற்றுள் அருணன் கருடனையும்
நவ்விவிழிக் கத்துருவை நாகங்க ளைப்பயின்றுள்
தனுப்பெற் றுகந்தெடுத்தாள் சந்ததியாய்த் தானவரை
மனுப்பெற்றுள் நாலு வகைமனிதர் தங்களையும்
[6]மிக்கவவர் பெற்றேரும் வேறுள்ளோர் பெற்றேரும்
தக்க வகையே சமைந்து [7]தழைத்திருந்தார்
நீண்ட வசுரர் நெடுநாள் தவசுபண்ணி
வேண்டும் வரங்கள் விறுமா விடம்பெற்றுத்
தானவரு மேனைச் சயித்தியரும் தான்கூடி
வானவரை யெல்லாம் வளைந்து துரத்திடவே
ஆங்கவருக் காற்றுமல் அமரரும் மாதவரும்
பூங்கமல மீதுறையும் புத்தேளைப் போய்க்கண்டு
வேதாவே யாதி விரிஞ்சனே யெவ்வுயிர்க்குந்
தாதாவே கோவே சரண மெனப்பணிந்து
செற்றலர்க ளான செயித்தியருந் தானவரும்
பற்றும லெம்மூரைப் பாழாக்கி விட்டார்கள்
[8]வெந்தித் தசுரர்களை ரேறுப்பாய் நீயேன்று
வந்தித்த தேவருடன் மாமலரோ னேதுரைப்பான்
"என்னு லியலுமோ இங்கிவரை வேரறுக்கத்
துன்னுழி நஞ்சுண்ட சோதிச் சுடர்வடிவன்

---

1. மென்மொழியாய் (த)
   மேனியாய் (ஸ்ரீ)
2. வந்ததே எங்கள்(ஸ்ரீ)
   வந்ததோ ராகண(த)
3. வேதித்த (த)
4. விசுவகன்மா (த)
5. அவ்வியென்பாள் (த,ஸ்ரீ)
6. மிக்கவரம் பெற்றேரும் வீறுள்ளோர் பெற்றேரும்(த)
7. தழைத்திருந்நாள் (த)
8. வெந்தித்தார்தம்மை (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]தந்த மகவலோர் சந்ததியுண் டாமாகில்
அந்த வசுர ரறுப்புண்பா" ரென்றுசொன்னான்
'பொங்கிய சங்கரர்க்கோர் [2]புத்திரருண் டாமாறு
செங்கமலத் தாதையே செப்பு'மென்றார் [3]தேவரெல்லாம்
"அவ்வா றுரைக்க அமரரே கேட்டருள்வீர்
செவ்வாய் மணிமுறுவல் செல்வி சிவன்தேவி
தன்கேழ் வனையிகழ்ந்து தக்கன் நடத்துகின்ற
பொங்கோத வேள்வி புடைப்பித்து மாறாமல்
தக்கன் மகளான தன்னுடல முமொழித்து
மிக்க மலையரசன் மின்னாக வீற்றிருந்தாள்
வேள்வி யளித்தளவில் மிக்கோனுந் தன்னுடைய
[4]கேழ்வி பிரியத்தாற் கேள்வியெல்லாங் கைவிட்டு
ஓவியம் போலே யோகியாய் வீற்றிருந்தான்
மேவி யவனுடைய மிக்கயோ கங்குலைத்துக்
கன்னி மலைமகளைக் கைப்பிடித்தா லங்கவர்க்கு
மன்னனுங் குமரவேள் வந்துதிப்பான்" னென்றுரைத்தான்
'அக்கினி மேனி யான்கொண்ட யோகத்தைப்
புக்கினி யார்குலைப்பார் போதனே' யென்றார்கள்
பூமகனுந் தானுணர்ந்து புத்தே ளிரைநோக்கிக்
'காமனை யேவுங் கலைப்பா' னெனமொழிய
இந்திரனும் மாதவரும் எத்தே வரும்பிறரும்
சுந்தர மன்மதனைச் சூழ்ந்து பரிவுரைத்து
'உன்னாலே யாமும் உலகம் பதினாலும்
மன்னா பிழைப்பதென்று மன்மதனை வற்புறுத்தச்
சித்தசன் சம்மதித்துத் தென்றற்றேர் மேற்கொண்டு
சுத்த மகரத் துவசம் விசும்பளக்கக்
கன்னற் சிலையைக் களிவண்டால் நாணேற்றி
வன்ன மலர்சூழ் வாளியுந் தான்திருத்திக்
கந்த மலர்ப்புயமுங் கண்ணு மிடந்துடிப்ப
எந்தையி யோகத் திருந்த வனம்புகுந்து

---

1. தந்த மகவென்னும் சண்முகவன் தன்னாலே (ஸ்ரீ)
2. புத்திர ருண்டாகும்வகை (த)
3. அம்மானை (த)
4. கேழ்வி பிரிவாலே கேளிக்கை தான்விடுத்து (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]எம்மானின் யோகத் தெதிரேநின் றெய்யவஞ்சிப்
பெம்மானுக் கெத்தனையும் பின்னின் றுறச்சமைந்து
அன்னேரத் தீசன் [2]அருகே மலைமகளை
முன்னேவல் செய்யும் முறைமையுந் தான்கண்டு
செம்பவள மேனிச் சிவன்மனது பேதலிப்ப
அம்பொன் றுறக்கோர்த்து ஆடல்வேள் எய்தலுமே
வெய்ய அரன்மனது வேறு படுமளவில்
துய்ய [3]மலர்விழியால் சுற்றெங்கும் நோக்குதலும்
ஒன்றெய்து பின்னும் ஒன்றெய்ய வோர்சரத்தைத்
தண்டேயும் வில்நாணிற் பூட்டிச் சமைந்துநின்ற
வண்டார் அலங்கல் மதனை [4]மலர்விழியாற்
கண்டா னிமலன் கனலானன் [5]காமனுமே
ஐங்கணையா னங்கம் பொடியாக்கி யண்டரண்டம்
எங்குந் துலங்க எழுந்த கொழுஞ்சுடராய்
நெற்றிக்கண் ணங்கி [6]னிலவ நிலையறிந்து
சுற்றிக் கணைவேளைச் சூழ்ந்து தொடர்ந்துநின்ற
வாசவனு மங்கோர் வரிக்குயிலாய்ப் [7]போயொழிந்தான்
நேச மகளோடும் நீங்கினன் வெற்பரசன்
சோதி நுதல்விழியால் தோன்றுங் கனநெருப்பை
ஆதி பிரயாவும் [8]அர்ச்சனையால் மாற்றினன்காண்
காமா யுதத்தாற் கலைப்புண்டு காய்ந்தவனுங்க்
கோமானும் யோகம் குலைந்தங்கு [9]நின்றெழுந்தான்
"தற்பரனுக் கெவ்வாறு தாரமா வோ"மெனவே
வெற்பரசன் பாவை மிகுதவசு பண்ணலுற்றாள்
வன்புக் கிரங்காத வள்ளல் மலைமகள்தன்
அன்புக் கிரங்கி அவள்தவசை வந்துகண்டு
ஓர்பிரம சாரியாய் உற்றுமையைப் பார்த்துரைப்பான்
"கார்விரவு மின்னே கருத்தே" தெனவுரைக்க
"முக்கட் [10]பரமன் மூர்த்தியைச் சேர்வதற்கு
மிக்க தவமுயன்றேன் வேதியனே" யென்றுரைத்தாள்

---

1. எம்மானின் யோகத் தெதிர்நிற்க வேயஞ்சி (த)
2. அருகே மலையரிவை (த)
3. நுதல்விழியால் (த,ஸ்ரீ)
4. நுதல்விழியால் (த,ஸ்ரீ)
5. மாரனுமே (ஸ்ரீ)
6. நிறைய (த,ஸ்ரீ)
   நிமலன் (ஸ்ரீ)
7. போய்க்கண்டான் (த)
8. அர்ச்சதையால் (த)
9. நிற்பளவில் (ஸ்ரீ)
10. பரஞான் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சர்ப்பமே பூண்டு தலேயோட்டி லேயிரக்கும்
அற்பனே யாசரீத்தாய் அன்னமே" யென்றுரைத்தான்
"தொந்தத்தி லில்லாத சோதியை [1]யான்காண்பேன்
நிந்தித் துரையாதே நீங்கா"யென வெகுண்டாள்
அவ்வுறுதி கண்டு அரனுருவந் தான்காட்டிச்
செவ்வுருவ மேனியான் தேவி தனேநோக்கி
"வந்துநாம் கைப்பிடிப்போம் மாதே தவமொழி"யென்
றெந்தை யகன்ருன் இவளு மகத்திருந்தாள்
கருமணிக் கண்டன் காதலியை வேட்பதற்குப்
[2]பெருமுனி யேழ்வரையும் பெண்பேசப் போகவிட்டான்
[3]மாமுனிவர் செல்ல மலேயோ னகத்திருத்தி
"ஆமுனிவ ரென்பால் அணேந்தவா றே"தெனவே
"கூற்றை யுதைத்தார்க்குன் கோதையைக் கேட்கவந்தோம்
ஏற்றம் பெரிய இமவானே" யென்றுரைத்தார்
மன்னன் பொருந்தி வதுவைக்கு நாளுமிட்டுப்
பின்னேயான் பாதத்திற் பேசினுர் போய்மூவர்
மங்கள மார்பன் மணவார்த்தை தான்கேட்டு
எங்கெங்கி லுள்ளவரு [4]மெத்தேவ ருமீண்டிப்
பிஞ்சணி துண்டப் பிறைசூடும் பிஞ்ஞகனே
மஞ்சன மாட்டி [5]மணக்கோலஞ் செய்வித்தார்
மெத்திய கற்புடைய வெற்பரசன் பாவைதன்னேப்
பத்தினிகள் நீராட்டிப் பாங்கா யலங்கரித்துக்
கன்னிச் சடங்கறுத்துக் காப்புறுத்தி வைத்திருந்தார்
மன்ன னரிபிரமர் வாசவன் மாமுனிவர்
அம்பொன் வரையே அரசாணிக் காலாகச்
செம்பொற் றகடுகளாற் செய்தமணிப் பந்தலிலே
எண்ணு முகிலும் எழுகடலுங் கண்டுகப்பக்
கண்ணுத லோனுங் கலியாணம் போய்ப்புகுந்து
வேதன் சடங்கறுப்ப விட்டுணு பெண்கொடுப்பக்
காதன் மலேமகளேக் கண்ணுதலோன் கைப்பிடித்தான்

---

1. யான்காண (த)
   வேட்பேன் (ஸ்ரீ)
2. பெருமுனிவர் தம்மை (த)
3. மாமுனிவர் தம்மை மலேவேந் தகத்திருத்தி (த,ஸ்ரீ)
4. எத்தேவ ருங் கேட்டு (ஸ்ரீ)
5. மணக்கோலஞ் செய்பள்வில் (த,ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி யுடனே திகழ்ந்திருந்த செய்திகண்டு
மேவி யமரர்கோன் மெய்ந்நடுங்கி வாய்புதைத்துப்
பூவம்பா லெய்து பொடியான போர்மதனைத்
தாவெம்பால் என்று தலத்தி லுறப்பணிந்து
[1]வேண்டிய தேவர்களும் மிக்குமுள்ளோ ரும்போற்ற
ஆண்டவனு மப்போ [2]தவர்க்கா யருள்புரிந்து
"கோபத்தீ யாலே கொழுத்திய வேளுடலைத்
தாபிக்க வெண்ணுது தந்தோ" முயிரென்று
"உருவ மதனை உம்பர் விழிகளுக்கும்
அருபமாய் மாரு அனங்கனென்றும் பேராகி
நம்முனிவர் தம்மேலும் நம்மேலு மெய்தாலும்
உம்முனிவு தீர உலவா" யென வுரைத்து
"ஒண்பூமா தேவி யுருப்பிணி யாய்ப்பிறந்து
வண்பூவை வண்ணற்கு மாதேவி யாகியநாள்
அன்னுள் வயிற்றி லணியிரண்டு பிள்ளைகளாய்
உன்ன யுதமோடும் உதிப்பா" யெனமொழிந்தான்
போதே கணையான் புதல்வனய் வந்துதித்தான்
மாதேயுன் மைந்தர் வரலாறு மீ"தேனவே
வான்மீகன் சொல்ல மகிழ்ந்தாள் உருப்பிணியும்
ஆல விழிமடவாள் அம்முனியைப் போகவிட்டு
அமரர் பயந்தீர்க்கும் ஆழி முகுந்தனுக்குக்
குமரர் பிறந்ததற்குக் கொண்டாடல் செய்தருளிப்
பையா டரவல்குற் பைந்தொடியார் மூவுலகும்
நெய்யாடல் செய்வித்து நீராட லுஞ்செய்து
தேன்மருவு சொல்லாள் தினம்பத்தும் சென்றபின்பு
ஆன பிறதூமன் அனுவுத்தி ரனென்று
மைந்தர்க்குப் பேருமிட்டு மைந்த ரிருவரையுஞ்
சந்தத் தடமுலையாள் தான்வளர்த்தா ளம்மானே
அந்நாள் அழகாய் அவர்வளரும் [3]நாளையிலே
முன்னுளி லேழெருதாய் முற்றிய வல்லசுரர்

1. பூண்ட உமையும் புரந்தரனும் மன்ருட (த)
2. அவ்வாறே உள்மகிழ்ந்து (ஸ்ரீ)
3. எல்லையிலே (த,ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை மகவிழந்த [1]சந்திர தாரனென்பான்
[2]அந்தரத்தே வந்துநின்று அணைந்துபிற தூமனைத்தான்
துன்றி யெடுத்துத் தொடுகடலிற் போகெறிந்து
நின்றவருங் காணமல் நீங்கினன்கா ணம்மானை
உற்றங் கவனை யொருமீன் விழுங்கிடவே
மற்றந்த மீனை வலைக்காரன் தான்பிடித்து
[3]செம்பன் புரம்புகுந்து செம்பன் திருத்தேவி
வம்பவிழ் கூந்தல் மாயா பதிக்களித்தான்
அக்கணமே மீனை யறுத்தா ளதன்வயிற்றில்
மிக்க பிறதூமன் வெளிப்பட்டா னம்மானை
வீரச் சிலையும் வெறியம்பும் வேள்வடிவுங்
காரொத்த [4]கோதையர்கள் கண்டு மயலாகத்
தீயா மதனரதி தேவி சவுந்தரியும்
மாயா பதியாக வந்து பிறந்தமையாற்
பாலகன் மேல்விழுந்தாள் பாலனு மவ்வுருப்போய்
வால மதனுக மடந்தையைத் தான்புணர்ந்தான்
ஆங்கவட்குத் தக்க ஆடவனுய்த் தான்வளர்ந்து
பொங்கு பிறதூமன் புணர்ந்தான்கா ணம்மானை
செம்ப னறியாமற் செல்கின்ற நாளையிலே
நம்பன் திருமகனை நாரதனும் வந்துகண்டு
உற்றவனை நோக்கி உகந்து புகலவெல்லாம்
பொற்றுவரை மூதூர் புகுந்தனன்கா ணம்மானை
இன்பத் திருமகனை யெவ்வுலகுந் [5]தான்தேடித்
துன்புற் றிருக்கின்ற [6]தூயோனைத் தான்தொழுது
"நம்பி பிறதூமன் நாயகனே சோர்வாடிச்
செம்பன் மனைவிதனைச் சேர்ந்திருக்கக் கண்டுவந்தேன்
மன்னு பொதுவருடை மங்கையரைச் சேர்வைசெய்து
நின்னு தரவானுன் நின்மகனு" மென்றுசொன்னுன்
போத மனமகிழ்ந்து புன்முறுவல் செய்தருளி
நாதன் நமஸ்கரித்த நாரதனைப் போகவிட்டு

1. சந்திர தாதனென்பான் (த)
2. அந்தரத்தே வந்தமைந்து (த)
3. சேமப் புரத்திருக்கும் (ஸ்ரீ)
4. கன்னியர்கள் (த,ஸ்ரீ)
5. காணமல் (ஸ்ரீ)
6. தூயோனை வந்துகண்டு (த,ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திய சேனனுக்குச் சாரத் தியங்கொடுத்துச்
[1]சித்த ரியக்கர் தெரியாத தேரேறி
[2]மிக்க பதக்கமுடன் மேலீடு சோடித்து
சிக்கென்னச் செம்பன்மேற் சென்றான்கா ணம்மானை

## செம்பன் மதுகயிடவன் யுத்தம்

சேனுற்ற தேரோட்டிச் செம்பன் புரம்புகுந்து
நாணுற வில்லேந்தி நற்சிலையை நாணெறிந்தான்
பேய்க்கண் முலையுண்ட பேராளன் நாணொலியைத்
தீய்க்கண் பொரிப்பறக்கச் செம்பனுந் தான்கேட்டுத்
"தெய்வேந் திரனைத் திறைகொண்டு வீற்றிருப்பேன்
பூவேந்தர் தோன்றப் பொறுப்பேனோ போருக்கு?"
போர்க்கோலங் கொண்டு பொருபடையை முன்னேவிக்
கார்க்கோல வண்ணன்மேற் காய்ந்துசென்றா னம்மானை
[3]சீர்வண்ண மாயன்மேற் செம்பன் எதிர்சென்று
"ஆர்நீயுன் பேரேது [4]அறியநீ சொல்லு"மென்றான்
"என்னூர் துவரைநகர் யான்வாசு தேவனென்பேர்
உன்னூர் புகுந்தேன் உனைக்கொன்றுன் தேவியையான்
பெற்ற குமாரன் பிறதூம னுக்களிக்க
உற்ற விடய"மென்ன ரோசித்துச் செம்பனுந்தான்
கொண்ட லடித்ததென்னக் கோடை யிடித்ததென்னச்
சண்ட மிடுக்குடனே தாக்கினன்கா ணம்மானை
மிக்கிருவர் வில்லொலியும் மேற்கொண்ட தேரொலியுந்
திக்கயங்க ளெட்டுஞ் செவிடுபட்ட தம்மானை
உற்றபோர் கண்டு உடனேபோய் நாரதனும்
மற்றவன் மாமன் மதுவினுட னேதுசொன்னான்
"செல்வனே உன்மருகன் செம்பனைச் சூழ்ந்துகொண்டு
மல்கு கடற்றுவரை வாசுதே வன்பொருதான்
ஓடி யொருநொடியில் உதவாயேல் மற்றவனால்
[5]வீடுவன் செம்ப"னென மிக்குரைத்தா னம்மானை

---

1. சித்திர காலம் செல்வதுபோல் தேரேறி (ஸ்ரீ)
   சித்திர லோகாசம் செல்ல ரதமேறி (த)
2. மிக்க படைக்கலமும் மேல்வீடுஞ் சோடித்து (த)
3. சீரின்மெய் மாயன்மேற் செம்ப னெதிர்நின்று (த)
4. ஏன்வந்தா யென்றுரைத்தான் (த)
5. வீடுவன் செம்பனுயிர் வேந்தனே யென்றுரைத்தான் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமுனிவன் சொல்ல மதுவுங் கயடவனுந்
தீமுனி நாட்டந் திசைகொழுவத் தான்பார்த்து
மின்படை சேமித்து மிக்கதேர் [1]மேற்கொண்டு
வன்படை யோடும் வழிகொண்டா ரம்மானை
சித்த ரியக்கர் தெயித்தியர் தானவர்கள்
மெத்திய பேய்ப்படைகள் [2]மிண்டி மிகமிடையப்
பாதாழத் துள்ள படையும் புடைபெயர
ஆதாளி தான்கண்டு [3]அந்நா ரதன்சென்று
"தேவரே யென்னுலே செய்விக்கும் போர்காண
யாவரும் போது"மென இந்திரனு மேதுசொல்வான்
"சதுர்ப்புய மால்வண்ணன் தான்தோற் றெழுந்துவிடில்
மதுப்பின்னை நம்மையெல்லாம் வன்சிறையில் வைத்திடுவன்"
என்னவும் தான்கேளா தியாவருந் தானீண்டி
உன்னரும் போர்கண் டுகந்துநின்று ரம்மானை
வாயுவே யென்ன மதுவுங் கயடவனுந்
தீயுகப் போதும்வகை செங்கண்மா லுள்ளறிந்து
அங்கவர் கூடி அரும்போர் விளைப்பதன்முன்
இங்கிவனைக் கொல்வேன் எனவே வெகுண்டெழுந்து
அம்பத னுலும் அனேகா யுதத்தாலுஞ்
செம்பனைத் தானெருக்கித் தேரழித்தா ரம்மானை
தேரினுந் தான்குதித்துச் சிங்கம்போல் வந்தவனை
மேருவிலே நின்ற மிகுகருடன் [4]தான்பிடித்து
முத்தலைத்தோட் செம்பன் முடித்தலையைத் தான்திருகி
அத்தலையை யம்மானை யாடினன்கா ணம்மானை
கோல மிகுசெம்பன் கொலையுண்ட [5]போர்க்களத்தே
காலனென வந்தான் கயடவனு மம்மானை
தானை வளையத் தடக்கையில் வில்வளைய
மானத்தேர் மாக்கள் வளைய வளைந்துகொண்டு
காற்று யடித்துங் [6]கனலாய் வளிதுரந்துங்
கூற்று யெதிர்ந்துங் குலவரைமால் விட்டெறிந்தும்

1. மேலேறி (த)
2. மிண்டி யிடையிடையே (த,ஸ்ரீ)
3. அமரர்கள் தான்மயங்க (ஸ்ரீ)
4. தான்குதித்து (த,ஸ்ரீ)
5. போர்க்களததில் (த)
6, கனலாக மீதூர்ந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணங்க ளாலும் பலவா யுதத்தாலுஞ்
சேனுடர் கோமானைத் தேரழித்தா ரம்மானை
மின்னுழி மாயோனை வேகத்தால் தேரழிக்க
அண்ணன் வலிகண் [1]டறப்பயந்தார் வானோரும்
சோதித்தேர் சாயச் சுழித்துமது சூதனனும்
"நீதிப்போர் [2]செய்யில் நெடுநாளுஞ் சாகறியான்
இற்றைக் குயிர்குடிப்பேன்" என்றுபஞ் சாயுதத்தாற்
கொற்றைத் [3]தனிவாளாற் கூறுசெய்தா னம்மானை
காவலவ னை கயடவன் பட்டுவிழ
ஆவ லுடனே அவன்படைஞர் கெட்டோடக்
கண்டான் வெகுண்டான் கறங்குபோல் தேரோட்டி
வண்டா ரலங்கல் மதுவந்தா னம்மானை
மண்டு பெருங்கடல்போல் வான்படை தான்வளையக்
கொண்ட லனையவனைக் கோலி மதுவளைந்து
[4]கார்முக மப்புமிழக் கண்கள் கனலுமிழ
நேர்முகமாய் நின்று நெடியோனைப் பார்த்துரைப்பான்
"நான்கண்ட போரில் [5]நமன்கண்ட தண்டியிலே
ஊன்கொண் டுலர்வி யொழித்தோட வொட்டுவனே
சின்னப்போர் செய்தழிந்த செம்பன் கயிடவன்போல்
என்னைப்போர் வெல்வதன்முன் யானுன்னை வெல்வ"னென்று
"பாருன் குருதி பருகுகிறேன் சிக்கெனவே
வாரு"மென மாயன் மதுவினுட னேதுசொல்வான்
"[6]தொடந்தார் செருக்களத்திற் சொல்லினு லாவதென்ன
உடைந்தா ருயிருடனே உன்னுயிருங் கூட்டுகிறேன்
பூண்டு வலுவாய்ப் பொருநீ" யெனக்கரியோன்
மூண்டு மதுவுடனே மோதினன்கா ணம்மானை
ஐய னடர அசுரர்கே னுமடர்ந்து
வெய்ய கடும்போர் விளைத்தார்கா ணம்மானை
சூலத்தா லம்பால் சுடர்மழுவால் தோமரத்தாற்
பாலத்தால் வேலால் பலவா யுதங்களினால்

---

1. அமரர் கலக்கமுற்றார் (ஸ்ரீ)
அறப்பயந்தார் வானோர்கள் (த)
2. செய்தால் (த,ஸ்ரீ)
3. தனுவாளால் (த)
4. கார்முக முபுயமுங் (த,ஸ்ரீ)
5. நமன்கொள்வ தவ்வாறு (ஸ்ரீ)
6. அடைந்தார் செருக்களத்தில் அன்னதி லாவதென்ன (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டுளப மாலை மதுத்தான் வளைந்திடவே
கண்டு கருடன் கனவரையா லோடிவந்து
செம்பொன் வரைதான் சிறகிரண்டு பெற்றதென
உம்ப ருலகத்தில் ஓங்கி யுறவளர்ந்து
கண்ணன் தனைத்தான் கனதோளின் மீதேற்றி
எண்ணும் மதுவுக் [1]கெதிர்வந்தா னம்மானை
கஞ்சத் தடங்கண் கவுத்துவமும் முன்னூலும்
பஞ்சா யுதமும் பருதி மணிமுடியும்
ஓதநீர் மெய்யும் உடுத்தபீ தாம்பரமும்
[2]போதநீர் கையிற் புரிசங்கு சக்கரமும்
வான்செங் கருடன்மிசை வானோர்கள் வாழ்த்தெடுப்பக்
காஞ்சனக் குன்றிற் கருமேகம் நின்றாற்போல்
நட்டணை யாக [3]நாமமலர் தற்சூழ
விட்டுணு ரூபம் வெளிப்பட்டு நிற்றலுமே
மூர்த்தி வடிவை முதியமது விழியாற்
பார்த்து நகைபுரிந்து பாகனுட [4]னேதுசொல்வான்
"மாலென் றுலவாதே வான்புள்ளென் [5]றுட்காதே
காலொன்று தேரைக் [6]கடவா" யெனவுரைத்தான்
அன்னா னுரைக்க அவன்சா ரதியுரைப்பான்
"முன்னா ளிரணியனை [7]முன்னேலும் முன்னமர்போய்ப்
பாலாழி மாயன்கைப் பட்டதாய்க் கேட்டிருப்போம்
மாலாக வந்துதித்தான் மற்றவனே" யென்றுரைத்தான்
"வந்த வுருவொழித்து மற்றோ ருருக்கொள்ளச்
சிந்தை கலங்கினையோ தேர்ப்பாகா" வென்றுசொல்லி
"மருள்தன்னைத் தீரேன் வழிமற் றறியாயோ
கருடன்மேல் தேரைக் கடாவென்று" னம்மானை
அண்டு களத்தி லமத்தியனுஞ் சாரதியுங்
கண்டது சொல்லக் "கடனுத லாலுரைத்தேன்
குற்றம் பொறு"மென்று கோமதுவைக் கும்பிட்டுக்
கற்றைமணித் தேரைக் கடாவினன்கா ணம்மானை

---

1. எதிர்நின்று னம்மானை (த)
2. போதநின்ற (த)
3. நரபாலர் (த)
4. ஏதுரைப்பான் (த, ஸ்ரீ)
5. ஏகாதே (த) அஞ்சாதே (ஸ்ரீ)
6. கடவென்று னம்மானை (ஸ்ரீ, த)
7. முட்டியுத்தம் பண்ணியங்கே (த, ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கி யிருபேருந் தம்மிற் சரிபோராய்
ஆர்க்கும் சமரில் அமரர்கோ னேதுசெய்தான்
எண்ணிறைந்த ரூபமாய் எத்திசையும் [1]தானிறைந்து
மண்ணிறைந்து விண்ணிறைந்து மாருதமெல் லாம்நிறைந்து
கானெங்கு மாயுங் கடுங்காற்ருய்ச் சூழ்ந்துகொண்டு
வானெங்கு மண்ட வடவைபோல் நின்றெரிந்துங்
கார்க்கடலை மொண்டு கனத்தமுகி லாய்ப்பொழிந்தும்
பார்க்க வரிதாய்ப் பருவதங்களா லெறிந்தும்
பாகமாய் நின்றும் பலவாயுதம் விடுத்தும்
ஏகமாய் நின்றும் எதிரம்பு கோர்த்தெய்தும்
எட்டுத் திசையும் இராப்பகலாய்ச் சூழ்ந்துகொண்டு
மட்டற்ற போர்தான் மதுச்செய்யக் கண்டஞ்சிச்
சந்திரரும் சூரியருந் தானவரும் போயகன்ருர்
இந்திரரும் [2]வானவரும் எத்திசையும் போயொழித்தார்
போரா ரசுரர்கோன் பின்னுமினி யேதுசெய்தான்
நாரா யணன்மேலும் கற்கருடன் செட்டையிலும்
பல்லா யிரம்பகளி பாய்ச்சிப் பரித்தேரில்
எல்லாருங் காண எதிர்நின்றங் கார்ப்பரித்தான்
மற்றக் கொடியோன் வலிகண்டு மாயவனும்
இற்றைக்குக் [3]கொல்வே னெனப்பஞ்ச வாயுதத்தில்
அஞ்சா யுதத்தில் [4]அதிகமுள்ள வாயுதத்தை
எஞ்சாத சூரர்க் கியமனுய் வந்ததனைச்
சூரியனின் சோதியெனச் சூள்பிரபை யுள்ளதனைச்
சீரிய தேவர் திடுக்கந் தவிர்த்ததனை
விட்டுணு சத்தியெல்லம் வீற்றிருக்கப் பட்டதனை
எட்டெழுத் தாலே யிடுங்கால சக்கரத்தைச்
சிந்தித்து வாங்கித் தியானித்துச் சீராமன்
வந்தித்து நின்று மதுவின்மேல விட்டெறிந்தான்
செல்லுந் திசையனைத்தும் செந்தீமிக உமிழ்ந்து
வல்லசுரன் விட்ட [5]வலுப்படையெல் லாந்துணித்து

---

1. தான்நின்று (த) தானேயாய் (ஸ்ரீ)
2. தேவர்களும் (த)
3. கொல்லா திவனெனென்றும் சாகறியான் (த, ஸ்ரீ)
4. அதிகமா யுள்ளதனை (த) அதிக மகிமையுள்ள (ஸ்ரீ)
5. வாளியெல்லாம் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓயா மதுவின் [1]உரத்தையெல் லாந்துணித்து
மாயன் வலக்கையிலே வந்திருந்த தம்மானை
நிலவெழுந்த மாமலைபோல் நின்ற வெயிறிலங்க
மலைவிழுந்த தென்ன மதுவிழுந்தா னம்மானை
ஐயன் விடுத்ததொரு [2]ஆழியால் மார்பிளந்த
வெய்ய மதுப்பட்டு விழுந்தான்கா ணம்மானை
பாடினார் பூத்தூவிப் பல்லாண்டு வான்மடவார்
ஆடினார் வானோர் [3]அடங்கலுஞ்சந் தோஷமுற்றார்
[4]பருதியு மிந்தும் பயந்தீர்ந்து மாடிவரச்
சுருதி முனிவரெல்லாந் [5]தோள்கொட்டி யார்ப்பரிக்கச்
செங்குருதி வெள்ளம் திசையனைத்து மாறோட
மங்குல் மலைபோல் மதுப்பட்டு [6]வீழ்ந்தவுடன்
வல்லசுரர் கெட்டோடி மாயா பதியுடனே
சொல்ல மிகவழுது சோகமுற்றா ளம்மானை
வஞ்சனைச் செம்பன் மதுகயி டவனெல்லாந்
துஞ்சின வாறுபிற [7]தூமனுங்கேட் டேதுசொல்வான்
"[8]அங்கவரைக் கொன்றவனை யற்பத்தில் தூளாக்கிச்
சிங்க மெனவருவேன் செல்வியே கண்டி"ரென்று
சோதிக் கனகச் சுடர்முடி தான்புனைந்து
[9]போதப் பணியணிந்து பொற்கச்சை தான்கட்டித்
தூணி புறத்தணிந்து சோடு புனைந்தருளிக்
காணற் கரிய கடும்படை தான்கூட்டி
நீடு மகர நெடுங்கொடி நின்றாடக்
கண்டார் களிப்பக் கன்னியர்கள் [10]மாலேறத்
தண்டரளத் தார்பூண்ட தமனியத் தேரேறி
மேளம் பலமுழங்க வெண்சா மரம்வீசக்
காளங் குறிக்கக் கனபடை தற்சூழ
அல்லுகந்த மேனி அரியமால் தன்னுடைய
செல்வன் பிறதூமன் சென்றான்கா ணம்மானை
பேராளன் நின்று பெருங்களத்திற் போய்ப்புகுந்து
சீராமன் தன்னைத் திறற்படையாற் சூழுவித்துச்.

---

1. உரத்தே புகுந்தோடி (ஸ்ரீ, த)
2. ஆழி யறுத்துவிட (த)
3. அறங்களூ மாடினர்காண் (த)
4. பருதி யுமிழ்ந்து பயந்தீர்ந்து முன்னின்றார் (த)
5. தோள்கொட் டிறுமாந்தார் (த)
6. வீழ்ந்தலுமே (த)
7. தூமனுக்குச் சொல்பளவில் (த)
8. அங்கவரை யான்போய் அற்பத்தி லேகொன்று (த)
9. போதிற் பணிபுனைந்து பொற்கச்சை தான்புனைந்து (த)
10. மையலுற (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சிலையைப் பற்றிச் சிறுநா ணொலியெறிந்து
[1]அஞ்சா யுதமும் அடைவே தெரிந்தெடுத்துக்
கண்ணன் தனையுங் கருடனையும் பார்த்துரைப்பான்
"எண்ணரிய செம்ப னிடகயிட வன்மதுவைச்
சாவகமாய்க் கொன்ற சமத்துவமு முன்னுடைய
சேவகமு மிப்போது தெரியும் திருமாலே"...
அந்த குமாரன் வலியுந் திருவழகுஞ்
சந்த மணிப்புயமுந் [2]தண்டிகையுந் தான்கண்டு
நெஞ்சுருக அன்பு நிறைய மயிர்சிலிர்ப்பச்
[3]செஞ்சொல்லைக் கேட்டுத் திருச்செவிக ளின்பமுறக்
கொண்டல்வண்ண மேனி குழையுங் கருணைவிழி
புண்டரிக முத்தம் பொழிந்துநின்ற னம்மானை
மைந்தன் உறுதியையும் மாயோன் கிருபையையுஞ்
சிந்தையிற் கண்டு சிறீகருட னேதுரைப்பான்
"இற்பட்ட போர்போல் எளிதென்று நின்றுவிட்டோம்
முற்பட்டுப் போய்ப்பிழைப்போம் முன்னறிந் தோமாகில்
தோற்றார்கள் செய்யும் தொழிலையாம் செய்திடுவோம்
வேற்றானை மன்ன விடுவையோ" வென்றுரைத்தான்
புள்ளரசன் சொல்லப் புதல்வனு மேதுரைப்பான்
"வெள்ளெயிறு தோன்ற விழுந்தார் பழியும்மை
வாங்காமற் போகவிடேன் வாரும் பொர"வென்றான்
பாங்காற் கருடன் பாலகனைப் பார்த்துரைப்பான்
"பால வயதிற் [4]படையும் படைத்தொழிலும்
ஏல வுனைப்போலே எவ்வுலகுங் கண்டறியோம்
மன்னநின் தந்தைதாய் மற்றோர் எமக்கறியச்
சொன்னாற் பொருவ"மெனப் [5]பிறதூம னேதுசொல்வான்
சந்தார் தடஞ்சோலைத் தண்டுளப நாடாளுஞ்
செந்தா மரைக்கண் சிறிவாசு தேவனுக்கு
மேன்மை யுடைய விதர்ப்பரர சன்பயந்த
பேதை யுருப்பிணியாள் பெற்றபிற தூமன்யான்
[6]செயிக்கவென்று வந்தவும்மைத் திண்களத்திற் கொன்றிடுவேன்
உயிர்கொண்டு போவதற்கு வொட்டே" னெனமொழிந்தான்

---

1. ஐந்து பூவம்பு (த)
2. தாட்டிகையும் (த)
3. செஞ்சொ லிசைகேட்டுந் திருச்செவிக ளேம்பலிப்ப (த)
4, பலனும் படைத்தொழிலும் (த)
   பயிலும் படைத்தொழிலும் (ஸ்ரீ)
5. பிறதூம னேதுசொல்வான் (த)
6. செயிர்க்கென்று (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏருட்டம் பேசி எதிர்நின்ற மன்னவனை
மாருப் பெருங்கருணை மாயவன்பார்த் தேதுரைப்பான்
"செய்ய பவளவாய்ச் செல்வனே யுன்னுடைய
ஐயனைக் கண்டா லறிவையோ" வென்றுசொன்னான்
"தானு யறியேன் தந்தைதாய் விட்டகன்றேன்
ஆனாலு மெந்தைக் கடையாளம் கேட்டிருப்பேன்
ஆதி திருமேனி அஞ்சனக் குன்றொக்குஞ்
சோதி வடிவம் துணையடிக் கண்ணிணைகள்
செங்கமல மொக்குந் திருப்புயம் நான்குண்டு
சங்கு திகிரி தனிவா ளிவையுமுண்டு
பீதாம் பரமுமுண்டு பேரா யுதமுமுண்டு
சீதாம் புயமான் திருமறு மார்பிலுண்டு
பொன்பெற்ற பூண்மார்பிற் பூந்துளாய் மாலையுண்டு
அன்பர்க்கு முத்தி அருள்கிருபைக் கண்ணுண்டு"
என்று ளிளவல் இவையெல்லாம் மெய்கொண்டு
நின்றே நெடியோன் நிகழ்த்தினன் தன்னெதிரே
வாக்கினுற் சொன்ன வடிவு மபவயமும்
நோக்கினன் நோக்கால் நுகர்ந்து களிகூர்ந்து
ஏந்தா யுதத்தை யெறிந்தான் எதிர்நின்று
பாய்ந்தான் எதிர்போய்ப் பணிந்தான் பதமலரிற்
பங்கயத் தாளிற் படிந்து பணிகின்ற
[1]துங்கமகனை யெடுத்து முகந் துடைத்துத்
தஞ்ச முறவணைத்துத் தாமரைக் கண்களினுல்
மஞ்சன மாட்டி [2]மகவுதனை மோந்துகொண்டு
தானும் மகனும் சந்தோஷ மாவதனை
ஆன முனையி லசுரர்கண் டோடிவந்து
மாயவா பதிக்குரைக்க மற்றவளு முள்மகிழ்ந்து
தீயார் மணியுந் [3]திரவியமும் கைக்கொண்டு
ஆளும் அரிமுன் அடியுறையா கச்சொரிந்து
தாளிற் பணிந்து தலைகவிழ்த்து நிற்பளவில்

---

1. செங்கண் ணெடியோன் திருமகனைக் கண்துடைத்து (ந)
2. மணிவாயை (த, ஸ்ரீ)
3. திரவியமுங் கொண்டுசென்று (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்ன வரசர்களை அஞ்சலென்று பார்த்தருளித்
திண்ணிய செம்பனுடை [1]சேய்திக தேவனையும்
மாண்ட கயிடவன்றன் [2]மகன்தேவ போசனையும்
நீண்டமுடி சூட்டி நீள்வேந்த ராக்கிவைத்துக்
[3]காயாம்பூ மேனிக் கண்ணன் கவின்பெறவே
மாயா பதிதனையும் மைந்தனையும் தேரேற்றிக்
கத்திரியர் சூழக் கடவுளோர் [4]பூச்சொரியச்
சிற்றிடை மாமடவார் திக்கெங்கும் வாழ்த்திவரத்
தொங்கல் நிழற்றத் துணைக்கவரி காலசைப்பத்
திங்கட் குடைநிழற்றச் செந்தா மரைக்கண்ணன்
பொங்கு மதிற்றுவரை போய்ப்புகுந்தா னம்மானை
பொன்னனை மேனிப் புதல்வன் பிறுநமன்
வன்னையணித் தேரிழிந்து மாயா பதியுடனே
மின்னரும் வேந்தருடன் மிக்கோரும் தற்சூழ
தன்னன்னை மார்களையும் தக்கோரை யுந்தொழுது
தூயோர் மனமகிழச் சுந்தரப்பொற் கோயிலிலே
மாயா பதியுடனே வாழ்ந்திருந்தா னம்மானை

## நரகாசுரன் யுத்தம்

[5]பொங்கோத வண்ணன் புத்திரரு டன்கூடிச்
செங்கோல் செலுத்தித் [6]திகழ்கின்ற நாளையிலே
ஆளு மதுசூதற் கன்னு ரதனென்னுங்
கோள னொருசண்டை கொண்டுவந்தா னம்மானை
வேர்க்க விடாயோடே மெய்ந்நடுங்கி யோடிவந்து
கார்க்கடல் மேனியனைக் கைதொழுதங் கேதுசொல்வான்
"உன்காரி யத்தை உறுதியாய்க் கண்டாக்கால்
என்கால் தரியா திறைவனே கேட்டருள்வாய்
[7]நாரப் பிரதாப மென்கின்ற நல்லுகத்திற்
பாரத் தடவண்ண பத்திரனென் பாளொருவன்
வேள்வி புனைந்தமர வேந்தன் பதம்வேண்டி
நீள்புனலில் மூழ்கி நெடுநாள் தவசுபண்ண

1. சேய்தி சுகந்தனையும் (த)
2. மகன்தேவ காலனையும் (த, ஸ்ரீ)
3. காயா மலர்மேனிக் (த)
4. பூப்பொழிய (த)
5. பூங்கோதை வண்ணன் புதல்வருட னேசெருக்கி (த, ஸ்ரீ)
6. திகழ்ந்திருந்தா னம்மானை
7. நாரப் பிறவாளம் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வா றதனை யமரர்கோ னுள்ளறிந்து
செவ்வாய் மணிமுறுவல் சித்திர ரம்பையரைத்
[1]தானேவி மற்றோன் தவமழிக்கப் போகவிட்டான்
மானனைய கண்ணார் மடுவருகே வந்துநின்று
எண்ணிரண் டாயிரத் திருநூற் றொருபதின்மர்
பண்ணுறப் பாடப் பதறி முனியெழுந்து
"கூடுந் தவத்தைக் குலைத்தநீர் மண்ணுலகிற்
பீடுடைய பெண்ணாய்ப் பிறப்பீ" ரெனச்சபித்தான்
அஞ்சி யரம்பையர்கள் அம்முனியை யாசரித்துச்
"செஞ்சொல்லாய் நின்சாபம் தீரும்வா றே"தெனவே
"பச்சைமால் மண்ணுலகிற் பார்த்திபனா கப்பிறப்பான்
இச்சையாய் நீங்களவற் கெல்லாரும் பாரிகளாய்
வீய்பாக வாழ்ந்து விளங்குமணிப் பாற்கடலில்
ஆம்போது நீங்கள் அரம்பையராய் வாரு"மென்றான்
பூவுலகி லன்னார் புனிதப்பிர வாளனுக்கு
மாபிரபை யென்னும் மடந்தைக்குப் பிள்ளைகளாம்
கன்னிகளை யெல்லாம் கடுநரகன் கொண்டுவந்து
முன்ன மணஞ்செய்ய முகூர்த்தமிட்டு வைத்திருந்தான்
[2]அங்கவரைக் கொள்ளுமுன்னே அன்னானைக் கொன்றுழக்கிப்
பொங்கு மணஞ்செய்யப் போர்க்குப் புறப்ப"டென்றான்
"நற்கா ரியமுரைத்தாய் நாரதனே" யென்றுசொல்லி
நிற்க வொருவரந்தான் நீகேட்டுக் கொள்"ளெனவே
"எந்நேர மேனும் யான்வந்தாற் காண்பதற்கும்
அந்நேரம் சொன்ன தறுவிடமும் போது"மென்றான்
நன்றென்று பூரித்து நாரதனைப் போகவிட்டுக்
குன்றெடுத்த தோள்நெடுமால் [3]கூடுமென்றான் சேனையெலாம்
ஆனை குதிரை அணிதேர்ப் படைத்தலைவர்
[4]சேனையணி சூழத் திறல்சேர் படையெடுத்தான்
நாடுந் [5]தெருவும் நதியும் பலகடந்து
காடுஞ் சுரமுங் கனவரையும் தான்கடந்து

---

1. மற்றோன் தவமளிக்கப் போகவிட்டான் மற்றவரும்
உற்ற தவமழிக்க உன்னி மனந்தனிலே (த)
அன்னான் தவமழிக்க ஆனவகை யுண்டெனவே
தெய்வ மகளிரைத் தேவேந் திரனனுப்ப (ஸ்ரீ)
2. அங்கவன் கொள்வதன்முன் (த, ஸ்ரீ)
3. கூட்டும்நம் சேனையென்றான் (த)
4. சேனையுங் கூட்டித் திருமால் படையெடுத்தான் (த, ஸ்ரீ)
5. நகரும் (ஸ்ரீ. த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1வேகத்தா லென்றும் விளங்குந் திருநெடுமால்
2போகத்தா லேநரகன் புரம்புகுந்தா னம்மானை
3மண்ணுற மண்டி வருகடல்போ லார்ப்பரிக்கத்
துண்ணென் றெழுந்து தொடுகடல் போற்படைகள்
4வாக்கினால் தாக்கி வருபோர்க் களத்தில்வந்து
தாக்கினால் மன்னர் தாளாமல் வற்புறுத்தி
5மானா கனைகிடந்தோன் வான்சுரடி மன்னனுக்குச்
சேனா பதிப்பட்டம் சேர்த்தனன்கா ணம்மானை
சேனைக்கு நாயகமாம் தீஞ்சாம்ப னேதுசெய்தான்
ஆனைபரி தேர்காலாள் அத்தனையுங் கைவகுத்து
மன்னு படையை 6மகரசக் கரமனைய
7எண்ணு மகாயூக மென்னு மணிவகுத்து
வாகைத் தனுவளைத்து மாருதம்போல் தேரேறி
8யூகத் திறத்தி லுறுக்கிநின்றா னம்மானை
காரனைய மேனிக் கருணா கரன்றானும்
வீரக் கழலணிந்து வீறாகக் கச்சைகட்டிச்
9சீரார் திரமுடைவாள் திருவரையி லேசேர்த்துக்
காராரு மேனியிலே கவுஷமுந் தானணிந்து
வீரபட்டங் கட்டி விற்புட்டி லும்புனைந்து
மூரிக் கருங்கோதை முன்கையிற் றானிறுக்கி
அம்பறாத் தூணி யழகாய்ப் புறத்தணிந்து
வம்பறாச் செந்தா மரைக்கண் சிவப்பேறப்
பாரத்தே ரேறிப் பாகனையும் வற்புறுத்தி
மூரிச் சிலையை முதிரவே நாணெறிந்து
தங்கக் குடையோங்கச் சாமரைகள் காலசைப்ப
எங்கு மதிர இடிபோல் முழங்கிவரச்
சோதிக் கருடத் துவசம் விசும்பளக்க
நீதிக் கருணைமால் நின்றான்கா ணம்மானை
ஓர்கந்த ரூபன் - உயர்சித் திரப்பகடன்
ஆர்வந்த சேனையையும் ஐயனையும் கண்டுகந்து

---

1. வேகத்தால் நின்று (ஸ்ரீ)
வேய்த்தாய் நீண்டு (த)
2. போய்த்தான் நரகன் (த)
3. பண்ணுறத் தேர்பகடு பாய்புரவி காலாட்கள்
மண்ணுற மிண்டி வருகடல்போ லார்ப்பரிக்க (த,ஸ்ரீ)
4. வாக்கினால் மாயன் வருபோர் நரகன் வந்து(த, ஸ்ரீ)
5. மானாக நாட்டரசன் (த,ஸ்ரீ)
6. மகரச் சிலைவளைத்து (த, ஸ்ரீ)
7. எண்ணு மீயூக மெழிலாய் வகுத்தருளி (த, ஸ்ரீ)
8. யூகரத மத்தியிலே உற்றுநின்றா னம்மானை (ஸ்ரீ)
யூகைக் கிறகத்தி லுற்றுநின்றா னம்மானை (த)
9. சீரார் புடைவாள் திருவரையிற் சேர்த்தருளி (த)
சீரார் புடைவாள் திருக்கரத்திற் சேர்த்தருளி (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்ணித் தொழுது நரகனுட னேதுரைப்பான்
"மண்ணிற் சிறந்த மனிதர் புடைசூழ
உக்கிர சேனன் வசுதேவன் மற்றுமுள்ளோர்
மிக்க சிலையேந்தி வெடுவெடென வந்துநின்றார்
உன்னைக் கருதி யுத்தத்துக்" கென்றுரைத்தான்
என்னக் கனலுற் றெழுந்த நரகனைத்தான்
செவ்வி யுறவணங்கி தெய்வபோ சனுரைப்பான்
"வெவ்விய போர்க்கு மிகவிச்சை யாயிருந்தேன்
தாழ்வின்றிக் கொல்லுகிறேன் தாராய்" விடையெனவே
கீழ்மந்தி ராபதியாம் கின்னர னேதுசொல்வான்
"உன்னைவிட மாட்டேன் ஒருவனே போய்ப்பொருவேன்
என்னை யவன்மேலே ஏ"வென்று நிற்பளவில்
ஆதி நரகன் அம்புவிக்கு நாயகன்முன்
நீதி விசாசரந்தான் நின்றவரைப் பார்த்துரைப்பான்
"தானவர்க்கும் தேவர்கட்கும் தானரசாய் வாழ்முகுந்தன்
மானகரி புக்கான் வலுப்பெருமை தானறிந்து
வல்லிய னாகி வசமாகி மேவுவதிற்
புல்லிய னாகிப் பொருவதே நன்"றென்றான்
நன்றென்று சொல்வானை நரக னெரிவிழித்து
[1]"எந்தன தாண்மைக் கெதிர்ப்பாரு முண்டாச்சோ
[2]மூவுலகி லுள்ளவரும் மூம்மூர்த்தி யுமெனக்கு
ஏவ லெனச்கு இயற்றுவது தானலவோ
என்னைப் பயம்சொல்லி யென்கண் ணெதிர்நின்ற
உன்னைக்கொல் வே"னென்று உடைவாளாற் கூறுசெய்தான்
[3]முன்னிலொரு வன்தொழுது மொழிவான் நரகனிடம்
"மன்னவனே கேளுமொரு வாசகமே விண்ணப்பம்
நீயாளும் மூவுலகில் நீயறியும் பேர்களல்ல
காயா மலர்நிறத்தான் கஞ்சமலர்க் கண்ணிணையான்
ஆர்க்கும் படையோடு மார்ப்பரித்து வந்துநின்றான்
போர்க்குச் சமைந்து புறப்ப"டெனக் கைதொழுதான்

---

1. இன்றுநீ யென்முன் எதிரியாய்ப் பேசுவதோ (த)
2. மாவுலக மீதிலுள்ள மன்னவரும் வானவரும் (த, ஸ்ரீ)
3. உன்னிய போதி லொருதூத னோடிவந்து
   முன்னின்று தாள்தொழுது மொழிவான் நரகனிடம் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதுவர்கள் சொல்லத் துணைத்தோள் நரகனும்தான்
[1]"போதுக நம்சேனை போருக் கமைந்"தெனவே
வேழக் குழாமும் மிகுதுரக முந்தேரும்
ஊழிக் கடல்போல் உகந்துற்ற தம்மானை
கின்னரர் கிம்புருடர் கெந்தருவர் கந்திருவர்
மின்னுறு வெள்ளெயிற்றர் [2]மிக்கவியா தரியக்கர்
எண்ணுற்ற சேனை யிமைப்பளவிற் றுன்கூட்டி
நண்ணிக் கடல்போல் நடந்தனர்கா ணம்மானை
அரக்க ரொருபால் அசுரர்கள் தாமொருபால்
இரக்க மிலாத எழில்விஞ்சை யரொருபால்
மிண்டி நெருங்கி [3]மிடைமிடைந்து நண்ணுவதைக்
கண்டு படையைக் கைவகுத்தா ரம்மானை
துன்று பரிதேர் துரகங்கள் காலாட்கள்
நின்று நிமிர்ந்து [4]நிவிடமாய்க் கைவகுத்து
விற்றுனை சூழ மிகுகால சக்கரமாய்
வற்றுத யூகம் வகுத்தனர்கா ணம்மானை
வானுந் தலைகுனிய மகாசேனை யைவகுத்துத்
தானும் போர்க்கோலம் சமைந்தனன்கா ணம்மானை
சன்னவீ ரம்புனைந்து தார்மாலை தான்புனைந்து
வன்னப் புயங்கள்தன்னில் வாகுவலை யம்புனைந்து
வீரக் கழல்புனைந்து மின்கச்சை தான்கட்டித்
தாரை புகழ்வடிவாள் தானும் வலத்தணிந்து
வீர மணிமார்பின் [5]மேற்சோடு தான்புனைந்து
சார முதுகிற் சரத்தூணி தான்தூக்கிப்
பொங்கு [6]மரவணையான் பூண்டு பொலிவுபெறச்
செங்குஞ்சி மேல்நிமிர்ந்து தீக்கண் [7]பொறிபறக்கக்
காலாக் கினிபோற் கனவரைபோற் றேரேறி
நீலப் பதாகை [8]நிலவா னுறவாட
வடவரைகள் நின்றதிர வல்வில்லை நாணெறிந்து
தடவரைபோற் றேரோட்டித் தாக்கினன்கா ணம்மானை

1. போதும்நம் சேனை போருக் கமையுமென (த., ஸ்ரீ)
2. வித்தியா தரியக்கர் (த)
3. வெளியடங்கித் துன்னியர்கள் (த)
வெளியடங்கித் துள்ளிவரல் (ஸ்ரீ)
4. நிமிடத்திற் கைகோர்த்து (ஸ்ரீ)
5. மின்சோடு (த)
6. சரவணையான (த)
7. பொறியுதிர (த)
8. நெடுவான் (த, ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கு மதிர்ச்சியினுற் சண்டன் வெருண்டொழிந்தான்
ஏக்கம் பிடித்து இருசுடரும் போயொழிந்தார்
எட்டு வரையும் எழுகடலு முட்கினகாண்
அட்ட கயங்கள் [1]அரண்டுவெகுண் டோடினகாண்
நரகன் படையும் நரபாலன் றன்படையும்
உரகன் படநெளிய [2]உற்றதுகா ணம்மானை
கார்முசமுங் கார்முகமுங் கைகலந்த தம்மானை
[3]வார்முனையும் வார்முனையும் மழைபொழிந்த தம்மானை
[4]மணிக்கரங்கள் தான்துணிய மருப்பற்ற தம்மானை
துணித்து விழுந்தபனைத் துண்டமொத்த தம்மானை
கொழுங்குருதி வெள்ளத்தில் துத்திப் பிணமொதுங்கும்
[5]ஒழுங்குபெருக் காறுதனி லோடமொத்த தம்மானை
துணிமருவு வெண்பரிசை சுற்றுத் துணிந்தகைகள்
பனிமதியைக் கவ்வவரும் பாம்பொத்த தம்மானை
இறத்தறித்த சிரங்கரங்கால் இழந்து கிடந்தவுடல்
உறத்தறித்த மரத்துண்ட மொத்ததுகா ணம்மானை
எங்கும் பிணக்குவையாய் இருபடையும் பட்டழிய
அங்கங் குறைத்தலைக ளாடினகா ணம்மானை
சோரிக் கடலில் துதைந்த கொடிக்கழுகு
சேரவர வஞ்சிச் சென்றதுகா ணம்மானை
சேனை பொருதழியச் சீறி நரகனுந்தான்
மானி னினத்தை மடங்கல் தொடர்ந்தாற்போற்
[6]பங்கம தான படைமன்னர் கெட்டோட
வெங்களம் நீங்க விரட்டினன்கா ணம்மானை
தன்படை மன்னர் சரிந்தோடக் கண்டழன்று
மின்படை நேமியான் [7]வெடுவெடெனத் தேரோட்டி
ஏன்ற களத்தில் எதிர்ப்பார்கள் இன்மையினுல்
துன்று நரகனுடன் தோள்கொண்டா னம்மானை
மன்னு நரகனுடன் மாயோன் பொரக்கண்டு
அந்நா ரதன்சென் றயனுக் கெடுத்துரைப்பான்

---

1. அஞ்சி (ஸ்ரீ)
   அருண்டு (த)
2. உறுத்தினர்காண் (ஸ்ரீ)
3. வார்கணையும் வார்கணையும் (த) (ஸ்ரீ)
4. மேலாக்க ளிருபுறமும் மிகப்பட்ட தம்மானை
   காவாக்க ளிருபுறமும் கால்கிழிந்த தம்மானை
   எரிபிணங்கள் சார்ந்து இருமருப்புத் தான்துணியும்
   கரிபிணங் கூர்க்கவிழும் களமொத்த தம்மானை (த)
5. ஒழுங்கு பெருங்கடலில் (த)
6. பங்கள மான (த)
7. வெட்டென்னத் தேரோட்டி (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]ஏராரும் பூவுலகில் யாமும் பிழைப்பதற்கு
நாரா யணன்போர் [2]நரகனுடன் நன்குகொண்டான்
ஓதநீர் வண்ணற் குதவிடு வா"யெனவே
[3]சீதக் கமலச் செழுங்கோன் புரந்தரனை
"நம்மை யுடையான் நரகனுடன் போர்கொண்டான்
[4]செம்மைப் படையுடனே சென்றே உதவிடுவாய்"
என்றவன் சொல்ல இமையவர்கோன் சேனையுடன்
சென்று படையுதவத் [5]தேவர்கோன் தான்பயந்து
[6]"எத்தனைக்குப் பற்றுவோம் யாம்நரக னுடெதிர்த்தால்
[7]இத்தனைக்கும் கேடுகெட்ட திந்நா ரதனாலே
உன்னைக்கேட் பாருமில்லை உனக்காவ தொன்றுமில்லை
என்னத்தாற் பாவிநீ எல்லார்க்கும் கேடுவிட்டாய்
[8]நாய்போர்க்குப் போமளவும் நாரதனைக் காரு"மென்று
[9]தேம்பிகப் போர்க்குச் செல்வதுபோற் பாவித்துக்
கைக்களிற்றை மேற்கொண்டு கார்ப்படையோடோர் முகிலிற்
புக்கொளித்து நின்றான் புரந்தரனு மம்மானை
அங்கே யவனிற்க ஆழியான் தன்னுடனே
பொங்கி நரகன் பொருததுகே ளம்மானை
பொருப்பாக வீழ்ந்தும் புயலாகத் தான்சொரிந்தும்
நெருப்பாக வேயெரிந்தும் நீளிருளாய்ச் சூழ்ந்துகொண்டுங்
காற்றாய்ச் சுழித்தடித்துங் கண்டார்க் கரிதாயுங்
கூற்றா யுடன்றுங் கொடும்போர் விளைக்கயிலே
பூணா ரலங்கல் புயல்வண்ண னேதுசெய்தான்
கோனரகன் சேனையெலாங் கொன்றான்கா ணம்மானை
விச்சை யரக்கசுரர் விஞ்ஞையர் கெந்தருபர்
எச்சவிறற் சேனையெலா மீடழித்தா னம்மானை
வாளிழந்த கோவும் மருப்பிழந்த மாகளிறுந்
தாளிழந்த வான்பரியுந் தட்டிழந்த திண்டோளும்
மாண்டபெருஞ் செங்குருதி வாரியிற் செல்வதல்லால்
நீண்ட பெருங்களத்தில் நின்றதில்லை யம்மானை

---

1. ஏராரும் நான்முகனே (த)
2. நரகனுடன் போர்கொண்டான் (த)
3. சீதக் கமலக்கோன் தேவர்கோனை யழைத்து (த,ஸ்ரீ)
4. செம்மைப் படையுடனே செல்நீர் படையுதவி (த)
5. தேவர்கோன் பாவித்து (த)
6. எத்தனைக்குட் பற்றுவோம் யாம்நரக னுடெதிர்த்தார் (ஸ்ரீ)
7. இத்தனைக்குங் கேடிட்டா னின்னா ரதனென்று (த)
8. நாம்பொருதி மீள்பளவும் (ஸ்ரீ)
9. தேம்பிமிகப் போர்க்கு (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலசேனை சாக நரகன் வெகுண்டெழுந்து
பலதேவன் மார்கிழியப் பாஷத்தா லெய்தோட்டிச்
சாம்பனை யுட்கலக்கிச் சாத்ததிலை யீடழித்து
ஒம்ப வகூரனையும் உக்கிரனை யுந்துரத்தி
எப்படையுங் கொன்று எதிர்ப்பார்கள் யாருமின்றி
[1]மற்பிடித்த தோளான் வளநரகன் தன்னுடனே
நாமோ தரங்கத்தில் நல்கித் துயில்கொள்ளுந்
[2]தாமோ தரன்மீண்டும் தாக்கினன்கா ணம்மானே
ஈண்டிரண்டு பேரும் எதிர்பொருங் கூற்றெனவே
பூண்டிரண்டு பேரும் பொருதனர்கா ணம்மானே
நாடிப் பொருகையிலே நரகனி யாதுசெய்தான்
தேடித் தெரிகணையைச் சிக்கென் றுறக்கோத்துப்
பாகந்தன் மேலிரண்டும் பாய்பரிதேர் மேலிரண்டும்
ஆகங் கரியோன் அகத்தினின் மீதிரண்டும்
எய்தாறக் கண்டு எழில்வண்ணனும் பெரும்போர்
செய்தார்ப் பரித்துச் சினந்துசரு வாயுதத்தாற்
சிங்க மிரண்டெனவுஞ் செய்கூற் றிரண்டெனவும்
பொங்கரி யங்கிரண்டு போர்ந்து பொருததெனக்
கொள்ளிவட்ட மிட்டதெனக் கூற்றுக்கொண் டுவகையே
தள்ளிவட்ட மிட்டுத் தராதலத்தில் மால்தரித்தும்
[3]விஞ்சைப் பெரும்போர் விளைக்கின்ற [4]வேளையத்தே
பஞ்சாங்க [5]வண்ணன் பாப்பான் படைவிடுத்தான்
விண்ணவர்க்குங் கண்ணனுக்கும் [6]வெவ்வழலிற் றேன்றியது
எண்ணற் கரிய இராவணனைக் கொன்றுழக்கி
உறுமத்தி ரங்களிலு மூழித்தீ யொப்புளது
விறுமத் திரமவன்மேல் வீழ்ந்ததில்லை யம்மானே
தொட்ட வவனம்பு சோர்வானது கண்டு
மட்டவி ழுந்துளப மாயவனுந் தான்வெகுண்டு
ஈசுவர னப்பால் ஈங்கிவனை [7]மாய்ப்பமெனப்
பாசுபத அத்திரத்தைப் பற்றித் தொடுத்திடவே

1. மற்பிடித்து வாய்ப்பாறும் (த)
2. தாமோதர னின்று (த)
3. விஞ்சுப் பெரும்போர் (ஸ்ரீ)
4. வேளையிலே (த)
5. வண்ணறுக்கு (ஸ்ரீ)
6. வேருகத் தோன்றியது (ஸ்ரீ)
7. கொல்வமென (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]எங்கும் பெருங்கனலா யெரியெழவே தானேடி
[2]அங்கவனைக் கொல்லா தகன்றதுகா ணம்மானை
[3]பாணத் திறமும் பழுதாக மற்றவன்தான்
ஊனுற் படானென் றுரவோன் திகைப்பளவில்
தேர்நின்று பாய்ந்து செங்கையா லேநரகன்
போரென்று வந்தவரைப் [4]போகப் பொருதழித்து
எண்ணும் படைத்தலைவர் யாவரையு மீடழித்துக்
கண்ணனே நின்ற களங்கிழிய வேமுடுகிச்
செங்கண்மால் பாகனையுந் தேர்பூண்டா மாக்களையும்
அங்கையால் தூக்கி அறைந்துகொண்டா னம்மானை
வண்டேர் பரியும் வல்லவனுங் கொப்பழியக்
கண்டே கரியோன் கருடனை யுன்னிடவே
மாமேரு வந்ததுபோல் வந்தான் வளர்கருடன்
தாமோ தரன்தன்னைத் தன்புயத்தில் தாங்கினன்காண்
தண்டுத் தனிவாளுஞ் சக்கரமும் வான்சங்கும்
மண்டும் புயந்தனக்கு மார்பிற் கவுத்துவமும்
ஓதநீர் மெய்யும் உடுத்தபீ தாம்பரமும்
ஆதி யுருவ மணைந்த வலங்காரன்
மிக்க குடையோங்க வெண்சா மரம்வீச
தக்க கருடன் தடந்தோளில் நின்றலுமே
[5]விட்டுணு ரூபம் வெளிப்பட்டு நின்றதுவே
கெட்டுடைந்து போன கிளர்வேந்த ரெல்லோரும்
நாற்றிசையும் மண்டி நரகனையுஞ் சூழ்ந்துகொண்டு
ஆர்த்துப்போர் செய்ய அழைத்தனர்கா ணம்மானை
கருடனொரு பால்மோத கார்க்கரடி தான்பெற்ற
முருடனொரு பால்மோதி முட்டுயுத்தம் செய்கையிலே
[6]ஆர்த்துப் பலதேவன் அன்னரகன் சோடறுத்தான்
சாத்தகி வில்லறுத்தான் சத்தியன் தேரறுத்தான்
சேர்ந்தவன் பாகனையுந் தேர்பூண்ட மாக்களையும்
பாய்ந்து கருடன் படவடித்தா னம்மானை

---

1. எங்கும் புகையாய் எரிகொண் டெழவோடி (த,ஸ்ரீ)
2. அங்கவன் மேலதாய் (த)
   அங்கவன் மேல்தைத்து (ஸ்ரீ)
3. பாசுப தாத்திரமும் பட்டகன்று போதலுமே
   யோசனை மேற்கொண்டு உரவோன் திகைப்பளவில் (ஸ்ரீ)
4. பொங்கப் புடைத்தொதுக்கி (ஸ்ரீ)
5. விட்டுணு மூர்த்தி வெளிப்படக் கண்டலுமே(த) வெளிப்பட்டா ரம்மானை(ஸ்ரீ
6. ஆர்த்துப் பலதேவனை அரக்கன் சிதறடித்தான் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்க்குடந் தன்னை நிறையெறும்பு மொய்த்தாற்போல்
மிக்குள்ளோர் தாமும் மிகமண்டி மூடிடவே
நின்ற நரகனுக்கு நேர்ந்ததுகே ளம்மானை
[1]அன்றானை வென்றவன்முன் ஆயிரம் சத்தியுடன்
நூறோ சனைவளர்ந்து நூறோசனை யகன்று
வீறோ டொருவசுரன் மிகுகனக பட்சியதாய்
எட்டி வளர்ந்து இமைப்பொழுதி லோடிவந்து
துட்ட நரகனுக்குத் தோள்கொடுத்தா னம்மானை
[2]வீசக னென்னும் மிகுகனக பட்சியென்பான்
கேசவ னென்னும் கெருடனைப் பார்த்துரைப்பான்
"என்மிடுக்குக் காணவென்றால் இப்போதென் மார்பகத்தே
உன்மிடுக்கி னாலே உறுதியாய்க் குத்து"மென்றான்
மெய்ச்சோர்பு நீக்கி [3]மிகமார்பு காட்டிநின்றான்
கைசோரக் குத்தினன் காய்ந்து கருடனுந்தான்
வெங்கருடன் கையே மிகநொந்த தல்லாது
அங்கவன்தன் மார்பு [4]அதிர்ந்ததில்லை யம்மானை
ஈதெல்லாங் கண்டு இமையோர் [5]பயந்தொளிந்தார்
நாதன் பறவையினும் நான்மடங்குண் டிப்பறவை
ஏதாகப் போகுதென்று ஏங்கியவர் நிற்பளவில்
'மாளுநாள் நூற்றெட்டு வன்புயமுண் டாவை'யென
ஆளும் யமனிட்ட அச்சாபங் கைகூடிச்
சந்தப் பனைப்புயங்கள் தாமொருநூற் றெட்டுண்டாய்
அந்தக் கரங்கடோறும் ஆயுதங்கள் தான்பிடித்துப்
[6]புள்ளினுக்கு வேந்து புயல்வண்ண னுந்திகைப்பத்
தள்ளுநோக் காகவந்து [7]தாக்கினன்கா ணம்மானை
கூற்றம்போற் சீறிக் கொடியோன் நெருங்கிடவே
சீற்ற மிகுந்து திருமாலு மேதுசெய்தான்
காலனுக்குக் கூற்றாங் கடுங்கால சக்கரத்தைச்
சால வலக்கையால் தாங்கியதைப் பூசித்து
[8]நன்றுதா னில்லா நரகனையுஞ் சேனையையுங்
கொன்றுவா வென்று குறித்தெறிந்தா னம்மானை

---

1. அன்றானை மூன்றுநூ றாயிரத்தின் சத்துவத்தான் (த)
2. வீசி நிமிர்ந்து (த)
3. மிகமார்ப்பைக் காட்டிடவே (த,ஸ்ரீ)
4. அறிந்ததில்லை யம்மானை (த,ஸ்ரீ)
5. பயந்துரைப்பார் (த)
6. புள்ளினுக்கு வெந்து (த)
   ,, வேந்தாம் (ஸ்ரீ)
7. தாக்கிப் பொரவெதிர்த்து (த)
8. நரகனைச் சேனையுடன் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சத் தெழுந்து உலகமெல்லாந் [1]தீக்கொழுத்தி
அச்சக் சுரந்தான் அவன்படையைக் [2]கொன்றுழக்கக்
கண்ட நரகன் கனமார்பில் [3]மூழ்குதற்கு
அண்ட நினையா தகலநின்ற தம்மானை
கொன்றன்றி மீளாத கொற்றத் தனிநேமி
அன்றவனைக் கொல்லல் அரிதாகி நிற்றலுமே
அந்தார் நெடுமாலு [4]மாலோவ மாமளவில்
வந்தா னகத்திய மாமுனிவ னம்மானை
கும்பமுனி வந்து கோவிந்த னுக்குரைப்பான்
''நம்பனே கேளாய் நரகன் வரலாறு
தேவி புவிமடந்தை [5]சீதேவிபால் வெகுண்டு
[6]அச்சுதனோ டன்றி அலைகடலிற் போய்விழுந்தாள்
[7]எச்ச நெடுளாய் இடருற்றது கண்டு
வாகாய் மணிவண்ணன் [8]மணமகளைத் தானெடுக்க
ஆகாச மெவ்வளவுன் டவ்வளவு [9]மவ்வுருவாய்
அண்ட ருலகு மடிக்குளம்புக் குள்ளடங்கச்
சண்ட வராகமதாய்த் தாழ்கடலிற் கோடோச்சிச்
சென்று பிறைக்[10]கோட்டிற் சேரும் சிறுமறுப்போல்
நின்றுற்ற கோட்டில் நிலமகளைக் கொண்டெழுந்து
அத்திவனைத் தன்னுடனே ஆதிவரா கண்புணரப்
புத்திரனைப் பெற்றாள் புவிமடந்தை யம்மானை
மேற்சுற்ற மில்லாத [11]வேட்கையில் தோன்றியதால்
நாற்சுற் றவனை நரகனென்று பேருமிட்டுப்
பூங்குழல் மேலிருந்த பொன்னரிய மாலைதன்னை
வாங்கி நரகன் மணிமுடியில் தான்சூட்டித்
தியவர்க ளாலுந் திரிமூர்த்தி களாலும்
மாயான் முடியில் மணிமாலை யுள்ளளவும்
இம்மாலை [12]தன்னையான் வாங்கின லல்லாது
மைம்மேனி மாலாலும் வாங்கவொண்ணா தென்றகன்றாள்
உன்பொன் மனைவி உயர்மதலை யாகையினாற்
பொன்னரிய மாலையவன் பூமுடியி லேயிருக்க

---

1. தீப்பறந்து (த)
   தீப்பற்றி (ஸ்ரீ)
2. கொள்ளலுமே (த,ஸ்ரீ)
3. ஏற்றிடவே (த)
4. மாலோல (த,ஸ்ரீ)
5. சீதேவி பாலனுக்கு (த)
6. அச்சுதனோடே (த,ஸ்ரீ)
7. எச்ச நெடுநாள் இடருறத் தான்வளர்ந்து (த)
   மெச்ச நெடுநாள் விருப்புறத் தான்வளர்ந்து (ஸ்ரீ)
8. மனமகிழ்ந்து தானெழுந்து (ஸ்ரீ)
9. தானெடுத்து (ஸ்ரீ)
10. கொழுந்தில் (த)
11. வேட்டையில் (ஸ்ரீ)
    வெட்டையில் (த)
12. தன்னையவள் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றுந் தொடாதவனைக் கொல்லாது சக்கரமும்
சாற்றும் வலிநரககன் [1]சாமாறு கேட்டருள்வாய்
உன்னும் செகமாது உருப்பிணி யாகையினல்
அன்னவளை யிங்கே அருங்கருடன் கொண்டுவந்தால்
வாங்கலாம் மாநரகன் மணிமுடியில் மாலைதன்னை
[2]பாங்காகும் சக்கரத்தாற் பட்டிடுவா னென்றுசொன்ஞன்
ஆங்கது சொல்லி அகத்தியனும் [3]போனபின்பு
பாங்குற வாடிப் பரிந்துமால் நிற்பதனைக்
கண்டு கருடன் கணப்பொழுதி லேயோடி
மண்டு துவரைபுக்கி மங்கை யுருப்பிணியைத்
தோள்கொண்டு வந்து தொலையாப் பெருங்களந்தில்
[4]நாள்கொண்டு நின்ற நரக னெதிர்சென்றுன்
[5]மண்ணதிர மோதி மணிமுடியைத் தான்கழற்றித்
தன்னுரத்தால் மாலை தனைப்பறித்தா னம்மானை
மன்னு நரகன் வலியும் பெருவரமும்
பொன்னரிய மாலையுடன் போனதுகா ணம்மானை
அம்மாலை வாங்குவித்த அன்னையரும் புள்ளரசும்
நம்மாலை யுற்ருர் நரகனை யவ்வளவில்
மிக்க இருகூருய் மேருபோ லற்றுவிழச்
சக்கர தேவன் தடிந்தான்கா ணம்மானை
நாடற் கரிய நரகன் கருமலைபோல்
வீடிக் களத்தில் விழுந்தான்கா ணம்மானை
மாய்ந்து கருடன் விழுந்ததுமே வான்கருடன்
பாய்ந்து பெருங்கனக பட்சி தனைப்பிடித்து
"மற்றந்த மாலையினல் வந்த மிடுக்கதனை
உற்றுன் மிடுக்கா யுரைத்தாயோ?" வென்றுசொல்லி
மெய்க்குத்தி வாயாலே வெங்குருதி யாருேடக்
கைக்குத்தாய்க் குத்திக் களம்படுத்தா னம்மானை
என்றுங் குருடர் இருகண்ணும் பெற்ருர்போல்
அன்று களத்திமையோர் [6]ஆர்ப்பரித்தா ரம்மானை

---

1. சமாசாரம் (த)
2. பாங்கலான் சக்கரத்தாற் பட்டிடுவா னென்றகன்ருர் (த)
3. போகலுமே (த, ஸ்ரீ)
4. நானென்று நின்ற நரக னெதிர்சென்று(ஸ்ரீ
5. மன்னுரத்தில் மோதி (த, ஸ்ரீ)
6. ஆடினர்கா ணம்மானை (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்தார் அருந்தவத்தோர் அகமகிழ்ந்து வாழ்வமெனப்
பூத்தா ரிமையோர் பொழிந்தார்கள் புட்பமழை
வீச்சூரத் தானவரும் விட்டுணு வீரர்களுங்
கோச்சுற்றத் தாரும் [1]குணுளக்கூத் தாடினர்காண்
பாரார் களிப்பளவிற் பங்கயக் கண்மலர்ந்து
நாரா யணனும் நரகனுக்குத் தானிரங்கிச்
சங்கைக் கருடனையும் சக்கரத்தை யுமுனிந்து
மங்கை யுருப்பிணிக்கு மாமுனிவன் சொன்னதெல்லாங்
[2]கண்கள் பனிப்பப் கரியோ னுரைத்தலுமே
ஒன்றொடியும் தன்மகனென் றுள்ளறிந்து சோகமுற்றுங்
கண்ணருவி யோடக் கனமுலைகள் பாலோட
அண்ணல் திருமுன்னே அலறி விழுந்தழுதாள்
[3]தொல்லை விதிவசமோ சூழ்ச்சியோ சூழ்ந்ததெல்லாம்
நல்ல மகனே நரகனே யென்றழுதாள்
[4]செஞ்சிலை வேந்தரெல்லாந் தேற்றவும் தேருமல்
வஞ்சி மகனுடனே மாள்வதுபோல் வீழ்ந்தழுதாள்
எண்ணில்லா வேந்தர் இருவரையும் வந்தெடுத்துக்
கண்ணு முகமும் கமண்டலநீ ராற்றுடைத்து
"முந்நாள் வராகமாய் மூர்த்தியே நீயீன்ற
அந்நாள் நரகன் அமைந்தநா ளீ"தென்றூர்
"ஊழ்வினை வந்தடர உன்னுற் கதிபெற்றான்
வாழவினி மாநரகன் மைந்தனுக்கு நல்கு"மென்று
மிக்கவரைத் தேற்றி விடைகொண்டான் வேதாவும்
துக்கந் தவிர்த்துச் சுடராழி மாயோனும்
ஆம்பயம் தீர அரசரை அஞ்சலென்று
சாம்பன் தனையழைத்துத் "தாழாதே போய்நரகன்
செய்ய மகனும் சிறீவரா கன்றனைநீ
ஐய மகற்றி யழைத்துவா" வென்பளவில்
ஓடி யவனுக் [5]குற்ற துரைத்திடவே
வாடி வருந்தி [6]வராகன் மனந்தெளிந்து

---

1. கூடிக்கூத் தாடினர்காண் (ஸ்ரீ)
2. காண்பனிப்ப நின்று (த)
3. தொல்லை விதிவழியோ சூழ்ச்சியோ சூழ்ந்ததுகாண் (த)
   தொல்லை விதிவழியோ சூழ்ச்சியோ சூழ்ந்ததுன்னை (ஸ்ரீ)
4. சேர்ந்த திறல் வேந்தரெல்லாம் (த)
   வாய்த்த மகனுடனே (த)
5. உரைத்திட அன்னவனும் (ஸ்ரீ)
   உரைத்திடவே யம்மானை (த)
6. வராக நரகன் தெளிந்து (த, ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவந்த வெல்லையிலே மாநிதிய முங்குவித்துத்
தந்தை[1]தந்தை தன்னுடைய தாளில் விழுந்தழுதான்
நெஞ்சங் குலைந்து நிறைமலர்க்கண் ணீ[2]ரோட
"வஞ்சி யுருப்பிணியும் மாயோனும் நிற்பளவில்
[3]"மூளாமல் எந்தையுங்கள் முன்னின்று முத்திபெறும்
தாளாத நாளிணைகள் தான்கண்டே" னென்றுநின்றான்
மன்னர் திரளும் வராகநா தன்திரளும்
அந்நரகன் தன்னை அலங்கார மாயெடுத்து
நற்றலந் தன்னில் நறுங்களபக் கட்டையிட்டு
உற்ற மகனு ஞரிமையெல்லாம் செய்வித்து
வல்லெரி யூட்டி வரிசையுடன் [4]தானெடுத்துப்
பல்ல சுரரோடும் பலவேந்தர் தன்னோடும்
போய்முழுகி மீண்டு புயல்வண்ண னேதுசெய்தான்
நீமுழுகும் செவ்வேள் திறநரகன் செல்வமெலாம்
மாயன் மகிழ்ந்து வராகநா தற்களித்துத்
தூய மணிமகுடஞ் சூட்டினன்கா ணம்மானை
சீதரன் மூன்குவித்த [5]செய்யமணி நிதியம்
ஆதர வாக அவனுக்கே ஈந்தருளி
அண்டரைப் பெற்ற [6]ஆதி திருக்கரத்நாற்
[7]குண்டலந் தன்னையவன் குழையில் தரித்தருளி
வார முரசார்ப்ப வராகநா தன்றனைத்தான்
போரசுரர் சேனையுடன் போக விடைகொடுத்து
மைக்கன்னி மாரை மணிப்பருவத் தேரோடும்
கைக்கொண்டு போகக் கருடன் தனையேவிப்
[8]பொங்குகின்ற சேனை புடைசூழத் தேவியொடும்
[9]மங்குல்நிற மேனியான் மற்றோர் நினைவுகொண்டு
வாய்ந்த புகழ்சேரும் மந்தா கினிநகரில்
வேந்த ருடன் நெடுமால் [10]வீற்றிருந்த வேளையத்தே
வந்து விறற்சோதி மாயோனைக் [11]கைதொழுது
"இந்த முகூர்த்தத்தில் இக்கன்னி மார்களைநீர்

---

1. தந்தை யன்னை (ஸ்ரீ)
2. ததும்ப (த)
3. மூளாமல் எந்தையுடை முன்னிலையாய் முத்திதரும் (த)
   தாளிணைகள் காணத் தவம்பெற்றே னென்றுநின்றான் (த)
4. காடேற்றி (ஸ்ரீ, த)
5. செம்மணி மாநிதியம் (த, ஸ்ரீ)
6. அதிதி திருக்கரத்தில் (த)
7. குண்டலந் தன்னைக் கொணர்ந்து முன்வைத்தருளி (த)
8. பொங்கு கடற்சேனை (ஸ்ரீ)
   பொங்கு திறற்சேனை (த)
9. அங்குநின்று போந்தா னணிநெடுமா லம்மானை (த)
10. வீற்றிருந்தா னம்மானை (ஸ்ரீ)
    வீட்டிருந்தா னம்மானை (த)
11. வற்புறுத்தி (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தனவே ஈண்டி வேட்பா யெனமொழிந்து
நித்தனை வற்புறுத்தி நீங்கினர்கா ணம்மானை

## பதினுயிரத்து இருநூற்றுப்பத்துக் கன்னியரை வேட்டமை

இட்டா ரரசர் இருபது [1]யோசனையும்
[2]வட்டார மாக மணப்பந்தல் தாளுக்கக்
கண்ணன் வதுவை கலியாணம் காண்பதற்கு
மண்ணுலகும் விண்ணுலகும் வந்ததுகா ணம்மானை
மற்றந்தக் கன்னியரை மாமுனிவர் பத்தினிமார்
முற்று மணக்கோலம் முடித்தனர்கா ணம்மானை
நாயகனை வந்துகண்டு நாரதனு மேதுரைப்பான்
''தூயவனே பொன்னவன்முன் சொன்ன தொருமுகூர்த்தம்
[3]எழுந்து மறைவதுகாண் இன்றுகண் ணுடியின்மேல்
உளுந்துருளும் போதளவே உத்தமனே அவ்வளவில்
எண்ணிரண் டாயிரத் [4]திருநூற் றொருபதின்மர்
கண்ணனே யெப்படிநீர் கைப்பிடிக்கப் போறவகை
அண்டினரைக் கைப்படித்து அண்டாத கன்னியரைத்
[5]தண்டி யெனக்குத் தருவா' யெனமொழிந்தான்
புன்முறுவல் செய்து புருடோத்தம னுரைப்பான்
''நன்முனிவர் எண்ணரிய நாரதனே கேட்டருள்வாய்
[6]ஒன்றியான் கூடி உடனிருந்த பெண்களன்றி
நின்ற பெண்கள்தன்னை நீகொள்'' ளெனவுரைத்தான்
அந்நேரந் தன்னில் அருந்தவத்தோர் வந்தீண்டித்
தன்னிக ரில்லாதான் தனைக்கோலஞ் செய்தருளி
ஓவியப் பந்தலின்கீழ் ஓமாக் கினியெதிரே
பூவும் பொரியும் பொழிவித்தா ரம்மானை
அங்கங்கு தோறும் அரசாணிக் காலருகே
மங்கையரை வைத்தான் [7]மதுசூத னம்மானை
உற்றங் கொருத்திக் கொருவராய்க் கைப்பிடித்தான்
மற்றுஞ் சிலபேர் மணவாளக் கோலமுடன்
கொள்ளப்பெண் ணன்றிக் குறுகி மறுகிநின்ற
கள்ளத்தை நாரதனும் கண்டு கவலையெய்தி

---

1. யோசனையில் (த)
2. வட்டாரமெல்லாம் மணப்பந்த லம்மானை (த)
3. எழுந்தவா றொக்கும் இன்றுகண் ணுடியிலே (த)
4. இருநூற் றிருபதுபேர் (ஸ்ரீ)
5. தண்டிற லாயெனக்குத் தருவியோ வென்றுரைத்தான் (த)
6. ஒன்றியா னண்டி (த)
7. மதுசூத னவ்வளவில் (த, ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்கொள்ளு மாயவனை யேற்றி யினிதிறைஞ்சிப்
பெண்கொள்ளு மாசையற்றுப் [1]போனான் முனிவோனும்
தண்ணார் துளபமணித் தார்நெடுமா லவ்வளவிற்
கண்ணாலம் வந்தவர்க்குக் காட்சி கொடுத்தருளிப்
பார்மன்னர் சூழப் படைகள் பலசூழ
வாரார் முலையாரை வானத்தேர் மீதேற்றிக்
கற்றுவரை மன்னன் கன்னிமார் தம்மொடும்போய்ப்
பொற்றுவறை மூதூர் புகுந்திருந்தா னம்மானை
அங்கவர்க் கெல்லா மடைவடைவே கோவில்செய்து
மங்கையருந் தானும் மகிழ்ந்திருந்தா னம்மானை

## இந்திரனையடக்கிப் பாரிசாதமும் கற்பகதருவும் பெற்றமை

செவ்வாய் மடவாருஞ் செங்கமலக் கண்ணனும்
இவ்வாறின் புற்று இருக்கின்ற [2]வேளையத்தே
துவார பதியாளும் தூயவன்றன் றேவியரில்
சௌபாக் கியமுடைய சத்திய பாவைதனை
நாயகனைக் காணமல் நாரதனும் வந்துகண்டு
தூய கருமமொன்று சொல்வான்போ லேதுரைப்பான்
"தண்டுளாய் மாயன் தனிநற் பிராட்டிகளாம்
பெண்டுகளிற் [3]பேறுடைய பேராட்டி கேட்டருள்வாய்
அண்டர்பெரு வாழ்வும் அணியும் பெருஞ்சிறப்பும்
உண்டா யிருந்தும் ஒருகுறைச்ச லுண்டுனக்கு
[4]வாவிசேர் கண்ணாய் வந்து கணவனுக்காய்ச்
[5]சேவிதஞ் செய்திருக்கும் தெய்வேந் திரன்றேவி
வெற்புற்ற மாமுலையாள் மிக்கசி தேவியென்பாள்
கற்பகக் காவும் கனபாரி சாதமுபாய்ப்
பட்டுப் பணியும் பலபொருளும் தான்கொடுக்க
இட்ட முடனித்தம் ஏற்றுப் புனைந்திருந்தாள்
மற்றதற் காகமலர் மாயவனை மன்றாடி
[6]உற்ற தருவை உனக்காக்கிக் கொள்ளு"மென்றான்
மாதவன் தேவிதன்னை வற்புறுத்தி வாசவற்குப்
போத வினையடர்த்துப் போயினான் நாரதனும்

1. போயினான் நாரதனும் (த)
2. நாளையிலே (த)
3. வீறுடைய (த)
4. வாவிசெங்கண்ணாய் (த)
5. ஏவிதம் (த,ஸ்ரீ)
6. உற்ற திருவை (ஸ்ரீ)
   உற்ற தெருவை (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கோயில் நின்று சத்திய பாவையுடைப்
பொங்கோயில் சேர்ந்தான் புயல்வண்ண னம்மானை
வாடி முகங்கருகி மன்னன் பெருந்தேவி
[1]ஓடி யகல உரையாடா தேயிருந்தாள்
மாது நினைவறிந்து மாதவன் மேல்விழுந்து
"ஏதுன் நினைவு" எனமொழிந்தா னம்மானை
பாந்த ளனையகுழற் பாவை வசமாக்கிக்
காந்தள் மலர்முகத்தாள் கற்பகக்கா வேணுமென்றாள்
[2]ஆன மணங்கமழும் அருங்கற் பகமளிக்கச்
சேனை யொழியத் திருமால் தனியேபோய்ப்
போர்க்குச் சமைந்து [3]பொன்னுலகம் போய்ப்பு புகுந்து
[4]ஆர்க்கும் திருச்சங்கை ஆர்ப்பரித்தா னம்மானை
திக்கசங்க ளெட்டுந் திசைகெடவே நின்றதிர
மிக்கசங்கை யூதினன் விட்டுனுவு மம்மானை
கைச்சங்கை வாயில்வைத்துக் கண்ணன் தொனிப்பளவில்
அச்சங் கிளர அமரர்கோ னேதுரைப்பான்
"[5]நன்னே ரறியா நரகன் தனைப்போலே
என்னோ வியானு மெளியனாய் விட்டேனோ
புன்மைச் சினமெழுந்து பொன்னுலகில் வந்தவனை
என்வச் சிரத்துக் கிரையிடுவே" னென்றுசொல்லிச்
[6]சந்திர சூரியரைத் தன்படையாய் முன்னேவி
இந்திரனும் போர்க்கோல மெய்தினன்கா ணம்மானை
[7]துள்ளித் தெளிந்து துணிந்துபொர வேணுமென்று
வெள்ளிக்குன் றொப்பான் வெங்களிற்றின் மேலேறி
அண்டங்க ளுண்டவனோ டாய்ப்பாடி போய்ப்புகுந்து
தெண்டங் கொடுத்துத் திரும்பினதும் தான்மறந்து
ஏவர் கோனென்ன எழிற்றுவரை யான்மேலே
தேவர்கோ னிந்திரனும் சென்றான்கா ணம்மானை
ஆங்கவன் போவதன்முன் அவன்விடுத்த சேனையெல்லாஞ்
செங்கண் ணெடுமால் திருவடியைப் பூண்டுகொண்டு

---

1. ஓடி யணுகி (த)
2. ஆனையினைக் காக்கும் (த)
3. பொன்னுவகத்தே (த)
4. ஆங்குமணிச் சங்கை (த)
5. நன்றென்று யானும் (ஸ்ரீ)
6. சந்திர சூரியராம் தன்படையை முன்னேவி (த) (ஸ்ரீ
7. துள்ளித் தெளிந்து சர்வா யுதஞ்சுமந்து (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறவிட்ட சேனே யரிசேனே தானுக
ஏவிட்ட இந்திரன்மேல் வந்ததுகா ணம்மானே
அந்நேரந் தன்னில் அசோதைமகன் தன்பணியால்
முன்னே கருடன் முதுகளிற்றோ டும்பிடித்து
இந்திரனே யெற்றி யெறிந்தா னெறிந்ததுமே
அந்தரத் தேகி அயனுலகிற் போய்விழுந்தான்
பொங்கு கரியோடும் புரண்டு கிடந்தவனைச்
செங்கமல வேதாவுங் கண்டு திகைப்பெய்திக்
கைமாவும் [1]தானுங் கடற்றுவரை நாடாளும்
எம்மானே நிந்தித் [2]திடருற்ற னென்றறிந்து
அயிரா பதத்தினுக்கும் ஆயிரம் கண்ணனுக்கும்
உயிராக மீந்து [3]உயிருங் கொடுத்தருளிச்
"சென்று பதியிற் சிறீவாசு [4]தேவனுடை
[5]துன்று பதிமீதிற் றோத்திரஞ்செய்" யென்றுசொன்னான்
வேதனைப் போற்றி விடைகொண்டு விண்ணவர்கோன்
தாதவிழுந் தண்டுளபத் தாமனை வந்துகண்டு
பன்மலர் தூவிப் பலமுகமாய்த் தண்டமிட்டுப்
"புன்மகன் செய்கை பொறு"மென்று போற்றிநின்றான்
அயிரா பதமும் அடைவே துதித்துநிற்க
ஆயிரங் கண்ணற் கபயகரந் தான்கொடுத்துக்
கண்ணன் கரம்வைத்துக் கண்ணுதலுந் தீர்த்தருளி
அன்னவனு மிந்திரனை அஞ்சலென்று காத்தருளி
வாங்கிக் கருடன் வன்சிறகி லோர்சிறகை
[6]ஈங்கிதனை வச்சிரத்துக் கிரையிடன் றேகொடுத்து
மன்னன் படையான வானவரை யுங்கூட்டி
அன்னவரைப் பெற்ற அதிதியைப் போய்க்கண்டு
[7]அண்டரைப் போர்வென்று ஆனந்தங் கொண்டெங்கும்
குண்டலத்தை அன்னான் குழைக்காதில் தான்சாத்தி
அத்தே வதைக்கும் அதிதிக்கும் தானுரைத்துப்
புத்தே ளிரைநிறுத்திப் பூங்காவி லேபுகுந்து

---

1. தேரும் (ஸ்ரீ)
2. இதுபட்டான் (ஸ்ரீ)
3. உணர்வும் (த)
4. தேவனுக்கு (த, ஸ்ரீ)
5. துன்று பதந்தொழுது தோத்திரஞ்செய் யென்றுவிட்டான் (த)
6. ஈங்கிதுவே வஞ்சிரத்துக் கிணையென்று தான்கொடுத்து (த, ஸ்ரீ)
7. அண்டரைப் போர்வென்ற அருநரகன் கொண்டிலங்கு (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்டற் கரிதான கனபாரி சாதகமும்
[1]வேண்டற் கரிய வியன்கற் பகத்தருவும்
ஆரிடமு மில்லா அருந்தருக்க ளத்தனையும்
[2]வேருடனே கல்லி மிகுகருட னேந்திவரச்
சேர்ந்து திருமாலும் தேவலோ கங்கடந்து
போந்து துவரை புகுந்தான்கா ணம்மானை
அற்புதமாங் கற்பகமும் ஆம்பரி சாதகமுங்
கற்புடைய சத்தியவள் கையிற் கொடுத்தருளத்
தாமன் கருடன் தனக்கு விடைகொடுத்து
மாமன்னர் சூழ மகிழ்ந்திருந்தா னம்மானை
[3]மாவிய மான மதிற்றுவரை நன்னுடன்
தேவிய ரோடுந் திகழ்ந்திருந்தா னம்மானை
சேஞர் கடற்றுவரைச் செல்வ னிருக்கையிலே
வாணன் வரலாற்றின் [4]வண்மைகே ளம்மானை

## வாணன் யுத்தம்

[5]அந்நா ளசுரன் ஆதிபர ஞற்ளுேன்றிப்
பன்ஞ ளுலகு [6]பதிஞலுந் தான்காத்துப்
பூவி லயனும் புரந்தரனு மேவல்செய்ய
மாவலி யென்னும் வலுப்பேரும் தன்னுடைத்தாய்
மாமன்னர் சூழ மகிழ்ந்திருக்கும் மன்னவன்முன்
சூதாய்க் குறளுருவாய்த் தோன்றிநின்று மாதவனும்
முன்பென்றன் காலால் மூவடிமண் தாவெனவே
அன்பாய்ப் பொருந்தி [7]அவன்தத்தம் பண்ணியபின்
சிற்றுருவாய் மண்ணில்நின்ற செங்கண்மா லவ்வளவில்
[8]அந்தரமே யோங்கு மடைவுகே ளம்மானை
சேர்ந்திருந்த பெண்கள் சிமிட்டி விழிப்பளவில்
வான்திருந்த [9]வோங்கி வளர்ந்தனன்கா ணம்மானை
வள்ளல் புறவடிக்கு [10]மாறல்ல வாஞலும்
[11]உள்ளடியின் மேன்மைதான் உற்றபடி கேளாய்

---

1. வெண்டித்து நல்ல
2. வேருடனே பிடுங்கி (த, ஸ்ரீ)
3. மாவிய மானின் (த)
   மேவிய மஞ்சு (ஸ்ரீ)
4. வண்ணம்கே ளம்மானை (ஸ்ரீ)
5. அந்நா ளரசர் அவன்மார்பில் தான்தோன்றி (ஸ்ரீ)
   அந்நா ளசுரன் அவன்மார்பில் தான்தோன்றி (த)
6. பதிஞறுங் காத்தருளி (த)
7. அவன்உதவி பண்ணியபின் (ஸ்ரீ)
8. அந்தரமே லோங்கு (ஸ்ரீ)
9. ஓர்வி (ஸ்ரீ)
10. வாறில வாஞலும் (த, ஸ்ரீ)
11. உள்ளபடி மேன்மை (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடும் கடலும் நிலனும் நெடுவரையும்
[1]மூடும் கவிசினைபோல் மூடினன்கா ணம்மானை
சாற்றும் பரிவட்டம் தானெட்டுத் திக்கினையுங்
காற்றும் [2]நெருங்கக் கனமுண்ட தம்மானை
தேன மருந்துளபத் திருநெடுமால் சென்னியுள்ளே
மின்மாலை விட்டு விரிவுண்ட தம்மானை
அருக்கன்றன் [3]செல்வழியி லண்டமுக டப்பாலும்
நெருக்குண்ட தல்லாது நிமிர்ந்ததில்லை யம்மானை
உலகு பதினலுக் குட்பட்ட தப்பாலுஞ்
செலவு தவிரத் திருக்காதிற் குண்டலமும்
பார்க்கின்ற தேவருக்குப் பானுவும் சந்திரனும்
நீர்க்குள்ளே தோன்றும் [4]நிலவொத்த தம்மானை
ஆகாச மெவ்வளவுண் டவ்வளவுக் கப்பாலும்
ஏகாய் நிறைந்த தெழில்மவுலி யம்மானை
மாக முகட்டில் வடவையிரண் டுற்றதெனக்
கோகனகக் கண்கள் கொழுந்துவிட்ட தம்மானை
ஓர்பதத்துள் பாடரங்க ஓர்பதத்தில் வானடங்க
ஆர்பதத்துள் மேற்பட் டமர்ந்துநின்ற தம்மானை
தேன்மூடும் தாமரையான் தெண்ணீர்க் கமண்டலத்தால்
வான்மூடும் பொற்பதத்தை [5]மஞ்சன மாட்டினன்காண்
மாவடி வான மகாவிட்டு ணுமூர்த்தி
மூவடி மண்ணீந்த முதல்வனைப் பார்த்துரைப்பான்
"ஈரடியே கண்ட தெமக்கிசைந்த மூவடியில்
ஓரடியுந் தா"வென் றுறவே பிடித்தருளிச்
செய்ய திருமால் சிறையறையிற் போட்டுவைக்க
வைகுந்தம் பெற்றிருந்தான் மாவலி தன்புதல்வன்
நல்லசுரர் தம்மை நடுக்கங்கள் செய்துவந்த
வல்லசுர வங்கிசத்தான் வாணே சுரனென்பான்
கருவயிரக் குன்றனைய காட்சி தனையுடையான்
பொருவயிரப் பூண்சேர் புயமா யிரமுடையான்

1. மூடுங் கவிசுனை (ஸ்ரீ)
2. நெருக்காது (ஸ்ரீ)
3. செவ்வழியில் ஆயிரம் சந்திதொறும் (ஸ்ரீ)
4. நிழலொத்த தம்மானை (த)
5. மஞ்ச நீராட்டினன்காண் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதல லோனுங் கணபதியுங் காய்கதிர்வேல்
அண்ண லறுமுகனும் அந்தரியும் அக்கினியுந்
தன்சே வகனுகத் தானே யரசாள
மண்சேரும் வாணன் மகிழ்ந்திருக்கும் நாளையிலே
திருந்த வெழுதவொண்ணுச் செங்கமலச் செல்வியென்பாள்
பெருந்தவத்தால் வாணனுக்கோர் பெண்பிறந்த தம்மானை
ஒண்ணுதல் பாவைக் [1]குளையென்று பேருமிட்டுக்
கண்ணுதற் கென்று கருதி வளர்த்தனர்காண்
கன்னியும் பக்குவமாய்க் கன்னிமா டத்திருந்தாள்
அன்ன பருவம் அவளன்னை தானறிந்து
வாணனை நோக்கி மதனப்பிரபை சொல்வாள்
"பூணணியும் பெண்ணைப் புரந்தரர்க்குத் தான்கொடுத்தால்
ஆரமே பாம்பாம் அணிவதுவும் வெண்ணீறும்
[2]தாரமாய் வெற்பரசன் தன்மகளும் புக்கினளாம்
ஒருதார மன்றி [3]உளையையும் நாம்கொடுத்தால்
இருதார மாகாதோ [3]வென்கோவே" யென்றுரைத்தாள்
"என்மகளைக் கொண்டாக்கால் ஈசன் மலையரசன்
வன்மகளாம் மங்கையவள் வழிபோக வஞ்சானே
பாம்பணிகள் போட்டுப் பலபணிகள் பூணுனே
[4]சாம்பல் புனையாமற் சவாதுவகை பூசானே
மாடன்றி வாகனந்தான் மத்தகச மேறுனே
ஓடன்றிப் பொற்கலத்தில் உண்டிருக்க வொவ்வானோ"
என்று னசுரர்கோ னேந்திழையும் தான்பொருந்த
நன்றேதிவ் வார்த்தையெல்லாம் நாடியொரு வெண்பூதம்
அத்தனையுங் கேட்டுப்போய் அம்மையுமைக் கேயுரைக்கச்
சித்தம் தளர்ந்துமையுஞ் சீற்றத்தா லேதுரைப்பாள்
"கண்டு மருண்டிடுவன் காவாலி கண்ணுதலோன்
பெண்டுகளைக் கண்டால் பித்தேறி யேதிரிவன்
கங்கைதனைக் கொள்ளாமற் காத்தா ரொருவருண்டோ
இங்கிவளைக் கொள்ளா திடர்செய்வோ" மென்பளவில்

---

1. உஷை (ஸ்ரீ)
2. தாரமாய் வெற்பரசன் தலையிற் சலமகளாம் (ஸ்ரீ)
   தாரமாய் வெற்பரசன் சடையில் தலமகளாம் (த)
3. உஷை (ஸ்ரீ)
4. சம்ப லணியாமற் சாந்துவகை பூசானே (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைப் பயந்தவர்கள் சங்கரர்க்குத் தான்கொடுக்க
உன்னியது தன்னை உளையு முறக்கேட்டுச்
செய்யு முயிர்த்தோழி சித்திர ரேகையுடன்
தையல் மனநினைவு சாற்றலுற்று ளம்மானை
[1]"வன்னக் கடுக்கை மலருஞ் சடையாற்கு
என்னைக் கொடுக்க இசைந்தார்க ளெம்மவர்கள்
உண்பதுவும் நஞ்சாம் உடையும் புலித்தோலாம்
பூண்பதுவும் பாம்பாம் பொருப்பாம் இருப்பிடமும்
[2]துஞ்சிய மானுகம் சுகதுக்க மற்றிலையாம்
நெஞ்சிற் கறுப்பு நெடுநாளும் நீங்காதாம்
பின்பாதி மேனி உமைபிடித்துக் கொண்டாளாம்
தன்பாதி மேனி சடையிற் சலமகளாம்
ஆகையால் என்னை அவற்குக் கொடுப்பாரேற்
சாவதே யல்லாது சஞ்சரிக்கப் போவதில்லை
நற்புருசன் தானுக நானிருந்து வாழவொரு
சற்புருச னைத்தேடித் தாநீ" யெனமொழிந்து
அங்கவளைப் போக்கி அணியா யிழை[3]யுளையுந்
துங்கமஞ்சம் தன்னில் துயின்றுள்கா ணம்மானை
சங்கரற்கு வாணன் தருமடந்தை [4]பூதாமல்
அங்கொருவர் காணுது அமையென் றுமைவிடுப்பக்
கச்சு முலையாள் கனவினிலே ஓர்பூதம்
அச்சுதன் பெற்ற அனுவுத் திரனுகிப்
பொங்கு மனையிற் புகுந்தங்கு நெஞ்சுருக்கி
மங்கையைப் புல்கி வசமாக்கி மாலாக்கிக்
[5]கைக்கொண்டு நீங்கக் கனவென் றறியாமல்
மெய்யென் [6]றுளையும் விழித்தாள்கா ணம்மானை
தேடினுள் காணுள் திகைத்தாளே தேகமெல்லாம்
வாடினுள் வாடி வருந்தினு ளவ்வளவில்
நீளர வேலை நெடுந்துடி ஆர்த்ததுகாண்
சாளர வாசல்தொறும் தன்சோதி முன்பரப்பிச்
சோமனும் வந்தான் சுரும்பார் கரும்பேந்திக்
காமனும் வந்து கணைதொடுத்தா னம்மானை

---

1. வன்னக் கடுக்கைச் சடையுடைய மாதவர்க்கு (த,ஸ்ரீ)
2. துஞ்சிய மானுகம் சுகத்துக்கு மற்றில்லையாம் (த)
3. உஷையும் (ஸ்ரீ)
4. போதாமணி (ஸ்ரீ)
5. கையென்று (த,ஸ்ரீ)
6. உஷை (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்விராப் போலன்றி ஏந்திழை யாள்உளைக்கு
ஆவ்விரா நூறிரவா யானதுவே யம்மானை
வாசலிற் புள்ளலம்ப [1]வண்காவில் வண்டொலிப்பக்
கோயிலிற் சங்கலம்பக் கோதைநல்லாள் பாடலம்பக்
கார்விழுந்து வீய்ந்ததென்னக் கண்டார்க் கரிதான
வேர்விழுந்து கங்குல் விடிந்ததுகா ணம்மானை
நனவிலே கண்டதல்ல நற்பேருங் கேட்டதல்லக்
கனவிலே கண்டணைந்த காதலனுக் காதரவாய்
வாணன் மடந்தை வருந்தும் வருத்தமெல்லாங்
காண வருவான்போற் காய்கதிரோன் வந்துதித்தான்
தனினின் றுளையுந் தள்ளாடும் வேளையத்தே
இனிநன் ககத்தி லேந்திழையைக் காணவென்று
வார்ந்தகருங் கூந்தல்மின்னாள் வண்ண உயிர்ப்பாங்கி
[2]சேர்ந்தா ளவள்பாற் சித்திர ரேகையென்பாள்
கொங்கை பசப்பக் குலவியகண் ணீர்பசப்ப
மங்கை யிருந்த வாறுகண்டங் கேதுரைப்பாள்
"வஞ்சியே அஞ்சுகமே வாணன் குலமகளே
கொஞ்சிய கிஞ்சுகவாய்க் கோதையே கோகிலமே
நஞ்சுண்ட கெண்டையென்ன நாகமுண்ட திங்களென்ன
மஞ்சுண்ட பூங்குழலாய் வாடி யிருப்பதென்ன
மின்கொண்ட வேற்கண் விளங்கும் விழியுளையே
என்வந்து சூழ்ந்ததுவோ" எனஅவளு மேதுசொல்வாள்
'ஏந்திழையே கேளாய் இராவென் கனவகத்தே
காந்தள் மதனோ கதிர்வே லுடையவனோ
[3]கண்ணனோ மாதவனோ காய்கதிரோ னேவியவாள்
அண்ணலோ எவ்வெவனோ ஆரோ ஒருகுமரன்
சந்த மணிந்து சர்வாங்க பூசணனாய்
வந்தென்னைப் புல்கி மனத்தையுஞ் சூறைகொண்டு
இங்கென்னை மாலாக்கி எய்தா மயலேற்றி
நீங்கியும் நீங்காதென் நெஞ்சத்தே புக்கொளித்துக்
கண்ணிலே நிற்கின்றான் கைக்கு மகப்படிலான்
நன்னுதலே நீயவனை நாடித்தரு வாயாகில்

1. வன்காதில் வண்டலம்ப (ஸ்ரீ)
2. சேர்ந்தா ளவளருகே (த,ஸ்ரீ)
3. கண்ணனோ ஈசனோ கஞ்சத்தா னோகதிர்வேல்
அண்ணலோ மானிடனோ ஆரோ ஒருகுமரன் (த,ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுயிரைத் தந்தாய்'' எனத்தழுவி யேயுரைத்தாள்
சின்ன மணிமருங்குல் சித்திரா ரேகைசொல்வாள்
''வினைக்கொண்டு பார்க்கில் விளம்புகிறேன் மேதினியிற்
கனைக்கண்டு மாலான சன்னியரைக் கண்டறியோம்
ஆனாலும் நின்பால் அவனையே கூட்டுகிறேன்
மானார் விழியே வருந்தாதே'' யென்றுரைத்தாள்
சித்திர ரேகை திரிந்துபதி னாலுலகும்
மெத்திய பொற்படத்தில் மிக்க வடிவினரைக்
காமனை இந்திரனைக் கந்தனைக் காசினியில்
மாமன்னர் மைந்தர்களை வண்மை பெறவெழுதி
வர்ணித்த பேரை [1]வகைவகையே தானெழுதிக்
கன்னிக்குக் கொண்டுவந்து காட்டினாள் காரிகையும்
''நல்லாய்நாம் பார்த்தவரில் நங்கேழ்வ னிங்கில்லை
எல்லாரு மல்ல இதற்குளவ னில்லை''யென்று
வெம்பித் [2]தவித்து மெலிகின்ற மெல்லியற்கு
அம்புயச் செங்கண் அனுவுத் திரனிருந்த
வன்னமாம் பொற்படத்தை வாகாகக் காட்டலுமே
''என்னைமால் [3]கொண்டான் இவ''னென்று ஏம்பலித்துக்
கொங்கைமேற் சேர்ப்பாள் குணங்கொண்டு கூட்டென்பாள்
அங்கையால் வாரி யணைப்பா ளயர்ந்திடுவாள்
சித்திரத்து வீரனுடன் செல்வி [4]செருக்கையிலே
உத்திர மாக உமைவிடுத்த ஓர்பூதம்
பிச்சைப் பிராமணியாய்ப் [5]பேதையை வந்துகண்டு
''இச்சித்து நீவிரும்பும் ஏந்தல் வலியவன்காண்
துன்னாழி சூழும் துவரா பதியாளும்
பொன்னாழி மாயன் புதல்வன்காண் பொற்கொடியே
எவ்வுலக மங்கையரும் ஏவல்செய்ய வீற்றிருக்கும்
நவ்வி யுருப்பிணிதன் நம்பிகா ணெ''ன்றுரைத்தான்
அன்னது சொன்ன அதிதி பிராமணியைத்
துன்னித் [6]தழுவித் துடியிடையு மேதுரைப்பாள்
''மொண்டு தருவேன் [7]முழுநிதியும் நீயவனைக்
கொண்டுதரு வா''யெனவே கூட்டினாள் தோழியையும்

---

1. வகைவகை யாம்படியே (த,ஸ்ரீ)
2. கொதித்து (த)
3. செய்தான் (த,ஸ்ரீ)
4. இருக்கையிலே (த)
5. பார்த்தேது சொல்வான் (ஸ்ரீ)
   கண்டேது சொல்வான் (த)
6. வணங்கி (ஸ்ரீ)
7. முதியவனே நீயவனைக் (த,ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று பிராமணியுஞ் சித்திர ரேகையுமாய்
அன்று துவரை அணைந்தனர்கா ணம்மானை
வாங்கிய விண்ணதனுல் மாய்கையாய்ச் சென்றணுகிப்
பூங்கா வனத்திற் புகுந்து துயில்கின்ற
நம்பி தனையெடுத்து [1]நன்ருெருவர் காணுமல்
அம்புவியிற் போகாமல் [2]ஆகாசத் தேபுகுந்து
வாணன் மகளிருந்த மண்டபத்தில் வைத்தவனைக்
காண விருவரையுங் கைப்பிடித்துப் [3]பூணுவித்து
நீங்கினு ரங்கவர்கள் நேரிழையும் காதலனும்
பாங்கினுற் புல்கிப் பலகாலும் [4]தான்புணர்ந்து
மன்மத வேதம் வழுவாம லேதழுவி
நண்மை பெறவே நயந்திருந்தா ரம்மானை
அந்நா ளிலங்கைக் கழிவுதான் வந்ததுபோல்
மன்னுன வாணனுக்கு வந்ததுகே ளம்மானை
வீணுர் தவமுனிவன் மிக்கதெல்லா [5]முள்ளுணர்ந்து
வாணன் புரம்புகுந்து வாணனைக் கண்டருளி
ஏக்கம் பிடித்து (இ)ரகசியமாய் ஏதுசொல்வான்
"பார்க்கப் பயந்து பயப்பட்டுக் கண்பிசைந்து
தூணிடை வேலைத் துவரையிற் புக்கிருந்த
மானிட வல்லிடையன் வங்கிசத்தோன் வம்புமகன்
உன்பெண் உளையுடனே [6]உற்றிருந்தா" னென்றுசொல்லி
"அன்பா லறிந்துரைத்தேன் ஆனதுசெய்" யென்றகன்ருன்
[7]என்றதும் வாணன் எழுந்தங்கே போமளவில்
அன்றங் குமைவிடுத்த அப்பூதம் முன்புகுந்து
மெய்யா முருத்திரனை வேறே யொளித்துவைத்துப்
பொய்யாய் உருத்திரனுய்ப் புகுந்துநின்ற தம்மானை
சென்றங்கே வாணன் சினத்தினுல் மற்றவனைக்
கொன்றங்கு நின்று குலமகளைக் காணுமற்
சித்திரையைப் பார்த்திவள்தான் சேர்ந்தபடி சொல்லெனவே
முத்துதிர வாட்கண் முகங்கருகி யேதுசொல்வாள்
[8]"நின்மனைவி கோயிலிலே நின்மகள்போ யேழுதினம்
என்கணவ னிங்கிறந்தான் யான்கெட்டே" னென்றழுதாள்

1. அங்கொருவர் (ஸ்ரீ)
2. ஆகாசம் போய்ப்புகுந்து (ஸ்ரீ)
3. பூணவிட்டு (ஸ்ரீ)
4. தான்மலர்ந்து (ஸ்ரீ)
5. முன்னுணர்ந்து (த)
6. உற்றிருக்கக் கண்டுவந்தேன் (ஸ்ரீ)
7. இன்றென்ன வாணன் இருந்தங்கே போமளவில் (த)
8. நின் கணவி (த)
நின் கணவன் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓராதே கொன்றேன் உடனிவற்குக் காலமிது
காரார் குழலாளே கவலாதே" யென்றுசொல்லி
வாணன் மனைபுகுந்தான் மற்றந்த நாரதனும்
[1]வீணனும் பொற்றுவரை மேவினன்கா ணம்மானை
மெய்யெல்லாம் வேர்க்க விடாயோடே யோடிவந்து
ஐயனை வந்தித் [2]தழுது தொழுதுரைப்பான்
"முன்னாள் மதயானை மூலமெனக் காத்தருளும்
அன்னாய் நீபெற்ற அனுவுருத்தி ரன்தானும்
வாணே சுரன்மகளை மணம்புணர்ந்து வைத்திருக்கக்
[3]காணவே வெட்டிக் களைவித்தான் காணு"மென்றான்
அங்கும் வினையடுத்து அங்குநின்று போந்தமுனி
இங்கும் கலகமிட்டு ஏகினன்கா ணம்மானை
தீயசொற் கேட்டுச் செவிகள் சுறுக்கெனவே
மாயன் படையோடும் வாணன்மேற் [4]போகவுன்னி
[5]மெய்த்த பலதேவன் விறலுக் கிரசேனன்
சத்திய சாத்தகியுஞ் சாம்பன் [6]கிருபற்பன்
உற்ற வகூர னுடனே வசுதேவன்
மற்றும் பலதிசையின் மன்னவரை யுங்கூட்டி
மதுரங்க மான மணித்தேர் மகாசேனை
சதுரங்கஞ் சூழத் தமனியத் தேரேறி
நாடும் நகரும் நதியும் பலகடந்து
காடும் மலையுங் கரியும் பலகடந்து
தீய சுரமுஞ் சென்றந்தச் சேனையுடன்
போயவரும் வாணன் புரம்புகுந்தா ரம்மானை
அறையும் கணைக்கால் அனுவுருத்தி ரன்றனக்காய்
இறைவனும் வாணன்வதைக் கெய்தினன்கா ணம்மானை
காரான மேனிக் கரியமால் சேனையுடன்
ஆரமர் வேட்டு அறைகூவி வந்தவகை
கண்டோடி வந்து கனபிங்க லோசனனென்பான்
வண்டேயுந் தாம வாணனுட னேதுரைப்பான்
"செம்பொற் றுவரைச் சிறுவாசு தேவனென்பான்
தன்படை யோடுஞ் சமர்வேட்டு வந்துநின்றான்

1. மேவான (ஸ்ரீ)
2. அடிதொழுதங் கேதுரைப்பான் (த)
3. கண்டு விரைவில்வந்தேன் காரியம் தீர்பாரும் (ஸ்ரீ)
4. செல்லவுன்னி (த,ஸ்ரீ)
5. மெத்தும் பலதேவன் (த)
6. சிசுபாலன் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிந்தித் தொருபவுசு நீவிடுவா" யென்றுசொல்லி
வந்தித்த தானவனே வாணன் முனிந்துரைப்பான்
"மூவுலகுங் காவல் மும்மூர்த்தி களெனக்குச்
சேவகங்கள் தேவரெல்லாஞ் சிற்ருளா யேவல்செய்ய
என்மேல் வரத்தக்கான் எவனடா" வென்றுசொல்லி
மென்மேற் புடைப்பித்து வீற்றிருந்தா னம்மானை
பூணும் புயநெடுமால் புள்ளரசை யங்கழைத்து
"வாணன்பால் தூதேகி வா"வென்று போகவிட்டான்
செம்பொற் சிறீகருடன் சீக்கிரத்தில் தான்சென்று
அம்மதிலைத் தள்ளி அணிகோ புரமிடித்துச்
சேணுற வீசுமணிச் சிங்கா சனமிருந்த
வாணனைக் கண்டுசில வார்த்தைசொன்ன னம்மானை
"மல்கு புகழ்சேரும் மாவலி [1]தான்பயந்த
செல்வனே வாணனே செங்கண்மால் தூதன்யான்
ஆயிரம் கையும் அணிமுடியி லேகூப்பி
நீயிருந்து கேளாய் நினக்குறுதி சொல்லுகிறேன்
அண்ண லுருத்திரன் தானகத்தே யுண்டானல்
என்ன லுனக்கு இறுதிநா ளின்றுகண்டாய்
தேவருந் தானவரும் திக்கெங்கு முள்ளவரும்
ஏவ லியற்றுவது மின்றே யிழந்தாய்காண்
வாளா யுதமும் வலியும் மணிமுடியுந்
தோளா யிரமுந் துணியும்நாள் வந்ததுகாண்
தும்பிக் குதவும் சுடராழி யானளித்த
[2]எம்பிக்குத் தீங்கிலையால் இன்றுன் மகளோடும்
கொண்டுபோ யெங்கோன் குரைகழற்கீழ்த் [3]தாழுவையால்
உண்டுதான் [4]வாழ்வுனக்கு உள்ளளவு" மென்றுசொன்னன்
வன்புள் ளுரைக்க வாண னெரிவிழித்து
[5]"உன்புல் லுரைகேட்டோம் ஓநமது வீரர்களே!
வலிமை மிகவுரைத்த வன்புள்ளுப் போகாமல்
நலியப் பிடியு"மென்ன நாலுபே ரோடிவந்து
[6]ஓரிரண்டு தோளு முறநெருக்கிப் பற்றிநின்ற
ஈரிரண்டு பேர்களையும் எத்திசையும் பிய்த்தெறிந்து

---

1. மார்பில்வைத்த (ஸ்ரீ)
2. நம்பி (ஸ்ரீ)
3. போற்றுவையால் (த,ஸ்ரீ)
4. வாழ்வு ஊழி விதியுமுண்டு (ஸ்ரீ)
வாழ்வுனக்கு ஊழி விதியுமுண்டு (த)
5. உன்புள் ளுரைத்த உரைகேட்டு ஏதுரைப்பான் (த,ஸ்ரீ)
6. ஓரிரண்டு பேரும் உறஇறுக்கிப் பற்றிடவே (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்வழியே [1]வந்து மதுசூதனைத்தொழுது
தான்வழுவா துள்ளதனைச் சாற்றினன்கா ணம்மானை
தூதன் மொழியத் துவார பதியாளும்
நாதனும் தன்சேனை நாயகரை யங்கழைத்து
வாணன் வரமும் வலியும் வரலாறுங்
காண வுரைத்துக் கடற்படையைக் காப்பதற்குத்
[2]தானு தரவான தமையன்சிசு பாலனுக்குச்
சேனு பதிபட்டம் சேர்த்தனன்கா ணம்மானை
சேனைக் கதிபனுந்தான் சேனை தனைத்திரட்டி
[3]ஆனைக் கடலும் அசுபப் பெருங்கடலுஞ்
[4]சேர்த்துப் படைநிறுத்தித் தேர்க ளணிநிறுத்திச்
சுற்றும் [5] கடற்குச் சுடர்வா ளணிநிறுத்தி
வில்லணி முன்னிறுத்தி வேலணி பின்னிறுத்தி
நல்லரி தன்னை நடுவணியி லேநிறுத்திச்
சத்திய சாத்தகியைத் தானொரு பால்நிறுத்தி
மெத்திய உக்கிரனை மிக்க அணிநிறுத்திப்
பின்னொட்டந் தன்னிற் பிதாவை நிலைநிறுத்தி
முன்னொட்டம் தன்னில் முதல்வனைத் தானிறுத்திச்
சாயும்படைச் [6]சாரிக்குச் சாம்புவனை வற்புறுத்திப்
பாயும் பரிதேரும் படையும் புடைசூழச்
சக்கிர சாந்தியென்னுஞ் சண்டையூ கம்வகுத்து
[7]ஒக்க படைக்கலங்க ளோலமென வார்ப்பரிக்கப்
பாரத்தே ரேறிப் பதாகை விசும்பளக்க
வீரச் சிலையை மிகநா ணொலியெறிந்து
[8]பொருமன்னர் கூற்றெனவே போர்ச்சிங்கம் தானெனவே
நிருபன் பலதேவன் நின்றான்கா ணம்மானை
[9]மாயன் படைதுள்ள வாணே சுரன்கேட்டு
[10]ஆய வசுரேச னருக்கனைப்பார்த் தேதுரைப்பான்
அக்கினி தன்னை அணைந்த மனிதர்களைத்
தொக்கவே சென்று சுடச்சொல்லிப் போகவிட்டான்
அன்னானு மோடி அனலோனுக் கேமொழியுஞ்
சொன்னா னனலோன் துணிந்தெழுந்தா னம்மானை

1. சென்று (த, ஸ்ரீ)
2. தானு பதியாந் (த)
3. ஆனைப் படையும் அசுபப் பெரும்படையும் (த, ஸ்ரீ)
4. சேர்க்கும் படிநிறுத்திச் சேனை யிடைநிறுத்தித் (த)
5. படைக்கு (த, ஸ்ரீ)
6. தாங்குதற்கு (த)
7. மிக்க பறைகறங்க மேளங்க ளார்ப்பரிக்க (த, ஸ்ரீ)
8. பொருமன்னர் கூற்றென்னப் பொற்சிங்கம் நிற்பதென்ன (த, ஸ்ரீ)
9. மாயன் பறைத்துள்ளணி (த)
10. ஆய வசுரராய் அஞ்சினரைப் பார்த்துரைப்பான் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்போலு மேனிக் கருணு கரனுடனே
போர்பொர வங்கி புறப்பட்ட தம்மானை
[1]பாயும்பரி யுங்கிரியும் பருவச் சிரமாய
[2]வாயு மொருவனைய வானத்தேர் தானுகிக்
கால விறுதிக் கடுங்காற்றே சாரதியாய்க்
கோல மறைநான்குங் கூடும் பவுள்சாய
மெத்து மணியணிந்து வெண்சா மரமிரட்ட
பத்து வகையாய்ப் பதிஞு யிரமுகமாய்ப்
பார்மட்டும் வான்மட்டும் பற்றிக் கொழுந்துவிட
நேர்பட்ட தெல்லாம் நெருப்பாக்கி நீறுக்கி
மண்டிப் புகையெழுப்பி வந்தெங்கும் சூழ்ந்துகொண்டு
தண்டிச் சடசடெனத் தாக்கினன்கா ணம்மானை
[3]அம்மன்ன ரெல்லாம் அவ்வெரிக் காற்றுமல்
வெம்மை மிகுந்து மிகமயங்கி யேங்கினர்காண்
[4]வந்துற்ப வித்து வலிப்பிர தீபமிண்டிச்
சுந்தர கேசன் சுகேது பதிதனையுங்
குண்டல காம்போசன் கோச விசாலனையும்
அண்டரிய மன்னருடன் ஆறுயிர வரையும்
அற்பத்தில் நீறுக்கி அங்கங்கே சூழ்ந்துகொண்டு
கற்பத்தீ போலே கலந்துகொன்ற தம்மானை
போதத் தீயாகப் புயல்வண்ணன் சேனையெல்லாம்
ஓதக் கடல்போல் உடைந்ததுகா ணம்மானை
சேனைத் தலைவர் சிறியபல தேவனுடன்
ஏனைப்பலரு மெரிந்தோடி யேது சொல்வார்
"எல்லா மறிந்திருந்து மெம்பெருமா னங்கியுடன்
பொல்லா மதிநினைந்து போர்பரச் சம்மதித்தான்
தூரத்தே நின்றுற் சூழ்ந்து புகைகொல்லும்
சேரச் செறிந்துநின்ருல் தீக்கொழுந்து நீறுக்கும்
பாயும் பரித்தேரும் பக்கத்தில் [5]நில்லாது
[6]ஆயுதங்கள் விட்டாலும் அற்பத்தில் தூளாக்கும்
வாணன் வதைக்கென்று வந்தோமோ [7]நாங்கள்வதை
காண வகையொழிந்து காணேம் பிழைக்கவகை

---

1. பாயும் கிரியும் பகர்கெருட வச்சிரமாய் (த)
2. வாயு மொருபகையும் வானத்தேர் தானுக்கி (த,ஸ்ரீ)
3. அம்மன்ன ரெல்லாம் அலகைகொட்டி யாடலுமே
   வெம்மை மனமிகுந்து மிகவங்கி யேதுசெய்தான் (த,ஸ்ரீ)
4. வந்துற் றமையான வலியும் பிறதிமதி (த)
5. செல்லாது (த,ஸ்ரீ)
6. ஆயுதங்கள் விட்டால் அடைவடைவே நீறுகும் (த)
7. நாங்களுந்தான் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிக் கிரையாய் அனேவோரும் மாண்டாலும்
எங்கோனைக் கொண்டு எழுந்தருள்வாய் நீயு"மென்று
ஓதத் தெரியா துடனே [1]பலதேவன்
[2]நாதித்த சங்குதலை நாதிக்க வீற்றிருந்து
காயெரி போலக் [3]கனன்று பலதேவன்
போயெரி போலப் புகப்பாய்ந்தா னம்மானை
சத்திய சாத்தகியன் தானொரு பால்தாக்க
உற்ற வசுதேவன் [4]உக்கிரசேனன்தாக்கத்
தமனியத் தண்டுகொண்டு சாம்புவனைச் சாடிநிற்க
மன்னுங் கருடன் வன்சிறகா லேயவிக்க
மாயன் பதத்தை [5]மனத்தே யுறப்பணிந்து
[6]ஆயன் படைத்தலைவர் அண்டிப்போர் செய்தலுமே
ஆழியான் தன்னருளால் அங்கியுடன் போர்புரியத்
தாழும் சுயத்தில்நிற்குந் தாமரையைப் போல்நின்றார்
செற்றிற் பொரக்கண்டு தீக்கடவுள் தான்முனிந்து
பற்றிப் புகைந்து பரிகரிதே ருள்ளதெல்லாம்
வன்னிக் கொழுந்தில் [7]மதிக்கொழுந்து நின்றதுபோல்
உன்னித்துத் தாக்க உடைந்ததுகா ணம்மானை
எங்குந் தரியாமல் எவ்விடத்தும் நில்லாமற்
சங்கங்கை யேந்திஞர் தன்னருகே போய்த்தரித்து
"வேந்தனே வாணனுக்கு வெற்றி கொடுத்தருளிச்
சேர்ந்துநாம் நம்மூரே செல்லோமே யாமாகிற்
பொங்கு கடல்போற் புடைக்கின்ற சேனையெல்லாம்
அங்கிக் கிரையாக ஆவ துறுதி"யென்றார்
"மிக்க வடவையாய் [8]வெண்ணெய் தனைக்குடித்தும்
[9]ஒக்க வசுரருக்காய் யுத்தத்துக் காளாயும்
வேதத்துக் கெல்லாம் விளங்கும் விளக்காயும்
ஆதித்தற் கெல்லாம் [10]அருட்சோதி தானாயும்
ஆகுதியில் நின்று அமரர்க் குணவளித்தும்
வாகுற மாருதத்தை வாகன மாய்ப்படைத்தும்
நாம்பட்ட தெல்லாம் நமக்குறுதி யாவதல்லால்
மேம்பட்ட வங்கிதனை வெல்லுவதிங் கேதாச்சு"

---

1. வயுதேவன் (த)
2. நாதித்தா ரங்குதனில் நாஞ்சிற்படை வீற்றிருக்கும் (த)
3. கருந்தேரைத் தானோட்டி (த,ஸ்ரீ)
4. உக்கிரசேனனை (ஸ்ரீ)
5. மனத்தி லுறநினைந்து (த)
6. ஆயன்படை மணித ரன்றிப்போர் செய்யலுமே (த)
7. மடியப் பொடியாக்கி (த,ஸ்ரீ)
8. வேலைதனைக் குடித்தும் (த)
9. ஒக்க உயிர்களுக்கு உத்திரத்தீ தானையும் (த)
10. அருஞ்சோதி (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பலரும் இறையவனைக் கைதொழவே
[1]பொன்றிக் கமருடைப் புருடோத்தமன் வெகுண்டு
"விருப்புற்று நீங்களெல்லாம் மெய்ப்புளகம் கொண்டிடவே
நெருப்புத் தனக்கு நெருப்பாய் [2]நெருங்குகிறேன்
கண்டிரு" மென்று கனலவன்மேல் தேரோட்டி
முண்டகத்தார்க் கோமானும் மோதினன்கா ணம்மானை
மோதித்தீ மேலே முழுவாயு வத்திரத்தைச்
சோதித் திருமால் தொடுத்தான்கா ணம்மானை
பேருல கெங்கும் [3]பெருங்காற்றுய்க் கைவளைந்து
காரும் மலையுங் கடலும் நிலைகுலைய
முற்றும் கடையுகத்தில் மோதும் வலியுடனே
சுற்றி வளைந்தடித்துச் சூறு வளிபாயும்
[4]மூளுஞ் சிறுமைகெட முற்றும் பெருங்கடலாய்ச்
சூழக் கொதித்துச் சுற்றெங்கு மிக்கனலாய்
ஐயப் படுவார் அருந்துணை பெற்றதுபோல்
வெய்ய வடவையிலும் வீறியெதிர் வந்ததுகாண்
சோர்வில்லா தங்கி தொடர்ந்து வரக்கண்டு
வார்வில்லுக் கோத்து [5]வருணஅத் திரம்தொடுத்தான்
மிண்டி இருள்பரந்து மின்னி இருள்செறிந்து
கொண்ட லனேகங் கொடுந்துடி கொள்வதுபோல்
ஆனையின் கைகள் அணிகொண்டு [6]ஆற்றுவபோற்
[7]சோனைக் கனல்மேற் சொரிந்தான்கா ணம்மானை
பெய்யுஞ் சலமெல்லாம் பேரோமத் தேயவிக்கும்
நெய்யென வந்து நிறைந்தங் [8]கெரிதலுமே
வண்டுலாந் தண்டுளப மாலும் வருங்கனலை
வென்றுவா வென்று விறுமாஸ் திரந்தொடுத்தான்
கோகனகத் தானுங் கோர்த்தவரி யுமெரியும்
ஏக வுருவென்ப தெண்ணி வருணாத்திரமும்
நல்ல கவிதை நடத்தும் பெரும்புலவர்
புல்லர்பாற் சென்று பொருளற்று மீண்டதுபோல்
தக்க கனலோனைச் சந்திக்க மாட்டாமல்
மிக்கவரு ணாத்திரமும் மீண்டதுகா ணம்மானை

---

1. பொன்றுதல் சொல்ல (த, ஸ்ரீ)
2. நீறுக்குகிறேன் (த)
3. பெருங்காற்றுய் வளைத்தலுமே (ஸ்ரீ)
4. கோளும் நடுங்கக் கொடுங்கனலாய் மோதுதலும்
   மூளும் சிறுமைகெட முற்றும் பெருங்கனலாய் (ஸ்ரீ)
5. வருணத்தை மால்தொடுத்தான் (த)
6. ஊற்றுவபோல் (ஸ்ரீ)
7. சோனைக் கடல்போல் (ஸ்ரீ)
8. அவிதலுமே (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாத சீற்றமுடன் அக்கினிதே வன்முனிந்து
நூறாயிரம் வடிவாய் நூறாயிரம் முகமாய்
மண்ணின்றோர் [1]சோபமுற வானின்றோர் ஆர்ப்பரிக்க
[2]எண்ணப் படாதே எரியும் மிகக்கனலாய்
மாமேரு போந்தாப்போல் மாகருட னவ்வளவில்
ஆமோத நீர்கொண் டவித்தான் அவித்தலுமே
அற்பளவிற் பின்னின்றான் அழலோனும் அவ்வளவில்
வெற்பொத்த திண்டோள் விறல்நெடுமால் தான்முனிந்து
சக்கரத்தைக் கைக்கொண்டு தாபித்துப் பூசைபண்ணி
அக்கினி மேலே அமைத்த படிகண்டு
ஆதர வாகி அமர்காண வந்துநின்ற
வேத வியாதன்றான் விலக்கி யெடுத்துரைப்பான்
'வேதத்துக் காதியாய் விண்ணோர்க்கு நாயகமாய்ச்
சோதிச் சுடரான துய்யவெழு நாவுடைய
ஆதிக் கடவுளெனும் அக்கினி தன்மேலே
வாதித் தமராட மாலே மதியிலையோ
கொன்றன்றி மீளாத சூர்வாளி யையேவி
நன்றென்று சீர்மாலே [3]நல்லறத்தைக் கொல்லாதே
அக்கினியை வெல்லும் அடைவுனக்குச் சொல்லுகிறேன்
இக்கியல் பான இயமன் பெருந்தேவி
துன்னிய பைம்பூண் சுவாகா வெனும்நாமம்
மின்னை விரும்பி விழுங்கிக்கொண் டேதிரிவான்
அன்றொருநா ளவளை யுமிழ்ந்துவைத்து
முன்னான பூசை முடிக்க விலங்கலுமே
பொங்கிய காலன் பொய்யுருவைத் தான்கொண்டு
அங்கு சுவாகாவை யண்டியவள் மேல்விழவே
தன்கேழ்வ னென்றெண்ணித் தையலும் தான்புணர்ந்தாள்
பின்கேழ்வ னல்லவென்று [4]பேதத்தா லுற்றறிந்து
வெய்துயிர்த் தேங்கி விரல்நெருக்கும் மின்னனையாள்
எய்திய போது இயமனைக் கண்டஞ்சி
வெய்யதிற லங்கிதனை விழுங்கியே வீற்றிருந்தாள்
அந்தகனும் முன்போ லவளை விழுங்கியபின்

---

1. சோகமுற (ஸ்ரீ)
2. முன்னின்ற மாயவனை முட்டினன்கா ணம்மானை (த.ஸ்ரீ)
3. நல்லெரியை (த)
   நல்வார்த்தை (ஸ்ரீ)
4. பேதையுந் தானறிந்து (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேம முனிவோருந் தேவரும் வேதியரும்
ஓமா குதிகளுக்கு உளநெருப்பைக் காணுமல்
'அங்கி யிறந்தான் ஐயோ முறையோ''வெனப்
பங்கயத் தோற்குப் பலரும்போய்ச் சொல்பளவில்
''என்னு வியலுமோ இக்கா ரியந்[1]தீர்க்கப்
பொன்னுழி [2]யான்பக்கல் போ''மென்று தானுரைத்தான்
அங்கி யொளித்திருந்த அல்லல் தனையறிந்து
செங்கண் ணெடுமால் திருமுறுவல் செய்தருளிக்
காலன் தனைநினைக்கக் காலனும்வந் தப்பொழுது
மாலின் மலர்ப்பாதம் வந்தித் தருகுநின்முன்
கண்ணன் புடைநின்ற காலனைப் பார்த்துரைப்பான்
''நண்ணியுன் றேவிதனை [3]நாடியங் காரகனும்
நின்வேட மாகியந்த நேரிழையைச் [4]சேர்தலுமே
[5]பொன்வேட மானுன் புணர்ந்ததற்பின் னுள்ளறிந்து
உன்றனக் கஞ்சி யுதாசனைத் தான்விழுங்க
மின்னிடையை நீயும் விழுங்கி யிருந்தமையால்
அங்கலனைக் காட்டிடுநீ அவனையவள் காட்டிடுவள்''
பாங்குபெறக் கோபித்துப் பார்த்தவந்த வந்தகனை
''உன்னிச்சை தீர உனக்கிவள்தான் வேண்டாதாள்
வன்னிக்கே தாரமாய் மற்றிவளை நல்''கென்று
[6]தன்மனு மங்கிக்குத் தாரமாய்த் தான்கொடுத்தான்
பின்னுமனும் மாயோனும் பேரொளியைத் தான்பார்த்துத்
''துற்றதே நாமம் சுவாகாவென் றேயுரைத்து
உற்ற வலக்கையா லுகுத்தாக்கா லுண்பதல்லால்
ஏது முரையா திடக்கையா லிட்டனையாய்
பேதம் பெருகிப் பெலன்கெடுவா'' னென்றுரைத்தான்
இச்சாப முன்னி இடக்கையால் [7]தானுகுத்தால்
[8]அச்சாப முண்டு அவனௌிய னாகிநிற்பான்
வாணே சுரனை வதைசெய்யு மவ்வகைக்கு
நாணுமற் சேனையொடு நண்ணுவா'' யென்றுரைத்தான்
அம்முனிவன் போனுன் அசோதை திருமகனுஞ்
செம்முறுவல் செய்து செருத்தொழிலுங் கைவிட்டு

---

1. தவிர்க்க (ஸ்ரீ)
2. மாயனிடம் போயடையு மென்றுரைத்தான் (ஸ்ரீ)
3. நாடியக் கினியுந்தமன் (ஸ்ரீ)
4. தோய்தலுமே (ஸ்ரீ)
5. புன்வேட (த)
6. தன்மனு மங்கிருக்கத் தாரமதைத் தான்கொடுத்து (த,ஸ்ரீ)
7. நீயீந்தால் (த)
8. அச்ச மறமுன் டவிந்தெளிய னுயிருப்பான் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]ஏற்றுஞ் சிறுகை யிடக்கையா லேயுகுத்தான்
சீற்றந் தணிந்து சிதறுண்டான் அக்கினியும்
உண்ட வுடனே உரங்கெட் டுணர்வழிந்து
மண்டு மெரியவிந்து வாங்கிநின்ற தம்மானை
அங்கியைப் போர்வென்று அடற்படைகள் தற்சூழச்
செங்கண் ணெடுமாலுஞ் சென்றான்கா ணம்மானை
கண்ணன் வரவுதனைக் கண்டார் சிலரோடி
[2]வண்ண ணெடுந்திறற்றோள் வாணனைக் கைதொழுது
"நல்லெரியைப் போர்வென்று நாடறியச் சேனையுடன்
வல்லரியைப் போலே வருகின்றான் மாய"னென்றார்
அன்னவ ரோடே யசுரேச னேதுரைப்பான்
"இன்ன படிசொல்லி இப்பொழுதே நீரோடிக்
[3]கூறி யிமைப்பொழுதிற் கோமான்றன் சேனையுடன்
ஆறுமுகன் றன்னை யணைந்துபொரச் சொல்லு"மென்றான்
ஆலால மென்ன அசுரர் சிலரோடி
வேலா யுதற்கு விளம்பினர்கா ணம்மானை
[4]காபாலி பெற்றெடுத்த காவலனுந் தான்கேட்டுப்
பூபாலர் தம்முடனே போர்பொரச் சம்மதித்துத்
தானைக் கடல்போலே சாத்தா வுடன்போக
ஆனைத் திருமுகத்து ஐங்கரன் முன்போகப்
பொருதேவர் சேனை புடையெங்குந் தான்போக
[5]விருதூத வீரத் துவசம் விசும்பளக்கக்
காரும் மலையுங் கடலும் வருவதுபோல்
தேருங் கரியுந் திரட்பரியும் முன்போகப்
போந்தே பெரும்படையும் பூபாலர் சேனையொடுஞ்
சேர்ந்து பொரவே செலவிடுத்தா னம்மானை
கந்தன் வருவதனைக் கண்டு பலதேவன்
தந்தம் படையைச் [6]சமர்முன் னிலையாக்கிப்
[7]போந்து கரிபரிதேர் போர்ப்புரவி காலாட்கள்
வேந்த ருடனிறுத்தி விற்பிர வாளமெனும்
யூகம் வகுத்து யுகாந்தாக் கினிபோலச்
சாப முறவளைத்துத் தாக்கினர்கா ணம்மானை

---

1. ஏற்றுச் சிறுக (த)
2. வண்ண ணெடுந்திரைத்தோள் (க)
3. கூறும்நீர் இப்போது கோடவுளார் சேனையுடன் (ஸ்ரீ)
4. காவாலி பெற்றெடுத்த கந்தவே ளும்கேட்டு (த,ஸ்ரீ)
5. விருதுவிளங்க (ஸ்ரீ)
6. சமருக் கணிவகுத்து (ஸ்ரீ)
   சமர்முன் டணிவகுத்து (த)
7. போந்து பொருங்கரிதேர் போர்ப்புரவி காலாட்கள் (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செகமன்னர் தன்படையுந் தேவர் பெரும்படையும்
புகழ்மன்னர் மாளப் பொருதனகா ணம்மானை
[1]காணப் பொரும்போரிற் கந்தன் படையிலுள்ளோர்
பாணத்தி னாலும் பலவா யுதத்தாலுஞ்
சிந்தித்துத் தேவர் திருமால் பெரும்படையை
[2]நிந்தித்துக் கொல்ல நிலைப்பட்டா ரம்மானை
தன்படை சாயத் தரியான் பலதேவன்
வன்படை யாலே வலுதேவர் சேனையெல்லாம்
[3]வெற்றிக் கணையாலே வெங்குருதி யாறோடப்
[4]பற்றிக் கரிபரிதேர் பாரிலுடல் சேறாக
[5]விண்கலக்க மெய்த வியாதன் படைநடுவே
ஒண்கலப்பை யாலே உழுதினன்கா ணம்மானை
[6]சங்குவண்ண னுக்குச் சரிந்ததுவே தேவர்படை
[7]பொங்கு நலம்பெற்ற புயல்தேவ காலனென்பான்
ஊழித்தீ போலே உடன்று சரந்துரந்து
ஆழித்தே ரோட்டி அரசர் படைநடுங்க
அத்தியுந் தேரும் அடல்மாவுந் தான்துவைத்து
மெத்திய போர்செய்தான் விட்டது மன்னர்படை
[8]தங்கள் படைசரியச் சாம்பன் தரித்துநின்று
செங்கைக ளாலோச்சிச் [9]சீக்கிரத்திற் றுன்பிடித்து
உற்றே புடைப்ப உரத்திற் புடைபட்டு
அத்தேவ காலன் அயர்ந்தான்கா ணம்மானை
காரிய மாசாத்தன் காய்களிற்றை மேற்கொண்டு
சீரிய சேனையுடன் [10]சீறிச் சினமிகுந்து
துண்ணென் றெழுந்திருந்து தொடர்ந்தங்கே யுட்புகுந்து
கண்ணன் படையைக் கலக்கினன்கா ணம்மானை
தன்படை சாயத் தரியாப் பலதேவன்
முன்படர்ந்த சாத்தனுடன் முட்டுயுத்தம் செய்தலுமே
ஐயன் சிலபகளி அங்கவன் மேற்றெடுத்தான்
மெய்யனுஞ் சாத்தாவை வேளத் துடன்பிடித்துப்
பற்றி யெறியப் [11]பதினாலு யோசனைபோய்
வெற்றிக் களிறோடும் விண்ணினின்று னம்மானை

---

1. காதிப் பொரும்பேரில் (த)
2. நிந்தித்துத் தாக்க (ஸ்ரீ)
3. வெற்றிக் கதிர்வயலில் வெங்குருதி நீர்பாய்ச்சி (ஸ்ரீ,த)
4. பற்றிக் கரிகள் பார்குடல் சேறாக (த)
   பார்கடலிற் சேருதலும் (ஸ்ரீ)
5. விண்கலங்க மண்கலங்க வியாதன் படைகலங்க (ஸ்ரீ)
   ,, மெய்நடுங்க வியாதன் படைநடுங்க (த)
6. சங்குவண்ணன் கொல்லச் சரிந்ததுவே தேவர்படை (த,ஸ்ரீ)
7. பொங்கு யமன்பெற்ற (த,ஸ்ரீ)
8. தங்கள் படைசாயச் சாம்புவன் முன்னின்று (ஸ்ரீ)
9. சிகரத்தைத் தான்பிடுங்கி (ஸ்ரீ,த)
10. சென்றான் (த)
11. பதினாறு (த,ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசாத்தன் சாய [1]வன்படையி லுள்ளவர்கள்
பேசாப் பலபிதற்றிப் பேரிலட்சை தானெய்தி
உற்ற கலனும் உடையும் களைந்தெறிந்து
வேற்றுரை யோடு மிகுபோர் செயக்கண்டு
பார்க்கைக்குக் கூசிப் படையிரண்டும் நிற்பளவிற்
கார்க்கடல் வண்ணன் கலதியைப் பார்த்துரைப்பான்
தீய்ப்பிற மண்டித் திரிவீரே யின்றுமுதல்
ஊர்ப்புற மாக வுறையென்று [2]போகவிட்டான்
போக்கினன் மற்றவரும் போர்க்கஞ்சி யேயொளித்தார்
[3]வாக்கிணு லென்ன வருவிக்கி னேசுரன்தான்
சண்ட வடிவாய்ச் சருவாங்க பூசணனைக்
கண்ட விழிகள் கதிர்பெறத் [4]தான்தோன்றிப்
பேர்வரையை யொத்த பெருச்சாளி மீதேறிப்
போர்பொர வென்று பொருகளத்திற் புக்கினன்காண்
[5]ஐந்து கரங்கள்தொறும் ஆயுதங்கள் தான்பிடித்து
விஞ்சிய கொம்பொன்றால் [6]வெவ்வடவை கக்குவித்து
ஏன்ற களத்தில் [7]எதிர்ப்பார்க ளற்றவனைக்
கான்ற மதத்துக் கணபதி நிற்பளவில்
மாயனுந் தன்னுடைய வன்படையோ டேதுரைப்பான்
''ஆய பலகனியும் அப்பமும் ஆன்பாலுங்
கண்டு கரும்புங் கடல்பொரி யத்தனையுங்
கொண்டு படைத்துக் குவித்துநில்லு'' மென்றுரைத்தான்
[8]சங்கோ னுரைத்ததெல்லாஞ் சாலவே கொண்டுவந்து
அங்கே மிகக்குவித்து ஆனைமுக னைத்தொழுதார்
மெய்ப்போர் தவிர்த்து விநாயகனு முள்மகிழ்ந்து
''இப்போரில் மன்னர்யார் வென்றுலென் தோற்றுலென்
அப்பங் கனிகள்நமக் கானபடி வாய்த்த''தென்று
தொப்பைத் திருவயற்றில் துய்த்திட்டா னம்மானை
பின்னும் குமரன் பெரும்பூத மும்பேயும்
[9]மன்னர் படைமேல் வரவிட்டா னம்மானை
ஆங்கது மண்டி அடர்ந்துபோர் செய்தலுமே
ஓங்கிய சேனை உடைந்ததுகா ணம்மானை

---

1 வன்மார்த்தார் தானேடி (ஸ்ரீ)
2. சாபமிட்டான் (த)
3. வாக்கினு ரென்ன (ஸ்ரீ)
4. தான்சார்த்தி (த)
5. ஐந்து கரங்களினு மைந்தா யுதம்பிடித்து (த,ஸ்ரீ)
6. வெம்படையைச் சிந்துவித்து (ஸ்ரீ)
7. எதிர்ப்பார்க ளண்டியிலே (ஸ்ரீ)
8. தங்கோன் (த)
9. மன்னர் பெரும்படைமேல் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்மன்னர் சாயப் பலபத்தி ரன்வெகுண்டு
[1]போர்மன்னர் தம்படையும் பூதப் பெரும்படையும்
மாண்டு நடுங்க வயங்கெட் டுடைந்தோட
மூண்டு கலப்பையால் மோதினன்கா ணம்மானை
அவ்வுறுதி தன்னை அறுமுகத் தோன்கண்டு
வெவ்விய கூற்றெனவே மிகவாய் வெகுண்டெழுந்து
சேர்கோல மேனியெல்லாஞ் செம்மணிப் பூணணிந்து
போர்க்கோலங் கொண்டு போர்வாள் மருங்கணிந்து
பூணிப் புறத்தணிந்து போர்வில்லை நாணெறிந்து
சேணி லணியொதுங்கத் தேவர் புடைசூழக்
கொற்றத் திருமேனி குங்குமத்தின் [2]சேருடிக்
கற்றைக் குழற்கவரி [3]கவின்பெறக் காலசைப்ப
[4]மாமேரு வொத்ததொரு மத்தகசம் மேற்கொண்டு
[5]தாமோ தரன்படைமேல் தாக்கினன்கா ணம்மானை
மன்னன் படையும் மயில்வா கனன்படையும்
துன்னிப் பெரும்போர் தொடங்கினகா ணம்மானை
தண்டு முயலம்மயில் சக்கரம் [6]செஞ்சரங்கள்
கண்டையம் சேர்ந்த கடையம்வாள் கையம்பு
ஒவ்வொருவர் விட்டெறிய ஒவ்வொருவர் பட்டுவிழ
அவ்வவ ரோடே அவ்வவரும் தான்பொருதார்
செங்குருதி நாளெல்லாந் தேங்கியதே யம்மானை
பொங்கிய மன்னர் பொருசரங்க ளூடாட
வங்கக் கடல்போல் மகாமேரு மோதுதல்போல்
எங்கும் மகாசேனை எதிர்ந்ததுகா ணம்மானை
கன்றிப் பெரும்போர்ற் கார்த்திகே சன்முனிந்து
வென்றிச் செருக்களத்தில் வேந்தர்படைக் குட்டாக்கி
உற்ற பரியும் உலாவும் மணித்தேருந்
துற்ற படையுந் துரந்து துதைத்துரப்பிச்
சத்திய சாத்தகியும் சாம்பவனு முக்கிரனும்
[7]எத்திசை யோரும் எரிந்தோட வேதுரத்தி
எற்றிப் பொருதவரை எங்கு மெடுத்தெறிந்து
மற்றும் படையை மறுக்கம் செயக்கண்ட

---

1 போர்மன்னரும் பேயும் (க,ஸ்ரீ)
2. சோதிவிட (ஸ்ரீ)
3. கன்னியர்பல் லாண்டிசைப்ப (க,ஸ்ரீ)
4. மாமலையொத்த மதக்கயத்தை மேற்கொண்டு (த)
5. தாமன் பெரும்படைமேல் (த)
6. மீயாளம் (த)
7. எத்திசையிற் பேரும் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயன் பலதேவன் அஞ்சலென்று கையமர்த்தித்
தைய லுமைமைந்தன் தனைத்தடுத்தா னம்மானை
அக்குமரன் எய்த அடுசரத்தைத் தன்னுடைய
மிக்க கணையால் விரைவில் அறுத்துருளிச்
செவ்வேள் தெரிந்தெய்த சேவற் கொடுஞ்சரத்தை
அவ்வவை தன்னை யவற்ற லறுத்தருளி
ஒருவர் சரந்தன்னை ஒருவர் அறுத்திடவே
இருவர் சரத்தாலும் எங்கு மெரிந்ததுகாண்
பன்னிரு தோளான் பலதேவன் தன்மேலே
துன்னிய ஆனைதனைத் தூண்டினன் தூண்டலுமே
கைக்கலப்பை யாலே களிறு தனைத்தடுத்தான்
மிக்க படைதுணிய விட்டுணுவுங் கேட்டருளிப்
பாலான மேனிப் பலதேவ னைத்தடுத்து
"வேலா யுதனோடு மிக்கயா னேபொருது
சூட்சியால் வெல்வதல்லால் தோரா னிவ"னென்று
ஆட்சியா மன்னருடன் ஆனபடை யுங்கூட்டி
நேமிப் படையானும் நீள்சிலையை நாணெறிந்து
பூமி தலைபணியப் பொற்றேரின் மீதேறித்
துண்ணென்று சென்று துவசம் விசும்பளக்க
அண்ணனுங் காக அறுமுகன்மேற் றுக்கினன்காண்
பூபதி மாயோனைப் புத்தேளிர் சூழ்ந்துபொரத்
தாபத ரெல்லோருஞ் சண்முகனோ டேபொருதார்
மாலோன் பொருதழிக்க வானோர் மடிந்துடைந்தார்
வேலோன் பொருதழிக்க மேதினியோர் வீழ்ந்தயர்ந்தார்
கங்கை திருமகனுங் கஞ்சமலர்க் கண்ணனுந்
தங்களிலே நின்று தலைப்பெய்தா ரம்மானை
காமன்றன் மைத்துனனுங் காயா மலர்மேனித்
தாமனு மெய்த சரமழைகள் தன்னாலே
அண்டமும் வெந்து [1]அலைகடலுந் தான்கொதித்து
எண்டிசையில் வெற்பு மெரிந்ததுகா ணம்மானை
போர்வேட்டை யாடிப் பொரும்போரிற் [2]பொற்குமரன்
சூர்வேட்டை யாடுஞ் சுடர்வேல் தனைத்திருத்தி

---

1. அலைகடலேழும் (த)
1. போர்க்குமரன் (த)

[1]செவ்வே பொருகின்ற செங்கண்மால் மேலெறிய
அவ்வேலு மாய னவனிடத்திற் செல்லாமற்
செல்லும் புரவியையுந் [2]தேர்பூண்ட மாக்களையும்
வில்லையுந் துண்டித்து மீண்டதுகா ணம்மானை
பாய்ந்து கரியோனும் பாதாதியாய்ப் பொற்பதத்தாற்
சேர்ந்த மதகளிற்லறச் [3]செற்றான்கா ணம்மானை
ஆனை படக்கண்டு அறுமுகத்தோ னும்வெகுண்டு
வானை யுறவளைத்த மாமயிலின் மீதேறி
ஆகம் கதிர்விரிய ஆறிருதோ ளும்[4]விளங்க
வாகு குழையில் மணிக்குண் டலமிலங்க
[5]நீல மலைக்குன்றில் நின்றிலங்கும் சூரியன்போற்
கோலந் திகழ்த்திலங்கக் கோழிக் கொடியோங்கப்
பன்னிரண்டு கைக்கும் பலவா யுதம்பிடித்து
மின்னொளி வேலை விளங்கக் கறைதுடைத்து
மாதுமை மைந்தன் மயிலின்மேல் நிற்றலுமே
சீதரன் றானும் சிறீகருடன் மீதேறிப்
பாதரம் புயமும் படர்ந்த திருமார்பும்
ஓதநீர் மெய்யில் உடுத்தபீ தாம்பரமுந்
தண்டுளபத் தாரும் [6]தவள மணிமுடியும்
புண்டரீகக் கண்ணும் பொலிந்து திகழ்ந்திலங்கப்
பங்கயச் செங்கைதனிற் பஞ்சா யுதம்பிடித்துத்
துங்கமணிச் சங்கைத் துண்ணெனத் தான்தொனித்து
நீளிய பொன்மலையில் [7]நின்றிலங்கு ஞாயிறுபோல்
வாளி முனைதிருத்தி வான்கருடன் மீதுநின்றான்
இவ்வகை நின்று இருவரும் [8]நேர்ந்துகொண்டு
கவ்வை யுடனே கலந்து பொருதனர்காண்
வானிடும் விற்போல் வரிசிலையைக் கால்வளைத்துக்
கூனிடும் விற்பகளி கோர்த்தங்கே யார்த்தலுமே
எட்டுத் திசையும் இடருற் [9]றதிர்ந்தனகாண்
அட்ட கயங்கள் [10]அரண்டனகா ணம்மானை
காற்று மியங்காது காய்கதிருஞ் செல்லாது
கூற்று மணுகாது குலைந்தனன்கா ணம்மானை

---

1. செவ்வே னுடன்பொருத (த, ஸ்ரீ)
2. தேரையும் பாகனையும் (த, ஸ்ரீ)
3. செயித்தான்கா ணம்மானை (த, ஸ்ரீ)
4. இலங்க (த)
5. நீலமலைக் குன்றில் நின்றெழுந்த சூரியன்போல் ஸ்ரீ)
6. தருண மணிமுடியும் (த)
7. நின்றகரு ஞாயிறுபோல் (த)
8. என்றுகொண்டு (த, ஸ்ரீ)
9. உணர்ந்தனகாண் (த)
10. அலைந்தனகாண் (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானகத்தும் மண்ணகத்தும் மற்றெட்டுத் திக்கனைத்துங்
கானகத்துஞ் சூழ்ந்த கடலின் புடையகத்தும்
அங்கங்கே நின்றூர்கள் அங்கங்கே காண்பதற்கு
எங்கெங்குந் தாங்களாய் [1]ஏன்றுபோர் செய்தார்கள்
வெற்றி மயிலும் விளக்கிய புள்ளரசும்
[2]ஒற்றி யிடம்வலமும் ஓரருகில் தேவர்களுஞ்
சமர்முகத்தில் நின்று சரிபோர் செயக்கண்டு
குமரனை யிப்பொழுதே [3]கொல்லுவோ மென்றுசொல்லிச்
★
செங்கண் ணெடுமால் திருச்சக் கரம்வாங்க
அங்கு முனிவன் அகத்தியன் தான்[4]தோன்றிக்
கண்ணன் தனைத்தொழுது கந்தவேள் தன்மேலே
எண்ணின்ற சக்கரத்தை ஏவாமற் றூன்றடுத்து
"உன்தங்கை யான [5]உமைபுதல்வ னுன்மருகன்
கந்தன் கடவுளோர் காவலன் கார்த்திகேயன்
[6]பொங்கரவக் கூத்தன் புரமெரித்தோன் தன்புதல்வன்
இங்கிவரை வாதித் தெமையிடுக்கண் செய்யாதே
கொற்றத் திருமாலே கோவே யெளிதாக
மற்றவனை வெல்லும் வகைசொல்லக் கேட்டருள்வாய்
கண்ணுதல் நெற்றிக் கடவுள் மணிப்புதல்வன்
சண்முகன் றான்றுள் சரவணையில் தோன்றிடவே
தந்தை கயிலையினைத் தான்நோக்கிப் போகயிலே
கந்தன் வலியைக் கமலத்தோன் கண்டஞ்சி
ஓர்மந் திரம்செபித்தான் உற்றந்த மந்திரத்தை
ஆமமந் திரம்செபித்தால் அப்போது சித்திரம்போல்
நிற்பான் குமரவேள் நீங்கலாம் வெற்றிகொண்டு
[7]வெற்பொத்த தோளாய் வினையிது" வென்றுரைத்தான்
மாமந் திரத்தை மாயோனுக் குச்சரித்துப்
பூமன் அனந்தமுனி போயினன்கா ணம்மானை
மாயோன் செருவொழித்து மற்றந்த மந்திரத்தைச்
சேயோன்முன் நின்று செபித்தான் செபித்தலுமே
சேர்ந்து உணர்வழிந்து சித்திரம்போல் நிற்றலுமே
வேந்தர் புடைசூழ வெற்றி முரசதிர

---

1. எய்து (த)
2. ஒற்றி வலமிடமென் றோரருகில் வானோரும் (த)
   ,, ,, றோதினர் வானோர்கள் (ஸ்ரீ)
3. கொல்வோமென நினைந்து (ஸ்ரீ)
   கொல்வோமென் றெண்ணி (த)
4. போந்து (த)
5. உமைசிறுவன் (த)
6. பொங்கு சுடர்க்கூத்தன் புரணதரன் தன்குமரன் (த)

★ **இத்துடன் திருமதி ஸ்ரீ கந்தராசா அவர்களுடைய பிரதி முடிவடைகிறது.**

7. வெற்பான தோளாய் விதியிது (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கும் பெரும்போரிற் சண்முகனை [1]வென்றவனுங்
காக்கின்ற வாசல் கடந்துசென்று னெம்மானை
துங்க நெடுமாலைச் சூழ்ந்து பலமன்னர்
சிங்கநா தத்தாற் செவிடு படுத்திநின்றார்
பொங்கோத வண்ணன் பொரவென்று வந்ததனை
அங்கோடி வாணற் கறிவித்தா ரம்மானை
[2]"அங்கியைப் போர்வென்று அறுமுகனை யும்பொருது
இங்கேயும் மோதுகிறான்" என்று மொழிந்தார்கள்
மைமேக மேனியான் வாறு னெனக்கேட்டுக்
கைகள் புடைக்கக் கனலாய் உமிழ்ந்துகொண்டு
வாண னுரைப்பான் "மயிலூர்தி சேவகங்கள்
காணிலிவன் சேவகங்கள் கண்ட தெனலாச்சு
வந்த மனிதர் மடியப் [3]பொருவதற்குச்
சுந்தரிக்குச் சொல்லு"மெனத் தூதர் தனைவிடுத்தான்
அன்னார் கடிதோடி அந்தரி தன்னுடனே
சொன்னார்கள் போர்க்குத் துர்க்கையுஞ் சம்மதித்துப்
பொன்னுடை வாளைப் பொருந்தப் புனைந்தருளி
மின்னுடை வாள்விளக்கி வியன்கலனுந் தானணிந்து
தண்டு முயலம் சரம்சக் கரம்யாழும்
[4]விண்டு திரிசூலம் வில்லு முறப்பிடித்து
மொய்ப்புற்ற கூந்தல் முடித்து மவுலிவைத்து
அம்பறுத் தூணி அழகாய்ப் புறத்தணிந்து
கொங்கைக்குக் கச்சணிந்து [5]கோதையுந் தானணிந்து
சிங்கப் பெருந்துவசம் சேணளவும் நின்றாடப்
போருக் கமைந்து பொருகலை மீதேறிச்
சீருற் றிருபுறமும் செழுங்கவரி காலசைப்ப
எட்டுக் கரமும் எழிலா யுதம்பிடித்து
மட்டற் றெரியும் வடவைபோற் கண்விழித்துப்
பாய்ந்துடன்று தாக்கிப் பரிகரிதேர் மன்னர்படை
சாய்ந்துடைந் தோடும்வகை தாக்கினா ளம்மானை
விந்தைவந்து தாக்கலுமே வெல்வேந் தரும்படையுஞ்
சிந்தையஞ்சி நெஞ்சம் திடுக்கெனத் தான்பயந்து

---

1. வென்றனன்காண் (த)
2. அக்கினியை வென்று அறுமுகனை யும்பொருது
மைக்கினிய மேனியான் வாறு னெனக்கேட்டு (த)
3. பொருதுவரச் (த)
4. மிண்டு (த)
5. கோலவளை கைக்கணிந்து (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னி திருவுருவைக் கண்டு மிகக்கலங்கித்
[1]துன்னி யுடைந்தோடித் தூதன்பின் னேயொதுங்கி
அம்மாய னுக்கு அடைக்கலமென் றேவிழுந்தார்
[2]அம்மா தவனும் அஞ்சலென்று கையமர்த்தி
[3]சேணின் றுறையும் செழுந்தோங்கற் சீதரனும்
வான்புள் ளரசனெனும் வாகனத்தின் மீதேறி
மூதண்ட ரண்ட முகடு செவிடுபடக்
கோதண்ட மென்னுங் கொடுஞ்சிலையை நாணெறிந்து
ஆமாலம் போல்வந்த [4]அசுரருக்கும் அந்தரிக்குந்
தாமோ தரன்வந்து தலைப்பெய்தா னம்மானை
[5]போர்வந்த மாயோனைப் போர்மகளும் பார்த்துரைப்பாள்
"நாள்வந்த சேனைகளில் நல்லாட்கள் தானிலையோ
பாலகனை யிப்பொழுது பாராமல் வென்றுவந்த
சேவகங்க ளிப்போது தெரியும் [6]நெடுமாலே"
என்ரு ளதுகேட்டு இறைவனு மேதுசொல்வான்
"நின்றுயே என்முன்னே நீசமர்த்தி யோ?"வென்றன்
என்னத் தரியா ளிவளு மெரிவிழித்துத்
துன்னிச் சமர்மாரி தூவினள்கா ணம்மானை
ஏறும் பெருங்கலையை எத்திசையுந் [7]தான்விடுத்து
வீறும் பெரும்போர் விளைத்தனள்கா ணம்மானை
செங்கண் சிவக்கத் திருமால் வெகுண்டெழுந்து
அங்கவ ளெய்த அடுசரங்க ளத்தனையுந்
தன்சரத்தால் மாற்றிச் சயமகள் தன்மேலே
செஞ்சர மாரி செலுத்தினன்கா ணம்மானை
ஒன்றொருவ ரெய்ய உடனொருவர் தாம்மாற்றித்
துன்று பெரும்போர் தொடங்கினர்கா ணம்மானை
[8]அற்றத் திருமாலும் அந்தரியும் தங்களிலே
சீற்றத்தீ விட்டெரியச் செய்யுஞ் செருமுனையிற்
*செங்குருதி பாயத் திருமால் திருமார்பில்
*எந்தித்துக் கொண்டு எரிசர மொன்றெறிந்தாள்
*செந்திருக் கேழ்வனுக்காய்ச் சென்று படைத்தலைவர்
*சுந்தரியைச் சூழ்ந்து துரந்தார் சரமாரி

---

1. துன்னி யுடைந்தொதுங்கி (த)
2. இம்மா யவனும் அஞ்சலென்று சொல்லி (த)
3. சேண்புள் ளரதம் செழுந்திலங்கல் சீதரனும் (த)
4. அசுரேசரிமேலே (த)
5. போர்வந்த மாயோனைப் போர்முகரும் பார்த்துரைப்பாள்
பார்வந்த சேனைதனிற் பல்லாட்கள் தங்களிற்றன்
பாலகனை வேலவனைப் பற்றுமல் வென்றுவந்த (த)
6. திருமாலே (த)
7. தானடத்தி (த)
8, ஏற்றத் திருமாலும் இந்திரையும் தங்களிலே (த)
* த-பிரதியில் இல்லாத வரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

†தூம்பாவ நின்ற சுந்தரியும் கண்சிவந்து
†சாம்பனை யுட்கலக்கிச் சாத்தகியை யீடழித்து
†ஓங்கு வசுதேவன் உக்கிரசே னனைத்துரத்தி
†தேங்கு கடற்படையைத் திக்கெங்குஞ் சூழ்ந்துகொள்ளுள்
†அடருற்ற சேனை அடித்த பெருங்காற்றில்
†திடராய்க் குவிந்து சிறுபூளை யானதுவே
†சேனை தனைத்துரத்திச் சீராம னையடைந்து
†வானந் தலைபணிய வன்போர் புரிந்தார்கள்
†செம்பொற் றிருமாலைச் சேர்ந்து பொருவார்மேற்
†பைம்பொற் றேரோட்டிப் பலதேவன் முன்னடைந்து
†ஆண்டகை முன்னே அவரையு மெய்தழித்துப்
†பூண்ட கவசம் பொடியாகப் போகவைத்தான்
†வன்போர் தொடங்க மணிவண்ணன் கண்சிவந்து
†தன்தேரை யோட்டிச் சாடும் சயமகள்தன்
†சிங்கக் கொடியுஞ் சிலையும்பறித் தெறிந்தான்
†துங்கக் கணையான்மேற் சுடுசரங்கள் தான்தூவி
வெய்ய கடுங்கணைகள் மேலுஞ் சிலவெய்தாள்
அய்ய னெதிர்நின்று அந்தரியைப் பார்த்துரைப்பான்
"பெண்பழிக் கஞ்சிப் பிடித்துநின்றே னல்லாது
விண்பதியி லுன்னை [1]விடுவிப்பே" னென்றுசொன்னான்
[2]சோமே றியமுகத்துத் துர்க்கையு மேதுரைப்பாள்
"ஆமாம துள்ளபடி யப்படியே தப்பாது
புக்கெளிய தாடகையும் பூதனையு முன்னுடைய
கைக்கெளிய ரானபடி கண்டாய் பழியலைக்காண்
உன்னுற் கொலையுண்ண ஒண்டொடியார் வந்தெதிர்த்தார்
அண்ணுநீ பெண்பழிக்கு அஞ்சுவைதா" [3]னென்றுரைத்தாள்
மண்ணடுங்க விண்ணடுங்க மன்னரும் வான்படையும்
[4]உண்ணடுங்க வைத்தாள் உலகெலா மூடுவித்தாள்
ஓர்கை சிலைகுனிக்க ஓர்கை கணைதொடுக்க
[5]ஓர்கை யிலையுதிர்ப்ப ஓர்கை கடகவிழ்ப்ப
ஓர்கை கதிர்வாள் ஒளிபெறத் தான்சுழற்ற
ஓர்கை மணிச்சங்கை ஒலிப்ப உலகதிர

---

† இந்தவரிகள்-த-பிரதியில் இல்லாதவை
1. விடேனே எனக்கேட்டு (த)
2. சோமாதைய (த)
3. என்றுசொல்லி (த)
4. உண்ணடுங்க வம்பால் உலகெலாம் மூட்டுவித்தாள் (த)
5. ஓர்கை படஅடிப்ப (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]சத்திக்கு ளண்ட சராசரம் தான்நடுங்க
எத்திக்கும் நின்று இயல்பொருதா ளம்மானை
போர்வாள மாகப் பொரக்கண்டு போர்நெடுமால்
கூர்வாளா லின்றிவளைக் கொல்வோ மெனநினைந்து
[2]அஞ்சா யுதத்தில் அறவும் வியப்பான
பஞ்சா யுதத்திற் பாரவலு வாளெடுத்தான்
துண்ணென வந்து துர்வாச மாமுனிவன்
கண்ணனைப் போற்றிக் கதிர்வாள் தனைவிலக்கிச்
"செல்லியல் மேனித் திருமாலே யின்றெதிர்த்த
வல்லியல் துர்க்கை வரலாறு கேட்டருளாய்
முன்னீர் மிகவாகி மூவுலகு மண்டியநாள்
அன்னீர் நிலைநிறுத்த ஆதி பராபரனுந்
தோன்றுவித்தார் சத்திதனைத் துர்க்கையெனும் பேராக்கி
மூன்றுல குக்கும் முதல்வியா யேதுசெய்தாள்
ஆழுங் கடலை அன்று படக்குடித்து
ஏழு கடலை யியற்றினா ளிங்கிவள்தாள்
ஆதி முதலுக் கறவும் வலியவள்காண்
ஓதி லிவள்தா னுனக்குச் சகோதரிகாண்
[3]இவ்வா ளிவள்மே லெறியப் பெருதுகண்டாய்
மெய்யாள் பகவதியை [4]வெல்லவகை சொல்லுகிறேன்
[5]ஆதி சதாசிவன்தான் அன்றிட்ட தோர்சாபம்
சாதி மணிநிறமாஞ் [6]சற்குணியென் றோருருவம்
அவ்வுருவங் காட்ட அயர்ந்துநிற்ப ளவ்வளவில்
இவ்வாசல் தான்கடந்து ஏகலா" மென்றுசொல்லிச்
சோரா முனிவன் துர்வாச னேகியபின்
சீராமன் றானும் சிருட்டித்தா னவ்வுருவை
கந்த பகவதியைக் காண நிறுத்தலுமே
விந்தையங் குண்டு வெருண்டங் கரண்டுநின்றாள்
செவ்வாய் மணிவண்ணன் சேனைக் கடலுடனே
அவ்வாசல் தானு மகன்றுசென்றா னம்மானை
[7]பார முரசார்ப்பப் பாங்காகப் போந்துநின்ற
கார்நிற மேனியனைக் கண்டார் பலரோடி

---

1 சத்திக்குச் சங்கரனுர் தலங்களுந் தான்நடுங்க (த)
2. அஞ்சா யுதத்தில் அறவும் வலியதான
மிஞ்சாய வேலை விதித்தான் விதித்தலுமே (த)
3. இவ்வேல் (த)
4. வெல்லும் வகைகேளாய் (த)
5. ஆதி சாசிவனுர் (த)
6. சாகினியென் றோருருவம் (த)
7. ஆர முரசார்ப்பவளை ஆர்க்கப் பொருதுநின்ற
கார் முகமெய்யானைக் கண்டார் பலரோடி (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தாரம் போலிருந்த வாணனைக் கைதொழுது
"அந்தரியைப் போர்வென் றவ்வாசல் தான்கடந்து
மென்மேல் முரசதிர வெங்கூற்றம் போற்கொதித்து
உன்மேல் வருகின்ற னுற்றதுசெய்" யென்றுரைத்தார்
வண்டார்பூந் தொங்கல் வாணனு மேதுசொல்வான்
"பெண்டாட்டி போர்வெல்லப் பெற்றதிங் கேதாச்சு
அத்தன் பரமன் அரன்சங் கர[1]னிமலன்
நித்தன் நிமலன் நிருத்தஞ் செயுநாளில்
ஓரா யிரங்கரத்தால் ஓராயிரம் முகமாய்
சீரா ருடலழகைச் செபித்தேன் செபித்தலுமே
அங்கது கண்டு அரனென்மே லன்பாகி
[2]ஓங்கு செருவுக் கொருவாக்குத் தந்திருப்பன்
[3]தீச்செல்ல முப்புரத்தைத் தீயிட்ட சேகவற்குப்
[4]போய்ச்சொல்லு" மென்று புகன்றான்கா ணம்மானை
அன்று னுரைக்க அவனுங் கயிலையிற்போய்ப்
பன்னகம் பூண்ட பரம னடிபணிந்து
"வாசனேர் கொன்றை மௌலியே வாணனுக்கு
ஈசனே தேவரீர் இசைந்த பெரும்வரத்தால்
ஓர்மனத்துள் ளன்பா யுணர்வீ ருமைவாணன்
போர்மனித ரோடே பொரச்சொன்ன" னென்றுசொன்னன்
அங்கவன் சொல்ல ஆமென் றதற்கிசைந்து
சங்கரனும் போர்க்குச் [5]சம்மதிக்கத் தான்கண்டு
பொய்ச்செரு நெஞ்சிற் புகுந்தறியாப் புண்ணியனை
வச்சிர வண்ணன் மலர்த்தா ளுறப்பணிந்து
[6]தேன்மருவு கொன்றைச் சிவனேயிச் சேனையுடன்
யான்பொருவே னென்று இறையை விடைகொண்டு
பொன்மணி பூண்டு புனைகவசந் [7]தான்பூண்டு
தன்படை சூழத் தமனியத் தேரேறிப்
பக்கத்திற் சங்கநிதி பதுமநிதி தான்வரவே
மிக்க சிலையேந்தி வெஞ்சா மரமிரட்ட
ஆர்ப்பரவ மின்றி அளகேசுரன் றானும்
பாற்பரவை மாயன் படையுடனே தாக்கினன்காண்

---

1. அமலன் (த)
2. ஓங்கு செருவுக் கொருவரந் தந்திருப்பன் (த)
3. தீச்செல்ல முப்புரத்தைச சேறிட்ட சேவகற்கு (த)
4. போய்ச்சொல்லத் தானே பொருதழிப்ப னென்றுசொன்னன் (த)
5. சம்மதித்தா னம்மானை (த)
6. தேன்பொருத கொன்றைச் சிவனேயச் சேனையொடு (த)
7. தானணிந்து (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரன் பலதேவன் சேனைமுன்னே தோன்றிநின்று
ஆரென்று கேட்டான் அழகே சுரன்றனையும்
"மேலாந் தபோதனர்க்கும் [1]விண்ணவர்க்கும் கண்மணியாங்
காலாந்த கண்ணுமையாள் காவலனும் கண்டாயே
அன்று புரத்தை அனலாக வேநகைத்தோன்
பண்டாரங் காக்கும் பழவடியேன் நா"னென்றான்
சொன்ன மொழிகேட்டுச் சொல்வான் பலதேவன்
'பன்னகம் பூணுவதும் பற்பமே பூசுவதும்
உண்பதுவும் நஞ்சு உடையும் புலித்தோலே
பண்பனுக்கு நீநல்ல பண்டாரி காணு"மென்றான்
மானச் சிலையாலே வச்சிர வண்ணனிட
சேனைப் பெருந்திரளைத் திக்கெங்குஞ் சிந்துவித்து
நீண்ட படைமுகத்தில் நின்ற பலதேவன்
ஆண்டகை போர்கண் டழகேசுரன் முனிந்து
சங்கு நிறத்தான் தனுவுந் தடந்தேருந்
துங்கக் கொடியுந் துணியச் சரந்தொடுத்தான்
[2]கண்டான் பலதேவன் கடற்படையைக் கைவருத்து
வென்றிப் பலதேவன் மீளவும் நின்றுகொண்டு
ஆந்தனைய வச்சிரனை ஆனமணித் தேரோடும்
ஏந்தனையும் போக எடுத்தெறிந்தா னம்மானை
கண்டார் விரைந்தோடிக் கண்ணுத லோனுடனே
உண்டான செய்தி யுரைத்தா ருரைத்தலுமே
ஈசன் வெகுண்டு [3]இமைப்பளவிற் கொல்லவென்று
ஆசு வசுக்களுடன் அட்ட வசுக்களையும்
பன்னிரு சூரியரும் பதினே ருருத்திரருங்
கின்னரர் கிம்புருடர் கெந்திருவர் கந்திருவர்
[4]மற்றுமுள்ள தேவர்களும் வானுலகி லுள்ளவருங்
கொற்றவன் சேனையையுங் கோமன்னர் தங்களையும்
பாரப்போர் செய்து படவடித்து வாருமென்று
சேரத் திரட்டிச் செலுத்தினன்கா ணம்மானை
சங்கர னேவச் சகலரும் தான்வெகுண்டு
செங்கண் நெடுமால்தன் சேனைமேல் மோதினர்காண்

1. மிக்கோர்க்கும் கண்ணனையான் (த)
2. கண்டிக் கடற்படையைக் கட்டழித்துக் கொல்லவுமே
வென்றிப் பலதேவன் மீண்டும் மிகுந்துகொண்டு (த)
3. இமைப்போதில் (த)
4. மற்றுள்ள தேவரொடும் வான்படைதன் னேரம்போய் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னன் படைதான் கடல்போல் [1]முறிந்தோட
அண்ணல் பலதேவன் அஞ்சலென்று [2]முனைசென்று
தன்போர ரகுத்தின் சத்தி மகிபாலன்
வெம்போர் விளைத்தான் மிகுசாம்ப னும்பொருதான்
மற்றுள்ள பேர்கள் மதுசூத னுக்காக
வெற்றிக் கடும்போர் விளைத்தார்கா ணம்மானை
மன்னிய தண்டுளப மாயோன் பெருஞ்சேனை
உன்னித்துத் தாக்க உடைந்தது தேவர்படை
பட்டும் படாத படையோடுந் தேவரெல்லாம்
எட்டுத் திசையும் இயங்கினர்கா ணம்மானை
தேவ ருடைந்தோடும் செய்தியெல்லாங் கண்டொருவன்
தாப முடனோடிச் சாற்றினன் சங்கரற்கு
நக்கனுங் கேட்டு நகைத்தந்தச் சேனையெல்லாம்
இக்கணந் தன்னில் இனிக்கொல்ல வேணுமென்று
பேய்ப்படையைக் கூட்டிப் பெருகவே வற்புறுத்திப்
போய்ப்பொரு மென்று பொருதவிட்டா னம்மானை
வள்ளுகிர் பேயும் வலிய பசாசுகளும்
நள்ளிருள் செல்வதுபோல் நாலுதிக்கும் கைவளைத்து
விண்ணிற ஓங்கு மிகுகொள்ளி கைப்பிடித்துக்
கண்ணன் படைமேற் கதித்தனகா ணம்மானை
பலபத் திரன்படையும் பரமேசுரன் விடுத்த
அலகைப் படையும் அமர்பொருத தம்மானை
தாமனு முக்கிரனும் சாம்பனும் சாத்தகியும்
மாமன்னர் தாமும் வசுதேவ னுமடர்ந்து
பஞ்சாங்க வண்ணன் படையும் அரன்படையும்
செஞ்சரங்க ளும்மளுவும் தெண்டுடனே செவ்வேலும்
[3]கவ்வை யுறநெருக்கிக் கடல்வண்ணன் சேனையுள்ளார்
[4]செவ்வை யுறுபோர் செய்தனர்கா ணம்மானை
பற்றுமல் வந்த பசாசுப் பெரும்படையைச்
சுற்றெல்லா மோடத் துரத்தினர்கா ணம்மானை
மட்டற வந்து வளைத்த பெரும்படைதான்
தட்டழிதல் கண்டு சமுத்திர [5]தேவனென்பான்

---

1. உடைந்தோட (த)
2. கையமர்த்தி (த)
3. கவ்வை பெறத்தாக்கி (த)
4. ஒவ்வொருவோர் ஒவ்வொருவர் ஒருபேரை யோட்டுவித்தார் (த)
5. சாதனும்தான் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி யுரைக்க உமைபாகர் கேட்டருளித்
தேடி யொருகரும் சிந்தித்தா ரம்மானை
ஊனே நெருப்பா யுடனுட்டண சுரத்தைத்
தானே சிருட்சித்துத் [1]தாக்கியமர் செய்யுமென்று
காற்றிற்குக் காற்றாய்க் கனலிற் கடுங்கனலாய்க்
கூற்றிற்குக் கூற்றாய்க் கொடியோர்க்கு மிகக்கொடிதாய்க்
கத்திரியர் சேனையெல்லாங் காய்ந்து பொடிபடுத்திச்
சித்திரம்போல் வாருமென்று செல்லவிட்டா ரம்மானை
கோபமே மெய்யாய்க் கொடுமையே வல்லுறுப்பாய்த்
தாபமே தீமையாய்த் தறுகண்மை யேநினைவாய்
விண்ணைப் புகையாக்கி மேலுலகைத் [2]தீப்படுத்தி
மண்ணைப் பொடிபடுத்தி வந்ததுகா ணம்மானை
மிண்டி யெரிந்துவரு வெப்பு தனைக்கண்டு
கொண்டல்வண்ணன் சேனை குலைந்தோடிப் போகலுமே
தப்பிப் படையகலத் தாமன் படைத்தலைவர்
வெப்பைத் தடுத்து மிகப்பொருதா ரம்மானை
எல்லார் பொரவும் எதிரே வருஞ்சுரத்தைச்
செல்லார் திருமேனித் திருமாலுங் கண்டருளி
அவமதி யாத அவரையெல்லாம் போர்விலக்கிச்
சிவமயமாம் வெப்புதனைத் தீர்க்கும் படிநினைந்து
சீதச் சுரத்தைத் திருமால் சிருட்டித்து
ஆதி பரன்சுரத்தை அவியென்று [3]விட்டலுமே
எங்கும் பரந்து ஏழுலகும் தானழிவாய்ப்
பொங்கு கடற்கும் புவிக்குங் குளிர்பரப்பிச்
சென்றது சீதசுரம் சென்றது கண்டெதிரே
நின்றது வானில் நிறைந்துட்ட ணசுரந்தான்
ஈசன் விடுத்த எரிசுரத்தை யாரென்று
கேசவன் விட்டசுரம் கேட்டது கேட்டலுமே
"ஆமன் பரமன் அடிவெப்பு வீங்கிவந்தேன்
தாமன் பெரும்படையைச் சங்கரிக்க" வென்றுசொல்லி
நின்ற குளிர்சுரத்தை நீற்றன் விடுத்தசுரம்
"இன்றுநீ யாரென் றியம்பா" யெனவினவ

1. சத்தியை மெத்துவித்து (த)
2. தீயாக்கி (த)
3. ஏவலுமே (த)

"[1]பூங்கமலம் சூழும் பொற்றுவரை நாடாளும்
ஆங்கமலக் கண்ணன் அடிவெப்பு இங்குவந்தேன்
பொங்கரவம் பூண்டு பொற்குன்ற மீதிருக்கும்
சங்கரன் சேனைதனைச் சங்கரிக்கத் தா"வென்று
ஒருவெப் புரைக்க ஒருவெப்புத் தான்வெகுண்டு
இருவெப்பு மாக இகலிப் பொருதனகாண்
ஒன்று நெருப்பெழுப்ப ஒன்று மழையெழுப்பும்
ஒன்று பொடியெழுப்பில் ஒன்றதைச் சேறுசெய்யும்
ஒன்றதன் வானிலுறும் ஒன்றதன் மேலுயரும்
ஒன்றைந் தெழுத்துரைக்கில் ஒன்றெட் டெழுத்துரைக்கும்
இவ்வா றிரண்டும் இகலிப் பொரும்போரில்
மையாருங் கண்டன் வகுத்த கடுஞ்சுரத்தைக்
கீழ்ப்பட் [2]டுடைத்ததுகாண் கிட்டிணன் விட்டசுரம்
மேற்பட் டிருந்ததனை வென்றதுகா ணம்மானை
சுரம்தோற் றதுகண்டு துண்ணெனச் சென்றொருவன்
புரஞ்செயித்த செஞ்சடையான் பொன்னடியிற் சொல்லலுமே
நீரை முடித்த நிமலனு 'மங்கவர்மேல்
ஆரை விடுத்தாலும் ஆவதில்லை' யென்றெண்ணித்
தீப்பறக்கச் செங்கண் திரிநேத் திரத்தானும்
போய்ப்பொரச் சம்மதித்துப் போர்க்கோலம் தான்புனைந்து
வீசு கடல்கடைந்த வெவ்வா யரவாலே
வாச மலர்ச்சடையை வாகாய் வரிந்துகட்டித்
துண்டப் பிறையும் [3]சுரநதியுந் தான்புனைந்து
மண்டக் குழையில் மணிகுண் டலம்புனைந்து
துய்ய திருவரையிற் சுற்றிய கச்சினுள்ளே
வெய்ய புலித்தோலை மேன்மையுற வேசார்த்திக்
கங்கண மும்காப்பும் [4]கடிதார மும்புனைந்து
அங்கவை யெல்லாம் அரவா லமைத்தருளி
அன்பால் விரும்பி அணியுத்தி ராட்சதத்தை
இன்பக் கவசம் இயல்பாக வேபுனைந்து
பவளப் பொருப்பிற் படிந்த பனிமலர்போல்
திவளத் திருநீற்றைச் செம்மேனி யிலணிந்து

---

1. பூங்கடல் வாவிசூழ் (த)
2. உதைத்ததுகாண் (த)
3. சுருதியும் தான்சூட்டி (த)
4. கடிதார முமிலப்ப (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கை யிருவர் மனமகிழ்ந்து தானிருப்பச்
செங்கை மழுவுந் திரிசூலமும் பிடித்து
[1]வானோர் மலர்தூவ வருவிடையின் மீதேறி
ஏனோரும் போற்ற இடபக் கொடியோங்கச்
சித்த ரொருபால் [2]தீயியக்கர் தானொருபால்
மெத்துங் கணமொருபால் வெம்பூதம் பேயொருபால்
இந்திரன் தேவர் இருடிகள் தானொருபால்
சந்திர சூரியர்கள் தானவர்கள் தானொருபால்
சேம முறப்புகழ்ந்து திக்கெங்குஞ் [3]சூழ்ந்துவரச்
சாமரைகள் வீசத் தவளக் கொடிநிழற்ற
என்னாகப் போகுதென்று [4]எவ்வுலகுந் தானடுங்கப்
பின்னாக மென்னும் பெருவில்லை நாணெறிந்து
சென்றா னரனும் திருமால் பெரும்படைதான்
துன்றார் மலர்தூவித் தோத்திரஞ் செய்துநின்றார்
அப்போ தரனும் அரியும் [5]பொரும்போரில்
[6]நாணப்பொருத வில்லு நாலுதிக்கும் நிற்பளவில்
மட்டுறு தண்டுளவ மாயோனு அவ்வளவில்
விட்டுணு ரூபம் வெளிக்காட்டி மேன்மையுடன்
[7]சூரியன் தோற்றமெனச் சோதிமணி யும்புனைந்து
சீரிய பூணணிந்து செம்மணி மாலையிட்டுக்
*கச்சை மருங்கிற் கதிர்வாள் வலத்தணிந்து
*பச்சைத்துளாய் புனைந்து பஞ்சா யுதம்பிடித்துப்
*பொன்மலையை யொத்துயர்ந்த புள்ளரசின் மேலேறி
*மின்வலிய சக்கரத்தை மிக்க கறைதுடைத்துச்
*சரந்திருத்திப் பார்த்துத் தடஞ்சிலையை நாணெறிந்து
*அரனிருக்கும் முக்கட் டடர்ந்துசென்றா னம்மானை
*வான்பவளக் குன்றும் மரகத மாமலையுந்
*தான்பொருதுங் காட்சிபெறத் தாக்கினர்கா ணம்மானை
*மிக்க பருவதத்தை வீழ்பனி மூடுபபோல்
*நக்கன் விடுசரந்தான் நாரணனை மூடுதலும்
*பார்க்கரனைக் கண்ட பனிபோ லவைகலங்கக்
கார்க்கடல் வண்ணன் கடிந்தான்கா ணம்மானை

---

1. வானோர் புடைசூழ வல்விடை மேற்கொண்டு (த)
2. திறலியக்கர் தானொருபால் (த)
3. சூழ்ந்துகொண்டு (த)
4. எவ்வுலகு முள்நடுங்க (த)
5. பொருமளவும் (த)
6. நம்போர் தவிரென்று நாலுதிக்கும் நிற்பளவில் (த)
7. சூரியர்கள் தோற்றச் சோதி மணிபுனைந்து (த)

* -த பிரதியில்லாத வரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

†செங்கன வீசன்விடிற் செம்மழை மால்விடுவான்
†சங்கரன் குன்றெறியில் தாமன் மலையெறிவான்
†ஆலம் பரமன்விடில் அமிர்தம் அரிவிடுவான்
†சூலம் விமலன்விடிற் சுடராழி மால்விடுவான்
†சுப்பணம் நக்கன்விடிற் கைவேல் விடுங்கரியோன்
†முக்கர மாதிவிடில் மூலமு சுங்கிடுவன்
†எந்தெந்த வாயுதங்க ளீசன் செலுத்துகிலும்
†அந்தந்த வாயுதங்க ளரியும் விடுத்திடுவன்
†ஒருவர்க் கொருவர்தனை உற்ற சிலையறுத்தும்
†ஒருவர் ஒருவர்தனை உட்கலக்கி யீடழித்தும்
†இருவரும் நின்றெய்யும் எரிசரங்க ளீடாடிக்
†கருதரிய வானம் கனலெழுந்த தம்மானை
†ஈசனும் மாலும் இகலிப் பொருதுகின்ற
†ஓசை பதினு லுலகமெலா முற்றதுகாண்
†அரியு மரனும் அமரே பொருபோது
†பெரிய உலகு பிழைப்புண்ட தம்மானை
†ஊழி யிறுதியென்ன உள்நடுங்கி யேழுலகும்
†ஆழி மறைந்த தந்தகனும் கண்புதைத்தான்
†மாக ருலகும் மறையாழி யானுலகும்
†நாக ருலகும் நடுக்கமுற்ற தம்மானை
வெம்போர்த் தொடர்ச்சிதனை வேந்தனுங்கேட் டோடிவந்து
அன்போ டயனும் அரியை அடிதொழுது
"ஆதி தனியுருவாம் அம்மூர்த்தி தன்னுடனே
வாதித் தமராட மாலே மதியிலையோ
ஈசனும் [1]நீதானும் ஏகவுரு வல்லாது
பேசி லிருபேர்க்கும் பேதமை வேறிலைக்காண்
உம்மிற் பொருதால் உமைவிலக்கு வாருளரோ
தன்னிற் றெளிநீ சருவிப்போர் செய்யாதே
சொல்லும் பொருளுஞ் சுருதியுமாஞ் சோதிதனை
வெல்லு முபாயம் விளம்புவேன் கேட்டருள்வாய்
"[2]நீட்டிய போர்பொருது நீள்வானில் தேவரெல்லாம்
தாட்டிய வல்லசுரன் சாகர போசனென்பான்

---

† -த-பிரதியில்லாத வரிகள்

1. ஸ்ரீதரனும் (த)

2 நீட்டிற் பொருத நீள்வானில் தேவரெல்லாம் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதித்துச் செல்லலுமே வானோர்க ளெல்லோரும்
ஆதிக் கடவுட் கபயம் [1]புகுந்தார்கள்
ஐயனும் வானோர்க் கபயம் கொடுத்தருளித்
துய்ய பசுவாகச் சூழ்ந்திங்கே நில்லுமென்றான்
வரமதனால் வானோர்கள் வான்கயிலை வட்டமதிற்
[2]பரமன் பணியதனாற் பசுவாகி நிற்றலுமே
வேக மிகவாகி விண்ணோரை வீடுவிக்கச்
சாசுர போசணனும் [3]தானுமொரு பசுவாய்
[4]நின்றதை யுள்ளறிந்து நிமலனுந் தன்னுடைய
[5]வென்றிக் கொடுமழுவை விடுத்தான் விடுத்தலுமே
எப்பசுவுங் கொல்லாமல் எட்டியே வல்லசுரன்
அப்பசுவைக் கொன்று அரன்பால் வருகலுமே
பட்ட வசுரன்விழப் பசுவான தேவரெல்லாம்
[6]இட்ட முதல்வடிவாம் ஈசனைப் போய்த்தொழுதார்
"எம்மைப் பசுவாக்கி எம்பகையைத் தீர்த்தமையால்
உம்மைப் பசுபதியென் [7]றோது முல" வென்று
தானவர்கள் செய்யுந் தவங்கண்டு தானவர்க்கு
ஆன வரங்கொடுக்கில் ஆதியே யெம்பணியால்
வென்றி யமரில் வியன்மோக வத்திரத்தால்
அன்று மயங்கிடவே ஆனவரந் தா" வெனவே
சந்திர சேகரனும் 'தந்தோ' மெனவிடுத்தான்
வெந்திற லான வியன்மோக வத்திரந்தான்
என்னிடத்தே யுண்டு யான்தரக் கொள்ளென்று
துன்னிய மாயனுக்குச் சொல்லி [8]யுபகரித்துச்
செம்மல ரோனுஞ் சென்றான் திருமாலும்
அம்மந்தி ரத்தை அறமந்தி ரித்தெடுத்து
'வெற்றிகொள்' ளென்று வியன்மோக வத்திரத்தைப்
பற்றி யரன்மேல் படவெறிந்தா னம்மானை
அவ்வத் திரத்தால் அரனும் செருவொழிந்து
இவ்வா றியங்கா திருந்தான்கா ணம்மானை
மாலெய்த பாணம் மயக்க மயக்குண்டு
நீலமிடற் றண்ணல் நின்றனன்கா ணம்மானை

---

1. கொடுத்தார்கள் (த)
2. பரமனருளால் (த)
3. தானும் பசுவடிவாய் (த)
4. நின்றதங் குள்ளறிந்து (த)
5. வென்றிக்கோள் மூவிலைவேல் விட்டான் அதுசென்று (த)
6. இட்டமுடன் முடிவாய் (த)
7. ஓதுமுதலா யென்று (த)
8. உபதேசித்து (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈச னிவணிற்க ஈசன்ருன் காக்கின்ற
வாசல் கடந்துசென்ருன் மாயவனு மம்மானே
மண்டு கடல்போல மகாசேனே சூழ்ந்துவரக்
கொண்டல் நிறத்தானுங் கூற்றம்போற் சீற்றமுற்றுக்
கைச்சங்கை வாயில்வைத்தான் காசினி யேழுலகும்
அச்சம் குடிகொண் டதிர்ந்ததுகா ணம்மானே
வான்சங் [1]கொலிகேட்டு வாணனும் வான்படையுந்
தான்சங் கொலிகேட்டுத் தளர்ந்ததுகா ணம்மானே
வானகத்தி லும்விழுவார் வான்படை கைசாய்வார்
ஆகமெத்த வஞ்சி யசுரர்கோன் தன்சேனே
தன்னிற் றெளிந்து தாழ்வாய்ச் சலினனென்பான்
வண்ணத் திரள்புயத்து [2]வாணனே வந்துகண்டு
''ஈசனும் தோற்ருன் இனிநமக்குப் [3]போருமில்லை
ஆசையெனும் மாலுக் கறம்புகுவோ'' மென்றுரைத்தான்
அணிவாசல் மன்னன் அமத்தியனைத் தான்முனிந்து
''மணிவாசல் காப்போரோ மன்னர்படை வெல்கிறவர்
சென்றுநான் தானே தினப்பொழுதிற் [4]கொன்றுழக்கி
வென்று வருவ''னென வெகுண்டெழுந்தா னம்மானே
வந்தவன் மைந்தன் வலுதேவ காலனென்பான்
தந்தை தனேப்பணிந்து [5]தானே யெடுத்துரைப்பான்
''அங்கி யறுமுகத்தோன் அந்தரி சங்கரனும்
எங்குமுள்ள தேவர்களும் ஏவல்செய்ய வீற்றிருக்கும்
எந்தையே யுன்தனக்கு இவரோ இலக்காச்சு?
வந்த மனிதர் தன்னே வன்படை தன்னுடனே
அற்பத்தில் [6]வென்று அலேவன்றி மீளுகிறேன்
வெற்பொத்த தோளாய் [7]விடைதா'' வெனவுரைத்தான்
அன்றவன் சொல்ல அசுரர்கோன் உள்மகிழ்ந்து
'வென்றுவா' வென்று விடைகொடுத்தா னம்மானே
தார்வேட்ட பொற்றடத்தோள் தந்தை விடைகொடுக்கப்
[8]போர்வேட்ட சங்கீதப் பொற்றடத்தேர் மீதேறி
[9]ஆனே தடந்தேர் அடற்படை தற்சூழச்
சேனே யணிவகுத்துச் சென்ருன்கா ணம்மானே

---

1. ஒலித்திடவே (த)
2. வாணனேப் பார்த்துரைப்பான் (த)
3. பேருமில்லே (த)
4. கொல்லுகிறேன் (த)
5. தாள்தடுத்தங் கேதுரைப்பான் (த)
6. கொன்று (த)
7. விடைதா வெனத்தொழுதான் (த)
8. போர்வேட்டம் பூண்ட பொற்றடத்தேர் மேற்கொண்டு (த)
9. ஆனபரிதேர் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்படை [1]போதுவதைக் கண்டு பலதேவன்
அடற்படையைக் கைவகுத்து ஆரவாரஞ் செய்துநின்ருன்
[2]தலைதூசி பண்ணிநின்ற சாம்புவன் தன்மேலே
[3]மலைக்கோல வாணன்மகன் வந்தான்கா ணம்மானை
வாணன் மகன்படையும் மன்னர் பெரும்படையும்
பாணந் திசைமறைப்பப் பரந்தெழுந்த தம்மானை
வென்றிப் படையிரண்டும் மென்மேற் கறுப்பாகிக்
கண்டிப் பொருது கலந்தனகா ணம்மானை
பேருயர் யானைப் பிணமெல்லாம் தான்சுமந்து
வாருதியிற் பேராருய் மண்டினகா ணம்மானை
கூறும் கழுகுங் கொடியுங் குளநரியும்
பாறும் பசாசும் பசிகெட்ட தம்மானை
சத்திய சாத்தகியுஞ் சாம்பனு முக்கிரனும்
எத்திசையும் நின்று [4]இகல்பொருதா ரம்மானை
சேரப் படைபுடைக்கும் தேவகா லன்றனது
பாரப் படைத்தலைவர் பட்டனர்கா ணம்மானை
மாயன் விடுத்த [5]மாயசுர அத்திரத்தால்
தியசுரர் சேனையெலாம் செத்ததுகா ணம்மானை
சேரப் படைபடவே [6]தேவகா லன்கொதித்துப்
பாரப் படையைப் பணைத்தண்டாற் பார்புரட்டித்
தேரிற் பொருவாரைத் திக்கெல்லாம் பிய்த்தெறிந்து
பாரிற் பொருதான் பலதேவன் தன்மேலே
வெள்ளிப் பொருப்பில் [7]மிகவுருப் பூத்தாற்போல்
தெள்ளிய மேனி சிவந்து பலதேவன்
எண்ணில் வெகுளி யெனத்தேவ காலனைத்தான்
மண்ணி லுடல்கிடப்ப வானி லுயிர்நடப்பப்
பாஞ்சிற் [8]படியிற் பலகுருதி யாருேட
நாஞ்சிற் படையால் நலிந்துகொன்ரு னம்மானை
அன்றவன் வீழ அவன்படை யத்தனையுங்
முண்டிக் கிருட்டிணனை முட்டிப் பொருதலுமே
கைப்படை [9]யாலே கலந்து பலதேவன்
அப்படையுங் கொன்று [10]அறவெறிந்தா னம்மானை

---

1. போவதனை (த)
2. தலைகூசி முன்னின்ற சாம்புவன் தன்னெதிரே (த)
3. மலைக்கோசை வாணன் மகன்வந்து மோதினன்காண் (த)
4. இகலி எதிர்பாய்ந்து (த)
5. மாயேசுப அத்திரத்தால் (த)
6. தேவகா லனன்று (த)
7. மிருமுகுக்கு (த)
8. படையால் (த)
9. தன்ருல் (த)
10. அலையெறிந்தான் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தன் மடிந்ததுவும் வாணன்படை கெட்டதுவும்
உய்ந்தார் பலரோடி ஓதினர்காண் வாணனுக்கு
சென்றார்சொற் கேட்டுச் செவிகள் சுறுக்கெனவே
நின்றுரை யெல்லாம் நெருப்பாகத் தான்பார்த்துப்
பாரு மதிரப் படவரவு முள்வளைய
விரசிங் காசனத்தால் விருகத் தான்குதித்துத்
தார்கோல மேனியெல்லாந் தக்க வணியணிந்து
போர்க்கோலங் கொண்டு புகர்வாள் மருங்கணிந்து
மால்வரை யோங்கும் வயிரப் பணைத்திரள்கள்
போல்நின்ற வெற்பைப் பொருதடக்கை யாயிரமுந்
தக்க படைக்கலங்கள் தாழ்வறத் தான்பிடித்து
நக்கன் புரமெரிக்க நடஞ்செய்த தேர்போலே
பாரத்தே ரேறிப் பலபடையும் முன்னேவி
வீரத் துவசம் விசும்புறவே நின்றாட
ஊழி யிறுதி ஒலிக்கின்ற பேரிடிபோல்
ஆழி பயந்தலற [1]ஆலயமுள் ளதிர
சேனை டதிரச் செகமதிர வெற்பதிர
வாணை சுரன்போர்க்கு வந்தான்கா ணம்மானை
சிங்கம் வரக்கண்ட சிந்துரக் கூட்டம்போல்
அங்கரசர் சேனை யகன்ற படிகண்டு
தேன்படு தண்டுளபச் சீராம னவ்வளவில்
வான்படை தன்னை மருளாமல் வற்புறுத்தி
மெய்யிற் கவசமிட்டு மேற்கொண்ட வாகனமேற்
கைக்கா யுதம்பிடித்துக் கண்ணுற்று நில்லுமென்று
எப்படையுங் கூட்டி இருபாலும் தேர்நிறுத்தி
அப்படை காக்க அண்ணன் தனைப்பணித்து
மல்லார் புயநெடுமால் மகாவிட் டுணுருபம்
எல்லாம் வெளிப்படுத்தி யேகவுரு வாகிநின்றார்
பொன்மே னிரண்டு பொருசிறகு பெற்றதென்ன
மென்மை சிறந்த மிகுகருடன் மீதேறிப்
பங்கயச் செங்கைதனிற் பஞ்சா யுதம்பிடித்துச்
சங்கம் மிகமுழங்கத் தாக்கினான் வாணனுடன்

---

1. அலைகட லுமுள் வாங்கி (த)

மாயன் றனைப்பார்த்து வாணே சுரனுரைப்பான்
"நீயென்னைச் சுற்றும் நினையாம லேபுகுந்தாய்
வெய்ய அமர்தேடி வீடினு யிப்பொழுது
உய்ய வகைதேடி யோடிப் பிழையு"மென்றுன்
அன்னுனைப் பார்த்து அரங்கேச னேதுரைப்பான்
"முன்னு ளிருபேரும் மூண்ட பெருங்களத்திற்
காய்கின்ற பல்படையாற் கைக்கோலால் வெல்வதல்லால்
[1]வாய்கொண்டு சொல்வர்களோ வலியோ" ரெனவுரைத்தான்
ஐய னுரைக்க அசுரேச னுமுனிந்து
வெய்ய கடுங்கணைகள் வீசினன்கா ணம்மானை
காணும் கடல்முழங்குங் கண்ணன் தடக்கைவில்லும்
வாணன்கை வில்லும் மழைமுழங்கு மம்மானை
ஒருவர் சரத்தை ஒருவர்சரந் தானறுக்கும்
இருவர் சரத்தாலும் எத்திசையும் வெந்ததுகாண்
வாணன்கை யாயிரமும் வன்போர் செயக்கண்டு
காணுங்கை யாயிரமும் கண்ணனுக்குங் கைகூட
"அக்கரத்துக் குண்டான ஆயுதங்க ளத்தனையும்
இக்கரத்துக் குண்டாக" என்றனன்கா ணம்மானை
வாணனும் மாலவனும் வாகனத்தி லுங்குதித்துக்
காய்கன லென்னக் கலந்தனர்கா ணம்மானை
கைகுத்திற் கைகுத்தும் கால்கொடுக்கிற் கால்கொடுக்கும்
மெய்யொக்க மெய்வளர்ந்து வெற்பொக்க விட்டெறியும்
வட்டமிடில் வட்டமிட்டு மற்போரில் மற்பொருது
எட்டுத்திக் கும்திரிந்தும் எங்கும் விலகிநின்றும்
விண்ணுறில் விண்ணில் நின்றும் வேலையைச்சேறுசெய்தும்
மண்ணுறில் மண்ணில்நின்றும் மாய்கைக்கு மாய்கைசெய்தும்
அரியிரண் டுற்றதென அமரரு மச்சமுற
[2]எரியிரண் டுற்றதென ஏன்று பொருதனர்காண்
வாணனும் மாயவனும் வாகா யிரவுபகல்
ஊணு முறக்கமற்று ஓரஞ்சு நாள்பொருதார்
அலைகட்டும் வேலையென்ன அன்னுர் படையிரண்டும்
வலைகட்டி விட்டதுபோல் [3]வானவர் மண்டிநின்றுர்

---

1. வாய்கொண்டு பேசார் வலியோ ரெனவுரைத்தான் (த)
2. எரியிரண் டுற்றதென இருபேரு மேபொருதார் (த)
3. வானவர் கண்டுநின்றுர் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிபோர் செயக்கண்டு தாமோ தரன்முனிந்து
எரிபோல் விழித்து ஏழ்ப்பாய்ந் தெதிர்த்துநின்று
'இங்கிவன் றன்னை இனிக்கொல்ல வேணு'மென்று
செங்கையிற் சங்கை சிறீபாஞ்ச சன்னியத்தை
ஓங்கி யவன்மேலே ஓச்சினான் ஓச்சலுமே
ஆங்கது சென்று அசுரர்கோ னையடர்ந்து
மேகத்து ளோடுகின்ற வெள்ளி நிலாப்போலே
ஆகத்து ளோடி [1]அடைந்து மறைந்திடலும்
சற்றுந் தளராமற் சாரப்போர் செய்திடவே
கொற்ற நெடுமாலுங் கோபம் பெரிதாகி
மாலா யுதமைந்தில் வான்சக் கரமொழிய
நாலா யுதமும் நடத்தினன்கா ணம்மானை
தண்டுந் தனிவாளும் சங்குஞ் சுடுசரமும்
[2]மிண்டி நெடுங்கிடவும் வெம்போர் செயக்கண்டு
தருச்சக் கரந்தனிலே சந்ததமும் வீற்றிருக்கும்
[3]திருச்சக் கரந்தனையே செல்லப் பணித்தலுமே
அங்கது வோடி அசுரன் [4]விடுங்கணையைத்
தங்கா தறுத்தவனைத் தாண்டிப்போர் [5]செய்தலுமே
பஞ்சா யுதத்தைப் பணிந்து [6]பணியனையான்
[7]செஞ்சாயர் பாலகனுந் தீக்கணை சிந்தினன்காண்
வருகின்ற சக்கரமும் மண்டி வளைந்துகொண்டு
பொருகின்ற வாணன் புயமலையை யொவ்வொன்றாய்
மாகத் தெழுந்த மலைக்குவடு [8]வீழ்வதுபோல்
வேகத் தறுத்துவிழ விட்டதுகா ணம்மானை
அற்ற கரத்தை அடுத்தகரத் தாலசுரன்
பற்றி யெரிமேற் படவெறிந்தா னம்மானை
எங்கோ னதுகண்டு இளஞா யிறுபோலே
வெங்கோட் சரத்தால் விலக்கினன்கா ணம்மானை
அவ்வாறு கண்டு அசுரேச னுமுனிந்து
கைவார் சிலையைக் கடிதாகக் கால்வளைத்துத்
தெய்வக் கொடுங்கணைகள் சிந்தினான் சீதரனும்
அவ்வவை தன்னை யவையா லறுத்தனன்காண்

---

1. அடர்ந்து துரத்திடவே (த)
2. மிண்டி நெருங்கி மிகுபோர் செயக்கண்டு (த)
3. திருச்சக் கரந்தன்னைத் திருமால் செலப்பணித்து (த)
4. விடுபடையை (த)
5. செய்ததுகாண் (த)
6. பணியணைவோன் (த)
7. செஞ்சரங் கால்வளையச் சீக்கிரம் சிந்தினன்காண் (த)
8. வீழ்ந்தாப்போல் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரா யிரத்தோன் பிடிக்கின்ற வேளையத்தே
பாரா மரத்தைப் பணர்வெட்டிச் சாய்ப்பதுபோல்
தோள்வளை யோடுஞ் சுடர்கனகப் பூணோடும்
நீள்வரை வாணன் [1]நிறைபுயத்தை நீக்கினன்காண்
பூண்டிவர் போர்புரியப் போர்காண வந்துநின்ற
ஆண்டகை யீசன் அயனோ டருள்புரிவான்
"நட்புற்ற வாணனுக்கு நான்காவல் காத்ததுவும்
பண்புற் றவனேவப் பாரப்போர் செய்ததுவுஞ்
சேர அவன்பேரிற் சினேகித்த தாலலவோ
நாரணன் பாற்போய் [2]நமக்கா யவனுடைய
மெய்யு முயிரும் மிகுதலை யோரிரண்டும்
கையு மருதபடி கற்பித்து வாரு"மென்றான்
மாற்றப் பசுபதியை வந்தித் தயனுரைப்பான்
"சீற்றம் பெரிதவர்பாற் செல்லப் பயப்படுவேன்
[3]இன்றே யுறஅரிபால் இருபேரு முன்பாகச்
சென்றா லுமைக்காணிற் சீற்றந் தணிந்திடுவன்"
என்றா னயனும்; இடபத்தின் மீதேறிச்
சென்றான் [4]சிவனும் செருகளத்தி லம்மானை
இவனை யமர்மறந்து [5]இடபத்திற் போதுகின்ற
சிவனை யெதிர்கொள்ளச் சென்றான் திருமாலும்
பங்கயத் தாளிற் பணிந்தான் மலர்தூவிச்
சங்கரனும் மாலும் [6]தழுவினர்கா ணம்மானை
[7]நீண்ட அரியும் நிமலனும் நிற்கையிலே
ஆண்டான் வரவை அறிவித்தா னந்தணனும்
[8]இத்தனையும் வாராது ஏற்கனவே ஆள்விடுத்தாற்
பித்தனே யென்று பிரசாதஞ் செய்தளவிற்
கண்ணுற்ற வாணன் கரங்கள் தொளாயிரத்துத்
தொண்ணூற்று எட்டும் [9]துணிந்ததுகா ணம்மானை
ஆமட்டில் மாயவன்றா னாயுதங்க ளையழைத்துச்
சேமிட்டு வைத்துறையிற் [10]சேர்த்தான்கா ணம்மானை
கஞ்சமலர்க் கண்ணான் கருவமெல்லாம் தான்றணிந்து
பஞ்சா யுதத்தைப் பணிவிலக்கி நிற்பளவில்

---

1. நிறைபுயத்தை யற்றதுகாண் (த)
2. நமக்காக வாணனிட (த)
3. ஏனாற் றவர்பா விருபேரும் செல்லுவபோற்
   காணிற சிறந்தவன்றன் காரியமும் கைகூடும் (த)
4. அயனோடும் (த)
5. எருத்தின்மேல் (த)
6. தழுவினர்காண் தங்களிலே (த)
7. நின்றான் நிமலன் நிறைகின்ற வேளையத்தே
   அன்றவரும் தானவரை அறிவித்தா ரந்தணரும் (த)
8. அத்தனையும் கேட்டு யனந்தா அயனுரைப்பான்
   இத்தனையும் வாராது ஏற்கனவே ஆள்விடுத்தால்
   முத்தார் முதல்வன் மொழிந்தபடி யத்தனையும்
   பெற்றா னெனவே பிராதரஞ் செய்வளவில் (த)
9. தொலைந்ததுகாண் (த)
10. தெண்டனிட்டா னம்மானை (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடர்கைத் திரளழிந்த அசுரனு மவ்வளவில்
தடக்கை யிரண்டுந் தன்னுயிரு முண்டாகிப்
போதக் களேபோய்ப் புயல்வண்ண னைப்பணிந்து
[1]சீதக் கமலத் திருமால்தன் முன்னிற்ப
அச்சுதன் மைந்தன் அனுவுருத் திரன்றனையுங்
கச்சி யிளங்கொங்கைக் கன்னி யுஷைதனையுஞ்
[2]செம்மணி முத்துத் திரளுந் திரவியமும்
[3]அம்மணியும் மாயனுக்கு அடியுறையாய்த் தான்கொடுத்து
"ஓராதே யுன்னோடு யுத்தம்யான் செய்ததனைப்
போராழி மாலே பொறுத்தருளு" மென்றுரைத்துப்
பாதந் தொழுது [4]பலவிசையாய்த் தாள்துதித்தான்
[5]மாதவ னன்பாகி வாணனைப் பார்த்துரைப்பான்
[6]"அல்லா நீர் தானே ஆயிரங்கைக் குண்டான
எல்லா மிடுக்கு மிரண்டுகைக்கு முண்டாகித்
துன்று விரும்பும் தொலையாத செல்வமுடன்
என்று மிருப்பை" யெனவே வரங்கொடுத்து
அங்கமல மேனி யமலனு மச்சுதனும்
பூங்கமல வாணனைப் போகவிட்டா ரம்மானை
அன்னான் நடந்ததற்பின் அம்முனிவர் தற்சூழ
முன்னாள் முதலொன்றாய் மூவுருவாய் நின்றருளும்
பங்கயனு மாலும் பரமே சுரன்றானும்
தங்களிலே பேசிச் சகலமு [7]முள்ளறிந்தார்
கண்ணனு மவ்வளவிற் கண்ணுதலோ னைத்துதித்து
எண்ணுங் கயிலைக் [8]கேகுமென்று தானனுப்பிப்
பூங்கமல வேதாவைப் போக விடைகொடுத்து
வாங்கு கடற்படையும் மன்னவரும் தற்சூழ
உற்றஅனு வுருத்திர [9]னுஷையையுந் தேரேற்றிக்
கற்றை மணிக்கவரிக் கன்னியர்கள் காலசைப்பப்
பைம்பொன்மணித் தேரேறிப் பல்லியங்க ளார்ப்பரிக்கச்
செம்பொற் றிருமாலும் சென்றான்கா ணம்மானை
சுற்று வரையுஞ் சுரமும் பலகடந்து
பொற்றுவரை மூதூர் புகுந்தனன்கா ணம்மானை

1. சேதப் படாமற் சிவனருளாற் றான்பெற்று (த)
2. செம்மணி முத்துந் திரவியமும் தான்கொணர்ந்து (த)
3. அம்மணி மாயற் கணியுறையா கக்கொடுத்து (த)
4. பலமுகமாய்த் தான்தொழுது (த)
5. மாதவ னப்போது (த)
6. அல்லா நிறத்தனையும் (த)
7. உள்ளுணர்ந்தார் (த)
8. எழுந்தருள வேபணிந்து (த)
9. உஷையு முடன்போக (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிப்படை மாயோனும் வாணன்போ ருக்குவந்த
படைத்தலைவ ரென்கின்ற பன்னூட் டரசரையும்
அன்பாகப் போசித் தவர்கள் பதிக்கனுப்பி
இன்பம் செருக்கி இருந்தான்கா ணம்மானை
[1]வாணன் கதையை மகிழ்வுறக் கேட்கவல்லார்
நீள்நிதியும் சந்ததியும் நிச்சயமே யுண்டாகி
[2]மன்னும் புதல்வருடன் வந்திக்க வாழ்ந்திருந்து
பின்னுஞ் சிவபதமே பெற்றிருப்பா ரம்மானை

## விருத்தம்

* மலைப்புறு வாணனை வகைத்த மாயனைத்
நலைப்புற நினைப்பவர் தமது தீவினை
நினைப்பவர் பிறப்பெலாம் நீத்து நல்வினை
நனைத்தரும் மலர்ப்பதம் சரண ணுங்களே

இக்கதை படித்தவ ரிருந்து கேட்டவர்
நற்கதை யிதிற்பய னறிந்து ரைத்தவர்
இப்புவி தனிலிருந் தின்ப மெய்தியே
மெய்ப்புயல் நிறத்தன்வை குந்தஞ் சேர்வரே

## பவுண்டரிக வாசுதேவன் யுத்தம்

நன்மை திகழ நடத்துகின்ற நாளையிலே
வன்மைதிகழ் பௌண்டரிக வாசுதேவ னென்றொருவன்
[3]மிண்டு தவசி விசுவாமித் திரன்மகனைக்
கண்டு பிடித்தவனைக் கைக்குத்தாய்க் குத்தலுமே
"உன்தந்தை செய்தவ மொன்றொழிய வென்றனக்குத்
தந்தந்த மாமுனியால் தாரையிட்டுக் கூட்டுவித்தால்
நன்றாய்ப் பிழைத்திடுவை நானுன்னை யல்லாது
கொன்றிடுவே" னென்று கோபித்துப் போகவிட்டான்
மற்ற முனிமகனும் வாதைப்பட் டோடிவந்து
சற்றந்தை யைக்கண்டு தாளிற் பணிந்தழுது

---

1. வாண னுயுத்தம் மனதுற்றுக் கேட்டவர்கள் (த)
2. மன்னுயிர் பூவுலகில் வந்துதித்து வாழ்ந்திருந்து (த)
* விருத்தப் பாக்கள் இரண்டும்–த-பிரதியில் மட்டும் உள்ளவை
3. மிண்டுதவி னுலே (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீறும் பவுண்டரிகன் [1]செய்ததெல்லாஞ் செப்பிடவே
வீறு முனிவிசுமா மித்திரனு மேதுசொல்வான்
''வாளர் பவுண்டரிக வாசுதே வன்வரவு
கேளாய் மகனே கிரேதா யுகந்தனிலே
எல்லையில் காட்சி இரணியனென் பானொருவன்
வல்லசுரர் வங்கிசத்தோன் மாயா வரமுடையோன்
தேவ ரசுரர் தினந்தோறு மேவல்செய்ய
மூவுலகு மாண்டு [2]முதல்வனாய் வீற்றிருந்தான்
அன்னாளுக் காற்றும லயனு மமரர்களும்
[3]முன்னானுக் காற்றாமல் ''முதல்வனுக் கோல''மென்றார்
பஞ்சா யுதனும் பரிந்தங் கவர்களுக்காய்
நஞ்சா மிரணியனை நரசிங்க மாய்வதைத்தான்
மற்றவன் பெற்ற மகன்பிர லாதனனைக்
கொற்றத் திருமாலுங் குறித்து வரங்கொடுத்து
''உன்னோ டமர்பொருவோர் ஒருவராற் சாகறியாய்
என்னொ லுகந்து எழில்முத்தி பெற்றிருப்பாய்''
என்று வரமீந்து எழிற்சங்கு சக்கரமும்
அன்றவனுக் கீந்து அரிகே சவன்போனன்
அன்னாளில் மாயோ னவனிட்ட சாபமதால்
[4]மன்னர் குலத்துதித்து வான்புள்ளு வாகனமாய்
ஆழியும் சங்குமுத லைந்தா யுதம்பிடித்து
வாழும் பவுண்டரிக வாசுதே வனெனவே
தன்பே ருரைக்கில் தவசக்தி யும்வலியும்
அன்பேது மில்லை அவனுடைய போர்வேண்டாம்
தேவர்க்குத் தேவன் சிறிவாசு தேவனல்லாற்
சாகா னொருவராற் சாகா னவ''னென்று
மாமுனி தன்னுடைய மைந்தனுக்குச் சொல்வதனைத்
தீய முனியான சிறீநார தன்கேட்டு
''மண்டு கடற்றுவரை வாழ்வாசு தேவனையே
கொண்டிவனை யுங்கடுகக் கொல்லுவிக்க வேணு''மென்று
சிந்தையிலே எண்ணிச் சென்று விரைவாக
வந்து பவுண்டரிக வாசுதே வற்குரைப்பான்

---

1. செய்தியெலாம் (த)
2. முதன்மையாய் (த)
3. முன்னானைக் கார்க்கும் (த)
4. மன்னர் குலத்துக்கு (த)

[1]"மன்னு உனைத்தான் வௌவுவான் போலொருவன்
உன்னு யுதம்பிடித்து ஓர்புள்ளின் மீதேறி
உட்காதே தானு மொருவாசு தேவனென
வெட்காதே பேருமிட்டு விண்ணுந் திருப்பானைக்
கண்டு தரியாமற் காவலனே யுன்பக்கல்
மண்டு விடாயோடே வந்தே" னெனவுரைத்தான்
கேட்டு [2]முனியுரையைக் கேட்டுப் பவுண்டரிகன்
வேட்டு வினைவளர்க்கும் வெம்முனியைப் பார்த்துரைப்பான்
"பற்றார்கள் செய்யும் [3]பரிபயங் கண்டாக்கால்
உற்றா னெனப்போல் உடன்வருவா ராருமுண்டோ"
நன்றி பலவுரைத்து நாரதனைப் போகவிட்டான்
வென்றி யரசரொடும் மிக்க படையோடும்
[4]மேவு மசுரன் விறற்சேனை முன்பழைத்துத்
தேவ பவுண்டரிகன் தேவனுட னேதுரைப்பான்
"உன்னைப் பணிந்திருந்தேன் உற்றரசர் கோமானே
என்னைப் பழித்தொருவன் என்போ லிருந்தனனும்
அங்கவன் சாதல் [5]அவன்கையாற் றான்சாதல்
இங்கிவை யல்லாது யானிங் கிருப்பதில்லை
வாளசுரர்க் கெல்லாம் மறைபுகுந்தோன் வாரு"மென
நீளசுரர் எல்லோரும் நின்றவனைப் பார்த்துரைப்பார்
"விற்றானை மன்னு வெகுளியால் நீயவனைச்
சற்றாக வெண்ணித் தனியேபோய்த் [6]தாக்காதே
எங்குலத்தை யெல்லா மிடர்செய்தோன் மற்றிவன்தான்
அங்கவனைச் சூழ்ந்து அனைவோரு மாய்ப்பொருது
கொன்றிட வேணு"மென்று கூறி யொருமையிட்டு
வல்ல சுரர்சேனை மதித்தெழுந்த தம்மானை
ஆனை யுந் தேரும் [7]அடற்படையுங் காலாளுஞ்
சேனையும் கைவகுத்துச் சென்றனர்கா ணம்மானை
அரக்கர் படையும் அசுரர் பெரும்படையுந்
திரைசேர் பெருங்கடல்போற் சென்றதுகா ணம்மானை
பாரப் பவுண்டரிகன் பஞ்சா யுதம்பிடித்து
வீரத் துவசம் விசும்பளக்கச் சென்றான்காண்

---

1. மன்னு உனைப்பழிக்கும் வருவான் வேறொருவன் (த)
2. முனிமொழியை (த)
3. பருவங்கள் (த)
4. மேவு மசுரன் விறச்சேனை முன்பணிந்து
தேவாதி தேவன் தேவனுட னேதுரைப்பான் (த)
5. அவன்கையால் நான்சாகல் (த)
6. மாயாதே (த)
7. அசுவமும் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை யணிபுயத்து மாலைப் பொரவென்று
வேலை யொருபுறமாய் விட்டிருந்தா ரம்மானை
மிக்கோர்க்குச் சொல்லி [1]வினைகண்ட நாரதனுந்
தொக்கோடி வந்து துவரா பதிபுகுந்து
முகுந்தனைப் போற்றி [2]"முனையாப் பவுண்டரிகன்
புகுந்தான் நகர"மெனப் புகலலுற்று னம்மானை
உன்கை யொருநாலுக் கொப்பா யுவமைபெறத்
தன்கையும் நாலாகத் தானும்பஞ் சாயுதமும்
[3]வான்புள்ளின் மீதேறி வாசுதேவ வனெனவே
தான்பெற்ற பேராகிச் சங்குவளை யும்பிடித்து
மன்னர் படையோடும் வல்லசுரர் சேனையொடுந்
துன்னி நெருங்கித் தொடர்ந்தனன் போர்வேட்டு
பவுண்டரிக தேசத்துப் [4]பார்த்திபன் மற்றொருவன்
தவண்ட முரசதிரத் [5]தற்சீ ரகத்திருந்தார்
உன்னடியேன் கண்டதனால் உன்பக்கல் வந்துரைத்தேன்
பொன்னடியே" யென்று [6]புகன்றனே நாரதனும்
சீராய்ந்த சொல்லாற் செறிந்து பரிவுரைத்து
நாரா யணன்றனும் நாதரனைப் போகவிட்டுப்
பாரப் படையும் படைத்தலைவர் தங்களையுஞ்
சேரத் திரட்டிச் சீக்கிரம்பொற் றேரேறிச்
சத்திய சேனனுக்குச் சாரத்தி யங்கொடுத்து
மெத்தும் பலதேவன் மிக்கோருந் தான்போகப்
புட்கொடி யாடப் பொருகரிமா தேர்சூழ
உட்கிட நாக லோகந் தலைபணியக்
கார்வேட்ட மாயோன் கனல்போலக் கண்சிவந்து
போர்வேட்டுங் கோளரிபோற் போயினன்கா ணம்மானை
கண்ணன் படைவரவைக் கண்டு பவுண்டரிகன்
திண்ணெனத் தன்னுடைய சேனை யணிவகுத்துப்
பானும் மதியும் பயந்து வெகுண்டோடத்
தானும் சமைந்துவந்து தாக்கினன்கா ணம்மானை
மண்டு பெருங்கடல்போல் வல்லசுரன் றன்சேனை
கொண்டல்வண்ணன் சேனைதனைக் கூடினகா ணம்மானை

1. வினைவிளைத்த (த)
2. முனையறப் (த)
3. வான்பட மீதேறி (த)
4. பார்த்திபர்க ளெல்லோரும் (த)
5. சத்தக் கரையிருந்தார் (த)
6. புகழ்ந்தான்கா ணம்மானை (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமன் படையும் பவுண்டரிகன் [1]தன்படையுஞ்
[2]சமர்மன்னி வாய்ப்பாய்த் தாக்கினர் போர்க்களத்தில்

## வேறு

மலையைச்செரு மலையைப்பொரு மலையுற்றிடு புணர்போல்மிகு
தலைமுட்கிட [3]மிகுவத்திகள் தலைபட்டன தம்மானை
தசையிற்படை நடுவுட்கடல் திரைபெற்றவ [4]என்னுமிகு
கயலைப்பொரு கவனப்பரி யெதிர்கத்தித வம்மானை
இகலற்றவர் சுழல்மாருத மிடைப்பட்டன தெனதேவலு
சிலைபற்றிய படைமன்னவர் செலவுற்றன ரம்மானை
தனிவற்றிடு [5]முடிபெற்றிடு சமரத்திர ளெனவீரர்கள்
அணிபற்றிய பரிசைத்திர ளடிபட்டன வம்மானை
இணையிற்கொடு [6]சிலர்விட்டிற எதிருச்சிய லறமுட்டிய
[7]கணைமெத்தவு மளவிட்டது ககனத்தையு மம்மானை
கொடியற்றன குடையற்றன குருகற்றன [8]தடிபோல்வரு
துடியற்றன முதுகற்றன தொடையற்றன வம்மானை
கதையற்றன சிலையற்றன கடலற்றன [9]கனவார்சிலை
குகையற்றன பொருமப்படை குலைவுற்றன வம்மானை
தலையற்றன குலையற்றன சரமற்றன கண்ணிள்புய
மலையற்றன சருவிப்பலர் வசமற்றன ரம்மானை
கரிபட்டன விரதத்திரள் கலைபட்டன கடிதாகிய
பரிபட்டன செருவுற்றவர் பலர்பட்டன ரம்மானை
இருவர்க்குமு மிகலிப்பொர இடிபட்டிடு முடல்வெற்புகள்
பெருகப்பொழி குருதிக்கடல் [10]மிகவுற்றது வம்மானை
மலியப்பிணை மலைபெற்றிட மகிழ்வுற்றன வலுபேய்கணை
நலியத்திசை தொறுமப்படை நடமிட்டன வம்மானை
துளபப்புயல் மடைவித்தகன் தொடரப்பொரு தமராடிட
அளவற்றிடு மசுரப்படை யடிபட்டன வம்மானை

## நடை

பொன்படர் தானை புனையும் புயல்வண்ணன்
தன்படைக் காற்றுமற் சாய்ந்த தசுரர்படை
முன்னின்ற சேனை முகஞ்செய்த [11]வாறுகண்டு
பின்னின்ற பேர்களையும் பேராட்கள் தங்களையும்

1. மாப்படையும் (த)
2. சரமென வாய்ப்பாளித் தாக்கினர்கா ணம்மானை (த)
3. மிகுவத்திரங்கள் தலைவிட்ட தம்மானை (த)
4. மன்னுமிகு (த)
5. மிடிபெற்றது (த)
6. சிலர்விட்டிட வெனவுச்சியி லெழமுட்டிய (த)
7. கணமுற்றவும் (த)
8. இடிபோலெதி (த)
9. கனவர்கணை (த)
10. புரளுற்றது (த)
11. வீறுகண்டு (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1சேரத் திரட்டிச் சேர்த்துப் பவுண்டரிகன்
மூரிக் கடல்போல் முட்டினன்கா ணம்மானை
வல்லசுரர் சேனை வளைந்து பொரக்கண்டு
செல்லனையான் சேனை திகைத்ததுகா ணம்மானை
ஆங்கது கண்டு அடர்ந்து பலதேவன்
ஓங்க லெனவே உயர்தேரி னுங்குதித்து
[1]மொய்த்தண்டி கையமைத்து மூடு படைக்கடலைக்
கைத்தண்டு கொண்டு கலக்கினன்கா ணம்மானை
ஆனையுந் தேரும் அடற்படையுங் காலாளுஞ்
சேனையுந் தண்டாற் சிதைத்துக் குளம்பாக்கி
எங்கும் வெருட்டி எதிர்ப்பார்க ளன்றிவிறற்
சிங்கம்போ லெங்குந் திரிந்தான்கா ணம்மானை
பாரப் படையழியப் பார்த்துப் பவுண்டரீகன்
வீரச் சிலையை வெறிபட ணுணெறிந்து
தொடையாற் சுடுகணையாற் சூழ்ந்து [2]பலதேவன்
படையைத் துரத்திப் படைத்தலைவ ரைச்சிறித்
தேக்கு புகழ்சேர் சிறீவாசு தேவனுடன்
தாக்கி யவருடனே தான்பல வார்த்தைசொல்வான்
"இத்தனை நாளாக என்னைப் பழித்திருந்தாய்
அத்தனையும் போக அகப்பட்டா" யென்னலுமே
மாயோன் எடுத்துரைப்பான் "வாசுதே வாயுனது
ஆயா மிடுக்கை அறியா தவங்கிடந்தேன்
இப்போர் தவிர்த்து [3]இயல்தோற்றுப் போகின்றேன்
மெய்ப்போர் தவிர்த்து விடுவையோ?" வென்னையென்றான்
ஓது மொழிகேட் டுரைப்பான் பவுண்டரீகன்
[4]"ஏதிலனு யென்னிடைவந் திவ்வார்த்தை சொல்லாதே
ஈதிலாக் களிப்படையும் ஈரிரண்டு பேரோடும்
மோது செருக்களத்தில் முன்னின்று சொன்னவுன்னைக்
காய்வதே யல்லாற் கணத்திற் கடுங்கணையால்
வீய்வதே யல்லால் விடேன்கண்டா" யென்றுசொன்னான்
இலக்கம் [5]பிறைக்கண் இறைவன்மே லென்றுகொண்டு
அலக்கம்பால் மூடவெய்து ஆர்ப்பரித்தா னம்மானை

---

1. மொய்த்தண் டிசையனைத்து (த)
2. புயல்வண்ணன் (த)
3. யான்தோற்று (த)
4. ஏது நினைவிலுந்தான் (த)
5. புலக்கண் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனூறுந் தண்டுளபச் செல்வனும் திக்கனையாற்
[1]பானுந் திசைமறைத்தான் பாணத்தா லம்மானை
[2]முட்சுரன் கோர்த்த முசலம் முசுண்டிபிண்டி
கப்பணம் நேமி கணைக்கதிர்வாள் கையம்பு
ஒன்றொருவர் விட்டகணை ஒன்றொருவர் தான்தடுப்பச்
சென்ற திசையனைத்தும் தீப்பாய்ந்த தம்மானை
அப்போ தரியை வகூர னடிவணங்கி
"இப்போ திவனை யெதிராகப் பண்ணுதே
சக்கரத்தை விட்டுத் தடியா" யெனவுரைக்க
உக்கிரத்தால் மாயன் ஒக்குமென்று சம்மதித்துப்
பஞ்சா யுதத்தைப் பணியேவிப் பார்த்திருந்தான்
அஞ்சா யுதமும் அசுரன்படை யத்தனையுங்
கொன்று [3]தலையறுத்துக் கோமன்ன ரைத்துணித்துச்
சென்று பவுண்டரிகன் சேனைபடை யத்தனையும்
மாய்த்துப் பவுண்டரிக வாசுதே வன்றனையும்
வீய்த்துத் தலையறுத்து மீண்டதுகா ணம்மானை
அன்னான் தலையை யறுத்தந்தச் சக்கரமுந்
தன்னு யகன்பதத்தில் [4]தான்வணங்கி நிற்றலுமே
மண்ணிடங் கொள்ளாமல் வந்தபடை யத்தனையும்
விண்ணிடை யேற்றுவித்து [5]வீர முடியறுத்து
[6]மைத்திரள் மாயன் மணித்தேரை மேற்கொண்டு
கத்திரிபர் சூழக் [7]கடியபடை தற்சூழப்
பட்டாபி டேகமவன் பாலனுக்குத் தான்சூட்டி
விட்டுனு வீரர் விரையவே சூழ்ந்துவரப்
பைம்பொன் மணிக்கவரி பல்லாண் டிசைமுழங்கச்
செம்பொன் மணித்துவரை சேர்ந்ததனன்கா ணம்மானை

## காசிராசன் யுத்தம்

மின்னும் சுடராழி வேந்தர் பலரோடும்
எந்நிலமும் போற்ற இருக்கின்ற நாளையிலே
போர்வேந்தர் வங்கிசத்திற் போர்க்குப் பொலிவுடைய
தார்வேந்தன் சந்திரகிரி சக்கிர வாளனென்பான்

---

1. வானுந்திசையை (த)
2. முட்சுரழ்க கோர்ந்த மூல முசுண்டிபிண்டி (த)
3. பரிவுரைத்து (த)
4. சார்ந்ததுகா ணம்மானை (த)
5. வீர முடிசூட்டி (த)
6. மற்றிறத்தோள் மாயன் (த)
7. கடற்படை (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவத்தாற் பெற்ற மகள்மதன சுந்தரியைக்
காதல் வதுவைமணம் காசிரா சற்களிக்கப்
பொங்கு மணவோலை போர்வேந்தர் பக்கலுக்கு
எங்கும் விடுப்பானை எய்தி யவன்றேவி
காள பதியுரைப்பாள் "காவலனே யிவ்வோலை
ஆளும் துவரைக் கயர்ந்தும் விடவேண்டாம்
செந்தா மரைக்கண் சிறிவாசு தேவனென்பான்
வந்தால் விதர்ப்பன் மணம்போற் [1]கலைவரும்"
என்ன அவனும் 'இதுவே கரும'மென்முன்
அன்னதை யெல்லாம் அறிந்தந்த நாரதனும்
நனிதிருந்தார் வந்திறைஞ்ச நண்பர் புடைசூழ
இனிதிருந்த மாயோனை ஏற்றி யெடுத்துரைப்பான்
"தாமனே சந்திரகிரி சக்கிர வாளனுடை
மாமகள்தான் பூமகளில் வாகுடையாள் தன்னையந்தக்
காசி யிராசற்குக் கல்யாணம் செய்வதற்குப்
பேசினர் கேட்டதனைப் பிந்தாம லோடிவந்தேன்
செழுந்தளரப் பூணுனைத் தீவேட்ட மாகுதற்கு
எழுந்தருளாய் நீகடுக" என்முன்கா ணம்மானை
நன்பா ரளந்தானும் நாரத மாமுனிமேல்
"அன்பாயிவ் வார்த்தை அறிந்துவந்து சொன்னவுன்னைப்
பூசிப்பே" னென்றுசொல்லிப் [2]போக விடைகொடுத்துத்
தூசிப் படைக்குத் [3]துடியார்ப்பச் சொல்லுவித்தார்
வள்ள லுரைப்பளவில் மன்னவரும் வான்படையும்
கொள்ள வருங்கடல்போற் கூடினர்கா ணம்மானை
செங்கண் னெடுமாலும் தேரேறிச் சேனையுடன்
தொங்கல் நிழற்றத் துடிக ளிடிமுழங்கப்
பூளி சுடர்மறைப்பப் போவதனைக் கண்டுகொண்டு
வாழுங் கபோத மாமுனிவன் வந்துரைப்பான்
"ஆசில்லா மேனி அரிவையைக் கொள்ளவரும்
காசிராசன் தோற்றங் கண்ணனே கேட்டருள்வாய்
ஆதி யுகத்தி லசுரருந் தேவர்களுஞ்
சீதக் கடல்கடைந்து தெள்ளமுத முண்பதற்காய்

---

1. கலைவரும் (த)
2. பூசித்துப் போகவிட்டு (த)
3. துடிசாற்று மென்றுவைத்தார் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தரமே மத்தாக வாசுகியே தாம்பாகச்
சந்திரனே [1]மத்திமமாய்த் தாழிபு மேற்கடலாய்ச்
சீராம ஞன திருமகள் தன்கேழ்வன்
போராமை யாகிப் பொருநீரி னுட்கிடப்ப
மாலின் முதுகில் மணிமந்த ரஞ்சுழலக்
காலம் பலவாய்க் கடைந்தார் கடைந்தலுமே
கோலால மாகிக் கொடுங்கனலாய் மீமிகுந்து
ஆலால நஞ்சு அலைகடலில் தோன்றிடவே
[2]துண்ணென்று நீங்கிச் சுரரும் முனிவோருங்
கண்ணுதல் வாழுங் கயிலைக்கே சென்றடைந்தார்
'அஞ்சலி' ரென்று அரனு மவர்களுக்காய்
மிஞ்சிய நஞ்சை [3]மிடற்றி லடக்கலுமே
[4]அண்டர் இருதிறமும் ஆதி விடைகொடுப்ப
மீண்டுங் கடைய விரைய வருமளவில்
ஒருரூப மாமையாய் ஓங்க மிதக்கயிலே
பெருரூப மொன்ருகிப் பேரா யிரத்தானும்
வான்கோ டுறநிமிர்ந்து வன்கைக ளாயிரத்தாற்
கோகோ வெனக்கடலைக் கோலிக் கடைதலுமே
அஞ்சாமல் வந்து அசுரருந் தேவர்களும்
பஞ்சா யுதனைப் பலமுக மாய்த்துதித்துக்
[5]கைக்கொடு கைபற்றிக் கரியமால் தன்னுடனே
ஒக்கக் கடைந்தார் ஒருசத் துவமாகப்
பாரிய வாலியுந்தன் பருமலை யுட்கலங்க
வாரிகோ வென்று வாய்விட் டரற்றலுமே
[6]மெத்திய வானகத்து வெண்தா ரகைபோல
எத்திசையு முத்த மெறிந்தனர்கா ணம்மானை
கொாற்றப் படாத கொடும்பவள வான்கொடிகள்
செற்றுக் கரையெங்குஞ் செத்தனகா ணம்மானை
ஆமையுஞ் சங்கும் அலவனும் மற்றுளவும்
மாமணிச் சிப்பிகளும் மாண்டுகரை மண்டினகாண்
வரையிற் பெரிதான மச்சக் குலங்களெலாந்
திரையிற் பலகரையிற் சேர்ந்தனகா ணம்மானை

---

1. சந்திரனே தூணைத் தாளியு மாள்கடலாய் (த)
2. துண்ணே நடுங்கிச் சுரரு மமரருமாய் (த)
3. மிடற்று ளடக்கியபின் (த)
4. அன்றங் கிவர்க்கு அரனும் விடைகொடுப்ப (த)
5. கைக்கொரு கைபற்றி (த)
6. மெத்த மியல்வான் வெண்தா ரகைபோல (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]மால்முதுகிற் குன்றம் வலமிடமாய்த் தான்சுழலக்
கால்முறை யோச்சிக் கடைகின்ற நாளையிலே
கேட்டை விளக்கக் கிறுத்துவ வாக்கினியாற்
சேட்டை வெளிப்பட்டாள் திண்ணவுணர் செவ்வையிலே
பேரார்த் திருபுறமும் பின்னுங் [2]கடைபளவிற்
சீரார் குறுமுறுவல் செல்வி நிலாவரும்ப
மாதேவர் கைமுகிழ்ப்ப மாசற்ற மேனியுடன்
சிதேவி வந்துதித்துச் செங்கண்மால் மார்புறைந்தாள்
பின்னுங் கடைந்தார் பெருகப் பெருங்கடலை
மன்னும் மணியும் மரகத வான்பரியும்
ஆவுங் கலனு மயிரா பதக்களிறுங்
காவும் பலகோடி கன்னியருந் தோன்றினர்காண்
மீண்டா தரித்து விறுவிறெனத் தான்கடைந்தார்
ஆண்டா யிரஞ்சென்ற தவ்வளவில் அக்கடலில்
வானவர்க்கு மூப்பிறுதி வாரா மருந்தாகி
ஏனை யசுரர் யார்க்கு மிறுவினையால்
[3]தோயாத் துகிலும் சுடர்கண்ணுந் தான்புனைந்து
சாயாமற் செவ்வே சமுத்திரமூ லத்திருந்த
தெள்ளமிர்த மின்னார் சிலர்சூழத் தேசுடனே
[4]ஒள்ளமிர்த கும்ப முதித்ததுகா ணம்மானை
உன்னி யமிர்த முடனுதித்த மங்கையரிற்
கன்னி யொருத்தி காசியெனும் பேருடையாள்
கோனுறு [5]காட்சி குலையாத் துதியுள்ள
மானுவ ராசன் மனைவியாய் வீற்றிருந்தாள்
அன்னாள் வயிற்றில் அதிபலத்தோ டேபிறந்தான்
மின்னார் சுடர்வேல் விமலரங்கன் மற்றவன்பேர்
தேவருந் தானவருந் திண்புவியி லுள்ளவரும்
யாவரு மேவல்செய்ய எப்போதும் வாழ்ந்திருந்து
சீர்காசி யென்பான் திருவயிற்றி லேயுதித்துப்
[6]பேர்காசி யென்னும் பெற்றியும் பெற்றவன்காண்
மூன்று கழுத்துடையான் மூவிரண்டு [7]தோளுடையான்
தோன்றுங் கிரணச் சுடர்முடி மூன்றுடையான்

---

1. மால்முகிற் குன்றம் (த)
2. கடைதலுமே (த)
3 தோயாது நாலு சுடர்க்கனலும் புடைத்து (த)
4. உள்ளமிர்த (த)
5. தாட்சி (த)
6. பேர்காசி ராசனென்னும் பேர்வலியோன் மற்றிவன்காண் (த)
7. கையுடையான் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]கொள்ளி மலையுங் கொடியதொரு கண்ணுடையான்
வெள்ளி மலைபோல் மேனி வெளுப்புடையான்
சக்கிர வாளன்மகள் தன்னை மணம்புணர
[2]உக்கிர மாக உறுபடை யோடெழுந்தான்
மற்றவனு லுன்னை வதைசெய்ய வேணுமென்று
கொற்றவனே எல்லோருங் கூடிப் பறைந்திருந்தார்
கார்முகத்து மாலேநீ காசியிரா சன்றன்னைப்
போர்முகத்தில் வெல்லப் போர்வேந்த ரொட்டார்கள்
அஞ்சன மேனியாய் அன்னுன் வடிவுகொண்டு
வஞ்சனையாற் கொன்று மணஞ்செய்வாய் மானே" யென்றான்
[3]ச ற்றி யவன்நிலை யத் தாமனை வற்புறுத்திப்
போற்றி விடைகொண்டு போனான் கபோதனனும்
அந்நேரந் தன்னில் [4]அணிவிதர்ப்பன் தன்மனையில்
முன்னே தட்டுண்ட முடிவேந்தர் தான்கூடி
[5]அலைக்காற் றுவரை அரசாளும் மன்னவனைக்
கொலைக்காசி ராசனுற் கொல்லுவிக்க வேணுமென்று
சக்கிர வாளன் றனக்கோலை தானெழுதிப்
புக்கரசர் எல்லார்க்கும் பொய்யோலை தான்விடுத்தார்
ஓலை விடுத்த உடனரச ரெல்லோரும்
மாலையணி காசி மன்னவனை வந்துகண்டார்
காரியஞ் சொல்வதுபோற் காசிரா சனுடனே
சீரியர் போலச் சராசந்த னேதுசொல்வான்
[6]'நிறைசொற் பரிதான நீலவண்ணன் சூழ்ச்சியினுற்
பிறகற் பலன்கொள்ளும் பெய்வளையைக் கொண்டதுபோல்
தீயார் மணிமார்பன் தீவேட்டுங் கன்னிதனை
மாயோன் விலக்குதற்கு வாறு னெனக்கேட்டேன்"
[7]தேன்படர் திண்டோள் சராசந்தன் வற்புறுத்தக்
கான்படர் தீயுமிழ்ந்து காசிரா சனுரைப்பான்
"ஏலமுகாள் நின்போல் யானு மெளியேனே
வாழை வனத்துற்ற மத்த கயம்போலே

---

1. கொள்ளி மலைபோற் கொடியகண் ணுறுடையான் (த)
2. உக்கிர மாக உடன்று படையெடுத்தான் (த)
3. சாற்றி யவன்நிலைமை (த)
4. அணிவிதர்ப்ப கோன்மனையில் (த)
5. அலைததூர்த் துவரை அரசாளும் மாயனைநான் (த)
6. நிறைகள் பழியாத (த)
7. தேன்படா தென்று (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களவாடும் மாயனைநான் கண்ணெதிரே கண்டேனுற்
பிளவாடி [1]மாயனைநான் பிய்த்தெறிந்து போட்டிடுவேன்
[2]வீசி யமரில் வேந்தரே போர்க்களத்தில்
வாசுதே வன்ருன் வருவானுல் பொல்லாதோ
நேசத்தா விக்கருமம் நேர்ந்தது காணுமென்று
பாசத்த வர்க்குப் பாராட்டிப் போற்றிசெய்து
தக்கவா ருசரித்துத் தானும் பணிபூண்டு
மிக்க படையதிர வீறுத் துடிமுழங்கச்
சக்கிர வாளத் தளத்திற் படையோடும்
போய்ச்சக்கர வாளப் புரம்புகுந்தா னம்மானை
அந்நேரந் தன்னில் அரசன் விடுந்தூதன்
மின்னேர் கடற்றுவரை வேந்தனை வந்துகண்டு
வஞ்ச மணவோலை மாயன்கை யிற்கொடுத்து
அஞ்சலி செய்து அருகுநின்ற னம்மானை
வந்தோலை வாசகமும் வாய்மாற்ற முங்கேட்டுக்
கொந்தளிய பீடத்தோள் குலுங்கச் சிரித்தருளித்
தம்மை மதித்திருக்கும் சம்பந்தி யாதலினுல்
எம்மை மதித்து எழுதாரோ ஓலையென்று
சீதரன் தானும் திருவுளத்தி லேயறிந்து
தூதனை நல்வார்த்தை சொல்லி விடுத்தருளிக்
கூறு மெழுகடலுங் கூடி நடந்ததுபோல்
ஆறு மலையும் அருஞ்சுரமும் தான்கடந்து
[3]அக்கர வாளத்தாண் டரசிருக்கும் கோமானுஞ்
சக்கர வாளபுரம் சார்ந்தனன்கா ணம்மானை
மாதுற்ற மன்னர் மணம்வந்த [4]காவனத்தே
வீறுற்ற மாதவனும் வீற்றிருந்தா னம்மானை
காணவந்த சோலை கடந்துவரை நன்ஞுடன்
தான்வந்த செய்திதனைச் சக்கிரவா ளன்கேட்டு
"நாமா யழைத்ததில்லை நம்பால் மணம்வருவார்
தாமா யழைத்தனரோ தாமனை" யென்றலுமே

---

1 நாற்றிசையும் (த)
2. வீசிய போர்க்களத்தில் வேந்தரே யென்னெதிரே (த)
3. அக்கர வாளத்தாண் டமரர் கோமானும் (த)
4. ஊர்தனிலே (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]மட்டுறு கேள்வி மதிமந் திரிகள்தன்னிற்
[2]புட்டுறு வந்தனென்பான் போர்வேந்த னுக்குரைப்பான்
"சும்மா யிராதே துவார பதியாளும்
அம்மாயன் மாய்கை அளவிடப் போகாது
வீசிய சேனையுடன் விட்டுனு வந்ததனைக்
காசி யிராசனுக்கும் கத்திரியர் தங்களுக்குஞ்
சொல்லி வருவதற்குத் தூதர் தனையேவி
வல்லிய சேனையுடன் மாற்றார் வருமளவில்
தாக்கிக் கரியோன் தாவிமே விட்டலுமே
காக்கைக்கு நம்படையைக் கைவகுத்து நில்லு"மென்றான்
அன்ன வகையே அடற்படையைக் கைவகுத்து
[3]மன்னர் தமக்குமிந்த வாறுரைத்துப் போகவிட்டான்
மிண்டிய தூதர் [4]விரைவில் விரைந்துசென்று
கண்டு கரங்கூப்பிக் காசிரா சற்குரைப்பார்
"நாங்க ளழைத்ததில்லை நந்தகோ பன்மகனை
நீங்க ளழைத்ததுவோ நீள்வேந்தே" யென்னலுமே
கன்றி விழிசிவந்து காசியர்கோன் தோள்புடைத்து
ஒன்றிச் செருவுக் கொருப்படு மாறுகண்டு
தக்க சராசந்தன் சகுபாலன் தான்கூடி
மிக்க அவர்தானும் விளம்புவார் தூதருடன்
"இவ்வுலகுக் கெல்லா [5]மிராசா வெனத்திரிவன்
அவ்வுலகுக் கெல்லாம் ஆயரில் மற்றொருவன்
வைப்புற்ற [6]மன்னவரே வலைபுகுந்த வான்நரிபோல்
தப்பித் திரிந்தான் சமர்த்தாக [7]இந்நெடுநாள்
பொய்ப்போர் பொருது புறஞ்சார்ந்து [8]இந்நெடுநாள்
இப்போது வந்தான் எழுத்தின் படியலவோ
[9]தாக்கிநின்ற சேனையையுந் தன்னையும் கொன்றுழக்கி
வெற்றிகொள் ளாமல் விடுவனோ [10]காசியர்கோன்"
என்றவனை யாளாக்கி ஏந்தலைப் பார்த்துரைப்பான்
அன்று விதர்ப்பன் அரிவையைப்பே லாகாமல்

---

1. மண்டுறு (த)
2. பூண்டு வல்லன்தான் (த)
3. மன்னர்தமக் கிவ்வாறு வாகா யுரைத்துவிட்டார் (த)
4. விசையில் (த)
5. இராசா எமக்கிறைவன் (த)
6. மண்ணில் (த)
7. எந்நாளும் (த)
8. போய்ப்பிழைத்தான் (த)
9. சுற்றிநின்ற (த)
10. காசிமன்னன் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத் தொழிலோர் விதிக்கும் முகூர்த்தமதிற்
கோதற்ற தான குலப்பெண்ணைக் கொள்வதற்குச்
சுற்றிப்பெண் கொள்ளவந்த சோரரைக் கொன்றுழக்கி
வெற்றிப்பெண் கொள்ள விரைய [1]வருவார்போற்
கற்பித்த மன்னரெல்லாங் காசியர்கோ னைப்பணிந்து
வெற்புற்ற தோளார் மிகுந்தெழுந்தா ரம்மானை
"மாற்றானை வென்று மணஞ்செய்ய வென்றிருந்தேன்
வேற்றானை மன்ன விளம்பியசொல் மாறேன்நான்
நறைப்போ தலங்கலணி நன்னுதலைத் தீவேட்டு
இறைப்பொழுதில் வாறே"னென் றேவினன் [2]தூதர்தமை
'மாமன் பெரும்படையும் [3]மன்னர் பெரும்படையும்
தாமன் படையுடனே தாக்குவியு" [4]மென்றுசொல்லிப்
போக்கிய தூதர் புயல்போல ஓடிவந்து
சாற்றிய சொற்கேட்டுச் சக்கிரவா ளன்றானும்
வேழ்விக்கு வந்தோர் மிகுபடை ன்னுடனே
தாழ்வில்லாத் தன்படையுந் தான்விடுத்தா னம்மானை
ஒலிகடல் ஏழும் ஒருமுகமாய்ச் [5]செல்வதுபோல்
வலிய படையிரண்டும் வந்ததுகா ணம்மானை
ஆனை யிடையிடையே அடற்பரி தானிடையே
சேனை யிடையிடையே சிகரம்போற் றேரிடையே
பூமியை யேந்தும் பொறியரவு முள்வளைய
நேமிக் கிரியும் நெளிய வரும்படையைத்
தக்க வகையாற் சசுபாலன் சம்மதித்து
மிக்க வரசரையும் வெல்வேந்தர் தங்களையும்
மத்த கரிபரியும் வான்தேரும் முன்னிறுத்தி
யுத்தப் பிரபையெனும் யூகம் வகுத்தருளி
[6]ஸானத்தே ரேறி வரிசிலையை நாணெறிந்து
தானை முகத்திற் சமைந்துநின்றா னம்மானை
மன்னர் [7]படைத்துளணி வாசுதே வன்கேட்டுத்
தன்னவராய் வந்த சகலரையு மங்கழைத்து

---

1. விரைய வருவாயெனவே (த)
2. வேந்தர்தமை (த)
3. மன்னர்படை யோடும்போய் (த)
4. தூதரென்றான் (த)
5. வந்தாப்போல் (த)
6. மானத்தே ரேறி வலுசிலையை நாணெறிந்து (த)
7. படைதுள்ளணி (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்படை யோடுநின்ற தார்வேந்தர் பட்டழிய
நம்படை யோடும் நடந்து பொருமெனவே
ஐய மறவே அவர்களை வற்புறுத்திச்
செய்யசிறி பாலனையுஞ் சேனு பதியாக்கிக்
காசியிரா சன்றனையுங் கட்டழியச் செய்வதுவாய்ப்
பேசி யிராசியமாய்ப் பேராளன் நீங்கியபின்
பாரப் படையைப் பலபத் திரன்றனுஞ்
சேரத் திரட்டித் திசையெங்கும் தானிறுத்தித்
தீயூர் கடக்கநின்ற சிங்கப் பிரபையெனும்
மாயூகந் தன்னை வகுத்து மதிப்பாகச்
சத்திப சேனனுக்குச் சாரத்தி யங்கொடுத்து
மெத்திய தேரேறி [1]வில்வளைய நாணெறிந்து
பாரப் படைதன்னைப் பற்றுப் படைமேலே
சேரத் திரட்டிச் செலுத்தினன்கா ணம்மானை
வசுதேவன் பாலன் வகுத்த மகாசேனை
சசுபாலன் சேனையுடன் தாக்கினகா ணம்மானை
ஐயன் படையும் அரசர் பெரும்படையும்
வெய்ய கடும்போர் விளைக்கின்ற வேளையிலே
காசியர் கோனைக்கொன்று கன்னியை வேட்பதற்கு
வாசுதே வன்றான் மனத்தே [2]நினைந்துகொண்டு
ஆல முலையை யருந்து மருளாளன்
கோலமுற வோர்வடிவு கொண்டான்கா ணம்மானை
கந்தாமம் மூன்றாய்க் கனக முடிமூன்றாய்ச்
சுந்தரத் தோளுஞ் சுடர்க்கண்ணும் மூவிரண்டாய்க்
கார்நிற மின்றிக் [3]கருநீர் நிலாவரும்பப்
பார்நிற மாகிப் [4]பலரும் வியப்புறவே
பன்மணி மாமணியும் பற்றிக் கதிர்வீச
வன்மணி பூண்டு [5]மணிமாலை யும்புனைந்து
கண்டவர் கைமுகிழ்ப்பக் காசியர்கோ னும்படிய
அண்டர் பெருமான் [6]அணைந்திருந்தா னம்மானை

---

1. வில்லையும் நாணேற்றி (த)
2. நினைந்தருளி (த)
3. கதிநீர் நிலாபருவம் (த)
4. பகலு மிராவாகி (த)
5. வகைமாலை (த)
6. அணைந்திருந்தா னப்பொழுது (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திர சக்கிரனுந் தன்மகளை நீராட்டிச்
செந்திரு வென்னச் செழுமணிப் பூணணிந்து
[1]கன்னி விரதங் கழித்துக்கைக் காப்புமிட்டு
வண்ணச் சுடர்விரித்த மாமணிப் பந்தலிலே
வேதத்தோர் செய்த மிகுவேள்வி யாகுதிமுன்
கோதற்ற சொல்லாளைக் கொண்டுவந்தா ரம்மானை
அவ்வேளை யத்தே அணிகாசி ராசனென்பான்
செவ்வே ளெனவே செழுமணிப் பூணணிந்து
வாகு புனைந்து மணவாளக் கோலமுடன்
தேசியல் காவனத்தே சென்றான்கா ணம்மானை
பின்வந் தவனும் பெருமணக் காவனத்தே
முன்வந் தவனை முகத்தைமுகம் பார்க்கலுற்றான்
"மங்கை யொருத்தி வதுவை மணவாளன்
இங்கிருவ ரான தென்னவகை யென்றறியோம்"
மன்னவர் தங்களையும் மாப்பிள்ளைத் தோழரையும்
தன்னவரை யும்பார்த்துச் சக்கிரவா ளனுரைப்பான்
"ஒருகாசி ராசன் உள்ளதென்று கேட்டிருந்தோம்
இருகாசி ராசர் இப்பொழுது வந்துநின்றார்
பொய்யுருவும் மெய்யுருவும் போகுதில்லை [2]கூற்றறுக்க
மெய்யுருவைத் தேர்ந்து விளம்பீ" ரெனமொழிந்தான்
அன்னானும் பார்த்து அடையாள முங்குரலும்
எந்நாளும் போலே இருவரும்நின் றேதுரைப்பார்
*"வேற்றுருவம் வேறுருவம் மெய்யன்றி நின்றமையாற்
*கூற்றறுக்கப் போகுதில்லை கோவே" யெனமொழிந்தார்
*தாமனுஞ் சந்திர சக்கிரனைப் பார்த்துரைப்பான்
*"மாமன்னர் சேனையுடன் வந்தேன் மணஞ்செய்யப்
*பொய்க்காசி ராசன் போறான் புறவழியே
*மெய்க்காசி ராசன்யான் மின்னை யரு"ளெனவே
*கன்றிக் கனல்விழித்துக் காசிரா சனுரைப்பான்
*"வென்றிக் கதிர்முடியில் மெய்பொய் யறிவீரால்

1. கன்னி விரதங்கழியக் கைதனக்குக் காப்புமிட்டு (த)
2. ஊடறுக்க (த)
* -த-பிரதியில் இல்லாத வரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

†இந்தப்போர் செய்ய யானு மிவன்ருனும்
†முந்தப்பே ராண்மையுடன் மூண்டு செருமலேந்தால்
†துஞ்சினவன் போவன் தொடர்ந்தவனேப் போர்வென்று
†மிஞ்சின வன்றனக்கு விவாக" மெனவுரைத்தான்
†போர்க்கோல மும்புனேந்து பொய்க்கோல முமாகித்
†தார்க்கோலம் வெள்ளிச் சயிலம்போற் சோதிவிட
†மூன்றிரு கைக்கும் முனேயா யுதம்பிடித்துத்
†தோன்றிரு மூன்று சுடர்விழி சோதிவிடக்
†காற்றிற் கடிய கடும்புரவித் தேரேறிச்
†சீற்றத்திற் பொங்கிச் சிலேநா ணெறிந்துநின்ருன்
†மெய்க்காசி ராசன் வெடுவெடெனத் தான்பதறிப்
†பொய்க்கா சியர்கோனும் போர்க்கோலங் கொண்டருளி
†ஆறு கரத்துக்கும் அடரா யுதம்பிடித்துச்
†சீறி யெதிர்விழித்துச் சீக்கிரமாய்த் தேரேறி
†மாசித்தே ரேறி மாதலியை வற்புறுத்திக்
†காசியர் கோனின்ற களத்திலே சென்றருளி
†குத்திர ரூபம் கொண்டிங்கு நின்றவனேச்
†சித்திரமாய்க் கொன்றிடுவேன் தேர்வேந்தே பாருமென்று
எண்ணும் தனுவை இமைப்பொழுதிற் [1]கால்வளேத்து
விண்ணும் நிலமும் வெடிப்ப நாணெறிந்து
நோக்கினுன் மற்றவனும் நோக்கி யெதிர்மலேந்து
தாக்கினுன் தாண்டிவந்து தாக்கினன்கா ணம்மானே
கைவளேய நாண்வளேய கால்வளேய வில்வளேய
மெய்வளேய வாளி மிகப்பொழிந்தா ரம்மானே
ஒன்ளெருருவர் [2]விட்டசரம் ஒன்ளெருருவர் மேனிதனிற்
சென்றுருவ அங்கஞ் சிவந்தனர்கா ணம்மானே
ஏற்றுதித்த காசி இறைவ னிவனெனவே
பார்த்துநின்ற மன்னர் பரிந்தனர்கா ணம்மானே
சுத்த வடிவான சுடுகணே மாரியினுல்
மெத்த விசும்பு வெளியடைத்த தம்மானே

---

† –த–பிரதியில் இல்லாத வரிகள்
1. நாணேற்றி (த)
2. விட்டகணே (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயன் வடிவான அய்யனு மவ்வளவில்
வெய்ய கணையால் வெளிகண்டா னம்மானை
மின்னொளி சேர்பூணார் விழிகள் எதிர்நோக்கித்
தன்னிழலைத் தான்முனிந்த தன்மையொத்த தம்மானை
மந்திரத்தேர் பூண்ட மாக்க ளடிக்கடிக்கப்
பந்து கிளம்புவபோற் பாய்ந்தனகா ணம்மானை
வேற்றானை மன்னவர்கள் மேற்கொண்ட தேரிரண்டுங்
காற்றாடி வட்டம்போற் கால்கிளர்ந்த தம்மானை
செவ்விய தேர்மன்னர் செருத்திறமை கொண்டிருக்கும்
அவ்விரண்டு தேர்க்கொடியு மாடிநின்ற தம்மானை
வெந்திறலார் பற்றிநின்ற வில்லிரண்டே யானாலும்
உந்து கணைக [1]ளுகாந்தமெழு மம்மானை
பொய்யுரு வத்தன் புரிந்தே ரிடந்திரியின்
மெய்யுரு வத்தன் மிகுதேர் வலந்திரியும்
காற்றிரண்டு போலக் கனலிரண்டு தான்போலக்
கூற்றிரண்டு போலக் கொடும்போர் விளைக்கையிலே
குபேரத் திரமொருவன் கோர்த்தெய்தி [2]யார்த்திடவே
வருணத் திரத்தை மற்றொருவன் [3]தொட்டிடவே
எவ்வத் திரத்தை எடுத்தொருவன் தொட்டிடலும்
அவ்வத் திரத்தால் அவனும் அறுத்திடுவன்
சங்க நாதத்தால் தார்வேந்தர் [4]தான்மயங்கச்
சிங்கநா தத்தாலுந் தேவர் செவிடுபட
[5]ஒருவர்தங் கைக்கொடியை ஒருவர்பறித் தழித்தும்
இருவரும் தம்மில் எரிவிழித்தங் கேதுசெய்தார்
வேலொருகை வாளொருகை வெய்யசூ லமொருகை
கோலொருகை வில்லொருகை [6]கோத்த சரமொருகை
பற்றி மலைந்து பலபோர் விளைக்கையிலே
[7]வெற்றி மலையும் மிகுகாசி ராசனென்பான்
சித்திர நோக்கும் திருமாலின் தேகமெல்லாம்
அத்திர மாரி அருளினன்கா ணம்மானை

---

1. உகாந்தகணை (த)
2. ஆர்த்தலுமே (த)
3. கோர்த்திடவே (த)
4. ஊதுகின்ற (த)
5. ஒருவர் கொடித்தேரை ஒருவர் அறுத்தொழித்தும் (த)
6. கோத்த படையொருகை (த)
7. வெற்றி யலையும் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வாய் மணிவண்ணன் சீறித்தீ வெட்டெறிந்து
எவ்வா யுதத்தா லிவன்சாகா னென்றறிந்து
சக்கர ஆழ்வான் தனைக்கண்ணு லேவிடவே
புக்கரை மாத்திரையிற் பொங்கெரிபோற் சூழ்ந்துகொண்டு
காசி யிராசன் கதிர்முடி மூன்றினையும்
வீசி யறுத்தெறிந்து மீண்டனன்கா ணம்மானை
பொய்க்காசி ராசனைப் பொன்னெடுமால் பொன்றுவித்து
மெய்க்காசி ராசனை வென்றான்கா ணம்மானை
பொன்றினவன் பொய்யனென்பார் பொய்க்காசி
[1]மண்ணிலுள்ளோர்
வென்றவன் மெய்யனென்பார் மேன்மை யுணர்ந்துநின்றார்
ஆர மதிக்க அமர்வென்ற [2]அங்கணனும்
தேர்விட் டிறங்கிச் செருக்கோல முந்தவிர்த்து
மற்கோல வெற்புயத்தான் மஞ்சன நீராடி
நற்கோலங் கொண்டு நறுஞ்சாந்த மும்பூசி
[3]மன்னரும் மாதவரும் மைந்தரும் வாழ்த்தெடுப்பப்
பொன்னரும் பந்தலிலே போய்ப்புகுந்தா னம்மானை
ஆதி கருடன் அப்பொழுதே ஓடிவந்து
[4]காதற் களம்பட்ட காசிரா சன்றலையைப்
பற்றி யெடுத்துவந்து பட்டவன்பாங் காகிநின்ற
வெற்றிப் படைபிடிக்கும் வேந்தர்க்கும் வன்னியர்க்கும்
அங்கங்கு காட்ட அரசரெல்லாம் வந்துகண்டார்
'பங்கங் கொள்ளாதே பரிந்து [5]படைபிடித்தீர்
மணக்கோலஞ் செய்துநீர் வைத்துவந்த மாப்பிள்ளையைப்
பிணக்கோலஞ் செய்யவல்ல பேராளன் தன்னாலே
கொலையுண்டு வல்லுடலம் கூறு படக்கண்டு
தலைகண்டு மின்னம் [6]சவங்கப்போர் செய்வர்களோ?
[7]நிறைகற் பழியாத நீலவண்ணன் சூழ்ச்சியினாற்
பிறகற் பலன்கொள்ளும் பெண்ணைப் பறிகொடுத்தீர்
[8]கண்ணுன காசி ராசனைக் கொல்லுவித்தீர்
மண்ணாளும் மன்னரெல்லாம் மாறா [9]வடுச்செய்தீர்

---

1. மண்ணவர்கோன் )த)
2. அந்தணனும் (த)
3. மன்னவரும் மங்கையரும் வாழ்த்தி மகிழ்ந்தெடுப்ப (த)
4. காதிக் களல்பட்ட (த)
5. படைபிடித்து (த)
6. சவங்கப்போரே பொருவீர் (த)
7. நிறைகற் பறியாத நீரெல்லாம் முன்னொருநாள் (த)
8. கண்ணாலம் வாறவர்போல் காசியனைக் கொல்லுவித்தீர் (த)
9. வடுச்சுமந்தீர் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்பிரான் காசியர்கோற் குற்ற மணப்பெண்ணை
எம்பிரான் தீவேட் டினியமணஞ் செய்கின்றான்
[1]தீவேட்டு மாயன் திரும்பி வருமாகிற்
பேய்வேட் டருந்துவிப்பன் பித்தரே யும்முடலை
ஐயன் வருமுன் அனைவோரும் போர்தவிர்த்து
உய்ய வகைதேடி யோடிப் பிழையு''மென்று
அந்தத் தலையை அவர்முன்னே விட்டெறிந்து
வந்து கருடன் மணக்கா வனம்புகுந்தான்
ஏகிய வான்கருடன் எறிந்த தலைதனையுங்
காசியர்கோன் பட்டதையுங் கண்டு சராசந்தன்
வாடி முகங்கருகி "மன்னரே தாம்பலவுங்
கூடி யவகீர்த்தி கொண்டதே போது"மென்றான்
'வந்தநாம் போக வழிவேறே தேடு'மென்று
தன்தன்நா டோடே சரிந்தனர்கா ணம்மானை
முன்படையார் சேனை முறியாச் சசுபாலன்
தன்படையைக் கையமர்த்தித் தானின்றா னம்மானை
மாமா தவனும் மணக்கா வனம்புகுந்து
ஆமா தவர்வாழ்த்த அத்தீ வலம்வந்து
மங்கல மார்ப்ப மணிமுரசு நின்றார்ப்பப்
பொங்கால போதம் பொருந்திமையோர் போற்றிசெய
[2]மாதர்க் கினிதாய் வருமதன சுந்தரியைக்
காதற் றுணைவிதனைக் கைப்பிடித்தா னம்மானை
[3]மன்னவரும் மங்கையரும் வாழ்த்த வலமாகி
மின்னனையார் தம்முடனே வீற்றிருந்த வேளையிலே
வெம்மையுங் காசியர்கோன் வேடமுந் தான்தவிர்ந்து
வண்மை யுடைய மரகத மாமலைபோற்
செந்தா மரைக்கண் சிறிவாசு தேவனென்பான்
[4]இந்துார் நுதலாரோ டினிதிருந்தா னம்மானை
மாமனார் தாமும் மணம்வந்தா ரும்பிறருந்
தாமானைப் போற்றித் [5]தலம்பணிந்தா ரம்மானை

---

1. தீவேட்ட மாகித் திரும்பிவரு வானாகில் (த)
2. மாதர்க் கரசாய் வருமதன சுந்தரியை (த)
3. மானனையார் சேட்சையிட மங்கையர்கள் வாழ்த்தெடுப்ப (த)
4. இந்து நுதலாரோ டிருந்தார்கா ணம்மானை (த)
5. தலம்வந்தா ரம்மானை (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சொத்த கஞ்சப் பதமதன சுந்தரியைச்
செஞ்சொற் றிருமால் செருவென்று தீவேட்டுக்
காதலியுந் தானுங் கனகமணித் தேரேறிப்
பூதலத்தோர் சூழ்ந்துவரப் புத்தேளிர் பூச்சொரியக்
கற்றைக் கவரிக் கருங்கண்ணார் காலசைப்பக்
கொற்றக் குடையுங் [1]கொடியும் விசும்பளக்க
ஆலவட்டம் வீச [2]அணிகுஞ்சம் தானசைய
[3]வேலை வருவதுபோல் மிக்க படைசூழ
ஆனையுந் தேரும் அடற்படையும் [4]மும்மடங்கு
தானையும் சூழத் தமரோர் புடைசூழச்
சீராழி சுற்றுஞ் [5]சிறீமத் துவரையிலே
போராழி மாயன் [6]புகுந்திருந்தா னம்மானே
[7]மாற்றவர்க்கு வெங்கூற்ருய் மாதவர்க்கு வேதாவாய்
[8]உற்றோர்க்கு நற்றுணையாய் உயிருக் குயிராகி
உம்பர்க் கரசாய் உகந்தவர்க் காதரவாய்ச்
செய்பொற் றிருக்கோயில் சேர்ந்திருந்தா னம்மானே
திருவாழி யாழ்வாருஞ் சிறீகருட ஆழ்வாருங்
கருவாழி நீக்குங் கழல்போற்றி யேவல்செய்ய
ஐய மகற்றி யரும்பொரு ளின்பமுடன்
வைய மளப்பான் மகிழ்ந்திருந்தா னம்மானே
ஆதி யரங்கேசன் அச்சுதன் பச்சைவண்ணன்
சோதிக் கவுத்துவத் தோகை மணிமார்பன்
தென்னரங்கச் செல்வன் சீதரன் சீராமன்
பொன்னரங்க மாணிக்கப் பொற்பேழை யிற்றுயிலும்
புண்டரீகக் கண்ணன் புருடோத்த மன்போதன்
தொண்டர்க் கெளியன் சூதன் மதுசூதன்
மையாழி வண்ணன் வாதநிம லன்கமலன்
[9]செய்ய வசுதேவன் திருமகள் தன்கேழ்வன்
கிளர்ந்த பெருஞ்சீர்க் கிருட்டிணுவ தாரமதை
உளந்நனிற் பத்தியினல் ஓர்ந்து உணர்ந்துரைத்த

---

1. கொடியுமிடை மருங்கும் (த)
2. அருங்கொலிசந் தான்வீச (த)
3. வேலைபட வானு மிடியத் துடிமுழங்க (த)
4. மேற்கொண்டு (த)
5. சிறீகந் (த)
6. புகுந்தனர்கா ணம்மானே (த)
7. மறத்துக்கு வெங்கூற்ருய் மாதவர்க்கு ஆதரவாய் (த)
8. அறத்துக் குயிராய் அணேவோர்க்குந் தாமேயாய் (த)
9. செய்யாள் கணவன் திருஅவதா ரங்களில் (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மானை தன்னை யறிந்து படிப்போரும்
எம்மருங்குந் துன்னி [1]யிருந்துகதை கேட்போரும்
தக்க கடலுலகில் தாமோ தரனருளால்
[2]அத்தநும் புத்திரரு மரும்பொருளு முண்டாகிச்
சிரருளாகச் செறிந்தி ருந்து பின்னுளிற்
பேராளன் வைகுந்தம் பெற்றிருப்பா ரம்மானை
அம்மா நதிசூ ழரங்கத்திற் கண்வளரும்
*எம்மான் திருவிளையாட் டதுரைத்தே னம்மானை
*சீர்பெற்று என்றும் திருமால் பதம்வாழி
*பார்நிலத்தில் மும்மாரி பழுதறத் தான்சொரிய
*அங்கமலப் பாதத் தடங்கண்ணு னங்கமலன்
*செங்கண் ணெடுமால் திருப்பாதம் தான்வாழி
[3]வாமன் வரதன் வரிசை பெருங்கதையைப்
பூமண்ட லத்திற் புகழ்ந்தெழுதி னேர்படித்தோர்
திருவரங் கத்தோன் திருக்கதையைக் கேட்டோருந்
[4]தருவரங்க வைகுந்தந் தான்பெறுவா ரம்மானை
*மன்னர்செங் கோல்விளங்க மண்ணிலுள்ளோர் தான்வாழப்
*பொன்மாரி பெய்து பூதலமெல் லாம்விளையத்
*திருநீறு மஞ்செழுத்துஞ் சீர்உருத்திராக்க முமாய்த்
*திருவரங்கிற் கண்டுயிலும் செல்வ னருளாலே
*கலியுகம் கண்டுங் கனம்பெருகி யுண்டாகி
*நீடூழி காலம் நிறைந்திருப்பா ரம்மானை

காசிராசன் கதை முற்றும்

## விருத்தம்

†தன்தன் னுறியி லவர்வைத்த தயிர்பாலெண்ணெ
யெட்டாமற்
குந்தியுரலின் மீதேறி இளங்கோ வியர்முன் கூத்தாடித்
தன்தன் மனையில் அசோதையிரு நயனங்களிக்க விளையாடும்
மைந்தன் இருதா ளொருபோதும் மறவாதவரே பிறவாதார்

திருவரங்கன் கதை முற்றிற்று

அரிநமோ நாராயண சிறீகிருட்டிண மூர்த்தியே துணை

# கஞ்சன் அம்மானை முற்றிற்று

---

1. இருபோதும் கேட்போரும் (த)
2. அத்தமும் புத்திர சம்பத்து முண்டாகி (த)
3. அரமென்னு மன்பதந்தோ க ளாலக்கஞ்செய
வரமெனும் பாலை வருணத்தோன் பிரமன் (த)
4. தருவார வைகுந்தம் தந்திடுங்கா ணம்மானை (த)

* -த-பிரதியில் இல்லாத வரிகள்

† விருத்தம்-த-பிரதியில் உள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org